டாக்டர் மு.ராஜேந்திரன், இ.ஆ.ப.

வரலாற்று நாவல்

1801

வெளியீ

I

டாக்டர் மு. ராஜேந்திரன் இ. ஆ. ப.,

மதுரை மாவட்டம் திருமங்கலத்திற்கு அருகிலுள்ள வடகரை கிராமத்தில் பிறந்தவர். முதுகலை ஆங்கில இலக்கியமும் சட்டமும் படித்தவர். ஐ.ஏ.எஸ். தேர்விற்காக வரலாற்றை ஒரு பாடமாக எடுத்துப் படித்த பிறகு, அவரின் முழு ஆர்வமும் வரலாற்றின்மீதே திரும்பியது. வரலாற்றைத் தேடிப் பயணிப்பதில் தீராத ஆர்வம் உள்ளவர்.

இயற்கைப் பாதுகாப்புச் செயல்பட்டாளர். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியராய் இருந்தபோது மாவட்டத்தில் உள்ள அனைத்து மலைப்பகுதிகளிலும் பத்து லட்சம் விதைகளைத் தூவி, மலைவளம் காத்தவர். மாவட்டத்தில் இருக்கும் ஆயிரம் ஆண்டுக் காலப் பழமையான கோவில்களில் உள்ள கல்வெட்டுகளைத் தொல்லியல் துறை உதவியுடன் படியெடுத்தவர்.

திருக்குறளில் உள்ள உள்நாட்டு வெளிநாட்டுச் சட்டக்கூறுகள் என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். **1998** ஆம் ஆண்டு நடைபெற்ற தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டம் பெற்ற முதல் மாணவர்.

இவரின் பிற நூல்கள்: சோழர் காலச் செப்பேடுகள், பாண்டியர் காலச் செப்பேடுகள், சேரர் காலச் செப்பேடுகள், பல்லவர் காலச் செப்பேடுகள், சட்ட வல்லுநர் திருவள்ளுவர், வடகரை ஒரு வம்சத்தின் வரலாறு, பாதாளி, வந்தவாசிப் போர்--**250**, கம்பலை முதல் (இரு நூல்களும் கவிஞர் அ.வெண்ணிலாவுடன் இணைந்து).

பெற்ற விருதுகள்: கவிதை உறவு விருது, தினமலர் டி.வி. இராமசுப்பையர் வரலாற்று விருது, கம்பம் பாரதி தமிழ் இலக்கியப் பேரவை விருது, **2013**ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த புத்தகத்திற்கான விருது, சிலம்புச்செல்வர் ம.பொ.சி. இலக்கிய விருது.

II

வெளியீடு : **67**
ISBN : 978-93-82810-33-9

நாவல்
டாக்டர் மு.ராஜேந்திரன், இ.ஆ.ப.,
முதல் பதிப்பு: டிசம்பர் 2016
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2018
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2019
பக்கம்: 544
ஒளியச்சு: பொ.அம்சவள்ளி, பொ.சுந்தரம்
வடிவமைப்பு : எஸ்.மாரீஸ்
அட்டை: சந்தோஷ் நாராயணன்
அச்சாக்கம்: மணி ஆப்செட், சென்னை

1801
Novel
Dr.M.Rajendran, IAS.,
First Edition : December 2016
Second Edition : December 2018
Third Edition : December 2019
Pages : 544
Laser Typeset : P.Amsavalli, P.Sundaram
Layouts : S.Maries
Wrapper : Santhosh Narayanan
Printing : Mani Offset, Chennai.

விலை: ரூ.500

Akani veliyeedu
No.3, Paadasalai Street, Ammaiyapattu, Vandavasi — 604 408
Ph : 98426 37637, 94443 60421 email :
akaniveliyeedu@gmail.com

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை,
தமிழகத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும் என
முதல் குரல் கொடுத்த வரலாற்று ஆசான்
பேரா. டாக்டர் கே. ராஜய்யனுக்கு
இந்நூல்.

IV

துரோகத்தில் கருகிய சுதந்திர மலர்கள்

இந்த ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தமிழகம் உள்ளிட்ட நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல் நடந்தது. ஜனவரி மாதத்தில் டெல்லியில் நடந்த தேர்தல் பார்வையாளர்களுக்கான கூட்டத்திற்கு எனக்கு அழைப்பு வந்தது. மிகுந்த மகிழ்ச்சியுடன் டெல்லி சென்றேன். எனக்குத் தேர்தல் பார்வையாளர் பணி கிடைக்க வேண்டும் என பெரிதும் விரும்பினேன். காரணம், தேர்தல் பார்வையாளராகச்

செல்லும் நாட்களின் இரவு நேரங்கள் எனக்கானவை. எழுதுவதற்கான முழுமையான மனநிலையில் இருப்பேன். புதிதாக நாவல் ஒன்று எழுதும் திட்டமிடலில் இருந்த நான், இந்த வாய்ப்பை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். எதிர்பாராவிதமாக எனக்குத் தேர்தல் பணி ஒதுக்கப்படவில்லை.

"காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறீர்கள். தற்போது பணியமர்த்தப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்களில் யாராவது வரவில்லை என்றால் தகவல் தருவோம். அப்போது நீங்கள் வர வேண்டும்" என்று அறிவுரை வழங்கப்பட்டது. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு சென்னை திரும்பினேன். தமிழகத்திலும் தேர்தல் சமயமாக இருந்ததால் வேளாண்மைத் துறையின் ஆணையாளராக இருந்த எனக்கு, பணியில் ஓய்வில்லை. நாவலைத் தொடங்கவே நேரம் கிடைக்கவில்லை. தமிழக அரசு, தமிழகத்திலுள்ள விவசாயிகள் சிலரை சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு அனுப்பி, அந்தந்த நாடுகளில் உள்ள விவசாய முறைகளை நம் மாநில விவசாயிகளும் அறிந்துகொள்ள வேண்டும் என்று நிதி ஒதுக்கி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்ல இருபது வேளாண் அதிகாரிகள் பெயர்களை நான் அரசிற்குப் பரிந்துரைக்க வேண்டும். எந்த நேரமும் எனக்கு வெளிமாநிலத் தேர்தல் பார்வையாளர் பணிக்கான ஆணை வரும் என்ற எண்ணத்திலும், என் பெயரை நானே பரிந்துரைக்க கூடாது என்ற தன்னடக்கத்தின்(!) காரணமாகவும், வெளிநாட்டுப் பயணத்திற்கு என் பெயரை நான் பரிந்துரைக்க வில்லை. ஆனால் நடந்தது வேறு. சீனா செல்லும் குழுவில் எனது பெயரைச் சேர்த்து அரசு ஆணையிட்டது. அதே நேரத்தில் இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் மறுப்பின்மைச் சான்றை, நான் முயன்று பெற்றுத்தந்தால் மட்டுமே வெளிநாடு செல்ல முடியும் என்று கண்டிப்பும் காண்பிக்கப்பட்டது. கிடைத்த வெளிநாட்டுப் பயண வாய்ப்பிற்காக மகிழ்வதா, தேர்தல் ஆணையத்தின் அனுமதி, இந்திய அரசின் அனுமதி என அலைவதா எனத் தெரியாமல் நின்றேன். இந்தியத் தேர்தல் ஆணையம் எனது வெளிநாட்டுப் பயணத்திற்கு அனுமதிக்க வேண்டுமே என்ற பதைபதைப்பும் இருந்தது.

வெளிநாட்டுப் பயணத்திற்கான அரசின் அனுமதிக் கடிதம் கிடைத்தவுடன் உடனடியாக இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு, தேர்தல் பணியிலிருந்து விலக்கு வேண்டி, நம்பிக்கையின்றிக் கடிதம் எழுதினேன்.

“நான் ரிசர்வில்தான் உள்ளேன். என்னைப்போல் பலர் ரிசர்வில் இருக்கிறார்கள். நான் வெளிநாடு சென்றுவிட்டால் யாராவது ஒருவரைத் தேர்தல் ஆணையம் பார்வையாளராக அமர்த்திக் கொள்ளலாம்” என்ற எனது வாதத்தோடு கடிதம் டெல்லி சென்றது. எனது கடிதத்திற்கு மறுநாளே தேர்தல் ஆணையத்திடமிருந்து பதில் வந்தது. யாரும் எதிர்பாராத பதில். என் பணிக்காலத்தில் நான் கேள்விப்படாதது. “உத்திரப்பிரதேசத்தில் நடைபெறும் காஜிப்பூர் சட்ட மன்ற இடைத்தேர்தல். மாநிலத்தில் ஒரே தொகுதி. அங்குத் தேர்தல் பணி முப்பது நாட்கள். நீங்கள் முதல் பதினைந்து நாட்கள் இருங்கள். பின்பு வெளிநாடு செல்லுங்கள். நீங்கள் செல்லும் பதினைந்தாவது நாளில் வேறு ஒருவரை காத்திருப்போர் பட்டியலில் இருந்து நியமனம் செய்து கொள்கிறோம்” என்று வந்தது கடிதம். உத்திரப்பிரதேச மாநிலம் காஜிப்பூரில் இடைத்தேர்தல் நடப்பது அப்பொழுதுதான் எனக்குத் தெரியும். அதுவரையில் நான் நான்கு மாநில பொதுத்தேர்தல் பற்றித்தான் தெரிந்து வைத்திருந்தேன். பதினைந்து நாட்கள் உத்திரப்பிரதேசத்தில் முகாம், அதோடு சேர்த்து வெளி நாட்டுப் பயணம் என இரண்டும் உறுதியாகிவிட்டது.

மருது பாண்டியர்கள், ஊமைத்துரையின் வாழ்க்கையை, தென்னிந்தியாவின் தோற்றுப்போன புரட்சியை எழுதக் கிடைத்த வாய்ப்பாக இதைக் கருதினேன். உத்திரப்பிரதேசத்தில் ஒரு வழக்கம் உள்ளது. இடைத்தேர்தல் என்றால் எல்லாப் பிரதான கட்சிகளும் போட்டியிடாது. எந்தக் கட்சி வேட்பாளர் இறந்தாரோ அதே கட்சியின் வேட்பாளர் இடைத்தேர்தலில் வெல்வதற்கு வாய்ப்பு அதிகம். ஆகவே, எதிர்க்கட்சிகளோ, ஆளுங்கட்சியோ தேர்தல் பிரச்சாரம், தேர்தல் சம்பந்தப்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் எதிலும் பெரிதும் ஆர்வம் காட்டாது. மிகவும் அமைதியாகத் தேர்தல் நடக்கும். ஏற்கனவே நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உத்திரப்பிரதேசத்திற்குத் தேர்தல் பார்வையாளராகச் சென்றிருக்கிறேன். அந்த வகையில் உத்திரப்பிரதேசத்தின் தேர்தல் நடைமுறைகளைத் தெரிந்து வைத்திருந்தேன். உத்திரப்பிரதேசத்தில் இருக்கப்போகும் இந்தப் பதினைந்து நாட்களை நாவல் எழுதுவதற்கான காலமாக எடுத்துக்கொண்டேன். சென்னையிலிருந்து விமானத்தில் ஏறியது, டெல்லியில் விமானம் மாறி வாரணாசி சென்றது முதல் அங்குத் தங்கியிருந்த பதினைந்து நாட்களும் நாவல் எழுதுவதற்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தன. உத்திரப்பிரதேசத்தில் கடும் கோடைக் காலமது.

ஊரெங்கும் புழுதிக்காற்று. பகலில்கூட வெளியில் சுற்ற முடியாது. காஜிப்பூரில் மலை, கல் எதுவும் கிடையாது. வெறும் மண் கண்டம்தான். பார்க்கும் திசையெங்கும் வண்டல் பூமி. பூமியில் ஐம்பது அடி தோண்டினாலும் வெறும் கருப்பு மண்தான் வரும். கங்கைக்கரையில் உள்ள வளமையான ஊர் காஜிப்பூர். ஊர் முழுக்க பிரம்மாண்டான ஆங்கிலேயர் காலக் கட்டிடங்கள்.

காஜிப்பூரில் அபின் தயாரிக்கும் ஆங்கிலேயர் காலத்துத் தொழிற்சாலை உள்ளது. மருது பாண்டியர்கள் காலத்தில்தான் இந்தத் தொழிற்சாலையை ஆங்கிலேயர்கள் நிறுவியுள்ளனர். கஞ்சா இலைகள் மத்தியப் பிரதேசத்திலிருந்தும், உத்திரப்பிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் கங்கை ஆற்றின் படகுகளில் கொண்டு வரப்படும். கங்கை ஆற்றின் ஓரத்தில்தான் இந்தத் தொழிற்சாலை இருக்கிறது. கொண்டுவரப்பட்ட கஞ்சா இலைகளிலிருந்து அபின் எடுக்கப்படுகிறது. எங்கெல்லாம் போர் நடக்கிறதோ அந்த இடங்களில் எல்லாம் போரில் காயம்பட்டோருக்கு மயக்க மருந்தாக வும், வலி நிவாரணியாகவும் அபினைத் தருவார்களாம். இன்றும் அந்தத் தொழிற்சாலை இருக்கிறது. பழைய அளவு தொழில் இல்லை. தொழிற்சாலை பெயருக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. காஜிப்பூரில் மற்றும் ஒரு விசேசம். சார்லஸ் காரன் வாலிஸின் நினைவு மண்டபம்.

காரன் வாலிஸ் அமெரிக்க விடுதலைப் போரின்போது **1781**-ஆம் ஆண்டு செப்டம்பர் **28** முதல் அக்டோபர் **19** வரை இங்கிலாந்து படைகளை வழிநடத்தித் தோற்றவர். அமெரிக்க விடுதலைப் போர் முடிந்து ஐந்தாவது ஆண்டில் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். **1786** முதல் **1793** வரை ஏழு ஆண்டுகள் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இவரது காலத்தில் திப்பு சுல்தான் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டார். பின்பு இங்கிலாந்து சென்ற காரன் வாலிஸ் **1805**-இல் மீண்டும் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். **1805**-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கல்கத்தா வந்தார். பதவியேற்ற இரண்டாவது மாதத்தில், செப்டம்பர் மாதம் **27**-ஆம் தேதி கடுமையான காய்ச்சலின் காரணமாக காஜிப்பூரிலேயே தங்கிவிட்டார். காய்ச்சல் கண்ட எட்டாவது நாள் அக்டோபர் மாதம் **5**-ஆம் தேதி இந்தியாவின் கவர்னர் ஜெனரலான காரன் வாலிஸ் தனது **67**வது வயதில் இறந்து போனார். அவருக்கு கல்லால் ஆன பிரம்மாண்டமான நினைவு மண்டபம் வாரணாசி(காசி) அரசரின் பொருளுதவியில் கட்டப் பட்டுள்ளது. அந்த நினைவு

மண்டபத்திற்கு எதிரிலிருந்த பயணியர் மாளிகையில்தான் நான் தங்கியிருந்தேன்.

காஜிப்பூரின் கடுமையான வெயிலின் காரணமாக வந்த வாய்ப் புண்ணோடும், முக்கால்வாசி முடிந்திருந்த நாவலோடும் பதினைந்து நாட்கள் கழித்துச் சென்னை திரும்பினேன். சென்னை திரும்பிய மறுநாள் சீனா கிளம்பினோம். அத்துடன் நான்கு மாதங்களுக்கு நாவலைத் தொடவில்லை. வேளாண் ஆணையராக இருந்த நான் சேலம் சேகோ சர்வின் மேனேஜிங் டைரக்டராக செப்டம்பர் 14-இல் மாறுதல் செய்யப்பட்டேன். நாவலைத் தொடரக் கிடைத்த நல்ல வாய்ப்பு. அன்பான மக்கள், ஆதரவான உதவியாளர்கள் சேலம் வாழ்க்கை எனக்கு அமைந்தது. முக்கால்வாசி முடித்து வைத்திருந்த நாவலைச் சேலம் வந்த எழுபதாவது நாளில் எழுதி முடித்தேன்.

18-ஆம் நூற்றாண்டு தென்னிந்திய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம். பலம் வாய்ந்த மொகலாய, விஜயநகர அரசுகள் சிதறுண்டு மராட்டியர்கள், ஹைதராபாத் நிஜாம், ஆற்காடு நவாப், திருவிதாங்கூர், ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை தனி யரசுகள், எழுபத்தியிரண்டு பாளையங்கள் எனத் தென்னிந்தியா ஒரே நேரத்தில் பல சுதந்திர அரசுகளைக் கொண்டிருந்தது. இவை போதாதென்று தனி நபர்கள் தலைமையில் இயங்கிய கூலிப் படைகள். இந்தத் தனியரசுகள் ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொண்டு தென்னகத்தைப் பெரும் கலவரப் பூமியாக மாற்றியிருந்தன. கலைத்துப் போட்ட சீட்டுக்கட்டுகளைப்போல், நம் அரசர்கள் இருப்பதை அறிந்த ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துக்கீசியம், லத்தீன் பேசும் ஐரோப்பிய வணிகர்கள், வழிவழியாக வந்த அரசுரிமை பெற்றவர்களை ஓரம் தள்ளிவிட்டு, இந்தியாவின் ஆட்சியாளர்களாக மாற முயற்சி செய்த நேரமது.

அக்காலகட்டத்தில் பெரும்பாலான அரசுகளை வழிநடத்தி யவர்கள் அதன் அமைச்சர்களும், தளபதிகளும்தான். துபாஷ்கள் என்ற புதிய அதிகாரவர்க்கம் ஒன்று தங்களது மொழிபெயர்ப்புத் திறமையால் பலம் பெற்றனர். துபாஷ்கள் இன்றி ஐரோப்பியர்களின் எந்த நடவடிக்கையும் இருக்காது. அமைச்சர்களையும், துபாஷ்களை யும் அனுசரித்தே ஆட்சி நடத்த வேண்டிய சூழலில் உள்நாட்டு அரசர்களும், ஐரோப்பியர்களும் இருந்தனர். தென்னிந்தியாவின் அமைதியையும், சுதந்திர அரசர்களுக்கிடையில் இருந்த ஒற்றுமை யின்மையையும் துபாஷ்கள்மூலம் தெரிந்துகொண்டு ஐரோப்பிய அரசர்கள் அடுத்த

நகர்வுகளைத் தீர்மானித்தனர். அந்நிய மொழி தெரிந்த துபாஷ்கள், நம் ஊர் அரசர்களிடம் நேரடியாகப் பேச வழி யில்லாததால் அமைச்சர்கள், தளபதிகள் மூலமாகக் காய் நகர்த்தினர்.

விஜய நகர அரசனைவிட அவனது தளபதி விஸ்வநாத நாயக்கர், தென்னிந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பவராக இருந்தார். விஸ்வநாத நாயக்கரை வழி நடத்தியது அரியநாத முதலியார் என்னும் அமைச்சர். ஆற்காடு நவாப்பை வழி நடத்தியது அவரது மரு மகன் சந்தா சாகிப். ராமநாதபுரம் அரசர்களை வயிரவன் சேர்வை, வெள்ளையன் சேர்வை, பிச்சைப் பிள்ளை, முத்திருளப்பப் பிள்ளை போன்ற அமைச்சர்கள் வழிநடத்தினர். புதுக்கோட்டை அரசரைத் தஞ்சையில் அமர்ந்துகொண்டு பிளாக்பர்ன் என்ற ஆங்கிலேயத் தளபதி வழிநடத்தினான்.

தஞ்சாவூர் மராட்டிய அரசனைவிட அவனது தளபதிகள் முராரி ராவும், மானோஜியும் பலம் வாய்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். மைசூர் உடையார் அரசரைவிட அமைச்சர் பூர்ணய்யாவின் வார்த்தைக்கு மதிப்பு அதிகம். அமைச்சர் சிவசுப்ரமணிய பிள்ளை யின் வார்த்தைகளைக் கட்டபொம்மன் மீறியதில்லை.

வாணிகம் செய்ய இந்தியா வந்த வெளிநாட்டவர்கள் இங்கிருந்த சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டனர். தென்னிந்தியாவில் கிடைத்த மிளகு, ஏலம், லவங்கம், பனை வெல்லம், பருத்திக்கு ஐரோப்பியாவில் மிகுந்த தேவையிருந்தது. இங்கு வாழ்ந்த அரசர்களின் வாழ்க்கைமுறை, படோடபம், செல்வம் அவர்கள் நாட்டு அரசர்களின் வாழ்க்கைத்தரத்தோடு ஒப்பிடுகையில் மிக உயரியதாக இருந்தது. ஐரோப்பிய மத குருக்கள், தங்கள் பங்கிற்கு, இங்குள்ள சூழலை விரிவாகத் தங்கள் தலைமையகங்களுக்குக் கடிதமாக எழுதினர். வெளிநாட்டிலிருந்து இரண்டு மாதக் கடல் பயணத்தில் இந்தியாவிற்கு வந்து சேரக் கப்பல் போக்குவரத்தும், கடிதப் போக்குவரத்தும், தென்னிந்தியாவின் கட்டுப்பாடற்ற சுதந்திரத்திற்கு முடிவுகட்டத் தலைப்பட்டன.

தென்னிந்தியாவின் சில சிற்றரசுகள் தங்களது சுதந்திர உணர்வைக் காப்பாற்றிக்கொள்ள இறுதிக் கட்டப் போரைப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் அறிவித்தன. **1799** -ஆம் ஆண்டு மே மாதம் **4**-ஆம் தேதி திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப் பட்டினத்தில் கொல்லப்பட்ட பின்பு அடுத்த **160**-ஆவது நாளில் கட்டபொம்மன்

தூக்கிலிடப்பட்டார். துந்தாஜி வாக், மருது பாண்டியர்கள், ஊமைத்துரை, சிவத்தையா, கோபால் நாயக்கர், பொம்மை நாயக்கர் எனப் பல போராளிகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் தூக்கிலிடப்பட்டனர். சின்ன மருதுவின் பன்னிரண்டு வயது மகன் துரைசாமியோடு சேர்த்து திண்டுக்கல், வாராப்பூர், கோயம்புத்தூர், நாங்குநேரிப் போராளிகள் எழுபத்தி இரண்டு பேர் மலேசியாவிலுள்ள பினாங்குத் தீவிற்கு நாடு கடத்தப்பட்டனர். சிவகங்கை அரசரும், பெரிய மருது சேர்வைக்காரரின் மருமகனு மான வெங்கம் பெரிய உடையணத் தேவர், சுமத்திரா தீவிலுள்ள பென்கோலனுக்கு நாடு கடத்தப்பட்டார். வருடத்திற்கு ஒருவராகப் போராளிகள் கொல்லப்பட்டனர். போராளிகளின் வீழ்ச்சியினால், மீதம் இருந்த சிற்றரசுகள் தங்களது சுதந்திரத்தை இழந்தன. ஆங்கி லேயர்களுக்கு அடிபணிந்து போயின. கிராமங்கள் பொருளாதாரத்தை இழந்தன.

குழந்தைகளைப் பிணைக் கைதிகளாக மாற்றுவதும், தனக்கு எதிரானவர்களை நாடு கடத்துவதும், பொது இடங்களில் தூக்கிலிடு வதையும், தேடப்படுபவர்களை உயிருடன் பிடித்துக் கொடுத்தால் சன்மானத் தொகையும், அவர்களைப் பிணமாகக் கொண்டுவந்தால், அதில் பாதிப்பணமும் தரும் நடைமுறைகளை ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவில் **18**-ஆம் நூற்றாண்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்தினர்.

குற்றவாளிகள் எனக் கருதுபவர்களைப் பணம் என்னும் பொறி வைத்துப் பிடிப்பதில் ஆங்கிலேயர்கள் கைதேர்ந்தவர்கள். பெரிய மருது பாண்டியரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பணமும், சின்ன மருது பாண்டியரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பணமும், மருது பாண்டியர்களின் மகன்கள், சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர், ஊமைத்துரை, கோபால் நாயக்கர் போன்ற போராளிகளுக்குத் தலா ஐநூறு பணமும் கொடுப் பதாக ஆசை காட்டித் தண்டோரா போட்டதும் இந்த வகையில்தான். பொதுமக்கள் மத்தியில் இவ்வாறு தண்டோரா போட்டதைப் பதிவு செய்து மெட்ராஸின் கவர்னருக்கு அறிக்கை அனுப்பி உள்ளனர்.

போராளிகளுக்கு, குறிப்பாகப் போராடித் தோற்றவர்களுக்கு மக்கள் மனதில் ஒரு நிலையான இடம் உண்டு. அவர்கள் இறந்து விட்டாலும்,மக்களின் மனம் அவர்களது இறப்பை ஏற்பதில்லை. போராளிகளுக்குத் தெய்வநிலை உருவாக்கப்படும். போராளிகளுக்கு

எதிரானவர்கள்மீது அவதூறு பரப்பப்படும். மனித மனம் எந்தளவுக்கு ஒருவரை விரும்புகிறதோ, அந்தளவுக்கு அவர்மீது சாதகமான முடிவுகளை எடுக்கும். நியாயப்படி அரசுரிமை பெற்றவனை பிடிக்கவில்லை என்றால் ஆக்கிரமிப்பாளன் எனத் தூற்றும். மனதிற்குப் பிடித்தவன் ஆக்கிரமிப்பாளன் என்றாலும் மிகச் சிறந்த ஆட்சியாளன் என புகழ்ந்துரைக்கும். அவரவர் பார்வையில் தியாகம், துரோகம் மாறுபடும். இதில் அரசிகள் சந்தித்த சவால்கள் பல. ஒரு பெண்ணரசியின் வெற்றிக்குப் பின் கட்டாயம் ஓர் ஆண் இருந்தாக வேண்டும் என மனித மனம் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும். இல்லையென்றால் வதந்திக் காற்று ஒருவனை உருவாக்கும். இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த அரசி எலிசபெத், சிவகங்கை அரசி வேலு நாச்சியார், மதுரை அரசி மங்கம்மாள்... வதந்திக் காற்றில் சிக்கிய அரசிகள் பலர். பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கும், உண்மைக்கும் நடுவில் உள்ள இடைவெளிகளைச் செவிவழிச் செய்திகள், வெற்றுப் புகழுரைகள், வதந்திகள் இட்டு நிரப்பும் பணியையும் செவ்வனே செய்தன. வேலு நாச்சியாருக்கும் பெரிய மருதுவுக்கும் உள்ள உறவு பற்றிய வதந்திகள், கதைகளாக நம்மிடையே உலவிக் கொண்டே இருக்கின்றன.

மருது சகோதரர்கள் இறந்த நான்காவது ஆண்டில் ஒரு வழக்கும், **100**-வது ஆண்டில் மற்றொரு வழக்கும் பதியப்பட்டு அந்த வழக்குகள்மீது ஆங்கிலேய நீதிபதிகளால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. பின்னால் வந்த சில வரலாற்று ஆசிரியர்கள் ஆங்கிலேய நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புரையைப் படிக்காமல், வழக்கு விசாரணையின்போது சொல்லப்பட்ட ஒரு தரப்பு வாதுரையை வரலாறாக எழுதிவிட்டனர். வேலு நாச்சியாருக்குப் பெரிய மருதுவுடனான உறவு முறையையும், சின்ன மருது, பெரிய மருது சகோதரர்களுக்குள்ள பாசத்தையும் கேள்விக்குறியாக்கிவிட்டனர்.

பெரிய மருது தூக்கிலிடப்பட்ட போது கொடுத்ததாகச் சொல்லப்படும் மரணசாசனத்தின் மீது மெட்ராஸ் ஹை கோர்ட் நீதிபதி குப்புசாமி அய்யர் **1931**-ஆம் ஆண்டில் கொடுத்த தீர்ப்பையும் புறந்தள்ளி விட்டனர். தீர்ப்புப் பற்றி அறியாமல் பிரபல வரலாற்று ஆசிரியரான ஜெகவீர பாண்டியனார் தனது 'பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரத்தில்' மருது பற்றித் தவறாக எழுதியது, மருது சகோதரர்கள், வேலு நாச்சியார் பற்றிய உண்மையான மதிப்பீடுகளை அறிய விடாமல் தடுத்து நின்றன.

பெரிய மருதுவின் மூத்த மனைவி வேலு நாச்சியார் என்றும், சின்ன மருதுவின் தாயாரும், பெரிய மருதுவின் தாயாரும் வேறு வேறு என்றும், பெரிய மருதுவிற்கும், சின்ன மருதுவிற்கும் அவர் களது இறுதிக் காலங்களில் கருத்து வேறுபாடு இருந்தது என்றும் பல செய்திகள் வரலாற்றுப் பிழைகளாகக் கை, கால் முளைத்து அசுர வளர்ச்சி அடைந்துவிட்டன. பெரிய மருதுவின் வாரிசுகளில் ஒருவர் தொடர்ந்த வழக்கில், தனக்கு வேண்டிய நியாயம் பெற அவர் சமர்ப்பித்த மருதுவின் மரண சாசனம் போலியானது என்று மெட்ராஸ் ஹை கோர்ட் 1931-ஆம் ஆண்டிலேயே தீர்ப்பு வழங்கிய பின்பு வழக்கின் வாதுரையை, அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றைச் சரிசெய்ய வேண்டிய கடமை உள்ளது. வாதுரைகளைக் கேட்டு நீதிபதிதான் தீர்ப்பு வழங்க வேண்டும். வரலாற்றாசிரியர்கள் வரலாறு எழுதக்கூடாது.

தென்னிந்தியப் புரட்சி பற்றிய உண்மையான தகவல்களை முதன்முறையாக வெளிக்கொண்டு வந்தவர் டாக்டர் ராஜய்யன்தான். தனது பெரும் முயற்சியில் 'தென்னிந்தியப் புரட்சி' என்ற நூலை வெளியிட்டார். மருது பாண்டியர்கள் மற்றும் ஊமைத்துரையின் சம காலத்தவர்களான மேஜர் வெல்ஷ், பாதர் பாச்சு, கோர்லே, ராப்ர்ட் ஓர்ம் எழுதிய நூல்கள், பேஷ்குஷ் கலெக்டர்கள், மெட்ராஸ் கவர்னர்களின் கடிதப் பரிமாற்றத்திலிருந்த தகவல்களைத் தேடிப்பிடித்து, முழுமையான வரலாற்றை டாக்டர் ராஜய்யன் எழுதியுள்ளார். டாக்டர் ராஜய்யனைப் பின்பற்றி ராமநாதபுரம் வட்டாட்சியர் எஸ்.எம்.கமால், மீ.மனோகரன், சிவகங்கை பாலகிருஷ்ணன், சிவகங்கை மாரிசேர்வை போன்றோர் தென்னிந்தியாவின் வரலாற்றை குறிப்பாகச் சிவகங்கை வரலாற்றைத் தெளிவு படுத்தி நூல்களாக எழுதியுள்ளனர்.

நான் எழுதியுள்ள இந்த நாவல் ஏறக்குறைய ஐந்து ஆண்டு முயற்சி. பேராசிரியர் ராஜய்யனுடனான எனது நட்பு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு உருவானது. தனது முப்பத்தைந்து வயது வரை மதுரைப் பகுதியை அறியாத திருவனந்தப்புரத்துக்காரர். தற்போது நாகமலை புதுக்கோட்டைக்கும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கும் இடைப்பட்ட நகர் ஒன்றிற்கு இவர் பெயர் வைக்கப்பட்டுள்ளது. ராஜம்பாடி என்று அதன் பெயர். மருது பாண்டியர்களையும், ஊமைத்துரையையும் பற்றி யார் எழுதினாலும் இவரை மேற்கோள் காட்டாமல் எழுத முடியாது. இவரிடம் நான் படிக்கவில்லை. இவரை எனது ஆசிரியர் என அழைக்க முடியாது. இவர் என்னை நண்பர் என அழைத்துப் பெருமைப்படுத்துபவர்.

மதுரைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவராகக் கோலோச்சியபோது இவரது பெயரை நான் படித்த வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் மரியாதையுடன் உச்சரிப்பதைக் கேள்விப்பட்டு இருக்கிறேன். **1801**-இல் நடந்த தென்னிந்தியப் புரட்சியை உலகிற்கு முறையாக அறிமுகப்படுத்தி அறிவித்த வரலாற்று ஆசான் டாக்டர் ராஜய்யன்.

ஒருமுறை அவர் வீட்டில் பேசிக்கொண்டிருக்கும்போது, பேச்சின் இடையில் குறிப்பிட்டார். "**1857** ஆம் ஆண்டில் டெல்லியில் நடந்த சிப்பாய்க் கலகத்தை இந்திய அரசு இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் என வருடந்தோறும் கொண்டாடுகிறது. இதற்கு அடிப்படையாக இந்திய அரசு எடுத்துக் கொண்டது வீரசாவர்க்கர் எழுதிய 'சிப்பாய்க் கலகம்' என்ற நூல். இந்த நூல் ஆங்கிலேயர்கள் காலத்தில் தடை செய்யப்பட்ட நூல். சுதந்திரம் அடைந்தபிறகு புத்தகத்தின் மீதான தடை நீக்கப்பட்டு அந்த நூலில் விவரிக்கப்பட்ட சிப்பாய்க் கலகம்தான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் எனச் சுதந்திர இந்திய அரசு அறிவித்துள்ளது. அப்படிப் பார்த்தால் டெல்லி சிப்பாய்க் கலகம் நடப்பதற்கு ஐம்பத்து ஒரு வருடங்களுக்கு முன்பே **1806** -ஆம் ஆண்டில் வேலூர்ப் புரட்சி நடந்தது. அதுவும் சிப்பாய்களால் நடத்தப்பட்டதுதான். இந்தியா போன்ற பெரும் ஜனநாயக நாட்டில் மக்களின் விடுதலைக்காகச் சிப்பாய்கள் போராடினர் என்று பெருமை யுடன் குறிப்பது ஜனநாயக மாண்பிற்கு இழுக்கு. மக்கள் புரட்சியே ஜனநாயகத்தில் மதிப்புமிக்கது. சீருடை அணிந்து மாதச்சம்பளம் வாங்கிக் கொண்டு, சம்பளம் கொடுப்போரை எதிர்ப்பது எந்த நிலையிலும் விடுதலைப் போராட்டம் ஆகாது" என்றார்.

"மருது சகோதரர்கள் தலைமையில் நடந்த தென்னிந்தியப் புரட்சியை இந்தியாவின் முதல் சுதந்திரப் போராக அறிவிக்க வேண்டும் என்று நான் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன். ஒரு அரசியல் தலைவர் தென்னிந்தியப் புரட்சியின் தலைவராக ஊமைத்துரையை நீங்கள் முன்னிலைப்படுத்தினால் வழக்கிற்கான முழு பொறுப்பையும் தான் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். ஜாதி, மதம், மொழி என்ற எந்த குறுகிய வட்டத்திற்குள்ளும் சிக்காமல் தனியாளாக இந்தச் சட்டப் போராட்டத்தில் இருக்கிறேன். எனது வயோதிகம் காரணமாக என்னால் அலையவும் முடியவில்லை. உங்களது ஆர்வமும், முன்னெடுத்துச் செல்லும் திறனும்

அறிந்திருக்கிறேன். ஆகவே அதற்கான ஆவணங்களை உங்களிடம் கொடுக்கிறேன். நீங்கள் வழக்கைத் தொடர்ந்து நடத்துங்கள்" என்றார்.

பின்பு இது குறித்து எனது நண்பர்களான கவிஞர் அ.வெண்ணிலா, கவிஞர் முருகேஷுடன் விவாதித்தேன். மாரி சேர்வை, பாலகிருஷ்ணன், விவேகானந்தன், சிவனடியான், கண்ணு சாமி, கருணாகரன் ஆகியோரைச் சென்னைக்கு வரவழைத்து மூன்று நாட்கள் விரிவான விவாதம் நடத்தினேன். மருது பாண்டியர்கள் பற்றிய ஆவணங்களைத் தேடினோம். பூனாவிலிருந்து நாங்குநேரி வரையான பெரும் நிலப்பரப்பில் ஏற்பட்ட மக்கள் புரட்சி சின்ன மருது என்ற ஒருவரின் வழிகாட்டலில் நடந்தது என்பதை உறுதி செய்தோம். இந்தியப் பேரரசு இதை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, மக்கள் உணர வேண்டும் என்று விரும்பினேன். தென்னிந்தியப் புரட்சியை அடிப்படையாக வைத்து நாவல் எழுதத் திட்டமிட்டேன்.

இந்த நாவல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலேய கவர்னர்கள், தளபதிகள், கலெக்டர்கள் வாழ்க்கையும், தென்னிந்தியப் போராளிகள் வாழ்க்கையும் ஆவணங்களின் அடிப்படையில், சிறுபுனைவுகளுடன் பதிவு செய்துள்ளேன். புனைவுகள்கூட வாசிப்பு அயர்ச்சியைப் போக்கத்தான்.

இந்த நாவலைப் பொறுத்தவரை முடிவு எல்லோருக்கும் தெரிந்தது. சம்பவங்களும் வரலாற்று ஆர்வம் உள்ளவர்கள் அறிந்தவையே. தெரிந்த முடிவை நோக்கி, தெரிந்த சம்பவங்களின் வழியாகப் பயணிப்பது எவ்வளவு சவாலான விஷயம் என்பது தெரிந்தே இருந்தது. எப்படி நடந்திருக்கும் என்ற சொல்முறையில் தான், வாசகரின் கவனத்தை நாவலின் பக்கங்களில் தக்க வைக்க முடியும் என்பதை நான் அறிந்தே இருந்தேன்.

இந்த நாவலில் பல இடங்களில் ஜாதிப் பெயர் சொல்லப் பட்டுள்ளது. ஒருவரை ஒருவர் ஜாதிப் பெயரில் அழைத்துக் கொள்வதையும் பதிவு செய்துள்ளேன். இன்றைய சூழலில் இப்பழக்கம் நடைமுறையில் இல்லையென்றாலும் அன்றைய காலகட்டத்தில் இதுதான் நடைமுறை என்பதால் அதை அவ்வாறே பதிவு செய்துள்ளேன்.

நாவலின் சில பகுதிகளில் உரையாடல்கள் சற்று நீளமாகத் தெரியலாம். தொலைத்தொடர்பும், போக்குவரத்தும் உள்ள இன்றைய சூழலில் நீளமான உரையாடல்களுக்குத் தேவையிருப்பது இல்லை. அது

தேவையில்லாமலும் இருக்கலாம். அந்தக் காலத்தில் வெளியூருக்குச் சென்று ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்றால் வந்தேன், பார்த்தேன், கிளம்பினேன் என இருக்க முடியாது. ஊருக்கு வந்தவுடன் நிதானமாகத் தங்கி, பேசி விட்டுத்தான் கிளம்புவார்கள். அதுபோன்ற சூழலில், வாழ்க்கை முறையில் ஒரு விஷயத்தை விலாவாரியாகப் பேசுவதும், விளக்கமாகப் பேசுவதும் இயல்பாக நடக்கும்.

மருது பாண்டியர்கள், ஊமைத்துரை குறித்து டாக்டர் ராஜய்யன் இந்தியாவின் முதல் சுதந்திரப் போராளிகள் என்று வலி யுறுத்துவதை இந்த நாவலைப் படிக்கும் வாசகர்களும் உணர்ந்தால், முயற்சி வெற்றி அடைந்ததாகக் கருதுவேன். நான் இந்த நாவலை எழுதுவதில் நிறைய நடைமுறைப் பிரச்சனைகள் உள்ளன என்பதை அறிவேன். யாரையாவது உயர்த்திப் பிடிப்பதற்காக இந்த முயற்சியா? யாரையாவது முன்னிலைப்படுத்தும் வேலையா? என யோசித்துத் தயவுசெய்து யாரும் தங்களது நேரத்தை வீணாக்க வேண்டாம். இருநூற்றுப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளை, போராளிகளை, அவர்களை அடக்கியவர்களை இன்று நாம் பார்க்கும் கோணம் நமக்கு மட்டுமே சாத்தியம். அன்றைய போரில் வென்றவர்கள் பத்து இருபது ஆண்டுகளில் எப்படியெல்லாம் அவமானப்பட்டு இறந்தனர்? தோற்றவர்கள் தூக்கிலிடப்பட்ட பிறகு அவர்கள் சுற்றத்திற்கு நடந்ததையெல்லாம் நம்மால் கற்பனைகூடச் செய்துபார்க்க இயலாது. அவ்வளவு துயரம் நிரம்பியவை அவை. எப்போதுமே வென்றவர், எப்போதுமே தோற்றவர் என உலகில் யாரும் இல்லை. மனித வாழ்வில் நினைவுகள் மட்டுமே நிலையானவை. இதை உணர்ந்தவர்கள் யாரையும் தூக்கிப் பிடிக்க விரும்ப மாட்டார்கள். இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கங்களில் இருக்கும் மனிதர்களின் வாழ்க்கை வரலாறே நமக்கு இந்த உண்மையைச் சொல்லும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வடகரை வம்சத்தின் வரலாறு என்ற எனது குடும்ப வரலாற்றை ஆவணப்படுத்தினேன். பதினைந்து வயதிற்குள் நான் பார்த்த கிராம வாழ்க்கை பாதாளி என்ற சிறுகதைத் தொகுப்பாக வெளி வந்தது. மருது பாண்டியர்கள், ஊமைத்துரை, சிவத்தையா, கோபால் நாயக்கர், தூந்தாஜி வாக் போன்ற போராளிகள் சம்பந்தப்பட்ட இந்த நாவல் எனது குடும்பம், தாண்டி, எனது ஊர் தாண்டி, என்னுடைய தென்மாவட்டத்தின் கதைக்களம். நாவலில் சொல்லப்பட்ட பெரும்பாலான பகுதிகளுக்கு நான்

பயணப்பட்டிருக்கிறேன். கதை மாந்தர்கள் சிலரின் வழி வந்தவர் களைச் சந்தித்தும் இருக்கிறேன்.

ஐந்து ஆண்டுகளில் நான் தேடிய தரவுகளைப் பத்திரப்படுத்தி ஒழுங்குபடுத்தியவர் அ.வெண்ணிலா. வரலாற்று முயற்சிகளுக்கு எப்பொழுதும் முன்னுரிமை கொடுப்பவர். வரலாற்றைச் சொல்ல வேண்டிய அதே நேரத்தில், சிறந்த நாவலாகவும் இந்நூல் வெளிவர முயற்சி எடுத்தவர் அ.வெண்ணிலா. அவரது உதவிகளை அன்புடன் நினைவு கூறுகிறேன்.

இந்நாவலைப் படித்துப் பார்த்துத் தங்களது கருத்துகளைச் சொன்ன எழுத்தாளர்கள் இமயம், ம.மணிமாறனுக்கு எனது நன்றி.

வரலாறு சம்பந்தப்பட்ட நூல்களை வெளியிடுவதில் தனித்த கவனமும் ஆர்வமும் எடுத்துக் கொள்பவர் தம்பி மு.முருகேஷ். என்னுடைய நூல்கள் அனைத்தையும் நேர்த்தியாக வெளியிட்ட அகநி வெளியீடு, இந்த நாவலையும் கொண்டுவருகிறது. தம்பி முருகேஷிற்கு எனது நன்றிகள். நூலினைச் சிறப்பாக வடிவமைத்த நண்பர் மாரீஸ்க்கு என் அன்பும் நன்றியும்.

எனது இலக்கிய முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் எனது தம்பிகள் கூட்டுறவுத் துறையின் கூடுதல் பதிவாளர். டாக்டர் மு.ராஜசேகர், தென்னக ரெயில்வே நிலைய அதிகாரி ஜெ.மு. மகேந்திரன், இந்து அறநிலையத்துறை உதவிப் பொறியாளர் ஜெ.மு.ரவிச்சந்திரன் எனது நன்றிக்கு உரியவர்கள். நண்பர்கள் சு.கனகவதி, ச.ராசு, பொ.அம்சவள்ளி, பொ.சுந்தரம் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

28.12.2016 அன்புடன்,

டாக்டர் மு.ராஜேந்திரன்,

இ.ஆ.ப.

1

மே **6, 1800**

அதிகாலை நான்கு மணி. முதல் நாள் பெய்த கோடை மழையில் பூமி குளிர்ந்திருந்தது. அதிகாலை கடல் அலை மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைத் தொட முயன்று கொண்டிருந்தது. கோட்டைக்குள்

இருக்கும் செயின்ட் மேரி சர்ச்சின் பங்குத் தந்தை ராபர்ட் கிறிஸ்டி, புதிதாகத் தைத்த வெள்ளை உடுப்பு அணிந்து மிடுக்காக இருந்தான். கையில் லாந்தர் விளக்குடன் சர்ச்சை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் கோயிலில் வேலை பார்க்கும் சிலுவையைத் தேடின. தேவாலயத்தைக் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்த சிலுவை, பாதர் ராபர்ட்டை நிமிர்ந்து பார்த்தார். சிலுவைக்கு எண்பது வயதிருக்கும். வெள்ளைக்காரர்கள் பயன் படுத்திய பழைய சட்டையையும், டவுசரையும் போட்டுக் கொண்டிருந்தார். அந்த உடைகள் அவருக்கு மிகவும் பெரிதாக இருந்தன. சர்ச்சிற்குள் நுழைந்து கொண்டிருந்த பங்குத் தந்தைக்கு சிலுவை "தோத்திரம், சாமி" என்று சொல்லிக் காலில் விழுந்தார். "சிலுவ, நீங்க கோயில் பிள்ளையாயிருக்கீங்க. தேவாலயத்துல முக்கியமான ஆளு. என்னைவிட வயசுல மூத்தவர். என் காலில் விழக்கூடாதுன்னு பலமுற ஒங்களுக்குச் சொல்லியிருக்கேன்."

"இல்ல சாமி, இன்னைக்கு மே மாசம் ஆறாந் தேதி. முக்கியமான நாளு. புனிதர் சார்சு கர்த்தருக்குள் அடக்கமான நாளு. அப்படிப்பட்ட புனிதமான நாளுல, பங்குத் தந்தையான ஒங்க கால்ல நான் கட்டாயம் விழணும் சாமி, அதனாலதான்."

"சரி சிலுவ, நீங்க சில விசயத்துல எம் பேச்சக் கேக்க மாட்டீங்க. இந்தாங்க, இந்த லாந்தர ஆல்டருக்கிட்ட தொங்கவிடுங்க. சாம்பிராணிப் போடுறதுக்கு இரும்புச் சட்டியும், நெருப்புக் கங்கும் தயாராயிருக்கா கோயில் பிள்ள?"

"இருக்கு சாமி. இப்படிக் கொடுங்க லாந்தர. லாந்தர மாட்டிபுட்டு சாம்பிராணிச் சட்டிய எடுத்துட்டு வர்றேன்" என்று

சொல்லி லாந்தரைச் சிலுவை வாங்கிக் கொண்டார். லாந்தர் விளக்கின் திரியை சிலுவை சற்று உயர்த்திவிட்டார்.

"சிலுவ, வெளக்க ரொம்பத் தூக்காதே, மன்னிச்சுக்கோங்க, தூக்காதீங்க. கண்ணாடியில பொகை அடிக்கப் போகுது."

"இல்ல சாமி, கண்ணாடியில பொகை வராத அளவுதான் திரிய ஒயர்த்துவேன்" என்று சொன்ன சிலுவை லாந்தரின் கொக்கியை ஆல்டருக்கு அருகில் தொடங்கிய இரும்புக் கம்பியில் மாட்டி விட்டார். ஏற்கனவே தேவாலயத்திற்குள் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்த

மூன்று விளக்குகளின் ஒளியோடு சிலுவைத் தொங்க விட்ட லாந்தர் விளக்கின் ஒளியும் சேர்ந்தது.

வெள்ளை உடை கசங்காமல் ஆல்டர் முன்பு மண்டியிட்டு பாதர் ராபர்ட் கிறிஸ்டி பிரார்த்தனை செய்தான். பின்பு எழுந்து வந்து வரிசையாகப் போடப்பட்டிருந்த இருக்கை ஒன்றில் உட்கார்ந்தான். முதுகை நன்றாகச் சாய்ந்து கொண்டான். ராபர்ட் பங்குத் தந்தையாக இங்கு வந்த பிறகுதான் சாய்வு இருக்கைகள் வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. ஐரோப்பியர்கள் சாய்வு இருக்கைகளில்தான் உட்கார்வார்கள். "ஐரோப்பியர்கள், இந்தியர்கள் போல முதுகை நேராக வைத்து உட்கார மாட்டார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் சாய்ந்த மாதிரி இருக்கைகள் வேண்டும்" என்று சிலுவையிடம் பாதர் சொல்லியிருந்தார். போன வாரம்தான் சாய்ந்து உட்காரும் வசதியுள்ள இந்த இருக்கைகள் வந்தன.

"கோயில் பிள்ளை, சூரிய வெளிச்சம் இப்ப வந்துடும். கவர்னரின் மெய்க்காப்பாளருங்க கொஞ்ச நேரத்தில வருவாங்க. கவர்னர் எப்போ வரணும்னு அவங்ககிட்ட நான் சொல்லணும். காளிகாம்பாள் கோயில் பூசாரிகிட்ட எந்த நேரம் நல்லாயிருக்கும்னு நேத்து உங்களை விசாரிக்கச் சொன்னேனே? விசாரிச்சுட்டிங்களா?"

"விசாரிச்சுட்டேன் சாமி. நேத்தே ஒங்க வீட்டுக்கு வந்து ஒங்க அப்பாக்கிட்ட சொல்லிட்டேனே, ஒங்ககிட்ட சொல்லச் சொல்லி. அவர் சொல்லலையா?"

"சரியாப் போச்சு. அப்பாவுக்கு அவர் இளைஞராயிருந்தப்ப பீரங்கிக்குக் குண்டு செலுத்துற வேல கோயில் பிள்ளை. குண்டு வெடிக்கும்போது ஏற்பட்ட பெருஞ் சத்தத்தில அவர் காது சவ்வு கிழிஞ்சு போச்சு. இப்போல்லாம் சுத்தமாவே அவருக்குக் காது கேக் கிறதில்ல. ஆனா காது கேக்குற மாதிரி எல்லாத்துக்கும் தலையாட்டி வைப்பார். நீங்க அத நம்பிட்டு வந்துட்டிங்களா? சரி பரவாயில்ல, சொல்லுங்க, சூரியன் உச்சிக்கு வர்ற நேரம்தான நல்ல நேரம்?"

"ஆமா சாமி. ஒங்களுக்குத் தெரியாததா?"

"இல்ல கோயில் பிள்ளை, உங்களிடமும் ஆலோசனை பண்ணிக் கினும்ல? திடீர்னு கவர்னர் ஒங்ககிட்ட ஏதாவது பேசினார்னா நீங்களும் சொல்லணும்ல? சாமி என்கிட்டயும் கேட்டுத்தான் சர்ச் வேல எல்லாத்தையும் செய்வார்னு?"

“கவர்னர்கிட்ட பேசுற அளவுக்கா சாமி நா இருக்கேன்?”

“கோயில் பிள்ளை, என்ன இப்படி சொல்லிட்டீங்க? நம்ம கவர்னரோட அப்பா ராபர்ட் கிளைவ்வ உங்களுக்கு நல்லாத் தெரியும்ல? அவருகூடவே பழக்கம்னு என்கிட்ட ஒருமுறை நீங்க சொன்னீங்களே.”

“ஆமா சாமி, இந்த சர்ச்சுக்கு எதுத்தாப்ல இருக்க அந்த பெரிய மாளிகையிலதான் கிளைவ் பிரபு பொஞ்சாதியோட தங்கியிருந்தார். அப்போ, அவரும் அவங்கப் பொஞ்சாதியும் தெனமும் இந்த

சர்ச்சுக்கு வருவாங்க. அப்பெல்லாம் இவ்வளவு கெடுபிடிக இல்ல. புருஷன், பொஞ்சாதி ரெண்டு பேரும் வந்து சாமி கும்பிட்டுப் போவாங்க. நா அப்ப வெவரமில்லாத வெடலப் பயலா இருந்தேன். அந்த நேரத்தில நானு சர்ச்சுக்குள்ள சும்மா எடுபிடி வேல பாத்துக் கிட்டிருந்தேன். என்னப் பாத்து கிளைவ் துரையோட மேம் சாகிபா சிரிப்பாங்க. அப்போ அவங்களுக்கு குழந்தயில்ல. பல நேரம் சர்ச்சுக்குள்ள வர்றபோது தரையில படுற மாதிரி வெள்ளக் கலர்ல கவுன் போட்டு வருவாங்க. அவங்க கவுன தரையில படாம ரெண்டு கையிலேயும் பிடிச்சுக்கிட்டு சர்ச் வரைக்கும் வருவாங்க. சர்ச்சுக்குள்ள நான்தான் கவுனத் தூக்கிப் பிடிச்சுக்கிட்டு அவங்க பின்னாலேயே வருவேன். சர்ச்சை விட்டுப் போகயில் எப்பவும் என் கன்னத்தில செல்லமா தட்டிட்டு மேம் சாகிபா போவாங்க. அந்தக் காலங்கள்ல இந்தக் கோட்டக்குள்ள இங்கிலிஸ்காரங்க மட்டும் இல்ல,போர்ச்சுக்கீசுக்காரங்களுக்கும், ஆர்மேனியக்காரங்களும் கூட கோட்டக்குள்ள குடி இருந்தாங்க. அவங்களுக்கு அப்ப யெல்லாம், இப்ப மாதிரி தனி சர்ச் எல்லாம் கெடயாது. எல்லா வெள்ளக்காரங்களும் இந்த சர்ச்சுக்குத்தான் வருவாங்க. ஒரு நாளு, நா மேம் சாகிபாகிட்டக்கப்போயி பேசிட்டேன். நா மேம் சாகிபா காதுகிட்ட பேசினத வெள்ளக்காரங்கல்லாம் பாத்துட்டாங்க. நா மேம் சாகிபாகிட்ட ஏதோ தப்பா பேசிட்டேன்னு நினைச்சு போர்த்துக்கீசிய வியாபாரி ஒருத்தரு என்னயத் தல முடியோடு சேர்த்துப் புடிச்சுக்கிட்டாரு. என்ன திமிர்டா உனக்கு? நேட்டிவ் நாயேன்னு திட்டி அடிச்சுட்டாரு. ரெண்டு மூணு அடி அவரு அடிச்சதப் பாத்துட்டு இன்னும் ரெண்டு மூணு பேரு சேர்ந்து என்னயச் சுத்தி நின்னுக்கிட்டு அடிக்க ஆரம்பிச்சுட்டாங்க. கிளைவ் பிரபு தலையிட்டு என்னக் காப்பாத்திட்டாரு. இல்லன்னா அன்னைக்கே என் உயிர் போயிருக்கும்.”

“மேம் சாகிபாகிட்ட என்ன சொன்ன? அப்படி, அடி வாங்குற அளவுக்கு” என்றான் பாதர் ராபர்ட் கிறிஸ்டி.

“நா ஒன்னும் பெருசா சொல்லல சாமி. மேம் சாகிபா, நீங்க தெனமும் சர்ச்சுக்கு வந்து சாமி கும்பிடுறது மாதிரியே பிளாக் டவுன்ல இருக்கிற காளிகாம்பா கோயிலுக்கும் போயிட்டு வந்தீங்கன்னா, கொழந்த பிறக்கும்னு சொல்லிட்டேன்.”

“அடப்பாவி, அப்புறம்?”

“என் நல்ல நேரத்திற்கு கிளைவ் தொர என்னைய அடிச்ச போர்த்துக்கீசிய முரடன்ககிட்ட சொல்லிட்டார். “சின்னப் பையன். வெவரம் தெரியாதவன். அவன் தான் வெவரமில்லாம பேசுறான்னா நீங்க எல்லாம் வெவரமான வியாபாரிக. இவன நேட்டிவ் நாய்னு திட்டுறீங்க. இந்த நேட்டிவ் நாயோட அப்பா வாங்கிக் கொடுக்கிற பஞ்சு, பனை வெல்லத்த வித்துத்தானே கொள்ளை லாபம் சம்பாதிக்கிறீங்க. அந்த வியாபாரத்தாலேதானே உங்களுக்குக் கோட்டைக்குள்ளேயே குடியிருக்க வீடும், கோடவுனும் கிடைச் சிருக்கு. இவனை இப்படி போட்டு அடிச்சீங்கன்னா இவன் அப்பன் எப்படி உங்களுக்குத் தொழில்ல உதவியாயிருப்பான்? இவன் அப்பன் உங்ககூட வந்திருக்கிற இந்த ஆர்மேனியன்கிட்ட நாளைக்கே வேலைக்குச் சேர்ந்திருவான். அப்புறம் நீங்க தொழில் பண்ண முடியாது. தொழில் பண்ணலைன்னா கோட்டைக்குள்ள இருக்க முடியாது. நீங்க கோட்டையவிட்டு பிளாக் டவுனுக்குத்தான் போகணும்னு” சொன்னார்.

“பரவாயில்லையே, சிலுவ. உனக்கு கவர்னரே சாதகமாப் பேசி இருக்காரே? சரி சொல்லு, நீ சொன்ன மாதிரிதான் ராபர்ட் கிளைவிற்குக் குழந்தைப் பிறந்திடுச்சே?”

“சாமி, குழந்த மட்டுமா பொறந்துச்சு? அந்தக் குழந்த அவுக அப்பா மாதிரியே ஐம்பது வருஷத்துல இதே மதராசுக்கு கவர்னராவும் வந்திடுச்சே. காளிகாம்பாவும் மேரி மாதாவும் சேர்ந்த மகிமை சாமி.”

“சரிசரி, இதோட நிறுத்திக்குவோம். பெரிய இடத்து விசயம். விடியப்போகுது. வாசல அடிக்கடி கூட்டிப் பெருக்கிக்கிட்டேயிரு. கவர்னரோட மெய்க்காப்பாளருங்க வந்தாங்கன்னா அவங்ககிட்ட நான் பேசும் போது நீ கொஞ்சம் தள்ளி நின்னுக்க.”

“சரி... சாமி”

அன்று மதியம். பிராமணர்களும், முல்லாக்களும், கிறிஸ்துவப் பாதிரியார்களும் மெட்ராஸ் செயின்ட் மேரி தேவாலயத்திற்கு முன்பு கூடியிருந்தனர். அந்த நேரம் முப்பத்தியொரு குண்டுகள் முழங்கின. தேவாலயத்திற்கு முன்பு நின்றிருந்த அனைவரும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் பிரம்மாண்டமான வாயிலைப் பார்த்தனர். அகழிக்கு மேலிருந்த மரப்பலகைகள் ஒவ்வொன்றாக இறக்கப்பட்டன. பெரும் அகழிக்கும் கடற்கரைக்கும் நடுவிலிருந்த கால்வாய்மீது அந்த மரப்பலகைகள் பொறுத்தப்பட்டன.

பாண்டு வாத்தியம் முழங்கியபடி பெரும் இறைச்சலுடன் கிழக்கிந்தியக் கம்பெனியின் நான்காவது படைப்பிரிவு அகழியின் மீது போடப்பட்ட மரப்பலகைகள்மீது “தொம் தொம்” என்று பூட்ஸ் கால்கள் சத்தமிடக் கோட்டைக்குள் நுழைந்தது. பேண்டு வாத்தியத்திற்குப் பின்னால் உறுவிய வாளை உயரத் தூக்கிப் பிடித்தபடி ராணுவ அதிகாரிகள் குதிரைகள்மீது ஆரோகணித்து வந்தனர். அடுத்ததாக நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி வந்தது. வண்டியின் இடதுபுறம் அன்டர் செகரட்டரி ஸ்டீபன் ரம்ப்போல்ட் லூஷிங்டன் குதிரையின்மீது வந்துகொண்டிருந்தான்.

லூஷிங்டன்னுக்கு முப்பது வயது இருக்கும். உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்த அவன், தலைமுடியைப் படியச் சீவி யிருந்தான். அது அவனது சதுர முகத்திற்கு அழகாக இருந்தது. நீளமான சிகப்பு நிறக் கோட்டும், வெள்ளை கால்ச் சட்டையும் அணிந்திருந்தான். கருப்பு நிறத்தில் ஒரே மாதிரியான பூட்ஸ்கள் போட்டிருந்தான். இரண்டு பூட்ஸ்களும் அவன் காலைவிடப் பெரிதாக இருந்தன. இன்னும் ஐம்பது வருடங்கள் கழித்துத்தான் வலது காலுக்கு ஒரு மாதிரியும் இடது காலுக்கு ஒரு மாதிரியும் பூட்ஸ்கள் வர இருக்கின்றன.

சர்ச்சை நெருங்கியதும் பாண்டு வாத்தியக் குழு சத்தத்தைக் குறைத்தது. கிழக்கிந்தியக் கம்பெனி வீரர்கள் அட்டென்சனில் நின்றனர். தேவாலயத்திற்கு முன்பு நின்றிருந்த சீருடை வீரன் ஒருவன் ஓடிவந்து அன்டர் செகரட்டரியின் குதிரைக்கு அருகில் நின்றான். அவனைப் பார்த்து அன்டர் செகரட்டரி தலையசைத்தான். அவன் குதிரையைப் பிடித்துக்கொண்டான். குதிரையிலிருந்து அன்டர் செகரட்டரி குதித்து இறங்கினான். குதிரையின் கடிவாளம் சீருடை வீரனின் கைக்குச் சென்றது. குதிரையைவிட்டு கீழிறங்கிய அன்டர் செகரட்டரியின் இடுப்பு

பெல்ட்டோடு இடுப்பிலிருந்து கால்வரை தொங்கும் கத்தியைச் சேர்த்து ஒரு சீருடைப் பணியாளன் கட்டினான். ஒருவன் தொப்பியைப் பணிவுடன் நீட்டினான். அன்டர் செகரட்டரி தனது சீருடையை சரி பார்த்துக்கொண்டான். தொப்பியை ஒன்றுக்கு இரண்டுமுறை சரி செய்துகொண்டான்.

இதெல்லாம் ஒரு நாடகக் காட்சி மாதிரி சில நிமிடங்களிலேயே நடந்து முடிந்து விட்டது. அன்டர் செகரட்டரி தயாராவதற்கும், கவர்னரின் கோச் தேவாலயத்திற்கு முன்வந்து நிற்கவும் சரியாக இருந்தது. கவர்னரின் கோச்சிற்கு முன்பு நின்ற அன்டர் செகரட்டரி எஸ்.ஆர். லூஷிங்டன், கோச் முழுமையாக நிற்கும்வரை காத் திருந்தான். கோச் நின்றதும் இடுப்புக் கத்தியை உறையிலிருந்து எடுத்தான். வலது கையில் கத்தியை உயர்த்தித் தனது பூட்ஸ் கால் களால் சத்தத்துடன் தரையில் உதைத்து கவர்னருக்கு சல்யூட் செய்தான். கவர்னரின் வருகையை அன்டர் செகரட்டரி உரத்த குரலில் அறிவித்தான்.

“லேடிஸ் அண்ட் ஜென்டில்மென், யுவர் அட்டென்ஷன் பிளீஸ். “வி வெல்கம் ஹிஸ் எக்ஸலன்ஸி, எக்ஸ் மெம்பர் ஆப் பிரிட்டிஷ் பார்லிமென்ட், எக்ஸ் லார்ட் லெப்டினென்ட் ஆப் ஸ்ரோப்ஸ்பயர், கர்னல் எட்வர்ட் கிளைவ், கவர்னர் ஆப் மெட்ராஸ்.”

கவர்னரின் பார்வை அன்டர் செகரட்டரியின்மீது விழுந்தது. அவனது மரியாதையை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்.

கவர்னர் கோச்சை விட்டுக் கீழே குதித்து இறங்கினார். கவர்னருக்கு நாற்பத்தைந்து வயது. ஆனால் பார்ப்பதற்கு முப்பது வயதுபோலத் தெரிந்தார். நல்ல உயரம். செம்பட்டை முடியும் நீலநிறக் கண்களும் அவரைக் கவர்ச்சியான மனிதராகக் காட்டின. அவர் கர்னல்கள் அணியும் சீருடையிலிருந்தார். சிவப்பு நிறக் கர்னல் யூனிபார்ம் அவரது கம்பீரத்தை அதிகப்படுத்திக் காண்பித்தது. கைகளுக்கு கையுறை அணிந்திருந்தார்.

“கம் ஹென்ரீட்டா”என்று சொல்லி, கோச்சிலிருந்து இறங்க மனைவிக்குக் கை கொடுத்து உதவினார். அவளும் நல்ல உயரம். வெள்ளை கவுன் அணிந்திருந்தாள். தலையில் சிவப்பு நிறத் தொப்பி அணிந்திருந்தாள். காதுகளிலும், கழுத்திலும் அணிந்திருந்த வைர நகைகள் மதிய நேர வெயிலில் மின்னின. அவளுக்கு அன்டர் செகரட்டரி

சல்யூட் அடித்தான், அவள் புன்னகையுடன் கை நீட்டி னாள். அன்டர் செகரட்டரி உடனடியாகத் தன் கையில் உயர்த்திப் பிடித்திருந்த கத்தியை இடுப்பில் கட்டியிருந்த தோல் உறையில் செருகினான். ஒரு காலை மடக்கித் தரையில் ஊன்றிக்கொண்டு அவளது கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

மிக அழகியப் பெண்ணான அவளது கை மிகவும் மென்மையாக இருந்ததை உணர்ந்த அன்டர் செகரட்டரி "யுவர் எக்ஸலன்ஸி, யுவர் ஹேண்ட்ஸ் ஆர் சோ சாப்ட் அன்ட் சப்பிள்" என்றான்.

அன்டர் செகரட்டரி தன் மனைவியை கை குலுக்கியதையும் ஏதோ அவளிடம் பேசுவதையும் கவர்னர் பார்த்துச் சிரித்தார். "என் அன்பான அழகிய ஹென்ரீட்டா, இளம் அதிகாரிகள் உன்னுடன் கை குலுக்கும்போது இந்த உலகத்தையே வென்றதுபோல நினைக் கிறார்கள். ஆனால் பாவம், அவர்கள் யோகமில்லாதவர்கள்" என்றார்.

"மை டியர் எட், எல்லோரையும் உங்களைப்போல நினைத்துப் பயப்படாதீர்கள். இன்னும் ஐந்து ஆண்டுகளில் திருமணம் ஆகும் வயதில் எனக்கு மகள் இருக்கிறாள் என்பதை இளம் அதிகாரிகள் அறிவார்கள். அவர்களின் பெருமிதமான உபசரிப்பிற்கு நான் சற்று இளமையாக இருப்பது மட்டும் காரணமில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியை இந்தியாவில் காலூன்ற வைத்த ராபர்ட் கிளைவ்வின் மருமகள் என்ற முறையிலும் இப்போதைய கவர்னர் எட்வர்ட் கிளைவ்வின் பிரியமான மனைவி என்பதும்தான் காரணம். மேலும் நீங்களும் அவர்களுக்காக ஒன்றும் வருத்தப்படவேண்டாம்" என்றாள்.

கவர்னர் தம்பதிகளின் தன்னைப் பற்றிய பேச்சு அன்டர் செகரட்டரிக்கு குதூகலத்தைக் கொடுத்தது. தற்போதைய கிழக் கிந்தியக் கம்பெனியின் டைரக்டர் ஒருவரோடு அன்டர் செகரட்டரி நல்ல தொடர்பில் இருப்பவன். அந்த டைரக்டர்தான் அன்டர் செகரட்டரிக்கு மெட்ராஸ் கிழக்கிந்தியக் கம்பெனியில் கிளார்க் வேலை வாங்கிக் கொடுத்தவன். கிளார்க் வேலை கிடைத்த மூன்று வருடத்தில் லூஷிங்டன் அன்டர் செகரட்டரி ஆகிவிட்டான்.

லண்டனிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னிங் போர்டில் செல்வாக்குள்ள ஒரு டைரக்டர் இந்த அன்டர் செகரட் டரிக்கு ஆதரவாக உள்ளார் என்பதால் கவர்னர் எட்வர்ட் கிளைவ், அன்டர் செகரட்டரியிடம் கூடுதல் அன்போடு பேசுவார். இன்றுகூட அந்தக் காரணத்திற்குத்தான்

அன்டர் செகரட்டரியுடன் கவர்னர் சகஜமாகப் பேசினார். கவர்னர் தன் கண்களைக் கூட்டத்தை நோக்கித் திருப்பினார். விருந்தினர்களின் வணக்கத்தைத் தன் தலை யசைப்பில் ஏற்றுக்கொண்டார். தன் மனைவியுடன் சேர்ந்து நடந்து வந்தார். தேவாலயத்திற்கு அருகிலுள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின் முன்பு வந்து நின்றார். பின்பு அங்கிருந்து நடந்து சர்ச்சிற்குள் வந்து இருக்கைகளில் அமர்ந்தனர். அன்டர் செகரட்டரி கவர்னரின் வலப் புறம் நின்றான்.

“ஹென்ரீட்டா, யு நோ, என் தந்தை ராபர்ட் கிளைவ் இங்கு கவர்னராக இருக்கும்போது இந்த மாளிகையில்தான் தங்கியிருந்தார். நான்கூட இங்குதான் பிறந்தேன்” என்றார்.

ஏற்கனவே பலமுறை இதை கவர்னர் ஹென்ரீட்டாவிடம் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் இன்றைக்குப் பலர் தங்களைச் சுற்றி நின்றிருப்பதால், கவர்னர் சொல்வதைப் புதிதாகக் கேட்பது போல முகத்தை வைத்துக்கொண்டு ஹென்ரீட்டா தலையை ஆட்டிச் சிரித்தபடி கேட்டுக்கொண்டாள்.

ஒவ்வொரு மதத்தினரும் பூஜையைத் தொடங்கத் தயாராகினர். கவர்னர் எட்வர்ட் கிளைவ்வின் அனுமதிக்காகக் காத்திருந்தனர். கவர்னர் எழுந்தார்.

கவர்னர் எட்வர்ட் கிளைவ் லண்டனிலுள்ள பிரபலமான ஈடன் ஸ்கூலில் படித்தவர். இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அதனால் எந்தக் கூட்டம் என்றாலும், அவர் கட்டாயம் பேச வேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொள்ளும் கனவான்கள் எதிர்பார்ப்பார்கள். அதைக் கவர்னர் அறிவார். அதனால் ஒரு சிறு உரை நிகழ்த்த விரும்பினார். கூட்டத்தைப் புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

“ஹானரபிள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் மெட்ராஸ் கோட்டையில் உள்ள கவர்னரின் மாண்புமிகு ஆலோசனைக்குழு உறுப்பினர்களே, பல மதங்களைச் சார்ந்த மத குருமார்களே, கனவான்களே, சீமாட்டிகளே... ஒரு முக்கியமான நிகழ்வைப் பெருமையோடு நினைவு கொள்ளவும் அந்த நிகழ்வைக் கொண் டாடவும் இன்று நாம் இங்குக் கூடியிருக்கிறோம். இன்று மே மாதம் ஆறாம் தேதி. கிரிகேரியன் காலண்டர்படி கிறிஸ்துவத்தின் முதன்மைப் புனிதர்களில் ஒருவரான புனித ஜார்ஜ் நம் மதத்திற்காக உயிரை விட்ட நாள். உங்களில்

பலருக்கு இந்தச் செய்தி தெரிந்ததுதான். நமது தேவன் ஜீசஸ் கிறிஸ்து பிறந்து இருநூற்று எழுபத்தைந்து வருடங்கள் கழித்து பிறந்தவர் புனித ஜார்ஜ். இவர் ரோமானியப் பேரரசன் டயோகிலித்தியானின் ராணுவத்தில் தளபதியாக இருந்தார். மிகுந்த வீரமும், துணிச்சலும் உள்ள தளபதி ஜார்ஜை ரோமானியப் பேரரசனுக்குப் பிடிக்கவில்லை. காரணம் வேறொன்றும் பெரிதாக இல்லை. ரோமானியப் பேரரசர்களுக்குப் பிடிக்காத கிறிஸ்துவ மதத்தை ஜார்ஜ் தழுவிவிட்டார் எனப் பேரரசன் டயோகிலித்தியானுக்குத் தெரிந்துவிட்டது. தளபதி ஜார்ஜை வரவழைத்து அரசன் தனது கோபத்தைத் தெரிவித்திருக்கிறான். அரசனின் பேச்சை தளபதி ஜார்ஜ் கேட்கவில்லை. கோபமுற்ற அரசன் ஜார்ஜை தூக்கில் ஏற்ற ஆணையிட்டான். தளபதி ஜார்ஜ் கிறிஸ்தவ மதத்திற்காக உயிரைவிட்ட புனிதமான நாள் இந்த மே மாதம் ஆறாம் தேதி.

கி.பி.**1640**-ஆம் ஆண்டு ஏப்ரல் **23**-இல் இந்த மெட்ராஸ் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது. அன்றுதான் ரோமானியப் பேரரசனால் புனித ஜார்ஜ் தூக்கிலிடப்பட்ட நாள். என்ன கவர்னர் புனித ஜார்ஜ் தூக்கிலிடப்பட்ட நாள் முதலில் மே மாதம் ஆறாம் தேதி என்கிறார். இப்போது ஏப்ரல் **23** என்கிறாரே என்று குழம்ப வேண்டாம். **1640** ஆண்டுகளில் நாம் ஜூலியன் காலண்டரைப் பின்பற்றினோம். இப்போது கிரிகோரியன் காலண்டரைப் பின்பற்று கிறோம். ஜூலியன் காலண்டர் படி புனித ஜார்ஜ் இறந்த தினமாக இருந்த ஏப்ரல் **23** தேதி கிரிகோரியன் காலண்டர் படி மே மாதம் தேதி ஆறு என்று ஆகிவிட்டது. ஆகவே மே ஆறாம் தேதியைப் புனிதரின் தினமாக அவர் பெயரில் உள்ள இந்தக் கோட்டையில் இன்று கொண்டாடுகிறோம். புனித ஜார்ஜ் வெள்ளைக் குதிரையில் பவனி வருவதாக நம்பப்படுகிறார். புனிதர் ஜார்ஜின் நினைவு தினத்தில் மாட்சிமைத் தாங்கிய நமது பேரரசருக்கும், ஹானரபிள் ஈஸ்ட் இந்தியக் கம்பெனிக்கும் இங்குக் கூடியுள்ள நம் அனைவருக்கும் புனிதரின் அருளும் ஆசீர்வாதமும் கிடைக்கட்டும்.

புனிதரும் ராணுவத் தளபதியுமான புனித ஜார்ஜ் கர்த்தருக்குள் நித்திரையாகி இன்றோடு **1498** ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. மெட்ராஸ் மாகாணத்தில் குறிப்பாக பாஞ்சாலங்குறிச்சி, சிவகங்கை, ராமநாதபுரம் பகுதிகளில் அமைதி நிலவ வேண்டும் என்று இந்தப் புனித தினத்தில் விரும்புகிறோம். நம்மீது அன்புள்ளோருக்கு அன்பாக இருக்க நினைக்கிறோம். நம்மை எதிர்க்கத் துணிந்தவர் களுக்கு எச்சரிக்கை செய்யும் பொறுப்பும் நமக்கு உண்டு.” கவர்னர் பேசி முடித்து, அவர் இருக்கையில் அமர்ந்தார்.

கொண்டாட்டமாக ஆரம்பித்தப் பேச்சை கவர்னர், எச்சரிக்கை யாக முடித்தார். கவர்னரின் பேச்சில் இருந்த எச்சரிக்கையை எல்லோருமே கவனித்தார்கள். அவர் பேசி முடித்தப் பிறகும் அங்கு ஓர் அமைதி நிலவியது. அனைவருக்கும் ஒயின் தரப்பட்டது. தன் கையிலிருந்த ஒயின் கோப்பையை கவர்னர் உயர்த்திப் பிடித்தார்.

“மேன்மைமிகு பிரிட்டனின் பேரரசர் ஜார்ஜ் அகஸ்டஸ் பிரடெரிக், பேரரசி புரோன்ஸ்விக் கரோலின், ஹானரபிள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கவர்னர் ஜெனரல் எர்ல் ஆப் மார்னிங்டன் ரிச்சாட் கோலே வெல்லெஸ்ஸி, லேடி கேத்தரின் சாரா டோரோதி வெல்லெஸ்லி ஆகியோரின் உடல்நலத்திற்கும் அவர்களின் மகிழ்ச்சிக்கும்” என்று சொல்லிய கவர்னர் ஒயின் கிளாசை தனது மனைவியின் ஒயின் கிளாசோடு மெதுவாக மோதினார்.

பங்குத் தந்தை ராபர்ட் கிறிஸ்டி கவர்னருக்கு அருகில் வந்து நின்று நன்றி தெரிவித்தார். பின்பு குரலில் கம்பீரத்தோடும், உடல் மொழியில் பௌவியத்தோடும் பங்குத் தந்தை பேசினார்.

“கவர்னர் லார்ட் எட்வர்ட் கிளைவ், தந்தை ராபர்ட் கிளைவை மிஞ்சிய தனயன். தந்தையார் அடித்தளமிட்ட ஈஸ்ட் இந்தியக் கம்பெனி ஆட்சியை தனயன் எட்வர்ட் கிளைவ் நிலைநிறுத்தியவர். கம்பெனியை எதிர்த்த திப்பு சுல்தான், கட்டபொம்மன் ஆகி யோர் இன்று உயிரோடு இல்லை. கம்பெனியை மதிக்காமல் தன்னிச்சையாக நடந்துகொண்ட ராமநாதபுரம் சேதுபதி ரிபெல் முத்துராமலிங்கம் இன்று திருச்சிக் கோட்டையில் காவல் கைதியாக உள்ளார். நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு மெட்ராசுக்கு மதப் பிரச்சாரம் செய்ய வந்த போர்ச்சுக்கல் நாட்டு ஏசு சபை பாதிரியார் ஜான் டி பிரிட்டோவை ராமநாதபுரம் பக்கத்திலுள்ள ஓரியூரில் வைத்துத் தூக்கிலிட்டவன், அப்போது சேதுபதியாக இருந்த கிழவன் சேதுபதி. கிழவனின் உறவினரான செருவத்திப் பாளையக்காரனும், கிறிஸ்துவத்திற்கு மதமாற்றம் செய்து கொண்டதால், உறவினன் என்றும் பாராது அவனையும் இந்தக் கிழவன் சேதுபதி தூக்கி லேற்றினான். அப்போதே கிழவன் சேதுபதிமீது போர் நடவடிக்கை எடுக்கச் சொல்லி ஏசு சபையினர் போர்ச்சுக்களில் உள்ள அரசருக்கு அவசரக் கடிதம் எழுதியபோது, ஏசு சபை அது வரையில் கேள்விப் பட்டிராத வகையில் இரண்டே மாதங்களில் பதில் கடிதம் வந்தது. “இப்போது கிழவன் சேதுபதியைத் தொட முடியாது. அறந்தாங்கி யிலிருந்து திருப்புவனம் வரை அவனது கட்டுப்பாட்டில் உள்ளது. மதுரை

நாயக்க அரசராக யார் இருப்பது என்று முடிவு செய்யக்கூடிய அளவு கிழவன் சேதுபதியுடைய மறவர் படை வீரியத்துடன் இருக்கிறது. தென் தமிழகத்தில் நாயக்க அரசர்களையும், முஸல்மான் அரசர்களையும் கட்டுப்படுத்தும் அளவிற்குக் கிழவன் வலுவாக இருக்கிறான். திருப்புல்லானிக் கோயிலுக்கு ஒரே நாளில் இருபத்தி ஏழு கிராமங்களை வழங்கியிருக்கிறான் என்று சென்ற கடிதத்தில் நீங்கள் எழுதியிருந்தீர்கள். மதுரை அரசன் சொக்கநாத நாயக்கர் தனது கோட்டையை விட்டு வெளியில் உலாவச் சென்றபோது அவனது தளபதி ருஸ்தம்கானால் சிறைப்படுத்தப்பட்டு, நாயக்க அரசனின் தம்பி அலகாத்திரி நாயுடு ருஸ்தம்கானால் மதுரை நாயக்க அரசன் ஆக்கப்பட்டான். ருஸ்தம்கான் தங்கியிருந்த திருச்சிக் கோட்டைக்கு, கன்னிவாடி பாளையக்காரர் சின்னக்கத்திரி நாயக்கரோடு சென்ற இந்தக் கிழவனின் படை ருஸ்தம்கானைக் கொன்று சொக்கநாதனை விடுவித்தது. சொக்கநாத நாயக்கனை கிழவன் சேதுபதி மீண்டும் மதுரை அரசராக்கி இருக்கிறான். இந்த நிகழ்வு நடந்த சிறிது காலத்திற்குப் பிறகு சொக்கநாதனின் மந்திரி குமாரப் பிள்ளை சூழ்ச்சி செய்து கிழவன் சேதுபதியைக் கைது செய்ய முயற்சித்தபோது அதை முறியடித்தவன் இந்தக் கிழவன். திருமயம் பாளையக்காரன் சிவந்து எழுந்த பல்லவராயர் தஞ்சாவூர் அரசரோடு சேர்ந்துகொண்டு கிழவனை எதிர்த்திருக்கிறான். அவனைக் கொன்று தனது மைத்துனன் ராய தொண்டமானை திருமயத்திற்கு அரசனாக்கியவன் இந்தச் சேதுபதி. அவன் எடுத்த தெல்லாம் வெற்றி. பொறுத்திருங்கள் காலம் மாறும். அப்போது கவனித்துக்கொள்வோம்” என்று சென்றது போர்ச்சுக்கலிருந்து வந்த கடிதத்தின் வாசகம். கடிதத்தில் சொல்லியபடி இந்த நூறு ஆண்டுகளில் காலம் மாறிவிட்டது.

கிழவன் சேதுபதியின் வாரிசு ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி நம் கோட்டையில் சிறைக் கைதியாகி இருக்கிறார். இன்று நாம் நடத்தும் புனித ஜார்ஜின் நிகழ்ச்சிகள் திருச்சி சிறையிலிருக்கும் சேதுபதியின் காதுகளுக்கும் போய்ச் சேரும். கவர்னர் எட்வர்ட் கிளைவ்வும் கர்னல் அக்னியூவும், ஹைதராபாத்திலிருக்கும் நமது மாண்புமிகு கவர்னர் ஜெனரலின் தம்பி கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லியும் நமது கவர்னர் ஜெனரல் மார்னிங்டனின் வழி காட்டுதலில் இங்கு அடங்காதவர்கள் அனைவரின் கொட்டத்தையும் அடக்குவார்கள். ராணுவத் தளபதியாகவும், புனிதராகவும் உள்ள மனிதப் புனிதர் ஜார்ஜ் நமக்கு வழி காட்டுவார்” என்றார்.

கூட்டத்தில் நின்றவர்கள் “ஆமென்” என்றனர். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த சிலுவை “அப்படியே ஆகட்டும்” என்று உரக்கக் கத்தினார். பாதர் ராபர்ட் கிறிஸ்டி சிலுவையைப் பார்த்துச் சிரித்து கண்களைச் சிமிட்டினான். கூட்டம் முடிந்தது என்பதைக் காட்டும் விதமாக கவர்னர் எட்வர்ட் கிளைவ் எழுந்து நின்றார்.

கவர்னரின் சாரட் வண்டி வந்து நின்றது. மனைவியைக் கை பிடித்து கோச்சில் ஏற்றிவிட்ட கவர்னர் தானும் ஏறிக்கொண்டார். அன்டர் செகரட்டரி லூஷிங்டன்னைப் பார்த்தார். அப்போது முப்பத்தியோரு குண்டுகள் முழங்கின. சத்தமும் புகையும் அடங்கின. லூஷிங்டன் கத்தியை உயர்த்தி காலைத் தரையில் ஓங்கி உதைத்து, கவர்னருக்கு சல்யூட் செய்தான். சாரட் நகர ஆரம்பித்தது.

•

2

மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அன்டர் செக்ரட்டரி லூஷிங்டன் தனது அறையில் சாய்வு நாற்காலியில் ஓய்வில் இருந்தான். மதிய உணவிற்குப்பின் சிறிது நேரம் ஓய்வெடுப்பது அவன் வழக்கம்.

கட்டபொம்மனைத் தூக்கில் போட்டு ஓராண்டு முடிந்திருந்தது. கட்டபொம்மனுடன் கம்பெனித் துருப்புகள் சண்டை போட்ட விவரங்களை லண்டனில் உள்ள ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்கு அவ்வப்போது கடிதமாக எழுதியதே லூஷிங்டன்தான். அவன் எழுதுகின்ற முறை, அவனது நிதானமான கையெழுத்து எல்லாம் கவர்னருக்குப் பிடிக்கும். பலமுறை அவனை அழைத்துப் பாராட்டி யிருக்கிறார். அதனால் கவர்னர் எட்வர்ட் கிளைவ்வைப் பார்க்கச் செல்லும்போது மிகவும் குதூகலத்துடன்தான் லூஷிங்டன் செல்வான். பேசிவிட்டுத் திரும்பும்போதும் சிரித்தபடிதான் வெளியில் வருவான்.

ஆனால் இன்று அப்படி இருக்கப்போவதில்லை. “லூஷிங்டன்னை உடனே வரச்சொல்” என்று கவர்னர் சொன்னதாக கவர்னரின் பாதுகாவலர் நேரடியாக வந்தது, ஏனோ லூஷிங்டன்னுக்கு உறுத்தலாக இருந்தது. லூஷிங்டன்னை அழைக்க ஒருமுறை கூட கவர்னர் தனது பாதுகாவலரை அனுப்பியதில்லை. அதனால், சற்றும் தாமதிக் காமல் கவர்னரைச் சந்திக்க கிளம்பினான்.

ஜார்ஜ் கோட்டையிலிருந்து கவர்னர் மாளிகைக்குக் குதிரையில் போகையில் லூஷிங்டன்னுக்கு ஒரே யோசனை. ‘எப்பவும் சாயந்திரம் நேரந்தான் கவர்னர் பேட்டி கொடுப்பார். இன்று மதிய நேரம் வரச்சொல்லியிருக்கிறார். அதுவும் தன்னுடைய பாதுகாவலரை நேரடியாக அனுப்பி...’

லூஷிங்டன் குதிரைக்கு முன்னாலும் பின்னாலும் ஓடிவந்த சிப்பாய்கள் அவனோடு ஒரு வருடமாக இருக்கிறவர்கள். அவர் களுக்கும்கூட அன்டர் செகரட்டரி லூஷிங்டன் ஏதோ ஒரு பெரும் குழப்பத்தில் கவர்னரைப் பார்க்கப் போகிறார் என்று தெரிந்துவிட்டது. லூஷிங்டன்னின் குதிரைபோகும் வேகம் அவர்களுக்கு அதை உறுதிப்படுத்தியது. அதனால் அவர்களும் அன்டர் செகரட்டரியின் குதிரைக்குப் பின்னால் மெதுவாகவே ஓடிவந்தனர். கவர்னர் மாளிகைக்கு முன்பாகக் குதிரை வந்ததும் உடன் வந்த சிப்பாய்கள் குதிரையைப் பிடித்து நிறுத்தினர். லூஷிங்டன் தன் குதிரையிலிருந்து குதித்து இறங்கினான். அன்டர் செக்ரட்டரி சீருடையில் மிகவும் களையாக இருந்தான். அவனது இடுப்பின் வலதுபுறம் சேப்டிலாக் போட்ட கைத் துப்பாக்கித் தொங்கியது. அவனுடன் வந்த சிப்பாய்கள் அவன் இடுப்பில் வாளைக் கட்டி அதைத் தோல் பெல்ட்டுடன் இறுக்கிக் கட்டினார்கள். “எஸ், போதும்” என்றான் லூஷிங்டன். தொப்பியைச் சரிசெய்து கொண்டான். ஒரு சிப்பாய் ஓடிப்போய் கவர்னர் மாளிகையின் பிரதான கதவுக்கு முன் நின்றிருந்த கவர்னரின் மெய்க்காப்பாளனிடம், “அன்டர் செகரட்டரி லூஷிங்டன் துரை வந்திருக்காங்க” என்றான்.

“வரச் சொல்லு. கவர்னர் அறையில்தான் இருக்காரு.”

லூஷிங்டன் கவர்னரின் மெய்க்காப்பாளனைப் பார்த்துச் சிரித் தான். அவன் சல்யூட் அடித்துவிட்டுக் கையை நீட்டினான். லூஷிங்டன் தன் கைத்துப்பாக்கியை இடுப்பு பெல்ட்டிலிருந்து கழட்டி அவன் கையில் கொடுத்தான். “உள்ளே செல்லலாம்” என்று கவர்னரின் மெய்க்காப்பாளன் கண் ஜாடை காட்டினான்.

உள்ளே சென்ற லூஷிங்டன் இடது கையில் கத்தியை இடுப் போடு அணைத்துக் கொண்டும் வலது கையை உயர்த்தியும் சல்யூட் செய்தான். கவர்னர் நிமிர்ந்து பார்த்தார். டேபிளில் ஒயின் கிளாஸ்கள் இரண்டு இருந்தன. லூஷிங்டன்னுக்கு போன உயிர் திரும்பி வந்ததுபோல்

இருந்தது. கவர்னர் தனக்கும் ஒயின் கொடுக்கப்போகிறார் என்றால் நல்ல செய்தியாகத்தான் இருக்கும்.

“லூஷிங்டன் உட்கார். இப்பவே போதுமான ஓய்வு எடுத்துக் கொள். உனக்கு வரவிருக்கிற ஒரு பிரச்சனைக் குறித்துப் பேசு வதற்குத்தான் உன்னை அழைத்தேன். இந்த இரண்டு ஒயின் கிளாஸ் களும் உனக்குத்தான்” என நேரடியாகப் பேச்சை ஆரம்பித்தார்.

“யுவர் எக்ஸலன்ஸி, நீங்கள் என் தந்தையைப் போன்றவர். நான் மெட்ராஸ் வந்ததே உங்களால்தான். ஹானரபிள் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் கிளார்க்காக எனது பணியை துவக்கி இன்று கவர்னரின் அன்பிற்குரிய அன்டர் செக்ரட்டரியாகவும் இருக்கிறேன். அதற்குக் காரணம் தங்களின் அன்புதான். என்னை அரவணைத்துக் கொள்ள நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன பெரிய கெடுதல் வந்துவிடப் போகிறது?”

“யெஸ் லூஷிங்டன், எனக்குத் தெரியும். நீ இறைவனை நம்புபவன், எதிலும் அளவாக வாழ்பவன் என்று. ஆனால் இன்றைக்கு உன் திறமைகளே உனக்கு எதிரியாகி விட்டன.”

“யுவர் எக்ஸலன்ஸி, என் வாழ்க்கையை இறைவன் கையிலும் உங்கள் கையிலும் ஒப்படைத்து விட்டவன் நான். என்மீது ஏதும் புகாரா யுவர் எக்ஸலன்ஸி.”

“நோ நோ, சொல்கிறேன். இரு டியர்” என்றார். “ஆர்டர்லி” என்று அழைத்தார். கவர்னர் அழைப்புக்காகக் காத்திருந்த ஆர்டர்லி கவர்னர் முன் வந்து சல்யூட் செய்தான்.

“ரெண்டு லார்ஜ்” என்றார்.

ஆர்டர்லி ஓடிப்போய் ஒயின் பாட்டிலோடு வந்தான். இரண்டு கிளாஸ்களிலும் ஊற்றி முடிக்கும்வரை கவர்னர், லூஷிங்டன்னுடன் பேசவில்லை.

“நீ போகலாம். யாரையும் உள்ளே விடவேண்டாம். என் மனைவி ஹென்ரீட்டா உட்பட.”

ஆர்டர்லி சல்யூட் அடித்து விலகினான்.

“லூஷிங்டன், டேக் யுவர் கிளாஸ்” என்றார்.

லூஷிங்டன் கிளாஸ் ஒன்றை எடுத்தான். கவர்னர் ஒரு கிளாஸை எடுத்தார்.

“லூஷிங்டன், உனக்கு ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியில் வேலை வாங்கிக் கொடுத்த கம்பெனியின் டைரக்டர் ஹானரபிள் லாரன்ஸின் நலத்திற்காக” என்று சொல்லி லூஷிங்டன்னின் கிளாஸோடு தனது கிளாஸை மோதினார்.

ஒரு வாய்க் குடித்துவிட்டு கவர்னர் கிளாஸை வைத்தார்.

“லூஷிங்டன், உனது திறமையே உனக்கு எதிரியாகி விட்டது என்று சொன்னேன் அல்லவா?”

“யெஸ், யுவர் எக்ஸலன்ஸி.”

“கடந்த ஆறு மாதமாக நீ எழுதும் டெஸ்பாட்ச்சுகள் லண்டனுக்குச் செல்லுகின்றன என உனக்குத் தெரியும். ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி தனது ஊழியர்களைப் பொதுவாகச் சந்தேகப் படாது என்றும் உனக்குத் தெரியும். தனது ஊழியர்களை ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் ஏஜென்டாக பொருட்கள் வாங்கவும், விற்கவும்கூட அனுமதிக்கிறது. நானே அதிகம் சம்பாதித்தது கல்கத்தாவிலிருந்து ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்குப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தும் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் பொருட்களை உள்ளூரில் விற்பனை செய்தும்தான். ஆனால் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் டைரக்டர்ஸ் மிகவும் வெறுப்பது தப்பான அறிக்கை கொடுப்பதைத்தான்.

நீ எழுதியதை இதுவரை முற்றிலும் நம்பிய ஹானரபிள் கம்பெனி இப்போது உன்னைச் சந்தேகிக்கிறது. திப்பு சுல்தான் பற்றி நீ வேண்டுமென்றே நல்லவிதமாக எழுதியிருப்பதாகவும், தென்னாட்டுப் பாளையக்காரர்களைப் பற்றிக் கூடுதல் வன்மத்தோடு எழுதுவதாகவும் கம்பெனி கருதுகிறது. இது குறித்து பார்லிமென்ட்டிலும் விவாதம் நடந்திருக்கிறது. தளபதி ஆர்தர் வெல்லெஸ்லிக்கு எதிரான பார்லிமெண்ட் மெம்பர்கள் உன்மீது வெறுப்பாக இருக்கிறார்கள். தளபதி வெல்லெஸ்லிக்கு நீ ரொம்ப நெருக்கமானவன் என்று உன்னைக் கருதுகிறார்கள். கட்டபொம்மனின் இறப்போடு பாளையக்காரர்களின் பிரச்சனை முடிந்துவிட்டது என்று நீ எழுதியதை கம்பெனி ரசிக்கவில்லை. நிலவரத்தைச் சரியாக விசாரிக்காமல் கம்பெனிக்கு அறிக்கை அனுப்பியதாக கம்பெனி சந்தேகிக்கிறது.

பாளையக்காரர்கள் பிரச்சனை இனிமேல்தான் பெரிதாக வரப்போகுது என்று கர்னல் அக்னியூ என் மூலமாக கடிதம் அனுப்பியது இப்போது பிரச்சனையாகி விட்டது. நான்கூட கர்னல் அக்னியூவிடம் "நீங்கள் என் மூலம் அனுப்பப்போகும் இந்தக் கடிதம் நமக்கே பின்னாளில் பிரச்சனையாகும்" என்று அப்போதே சொன்னேன். அவர் என்னிடம் "கடிதம் கட்டாயம் ஹானரபிள் கம்பெனிக்கு அனுப்பியே தீர வேண்டும்" என்றார். இப்பப் பிரச்சனை என்னன்னா கட்டபொம்மன் தம்பி ஊமத்துரை பாளையங்கோட்டை சிறையில் இருந்தாலும், அவன் நடவடிக்கை சந்தேகமாக யிருக்கிறது. அவனுக்கும் சிவகங்கை அரசின் மந்திரி பிரதானி சின்ன மருதுவுக்கும் ஏதோ ரொம்பத் தொடர்பிருக்கிறது. வருகின்ற தைப்பூசம் சமயத்தில் பிரச்சனைப் பெரிதாக மாற வாய்ப்பிருக்கிறது. நம்ம மெட்ராஸ் ரெஜிமென்ட் இதுவரை சந்திக்காதப் பெரும் கிளர்ச்சியை விரைவில் சந்திக்கப் போகிறோம். எத்தனை மிலிட்டரி அதிகாரிகள், சிவிலியன் அதிகாரிகள் சாகப் போறாங்களோ? எத்தனை வெள்ளைச் சீமாட்டிகளின் மானம் கெடப்போகுதோன்னு கல்கத்தா கவர்னர் ஜெனரல் கிட்டயும் கர்னல் அக்னியூ சொல்லியிருக்காரு.

கவர்னர் ஜெனரல் என்னிடம் விசாரித்தார். "பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் பற்றி, சிவகங்கை, ராமநாதபுரம் ராஜாக்கள் பற்றி நல்லாத் தெரிந்த அதிகாரிகள் யார் யார் என்று விசாரித்தார். நான் 'கர்னல் அக்னியூ' என்று சொன்னேன். அதற்கு அவர் "அக்னியூ வேண்டாம். அக்னியூவ கலெக்டராப் போட்டா நம்ம நோக்கம் அவங்களுக்கு வெளிப்படையாத் தெரிஞ்சிரும். ஒரு மிலிட்டரி ஆபிசர கலெக்டராப் போட்டா நாம சண்டைக்குத் தயாராகிக்கிட்டருக்கோம்னு தெரிஞ்சிக்குருவாங்க. அதனால மிலிட்டரி ஆள் வேண்டாம். ஒரு சிவிலியன் பெயரைச் சொல்லுங்க"ன்னார். நான் பேசாமல் இருந்தேன் அவரே சொல்லிட்டார்,"எஸ்.ஆர். லூஷிங்டன், அன்டர் செகரட்டரி. இனி திருநெல்வேலியின் கலெக்டர்" என்று. எனக்கு ஒன்றும் சொல்ல முடியல. ஐ ஆம் சாரி மை பாய். உனக்கு உதவ முடியல." லூஷிங்டன் கிளாஸிலிருந்த ஒயினை ஒரே மடக்காகக் குடித்தான்.

"யுவர் எக்ஸலன்ஸி, நா எப்ப திருநெல்வேலிக்குப் போகணும்?"

"லூஷிங்டன், ஆர் யூ மேட்? உன்னைப் பெருமைப்படுத்தவா திருநெல்வேலிக்கு அனுப்புறோம்? இடியட். ஏதாவது யோசி. இந்த

போஸ்ட்டிங்க்ஸ அவாய்ட் பண்ண என்ன சொல்லலாம்னு யோசி. கல்யாணம் பண்ணப் போறேன்னு சொல்லு. பெரிய அம்மை வந்திருக்குன்னு சொல்லு, அல்லது பாளையக்காரங்கப் பத்தி அதிகமாக ரிப்போர்ட் கொடுத்ததால சிவகங்கை, பாஞ்சாலங்குறிச்சி ஆட்சியாளர்களால எனது உயிருக்கு ஆபத்து இருக்குன்னு ஏதாவது ஒன்னைச் சொல்லு."

"யுவர் எக்சலன்சி, நீங்க சொல்றதுல ஏதாவது ஒன்னு நடந்துச் சுன்னாகூட அதுதான் எனக்குப் பெரும் தொல்லை. திருநெல்வேலி கலெக்டராயிருக்கிறது நீங்க சொன்னதுகளவிட, பிரச்சனை குறை வானதுதான். நான் உடனே போகிறேன்."

"யங்மேன், அமைதியாயிரு. உன் எதிர்காலத்தில் எனக்குக் கூடுதல் ஆர்வமிருக்கு. அதனால சுத்தி வளைச்சுப் பேச விரும்பல. நம்ம ஜெனரல் ஹாரிஸோட மக லில்லி தெரியும்ல உனக்கு. அவள உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு நானும் பாஸ்டரும் நினைக்கிறோம். லில்லிக்கு நான் காட்பாதர்னு ஒனக்குத் தெரியும்."

"யுவர் எக்சலன்சி, நீங்க சொன்னா அது என் நன்மைக்குத்தான் இருக்கும். எனக்கு ஒன்னு மட்டும் சந்தேகமாயிருக்கு. லில்லி என்னயப் பலமுறை பாத்திருக்கா. ஒன்னு ரெண்டுமுறை பேசி யிருக்கோம். எங்களுக்குள் பெருசா ஒன்றும் இல்ல. அவ விருப்பத்தக் கேட்டுக்கங்க. அவளுக்குச் சரின்னா எனக்கும் சரிதான்."

"யங்மேன், இது வெயில் பூமி. ஆறாயிரம் மைல் தாண்டி ஊர் விட்டு ஊர் வந்திருக்கோம். ஆறாயிரம் மைல் லேசான தூரமில்ல. இரண்டு மாசக் கப்பல் பயணத்துல வந்து இந்த ஊர் வெயில், பெரிய அம்மை, காலரான்னு ஐரோப்பிய மனுசன் பாதி வயசத் தாண்டுறதே கஷ்டம். இருக்கிற வரைக்கும் சந்தோசமா வாழனும்னு எனக்குத் தெரியும். லில்லிய நீ கல்யாணம் பண்ணுனவுடனே உன் உள்ளூர்த் தொடர்புகளை விட்டுறணும்."

"யுவர் எக்சலன்சி..."

"கூல் யங்மேன். நான் ஒன்ன முழுசா விசாரிச்சுட்டேன். உன்னோட அப்பா சிப்பாயாயிருந்து ஸ்ரீரங்கபட்டினம் திப்பு சுல்தானோட அப்பா ஹைதரோட நடந்த சண்டையில இறந்து போயிட்டாரு. உன் அம்மா லண்டன்ல ஹானரபிள் டைரக்டர் லாரன்ஸ் வீட்டுல வேலைக்கு

இருக்காங்க. உன் அப்பாவோட ஓய்வூதியம் வாங்குறதுல உங்க அம்மாவுக்கும் கடலூர்ல இருக்கிற ஒரு இந்துப் பொம்பளக்கும் போட்டி. இந்துப் பொம்பளக்கு உன்னைய மாதிரியே உன்னைவிட ஐந்து வயசு குறைவான வயசுல ஒரு பொண்ணுயிருக்கு. அது பேரு என்ன? மறந்து போச்சே..."

"எஸ் யுவர் எக்ஸலன்ஸி, மாரியம்மா லூஷிங்டன்."

"எஸ், மாரி லூஷிங்டன். பாஸ்டருக்கு இந்த மாரி லூஷிங் டன்னைத் தெரியும். பத்து பன்னெண்டு வயசுதான் இருக்கும். நிறம் அவங்க அம்மா மாதிரி கருப்பும் இல்லாம, வெளுப்பும் இல்லாம மாநிறம். நீலநிறக் கண்ணும் ப்ரவுன் நிறத்தில் தலைமுடியும் அப்படியே உன் அப்பா மாதிரியும், உன்னை மாதிரியும்ன்னு பாஸ்டர் சொன்னாரு. நீ லில்லிகூட கல்யாணத்திற்குச் சரின்னு சொல்லிட்டதா நா பாஸ்டர்கிட்ட சொல்லிர்றேன். இந்த வாரத்திலேயே ஒருநாள் நீ லில்லியக் கல்யாணம் முடிச்சுட்டு திருநெல்வேலி கிளம்பிப் போ. சரிதானே?"

"யுவர் எக்ஸலன்ஸி, லில்லியுடனான என் திருமணத்திற்கும், என் அப்பாவுக்கும் தமிழ் பேசும் ஒரு பெண்ணுக்கும் பிறந்த மாரி லூஷிங்டன்னுக்கும் என்னத் தொடர்பு என்று நீங்க சொன்னா எனக்குப் புரியும்."

"யங்மேன், உனக்குத் தெரியாது என்று நீ சொல்லுவாய். அதை நான் நம்பணுமா? இங்கிலாந்திலிருந்து வந்து இங்கு காய்ந்து போய்க் கிடக்கும் வெள்ளக்காரப் பயல்களுக்கு உள்ளூர் கருப்புப் பெண்கள் தேவதையாகத் தெரிவார்கள். போர்ச்சுக்கீசிய வேசிகள் சொற்பத் தொகைக்குக்கூட சுகம் தரத் தயாராக இருப்பார்கள். ஆனால் உள்ளூர்க் காரிகள் பேச்சிலும், தளுக்குத்தனத்திலும் கில்லாடிகள். "இந்தியப் பெண்களுடன் வாழ்வதைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பல பணியாளர்கள் பெரிதும் விரும்புவதாகத் தெரிகிறது. ஆரம்பத்தில் மொழி கற்றுக்கொள்வதற்காக இந்தியப் பெண்களோடு சேர்ந்து வாழ்வதாகச் சொல்லுவார்கள். அப்புறம் மொழியே தேவைப்படாத அளவுக்கு, ஒன்னாயிடுவாங்க. ஏறக்குறைய தொண்ணூறு சதவிகிதம் ஆங்கிலேயர்கள் இந்தியப் பெண்களோடுதான் இருக்க விரும்புவதாகத் தெரிகிறது. ஒருமுறை இந்தியப் பெண்களோடு பழகியவர்கள், ஏனோ ஆங்கிலேயப் பெண்களுடன் வாழ விரும்புவதில்லை.

சிறிது நாட்களே இந்தியப் பெண்களுடன் வாழ்ந்தாலும் செல்லமான விரல் விளையாட்டு, கும்மாளம், சொன்னதை எதிர்க் கேள்வி கேட்காமல் அப்படியே கேட்டுக்கொள்ளும் குணம் உள்ள இந்தியப் பெண்களின் மீது உன் அப்பா போன்று பல ஆங்கிலேயர் களுக்கு ஈர்ப்பு வருவது இயல்புதானே?. சராசரி ஐரோப்பியப் பெண்களைவிட உடல் வலிமையுள்ள பெண்கள் இவர்கள். உன் அப்பா செய்ததுபோல நீயும் நடந்துகொள்ளக்கூடாது. அதுபோன்ற தொடர்புகள் இப்போது இருந்தால் அது தொடரக் கூடாது."

"எஸ் யுவர் எக்ஸலன்ஸி. ஐ அம் ஹானர்ட். நீங்கள் புனித ஜார்ஜ் நினைவு நாளில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பேசும்போது, ஒரு புதிய செய்தியைத் தெரிந்துகொண்டேன். புனித ஜார்ஜ், கிறிஸ்துவ மதத்திற்காகத் தன்னை ஒப்புவித்த நாள் மே மாதம் ஆறாம் தேதி என்று எனக்கு அன்றுதான் தெரியும். அதே மே மாதம் ஆறாம் தேதி தான் நானும் பிறந்திருக்கிறேன். கிறித்துவத்தை நிலைநாட்டிய புனிதர்களில் ஒருவரான ஜார்ஜ் இறந்த அதேநாளில் பிறந்த எனக்கும், நான் பிறந்த மதத்திற்கும், நமது வெள்ளை இனத்திற்கும் சேவை செய்ய ஏதாவது ஒரு வாய்ப்பு இருந்தாலும் இருக்கும். அந்த வாய்ப்பைத் திருநெல்வேலி கலெக்டர் என்ற பதவிகூட வழங்கலாம். ஆகவே நான் திருநெல்வேலி மகிழ்வுடன் செல்கிறேன். என்னை ஆசிர்வதியுங்கள் யுவர் எக்ஸலன்ஸி" என்று சொல்லி எழுந்து நின்றான் லூஷிங்டன். இடது கையில் கத்தியைப் பிடித்துக்கொண்டு வலது கையில் விறைப்பாக சல்யூட் செய்தான். ஏற்றுக் கொள்ளும்விதமாக கவர்னர் தலையை அசைத்தார்.

லூஷிங்டன் கவர்னர் மாளிகையைவிட்டு வெளியே வந்தான். அவனுடைய குதிரையை சிப்பாய்கள் அவன் வெளிவரும் வாசலுக்குக் கொண்டு வந்தனர். குதிரையின் கழுத்தில் லூஷிங்டன் தடவிக் கொடுத்தான். ஒரு சிப்பாய் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டான். குதிரையின் வயிற்றுக்குக் கீழ் தொங்கிய இரும்பு சேணத்திற்குள் காலை நுழைத்துக்கொண்டு தாவி ஏறினான். ஆறடி உயரமும் அதற்கேற்ற உருவமுமாகயிருந்த லூஷிங்டன் குதிரைமீது ஏறி உட்கார்ந்தவுடன் குதிரையின் முதுகு லேசாக அழுந்தி எழுந்தது. சிப்பாய் கடிவாளத்தை லூஷிங்டன்னிடம் கொடுத்தான். இரு குதிகால்களால் ஒரே நேரத்தில் குதிரையின் வயிற்றில் லூஷிங்டன் அழுத்தினான். குதிரை நடக்க ஆரம்பித்தது. இழுத்துப் பிடித்த கடிவாளத்தைச் சற்றுத் தளர்வாக விட்டுக்

குதிரையின் அடிவயிற்றில் இரு தொடைகளையும் சேர்த்து ஓங்கி உதைத்தான். குதிரை வேகமெடுத்தது. சிப்பாய்கள் உடன் ஓடினர்.

•

3

சிவத்தையாவும், ஊமைத்துரையும் பாளையங்கோட்டை சிறையில் அடைபட்டு ஒரு வருடம் இரண்டு மாதங்கள் ஆகின்றன. வந்த புதிதில் சிறையில் நிறைய கெடுபிடியாக இருந்தது. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாது, பேச முடியாது என்ற சூழல் இருந்தது. இருவரும் நான்குச் சுவருக்குள் இருட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவருக்கும் சமையல் செய்து கொடுக்க ஒரு செவிட்டு ஊமையை நியமித்திருந்தனர். அவன் ஒரு முஸ்லீம். தினமும் இருவேளை சாப்பாடு கொடுப்பான். சாப்பாடு கொடுத்து ஒருமணி நேரம் கழித்து வந்து சாப்பாட்டுத் தட்டை எடுத்துப் போவான். சாப்பிட்டாலும், சாப்பிடவில்லை யென்றாலும், எந்தவித உணர்ச்சியையும் வெளிக்காட்ட மாட்டான். சகோதரர்கள் இருவருக்கும் சிறைக்குள் வந்த புதிதில் இருந்த உடல்நிலை இப்போது இல்லை. பசித்தால் மட்டுமே சாப்பிடுவது என்று இருந்ததால் ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே இருவரும் சாப்பிடுவர்.

ஆரம்பக்கால கெடுபிடிகள் குறைந்த பிறகு ஒரு நாள் ஜெயில் சூப்பிரண்டு வாலர் வந்தார். ஆயுதம் ஏந்திய ஐந்து ஆங்கிலேயச் சிப்பாய்களும், இரண்டு முஸ்லீம் சிப்பாய்களும் அவரோடு வந்தனர்.

வாலர் முதலில் சிவத்தையாவை அழைத்துவரச் சொன்னார். சிவத்தையா, மிகவும் கண்ணியமான தோற்றம் உள்ளவராக வாலருக்குத் தோன்றியது. நல்ல உயரமாக, சிவந்த நிறத்தில் இருந்தார். கை, கால்களில் எலும்புகள் பெரிதாகத் தெரிந்தன. சரியான உணவு இல்லாததால் கழுத்து

எலும்பு மேல் எழும்பித் தெரிந்தது. சிவத்தையா, வாலருக்கு வணக்கம் சொன்னார்.

வாலர், "வாருங்கள்" என்று சொல்லித் தரையில் சம்மணம் போட்டு உட்கார்ந்தார். "நீங்களும் உட்காருங்கள்" என்றார். "இல்லை, இவ்வளவு நேரமாக உட்கார்ந்துதான் இருந்தேன். நிற்பது எனக்குச் சிரமமில்லை" என்றார். சிவத்தையாவைப் பார்த்து வாலர் சிரித்தார். "இல்லை சிவத்தையா, நான் உங்களிடம் பேச வேண்டும். நீங்களும் உட்கார்ந்தால்தான் எனக்கு இயல்பாகப் பேசவரும். இல்லையென்றால் உங்களை நான் கஷ்டப்படுத்தியதுபோல நினைப்பேன். எனக்குத் துன்பமாகத் தெரியும்."

"உங்களது பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா? சூப்பிரண்டு அவர்களே. கமுதிக் கோட்டையில் உங்களைப் பார்த்திருக்கிறேன், நொண்டித் துரையோடு. மற்றொரு துயர நாளிலும் உங்களைச் சந்தித்திருக்கிறேன்."

வாலர் சிவத்தையின் பின்பாதிப் பேச்சை கவனிக்காததுபோல,

"ஆமாம். நான் அங்கிருந்திருக்கிறேன். உங்களுக்கும் கமுதிக் கோட்டைக்கும் என்னத் தொடர்பு? அது மறவர் சீமையில் அல்லவா இருக்கிறது?"

"ஆமாம் மிஸ்டர் வாலர். மறவர்களுக்கும் எங்களுக்கும் எப்பொழுதும் தொடர்பு உண்டு. நல்லது கெட்டதுகளுக்குக் கட்டாயம் போவோம்."

"நல்லது கெட்டது என்றால்?"

"கல்யாணம், இறப்பு."

"நல்லதுக்குப் போகவில்லை என்றாலும் துக்கத்துக்குப் போக வேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"சரியாகச் சொன்னீர்கள் மிஸ்டர் வாலர். அதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் கமுதிக்கு வந்திருக்கிறேன். அப்போது உங்களைப் பார்த்திருக்கிறேன். உங்களைப் பார்த்தது ஏழு, எட்டு வருடங்களுக்கு முன்பு இருக்கும். அப்போது நீங்கள் கொஞ்சம் இளைத்திருந்தீர்கள்."

“நீங்கள் சொல்லுவது சரி. அப்போது நான் அதிகமாகக் குடிப்பேன். சாப்பாடு குறைவாகச் சாப்பிடுவேன். வாழ்க்கையின்மீது பெரிதாகப் பிடிப்பில்லை. ஒருமுறை நிரந்தரமாக லண்டனுக்குப் போய்விடலாம் என்றுகூட நினைத்தேன். நான் விடுமுறை கேட்ட நேரத்தில் கம்பெனி எனக்கு விடுமுறை தரவில்லை. இந்த ஊரை எனக்குத் திடீரெனப் பிடித்துப் போன நேரத்தில் எனக்கு கடிதம் வந்தது. நீங்கள் ஒருமுறை நிரந்தர விடுமுறை கேட்டீர்களே? அப்போது வாய்ப்பில்லாமல் இருந்தது. இப்போது நீங்கள் விரும்பினால் நிரந்தர விடுப்பில் லண்டன் செல்லலாம்” என்று கவர்னரிடமிருந்து வந்த கடிதம் சொல்லியது. அந்தச் சமயம் நான் இந்த ஊரை விட்டுப்போக விரும்பலை, ஆகவே லண்டன் போகவில்லை.”

“ஏதேனும் பெண் சகவாசமா?”

“அட, எப்படி கண்டுபிடித்தீர்கள்?”

“லண்டன் போக வாய்ப்பு வந்தபோது இந்த ஊரை விட்டுப்போக விரும்பவில்லை என்று நீங்கள் சொன்னபோது உங்கள் உடன் வந்த ஆங்கிலேயச் சிப்பாய்களின் முகத்தில் புன்முறுவல் பார்த்தேன். குடிபோதையில் இளைத்துப் போன ஒரு மனிதன், ஆறு, ஏழு ஆண்டுகளில் இப்படி ஆரோக்கியமாகப் பளபள என்று மாறமுடியும் என்றால், ஒரு அன்பானப் பெண்ணின் தொடர்பு இருக்க வேண்டும் என்று யூகித்தேன் மிஸ்டர் வாலர்.”

“சிறந்த அறிவாளியாக இருக்கிறீர். மனிதர்களை நன்றாகக் கூர்ந்து கவனிக்கிறீர்கள். உங்கள் கெட்ட நேரம் மற்றும் என் துரதிர்ஷ்டம், உங்களை நான் கைதியாகப் பார்க்க வேண்டியுள்ளது.”

“இல்லை மிஸ்டர் வாலர், எங்களது நல்ல நேரம். அதிர்ஷ்டம். ரொம்ப நாளைக்குப் பிறகு சக மனிதனோடு பேச வாய்ப்புக் கிடைத்தது. இந்த தனிமைச் சிறை என்னைப் பேச்சு மறக்க வைத்து விடுமோ என நினைத்தேன். நல்லவேளை, இன்னும் பேச்சை மறந்துபோகவில்லை.”

“யெஸ். எனக்குத் தெரியும். ஏறக்குறைய ஓர் ஆண்டாக நீங்கள் சிறைக்குள் இருக்கிறீர்கள்.”

“ஆம் மிஸ்டர் வாலர். காலம் வேகமாக ஓடுகிறது.”

“உடல் நலம் எப்படியிருக்கிறது சிவத்தையா?”

“பரவாயில்லை. உங்களது பணியாளர் சரியான நேரத்திற்கு உணவளிக்கிறார். எங்களோடு பேசத்தான் மாட்டார்.”

“யெஸ், அவர் பிறவி செவிடு, ஊமை.”

“அவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். கலிகாலத்தில் நடக்கும் எதுவும் அவர்கள் காதில் விழாது. யாரையும் தப்பாகப் பேசி மற்றவர்கள் மனதைப் புண்படுத்தவும் அவர்களால் முடியாது.”

“மிஸ்டர் சிவத்தையா, நீங்கள் மிகவும் வருத்தமான மனநிலையில் இருப்பதாகக் கருதுகிறேன்.”

“இல்லை மிஸ்டர் வாலர், நான் நாட்டு நடப்பைச் சொன்னேன்.”

“நான் உங்களிடம் பேசுவதற்குக் கம்பெனியின் அனுமதி பெற்றுள்ளேன் மிஸ்டர் சிவத்தையா. சிவகங்கைப் பிரதானி மருது பாண்டியர் திருநெல்வேலி கலெக்டர் குறித்துப் புகார் மனு ஒன்றை கவர்னருக்கு அனுப்பி உள்ளார். அந்தப் புகாரில் உங்கள் விஷயத்தில் கலெக்டர் நியாயமாக நடக்கவில்லை என்றும் கலெக்டரை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றும் மருது பாண்டியர் கோரிக்கை வைத்துள்ளார். கலெக்டர் இந்த விசயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளதால் அவர் விசாரிக்க விரும்பவில்லை. உங்களிடம் என்னை விசாரிக்கச் சொல்லிவிட்டார். கலெக்டர் உங்களைக் கொடுமைப்படுத்தினாரா?”

“மருது சகோதரர்கள் எனக்கு அண்ணன் போன்றோர்.”

“நான் கேட்டது வேறு விசயம்.”

“எனது உடன்பிறந்த அண்ணன் வீரபாண்டிய கட்டபொம் மனுக்கு மருது பாண்டியர்கள் மிகவும் வேண்டியவர்கள். நாங்கள் அவரது சிறுவயல் அரண்மனையில் தங்கியிருந்திருக்கிறோம். சின்ன மருது அண்ணன் எங்களது பாஞ்சாலங்குறிச்சி மாளிகையில் தங்கி யிருக்கிறார். மற்றபடி அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிரி அல்ல. நல்ல நண்பர். மதுரை, திருச்சிக் கலெக்டர்கள் பெரிய மருது அண்ணனின் தனிப்பட்ட நண்பர்கள். பல ஆங்கிலேய அதிகாரிகள் சிறுவயல் வருவார்கள். மருது அண்ணனின் உபசரிப்பில் திளைப்பார்கள்.”

“இல்லை, நான் கேட்பது உங்களைக் கலெக்டர் துன்புறுத்தினாரா என்பது பற்றித்தான்.”

“நானும் அதைத்தான் சொல்ல வருகிறேன் மிஸ்டர் வாலர். உங்களோடு நான் விளக்கமாகப் பேசவேண்டும். கீழே உட்கார்ந்து பேசுவதுதான் சரியாக இருக்கும். சற்றுப் பொறுங்கள். உட்கார்ந்து கொள்கிறேன்” என்று சொன்ன சிவத்தையா தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டார்.

“மிஸ்டர் வாலர், மருது அண்ணன் எங்கள் மீது கொண்ட அன்பிற்கும், ஆங்கிலேய அதிகாரிகள்மீது கொண்ட நட்புக்கும் இடையே கட்டுண்டு வருந்திக்கொண்டுள்ளார். ஆங்கிலேயரின் நட்பையும் எங்கள் அன்பையும் இழந்துவிடுவோம் என்று பயம் அவருக்கு வந்துவிட்டது. அவர் எழுதிய புகார்க் கடிதத்தின் நகல் இருந்தால் என்னால் இன்னும் விளக்கமாகச் சொல்லமுடியும்.”

“அதைத் தர இயலாது.”

“மிஸ்டர் வாலர், கடிதத்தைப் பார்க்காமல் என்னால் விளக்கம் தரவியலாது. மருது அண்ணன் எங்களுக்கு வேண்டியவர். பிரிட்டிஷாரோடு அவர் சில முறை மோதியிருந்தாலும் அவர் பிரிட்டிஷாருக்கும் நண்பர்தான்.”

“எப்படிச் சொல்லுகிறீர்கள்.”

“அவர் உங்களோடு மோதிய அனைத்துச் சந்தர்ப்பங்களையும் நீங்கள் யோசித்துப் பாருங்கள். நீங்கள் ஆற்காடு நவாப்பின் ஏஜென்டாக வந்த சமயங்களில் மட்டும்தான் அவர் உங்களோடு மோதியிருக்கிறார். பெரிய மருது தனிப்பட்ட முறையில் உங்கள்மீது அன்பும் நட்பும் பாராட்டக்கூடியவர்தான். எந்தவித முகாந்திரமும் இல்லாமல் வரி கட்டு, கப்பம் கட்டு என்று அடிக்கடி ஆற்காடு நவாப் அவரையும் மற்ற பாளையக்காரர்களையும் கேட்பதால்தான் பிரச்சனை. எங்கள் அண்ணனும் ஆற்காடு நவாப்பின் சூழ்ச்சியால்தான் இறந்தார். ஆற்காடு நவாப் தனது சொந்த எதிரிகளை பிரிட்டிஷாரின் எதிரியாக மாற்றி விடுகிறார்.”

“மிஸ்டர் சிவத்தையா, நான் இதில் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. உங்கள் உடல்நலம் எப்படியிருக்கிறது?”

“மிஸ்டர் வாலர், எனது மனநலம் சரியில்லை. எனது தம்பி ஊமைத்துரையைப் பார்க்க வேண்டும். அவன் வாய்ப் பேச முடியாதவன். எனக்கு அடுத்த அறையில், எந்த நிலையில் இருக்கிறான் என்று கூட தெரிந்துகொள்ள முடியாமல் என் மனம் அல்லாடுகிறது.”

“அவர் உங்கள் உடன்பிறந்தவரா? ரொம்பப் பிரியமாக இருக்கிறீர்களே?”

“மிஸ்டர் வாலர், உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. குமாரசாமி எனது உடன்பிறந்தவன் இல்லை. நானும் அண்ணன் வீர பாண்டிய கட்டபொம்மனும் ஒரு தாய்க்குப் பிறந்தவர்கள். குமாரசாமி எனது பெரியம்மாவுக்குப் பிறந்தவன். எங்கள் மூவருக்கும் ஒரே தகப்பன். குமாரசாமியின் தாயார் எனது தாயாருக்கு மூத்தவள். ஆனால் நீண்ட காலம் குழந்தையில்லாமல் இருந்து இவனைப் பெற்றெடுத்தாள். இவன் பிறந்ததும் பெரும் எதிர்பார்ப்போடு இருந்த எங்கள் குடும்பத்தினர் குழந்தைப் பிறந்து இரண்டு வருடம் வரை ஒரு வார்த்தைக்கூட பேசாமல் இருந்தபோது அதிர்ச்சியாகிப் போனோம்.”

“குமாரசாமி என்பது?”

“ஊமைத்துரையின் இன்னொரு பெயர் குமாரசாமி. என் அப்பா ஜெகவீரப் பாண்டியனாருக்கு எங்கள் குலதெய்வம் ஜக்கம்மா எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் திருச்செந்தூர் குமார சாமிக் கடவுள். அதனால்தான் இவனுக்குக் குமாரசாமி எனப் பெயரிட்டார். இவனுக்கு வாய்ப் பேச முடியாது என்ற குறை யாருக்கும் தெரியாதவாறு ஆரம்பத்தில் நடந்து கொண்டான். கை சைகையிலும் வாயில் ஒலி எழுப்பியும், தான் நினைப்பதை அடுத்தவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தான்.”

“கேள்விப்பட்டேன். கட்டபொம்மன், சிவத்தையா, ஊமத்துரை ஆகிய உங்கள் அண்ணன், தம்பிகள் மூவரில் குமாரசாமிக்கு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு உண்டு என்பதால் உங்களுக்குப் பொறாமை ஏதும் வரவில்லையா?”

“மிஸ்டர் வாலர், நீங்கள் கயத்தாறில் எனது அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கில் போட்ட அன்றும், விசாரணை நடந்த பதினேழு நாட்களும் அங்கு இருந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்...”

“ஆம்.”

“நாங்கள் அங்கு இருந்தோம். அங்கு நடந்ததைப் பற்றி உங்களிடம் பேச விரும்புகிறேன். இது குறித்துக் கலெக்டர் எழுதிய கடிதங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அன்று விசாரணையா நடந்தது? மற்ற பாளையக்காரர்களை மிரட்ட ஒரு வாய்ப்பாக கலெக்டர் இந்த விசாரணையைப் பயன்படுத்திக் கொண்டார். விசாரணை முடிந்து கவர்னர் எட்வர்ட் கிளைவ்வின் அனுமதி பெறாமலே அவசர அவசரமாகத் தூக்கிலிட முயன்றபோது என் அண்ணன் சிங்கமென நடந்து சென்றாரே... எட்டப்பனையும், ஆங்கிலேயர்களுக்குத் துணையாக வந்த பாளையக்காரர்களையும் கோபப் பார்வை பார்த்தாரே? அவர் கடைசியாகச் சொன்னதை நீங்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். அதுவும் என் தம்பி குமாரசாமி முன்பாக. அவனைத் தயவுசெய்து அழைத்து வரச் சொல்லுங்கள். அவன் உடல்நிலை சரியில்லாதவன்.”

“மிஸ்டர் சிவத்தையா, அவர் மிகவும் ஆபத்தானவர் என்று எனக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.”

“நிச்சயம் அவன் ஆபத்தானவன் அல்ல. நாங்கள் இப்போது உங்கள் கைதிகள். ஆயுதங்களும் எங்களிடம் இல்லை. ஒரு வருடமாக ஒரு நேர உணவு மட்டும் உண்டு வாழும் நாங்கள் உங்களுக்கு, அதுவும் ஆயுதம் தாங்கியுள்ள உங்களுக்கு என்ன ஆபத்தை விளைவித்து விடமுடியும்? இன்னும் எவ்வளவு நாட்கள் நாங்கள் உயிரோடு இருப்போம் எனத் தெரியவில்லை. நான் செத்தாலும் பரவாயில்லை. என்னைவிட வயதில் குறைந்தவன் குமாரசாமி. என் தம்பி குமாரசாமி நீண்ட நாள் வாழ வேண்டும். அவனைப் பார்ப்பதற்கு எனக்கு ஒருமுறை அனுமதியுங்கள்.”

“சரி” என்று சொன்ன வாலர் தனது சிப்பாய் ஒருவனுக்கு ஜாடை செய்தார். அவன் அந்த இடத்தை விட்டு அகன்றான். அவனுடன் இன்னும் இருவரை வாலர் அனுப்பினார். “ஆயுதத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்” என்று கண் ஜாடையில் அறிவுறுத்தினார். சிறிது நேரத்தில் இரு சிப்பாய்கள் தாங்கிப் பிடித்தபடி ஒரு ஒல்லியான மனிதனை அழைத்து வந்தனர்.

சிவத்தையா தம்பியைப் பார்த்து, “குமாரசாமி” என்று அரற்றினார். அண்ணனைப் பார்த்து, குமாரசாமி தரையில் விழுந்து

கும்பிட்டு எழுந்தார். வாலருக்கு இரு கைகளையும் கூப்பி ஊமை "நன்றி" தெரிவித்தான். வாலர் ஊமையை ஒருமுறை பார்த்திருக்கிறார். இப்போதுபோல அவ்வளவு பலஹீனமானவராக அல்ல. ஊமைத் துரை இயற்கையிலே கொஞ்சம் உடல்நலம் இல்லாதவன் போலத் தான் இருப்பான். இப்போது ரொம்ப பலஹீனமாக இருப்பதால் ஆள் மிகவும் மெலிந்துபோய்த் தெரிந்தான். அண்ணனை நெருங்கியதும் தன்னைத் தாங்கி வந்த சிப்பாய் களிடம் தன்னைத் தாங்கிக் கொள்ள வேண்டாம் என்று சைகை மொழியில் சொன்ன ஊமைத்துரை, அண்ணனுக்கு அருகில் வந்தான்.

"வாலர், நான் என் தம்பியின் கைபிடித்துப் பேச வேண்டும். அனுமதிப்பீர்களா?" என்றார் சிவத்தையா.

"சரி" என்றார் வாலர்.

வாலரின் உத்திரவை ஏற்றுக் காவலர்கள் விலகி நின்றனர். சிவத்தையா எழுந்து வந்து தம்பியை அணைத்துக் கொண்டார். அவர் கண்ணில் இருந்து கண்ணீர். ஊமை, தனது அண்ணனை, அழ வேண்டாம் என சைகை காண்பித்தார். இருவரும் சற்று அமைதியாகட்டும் என வாலர் அமைதியாக உட்கார்ந்தே இருந்தார்.

"மிஸ்டர் குமாரசாமி, உங்களது பெயர் குமாரசாமி என்று இப்போதுதான் உங்கள் அண்ணன் சொன்னார்."

"மிஸ்டர் வாலர், கலெக்டர் லூஷிங்டன்மீது மருது பாண்டியர்கள் கொடுத்த புகார் மனுமீது தான் நீங்கள் எங்களை விசாரிக்கிறீர்கள் என்று நாங்கள் கருதலாமா? அல்லது...?"

"வேறு என்ன காரணம் இருக்கக்கூடும்?"

"நாங்கள் இந்தச் சிறைக்கு வந்த புதிதில் இரவு நேரத்தில் ஒருவித சத்தம் கேட்கும். இரண்டு மூன்று நாட்கள் அந்தச் சத்தம் கேட்டது. அது என்ன சத்தம் என்ற யோசனையில் நான் இருந்தேன். பின்பு தான் அது மனிதர்கள் உருவாக்கிய சத்தம் எனத் தெரிந்து கொண்டேன்."

"யெஸ் மிஸ்டர் சிவத்தையா. அது குறித்துத்தான் நான் பேச நினைத்தேன். நீங்கள் சரியாகவே சிந்திக்கிறீர்கள். அது இப்போது வேண்டாம். நாளை இது குறித்துப் பேசுவோம். "

“மிஸ்டர் வாலர், நாங்கள் வணங்கும் குமாரசாமிக் கடவுளுக்கு இன்னொரு பெயர் வேலவன். வேலர் என்றும் கூப்பிடுவார்கள். அந்தப் பெயரை நீங்கள் தாங்கியிருக்கிறீர்கள். மருது பாண்டியர்கள் எங்களுக்கு வேண்டியவர்தான். இருந்தாலும், ஆங்கிலேயர்களைப் பகைத்துக் கொண்டு எங்களுக்கு உதவ மாட்டார்கள். இது குறித்து நீங்கள் முழு விசாரணைகூட நடத்தலாம்.”

“யெஸ், என்னிடம் அது குறித்தச் செய்திகள் சொல்லப் பட்டிருக்கின்றன. நாளை விசாரணையின்போது நான் தெரிவிக் கிறேன். இப்போது சொல்லுங்கள், உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமா? ஏதாவது வசதிக் குறைவுகள் இங்கு உள்ளதா?”

பாஞ்சாலங்குறிச்சி வீரர்களிடம் நல்ல பெயர் வாங்க ஜெயிலர் முயற்சித்தார் என்று சொல்லுவதைவிட, அவர் தனது மனிதாபிமானத்தை வெளிக்காட்டினார் என்று தான் சொல்ல வேண்டும். ஜெயில் கண்காணிப்பாளர், சுபாவத்தில் மென்மை யானவர். அதனால்தான் அவரால் படை வீரராக சோபிக்க முடியவில்லை. ஜெயில் சூப்பிரண்டாகப் பதவி கிடைத்ததும், வாலருக்கும் அது பிடித்துப் போய்விட்டது. கைதிகளுடன் பேசுவது, அவர்களிடம் ஏசு கிறிஸ்துவின் மகத்துவத்தைச் சொல்லுவது என்று அவர் வாழ்க்கைச் சென்று கொண்டிருந்த சமயத்தில்தான் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் சிவத்தையா, ஊமைத்துரை உட்பட பதினேழு பேர் கைதிகளாகப் பாளையங்கோட்டை சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் சிறைக்கு வரும்போதே கடுமையான அச்சுறுத்தல் தாங்கிய ஆணையும் வாலருக்குத் தரப்பட்டது. அந்த மாதிரியான கடிதம் இதுவரை அவருக்கு வந்ததில்லை. அந்தக் கடிதம் இப்படி ஆரம்பித்திருந்தது.

“மிஸ்டர் வாலர். உங்களிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஹானரபிள் கம்பெனி வழங்கியுள்ளது. உங்களது சுபாவம், நேர்மையினை பலமுறை ஹானரபிள் கம்பெனி தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் அடிப்படையிலும், நீங்கள் இதுவரை திருச்சிக்குத் தெற்கே நடந்த எந்தப் போரிலும் கலந்து கொண்டு, அதன்மூலம் கலகக்காரர்களுக்குப் பிடிக்காத நபர் என்ற பெயர் வாங்கவில்லை என்பதையும் ஹானரபிள் கம்பெனி அறியும். இன்று ஒப்படைக்கப்படும் பதினேழு நபர்களும் பிரச்சனைகளுக்குரியவர்கள். இவர்கள் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்ட பொம் மனின் நெருங்கிய உறவினர்கள். வீரபாண்டியனைத் தூக்கில் போட்டபின் இவர்களது

எதிர்காலம் குறித்து முடிவு எடுக்கச் சிறிது காலம் தேவைப்படுகிறது. ஆகவே இவர்களை கவனமுடன் பார்த்துக் கொள்ளவும். இவர்களை நீங்கள் சந்திக்க வேண்டாம். இவர்களுக்குச் சமைத்துத்தர வாய் பேசாத, காது கேளாத முஸ்லீம் மதத்தினர் ஒருவரை அமர்த்தவும். அவரிடமும் இவர்களிடம் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என அறிவுறுத்தவும். உணவு எடுத்துச் செல்லும்போது நம் சிப்பாய் ஒருவர் அவர் அறியாதவாறு ஊமை முஸ்லீம் சமையல்காரரைக் கண்காணிக்க வேண்டும். இவர்கள் பதினேழு பேரும், உங்களது முழு கண்காணிப்பில் விடப் படுகின்றனர். இவர்கள் தவறு ஏதும் செய்தால் உடனடியாக எந்த நடவடிக்கையும் நீங்கள் எடுக்கலாம்."

இந்தக் கடிதத்தைப் படித்தபின்பு, வாலர் பதினேழு நபர்களை யும் ஒவ்வொருவராக அழைத்து வரச் செய்தார். அழுக்குப் படிந்த ஆடைகள், வெறுப்பான பார்வை, அலட்சிய நடை என்று வந்த முதல் ஆளிடம் "உன் பெயர், அப்பா பெயர் சொல்" என்றார் வாலர்.

"சிவத்தையா"

"தகப்பனார் பெயர்?"

"ஜெகவீர பாண்டியர்"

"வயது?"

"முப்பத்தி ஆறு"

"விலாசம்?"

"பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை"

"அதுதான் முற்றிலும் இடிபட்டு விட்டதே?"

"இப்போதுதானே இடிபட்டுவிட்டது? எப்போதும் இடிபட்ட தாகவே இருக்குமா மிஸ்டர்...?"

"யெஸ். என் பெயர் வாலர்."

"யெஸ் மிஸ்டர் வாலர், மன்னியுங்கள். பெயரை மறந்து விட்டேன்."

"உங்கள் அங்க அடையாளங்கள் காண்பியுங்கள்" என்று கேட்டு குறித்துக் கொண்ட வாலர்,

“இவரை அழைத்துச் சென்று கொட்டடியில் அடையுங்கள்” என உத்தரவிட்டார்.

“அடுத்து...”

“துரை, இவருக்குப் பேச வராதாம். காதும் கேட்காது.”

“சரி, இவர் நிற்கட்டும். இவருக்குப் பின்னால் நிற்பவர் ஒருவரை அழைத்து வா.”

அடுத்தவர் வந்தார். காதுகளில் துளை போடப்பட்டிருந்தது. கருப்பும் இல்லாமல் சிகப்பும் இல்லாமல் ஒரு நிறத்தில் இருந்தார். பார்க்க மிகவும் முரட்டுத்தனமாக இருந்தார்.

“உன் பெயர்?”

“சேர்வை.”

“சிவகங்கைச் சேர்வைக்காரனுக்கு உறவினனா நீ?”

“இல்லை, அவரோடு எனக்குப் பழக்கமில்லை“

“இந்த ஊமை நிற்கிறார் அல்லவா”

“ஆம்”

“இவர் பெயர் என்ன?”

“தெரியாது”

“பதினேழு பேரும் ஒன்றாகத்தானே சிறைக்குள் வந்திருக் கிறீர்கள்?”

“அய்யா, இவர் யாரென்பது தெரியாது. என்னை இந்த வழக்கில் தேவையில்லாமல் சேர்த்து விட்டார்கள். எனக்கும் இவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.”

“சரி இவனை அழைத்துச் செல்லுங்கள். ஊமையன் நிற்கட்டும். அடுத்து...”

அவர்களை அழைத்து வந்த சிப்பாய்களின் வெள்ளைக்கார மேஸ்திரி வாலருக்கு வணக்கம் வைத்தான். இந்த மேஸ்திரி பாதி நேரம் குடிபோதையில்தான் இருப்பான். அவன் என்ன பேசினாலும் வாலர்

முகத்தைத் திருப்பிக்கொள்வார். மேஸ்திரி அதைப் பொருட் படுத்த மாட்டான்.

“மிஸ்டர் வாலர், இவர்களோடு பேசினால் நம்மை கிறுக் கனாக்கி விடுவார்கள். யாரையும் யாருக்கும் தெரியாது என்று சாதிப்பார்கள். இப்போதுள்ள இந்தப் பதினேழு பேரில் இருவர் மட்டும் அண்ணன் தம்பிகள். இந்த ஊமையும் இவன் அண்ணன் சிவத்தையாவும். மற்றவர்கள் இவர்களது உறவினர்கள் அல்ல. வெளியூர்க்காரர்கள். சிவகங்கை, நாகலாபுரம், கமுதி போன்ற ஊரைச் சேர்ந்தவர்கள். ஆகவே இந்த ஊமையின் அண்ணனிடமே கேட்டு விடுங்கள். இல்லையென்றால் அடுத்து வருகின்ற பதினான்கு பேரும் ஊமையைத் தெரியாது என்று சாதிப்பார்கள். உங்களுக்கு கோபமூட்டுவார்கள்.”

“மேஸ்திரி, உனக்கு இந்த ஊமையனைப் பற்றித் தெரியுமா?”

“தெரியும், மிஸ்டர் வாலர். பாஞ்சாலங்குறிச்சிப் போரில் நான் கலந்துகொண்டபோது இவனைப் பார்த்திருக்கிறேன். பாஞ்சாலங்குறிச்சிப் போர் நடக்கும்போது கட்டபொம்மன் யுத்தத்தை விட்டு வெளியேறி மறைவிடத்திற்குச் சென்றுவிட்டார். ஏறக்குறைய ஒரு மாதமாக வீரபாண்டிய கட்டபொம்மனைத் தேடும் குழுவில் நான் இருந்தேன். புதுக்கோட்டை அரசுக்குச் சொந்தமான காளாப்பூர்க் காடுகளில் வீரபாண்டியனைக் கைது செய்தபோது இந்த ஊமையனும் அவருடன் இருந்தான். அப்போது இருவரையும் கைது செய்து கயத்தாறு கொண்டு வந்தோம். இந்த ஊமையனைப் பற்றி முழுவதுமாக எனக்குத் தெரியும்.”

“சரி, இவன் பெயர்?”

“டம்பி என்ற ஊமைத்துரை”

“அப்பா பெயர்?”

“ஜெகவீரபாண்டியன்”

“விலாசம்?”

“விலாசமில்லாதவன். இவன் இருந்த பாஞ்சாலங்குறிச்சித் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. இவனுக்கு முன்னால் போன சிவத்தையாவின் தம்பி.”

“சரி, அழைத்துச் செல்லுங்கள். அடுத்த ஆள்?”

அன்றைக்கு இந்த ஊமையை அறிமுகப்படுத்திய வெள்ளைக்காரச் சிப்பாய்கூட இவன் பெயர் குமாரசாமி என்று சொல்ல வில்லையே. ஒருவனுக்கு இத்தனைப் பெயர்களா? அல்லது நம்மை குழப்புவதற்காகப் புதுப்பெயரை இந்த சிவத்தையா சொல்லு கிறானோ? புரியவில்லையே எனக் குழம்பினார்.

"சரி, இவன்களோடு இன்றைக்கு இந்த அளவு போதும். நாளை விசாரணையில் சரியாக விசாரித்து ஹானரபிள் கம்பெனியிடம் நல்ல பெயர் வாங்கிப் பதவி உயர்வு பெற வேண்டும்" என்று நினைத்துக் கொண்ட வாலர், "சரி நாம் விடை பெற்றுக் கொள்ளலாமா?" என்றார்.

சிவத்தையாவுக்குத் தம்பியுடன் இன்னும் சிறுது நேரம் இருந்தால் நல்லது என்று நினைப்பு வந்தது. அதேசமயம் மருது பாண்டியர்கள் பற்றி மீண்டும் வாலருடன் பேச வேண்டாம் எனவும் நினைத்தார். சிவத்தையா, "மிஸ்டர் வாலர், என்னுடைய வேண்டுகோளை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்?" என்றார்.

"என்ன?" என்று கேட்பதுபோல வாலர் புருவத்தை உயர்த்தினார்.

"எனது அண்ணன் வீரபாண்டியனைக் கடைசியாக நெருக்க மாகப் பார்த்தவர்களில் நீங்களும் ஒருவராக கட்டாயம் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். அண்ணன் விசயம் பற்றிச் சொல்ல முடியுமா?"

"நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். உங்களின் வேதனை அதிகமாகத்தான் ஆகும். சென்ற அக்டோபர் மாதம் பதினோறாம் தேதி. அதற்கு முன்பாக பதினெட்டு நாட்கள் தொடர் விசாரணை நடந்தது. விசாரணையின்போது கைகளிலும், கால்களிலும் விலங்குப் பூட்டப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனும், கடலாடி ஜமீன்தாரும் நின்றிருந்தார்கள். அவர்களுக்கு ஆசனம் அளிக்கப்படவில்லை. கலகத்தில் ஈடுபடாத ஜமீன்தார்கள் மட்டும் ஆசனங்களில் உட்கார அனுமதிக்கப்பட்டனர். எப்போதெல்லாம் ஆங்கிலேயர்களுக்கு உதவிய பாளையக்காரர்கள் பெயர்களை விசாரணை அதிகாரிகள் சொன்னார்களோ, அப்போதெல்லாம் வீரபாண்டிய கட்டபொம்மன் அந்த ஜமீன்தாரைப் பார்த்துக் கோபப் பார்வை வீசினார். விசாரணை முடிவில் அவரைத் தூக்கிலிடப் போவதாக அறிவித்தனர். அப்போது கட்டபொம்மன் சொன்னதை அங்கிருந்த யாரும் மறக்க மாட்டார்கள். அவரது கோபமெல்லாம் மறைந்து தனது இறப்பு

உறுதி என்று அவர் கணித்தத் தருணம் அது. அவர் மனதில் இருந்த எண்ணம் வார்த்தையில் வெளிப்பட்டது.

“நான் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் போரிடும்போதே இறந்திருக்க வேண்டும்” என்றார். பின்பு தன் தம்பி ஊமையை நோக்கி “தம்பி, உன்னை விட்டுப் போகிறேன். வாய் பேச முடியாதவன் நீ. என் உயிரைவிட மேலாக உன்னை நினைக்கிறேன்” என்று ஊமைத்துரையை, இந்த குமாரசாமியைப் பார்த்துக்கொண்டே சென்ற அவர், அவராகவே தூக்குக் கயிற்றை எடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டார். அவர் இந்த உலகை விட்டுப் போகும்போது பார்த்த கடைசி ஆள் இந்த குமாரசாமிதான்.”

இதைச் சொல்லும்போது வாலர் நெகிழ்ந்தார். சிவத்தையா முகத்தை மூடிக்கொண்டு சத்தமில்லாமல் அழுதார். ஊமைத்துரை அண்ணனின் கையை அவர் முகத்திலிருந்து எடுத்துவிட்டார். அவர் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டார். முகபாவனையை வைத்து ஊமைத்துரை என்ன நினைக்கிறார் என்று வாலரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்த இடத்தில் அமைதி நிலவியது. “சரி, நாளை காலைத் தயாராக இருங்கள். என்னிடம் எதுவும் மறைக்க வேண்டாம். உங்கள் அண்ணன் வாழ்க்கையும், எட்டையபுர ஜமீன்தாரின் வாழ்க்கையும் உங்களுக்கு முன் உதாரணமாக உள்ளன. ஆண்டவன் கொடுத்த இந்த உயிரை நம் நடவடிக்கையின் காரணமாக இழந்துவிடக் கூடாது. இறப்பு என்பது நோய், முதுமை, விபத்து காரணமாக ஏற்படலாம். நம் நடவடிக்கையின் காரணமாக நாமே ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. உங்களுக்கும், உங்களுக்கு உதவி செய்யக்கூடியவர்களுக்கும் உங்கள் அண்ணன் வீரபாண்டியனின் மரணம் ஓர் எச்சரிக்கை. கலகம் செய்து பிடிபட்டுத் தூக்கில் தொங்குவதைவிட, செய்த தவறை ஒத்துக்கொண்டு சிறையில் வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளது. நான் சொன்னதை இரவு முழுவதும் யோசியுங்கள்” என்று சொல்லிவிட்டு வாலர் எழுந்து கொண்டார்.

•

4

சேர்வராயன் மலையின் உச்சியில் மேஜர் ராபின் கல்யாணி நின்றுகொண்டிருந்தார். அவரைச்சுற்றி அரைவட்டமாக இருபது இளைஞர்கள் அமர்ந்திருக்கின்றனர். அனைவரும் இந்தியத் தாய்க்கும், வெள்ளைக்காரத் தந்தைக்கும் பிறந்தவர்கள். மேஜர் ராபின் எங்குச் சென்றாலும் இந்த இருபது இளைஞர்களும் அவர்களது குடும்பமும் அவனைப் பின்தொடர்வார்கள். இவர்களின் தங்குமிடம் பெரும்பாலும் நடுக்காட்டிற்குள் தண்ணீர் வசதியுள்ள இடத்தில் இருக்கும். மேஜர் ராபின் கல்யாணிக்கு நான்கைந்து மொழிகள் தெரியும். தமிழ் நன்றாக வரும். இவனது தாய் சிவகங்கையைச் சேர்ந்தவள். சிவகங்கை மந்திரி பிரதானி மருது சேர்வைக்காரர்களுக்குச் சொந்தக்காரி. இவனது தகப்பன் இங்கிலாந்துக்காரன். கம்பெனி ஆர்மியில் கடைநிலை ஊழியனாக, பிக்காளி என்ற பதவியில் இருந்தான். தமிழ் பேசும் மலையாளிகள் அதிகம் வாழும் காடுகளான ஜவ்வாது மலை, கொல்லி மலை, சேர்வராயன் மலை போன்ற பகுதிகளே இவனுக்கு மிகவும் விருப்பமான இடங்கள். கடந்த ஆறு மாதமாக இந்த மலையில் கூடாரம் அடித்து மேஜர் ராபின் கல்யாணியின் குழு தங்கி உள்ளது.

மேஜர் ராபின் கல்யாணியின் குழு சிறியதுதான் என்றாலும் தினமும் உடற்பயிற்சி, வாள் பயிற்சி, துப்பாக்கிச் சுடுதல், கயிறு கட்டி மரத்தின்மீது ஏறுதல், இறங்குதல், வேகமாக ஓடிப் பழகுதல், தாவுதல் என்று தனது கூட்டத்தினருக்கு சதா பயிற்சிக் கொடுத்துக் கொண்டே இருப்பான். அவர்களோடு வந்த குடும்பத்தினர்கள் உணவு தயாரிப்பது, டெண்ட்டை சுத்தமாக வைத்திருப்பது, குடும்ப நன்மைக்காக கூட்டு வழிபாடு செய்வது, ஆயுதங்களைத் துடைத்து மெருகூட்டுவது போன்ற பணிகளோடு குழந்தை வளர்ப்பையும் கவனித்துக்கொள்வர்.

மேஜர் ராபின் கல்யாணி ஆரம்பத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி யில் மேஜராக இருந்தார். திடீரென கிழக்கிந்தியப் படையிலோ, கம்பெனி வேலையிலோ ஆங்கிலோ இந்தியர்களைச் சேர்க்கக்கூடாது எனக் கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் உத்தர விட்டதும் கவர்னர் ஜெனரலை ஒருமையில் பேசி பிரச்சனை செய்தான். ராணுவ கோர்ட்டில் விசாரிக்கப்பட்டான்.

“நான் பேசியது குறைவு. அந்தக் கவர்னர் ஜெனரல் காரன் வாலிஸை செருப்பால் அடித்திருக்க வேண்டும். காய்ச்சப்பாட்ல கிடக்கிற வெள்ளக்கார நாய்ங்களுக்கு இந்த ஊர் பொண்ணுங்களைக் கொடுக்கணும்.

ஆனால் பொறக்கிற பிள்ளைக்கு வேலை தர மாட்டானா? இவனுக்கு என்ன? பெரிய கவர்னல் ஜெனரல். போகிற இடமெல்லாம் வெள்ளக்காரச்சிக கிடைப்பாளுக. மத்தவங்களுக்கு இந்த ஊர் பொண்ணுகதானே?

அவன் என்னடா என்னைய விசாரிக்கிறது? நானே வேலைய விட்டு விலகுறன்டா. நான் ஏன்டா மேஜர்ன்னு சொல்லிக்கிட்டு இவனைப்போல ஈனப்பயகிட்ட ஆர்டர் வாங்கணும்? நானே ஒரு சிறுபடைய உருவாக்குகிறேன், நானே அதை வழி நடத்துகிறேன். என்கிட்ட உதவி கேட்கிற இந்த ஊர் அரசர்களுக்குக் கூலிப்படையா இருக்கேன். உங்க கவர்னர் ஜெனரல்கிட்ட சொல்லி வை. நீங்க, உங்க கம்பெனிப் படைகள் செய்ய முடியாத பெரிய வேலைகளை என் சிறு படை செய்யும். வெள்ளக்காரனுக்கும், இந்தியப் பொம்பளைக்கும் பிறந்த என்னப் போல உள்ளவங்க மட்டுமே இருக்கற இந்தச் சின்னப் படைப்பிரிவு, நீங்க செய்ய தடுமாறுற வேலைங்களை ரொம்ப சுலபமா முடிச்சுக் காட்டும். ஏதாவது உதவின்னா என்னிடம் உங்க கவர்னர் ஜெனரலை கேட்கச் சொல்.

என் ஆத்தா ஒரு வெள்ளைக்காரனுக்கு இரக்கப்பட்டதுபோல நான் வெள்ளைக்கார ஈனப்பயல்களுக்கு இரக்கம் காண்பிக்கிறேன்னு" சொல்லிவிட்டு வெளியே வந்துபோது, அவனைச் சுற்றி ராணுவத்தினர் வளைத்திருக்கின்றனர். கையில் கிடைத்த கம்பால் சிலம்பாட்டம் ஆடி சுற்றி வளைத்தவர்களை ஏமாற்றிவிட்டு முகாமைவிட்டு ஓடி வந்து விட்டான்.

இது நடந்தது வட நாட்டிற்குப் போகிற வழியில் இருக்கிற போபால். இவன் தற்போது தங்கியுள்ளது கல்வராயன் மலைப்பகுதி. இங்கு அவ்வளவாக இவனைப் பற்றித் தெரியாது. வரும்போதே ஆங்கிலோ இந்திய வாலிபர்கள் இருபது பேரைத் தேர்வு செய்து இந்த மலைக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான்.

மேஜருக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தி ஜூலியட். ஜரிஷ்க்காரி. அவள் ஜரிஷ்க்காரி என்றாலும், கணவனான மேஜர் ராபின் கல்யாணியைவிட அசிங்கமாக வெள்ளைக்காரர்களைப் பேசுவாள். மாமியார் கல்யாணியை சாமி மாதிரி பார்த்துக் கொள் வாள். வாய் நிறைய "அத்தை" என்று அழைப்பாள். இன்னொருத்தி பெயர் அகல்யா. அவள் போபால். தமிழ் திக்கித் திக்கி பேசுவாள். மேஜரின் தாயார் கல்யாணியை "நானி" என்று கூப்பிடுவாள். மேஜரை "மேஜர் சாப்"

என்பாள். மேஜர் ராபின் கல்யாணி தனது குழு வினரிடம் சொல்லுவான். “நான் இறந்து போன வெள்ளைக்காரத் தகப்பனையும், என்னோடு இருக்கும் என் ஆத்தா கல்யாணியையும் உயிராக மதிக்கிறேன். அதனால்தான் அப்பன் வழியில் ஒரு பொண்டாட்டியும், ஆத்தா வழியில் ஒரு பொண்டாட்டியும்” என்று சொல்லிச் சிரிப்பான்.

இன்று காலையில் கொஞ்சம் காலதாமதமாகத்தான் கூட்டத்திற்கு வந்தான். இருபது வீரர்களும் விரைப்பாக நின்று சல்யூட் அடித்தனர். தன்னுடைய சிறு படையின் அணி வகுப்பைப் பார்வை யிட்டான். பின்னர் அரைவட்டமாக அனைவரும் உட்கார்ந்தனர்.

“சுதந்திர சிப்பாய்களே, வெள்ளக்கார ஆர்மியிலே நம்ம நேட்டிவ் சிப்பாய்களுக்கு வெள்ளக்காரன் உல்லன் உடுப்புதான் கொடுப்பான். வெயில் காலத்துல புழுக்கம் தாங்காது. ஆனா நம்ம படைக்கு நான் பருத்தித் துணியில சீருடை கொடுத்திருக்கேன். அவன் படையில இடுப்புல கத்தி சொருகி வைக்க இரும்புல உறை கொடுத்திருக்கான். அதுல கத்தியச் சொருகினா கொஞ்ச நாள்ல ஓரசி ஓரசி மொட்டக்கத்தியாகிவிடும். நான் ஒங்களுக்கு தோல் உறை கொடுத்திருக்கேன். கத்தி எப்பவும் கூராவே இருக்கும். வெள்ளக்காரன் நம்பள நம்பாமே துப்பாக்கிய லண்டன்லயும், மலாயாவிலயும் இருந்து செஞ்சுகொண்டு வர்றான். நானு இங்க யிருக்கிற கோயம்புத்தூர்ல செஞ்சி கொண்டு வறேன். அங்க எல்லாம் உத்திரவுதான். சொன்னதை படை வீரன் கேட்கணும். ஏன்? எதுக்குன்னு அவனுக்குச் சொல்லமாட்டாங்க. ஆனா நான் ஒங்ககிட்ட எல்லாம் சொல்லிர்றேன். ஒங்க ஆலோசனைக் கேட்கிறேன். அதனால தான் நம்ம படை சின்னதா இருந்தாலும் நாம எந்த ராஜாகூட சேர்ந்து போராடுறோமோ அந்த ராஜா ஜெயிக்கிறாரு. பல ராஜாக்கள் எதிரிப்படையில மேஜர் ராபின் கல்யாணி வர்றாருன்னு தெரிஞ்சாலே சமாதானம் பேசுறானுங்க. அவனுங்க கொடுக்கிற பணம் முக்கியம் இல்லடா. மரியாத முக்கியம். வெள்ளக்காரப் பயலுகளுக்கு நம்ம அருமை தெரியணும். என் ஆத்தா கல்யாணி போல, உங்க ஆத்தாக்கமாரு வெள்ளக்காரனுக்குப் பெத்துப் போட்ட இந்த வீரமான பிள்ளைக எப்படி ஊர மிரட்டி வச்சிருக்கு... எப்படி நியாயமா இருக்குக... எப்படி ஜெயக்கொடி நாட்டுதுங்கன்னு அவனுங்களுக்குத் தெரியணும்டா.”

“எஸ் மேஜர். ஒங்ககூட பழகுறதும், ஒங்கத் தலைமையில இயங்குறதும் எங்க ஆத்தாக்களுக்கு ரொம்ப சந்தோசமாயிருக்கு.”

“சரிடா, எல்லாரும் அப்படியே ஒக்காருங்க. இன்னிக்கு வகுப்ப ஆரம்பிப்போம். வரிசையா கேள்வி கேளுங்க. ஒருத்தன் கை தூக்கினா அவனுக்கு நான் பதில் சொல்லுறேன். அவனுக்கு எனது பதில் திருப்தி தர்ற வரை அடுத்தவன் கை தூக்கக்கூடாது. இதுதான் விதி. உங்களுக்கு நல்லாத் தெரியும். இருந்தாலும் சொல்றேன். கேளுங்கடா. உம் ராமசாமி, கேளுடா.”

“நம்ம பழக்கவழக்கங்கள, நம்ம ஆத்தாமாருங்கள ஏன் மேஜர், வெள்ளக்காரப் பயலுக கேவலமாப் பேசுறாங்க?”

“டேய், நம்ம பழக்கவழக்கங்களைப் பத்தி ஐரோப்பாவில பிறந்த வெள்ளக்காரனுங்களுக்கு என்னடா தெரியும்? ஏறக்குறய அம்பது வருஷமா பெரிய அளவுல இங்க வந்துட்டானுங்க. இப்பவும் யாராவது புது ஆள் லண்டன்ல இருந்து இங்க வந்துட்டான்னா அவனுங்ககிட்ட இவனுங்க சொல்லுறது இதுதான். “இந்தியாக் காரன்கிட்ட கை குலுக்காதே. ஏன்னா கொஞ்ச நேரத்துக்கு முந்தி கைய அவன் எங்க வச்சிருப்பான்னு தெரியாது”ன்னு பெரிய நகைச்சுவை சொன்னதுபோல சொல்லிச் சிரிப்பானுங்க. அவனுங்களுக்குத் தெரியுமாடா? ஒலகத்திலேயே வலது கைய சாப்பிடுறதுக்கும், இடது கையக் கழவறதுக்கும் பயன்படுத்துறது இந்தியாக்காரங்க மட்டுந்தான்னு?

“இந்த லட்சணத்துல இந்த வெள்ளக்காரங்களுக்குள்ள ஒற்றுமை ஒன்னும் கெடையாதுடா. வெளியிலயிருந்து பாக்கிறவனுக்கு அவனுங்க ஒத்துமையாயிருக்கிறது மாதிரி தெரியும். ஆனா அவனுங் களுக்குள்ள போட்டி, பொறாம அதிகம். டச்சுக்காரன் வேற எந்த ஐரோப்பியனையும் இந்தோனேசியாக்குள்ள வியாபாரம் செய்ய விடமாட்டான். இங்கிலாந்துல கறி, கோழி, மீனு சாப் பிடுறவனுக்கு மசாலாப் பொருளுங்க வேணும். அதை டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிதான் இந்தியா, இந்தோனேசியாவிலிருந்து வாங்கித் தரைமார்க்கமா கொண்டு வந்து இங்கிலாந்துல வியாபாரம் பண்ணுச்சு. இங்கிலாந்து வியாபாரிங்க எப்படியாவது டச்சுக் கம்பெனிக்கிட்டயிருந்து இந்த மசாலா வியாபாரத்தத் தட்டிப் பறிக்கணும்னு லெவண்ட்ன்னு ஒரு கம்பெனிய புதுசா உண்டாக்கி அதை நடத்தினாங்க. லெவண்ட் கம்பெனி தனியா தொழில் செஞ்சுப் பாத்துத் தோத்திருச்சு. அப்புறம் டச்சுக் கம்பெனியோட சேர்ந்து மசாலாப் பொருளுங்களை லெவண்டன் கம்பெனித் துருக்கி வழியா இங்கிலாந்துக்குக் கொண்டு வந்துச்சு. ஓட்டமான் வம்சாவளியைச் சேர்ந்த சுல்தான் துருக்கி வழியா யாரும் இந்தியாவுக்குப் போகக் கூடாது,

வரக்கூடாதுன்னு உத்தரவு போட்டுட்டார். எந்த மசாலாப் பொருள் வாங்கணும்னாலும் நாங்கதான் இந்தோ னேசியாவில இருந்தோ இந்தியாவிலிருந்தோ வாங்கி இங்கிலாந்துல வியாபாரம் பண்ணுவோம்ன்னு சுல்தான் சொல்லிட்டாரு. உடனேயே டச்சுக் கம்பெனி இனி தரைவழியா இந்தியா போகக்கூடாது, கடல் வழியா போகணும்னு முடிவு செஞ்சிருச்சு. இங்கிலாந்துல இருந்த லெவண்ட் கம்பெனியால டச்சுக் கம்பெனியோட ஒத்துப்போக முடியல. அப்பத்தான் ஈஸ்ட் இந்தியா கம்பெனி உருவாச்சு. 1600-ஆம் வருசம் கம்பெனிய ஆரம்பிச்சுப்புட்டாங்க. 1600-ஆம் வருசம் 31 டிசம்பர் அன்னைக்கு அரசி எலிசபெத் கிழக்கிந்தியக் கம்பெனிக்கான உத்தரவுல கையெழுத்துப் போட் டாங்க. பண்ணுன இந்தப் பாவத்துக்குக் கையெழுத்துப் போட்ட அடுத்த மூணாவது வருசத்துலயே செத்தும் போயிட்டாங்க.

“மேஜர், கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கம் வியாபாரம் மட்டும்தானா? டச்சுக்காரனப்போல மதம் பரப்புவதில் ஆர்வம் இல்லயா?”

“இந்தியாவுக்கு கடல்வழித் தெரியாம இங்கிலாந்துக்காரன் அலஞ்சானுங்க. டச்சுக்காரன் இவனுங்கள இந்தியா, ஸ்ரீலங்கா, இந்தோனேசியான்னு எங்கயும் வியாபாரம் பண்ணவிடல. அப்பத்தான் இந்தியாவில அரசர்கள் கால்ல விழுந்தா காரியம் சாதிக்கலாம்னு ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரனுங்களுக்குத் தெரிஞ்சது. மொகலாயப் பேரரசரு ஜஹாங்கீர் கால்ல விழுந்தானுங்க. அவருக்கும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியப்பத்தி பெரிய அபிப்பிராயம் கெடயாது. அந்த நேரத்துலதான் டச்சுக்காரங்க குஜராத்ல இருக்கிற சூரத் நகரத்த வியாபாரம் செய்ய லாயக்கில்லாத இடம்னு முடிவு செஞ்சு மொகலாயப் பேரரசர் ஜஹாங்கீர்கிட்ட சூரத் நகரத்த திரும்ப ஒப்படைச்சாங்க. சரி, போனாப் போகுதுன்னு சும்மா கிடக்கிற சூரத் நகரத்த கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரம் பண்ணட்டும்னு ஜஹாங்கீர் அனுமதிச்சார்.”

“சூரத்த அடுத்து பம்பாய்ல வியாபாரம் பண்ண வந்துட் டாங்களே துரை?”

“டேய், துரைன்னு கூப்பிடாதே. மேஜர்ன்னு கூப்பிடு. இரு சொல்றேன். ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்காரனுங்களுக்குப் போர்ச்சுக்கீசியக்காரன்னா இளக்காரம். போர்ச்சுக்கீசியன்னா குடிகாரனுங்க, அவங்க வீட்டுப் பொம்பளகன்னா தேவடியாளுகன்னு பேசுவானுங்க. ஆனா போர்ச்சுக்கீசுக்காரங்கதான்டா இந்தக் கேடு கெட்ட கிழக்கிந்தியக்

கம்பெனிக்கு முதல்ல சொந்த இடம் கொடுத்து உதவி செஞ்ச ஐரோப்பியன்க."

"அப்படியா மேஜர்? இப்ப சூரத் நகரத்தில கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரம் ஆரம்பிச்சுச்சுன்னு சொன்னீங்களே?"

"சூரத்தில ஆரம்பிச்சுது மொகலாய சக்கரவர்த்தி ஜஹாங்கீர் குத்தகைக்குக் கொடுத்த இடம். நான் சொல்லப் போறது சொந்த இடம். இங்கிலாந்து இளவரசன் இரண்டாம் சார்லசுக்கும் போர்ச்சுக்கீசிய இளவரசி கேத்தரீன் பிரகன்சாவுக்கும் கல்யாணம் நிச்சயமாச்சு. மாப்பிள்ளைக்குச் சீதனமா பம்பாய் நகரத்த போச்சுக் கீசியருங்க இங்கிலாந்து இளவரசன் சார்லசுக்குக் கொடுத்தாங்க. அதை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இங்கிலாந்து இளவரசர் தானமாகக் கொடுத்துட்டாரு. அப்படிக் கிடச்சதுதான் பாம்பே. பாம்பே கிடைச்சதும் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி முதல்ல வம்பு இழுத்தது யாருகிட்ட தெரியுமா? பம்பாயக் கொடுத்தானுங்க பாரு அந்தப் போச்சுக்கீசியங்களோடதான். அவங்களப் பத்தி மத வெறியனுங்கன்னு இந்து ராஜாக்கள்கிட்ட புகார் சொல்லுறது, அவதூறு பரப்புறதுன்னு ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி முழு நேர வேலயா செஞ்சி போர்ச்சுக்கீசியருங்களை ஓரங்கட்டிட்டாங்க."

"இந்தியாவுல பத்து கோடி பேரு இருக்கலாம்ன்னு நேத்து சொன்னீங்க. அதுல வெள்ளக்காரங்க ஐம்பதாயிரம் பேரு இருப்பானுங்கன்னும் சொன்னீங்க. அவங்களைவிட நாம ரெண்டா யிரம் மடங்கு அதிகமாயிருக்கோம். ஒரு வெள்ளக்காரனுக்கு நாம ரெண்டாயிரம் பேரு இருந்தாலும் அவன நாம ஒன்னும் பண்ண முடியலையே?"

"எண்ணிக்கயில நாம் பெருசுதான்டா. இந்தியாவுல நம்மைவிட பெரிய எண்ணிக்கயில உள்ளதுக நெறைய இருக்கு.

அதுகளுக்குத்தான் வெள்ளக்காரன் நிறையப் பயப்படுவான்."

"யாரு மேஜர் அது?"

"பாம்பு, கொசு, தெரு நாய்ங்க."

எல்லோரும் சிரித்தனர்.

"ஏன் மேஜர்? பெரியம்மை, சித்திர மாச வெயில், கார்த்திக மாச புயல், ஆடி மாச புழுதிக் காத்த விட்டுட்டீங்களே."

“ஆமான்டா. நான் சொன்னதும், நீ சொன்னதும் இங்கிலாந்துல இல்ல. அவனுகளுக்கு இந்தக் காலநெல ரொம்பப் புதுசு. ஒடம்புக்கு ஒத்துக்காது. நாம போடுற துணி மாதிரி நாலு மடங்கு சுத்திக்கிட்டுத்தான் வெளியே வருவான். தலையில தக்கத் தொப்பி போடலன்னா மூஞ்சி சிவந்து தக்காளிப் பழம் மாதிரி ஆயிடும். அதுவும் மிலிட்டரியிலே இருக்கானுக பாரு, உல்லன் உடுப்பு போட்டுக்கிட்டு, வெயில்ல அவனுங்கப் படுறபாடு, சொல்ல முடியாது. தூங்குறபோது கூட உடுப்பக் கழட்டக் கூடாது.”

“மேஜர் ,சேலத்துல இருக்கிற வெள்ளக்காரிச்சிக ஆட்டம் தாங்க முடியல. லண்டன்ல இருந்து ரெண்டு மாசம் கப்பல் பயணத்துல பிச்சக்காரிக மாதிரி வந்து இறங்கறாளுக. ஆனா, இங்க வந்தபிறகு அவளுக ஆட்டம் அதிகமாயிடுது.”

“ஆமாடா, கப்பல்ல ஏறிட்டா, எல்லாப் பயலும் மொடாக் குடியனுங்கதான். வர்ற வழியில ஜமாய்க்காவுல இஞ்சிச்சாரக் குடிச்சிட்டு டான்ஸ் ஆடுறதுக்கும், வெட்டியா கத்துறதுக்கும்தான் வெள்ளக்காரனுங்க கப்பல்மேல் தளத்துக்குப் போவானுங்க. அந்த இடத்துல இந்தப் பொம்பளங்கள கேவலமாப் பேசுவானுங்க. பாதிப் பெம்பளக கப்பல்ல கீழ்தளத்துல குடியிருக்கிற எலி களோட எலிகளாகவும், அடைச்சு வச்சிருக்கிற குதிரகளோட குதிரயாகவும்தான் மெட்ராஸ் வந்து சேருவாளுக. கப்பல் கரயேறி ருச்சின்னா அப்புறம் ராஜமரியாததான்.

வெள்ளக்கார பொம்பளங்க இந்தியாவுல ரொம்பக் குறைவு. நாலு ஆம்பளங்களுக்கு ஒரு பொம் பளதான். அதனால பொம்பளங்களுக்குத் தேவை அதிகம். இங்க வர்றவரையில கல்யாணம் ஆகாத வளா வருவாளுக. இங்க வந்து மாப்பிள்ளத் தேடுவாளுங்க. கல்யாணத்துக்கு ஆள் கிடைக்கிற வரயில கம்பெனியே அவளுகளுக்குச் சாப்பாடு, துணிமணிகக் கொடுத்திடும். மாப்பிள்ள அமைஞ்சவுடன் கல்யாணம்தான். எல்லா மாப்பிள்ள செலவுல தான் ஒவ்வொருத்திக்கும் நாலு வேலக்காரப் பொம்பளக. தலைமுடிய சீவிவிட, கைகால் அமுக்கன்னு ஒரே ராஜ மரியாதைதான். ஒரு நாளைக்கு நாலு தடவ துணி மாத்துவாளுக. இவளுகளுக்குப் பாதி நேரம் மத்த வெள்ளக்காரன் பொண்டாட்டி பத்தி வம்பு பேசறதுதான் வேல. குழந்தைகளுக்கு ஏழு வயசு ஆச்சுன்னா கிறுக்காயிடுவாளுக. இங்கிலாந்துல ஏழு வயசுலதான் பள்ளிக்கூடம் சேர்ப்பாங்க. அதனால ஏழு வயசு குழந்தையைக் கூட்டிக்கிட்டு ஒன்னு லண்டனுக்குப் போயிடுவாளுக. இல்லன்னா யாராவது தெரிஞ்சவங்க

போகும்போது குழந்தய அவங்ககூட லண்டனுக்கு அனுப்பிவிட்டுட்டு இங்கப் புருசனோட இருப்பாளுக. இங்க இருந்தாலும் பாதிக் கிறுக்காத்தான் இருப்பாளுக. நம்ம ஊருல வெயில் அதிகயிருக்கிறதால மாசத்துல பத்து நாளு கூட வீட்டுக்கு விலக்காயிருப்பாளுக."

"அதனால மேஜர்?"

"டேய் முட்டாப்பயலே, வீட்டுக்கு விலக்குன்னா புரியாதா? அப்பத்தான்டா எங்க அப்பன் மாதிரி, ஒங்க அப்பன் மாதிரி காய்ச்சப் பயலுக கம்பங்காட்டுக்குள்ள புகுறது."

கேட்டுக் கொண்டிருந்தவர்களின் வாயெல்லாம் பல்லாக இருந்தது.

"சரி மேஜர், நம்ம ஊர்ல ஜாதியிருக்கிற மாதிரி லண்டன்ல இல்லையா?"

"நம்ம ஊர் ஜாதிகளப் பத்திப் பேச இவனுங்களுக்கு அருகதயில்லடா. அவனுங்க ஊர்ல ஸ்காட்லாந்துல இல்லாத ஜாதிக் கொடு மயா? தீண்டாமயடா? ஒரு நா என் பொஞ்சாதி ஜூலியட்டப் பேச வைக்கிறேன் இங்க. அவ சொல்லுவா அங்கயிருக்கிற ஜாதி கொடுமப் பத்தி. ஐரிஷ்காரனுங்கள இவனுங்கப் படுத்துற பாட்டப் பத்தி."

"சரி மேஜர், அவங்களே சொல்லட்டும் ஒரு நாளைக்கு."

"சரிடா, அடுத்த கேள்வி?"

"எதுக்கு மேஜர் பெரிய பெரிய பூட்சா போடுறாங்க?"

"அடிக்கிற வெயில்ல கால் வீங்கிடும்றதால போட்ற பூட்ஸுங்க கொஞ்சம் பெரிசாவே இருக்கும். ஒவ்வொருவரும் பத்து பூட்ஸாவது வச்சிருப்பாங்க."

"மேஜர், இவன விடுங்க. கிழக்கிந்தியக் கம்பெனிப் பத்திச் சொல்லுங்க."

"கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்பிச்சது 1600வது வருசம்டா. இத நா அப்பவே சொல்லிட்டேன். முதல் 98 வருசம் கம்பெனிக்கு நல்ல வியாபாரம். 1698 லண்டன்ல ஒரு போட்டிக் கம்பெனி ஆரம்பிச்சுட்டாங்க. இந்தியாவுல வியாபாரம் பண்ணுறதல ரெண்டு கம்பெனிக்கும் போட்டி வந்துருச்சு. ரெண்டு கம்பெனிகளும் போட்டி போட்டுக்கிட்டு லண்டன் அரசியல்வாதிகளுக்குப் பணம் கொடுத்தாங்க.

அதனால இந்தியாவுல பண்ணுற வியாபாரத்த ஒரு வருசம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் அடுத்த வருசம் அடுத்தக் கம்பெனிக்கும் கொடுத்தாங்க. கடைசியில ரெண்டு கம்பெனியும் வியாபாரத்துல நஷ்டத்துல ஓட ஆரம்பிச்சிருச்சு. அத சரி பண்ணுறதுக்கு ரெண்டு கம்பெனியும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்து 'ஒருங்கிணைந்த கிழக்கிந்தியக் கம்பெனி'ன்ற பேர்ல ஒரு புதுக் கம்பெனியை ஆரம்பிச்சாங்க. ரெண்டு கம்பெனிகளும் இதனால ஒன்னாயிருச்சு. இந்தப் புது கம்பெனிக்கு ராணுவத்த உருவாக்கவும், உயர் அதிகாரிங்கள நியமிச்சுக்கவும், இந்தியாவுல இருக்கிற உள்ளூர் அரசர்களோடு யுத்தம் தொடங்கவும், சமாதானம் செஞ்சுக்கவும் அதிகாரம் கிடைச்சது. 1702 -ல கிடைச்ச இந்த அதிகாரம்தான் இந்தியாவுல கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி அமைக்க அடித்தள மாயிருச்சு."

"மேஜர், கிழக்கிந்தியக் கம்பெனிய நிலைநாட்டிய ராபர்ட் கிளைவ் பற்றிச் சொல்லுங்களேன்?"

"சரியான கேள்வி கேட்டடா. ஒங்க அப்பன் ராபர்ட் கிளைவ் நடத்திய ஆற்காட்டுப் போர்ல பிக்காளியா இருந்தாருல்ல. அதுதான் கேக்குற. சரி சொல்லுறேன். கிளைவ்வோட கதையைக் கேட்டா நம்பவே முடியாது. அவன் அறிவாளியும் இல்ல. முட்டாளும் இல்ல. வீரனும் இல்ல. கோழயும் இல்ல. அவனுக்கு அரசியல் தந்திரம் இல்ல. ஆனா அவன்தான் எல்லா தந்திரமும் செஞ்சான். வறுமை யிலும் இருந்தான். செல்வக் கோமானாவும் இருந்தான். அவன் வாழ்க்கை, அவனோட தனிப்பட்ட வாழ்க்கையா மட்டுமில்ல. நம்ம வரலாற்றயே மாத்திப்போட்ட வாழ்க்கையாவும் இருந்துடுச்சி."

"என்ன மேஜர், இவ்வளவு முஸ்தீபா ஆரம்பிக்கிறீங்க?"

"ஆமாடா, ராபர்ட் கிளைவ்னு ஒரு ஆள் இல்லைனா, இன்னும் ஒரு ஐம்பது வருசம்கூட, நம்மோட அடிமத்தனம் தள்ளிப் போயிருக்கும்."

"அப்போ விரிவாவே சொல்லுங்க மேஜர்."

"மார்கெட் டிரைட்டன் மோட்டன்சே என்ற இடத்துலதான் ராபர்ட் கிளைவ் பிறந்தான். வீட்டுல பிள்ளைங்க எண்ணிக்க அதிகம். தகப்பனார் பெயர் ரிச்சர்ட் கிளைவ், தாயார் பெயர் ரெபெக்கா."

"என்ன மேஜர், பாடம் சொல்லிக் கொடுக்கிற மாதிரி ஆரம்பிக்கிறீங்க?"

“கேளுடா அவசரக்குடுக்க. ஒரு ஆளப் பத்தித் தெரிஞ்சுக் கணும்னா, அவனோட முழுக்கதையும் தெரியணும். தெரிஞ்சாதான், அவனைப் பத்தி நல்லா புரிஞ்சுக்க முடியும். அவன் சின்ன வயசுல எப்படி இருந்தான்றதும் ரொம்ப முக்கியம்.”

எல்லாரும் அமைதியாகிவிடவே மேஜர் ராபின் கல்யாணி தன் பேச்சைத் தொடர்ந்தான்.

“வீட்டுக்கு மூத்தப் பையன் இந்த ராபர்ட் கிளைவ். இவனுடைய சிறிய தாய் எலிசபெத். அவ ஒரு பணக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தா. அவளிடம் வளர்ப்பு மகனாக இருந்தான் கிளைவ். அவனுக்குச் சின்ன வயசுல அடிக்கடி காய்ச்சல் வந்துடும். பிடிவாத குணம் அதிகம். சின்ன மனஸ்தாபம் வந்தாலும் வீட்டை விட்டு ஓடிடுவான். அவன வளர்த்த எலிசபெத் அவனோட பத்து வயசுல இறந்துட்டா. அவ இறந்துபோனவுடனே கிளைவ்க்கு வாழ்க்கையே கஷ்டமா போயிடுச்சு. அதனால ரொம்ப முரடனாவும் ஆயிட்டான்.

ஒரு நாள் அந்த ஊர் சர்ச்சோட உச்சியில ஏறி உட்காந்துக்கிட்டான். ஊர்ப்பிள்ளைங்க “கிளைவ் கீழே இறங்கி வா”ன்னு சர்ச்சைச் சுத்தி நின்னுக்கிட்டு கத்தினாங்க. ரொம்ப நேரம் கெஞ்சிக் கேட்ட பின்னாடிதான் பெரிய சாதனை பண்ணுனதுபோல் இறங்கி வந்திருக் கான். கிளைவ்வைப் பத்தி மொதமொதல்ல நல்ல வார்த்தச் சொன் னது அவன் படிச்ச செய்யரில் உள்ள லாஸ்டோக் பள்ளியின் ஆசிரியர் டாக்டர் ஈட்டன்தான். “இந்த சிறுவன் வளர்ந்து பெரிய மனிதனாகும்போது, இவனது திறமைகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைக்குமென்றால் இவனைவிட கூடுதல் பெயர் வாங்கக்கூடியவர்கள் உலகில் மிகச் சிலரே” என்று இவனைப் பத்தி அந்த வாத்தியாரு எழுதி வைச்சாரு.

எங்கு இருக்கான், போறான்னு எதுவுமே கேக்க ஆளில்லாத நிலையில தான்தோனித்தனமாக திரிஞ்சான் கிளைவ். எல்லாரும் இந்தியாவுக்குப் போறாங்களே, நாமும் போனா என்னன்னு தனது பத்தொன்பதாவது வயசுல இந்தியா வந்தான். அவன் இங்க வரும்போது அவனோட மனசுல எந்த எண்ணமும் இல்ல. ஏதாவது வேலை செஞ்சு பிழைச்சுக்கலாம்னு வந்தான். வரும்போதே பிரச்சன. ரெண்டு மாசத்துல வரவேண்டிய கப்பல் ஒன்பது மாசங்க கழிச்சே மெட்ராஸ் வந்தது. மெட்ராஸில் இருப்பான் என்று ஒரு நண்பனை நம்பி, மெட்ராஸ்

கடற்கரையில இறங்கினான். கிளைவ் மெட்ராஸ் வந்த கப்பல் தாமதமா வந்ததால, அதுக்குள்ள அவனோட நண்பன் லண்டன் போய்ட்டிருந்தான். மெட்ராஸுல அங்கயும் இங்கயும் சுத்தித் திரிஞ்ச கிளைவுக்கு ஏதோ ஒரு சின்ன வேல கிடைச்சது. இந்தச் சமயத்துல கடலூரிலிருந்த ஆங்கிலேயர்களின் செயிண்ட் டேவிட் கோட்டைக்குக் கப்பல் படைத்தளபதியா போஸ்கோவன் இருந்தான். அவன் மொரிஷியஸ் தீவைப் பிரெஞ்சுக்காரங்ககிட்டயிருந்து கைப்பத்த முயற்சி செஞ்சுத் தோத்துப் போயிருந்தான். திறமையில்லாதவன் என்ற கெட்ட பெயரை மாத்த அவன் கடலூர் செயின்ட் டேவிட் கோட்டையிலிருந்து கிளம்பி பிரெஞ்சுக்காரங்கக்கிட்ட இருந்த பாண்டிச்சேரியை முற்றுகையிட்டான். முதன்முதலில் கிளைவ் கலந்து கொண்ட போர் அதுதான். அதுல தோல்வி.

பிரெஞ்சுப் படையினர் மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கைப்பத்தினபோது கோட்டைக்குள்ள எடுபிடியாக இருந்த கிளைவ்வையும் கைது செஞ்சாங்க. கொஞ்ச நாள்ல பிரெஞ்சுக் காரங்களுக்கு லஞ்சப்பணம் கொடுத்து வெளியில வந்துட்டான். அப்புறம் எப்படியோ கிழக்கிந்தியக் கம்பெனியில கிளார்க்கா வேல கிடைச்சது.

அந்த வேலையில இருந்தப்பவும் மெட்ராஸ்ல இருந்த கம்பெனி செகரட்டரிகூட பிரச்சனை. கவர்னரிடம் ராபர்ட் கிளைவ் பத்தி செகரட்டரி புகார் சொல்லிட்டான். கிளைவ்வை அழைத்து "செகரட்டரியிடம் மன்னிப்புக் கேள்" என்று கவர்னர் உத்தரவிட்டான். வேறு வழியில்லாத கிளைவ் செகரட்டரியிடம் மன்னிப்புக் கேட்டான். செகரட்டரி "சரி"ன்னு சொன்ன பிறகு, சமாதானத்திற்காக, "இன்று என்னுடன் இரவு உணவு அருந்தலாம் வா" என்று செகரட்டரி அழைத்தான். பிடிவாதக்கார கிளைவ்வின் குணம் மாறுமா?

"நோ மிஸ்டர் செகரட்டரி, உங்களிடம் மன்னிப்புக் கேட்கத்தான் கவர்னர் சொன்னார். சாப்பிட அல்ல"

என்று முகத்தில் அடித்தாற்போல சொல்லிவிட்டான்.

இதேபோலத்தான் ஒருமுறை சீட்டு விளையாடும்போது கிளைவ்வை ஒருவன் ஏமாற்றிவிட்டான். அதனால் இருவருக்கும் தகராறு வந்துவிட்டது. கிளைவ் அவனை நோக்கிச் சுட்டான். அவன் தலையைக் குனிந்து தப்பித்துவிட்டான். சுதாரித்த அவன் கிளைவ்வின் துப்பாக்கியைப் பிடுங்கி கிளைவ் தலையில் வைத்து அழுத்தி "என்னை சுட

முயன்றதற்காக என்னிடம் மன்னிப்புக் கேள். சீட்டுக்கட்டு விளையாட்டில் நீ என்னிடம் தோற்றதற்காகப் பணம் கொடு" என்றான். கிளைவ் பயப்படவில்லை. "நீ என்னைச் சீட்டு விளையாட்டில் ஏமாற்றியவன், உனக்கு நான் பணமும் தரமாட்டேன், மன்னிப்பும் கேட்க மாட்டேன்" என்றான் கிளைவ். அவனுக்கு வெறுத்துவிட்டது. "டேய் கிளைவ், நீ ஒரு பைத்தியக்காரன்டா" என்று கத்திக்கொண்டு துப்பாக்கியைத் தூக்கி எறிந்துவிட்டு, கிளம்பி விட்டான்.

இப்படி போகும் இடமெல்லாம் சண்டை சச்சரவுகளை உண்டாக்கிக்கொண்டே இருந்தாலும், கிளைவுக்கு அடுத்தடுத்தப் பதவிகள் வந்து கொண்டுதான் இருந்தன. படைக்கு முன்னால் கொடிபிடித்துச் செல்லும் என்சைன் என்னும் பதவி கிளைவிற்குக் கிடைத்தது. ஏற்கனவே கிளைவ் எழுத்தராக இருந்துவிட்டு புதிதாக ராணுவத்தில் வீரனாகச் சேர்ந்ததால் ராணுவத்தில் அவனை யாருக்கும் பிடிக்கவில்லை. அதனால் ராணுவத்தில் தன்னை கேலி செய்பவர்களை எல்லாம் வம்புச் சண்டைக்கு இழுத்து விடுவான். பலமுறை தளபதிகளின் கோபத்துக்கு ஆளாகி மன்னிப்பும் கேட்டிருக் கிறான். இரண்டு மூன்றுமுறை கேலி செய்பவர்களைத் தாக்கியதால் கேலி செய்பவர்கள் கிளைவ்வைப் பார்த்து பயப்பட ஆரம்பித்தனர்.

"கிளைவ் இவ்வளவு முரட்டுத்தனமானவனாகவும், திறமையாக வேலை செய்யாதவனாகவும் இருந்தபோதும், எதிர்பாராதவிதமாக அவனது கமாண்டர் மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸும், கம்பெனி எழுத்தாளர் 'ஓர்ம்'மும் கிளைவ்வை அவ்வப்போது புகழ ஆரம்பித்தனர்.

"டேய் பசங்களா, இதோட நிறுத்திக்கிட்டு நாளைக்கு மீதத்த சொல்லவா?"

"வேண்டாம் மேஜர். இப்பவே சொல்லுங்க."

"கத கேக்குறதுல உங்கள விட்டா யார் இருக்காங்க... சரி, மீதிக் கதயக்கேளுங்க."

"கிளைவுக்கு மீண்டும், ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. தஞ்சாவூரிலிருந்த மராத்திய அரசன் எகோஜியை அவன் பங்காளி ஒருவன் தஞ்சாவூரைவிட்டு வெளியேற்றிவிட்டான். கடலூர் கோட்டைக்கு அகதிபோல வந்த எகோஜி மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸை சந்தித்து, "எனக்கு உதவி செய்யுங்கள், என் பங்காளி என்னை

வெளியேற்றிவிட்டான். எனக்கு நீங்க உதவுவதாகத் தெரிந்தாலே என் பின்னால் என் நண்பர்கள் அணிவகுப்பார்கள். எனக்கு நீங்கள் உதவிசெய்து என்னை மீண்டும் பதவியில் அமர்த்தினால் உங்களுக்குக் கொள்ளிடம் அருகில் உள்ள தேவ கோட்டையை இனாமாகத் தருகிறேன்" என்று ஆசை காட்டினான். எகோஜியின் பேச்சை நம்பி, கேப்டன் கோல் தலைமையில் ஒரு ஆங்கிலேயப் படை கிளம்பியது. அந்தப் படையில் கிளைவ்வை லெப்டினண்ட்டாகப் போட்டனர்.

ஆனா, எகோஜி சொன்னதுபோல அவன் நண்பர்கள் யாரும் அவனுடைய உதவிக்கு வரவில்லை. கொள்ளிடம் ஆற்றைக் கடக்கையில் கேப்டன் கோலையும், லெப்டினென்ட் கிளைவ்வையும் சுற்றி வளைத்து மராத்தியப் படை தாக்கியதில், உயிர் தப்பி இருவரும் கடலூருக்கு ஓடி வந்தனர். இதைப் பெரும் கேவலமாகக் கருதிய மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸ் தானே படையை நடத்த முடிவு செய்தான். நானூறு ஆங்கிலேயர்களும் ஆயிரத்து ஐநூறு உள்ளூர் வீரர்களுமாகச் சென்ற படை தேவகோட்டையைக் கைப்பற்றியது. சமாதானம் பேச வந்த மராத்திய அரசரை, எகோஜிக்கு மாதம் நாலாயிரம் ரூபாய் பென்சன் தர ஸ்டிரின்ஜர் லாரன்ஸ் சம்மதிக்க வைத்தான்.. "எனக்கு மாத ஓய்வூதியம் வேண்டாம். தஞ்சாவூர் அரசாட்சிதான் வேண்டும்" என்று எகோஜி கத்தியதை மேஜர் லாரன்ஸும், லெப்டினென்ட் கிளைவ்வும் கண்டுகொள்ளவில்லை."

"இப்போது தஞ்சாவூரின் நிலைமை தெரியுமா? மேஜர் "

"ஏன்டா தெரியாது? மராத்திய அரசர் அமர்சிங் தஞ்சாவூரிலிருந்து வெளியேற்றப்பட்டான். அவனுக்கு அடுத்து அரசனான அவனது நெருங்கிய உறவினன் சரபோஜி தஞ்சாவூரிலிருந்து வெளியேற்றப் பட்டான். பின்பு அது ஆங்கிலேயர்களின் நேரடி ஆளுகைக்கு உட்பட்ட மாவட்டமாக மாற்றப்பட்டுவிட்டது."

"மேஜர், கிளைவ்வை விட்டுவிட்டீங்களே. அதச் சொல்லுங்க."

"அப்புறம்தான் கிளைவ்வின் நல்ல நேரம் துவங்கியது. நம்ம ஆற்காட்டு நவாப் அவனுக்கு நல்ல வழி காட்டினார். ஆங்கிலேயர் களின் படை திருச்சிக்கு அருகில் முகாமிட்டிருந்தது. சந்தா சாகிப்பிற்கும், ஆற்காடு நவாப் முகம்மது அலிக்கும் வாரிசுப் போர் நடந்தது. ஆங்கிலேயப் படையை எதிர்பார்த்து முகம்மது அலி திருச்சிக் கோட்டையை முற்றுகையிட்டுக் காத்திருந்தான். சந்தா சாகிப் திருச்சிக்

கோட்டைக்குள் இருந்துகொண்டு மகன் ராஜா சாகிப்பைத் தனது தலைநகர் ஆற்காட்டிற்கு படையுடன் அனுப்பிவைத்தான். கிளைவ்விற்கு ஒரு யோசனை வந்தது. ஆற்காடு நவாப் சந்தா சாகிப் திருச்சியில் முற்றுகையிடப்பட்ட கோட்டைக்குள் இருக்கிறான். அவன் மகன் ஆற்காடு நோக்கி வந்து கொண்டிருக்கிறான். இந்த நேரம் ஆற்காட்டை தாக்கிக் கைப்பற்றலாம் என்று யோசித்தான். மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸிடம் அனுமதி கேட்டான். மேஜர் லாரன்ஸிற்கு கிளைவ் சொல்லும் யோசனையில் பெரிய நம்பிக்கை இல்லை. இருப்பினும் தன் அன்புக்குரியவனுக்கு ஒரு வாய்ப்பு அளிப்போம் என்று நினைத்து முன்னூறு இந்திய சிப்பாய்கள், இருநூறு ஆங்கிலேயர்கள் அடங்கிய படையை கிளைவ்வுடன் ஆற்காட்டிற்கு அனுப்பி வைத்தான். கிளைவ்வின் படையில் லெப்டினென்ட் நிலையில் ஆறு ஆங்கிலேய ராணுவ அதிகாரிகள் வந்தனர். அதில் நால்வருக்கு அதுதான் முதல் போர்.

மெட்ராஸிலிருந்து கிளம்பிய கிளைவ்வின் படை மூன்று நாள் கழித்து, காஞ்சிபுரம் வந்தது. அங்கிருந்து ஆற்காடு கோட்டையின் நிலைமைப் பற்றி காஞ்சிபுரம் தெருக்களில் கிளைவ் விசாரித்தான். ஆற்காடு கோட்டையை சந்தா சாகிப்பின் வீரர்கள் ஆயிரத்து நூறு பேர் காவல் காப்பதாகத் தெரிந்து கொண்டான். உடனடியாக மெட்ராஸ்க்கு இரண்டு பதினெட்டு பவுண்டர் டாங்கிகள் அனுப்பும்படி கடிதம் எழுதி அனுப்பிவிட்டு ஆற்காட்டை நோக்கி பயணப்பட்டான். ஆற்காட்டுக்கு பத்து மைலுக்கு முன்னால் முகாமிட்டான். அன்று பெரும் மழை. இதைக் கெட்ட சகுணமாகக் கருதிய சந்தா சாகிப்பின் படை ஆற்காடு கோட்டையை விட்டுக் கிளம்பி, திமிரிக் கோட்டைக்குத் தப்பியோடியது. யுத்தம் செய்யாமலேயே கிளைவ் ஆற்காட்டை கைப்பற்றினான். கோட்டைக்குள் இருந்த வெடிமருந்து களையும் எட்டு சிறு பீரங்கிகளையும் கிளைவ் கைப்பற்றினான். கிளைவ்விடம் ஐம்பதினாயிரம் பணத்தைக் கொடுத்து தங்களைப் பாதுகாக்கும்படி ஆற்காடு வியாபாரிகள் கேட்டுக்கொண்டனர். கிளைவ் அதை “வேண்டாம்” என மறுத்து விட்டான்.

கிளைவ் பற்றிய நல்லெண்ணம் ஆற்காடு நகரத்தில் பரவியது. சிறுமீனை போட்டுத் திமிங்கலத்தைப் பிடிப்பவன் கிளைவ் என்று அப்போது யாருக்கும் தெரியாது. ஆறு நாட்கள் ஆற்காடு கோட்டையில் தங்கியிருந்துவிட்டு ஏழாவது நாள் திமிரிக்குச் சென்று சந்தா சாகிப்பின்

படைகளை கிளைவ் விரட்ட முயன்றான். ஆனால், முடியவில்லை. திரும்பிவந்து மீண்டும் ஆற்காடு கோட்டையை ஆக்கிரமித்தான்.

திருச்சியிலிருந்து சந்தா சாகிப்பின் மகன் ராஜா சாகிப் தலைமையில் வந்த படையில் பிரெஞ்சுக்காரர்களும் இருந்தனர். வேலூர் முர்தாசா அலி தனது சகலையின் மகன் ராஜா சாகிப்புடன் சேர்ந்து கொண்டு ஆற்காடு நோக்கி வந்தான். ஆற்காடு கோட்டைக்குள் இருந்த மூவாயிரம் பொதுமக்களோடு சேர்ந்து கிளைவ்வின் ஆட்களும் பதுங்கிக்கொண்டனர். கிளைவ் மெட்ராஸ்க்கு தனது இக்கட்டான நிலை குறித்து தகவல் அனுப்பினான். லெப்டினெண்ட் இன்ஸ் தலைமையில் ஒரு படை மெட்ராஸில் இருந்து கிளம்பியது. செய்யாறு, திருவோத்தூர் அருகில் அவர்கள் வந்தபோது ராஜா சாகிப்பின் படைகள் அவர்களைத் தாக்கியதில் லெப்டினென்ட் இன்ஸ் பூந்தமல்லிக்குத் திரும்ப ஓட வேண்டிதாயிற்று."

"ராஜா சாகிப் ஒரு கடிதத்துடன் கிளைவ்விடம் ஆட்களை அனுப்பினான். கேப்டன் கிளைவ்விற்கு நிறைய பணம் தருவதாகவும், அதை வாங்கிக் கொண்டு ஆற்காடு கோட்டையை தன்னிடம் ஒப்படைக்கவும், இல்லையென்றால் உயிரோடு போக முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் எச்சரிக்கை இடப்பட்டிருந்தது. கிளைவ் அதை நிராகரித்தான். ஆற்காடு கோட்டைக்குள் உணவு இருப்பு குறைந்தது. அதனால் கோட்டைக்குள் இருந்த பொதுமக்களை ஒவ்வொருவராக கிளைவ் வெளியே அனுப்பினான். ஊருக்குள் திரும்பி வந்த அவர்களை கோட்டையை முற்றுகையிட்டிருந்த ராஜா சாகிப் ஒன்றும் செய்யவில்லை. அவர்களை நகருக்குள் அனுமதித்தான். ஆனால் தினமும் கோட்டையை பீரங்கிகள் வைத்துத் தாக்கினான். ஆற்காட்டிற்குள் இருந்த நவாப் முகம்மது அலியின் மாளிகையைக் கைப்பற்றிய ராஜா சாகிப் அங்கிருந்து கொண்டு கிளைவ் படையினருக்கு தினமும் நெருக்கடி தர ஆரம்பித்தான்.

ஒருநாள், ராஜா சாகிப்பின் ஆட்கள் இருந்த வீட்டிற்குள் இடுப்பில் கயிறைக் கட்டிக்கொண்டு கிளைவ்வின் கொடி வீரன் கிளாஸ் என்பவன் குதித்தான். ஆனால் அவன் எடுத்துச் சென்ற வெடி மருந்து சரியாக வெடிக்கவில்லை. கிளாஸிற்குப் பெரும் காயம் ஏற்பட்டது. கிளைவ், ஆற்காட்டிற்குள் நுழையும்போது உடனிருந்த ஆறு அதிகாரிகளில் ஒருவன் லெப்டினென்ட் ட்ரன்விச். அவன் கிளைவ் மீது மிகுந்த மரியாதை உடையவன். கிளைவ்வைத் தாக்க வந்த குண்டை அவன் தாங்கி வீர மரணம் அடைந்தான். லெப்டினென்ட் ரேவல், பெரும்

காயத்துடன் கோட்டைக்குள் தூக்கி வரப்பட்டான். தன்னுடன் இருந்த வீரர்கள் ஒவ்வொருவராக இறந்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து, மெட்ராஸிற்கு கிளைவ்வின் கெஞ்சல் கடிதம் சென்றது. தனக்கு உதவி கேட்டு மன்றாடி எழுதியிருந்தான். கிளைவின் மன்றாடலைக் கேட்டு, கம்பெனி இறங்கி வந்தது. ஆற்காட்டை நோக்கி கேப்டன் கிரிக் பாட்டிரிக் தலைமையில் வந்த ஆங்கிலப் படை ஆற்காடு படையை நெருங்கியது. ஆங்கிலேயருக்கு ஆதரவாளரான தஞ்சாவூர் மராத்திய தளபதி முராரிராவ் பெரும் படையுடன் கிளம்பி வந்து ஆற்காட்டிலிருந்து முப்பதாவது மைலில் முகாமிட்டிருந்தான். அவனுக்கும் கிளைவ் கடிதம் எழுதி உதவி கேட்டான். கிளைவ்வின் கடிதத்திற்கு, "உங்களது வீரத்தைப் பாராட்டுகிறேன்" என்று பொத்தாம்பொதுவாக ஒரு பதிலைக் கொடுத்துவிட்டு முராரி ராவ் அமைதி காத்தான். மைசூர் அரசரின் கட்டுப்பாட்டிலிருந்த முராரி ராவிற்கு அவர் செய்தி அனுப்பி முகம்மது அலிக்கும் கிளைவ்விற்கும் உடனே உதவிடுக என்ற உத்தர விட்டும் வேண்டுமென்றே முராரி ராவ் உதவி ஏதும் செய்யாமல் காலம் தாழ்த்தினான்.

வேலூரிலிருந்து ராஜா சாகிப்பிற்கு ஆதரவாக வந்த முர்தாசா அலிக்குக் கிளைவ் ரகசியக் கடிதம் ஒன்றை எழுதி அவன் மனதைக் கரைத்தான். முர்தாசா தன் படைகளை ஆற்காட்டிலிருந்து விலக்கிக்கொண்டான். சந்தாசாகிப்பின் மகன் ராஜா சாகிப் தனித்து விடப் பட்டான். ஆனால் அன்று மொகரம் நாள். முஸ்லீம்களின் நோன்புக் காலம். போரில் ஈடுபடமாட்டார்கள். எனவே, அந்த நாளை ராஜா சாகிப் தேர்ந்தெடுத்தான். "இன்று ஆற்காடு கோட்டையைத் தாக்குவோம். வென்றால் ஆற்காடு கோட்டை, இறந்தால் சொர்க்கம்" என்று ஆர்ப்பரித்தான். அதிகாலை இரண்டு மணிவரை பெரும் தாக்குதல் தொடர்ந்தது. இருந்தாலும் கோட்டை மதில்களை உடைக்க முடியவில்லை.

அடுத்த நாள் கிளைவ் ஒரு தவறான முடிவெடுத்தான். தங்கள் பலம் அதிகமாகயிருந்து, முற்றுகையிடும் எதிரிப் படை பலமில்லாமல் இருக்கும்போது கோட்டையை விட்டு வெளியே வந்து தாக்குவது வழக்கம். இதை நாம் பலமுறை செய்திருக்கிறோம். அன்று கோட்டைக்குள் கிளைவ்விற்கு போதுமான பலம் இல்லை. அவனைவிட பெரும்படை கோட்டைக்கு வெளியே உள்ள ராஜா சாகிப்பிடம் இருக்கிறது. இருந்தாலும் அசட்டுத் துணிச்சலில் கோட்டையைவிட்டு வெளியே வந்து கிளைவ் தாக்கினான். பெரும் இழப்புகளுக்குப்பின்

கிளைவ் கோட்டைக்குள் திரும்பி ஓடிவர வேண்டியதாயிற்று. ஆற்காடு கோட்டை முற்றுகையிடப்பட்ட ஐம்பதாவது நாள், முராரி ராவ் தலைமையில் மராத்திய வீரர்கள் ஆற்காடு நகரத்தில் பிரவேசித்தனர். ராஜா சாகிப் ஆற்காட்டைவிட்டு தப்பி ஓடினான். அவன் மாளிகையிலிருந்த ஒரு லட்சம் பணத்தை மராத்தியப் படை கைப்பற்றியது. முகம்மது அலி ஆற்காடு நவாப்பாக பிரகடனப்படுத்தப்பட்டான்.

பல தோல்விகள், தாக்குதல்களைத் தாங்கி, கிளைவ் ஆற்காடு வீரனான கதையிதுதான். அவன் பெரிய வீரனாக சண்டை போடவில்லை. படைத்தளபதியாக வெற்றிகரமாக இயங்கவில்லை. ஆனால், ஏதோ ஒரு விடாப்பிடியுடன் இந்த முற்றுகையைத் தாக்குப்பிடித்ததுதான் அவன் வாழ்வின் திருப்புமுனை. ஆற்காடு போருக்குப்பின் கேப்டன் கிளைவ் மெட்ராஸ் கோட்டைக்கு வரவழைக்கப்பட்டான். மேஜர் லாரன்ஸின் தலைமையில் திருச்சி செல்ல கிளைவ் பணிக்கப்பட்டான். கிளைவ் பற்றி மேஜர் லாரன்ஸ் சொல்லும்போது “என் தலைமையில் மராத்திய அரசனின் தேவகோட்டையைக் கைப்பற்றும்போது கிளைவ்வின் திறமையைப் பார்த்தேன். தீர்மானமாக சிந்திக்கக் கூடியவன். எந்தச் சூழ்நிலையிலும் பதட்டம் என்பதே கிடையாது. சந்தர்ப்பத்திற்கேற்றபடி நடந்து கொள்பவன். ராணுவத்தில் பணியாற்றிய அனுபவம் இல்லை யென்றாலும் கை தேர்ந்த தளபதி போல படை நடத்தக்கூடியவன் என்று புகழ்ந்துள்ளான்.”

திருச்சிக்குச் சென்ற மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸும் கேப்டன் கிளைவ்வும் ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் இருந்த சந்தா சாகிப்பை முற்றுகையிட்டனர். தஞ்சாவூர் மராத்திய தளபதி மானோஜி, திருச்சிக்கு வந்தான். சந்தா சாகிப்பின் தரப்பும், ஆங்கிலேயர்களின் தரப்பும் மீண்டும் மானோஜி உதவியை நாடின.

அடுத்த நாள் கிளைவ் சமயபுரத்தில் முகாமிட்டிருந்தான். பிரெஞ்சுப் படைகள் முதலில் சந்தா சாகிப்பிற்கு ஆதரவாக களம் இறங்கின. அப்போது கிளைவ் சமயபுரத்தில் தங்கியிருந்தான். கிளைவ்வின் முகாமில் நான்கு, ஐந்து இளம் பெண்கள் இருந்தனர். ஏன்டா சிரிக்கிறீங்க? வெள்ளக்காரப் பயலுக போருக்குப் போகையில எதை எடுத்துட்டுப் போக மறந்தாலும் பொம்பளகள கூட்டிட்டுப் போக மறக்கமாட்டானுக. ஆங்கிலேய வீரர்கள் சிலர் மனைவிகளையும், பலர் வைப்பாட்டிகளையும் அழைத்து வந்து சமயபுரத்தில் தங்கியிருந்தனர்.

இவர்களுக்கு உதவி செய்ய உடல் நோவு தீர, கை கால் பிடித்துவிட பல ஆண் சேவகர்களும், பிக்காளிகளும் முகாமில் தளபதிகளுடன் இருந்தனர்.

முகாமிற்கு எதிரில் எப்போது சண்டை நடந்தாலும் வருவது போல புதிதாக ஒரு சந்தை முளைத்திருந்தது. அங்கு தானியங்கள், தின்பண்டங்கள், போர்க்கருவிகள் எல்லாம் விற்பனைக்காக வைத்திருந்தனர். சந்தைக்குள் ஆறு பிரெஞ்சு வீரர்கள் நுழைந்தனர். முகத்தை முழுவதுமாக துணியில் மறைத்திருந்தனர். "வெயில் அதிகமாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே கடைக்காரர்கள் வெயிலுக்காகப் போட்டிருந்த சிறு குடைகளின்கீழ் உட்கார்ந்து கொண்டிருந்தனர். சந்தையிலிருந்தவர்கள் அவர்களை ஆங்கிலேயச் சிப்பாய்கள் என நினைத்துக்கொண்டனர்.அவர்கள் குடித்திருந்ததுபோலத் தெரிந்ததால் அவர்களிடம் அதிகமாகவும் பேச்சுக் கொடுக்கவில்லை. அன்று மாலை முழுவதும் குடைக்குக் கீழேயேப் படுத்துக்கிடந்தனர்.

இரவு அந்த ஆறு பிரெஞ்சுக்காரர்களும் காவலர்களிடம் ஆங்கிலேயர்கள் பேசுவதுபோல் பேசி கிளைவ்வைப் பார்க்க அனுமதி பெற்றனர். கிளைவ்வின் முகாமிற்குள் நுழைந்தனர். கிளைவ்வின் கூடாரத்தை நெருங்கும்போது கிளைவ்வின் பாது காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அப்போது நடந்த கை கலப்பில் பெரும் சத்தம் உண்டானது. தூக்கத்திலிருந்து விழித்த கிளைவ் தப்பித்தால் போதும் என்று சமயபுரம் கோயிலுக்குள் ஓடினான். அவனை விரட்டிக்கொண்டு மூன்று பிரெஞ்சு வீரர்கள் சென்றனர். அவர்கள் கிளைவ்வைச் சுற்றி வளைத்தனர். அப்பொழுதும் கிளைவ் அவர்களிடம் நிதானமாகப் பேசினான். "என்னைத் தாக்கிவிட்டு நீங்கள் உயிரோடு திரும்ப முடியாது. சுற்றியும் எனது ஆட்கள். மரியாதையாக சரணடையுங்கள்" என்றான். மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் போல் மூவரும் ஆயுதங்களை கிளைவ்விடம் ஒப்படைத்தனர். அவர்களை அழைத்துக்கொண்டு கிளைவ் கோயிலைவிட்டு வெளியே வரும் போது மற்ற மூன்று பிரெஞ்சு சிப்பாய்களும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

மறுநாள் கிளைவ்விற்கு சாதகமாகச் சூழ்நிலைகள் மாறின. மைசூர் அரசனின் வேண்டுகோளை ஏற்று தஞ்சாவூர் மராத்தியத் தளபதி மானோஜி, பிச்சாண்டவர் கோயிலில் முகாமிட்டான். மானோஜி சந்தா சாகிப்பிற்குக் கடிதம் அனுப்பி சந்திக்க வேண்டும் எனக் கேட்டான். மானோஜியைச் சந்திக்க சந்தா சாகிப் உடனே சம்மதித்தான். சந்தா சாகிப்

தன்னை உயிரோடுவிட்டால் மராத்தியத் தளபதிக்குப் பெரும் பணம் தருவதாக வாக்களித்தான்.

“சந்தா சாகிப் அவர்களே, உங்களைத் தேடிக்கொண்டு ஒருபுறம் ஆங்கிலேயர்கள், அவர்களோடு சேர்ந்து கொண்டு ஆற்காடு நவாப் முகம்மது அலி, இன்னொரு புறம் என்னுடைய தஞ்சாவூர் மராத்திய மன்னன், மற்றொரு புறம் மைசூர் அரசர் என்று நாலாபுறமும் உங்களைக் குறிவைக்கிறார்கள். நான் உங்களை இப்போதே கைது செய்ய முடியும். அப்படி கைது செய்து அழைத்துச் சென்றால் இந்த நால்வரில் யாராவது ஒருவரிடம்தான் நான் உங்களை ஒப்படைக்க வேண்டி வரும். யாரிடம் உங்களை ஒப்படைத்தாலும் மற்ற மூவரும் எனக்கு எதிரியாகிவிடுவர். இதுபோன்ற சமயங்களில் நீங்கள் நடந்து கொள்ளும் முறைதான் சரியானது என்று நினைக்கிறேன். இந்த விசயத்தில் உங்களை மானசீகக் குருவாக ஏற்கிறேன். திருச்சி நாயக்க அரசி மீனாட்சிக்கும், மதுரை நாயக்க மன்னன் பங்காருவுக்கும் நீங்கள் செய்ததை இப்போது நான் உங்களுக்குச் செய்கிறேன்” என்று சொல்லி பிச்சாண்டவர் கோயில் கோட்டையில் வைத்து சந்தா சாகிப்பை கொலை செய்தான். சந்தா சாகிப்பின் வெட்டப்பட்ட தலையை ஆற்காடு நவாப் முகம்மது அலிக்கு அனுப்பி வைத்தான். முகம்மது அலி அதைத் தனது கூடாரத்தின் முன்பு தொங்கவிட்டான். சந்தா சாகிப்பின் உதவிக்கு வந்த பிரெஞ்சுப் படைகள் திருச்சியிலிருந்து ஓட்டம் பிடித்தன.

கேப்டன் கிளைவ்வும், கொடி வீரன் வின்சென்ட் ஸ்மித்தும் பிரெஞ்சுப் படைகளை கோவளத்திற்கு அருகில் ஒளிந்திருந்து இரவு நேரத்தில் தாக்கினர். அங்கிருந்து தப்பி ஓடியவர்களை செங்கல்பட்டு வரை விரட்டிச்சென்று கொன்றனர்.

இருபத்தி ஏழு வயது கிளைவ் ராணுவத்தில் சேர்ந்த நான்கு வருடங்களில் பெரும் தளபதி என பெயரெடுத்தான். அடுத்ததாக பம்பாயில் நடந்தப் போருக்குக் கிளைவ் அனுப்பப்பட்டான். பின் கடலூர் கோட்டையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதோடு கர்னல் பதவி உயர்வும் அளிக்கப்பட்டன. கிளைவ்வின் வழிகாட்டி யான மேஜர் ஸ்டிரின்ஜர் லாரன்ஸ் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றான்.

உடல்நலமில்லாத லாரன்ஸ் தனது சிஷ்யன் கிளைவ்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான். இந்தச் சமயத்தில் கல்கத்தாவிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் சொத்துக்களை வங்காள நவாப் சிராஜ் உத் தவ்லா பறிமுதல் செய்தான். அதே தேதியில் கிளைவ் கடலூர்

கோட்டையின் பொறுப்பாளராகப் பதவியேற்றிருந்தான். வங்காளத்தில் பிரெஞ்சுப் படையினரும், ஆங்கிலேயர்களும் கோட்டைகள் கட்டிக்கொண்டு அடிக்கடி மோதிக் கொண்டிருந்தனர்.இதனால் பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

எரிச்சல் அடைந்த சிராஜ் உத் தவ்லா ஆங்கிலேயர்களையும், பிரெஞ்சுக் கம்பெனியையும் வங்காளத்திலிருந்த கோட்டைகளை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டான். வங்காள நவாப்பின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து பிரெஞ்சுக்காரர்கள் உடனடியாக கல்கத்தாவைவிட்டு வெளியேறினர். ஆனால் ஆங்கிலேயர்கள் கோட்டைகளைவிட்டு வெளியேற மறுத்துவிட்டனர்.

இதனால் கோபமடைந்த சிராஜ் உத் தவ்லா வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர்களின் சொத்துக்களை கைப்பற்றியிருந்தான். அந்தச் செய்தி மெட்ராஸ்க்கு வந்து சேர நாற்பத்தாறு நாட்கள் ஆனது. செய்தி கிடைத்தபோது ஜெனரல் ஸ்டிரின்ஜர் லாரன்ஸ் உடல்நிலை மோசமாகயிருந்ததால் அவரைக் கல்கத்தாவிற்கு அனுப்ப முடியவில்லை. அவருக்குப் பதிலாக கிளைவ் கல்கத்தா செல்ல முடிவாயிற்று. கிளைவ்வுடன் இங்கிலாந்து அரசர்களின் படைப் பிரிவின் தளபதி கர்னல் அட்லெர் கிரானும் செல்ல வேண்டும் என்று கம்பெனி ஆணையிட்டது.

“நான் இங்கிலாந்து அரசரின் தளபதி. எனக்கு உத்தரவிட கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரமில்லை. மேலும் கர்னல் கிளைவ் என்னைவிட தகுதி குறைந்தவர். அவர் தலைமையை நான் ஏற்க முடியாது” என்று கர்னல் அட்லெர் கல்கத்தா செல்ல மறுத்துவிட்டான். அவனுடைய மறுப்பு, கிளைவ்விற்கு அவமானமாகிவிட்டது.

கிளைவ் கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களுக்கு, “கல்கத்தா வில் கம்பெனிக்கு ஏற்பட்ட அவமானங்களைத் துடைத்தெடுக்க என் வீரர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக எனது நன்றி. ஒவ்வொரு ஆங்கிலேயனும் வருந்தும்விதமாக கல்கத்தாவில் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. மாண்புமிகு இங்கிலாந்து அரசருக்கும், கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களுக்கும் நான் ஒரு வாக்குறுதி தருகிறேன். நிரந்தர அமைதியான கல்கத்தா விரைவில் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்படும்” என்று நம்பிக்கையுடன் கடிதம் எழுதினான்.

நவாப் சிராஜ் உத் தவ்லாவை எதிர்கொண்ட கிளைவ்வின் படை, நவாப்பிற்கு எதிராக நடக்க அவனது தளபதி மீர் ஜாபரிடமே பேரம்

பேசியது. மீர் ஜாபரும் விலை போனான். கர்னல் கிளைவ்வின் தலைமையில் நடந்த போரில் சிராஜ் உத் தவ்லா தோற்கடிக்கப்பட்டான். காட்டிக் கொடுத்த மீர் ஜாபரை புதிய நவாப்பாக கர்னல் கிளைவ் நியமித்தான். வெற்றிக் களிப்பில், கிளைவ்வின் படை ஹூக்ளி நகரைச் சூறையாடியது. கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பன்னிரண்டு லட்சமும், கிழக்கந்தியக் கம்பெனியின் தரைப்படை, கப்பல் படைக்கு நாற்பது லட்சமும் புதிய நவாப் மீர் ஜாபர் அன்பளிப்பாகக் கொடுத்தான். வருடத்திற்கே மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிய கிளைவ்விற்கு ஒன்றரை லட்சம் இனாமாகக் கிடைத்தது.

தந்திரத்தாலும் அதிர்ஷ்டத்தாலும் கிளைவ் போகுமிடமெல்லாம் வெற்றிவாகைச் சூடினான். கல்கத்தாவில் இனாமாகக் கிடைத்தப் பணத்தில், பதினாறு ஆயிரம் ரூபாய்க்கு, வைரம் வாங்கினான். மீதிப்பணத்தை கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தெரியாமல் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தான். லண்டனிலிருந்த தனது சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும், தலா இரண்டாயிரம் ரூபாய் அனுப்பினான். அவனது தகப்பனுக்கும் பணம் போய்ச் சேர்ந்தது. கிழவனுக்குப் பெருமை பிடிபடவில்லை. “உன்னை மகனாகப் பெற்றது என் பெரும் பேறு. நீ கொடுத்தத் தொகை என் மீதி ஆயுள் வரை நிம்மதியாக வாழப் போதுமானது” என்று கிளைவ்விற்கு அவன் தகப்பன் கடிதம் எழுதினான்.

பெரும் வெற்றிகளையும் செல்வத்தையும் சம்பாதித்த கிளைவ், கல்கத்தாவிலிருந்து லண்டனுக்குக் கிளம்பினான். இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள் பலர் உயிர் உடலை விட்டுப்போவதுபோல நினைத்து பெரிதும் வருந்தினர். லண்டனில் விடுபட்டுப் போன உறவினர்கள், நண்பர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் அனைவருக்கும் பொருளாதார உதவி செய்தான். பெரும் பொருட் செலவில் தேர்தலில் நின்று லண்டனில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனான். கொண்டு சென்ற பணம் கரைந்தது. இங்கிலாந்து ராணி கிளைவ்வை அழைத்து வாழ்த்தினார். கிளைவ்விற்கு குழந்தை பிறந்தபோது அந்தக் குழந்தைக்கு தெய்வத்தாயாக இருக்க பிரிட்டிஷ் ராணி ஒப்புக்கொண்டாள்.

கிளைவ்விடம் இருந்த அதிகப் பணப்புழக்கம் லண்டனில் இருந்த பலரின் கண்களை உறுத்தியிருக்கிறது. அதனால் கிளைவ் விற்கு லண்டனில் நெருக்கடிகள் அதிகமாயின. சுல்லிவன் என்ற கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர் கிளைவ்விற்கு எதிராக கிளம்பினான்.

வங்காளத்தின் புதிய நவாப் மீர் ஜாபர் கொடுத்த ஜாகிர்தார் பதவிக்கான வருமானம், அவருக்குத் தரப்படக்கூடாது என்று லண்டன் கனவான்களிடம் பிரச்சாரம் செய்தான். கம்பெனியின் பணியில் இருந்துகொண்டு இந்திய மன்னரிடமிருந்து இவ்வளவு பெரிய சலுகை எவ்வாறு பெற முடியும்? என்று வாதிட்டான். கிளைவ் வகித்த ஜாகிர்தார் என்ற பதவியை கிழக்கிந்தியக் கம்பெனி தற்காலிகமாகத் தடை செய்தது. இந்தச் சமயம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கான வருடாந்திரத் தேர்தல் வந்தது. ஒவ்வொரு வருடமும் இருபத்து மூன்று டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் அவர்களில் ஒருவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் போர்ட் ஆப் டைரக்டர் களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஐநூறு டாலர் முதலீடு செய்பவர்களுக்கும், மூவாயிரம் டாலர் முதலீடு செய்பவர்களுக்கும் தேர்தலில் ஒரு ஓட்டுதான் இருக்கிறது என்பதை ராபர்ட் கிளைவ்தான் இந்த சூட்சுமத்தை முதன்முதலில் புரிந்துகொண்டவன். இந்தியாவில் சம்பாதித்ததைக் கொண்டு ரகசியமாக ஐநூறு ஐநூறு டாலர்களாகச் செலுத்தி கம்பெனியின் பங்குகளைப் பலர் பெயரில் வாங்கினான். தனக்குத் தெரிந்தவர்கள் யார் யார் ஐநூறு டாலருக்கு மேல் முதலீடு செய்திருந்தார்களோ அதையெல்லாம் ஐநூறு, ஐநூறு ஆகப் பிரித்து அவர்கள் குடும்ப உறுப்பினர்களையே, புது உறுப்பினர்களாகச் சேர்த்தான். அதனால் ஒரு உறுப்பினர் இருந்த இடத்தில் மூன்று நான்கு உறுப்பினர் இருந்தனர். கிளைவ்வின் ஆதரவாளர்கள் இப்படித்தான் கூடினர். இந்தக் கூட்டத்தை வைத்து தனக்கு வேண்டியவர்களை, போர்ட் ஆப் டைரக்டர்களாக மாற்ற முடிவு செய்தான். இந்த போர்டுதான் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் படைத்தது. கிளைவ்விற்கு எதிரான டைரக்டர் சுல்லிவன் தேர்தலில் நின்றான். அவனை எதிர்த்து ரோஸ் என்பவரை கிளைவ் நிறுத்தினான்.

“கிளைவ்வின் இறுதிக் காலங்கள் மேஜர்?”

“டேய், அதுக்குள்ளே ஏன்டா அவன் இறுதிக்காலங்களைப் பத்திக் கேக்கிற? வகுறு பசிக்குதா? இன்னும் சாப்பாடு தயாராகல.”

“சரி மேஜர், கொஞ்சம் அவசரப்பட்டுக் கேட்டுட்டேன். சொல்லுங்க.”

“லண்டனிலுள்ள லேடன் ஹால் சாலையில் இருந்த கிழக் கந்தியக் கம்பெனியின் தலைமையகத்தில் நடந்த தேர்தலில் கிளைவ் நிறுத்திய

ரோஸ், சுல்லிவனைத் தோற்கடித்தான். ரோஸ் தேர்தலில் வென்றவுடன் முதல் வேலையாக கிளைவ்வைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றான். பத்து ஆண்டுகளுக்கோ அல்லது கிளைவ் இறந்துவிடும் வரையுமோ, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை கிளைவ்வை வங்காள ஜாகிர்தார் பதவியைத் தொடர கம்பெனி அனுமதித்தது. அடுத்ததாக வங்காளத்தின் கவர்னராக கிளைவ்வை கம்பெனி போர்ட் நியமித்தது.

"அடேங்கப்பா, பெரிய ராஜதந்திரியா இருப்பான்போல இருக்கே?"

"காலம்தான் அவனுக்கு இந்த வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருந்தது. கிளைவ் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டே இருந்தான்."

"என்ன ஜெயிச்சு என்ன ஆச்சு மேஜர்? அவனோட வெற்றி யெல்லாம் நம்ம நாட்டை படுகுழியில தள்ளிடுச்சு. அவனோட தோல்வியெல்லாம் அவனையே படுகுழியில தள்ளிடுச்சு... அதானே?"

"எப்படிடா ஒரு வார்த்தையில கிளைவ்வோட வாழ்க்கையை முடிச்சுட்ட? பரவாயில்லையே."

"அவன்தான் அவங்கநாட்டு ஆளுங்களால பெருசா குற்றம் சாட்டப்பட்டு கைதி மாதிரி கடைசி காலத்துல இருந்தான்னு சொல்லியிருக்கிங்களே? அதைப் பொறுக்க முடியாமத்தானே அவன் தற்கொலைப் பண்ணிக்கிட்டான்?"

"ஆமாம்டா, கிளைவ்வோட வாழ்க்கை அப்படித்தான் துர் பாக்கியமா முடிஞ்சுபோச்சு. ஆனா, இந்த நாட்டுக்கு பெரும் வினையா வந்தவன் அவன்தான்... இப்ப மட்டும் அந்த வினை தீர்ந்ததா என்ன? அவன் மகன்தானே கவர்னரா வந்திருக்கான்? விட்ட குறை தொட்டகுறை மாதிரி?"

"அப்ப மாதிரி நாம ஏமாந்துடக்கூடாது. நம்ம படை சின்னதா இருந்தாலும், பெருசா எதிர்ப்பக் காட்டணும்."

"சரியா சொன்னடா. கிளைவ்வோட கதையை நாம் பேசுனதே அதுக்குத்தான்."

“இங்கிலாந்து என்பது தனி இனம் இல்ல. வெல்ஷ், ஸ்காட் லாந்து, அயர்லாந்து ஆகியன ஒன்று சேர்ந்ததுதான் இங்கிலாந்து என்று நேற்று சொன்னீங்களே மேஜர். கொஞ்சம் விரிவா சொல்ல முடியுமா?”

“அடுத்தமுறை அதைச் சொல்லுறேன்டா. வகுறு பசிக்குது. கடைசிக் கேள்வி கேளு ஒருத்தன்.”

“மேஜர், கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கம் வியாபாரம் மட்டும்தானா?அவர்கள் சொல்லிக் கொள்வதுபோல கிறிஸ்துவ மதம் பரப்புவதில் ஆர்வமே இல்லையா?”

“போர்ச்சுக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா கோழிக்கோட்டில் கரை ஏறியபோது “கிறிஸ்துவர்களையும், மசாலாப் பொருட்களையும் தேடி வந்தேன்” என்றானாம். அவன மாதிரிதான் வெள்ளைக்காரன்கள் அத்தனை பேரும். என்ன, கிழக்கிந்தியக் கம்பெனி எதையும் வெளிய தெரியாமச் செய்யும். அவ்வளவுதான்.”

“சரிடா, வாங்கப் போகலாம். சாப்பாடு தயாராயிருச்சுன்னு நினைக்கிறேன். வாட மூக்கைத் துளைக்குது. மதியம் ஓய்வு. பொழுது சாய சிலம்புப் பயற்சி இருக்கு” என்றார் மேஜர் ராபின் கல்யாணி.

•

5

பாளையங்கோட்டை ஜெயில் சூப்பிரண்டின் வீட்டை அன்று விசாரணைக்கூடமாக மாற்றியிருந்தனர். குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்லும்படி மனைவி கேத்தரீனை வாலர் கேட்டுக்கொண்டார். குழந்தைகளை கலெக்டர் வீட்டிற்கு வேலைக்காரி பாத்திமாவுடன் அவள் அனுப்பிவிட்டாள். தான் இந்த விசாரணையைப் பார்க்க வேண்டும் என்று வாலரிடம் கேத்தரீன் கேட்டுக்கொண்டாள். “கேத்தரீன், உன் இருப்பு

விசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் எனக் கருதுகிறேன்” என்றார் வாலர்.

“வாலர், நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் உட்கார்ந் திருப்பது அவர்களுக்குத் தெரியாது. நான் மறைவான இடத்தில் அமர்ந்து கொள்கிறேன். திருவிதாங்கூர் அரச குலப் பெண்கள்போல் அமர்ந்துகொள்கிறேன். என்னால் அவர்களைப் பார்க்க முடியும். ஆனால் அவர்களால் என்னைப் பார்க்க முடியாது.”

“உண்மைதான். திருவிதாங்கூர் ராஜாவின் பத்மநாபபுரம் அரண் மனையைப் பார்த்தோமே. அதை நினைவில் வைத்துச் சொல்கிறாய். பரவாயில்லை நல்ல ஞாபக சக்தி உனக்கு” என்றார் வாலர்.

பதினைந்து நபர்களும் வரிசையாக நிறுத்தப்பட்டனர். பல நாட்கள் கழித்து அப்போதுதான் ஒருவருக்கொருவர் நெருக்கமாகப் பார்த்துக் கொண்டனர். பதினேழு பேராக சிறைக்குள் வந்தவர்கள் இப்போது பதினைந்து பேராக குறைந்துவிட்டதை அறிந்து வருந்தினர். மற்ற கைதிகளுக்குக்கூட அரசல்புரசலாக இரண்டு பேர் இறந்து போனது தெரியும். ஆனால் யார் அந்த இருவர் எனத் தெரியாது. ஊமைத்துரைக்கு எதுவுமே தெரியாது.

சிப்பாய்கள் எல்லோரையும் வரிசையாக அமர வைத்தனர். கேள்வி கேட்கப்படுபவர் மட்டும் பதில் சொல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. கேள்வியையும் பதிலையும் பதிவு செய்ய ஒரு எழுத்தர் அழைக்கப்பட்டிருந்தார். கருப்பு மை பாட்டில், கோழி இறக்கையுடன் சில தாள்களோடும் எழுத்தர் அமர்ந்திருந்தார்.

“உண்மையை மட்டும் பேசுங்கள். அது உங்கள் அனைவருக்கும் நல்லது. நான் கேள்வி கேட்கும்போது சிவத்தையா பதில் சொல் லட்டும். அந்தப் பதில் உங்களுக்குத் திருப்தியில்லை என்றால் அதை நீங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கலாம். இல்லை யென்றால் விசாரணை முடிந்தபிறகும் தெரிவிக்கலாம்” என்ற அறிவுரைக்குப் பின் சூப்பிரண்ட் வாலர் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். கேள்விகளை ஏற்கனவே அவர் எழுதி வைத்திருந்தார்.

“சிவத்தையா, நீங்கள் உண்மைதான் பேசுகிறீர்கள், உண்மை யைத் தவிர பொய் பேசமாட்டீர்கள் என்று நீங்கள் விரும்பும் கடவுள் மீது சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுங்கள்.”

சிவத்தையா அமைதியாக இருந்தார்.

“மிஸ்டர் வாலர், கேள்விகளைக் கேளுங்கள். மரணத்தின் விளிம்பில் இருப்பவர்கள் நாங்கள். என்றைக்கு எங்கள் அண்ணன் இறந்தாரோ அப்போதே எங்களுக்கு வாழ்வு முடிந்துவிட்டது.”

வாலர் தன் கையிலிருந்த கேள்விகளை மேசைமேல் வைத்து விட்டார்.

“வாழ்க்கையை வெறுத்தவர்கள் ஏன் சிறையிலிருந்து தப்பிக்க முயல வேண்டும்? ஆங்கிலேயர்களின் நண்பன் என்று கூறிக் கொள்ளும் நபர்கள் ஆங்கிலேயர்களின் எதிரிகளான உங்களுக்கு ஏன் உதவ வேண்டும்?”

“மிஸ்டர் வாலர், நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்னுடைய பதில் திருப்திகரமாக இல்லையென்றால் இங்கு என்னோடு உள்ளவர்கள் இப்பொழுதோ அல்லது உங்களிடம் தனியாகவோ மாற்றுக் கருத்து சொல்லாம் என நீங்களே சொல்லி விட்டீர்கள். இது பிரித்தாளும் சூழ்ச்சி. உங்கள் நடவடிக்கை எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். எனக்கு ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. நீங்கள் எதற்காக எங்களை அழைத்தீர்கள் என்று எனக்கு அரைகுறையாகப் புரிகிறது. என்னை நேற்று அழைத்துப் பேசினீர்கள். அதனால் எனக்கு இந்த அளவு தெரிகிறது. இவர்களுக்கு ஒன்றும் புரியாது. ஆகவே, தயவுசெய்து நீங்கள் எங்களிடம் என்ன எதிர்பாக்கிறீர்கள் என்று நீங்கள் மனதில் நினைப்பதை வெளிப்படையாகச் சொல்லுங்கள்.”

சிவத்தையாவின் இந்தப் பேச்சு வாலருக்கும் பிடித்திருந்தது. கதவுக்குப் பின்னால் உட்கார்ந்திருக்கும் கேத்தரீனுக்கும் நாம் என்ன விசாரிக்கப் போகிறோமோ அது தெரியட்டும் என வாலர் நினைத்தார்.

“சரி” என்று சொன்ன வாலர். கைதிகள் ஏன் அங்குக் கொண்டு வரப்பட்டனர் என்பதை விளக்குவதற்காக எழுந்து நின்றார்.

“பாஞ்சாலங்குறிச்சி சிவத்தையா, ஊமைத்துரை உட்பட பதினேழு நபர்கள் இந்தப் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டீர்கள். உங்களை ஹானரபிள் கம்பெனி ‘கலகக்காரர்கள்’ என அறிவித்துள்ளது. சிவத்தையாவும் ஊமைத் துரையையும் தவிர்த்து நீங்கள் ஆரம்பத்தில் இருந்தே ஒருவரை ஒருவர் தெரியாததுபோல சொல்லிக் கொள்கிறீர்கள். பாஞ்சாலங்குறிச்சிக் கலவரம், அந்தப் பாளையக்காரர்

மட்டும் செய்ததல்ல. கம்பளத்து நாயக்கர்கள் மட்டும் ஈடுபட்டது அல்ல. சிவகங்கை மருது பாண்டியர்களையும், விருப்பாச்சி கோபால் நாயக்கரையும் அவர்களுக்கு உதவியவர்களாக கம்பெனி கருதுகிறது. நீங்கள் அதை பலமாக மறுப்பீர்கள் என்று தெரியும். மருது பாண்டியர்களுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பை நிரூபிக்கப் போதுமானச் சான்றுகள் எங்களுக்குக் கிடைத்துள்ளன" என்று சொல்லி வாலர் நிறுத்தினான்.

"போதுமான சான்றுகள் இருந்தால் நீங்கள் மருது பாண்டியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே மிஸ்டர் வாலர். சிறைக் கொட்டகைக்குள் இருக்கும் எங்களிடம் சொல்லி என்ன பயன்? எங்களால் அவர்களுக்கு உதவ முடியுமா? அல்லது அவர்கள்தான் எங்களுக்கு உதவ முடியுமா" என்றார் சிவத்தையா.

சிவத்தையா தொடர்ந்தார். "மருது பாண்டியர்களுடன் மோதல் போக்கு இப்போதைக்கு வேண்டாம் என்று முடிவு செய்து வைத்திருப்பீர்கள். ஏனென்றால் ஒரு நேரத்தில் ஒரு எதிரியுடன்தான் கம்பெனி போரிடும். மற்ற எதிரியை அடுத்த வாய்ப்பு வரும்வரை தாக்காது. ராமநாதபுரம் சேதுபதி உங்களுக்கு எதிரி. அவரைச் சிறையில் அடைத்தீர்கள். அவருக்குப் பின் மைசூரின் திப்பு சுல்தான். அடுத்து எனது அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மன். அடுத்து உங்கள் இலக்கு மருது பாண்டியர்கள். உங்களுக்கு நண்பராக இருக்கும் மருது சகோதரர்களின் நட்பைப் புறந்தள்ளிவிட்டு எதிரி யாக்கத் துடிக்கின்றீர்கள். அதற்கு எங்களைப் பகடைக்காயாக்க விரும்புகிறீர்கள்."

"மிஸ்டர் சிவத்தையா, நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். பகடைக்காய் என்றால் என்ன? நம் சிறைச்சாலையில் கூட போத்தி பகடை என்று ஒருவர் உள்ளாரே? அவரைப் பயன் படுத்துவதா?" என்று சொல்லி வாலர் சிரித்தார். வாலரின் வாயில் வந்த, 'போத்தி பகடை' என்ற இந்தப் பெயரை காலம் குறித்து வைத்துக்கொண்டது. இன்னும் இரண்டு மாதத்தில் கலெக்டர் லூஷிங்டன் அனுப்பப்போகும் ரகசிய அறிக்கையில் போத்தி பகடையின் பெயர் இடம் பெறப் போகிறது என்பதை அங்கிருந்த யாரும் அறிந்திருக்கவில்லை.

"இல்லை மிஸ்டர் வாலர், நீங்கள் சொல்லும் போத்தி பகடை, யார் என்று எங்களுக்குத் தெரியாது. நாங்கள் முதன்முறையாக இந்தப் பெயரைக் கேள்விப்படுகிறோம்."

“நீங்கள் சொல்வது சரிதான். போத்தி பகடை உங்களுக்குச் சமையல் செய்யும் செவிட்டு ஊமை. தினமும் வெளியில் சென்று விறகு சேகரித்துக் கொடுப்பது அவர் வேலை. சரி அவர் இருக்கட்டும். பகடைக் காய் என்றால் என்னவென்று சொல்லுங்கள்.”

“பகடைக்காய் என்பது சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப் படுவது?”

“சரிசரி, தெரியும். மேலே சொல்லுங்கள். எங்களைப் பகடைக் காயாக ஹானரபிள் கம்பெனிப் பயன்படுத்த நினைக்கிறதா?”

வாலர் பதில் ஏதும் சொல்லவில்லை.

“நிச்சயமாகச் சொல்லவில்லை. எனது சந்தேகத்தைச் சொல்கிறேன்.”

“நீங்கள் சொல்வது சரியென்றே வைத்துக் கொள்வோம். நீங்கள் வந்த புதிதில், இங்கு நடந்த நிகழ்வை உங்களுக்குச் சொல் கிறேன். அப்பொழுது, இரவு நேரத்தில் சிறைக்கு வெளியே சில விநோதமான சப்தங்கள் கேட்டன. அது பறவையின் குரலோ, மிருகங்களின் குரலோ இல்லை. சப்தம் வரும் நாட்களில் தொடர்ந்து கண்காணித்தோம். உங்கள் கொட்டடியிலிருந்து பதில் சப்தம் வந்ததையும் அறிந்து கொண்டோம். சப்தம் கொடுத்துக் கொண் டிருக்கும்போதே அந்தச் சப்தம் நிறுத்தப்பட்டதையும் எங்கள் சிப்பாய்கள் அவர்களைச் சுற்றி வளைத்ததும் சிறைக்குள் சமிக்ஞை செய்து கொண்டிருந்த உங்களுக்குத் தெரிந்திருக்கும். சப்தம் திடீரென நின்றதால் சிறைக்குள் இருந்த நீங்கள் பலமுறை விசில் சப்தம் கொடுத்து பதில் சப்தம் பெற முயற்சித்தீர்கள். பிடிபட்ட அவர்களை, பதில் தர நாங்கள் அனுமதிக்கவில்லை. அவர்களை இரண்டு நாட்கள் கலெக்டர் தனியறையில் வைத்து விசாரித்தார். பலமாகத் தாக்கியும் விசாரித்துப் பார்த்தோம். ஒருவன் மட்டும் அடி தாங்கமாட்டாமல் சொல்லிவிட்டான்.”

“எங்களை மருது பாண்டியர்கள் அனுப்பிவைத்தனர். சிவத்தையா, ஊமைத்துரை மற்றும் பாஞ்சாலங்குறிச்சிப் போராளி களை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று மருது சொன்னார் என்று சொல்லிவிட்டான். நாங்கள் கடந்த பத்து நாட்களாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எங்களது குரலுக்குப் பதில் கிடைத்தால், அன்று இரவு சிறையை உடைத்து பாஞ்சாலங்குறிச்சி வீரர்களை வெளியே கொண்டுவர முடிவு

செய்தோம். அன்று மாலையே சிறைக்கு முன்பாக அம்பது அடிக்கு ஒருவராகப் பராக்குப் பார்ப்பவர்கள்போல, தூங்குபவர்போல, உட்கார்ந்து தாயம் விளையாடுபவர்கள்போலக் காத்திருந்தோம். வேப்ப இலைகளை ஏற்றிக் கொண்டு ஒரு மாட்டுவண்டி சிறை வாசலில் நின்றிருந்தது. அந்த வண்டிக்காரனை விசாரித்தோம். "உள்ளே யாருக்கோ அம்மை கண்டுள்ளது" என்று சொன்னான். எங்களில் இருவர் மாட்டுவண்டி பின்னாலே சென்று சிறைக் காவலரிடம் பேச்சுக் கொடுத்தோம். அவர் மூலம்தான் எங்களுக்குத் தெரிந்தது. ஊமைத்துரைக்கு அம்மை போட்டிருக்கிறது என்று. அதனால் அன்றைய திட்டத்தை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்லத்தான் இரவு முயற்சி செய்தோம். அன்று பிடிபட்டோம்" என்று சொன்னான்.

"மிஸ்டர் வாலர், அந்த சாட்சியம் கூறியவரை எங்களிடம் காண்பியுங்கள். அவர்கள் எங்களை நேரில் பார்த்துச் சொல்லட்டும், எங்களைத்தான் அவர்கள் காப்பாற்ற முயன்றார்களா என்று."

"அது இயலாது. அதில் சம்பந்தப்பட்ட இருபது பேர் பிடிபட்ட அன்றே தூக்கிலிடப்பட்டுவிட்டனர்."

"சரி, மருது சகோதரர்களை விசாரித்திருப்பீர்களே? நாங்கள்தான் பாஞ்சாலங்குறிச்சி ஆட்களை விடுவிக்க முயன்றோம் என்று அவர்கள் ஒத்துக் கொண்டார்களா?"

"இல்லை, அவர்களை விசாரிக்கவில்லை."

"இது சரியில்லை மிஸ்டர் வாலர்."

"நீங்கள் சொல்ல விரும்புவது?"

"மருது சகோதரர்கள் எங்களது நலம் விரும்பிகள். எங்கள் வீட்டிற்கு விருந்தினர்களாக வந்துள்ளனர். அவர்கள் வீட்டிற்கு நாங்கள் பலமுறை சென்று தங்கியுள்ளோம். மற்றபடி அவர் எங்களுக்காகச் சிறையை உடைக்க ஆட்கள் அனுப்பியிருக்க வாய்ப்பில்லை. இன்னொன்றையும் நீங்கள் மறந்துவிட்டீர்கள். ஒரு மாதத்திற்கு முன்புகூட கிழக்கந்தியக் கம்பெனி ராமநாதபுரம் சேதுபதியை சிறையில் அடைத்ததை எதிர்த்து கமுதி, அபிராமம் பகுதிகளில் ராமநாதபுரம் மயிலப்பன் பெரும் கிளர்ச்சி நடத்தியபோது உங்கள் ஹானரபிள்

கம்பெனிக்குப் படைகள் கொடுத்து உதவி மயிலப்பன் கிளர்ச்சியை அடக்கியது மருது பாண்டியர்கள் என்பதை மறந்து விட்டீர்கள்."

"சிவத்தையா, மருது பாண்டியர்கள் எங்களுக்கு நண்பராகவும் தெரிகிறார். அதே நேரத்தில் எங்கள் விரோதிகளுக்கு நண்பராகவும் தெரிகிறார்."

"மருது பாண்டியர்கள் உங்களிடம் பாடம் படித்திருப்பார்கள் போலும். நீங்கள் இதுவரை மற்றவர்களுக்குச் செய்ததை இப்போது உங்களுக்கே மருது சகோதரர்கள் காண்பிக்கிறார்கள் என நினைக்கிறேன்."

"குமாரசாமி ஏதும் சொல்ல விரும்புகிறாரா?"

"மிஸ்டர் வாலர். எங்களுக்குள் எந்தப் பிரிவினையும் கிடையாது. உங்களால் உருவாக்கவும் முடியாது. நான் சொல்வதுதான் அவருடைய கருத்தும். நான் அழைப்பதுபோல அவரை குமாரசாமி என்றோ, ஊமைத்துரை என்றோ முஸ்லீம்கள் அவரை 'மூகா' என்று அழைப்பதுபோல் பொதுமக்களும், எங்கள் நெருங்கிய சொந்தங்களும் அழைப்பதுபோல, பாளையத்து மக்களும் அழைப் பதில்லை. அவரை 'சாமி' என்றுதான் அழைப்பார்கள். இவர் சத்தமாகச் சிரித்தோ, அதிகம் வருந்தியோ யாரும் பார்த்ததில்லை. இவர் மக்களிடம் காட்டும் சைகைகள் எங்கள் பகுதியில் ஆணை யாக எடுத்துக் கொள்ளப்படும். என்னைவிட இரண்டு வயது சிறியவன் தான். இவனுக்கு மக்களிடம் உள்ள செல்வாக்குக் கண்டு ஒரு அண்ணனாகப் பூரிப்பு அடைகிறேன். உங்கள் நாட்டில் பிறந்திருந்தால் தேர்தலில் நின்று பிரதமர் ஆவதற்குக்கூட இவனால் முடிந்திருக்கும். முடிந்தால் இவனை மட்டுமாவது வெளியே விடுங்கள். என் காலம் முடிகிற வரையில் நான் சிறைக்குள்ளேயே இருந்து கொள்கிறேன்" என்றார் சிவத்தையா.

கதவுக்கு வெளியே இருந்து கேட்டுக் கொண்டிருந்த கேத்தரீனின் மனதுக்குள் சிவத்தையாவின் கோரிக்கையின்மீது வாலர் என்ன சொல்லுவாரோ என ஆவலோடு காத்திருந்தாள். வாலர் சிறிய யோசனைக்குப்பின் சொன்னார், "நான் உங்களுக்கு எந்த உத்திரவாதமும் தர முடியாது. உங்களது கோரிக்கையையும் எனது விசாரணையின் முடிவையும் கலெக்டருக்கு அனுப்பி வைக்கிறேன். அவர் நினைத்திருந்தால் தன்மீது மருது சகோதரர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு யாருக்கும் தெரியாமல் அவரே பதில் அனுப்பியிருக்கலாம். ஆனால் அவரைவிட சிறிய பதவியில் இருக்கும்

என்னிடம் கொடுத்து விசாரிக்கச் சொன்னது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது."

"எங்களை அன்போடு நடத்தினீர்கள், நன்றி" என்று சொல்லிய சிவத்தையா தான் எழுந்து நின்று கொண்டு பலவீனமாக இருக்கும் தம்பி ஊமையைக் கை பிடித்து தூக்கிவிட்டார். எழுந்து நின்ற ஊமை தனது அண்ணனிடம் ஏதோ சைகையில் கேட்டான். சிவத்தையா "வேண்டாம்" என்றார்.

வாலர், "என்ன?" என்பது போலப் பார்த்தார். சிவத்தையா தலையைத் தாழ்த்திக்கொண்டு தம்பியை சமாதானம் செய்ய முயன்றார். ஊமை கேட்கவில்லை.

"மிஸ்டர் சிவத்தையா, சொல்லுங்கள்? ஊமை என்ன சொல்ல விரும்புகிறார்?"

"அவனுக்கு ஒரு வைக்கோல் துண்டு வேண்டுமாம்."

"கொடுக்கச் சொல்கிறேன். யாருப்பா அங்கே? மாட்டுத் தொழுவத்திலிருந்து ஒரு வைக்கோல் எடுத்து வா" என்றார்.

கேத்தரீனுக்கு ஆர்வமாக இருந்தது. எதற்காக ஒரு வைக்கோலை இந்த ஊமை கேட்கிறான் என்று. சிவத்தையா வாலரை சமாதானப் படுத்தும் வகையில் பேசினார்.

வைக்கோல் வந்துவிட்டது. அதை வாங்கிய ஊமைத்துரையின் முகத்தில் சந்தோசம். அந்த வைக்கோலை பாதியாகக் கிள்ளி இடது கையில் வைத்து, ஊமை மொழியில் ஒரு சப்தத்தை எழுப்பினான். சிவத்தையாவும் அவர்கூட இருந்த பதிமூன்று போராளிகளும் கண்கள் விரிய ஊமையைப் பார்த்தனர். வாயிலிருந்து காற்றை இடது கையில் ஊதினான் ஊமை. வைக்கோல் பறந்தது. ஊமையின் முகத்தில் பெரும் பூரிப்பு. வாலர் கோபமாகி விட்டார்.

"குமாரசாமி தொடர்ந்து சிறையில் இருப்பதால் மனது குழம்பிய நிலையில் இருக்கிறான். அவனால் வெயில் தாங்க முடியவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்பு வரை அம்மை போட்டிருந்ததும் அவன் உடல்நிலையைப் பாதித்துவிட்டது. ஆகவே, அவன் நடவடிக்கைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்"என்றார் சிவத்தையா.

வாலர் இயற்கையில் அமைதியானவர். அவர் கண்முன்னே, அதுவும் கைதியாக உள்ள ஒருவனின் இந்த நடத்தை அவருக்கு வெறியை ஏற்றிவிட்டது. “சிவத்தையா, உங்கள் தம்பி அவருக்கு தெரிந்ததைக் காட்டிவிட்டார். நாங்கள் எங்களுக்குத் தெரிந்ததைக் காட்டிவிடுகிறோம். கவர்னர் எட்வர்ட் கிளைவ், கலெக்டர் லூஷிங் டன்னுக்கு கட்டுப்பாடில்லாத, முழு சுதந்திரத்தை அளித்துள்ளார். மேஜர் அக்னியூ பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளும் காலம் வரப் போகிறது. அனைவரையும் இழுத்துச் சென்று கொட்டடியில் அடையுங்கள்” என்று வாலர் சீறினார். கேத்தரீனுக்கு என்ன நடக் கிறது என்பது புரியவில்லை. வாலர் வீட்டிற்குள் வரட்டும் எனக் காத்திருந்தாள். விறுவிறு என வாலர் வீட்டிற்குள் வந்து சீருடையைக் கழட்டினார். கேத்தரீன் அவருக்கு உதவி செய்தாள். வாலரின் முகம் சிவந்திருந்தது. கைக்குட்டை வைத்து மெதுவாக அவரது முகத்தைத் துடைத்தாள். “சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டாள். “வேண்டாம்” என வாலர் சைகையில் சொன்னார்.

“என்ன நீங்களும் ஊமை பாஷை பேசுகிறீர்கள்” என்றாள்.

“இந்த ஊமை மிக ஆபத்தானவன். பெரும் பிரச்சனையில் மாட்டிக் கொள்ளப் போகிறான்” என்றார்.

“ஒருவனைக் கைத்தாங்கலாக கூட்டி வந்தார்களே? அவனா? உடல் மெலிந்து நடக்கக்கூட சக்தியற்றவனையா ஆபத்தானவன் என்கிறீர்கள்?”

“ஆமாம் கேத்தரீன். அவன் பார்வைக்குத்தான் பலகீனமாகத் தெரிகிறான். அவனுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கிறது. அவன் ஊரில் இவனை சாமி என்றுதான் கூப்பிடுவார்களாம். திமிர் பிடித்தவன்.”

“விசாரணை முடிந்தபோது, அவன் வைக்கோல் கேட்டான். பிறகு வாய்வழியாக காற்று ஊதும் சப்தம் கேட்டது. அவன் அண்ணன் உங்களைச் சமாதானப்படுத்தினான். நீங்கள் கோபப்பட்டதை யூகிக்க முடிந்தது. என்ன தவறு செய்தான்? உங்களை கோபப்படுத்தும் அளவிற்கு?”

“கேத்தரீன், பெரும்பாலான ஆங்கிலேயப் பெண்களுக்குத் தெரியாது. நம்மை பரங்கிக்காய் என்று நாம் இல்லாத நேரத்தில் இவர்கள் பேசுவார்கள். பரங்கிக்காய் நம் நிறத்தில் இருக்கும். வட நாட்டில் நம்மை ‘கோரா’ என்பார்கள். அதாவது நாம் வெள்ளையாக இருப்பதை இந்த

மாதிரி கேவலமாகப் பேசுவார்கள். இந்த ஊமைப் பயல் நம்மை ‘வைக்கோல்’ என்று அழைப்பானாம். வாயில் காத்தை ஊதி வைக்கோலைத் தூக்கி எறிவதுபோல நம்மை இந்த நாட்டை விட்டு விரட்டுவானாம். அதுதான் அவன் செய்த செய்கையின் அர்த்தம். இவன் இப்படிச் செய்வான் என்று பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கலந்துகொண்ட மேஜர் பானர்மேன் சொல்லக் கேள்விப்பட்டிருக்கேன். இன்று என்னிடமே நடத்திக் காட்டிவிட்டான்” என்றார்.

“சரி விடுங்கள். அவன் சந்தித்த வெள்ளையர்கள் மோச மானவர்களாகவே இருந்திருப்பார்கள். உங்களுக்கே அந்த மேஜர் பானர்மேனைப் பிடிக்காதுதானே? உங்களைப் போன்ற ஆங்கி லேயரை இந்த ஊமை சந்தித்திருந்தால் அவனுக்கு ஆங்கிலேய எதிர்ப்புணர்ச்சி இவ்வளவு வந்திருக்காது. அவனுக்காக நீங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்” என்று சொல்லி உணவுத் தட்டை எடுத்து வைத்தாள். எப்போதாவது உடல் சோர்வு தீர்க்க இரவில் ஒயின் அருந்தும் பழக்கம் உள்ள வாலர், அன்று பகல் உணவுக்கே ஒயின் எடுத்துக் கொண்டார். ஒயின் இரண்டு மடக்கு அருந்தி கோப்பையைக் கீழே வைத்தார்.

கேத்தரீன் அவரது கன்னத்தையும் முகத்தையும் தடவி விட்டாள். நெருக்கமாக நின்று அணைத்துக் கொண்டாள். “வாலர் ஒரு விறகு பொறுக்குபவனைப் பற்றிச் சொன்னீர்களே? போத்தி பகடையோ, ஏதோ ஒரு பெயர்? அவனை நமக்கும் சேர்த்து சுள்ளிகள் பொறுக்கி வரச் சொல்லுங்கள், நாளையிலிருந்து.”

“சரி” என்றார் வாலர்.

போத்தி பகடை செய்யப் போகும் ஒரு காரியம் இந்தச் சிறையையே அலற வைக்கப் போகிறது.

•

6

பூனாவுக்கு அருகில் ஒரு சிற்றூர். சுற்றிலும் மலைகள் உள்ள ஒரு பகுதி. தூந்தாஜி வாக் முத்து என்றழைக்கப்படும் கருப்பு நிற அரேபியக் குதிரைமீது ஆரோகணித்து உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு எதிரில் ஐநூறு குதிரை வீரர்கள் குதிரைகள்மீது அமர்ந்திருந்தார்கள். வீரர்களின் கைகளில் ஈட்டியும் இடுப்பில் வாளும் இருந்தன. மார்பிலும் தலையிலும் கவசம் அணிந்திருந்தனர். குதிரைகள் கால்களை அசைக்கவில்லை. வாலையும், தலையையும் நின்ற இடத்திலேயே அசைத்துக் கொண்டிருந்தன.

தூந்தாஜி வாக், திப்பு சுல்தானின் படையில் தளபதியாக இருந்தவன். திப்பு சுல்தானின் படையில் முஸ்லீம்களும் இந்துக்களும் இருந்தனர். முஸ்லீம் படைகளை முஸ்லீம் தளபதிகள் வழி நடத்துவர். இந்துப் படைகளை முஸ்லீம் தளபதிகளும், இந்து தளபதிகளும் சேர்ந்து வழி நடத்துவர். தூந்தாஜி வாக் படை நடத்தும் பொறுப்பில் இருந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்பு சீரங்கப்பட்டினப் போரில், கோட்டையைக் காப்பாற்றும் முயற்சியில் திப்பு சுல்தான் இறந்தபோது கோட்டைக்கு அருகில் இருந்த சிறையில் தூந்தாஜிவாக் அடைக்கப்பட்டிருந்தான். திப்புவின் படையில் செல்வாக்கான தளபதியாக தூந்தாஜி வாக் இருந்தான். மூன்று மைசூர்ப் போர் வரையிலும் திப்புவிடம் அவனுக்கு நல்ல பெயர் இருந்தது. திடீரென வெளித்தெரியாத காரணத்தில் திப்புவிற்கு இவனைப் பிடிக்காமல் போக, சிறையில் அடைக்கப்பட்டான்.

ஆங்கிலேயர்களுடன் நடந்த போரில் திப்புவின் படை வீழ்ச்சியடைந்தது. மாலை போர் முடியும்வரை திப்பு இறந்தது ஆங்கிலேயர்களுக்குத் தெரியாது. இரவு ஏழு மணிக்குமேல் 'திப்பு இந்தப் போரில் இறந்திருக்கலாம்' என்று சந்தேகம் வந்து பிணக்குவியலுக்குள் திப்புவின் உடலைத் தேடினர். அந்த நேரத்தில் தூந்தாஜி வாக்கை சிறையிலிருந்து விடுவித்துக் கூட்டிக்கொண்டு வந்தனர். போர்க்களக் காட்சியைப் பார்த்து தூந்தாஜி அழுதான். அவனிடம் திப்புவின் உடலைக் காண்பித்து "இது யார்?" எனக் கேட்டனர்.

"எங்களது அரசர் திப்பு சுல்தான்" என்று தூந்தாஜி சொன்னவுடன் வெள்ளக்காரப் படை ஆனந்தக் கூத்தாடியது. தூந்தாஜி வாக்கிற்கு யுத்தம் செய்வது தவிர வேறு எதுவும் தெரியாது. திப்பு சுல்தானின் பிரேதத்தைக் கண்டுபிடித்தவுடன் ஆங்கிலேயர்கள் செய்த அட்டகாசமும்

காட்டுக்கூச்சலும் அவர்கள் மீதான மரியாதையைக் குலைத்திருந்தது. ஒரு மரணத்தை, அதுவும் கோட்டையைக் காக்கப் போராடிய வீரனின் மரணத்தை, அரசனாகயிருந்தும், சக வீரர்களோடு வீரனாக நின்று போரிட்டவனை கேவலப்படுத்திய ஆங்கிலேயர்கள் எந்த மரியாதைக்கும் உரியவர்கள் இல்லை என்று தூந்தாஜி வாக் முடிவு செய்தான். தூந்தாஜி வாக் மூன்று மைசூர்ப் போரிலும் போரிட்டிருக்கிறான். முதல் இரண்டு மைசூர்ப் போர் களில் ஹைதர் அலியின் படையில் இருந்தாலும் ஹைதரை அவன் நேரில் பார்க்கவோ அவரோடு பேசவோ அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. மைசூர்ப் படையில் சாதாரணச் சிப்பாயாக இருந்த ஹைதர் மைசூர் அரசனான உடையாரை எப்படி ஓரங்கட்டினான்? எப்படி மைசூருக்கு அரசன் ஆனான் என்று யாருக்கும் தெரியாது.

இரண்டாம் மைசூர்ப் போர் நடக்கும்போதே போர்க் களத்திலிருந்த கூடாரத்தில் ஹைதர் மாண்டபோது இருபத்தைந்து வயதான திப்பு சுல்தான் அதே கூடாரத்தில் மைசூர் அரசனாக முடிசூட்டப்பட்டான். சிறந்த அறிவாளியும், ஆலோசகருமான திவான் பூரணய்யாவின் அறிவுரையின்படி போர்க்களத்தில் திப்பு ஆங்கிலேயர்களுடன் சமாதானம் செய்துகொண்டான். சுதந்திர தாகமும், பிரெஞ்சுக்காரர்களின் தொடர்பும், திப்புவை ஆங்கிலேயர்களுக்குப் பரம விரோதியாக்கியது. மூன்றாம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தானோடு நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு தூந்தாஜி வாக்கிற்குக் கிடைத்தது. இருவருக்கும் சம வயது என்பதால் அரசன், படையின் தளபதி என்ற நிலையைத் தாண்டி அவர்களிடையே அன்பு வளர்ந்தது. பலர் முன்னிலையில் தூந்தாஜி வாக்கின் பெயர் சொல்லி அழைத்து திப்பு பெருமைப்படுத்தியுள்ளான். பின்பு சூழல் மாறிவிட்டது. திப்புவால் சிறையில் அடைக்கப்பட்டான். இப்போது திப்பு இறந்து விட்டதால் தூந்தாஜி வாக் தனித்து விடப்பட்டான்.

தனித்துவிடப்பட்ட சூழலில்தான் தூந்தாஜி வாக், மருது பாண்டியர்கள் பற்றி கேள்விப்பட்டான். ஆங்கிலேயர்களுக்கும் கட்ட பொம்மனுக்கும் நடந்த போர்ப் பற்றிய செய்திகளைச் சேகரித்தான். ஐநூறு குதிரைப் படையினரோடு சென்று மருதுவோடு சேர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகத் தனக்குத் தெரிந்த இரு முஸல்மான் சகோதரர்கள் மூலம் சிவகங்கைக்குத் தகவல் அனுப்பி வைத்தான். அவர்கள் மருதுவைச் சந்தித்து தூந்தாஜி பற்றித் தெரிவித்தனர். மருது விரும்பினால் ஐநூறு மராத்திய குதிரை வீரர்களுடன் தூந்தாஜி வாக் உடனே சிவகங்கைக்கு வரத் தயாராக இருப்பதாகவும் தகவல் தெரிவித்தனர்.

மருது “சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள்” எனக் கேட்டதற்கு, “உயிர் வாழப் போதுமான அளவு” என்று தூதுவர்கள் பதில் சொன்னார்கள். “சரி, நான் தரும் இந்தக் கடிதத்தை விருப்பாச்சி கோபால் நாயக்கரிடம் கொண்டுசென்று காண்பியுங்கள்” என்றார். கோபால் நாயக்கரைச் சந்தித்து மருது சேர்வைக்காரரின் கடிதத்தை தூந்தாஜி வாக்கின் தூதுவர்கள் கொடுத்தனர். அதைப் படித்துப் பார்த்த அவர் முதல் தவணையாக ஐம்பதோ, நூறோ மராத்திய குதிரை வீரர்கள் விருப்பாச்சிக் காடுகளுக்கு வரட்டும்” என்றார்.

தூந்தாஜியின் குரல் கரடுமுரடாக இருக்கும். அதற்கு அவன் அடிக்கடி குடிக்கும் ஹுக்காதான் காரணம். உணவில்லாமல்கூட இருந்துவிடுவான். கட்டாயம் புகைப்பிடித்தே ஆக வேண்டும். படை வீரர்கள் முன்பு மட்டும் புகைபிடிக்க மாட்டான். கூட்டம் ஆரம்பிக்கும் முன் உரத்த குரலில் “காளி மாதாக்கு ஜே” என கோஷமிட்டான். வீரர்களும் “காளி மாதாக்கு ஜே” எனக் குரல் கொடுத்தனர்.

அவன் உட்கார்ந்திருந்த முத்து என்ற குதிரையை முன்னால் போகச் சொல்லி அதன் வயிற்றில் இரு கால்களாலும் லேசாகத் தட்டினான். குதிரை இரண்டு அடி எடுத்து வைத்துப் பின் நின்றது. முத்துவின் கருப்புநிற முதுகில் தூந்தாஜி வாக் தட்டினான். குதிரை முத்து, லேசாக கனைத்தது.

“வீரர்களே, நாம் தெற்கேயிருந்து எதிர்பார்த்தச் செய்தி வந்துவிட்டது. நம் அரசர் திப்பு சுல்தானை கொன்றவர்களைப் பழிவாங்க நேரம் வந்துவிட்டது. நம் தலைவரைக் கொன்ற ஆர்தர் வெல்லெஸ்லி இன்று மைசூர் மாளிகையில் இருக்கிறான். பெயருக்கு ஒரு சிறுவனை உடையார் அரசனாக அறிவித்துவிட்டு ஆர்தர் வெல்லெஸ்லி உண்மையான அதிகாரமுள்ளவனாக வலம் வருகிறான். இவன் அண்ணன் ராபர்ட் வெல்லெஸ்லி கல்கத்தா கோட்டையின் அதிபதி. இந்திய கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரல். ஆப்கானிஸ்தானிலிருந்து தொடங்கி ஸ்ரீலங்கா, பர்மா, கம்போடியா வரையுள்ள பெரும் நிலப்பரப்பிற்கு வெல்லெஸ்லி ஆளுநர். இன்னொரு தம்பி, ஹென்றி வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலுக்குத் தனி உதவியாளர். இந்த உதவியாளர்தான் நம் அரசர் திப்பு சுல்தான் இறந்ததும் லண்டன் சென்று பல கூட்டங்களில் திப்புவின் மரணம் குறித்து விளக்கியவன். அண்ணனும் இரண்டு தம்பிகளும் ஆட்டம் போடுகின்றனர். இவர்களது கொட்டத்தை அடக்க வேண்டும். திவான் பூர்ணய்யா, இன்று ஆங்கிலேயர்களின்

செல்லப்பிள்ளை. ஹைதருக்கும், திப்புவுக்கும் திவானாக இருந்து விட்டு இன்று மைசூர் உடையார்களுக்குத் திவான் ஆகிவிட்டார். ஆங்கிலேயர்களையும், அவர்களுக்குத் துணை போகின்ற இழிபிறவிகளையும் நாம் கருவறுக்க வேண்டும்.

நம்மைப் போன்று சுதந்திர உணர்வு உள்ளோருடன் நாம் கூட்டணி அமைத்துள்ளோம். மருது, ஆங்கிலேயருடனான போரை ஆரம்பிக்க உள்ளார். ஆங்கிலேயரை அழிக்கத் துடிக்கும் எல்லாருக்கும் நம் படை உதவ வேண்டும். எந்தவொரு அரசர்களுக்காகவும் நாம் போரிடவில்லையென்றாலும், நம் எதிரியை அழிக்க, நம் படை எல்லா அரசர்களின் படையிலும் இருந்தே ஆக வேண்டும். விரைவில் நாம் விருப்பாச்சிக் காடுகளிலும் காளையார்கோயில் காடுகளிலும் போரிட உள்ளோம்.

நம் ஐநூறு பேரில் முதல் குழுவாக நூறு பேரை முதலில் அனுப்புகிறேன். அவர்கள் யார் யார் என்பதை அறிவிப்பதற்கு முன்பாக, உங்களிடம் ஒரு வேண்டுகோள் வைக்கின்றேன். நல்ல திட காத்திரமான உடலும், வலுவான குதிரையும், போர் ஆயுதங்களும் கொண்ட உங்கள் உறவினர்கள், நண்பர்கள் இருந்தால் அவர்களையும் நம் படையில் சேரச் சொல்லுங்கள். அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய நம் நண்பர் விருப்பாச்சி கோபால் நாயக்கர் தயாராக இருப்பதாக நமது தூதர்களிடம் கடிதம் கொடுத்தனுப்பியுள்ளார்.

விருப்பாச்சி நாயக்கர் கடந்த நாற்பது வருடமாக சுதந்தர வேட்கை உள்ளவர்களுக்குப் புரவலராக உள்ளார். அவர் ஆளுவது சிறு ஜமீன் என்றாலும் நல்ல விளைச்சல் உள்ள நிலங்களும், தாராள மனமும் உள்ள மக்களின் தலைவர் அவர். இன்று திண்டுக்கல் செல்லும் வீரர்கள் விருப்பாச்சி நாயக்கரின் வழிகாட்டுதலில் மருது சேர்வைக்காரரின் ஆணையை ஏற்று நடந்து கொள்ளுங்கள்.

முதல் நான்கு வரிசையில் உள்ளவர்கள் விருப்பாச்சிக்குக் கிளம்புங்கள். உங்களுக்கு அவ்வப்போது கோயம்புத்தூர் சேக் உசேன் மூலம் உத்தரவுகள் வரும். செல்லும் வழியில் யாரும் விசாரித்தால் “மைசூர் பகுதியில் பஞ்சமாகயிருக்கிறது. தானியங்கள், வைக்கோல் வாங்குவதற்காக எங்களை மராத்திய முதலாளிகள் அனுப்பியிருக்கிறார்கள்” என்று சொல்லுங்கள். யாராவது உங்களை வீண் சண்டைக்கு இழுத்தாலும் நீங்கள் போரிட வேண்டாம். விருப்பாச்சி நாயக்கரின் ஊரில் இருக்கும்போது மது அருந்துதல், புகைப்பிடித்தல்,

அவ்வூர்ப் பெண்களிடம் தொடர்பு கொள்ளுதல் போன்ற செயல்களில் கட்டாயம் ஈடுபடக்கூடாது.

செல்லும் வழியிலும், விருப்பாச்சியிலும் விவசாயிகளிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள். கோபால் நாயக்கரையோ, மருது சேர்வைக்காரரையோ சந்திக்கும்போது எனக்கு என்ன மரியாதை செலுத்துவீர்களோ அதே மரியாதையை அவர்களிடமும் காண்பிக்க வேண்டும். மொகரம் அன்று, எனது கருப்புக் குதிரை உங்களைத் தேடி வரும். பெரும் சைன்யத்துடன் நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ அங்கு வந்து உங்களோடு சேர்ந்து கொள்வேன்" என்றான்.

"கிளம்புங்கள், வெற்றி நமதே" என்று பெரும் குரலில் தூந்தாஜி வாக் உணர்ச்சிப் பொங்க கோஷமிட்டான். விருப்பாச்சிக்குச் செல்லும் நூறு வீரர்களும் தங்களது வாளை உயர்த்தி துந்தாஜிக்கு வணக்கம் தெரிவித்தனர்.

தூந்தாஜி தனது வாளை உயர்த்தி விருப்பாச்சி செல்லும் வீரர்களுக்குப் பதில் வணக்கம் செலுத்தினான். அவன் அமர்ந்திருந்த அரேபிய கருப்புக் குதிரை முத்து தனது இரு கால்களையும் தூக்கி கனைத்தது. அதுவே அவனது கடைசி ஆணை என்று விருப்பாச்சிக் காட்டுக்குக் கிளம்பியவர்களுக்குத் தெரியாது.

தூந்தாஜி வாக்கின் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருந்த மலையடிவாரத்திற்கு நாற்பது மைல்கள் தள்ளி, ஒரு ஆற்றங்கரையில் கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லி தனது வீரர்களிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"இன்னும் அதிகபட்சம் நாலு நாட்களில் தூந்தாஜி வாக்கின் கதை முடிக்கப்பட வேண்டும். திப்புவுக்கு எதிரானவன் அவன். அதனால்தான் திப்புவால் சிறை வைக்கப்பட்டான். இப்போது நாம் உடையாரை மீண்டும் மைசூர் அரசராக நியமித்துள்ளோம். அவர்களுக்கு எதிராகவும் இந்த தூந்தாஜி வாக் கூட்டம் சேர்க்கிறான். முஸ்லீம்களுக்கும் இந்து அரசர்களுக்கும் எதிரான இந்த தூந்தாஜி வாக் கதை முடிக்கப்பட வேண்டும். எனது அண்ணன் கவர்னர் ஜெனரல் மார்னிங்டன்னையும், எனது தம்பி ஹென்றியையும் கேவலமாகப் பேசும் இந்த தூந்தாஜி வாக்கின் உயிர் இந்த ஆர்தரின் கையில்தான் போக வேண்டும்" என்றான்.

ஆங்கிலேய வீரர்களும், நேட்டிவ் சிப்பாய்களும் கத்தியை உயர்த்தி "செய்வோம்" என குரல் எழுப்பினர். ஆர்தர் தனது துப்பாக்கியை உயர்த்தி வானத்தை நோக்கிச் சுட்டான்.

•

7

தினக் கொண்டாட்டங்களில் பெயருக்குக் கலந்துகொண்டு விட்டு தம்பியின் மாளிகைக்கு வந்தார். தம்பி சின்ன மருதுவின் மனைவிகள் வாசலுக்கு ஓடிவந்து பெரிய மருதுவை வரவேற்றனர். ஆரத்தி எடுத்து மஞ்சள் நீரை அவர் காலடியில் ஊற்றினர். "ஏன் ஆத்தா, ஒவ்வொரு நாளுமா ஆரத்தி எடுக்கணும்?" என்றார்.

"அதைவிட எங்களுக்கு என்ன சந்தோசம் இருக்கு மாமா?" என்றாள் சின்ன மருதுவின் மூத்த மனைவி. ஒரு மனைவி வீட்டிற்குள் ஓடிச் சென்று சின்ன மருதுவிற்குத் தகவல் சொன்னாள். சின்ன மருது வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டு தோளில் கிடந்தத் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு ஓடி வந்தார்.

"வாங்கண்ணே" என்றார்.

"சின்னவனே, உன்னிடம் கொஞ்சம் பேசணும்" என்றார்.

சின்ன மருதுவிற்கு முகத்தில் பயரேகைகள் பரவின.

இப்போதெல்லாம் சில விசயங்களை அண்ணனுக்குத் தெரியாமல் சின்ன மருது செய்ய ஆரம்பித்துவிட்டார். பெரியவர் எதிலும் நிதானமாகப் போகவேண்டும் என்று நினைப்பவர். சின்ன மருது விற்குப் பொறுமை கிடையாது. வேலு நாச்சியார் இறந்த இந்த நான்கு ஆண்டுகளில் அண்ணன், தம்பிகளின் மன நிலைகளில் லேசான மாறுதல். வெள்ளையர்கள் மற்றும் ஆற்காடு நவாப் தரும் தொல்லைகளுக்கு மென்மையான பதில் மட்டும் சொன்னால் போதும் என பெரிய மருது நினைப்பார். ஆனால் அவர்களுக்கு ஆக்ரோஷமான பதிலடி தர வேண்டும் எனச் சின்ன மருது நினைக்க ஆரம்பித்துவிட்டார். பெரிய மருது "பேச வேண்டும்" என்று சொன்னவுடன் பெரியவருக்குத் தெரியாமல் செய்த எந்த விசயத்தைப் பற்றி கேட்கப் போகிறாரோ என்ற பயம் சின்ன மருதுவிற்கு வந்தது. இது போன்ற சமயங்களில் சின்ன மருது தனது இளைய மனைவி வைராத்தாளைக் கூட வைத்துக் கொள்வார். வைராத்தாள் தன் பெரிய மாமனான பெரிய மருதுவுக்குப்

பயப்படமாட்டாள். அவள் மருது சகோதரர்கள் இருவருக்கும் அக்கா மகள் என்பதால் அவளுக்குச் சலுகை அதிகம். சின்ன மருது வைராத்தாளைக் கூப்பிடலாம் என்று திரும்பி "வைரம்" என்று மெதுவாக அழைக்கையில், "அந்த வாயாடியைக் கூப்பிடாதே" என்றார் பெரிய மருது. ஆனால் அதற்குள் வைராத்தாள் வந்துவிட்டாள்.

"யார மாமா வாயாடின்னு சொன்னீங்க?" என்றாள்.

"உன்னயை இல்லத்தா. நீ போய் ஏதாவது வேல இருந்தாப் பாரு. நல்ல நாளு இன்னிக்கு. உன்னோடு வாக்குவாதம் பண்ண நான் வரல. நீ போய்ட்டு வாத்தா" என்றார் பெரிய மருது.

"நா இங்கதான் இருப்பேன். நீங்க பேசுறதப் பேசுங்க. நா உங்க வாயப் பாத்துக்கிட்டு இருக்கேன்" என்று பெரிய மருது அமர்ந்த இருக்கையிலேயே அவரை நெருக்கிக்கொண்டு உட்கார்ந்தாள்.

"ஏம் பிள்ள, உன் வீட்டுக்காரன் என் முன்னால உட்காராம நிக்கையில நீ எனக்குச் சரி சமமா உட்காரயே? என்னையவிடு, உன் புருசன்மேல நீ என்ன மரியாத வச்சிருக்க?"

"மாமா, அவரு எனக்கு மாமன் மட்டுமில்ல, புருசனும்கூட. அதனால இந்த மரியாத அவருக்கு போதும். நீங்க என் பெரிய மாமன். என்னயத் தூக்கி வளர்த்தவரு. நா பெரிய மனுசி ஆனப்ப எனக்கு குச்சிக் கட்டுனவரு. உங்க தம்பி என் கழுத்தில மாலை போடுறதுக்கு முன்னாலயே என் கழுத்துல நீங்க மாலை போட்டவரு. அதனாலே அவரு நிக்கையிலே நான் உட்காரலாம். நீங்க உட்காரயில எவ்வளவு வேணும்னாலும் நெருக்கி உட்காரலாம்."

"ஆமா, நா உன் கழுத்துல கல்யாணத்தன்னைக்கு மால போட்டப்ப நீ கல்யாணப் பொண்ணு மாதிரியா நடந்துக்கிட்ட."

"ஆமா, மாமா நடக்கல. அப்பத்தான உங்க வகுத்துல குத்தினேன். நீங்க கூட ரோக்கு"ன்னோ என்னமோ சொன்னீங்களே?"

"ஆமா ரோக்குன்னா பெரிய வார்த்த. நம்ம வெள்ளச்சாமி இருந்தான்ல பிள்ள, கமுதி வெள்ளச்சாமி. அபிராமத்தில் எல்லா வெள்ளக்காரங்க கண்ணுல விரல விட்டு ஆட்டுனானே?"

“ஆமா மாமா கேள்விப்பட்டிருக்கேன். உங்களப் பாக்க வந்தி ருக்காரு, பாத்திருக்கேன். சிவப்பாயிருப்பாரு, கடா மீச வச்சுக்கிட்டு தலையில நீளமா குடுமி வச்சிருப்பாரு.”

“ஆமா அவருதான்.”

“அவருக்கு ஏன் மாமா இந்தப் பேரு? இதுக்கு என்ன அர்த்தம்? யாரு வச்சா?”

“இரு சொல்லுறேன். சொல்லுறதக் கேட்டுட்டு கிளம்பிறணும்.”

“நீங்க சொன்னதக் கேட்டப்புறம் கிளம்புறதா வேணாமான்னு யோசிக்கிறேன்” என்றாள்.

“பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் அண்ணன் இருந்தாருல்ல, அவரு பாஞ்சாலங்குறிச்சிப் போர் நடக்கையில் நம்ம ஊர் வழியா தப்பிச்சி வந்தாருல்ல. போன வருசம் பாத்திருப்ப...”

“ஆமா மாமா, நல்ல மனுசன். வாய் நிறைய ஆத்தான்னு கூப்பிடுவாரு.”

“இந்த வெள்ளச்சாமிப் பய அவரக் கமுதிக் கோட்டையில வச்சு வரவேற்றான். கமுதிக் கோட்டைக்குள்ள புகுந்து கம்பெனி ஆட்கள விரட்டினான். அபிராமம் கிராமத்துல இருந்த கம்பெனி கோடவுன சூறையாடினான். வெள்ளக்காரங்க இவனோட ஆளுகளப் பிடிச்சு அபிராமம் கடைவீதியிலே தூக்கில போட்டாங்க. இவனக் கைது பண்ண நெருங்கையில தஞ்சாவூர் பக்கம் தப்பிச்சு ஓடிட்டான். வெள்ளக்காரங்க அவனுக்கு வச்சப் பேரு ‘ரோக்கு’, அதாவது என்னன்னா போக்கிரிப் பய, சல்லவாரிப் பயல்னு அர்த்தம்.”

“அட பாவிப் பயலுகளா? நம்ம ஊர்ல வந்து நம்ம ஆளு களுக்குப் பட்டப்பேரு வைக்கிறானா வெள்ளக்காரனுங்க? சரி அது கிடக்கட்டும். நான் அப்படிப்பட்டவளா மாமா?”

“நீயே யோசிச்சுப்பாரு. எவளாவது கல்யாணப் பொண்ணா யிருக்கயில தாய் மாமன, அதுவும் சாதி சனங்க முன்னால தாய் மாமன் மால போடயில வகுத்துல குத்துவாளா? அப்படிக் குத்துறவளுக்கு வேற என்ன பேர் வைக்கிறது? சரி, ஓடிப்போய் பொங்கல் வச்சுருப்ப,

எடுத்துக்கிட்டுவா. உங்க அத்தைக்காரி கொடுத்தப் பொங்கல் அவ்வளவு நல்லா இல்ல."

"சரி மாமா, போய் எடுத்துட்டு வர்றேன். அப்படியே அத்தை கிட்டப்போயி நீங்க அவங்க வச்ச பொங்கலப் பத்தி என்ன சொன்னீங்கன்னும் சொல்லிட்டு வர்றேன்."

"சரி சொல்லிக்க, இப்ப இடத்த காலி பண்ணு" என்றார் பெரிய மருது. சின்ன மருது இன்னும் நின்று கொண்டுதானிருந்தார்.

"உக்காருப்பா" என்றார் பெரியவர். அருகிலிருந்த ஆசனத்தில் பட்டும்படாமலும் சின்ன மருது அமர்ந்தார்.

"சொல்லுப்பா, பஞ்சாலங்குறிச்சி விசயத்தில நாம நடவடிக்கையை தொடர்கிறோமா? மொகரம் அன்னைக்கு கோயம் புத்தூர் நடவடிக்கையையும் செய்யப்போறோமா? ரெண்டையும் ஒரே நேரத்தில் நம்மால சமாளிக்க முடியுமா?" என்றார்.

"அண்ணே, கோயம்புத்தூர் பிரச்சனையை கோபால் நாயக்கரும், சின்னமலையும் கோயம்புத்தூர் சேக் உசேனும், திப்புவின் தளபதி தூந்தாஜி வாக்கும் பார்த்துக்கிறாங்க. தேளி யாதுல் நாயக்கரையும் உடையார்பாளையம் ஜமீன்தாரையும் அவங்ககூட ஒத்தாசயா இருக்கச் சொல்லியிருக்கோம். முதல் கட்ட நடவடிக்கை அங்க முடிஞ்சப்புரம்..."

"முதல்கட்ட நடவடிக்கைன்னா?"

"கோயம்புத்தூர் கலெக்டரை முடிக்கிறோம்."

"யாருப்பா கலெக்டர்? ஹார்டிஞ்சுல்ல?"

"ஆமா."

"அவன் ஒன்னும் அவ்வளவு மோசமானவன் இல்லையேப்பா?"

"நல்லவனா இருக்கிறதா இல்லையான்னு வெள்ளக்காரன் யாரும் தனிப்பட்ட விதத்துல தீர்மானம் செய்ய முடியாதே. இதுவரயில நம்ம ஆளுக பதினாலு பேர நடு ரோட்டில வச்சுத் தூக்குல போட்டிருக்கான். சின்னமலை கவுண்டர் இவன் ரொம்பக் கொடுமக்காரன், இவனைத் தீத்துக்கட்டியே ஆகணும்கிறார்."

"சரி, பாளையங்கோட்ட விசயம் சொல்லு."

சின்ன மருது சுற்றும் முற்றும் பார்த்தார். யாரும் இல்லை என உறுதி செய்து கொண்டார்.

“அண்ணே, இன்னும் பத்து நாளுல பாளையங்கோட்ட சிறைய உடைச்சு உள்ளே போறோம்.”

“போயி?”

“சிவத்தையாவையும், ஊமத்துரையையும் விடுதல பண்ணி வல்ல நாடு வழியா பாஞ்சாலங்குறிச்சிக்குக் கூட்டிக்கிட்டு வர்றோம். பாஞ்சாலங்குறிச்சியில வச்சு யுத்தத்த நடத்தறோம். யுத்தம் அங்க மட்டும் நடத்துறதா இல்ல. அபிராமம், கமுதி, திருப்புவனம், பிரான்மலை, காளையார்கோயில், பார்த்திபனூர்ன்னு எல்லா இடத்திலேயும் ஒரே நேரத்துல நடத்துறோமான்னு உங்ககிட்டயும், அரசர்கிட்டயும் கேட்டு முடிவு செய்யிறோம்.”

“அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் என்ன சொல்லுறாரு? அவரு ஒத்துக்கிட்டாரா?”

“பெரிய அம்மான் கிட்ட சொல்லிட்டு செய்யுங்க அம்மான்னு எங்கிட்ட சொன்னாரு.”

“இல்லை மருது. நான் ஏன் கேக்கிறேன்னா, நாம சொல்லுறதுக்காக சிவகங்கை அரசர் இந்தப் போரில் இறங்குவோம்கிறாரா?”

“அண்ணே, நீங்க அவருக்கு மாமனார் ஆவதற்கு முன்பே அவருக்கு ஆதர்ச புருசன் நீங்கதான். உங்களது தலைமையை ஏத்துக்கிட்டவர் அவர்.”

“இல்லை மருது, சிவகங்கை அரசர் நம்மைவிட வயதில் சிறியவராக இருந்தாலும் நம் மகள் மருதாயிக்குக் கணவனாக இருந்தாலும் சிவகங்கை அரசரான அவர் படையை நடத்தினால்தான் சரியாக இருக்கும்.”

“சிவகங்கைப் படையை நிச்சயம் அரசர் தலைமை ஏற்று வழி நடத்துவார்.”

“சரி மருது, எனக்குப் பாளையங்கோட்டை சிறை விசயம் கொஞ்சம் யோசனையாக இருக்கு. புதுசா வந்திருக்கிற கலெக்டர்

லூஷிங்டன் மிகவும் மோசமானவன். திப்பு சுல்தான கொன்ன ஜெனரல் ஹாரிஸின் மருமகன். இந்த ஜெனரல் ஹாரிசோட மிலிட்டரி அட்டாச்சி கர்னல் அக்னியூ. இவங்க ரெண்டு பேரையும் தனித்தனி ஆளுகளா நினைக்க முடியாது. அந்த ஜெனரல் ஹாரிஸ் கவர்னர் எட்வர்டு கிளைவ் நினைப்பதை செய்யணும்னு நினைப்பவர். கர்னல் அக்னியூவும் அடிக்கடி அங்கதான் போவான். அங்க உள்ள ரெண்டு நல்ல வெள்ளக்காரங்க மேஜர் ஜேம்ஸ் வெல்ஷும், ஜெயில் சூப்பிரண்டு வாலரும்தான். மத்தவங்க நம்மமேல விரோதம் பாராட்டுறவங்க."

"அண்ணே, காலச்சக்கரம் வேகமாக உருளப்போகிறது. அதில் கெட்டவர்கள் பலர் அழிவர். நல்லவர்கள் சிலரும் அழிவர்."

"ஜேம்ஸ் வெல்ஷுக்கும், ஜெயில் சூப்பிரண்ட் வாலருக்கும் ஒன்னும் ஆகக் கூடாது."

"அண்ணே, ஜேம்ஸ் வெல்ஷ்க்கு ஒன்றும் ஆகாது. ஜெயில் சூப்பிரண்ட் வயதானவர். நல்ல மனிதர். ஜெயில் உடைப்புக்குப் பின்பு அவர் உயிரோடு இருந்தால் அவர் சாகும்வரை காவலில்தான் அவரை வைப்பார்கள். இந்தச் சிறை உடைப்புக்கு உடந்தையாக இருந்தார் என்று குற்றம் சாட்டிப் பெரும் தண்டனைகூட அவருக்குக் கொடுப்பார்கள். அதனால்..."

"அதனால்?"

"சுதந்திர வேள்வியில் விழுந்த ஆகுதியாக ஜெயில் சூப்பிரண்ட் வாலர் ஆகி விடுவார்."

"அவர் மனைவி, குழந்தைகள்."

"அவர் மிக நல்ல பெண். என் அண்ணனின் இரக்கத்திற்குத் தகுதியானவர்."

"சரிப்பா, நான் கிளம்புறேன். பாளையங்கோட்டைக்கு நீ போக வேண்டாம். நாம் இதில் இருக்கிறோம் என இப்போதைக்கு அவனுங்களுக்குத் தெரிய வேண்டாம். நம்ம ஆளுகளுக்கு மட்டும் கட்டாயம் தெரியணும்."

"ஆரம்பத்தில் அவர்களுக்குத் தெரிய வேண்டாம் என நீங்கள் நினைப்பதுதான் என் எண்ணமும். நாம் தலையிட்டோம் என்று

வெள்ளையர்களுக்குக் கொஞ்ச நாட்கள் கழித்து தெரியட்டும்" என்ற சின்ன மருது எழுந்து நின்று அண்ணனை வணங்கினார்.

"நாளைக் காலை நான் சிவகங்கை அரண்மனைக்கு வருகிறேன். நீ, நான், அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் மட்டும் கலந்து பேச வேண்டும்" என்றார்.

"உத்தரவு" என்றார் சின்ன மருது.

•

8

போத்தி பகடை ஜெயில் சூப்பிரண்டு வீட்டிற்கு அடுப்பு எரிக்க விறகு சுள்ளிகளைக் கொடுத்துவிட்டுப் போகிறான். பின்வாசல் வழியாக வந்து பின்வாசல் வழியாகவே போய்விடுவான். வாரத்திற்கு ஒருமுறை, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்று பகடையை அழைத்துப் பொதுவாகப் பேசிவிட்டு சிறைக்குள் இருக்கும் சிவத்தையா, ஊமைத்துரை இருவரும் நன்றாக இருக்கிறார்களா? என கேத்தரீன் விசாரிப்பாள். அவன் ஒன்றும் பேசாமல், பொதுவாக தலையசைத்துவிட்டுச் சென்று விடுவான். அவனுக்குத்தான் பேச்சு வராதே என்று அவன் போன பிறகுதான் கேத்தரீன் நினைத்துக் கொள்வாள்.

ஜெயில் சூப்பிரண்டு வீட்டில் ஒரு பெரிய மரம் பட்டுப்போய் விட்டது. அதை வெட்டுவதற்கு ஆள் வேண்டும் என்று போத்தி பகடையிடம் கேத்தரீன் சொல்லிவிட்டாள். மறுநாள் காலையில் இரு ஆட்கள் வந்தனர். அவசரமில்லாமல் மிகப் பொறுமையாக வேலை செய்தனர். இரண்டாவது நாளில் வாலர் கூடக் கேட்டார், "என்ன இந்த இரண்டு ஆட்களும் சோம்பேறிகள்போலத் தெரிகிறதே? ஒரே நாளில் செய்ய வேண்டிய வேலையை இப்படி இழுத்தடிக்கிறார்களே?" என்று கேட்டார்.

கேத்தரீனே பதில் சொல்லி விட்டாள்.

"அவர்கள் பொறுமையாகச் செய்தாலும் முறையாகச் செய் கிறார்கள். பெரிய மரமாக இருக்கிறது. இதை வேகமாக வெட்டிச் சாய்த்தால் பக்கத்தில் உள்ள கட்டிடத்திற்குச் சேதம் வரலாம். பட்டுப்

போன இந்த மரத்தில் உள்ள கூடுகளில் குளவிகள், வண்டுகள், கிளிகள் குடியிருக்கின்றன. சிறு பிள்ளைகள் இருக்கும் நம் வீட்டில் கவனமாக இருக்க வேண்டும் என்று என்னிடம் சொல்லி அனுமதி வாங்கித்தான் வேலையை நிதானமாகச் செய்கிறார்கள். நம் பிள்ளைகளுக்கும் இவர்கள் இருவரையும் ரொம்பப் பிடித்து விட்டது. இந்த மரத்திலிருந்து உட்காரும் இருக்கைகள் செய்யலாம் என்று சொன்னார்கள். அதன் காரணமாகவும் மரத்தை நிதானமாக வெட்டுகிறார்கள்" என்று விளக்கமளித்தாள். அவர்களின் பெயர் என்ன என்று சூப்பிரண்டு வாலர் கேத்தரீனைக் கேட்டபோது பிள்ளைகள் கத்தின, "ஒருத்தர் பெயர் பாண்டியன், இன்னொருவர் கிருஷ்ணப்பா."

"பரவாயில்லை. இவர்கள் இருவரும் பிள்ளைகளுக்கு நெருக்கமாகி விட்டனரா?" என்று சொல்லி வாலர் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். இருவரும் துண்டை இடுப்பில் கட்டி வாலரை வணங்கினார்கள். தங்களைப் பற்றி நல்ல வார்த்தை சொன்னதற்காக கேத்தரீனுக்கும், குழந்தைகளுக்கும் வணக்கம் தெரிவித்தனர்.

வாலர் கிளம்பிவிட்டார்.

சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு "இந்த முறை வேலையை முடித் திடணும்" என்று பாண்டியன் கிருஷ்ணப்பாவிடம் சொன்னான்.

"அம்மன் அருள் இருக்கு. நடந்திரும்" என்றான் கிருஷ்ணப்பா.

இருவரும் திருச்செந்தூர் முருகன் கோயில் இருக்கும் தெற்கு திசை நோக்கிக் கும்பிட்டனர். தூரத்தில் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த கேத்தரீனுக்கு இவர்களது நடவடிக்கை புதிராக இருந்தது. இருவரும் நின்று கொண்டிருக்கும் இடத்திற்கு வந்தாள். அவளுடன் வேலைக்காரி பாத்திமாவும் வந்தாள்.

"அம்மன் அருள் இருக்குன்னு சொன்னீர்களே? ஏதாவது வேண்டுதலா?" என்று கேத்தரீன் கேட்டாள்.

"ஆத்தா, எங்களுக்கு உங்களைப் பார்த்தாலே மிகவும் மரியாதை தரத் தோன்றுகிறது. பெரிய அதிகாரியின் மனைவி என்பதற்காக நிச்சயம் இல்லை. உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் பேசும் முறை, வேலைக்காரர்களிடம் பழகும் முறையைப் பார்த்து எங்களுக்குள்ளேயே மகிழ்ந்து பேசிக்கொள்வோம். உங்களைப் போல் எல்லாரும் இருந்து விட்டால் ஊரில் சண்டை சச்சரவே வராது தாயே" என்றான் பாண்டியன்.

“பெரிய வார்த்தைகள் எல்லாம் ஏன் சொல்லுகிறீர்கள்? நீங்களும் எங்களைப் போல் மனிதர்கள்தான். உங்கள் இருவரையும் எனக்கும் பிடித்திருக்கிறது” என்றாள் கேத்தரீன். இருவரும் வணங்கினர்.

கேத்தரீன் வீட்டிற்குள் சென்ற பிறகு பாத்திமா இருவரையும் கூர்ந்து பார்த்துவிட்டு, “எந்த ஊர்யா உங்களுக்கு, உங்களப் புதுசா பாக்குறேனே?” என்றாள்.

“பாயி ஆத்தா, நாங்க பக்கத்து ஊரு. போத்தி பகடைக்கு தெரிஞ்சவங்க.”

“உங்க பேரு?”

“பாண்டியன், இவரு பேரு கிருஷ்ணப்பா.”

“ஜாதிப் பேரோடு சேர்த்து சொல்லுங்க.”

“பாண்டியன் சேர்வைக்காரர், கிருஷ்ணப்ப நாயக்கர்.”

“இங்கப் பாருங்கய்யா, ஒங்க நன்மைக்குச் சொல்றேன். பாத்து நடந்துக்கங்க. மேம் சாகிபா ரொம்ப சாது. எல்லோரையும் நம்பிடுவாங்க. நானும் ரெண்டு நாளா ஒங்களப் பாத்துக்கிட்டுத்தான் இருக்கேன். நீங்க போத்தி பகடை ஊர் இல்லைன்னு எனக்குத் தெரியும். பாத்து நடந்துக்கங்க. பொழப்பக் கெடுத்துக்கிறாதீங்க” என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

இருவரும் பதில் பேசவில்லை.

இன்றிலிருந்து நான்காவது நாள் பாண்டியன் சேர்வைக்காரரும், கிருஷ்ணப்ப நாயக்கனும் சிறைச்சாலைக்குள் ஆயுதம் தாங்குவார்கள்.

•

9

கோயம்புத்தூர். திருவிதாங்கூர் அரசனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி, திப்பு சுல்தான் இறப்புக்குப் பின் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த நிலப்பகுதி என்று இரண்டு ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த

பகுதிகளும் ஒன்று சேரும் இடம். சுற்றிலும் மலை சூழ்ந்திருந்ததால் இந்தப் பகுதி பாதுகாப்பு மிக்கது. கோயம்புத்தூர்ப் பகுதி மக்கள் புரட்சியாளர்களுக்கு ஆதரவானவர்கள். அதனால், கோயம்புத்தூரைப் போராளிகள் குறிவைத்தனர். சின்னமலைக்குச் செல்வாக்குள்ள பகுதி.

பெரும் சிறை ஒன்றை உடைத்து அங்குள்ள கைதிகளைக் காப்பாற்றினால் ஆற்காடு நவாப்பும் ஆங்கிலேயர்களும் மிரண்டு விடுவார்கள் என்றும், சிறையை உடைத்த போராளிகள் பலம் மிகுந்தவர்கள் என்று பொதுமக்கள் மத்தியில் போராளிகளின் மதிப்பு உயரும் என்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராளிகளுக்குச் சொல்லியிருந்தனர். இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன்பு பாரிஸ் நகரின் பாஸ்டர் சிறையை பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் உடைத்து பிரெஞ்சு அரசன் பதினாறாம் லூயினுடைய ஆட்சியை முடிவுக்குக்கொண்டு வந்ததுபோல கம்பெனி ஆட்சி நடத்தும் ஆங்கிலேயர்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும் என்று சின்ன மருதுவின் தலைமையில் விருப்பாச்சியில் கூடிய குழுவினர் முடிவு செய்தனர்.

யார் யார் என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. சிவகங்கையின் ஆட்களும் விருப்பாச்சி கோபால் நாயக்கரின் ஆட்களும் பல்லடம், திருப்பூர்ப் பகுதிகளுக்கு மே மாதம் கடைசி வாரத்தில் வந்து விடுவதென்று முடிவு செய்யப்பட்டது. கான் இஷா கான் நாலாயிரம் குதிரைப் படையினரை குஜெல்கட்டி கனவாய் வழியாக கோயம்புத்தூருக்கு அழைத்துவருவதென்று முடிவாயிற்று. சிறை உடைப்பிற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த தேதி ஜூன் மூன்று. மொகரம் விழாவின் ஒன்பதாவது நாள். ஆற்காடு நவாப்பின் முஸ்லீம் வீரர்களும், ஆங்கிலேயப் படைகளின் கூலிப்படையாக இருந்த மொகலாய வீரர்களும் முதல் எட்டு நாட்கள் கோயம்புத்தூர் கோட்டைக் காவலில் இருந்தனர். மொகரத்தை முழுமையாகக் கடைபிடிக்கும் முஸ்லீம் வீரர்கள் கடைசி நாளில் குதூகலத்துடனும் இருப்பர். அவர்களுக்குப் புத்தாண்டு அப்பொழுதுதான் தொடங்குகிறது. அன்றைய தினம் போரிடும் வேகம் அற்றவர்களாகவும் போரில் விருப்பமில்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

கல்கத்தாவிலிருந்த கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்ஸி மராத்திய வீரன் தூந்தாஜி வாக்கையும், பெல்ஹாம் கிருஷ்ணப்ப நாயக்கரையும் அவர்கள் பகுதியிலேயே முடக்குமாறு தனது தம்பியும் மைசூர் ரெசிடெண்டுமான லெப்.கர்னல் ஆர்தர் வெல்லெஸ்ஸிக்கு உத்தரவிட்டான்.

ஆர்தர் வெல்லெஸ்லி மைசூர் உடையார் அரசரின் ஆலோசகரான பூர்ணய்யாவிடம் தனது அண்ணன் கவர்னர் ஜெனரலின் உத்தரவைத் தெரிவித்தான். கம்பெனிப் படைகளோடு மைசூர்ப் படைகளும் வர வேண்டும் என்று ஆர்தர் கேட்டுக் கொண்டான். ஏனோ,ஆர்தர் வெல்லெஸ்ஸி தூந்தாஜி வாக்கைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்தான். முதலில் பெல்ஹாம் கிருஷ்ணப்ப நாயக்கரைத் தேடினான். பெல்ஹாம் தாக்கப்பட்டது எனத் தெரிந்தவுடன் தூந்தாஜி வாக் தானாகவே போரட்டத்தைத் துவக்கினார். அவரது குதிரைப்படைக்கு ஷோலாப்பூர், கோல்காப்பூர் அரசர்களின் உதவி கிடைத்தது. கட்டாக் கோட்டையையும் கிட்டூர், பெட்சிப் பகுதிகளையும் தூந்தாஜி வாக்கிடம் ஆங்கிலேயர்கள் இழந்தனர்.

கேரளத்திலிருந்த கேரளவர்மன், தமிழகப் போராளிகளுடன் தொடர்பு கொண்டான். கேரளவர்மனுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. கோட்டயத்திலிருந்து கிளம்பிய கேரள வர்மன் மைசூரையும் கோயமுத்தூரையும் அச்சுறுத்தியதால், கவர்னர் ஜெனரல் மார்னிங்டன் எழுதிய கடிதத்தில், “இந்த எழுச்சியை சாதாரணமாகக் கருத முடியவில்லை. சென்னையின் மேற்குப் பகுதியிலும், கோயம்புத்தூரிலும், மைசூர்ப் பகுதியிலும், கம்பெனியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் நீங்கள் விரைந்து நடவடிக்கை எடுத்தால் ஒழிய நாம் தப்பிக்க முடியாது. கடுமையான இக்கட்டிலிருக்கிறோம்” என்று மெட்ராஸ் கவர்னர் எட்வர்ட் கிளைவ்விற்கு எச்சரித்துக் கடிதம் எழுதினார்.

மொகரம் கடைசி நாள், ஜூன் மூன்று. தூந்தாஜி வாக் கலவரம் ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக கருப்புக் குதிரையை இப்பகுதிக்கு அனுப்புவதாக ஏற்பாடு செய்திருந்தார். கருப்புக் குதிரை தென்பட்டவுடன் கலவரத்தைத் தொடங்க வேண்டும், கம்பெனியின் கோடவுன்களைக் கொள்ளையடிக்க வேண்டும். திட்டமிட்டபடி, தாக்குதலைத் தொடங்க, சிவகங்கைப் போராளிகளும் விருப்பாச்சி வீரர்களும் பல்லடம், திருப்பூர்ப் பகுதிகளில் தூந்தாஜி வாக்கின் கருப்புக் குதிரையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். கருப்புக் குதிரை வரவில்லை. காளாப்பூர், விருப்பாச்சி, தேளி, ஆனைமலை என போராட்டக்காரர்கள் இருந்த எந்தப் பகுதிக்கும் குதிரை வரவில்லை.

“மொகரம் சமயத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியில் வேலைபார்க்கும் முஸ்லீம் வீரர்கள் தங்களின் புத்தாண்டைக் கொண்டாடும்விதமாக, குடித்து கும்மாளமிடுவர். குறிப்பாகக் கடைசி

நாளில் கோட்டையில் காவல் தீவிரமாக இருக்காது. ஆங்கிலேய அதிகாரிகளுக்கு அன்று வருடாந்திரச் சம்பளம் கொடுக்கும் நாள். அவர்கள் சம்பளப் பணத்தை வாங்குவதில் ஆர்வமாகயிருப்பார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவே திட்டமிட்டிருந்தார்கள். காரணம் தெரியாமலேயே அந்தத் தாக்குதலைத் தொடங்குவதா, வேண்டாமா என ஆங்காங்குப் போராட்டக் குழுவினர் தடுமாறிக் கொண்டிருந்தனர். அதனால் கோயம்புத்தூரைத் தாக்குவதற்கு முன்பு மீண்டும் ஒருமுறை கூட்டம் போட்டு முடிவு செய்யலாம் என போராளிகள் நினைத்தனர்.

தன்னோடு "வீரர்கள் யாரும் வர வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, சாரட் வண்டியில் சின்ன மருது ஏறிக்கொண்டார். வண்டியோட்டியிடம், "எதிரில் ஆங்கில அதிகாரிகள் யாரும் வந்தால் நம் சிவகங்கைச் சீமையின் கொடியை ஆட்டி அவர்களுக்கு வணக்கம் தெரிவி. அவர்கள் வண்டியிலிருந்து நமது வண்டியில் பறக்கும் சிவகங்கைக் கொடியைப் பார்த்து வணக்கம் செய்தால், நீ பதில் வணக்கம் செய். வண்டியை மட்டும் நான் சொல்லுகிற இடத்தைத் தவிர்த்து வேறு எங்கும் நிறுத்த வேண்டாம். இப்போது நேராக நத்தம் செல்" என்றார்.

போராட்டத் தலைவர்களான கோயம்புத்தூர் நரசிங்கப்பா, சின்னமலை, அப்பாஜி கவுண்டர், கோவைப் பகுதி போராளித் தலைவர் இச்சிபட்டி அமில்தார் சேக் உசேன், அரவக்குறிச்சி கோர்காக் கவுண்டர், ஓசூர் பத்தே முகம்மது, முன்னாள் தாசில்தார் சேசய்யன், சோமையய்யா ஆகியோருடன் சின்ன மருது ஆலோசனை நடத்தினார்.

"தகவல் தொடர்பு எதுவும் சரியாக அமையவில்லை. தூந்தாஜி வாக்கின் கருப்புக் குதிரையும் போராளிப் பகுதியில் எங்கும் தட்டுப்படவில்லை. நாம் திட்டமிட்ட நாளுக்கு இரண்டு நாட் களுக்கு முன்பே தூந்தாஜி வாக் ஆங்கிலேயர்களுடன் போரைத் தொடங்கி விட்டார் எனத் தெரிகிறது. உறுதியான தகவல்கள் இன்னும் நம்மை வந்து சேரவில்லை. எனவே, இரண்டு நாட்கள் பொறுத்திருந்து பார்க்கலாம்" என்று சின்ன மருது முடிவு செய்தார். அதுவரை அந்தந்தப் பகுதிகளில் பதுங்கியுள்ள போராளிகள் பொதுமக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் அவர்களுக்குத் தேவை யான உணவைப் பொதுமக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கோயம்புத்தூரில் பதுங்கி உள்ளவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்து இருப்பதாக நரசிங்கப்பா சொன்னார். கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் கோயம்புத்தூரில் உள்ள நரசிங்கப்பா வீட்டிற்குக் கோயம்புத்தூர் தாசில்தார் வந்தார். வீட்டில்

இருந்த பெண்களிடம் “ஒரு வாரமாக உங்கள் வீட்டில் விருந்தும் கோலாகலமுமாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். என்ன விசேசம்?” என்றார்.

நரசிங்கப்பாவின் மனைவி, “ஐயா, நாங்கள் மராத்திய பிரா மணர்கள். திருமணத்திற்கு முன்பு சம்பந்திக்கு விருந்து வைப்பது வழக்கம். அவரவர் வசதிக்கேற்ப இரண்டு நாள் விருந்து, ஐந்து நாள் விருந்து, பத்து நாள் விருந்து என்று ஒருமாதம் கூட விருந்து வைப்போம். எங்களது புதிய சம்பந்திகள் எங்களுக்கு நெடுநாளைய நண்பர்கள். அதனால் நாங்கள் ஒரு வாரமாக விருந்து அளித்துக் கொண்டிருக்கிறோம்” என்றாள்.

“நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் உங்கள் வீட்டில் விருந்துண்பவர்கள் எல்லோரும் வெளியூர் ஆண்களே. உங்கள் சம்பந்தி வீட்டிலிருந்து பெண்கள், பிள்ளைகள் யாரும் வரவில்லையா?” என்றார் தாசில்தார்.

“சம்பந்தி வீட்டுப் பிள்ளைகளை அழைத்து வரவேண்டாம் என சொல்லிவிட்டோம். இங்க இருக்கிற சண்டை சச்சரவு உங்களுக்குத் தெரியாததா? பெண்கள் எங்கள் வீட்டின் உள்ளேயிருக்கிறார்கள்” என்றாள் நரசிங்கப்பாவின் மனைவி.

“நான் அந்தப் பெண்களைப் பார்க்க வேண்டும்” என்றபடி உள்ளே நுழையப் பார்த்த தாசில்தாரை நரசிங்கப்பாவின் மனைவி வழிமறித்தார். “பெண்கள் இருக்கும் பகுதியில் நீங்கள் நுழைவதை ஆட்சேபிக்கிறேன்” என்றாள். “எங்கே உங்கள் கணவர்?” என்றதற்கு “அவர் என்ன அய்யா, உங்களை மாதிரி அரசாங்க உத்யோகமா பார்க்கிறார்? இருந்த இடத்தில் உட்காந்துகொண்டு சம்பாதிக்க? அவர் வியாபாரி. நாலு இடத்திற்குப் போவார்.”

“வீட்டில் திருமணத்தை வைத்துக்கொண்டா?”

“ஆம், திருமணத்தின் போதுதானே சம்பாத்தியம் தேவை” என்றாள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நரசிங்கப்பாவின் வீட்டிற்குச் சாப்பிட வந்த இரண்டு நபர்கள் தாசில்தாரைப் பார்த் ததும் ஓட ஆரம்பித்தனர். தாசில்தார் அவர்களைப் பிடிக்குமாறு தன்னுடன் வந்த தலையாரிகளுக்கு உத்தரவிட்டார். தலையாரிகள் விரட்டிச் சென்று இரண்டு போராளிகளையும் பிடித்தனர். அவர் களிடம் விசாரணை

நடத்திய தாசில்தார், சேலம் கலெக்டர் வில்லியம் மெக்லாய்டிற்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பித்தார். கோயம்புத்தூர் ஜெயில் சூப்பிரண்டு லெப்டினென்ட் கர்னல் மெக்காலிஸ்டருக்கு கலெக்டர் வில்லியம் மெக்லாய்டு தகவல் தந்தார். ஆங்கிலேயச் சிப்பாய்கள் கோயம்புத்தூர் நகருக்குள் போராளிகளைத் தேட ஆரம்பித்தனர்.

லெப்டினென்ட் கர்னல் மெக்காலிஸ்டர் ஓய்விலும் விடுப்பிலும் இருந்த ஆங்கிலேயச் சிப்பாய்களை உடனடியாக வரவழைத்தான். இந்தப் போராட்டத்தில் பெருமளவு மராத்தியர்களும் முஸ்லீம்களும் இருப்பதாகச் சந்தேகப்பட்டதால், முஸ்லீம் சிப்பாய்களைக் கலவரத்தை அடக்கப் பயன்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்தான். போராட்டம் நடத்த முடிவு செய்தது ஜூன் என்பதால் பண்டிகை நடக்க இருந்த மூன்றாம் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே போராளிகள் கைதாயினர். நாற்பத்திரண்டு போராளிகளைக் கலெக்டர் வில்லியம் மெக்லாய்ட் கோயம்புத்தூர் சிறைச் சாலையில் வைத்து விசாரணை நடத்தினான். விசாரணை நடந்து கொண்டி ருக்கையிலேயே முகம்மது ஹாசம் தனது கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர்விட்டார். விசாரணையின் முடிவில் நாற்பத்தொரு போராளிகளையும் தூக்கிலிடக் கலெக்டர் வில்லியம் மெக்லாய்ட் உத்தரவிட்டான். சின்னமலையுடன் திருப்பூர்க் காடுகளில் இருந்து கோயம்புத்தூர் நிகழ்வுகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த சின்ன மருதுவிற்குத் தகவல் வந்தது. “கூர்க் காடுகளுக்குள் நடந்த யுத்தத்தில் ஆர்தர் வெல்லெஸ்லி தூந்தாஜி வாக்கைக் கொன்று விட்டான்” என்று சின்ன மருதுவிற்குத் தகவல் சொல்லப்பட்டது. மருது நிலை குலைந்தார்.

•

10

துபாஷ் ரெங்கசாமி முதலியார் குடும்பம் இரண்டாம் தலை முறையாக ஆங்கிலேயர்களுக்குத் துபாஷ் வேலை பார்க்கிறது. இவருடைய அப்பா கந்தசாமி முதலியார் ஏசு சபை பாதிரியார்களுக்குத் துபாஷாக இருந்தார். கந்தசாமி முதலியார் இரண்டு மூன்று பாதிரி யார்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்து அவர்களைத் தமிழிலேயே பேச வைத்திருக்கிறார். துபாஷ் வேலையில் சேர்க்கும் முன் மகன் ரெங்கசாமியை அழைத்து, உட்கார வைத்தார்.

“ரெங்கசாமி, ஒனக்குத் தமிழ், இங்கிலீசு, தெலுங்குன்னு மூணு பாஷ தெரியுங்கிறது முக்கியமில்ல. துபாஷ்ங்கிறது சாதாரணத் தொழில் இல்ல. ரெண்டு பக்கமும் கூர்மையான கத்தி மாதிரி இந்தத் தொழில். ஒரே நாள்ல நிறையச் சம்பாதிக்க முடியும். ஒரே நாள்ல அத்தனையையும் இழக்கவும் வேண்டியிருக்கும். ஹானரபிள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியோட ஏஜென்டாவும் அவங்ககூட இருந்துக் கிட்டே நிறையச் சம்பாதிக்கலாம். பாண்டிச்சேரி வீரா நாயக்கரு, ஆனந்தரங்கம் பிள்ளை, காஞ்சிவரம் பச்சையப்ப முதலியார்ன்னு பல பேரு வெள்ளக்காரன வெச்சு நல்லா சம்பாதிச் சிருக்காங்க. வெள்ளக்காரனோட தயவு வேணுங்கிறவன் அத்தனப் பயலும் துபாஷியப் பாத்து பயந்து நடுங்குவானுங்க. இந்த வெள்ளக் காரங்க நம்மளத்தான் நம்புவாங்க. நிறைய மரியாத குடுப்பானுங்க. வெள்ளக்காரன் சாப்பிடுற எல்லா நல்லதும் அவன் சாப்பிட்டு முடிஞ்சதும் நமக்குத்தான். அவன் குதிரையில போனா அவன் பின்னாலேயே இன்னொரு குதிரையில துபாஷ் போகலாம். சாரட் வண்டியில வெள்ளக்காரன் போனா அவன் உட்கார்ந்திருக்க இருக்கைக்குப் பின்னால துபாஷ் உட்காந்துக்கிரலாம். ஆனா எந்தக் காலத்திலும் நாம அவனுக்குச் சமம் கிடையாது. வேலக்காரன்தான். இத எப்பவும் மறக்கக் கூடாது. பணம் அதிகமாச் சம்பாதிச்சிட்டோம்னு வெள்ளக்காரன் முன்னால நம்ம படோடபத்தக் காமிச்சுக்கக் கூடாது. அவன் பெண்டாட்டி, பிள்ளைக, அவன் கூட்டாளிக, அவன் பழக்கம் வச்சிருக்க வைப்பாட்டிப் பொம்பளக, அவனுங்கள தெனம் பாத்துப் பேசுற சமையக்காரன், நாவிதன், அவன் குழந்தைக்குப் பால் கொடுக்கிற நம்ம ஊர் ஆயாக்கமாரு, இந்த மாதிரி ஆட்கள்கிட்ட ரொம்ப ரொம்பச் சூதானமா நடந்துக்கிறனும். அவங்ககிட்ட நெருங்கவும் கூடாது. விலகிறவும் கூடாது. நாயித்துக்கிழம அவன் சர்ச்சுக்குப் போனான்னா நீ சர்ச்சுக்குள்ள போகக்கூடாது. அவன் உட்கார்ந்த சேரு, சாப்பிட்ட தட்டு,

ஒயின் குடிக்கிற கிளாசு இதுகள எப்பவும் நீ பயன்படுத்தக்கூடாது. ஒவ்வொரு நாளும் கண்டம்தான். ஒரு நாள் கடந்துச்சுன்னா நெல்லையப்பருக்கு நன்றி சொல்லிறணும். தெனம் நெல்லையப்பர் கோயிலுக்கு ஒரு நேரம் கட்டாயம் போயிரணும். அது ஒன்னைய பெரிய ஆபத்துகள்ல இருந்து காப்பாத்தும். தைப்பூசத்துக்குக் கட்டாயம் திருச்செந்தூர் முருகனை நடந்து போய்ப் பாத்துட்டு வந்துரு.

வெளியூர்ப் பிரயாணத்துக்குப் போறவனுக்குக் கட்டிக்கொடுத்த கட்டுச் சோறு மாதிரி நா எனக்குத் தெரிஞ்சதச் சொல்லியிருக்கேன். நல்ல படியாப் பொழச்சுக்கோ. உன்னையப் பத்தி முழுசா புது கலெக்டர் லூஷிங்டன்கிட்ட சொல்லிட்டேன். எனக்கு ஏன் வேல போச்சு? நா ஏன் ஜெயில்ல கொஞ்ச நாள் இருந்தேன்? என் சொத்துக் கள ஏன் கம்பெனி பறிமுதல் பண்ணுச்சுன்னு நீ அவர்கிட்டப் பேச வேண்டிய அவசியம் இருக்காது. அவரா விசாரிச்சாருன்னா "யுவர் எக்ஸலன்ஸி, என் அப்பா உங்ககிட்ட அவரப்பத்தி எல்லாம் சொல்லிட்டதா சொன்னாரு. நா சின்னப் பயலாயிருக்கயிலேயே அப்பாவுக்கு இந்தப் பிரச்சனை வந்துருச்சி. என்னிடம் அவர் ஒன்னும் சொல்லல. வேணும்னா நா அவரக் கூட்டிக்கிட்டு வர்றேன்னு சொல்லிரு."

"சரிப்பா."

"சரிடா ரெங்கசாமி, என் வாழ்க்க மாதிரி ஒனக்கு அமய வேண்டாம். போன ஜென்மத்துல ரொம்பப் பாவம் பண்ணுனவனா நா இருந்துருக்கேன். நீ போன ஜென்மத்துல ரொம்ப புண்ணியம் பண்ணுனவனாயிரு"ன்னு சொல்லித்தான் கலெக்டர் லூஷிங்டன்னிடம் வேலைக்குச் சேர்த்துவிட்டார்.

துபாஷ் ரெங்கசாமிக்கு வயது முப்பதுக்குள்ளேதான். ஆள் மிகவும் குள்ளமாகவும் சிவப்பாகவும் இருப்பான். தலைமுடி அவனுக்கு ரொம்ப அதிகம். அதை அள்ளி முடிந்திருப்பான். தினமும் காலை ஐந்து மணிக்குத் தாமிரபரணி ஆற்றங்கரையில் அவனைப் பார்க்கலாம். இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டுத் தலையைத் தண்ணீருக்குள் முங்கி முங்கிக் குளிப்பான். குளித்தவுடனேயே ஈரத் தலையை ஆற்றுக்குள் நின்று கொண்டு துவட்டுவான். துபாஷின் உடன் வரும் வேலைக்காரன் சுடலை திருநீர்ப் பையை நீட்டுவான். திருநீர்ப் பையிலிருந்து கொஞ்சம் திருநீரெடுத்து தனது இடது கையில் ரெங்கசாமி வைத்துக் கொள்வான். வேலைக்காரன் சுடலை தன் கையில் கொஞ்சம் தண்ணீரை அள்ளித்

துபாஷின் கையில் உள்ள திருநீர்மீது லேசாக ஊற்றுவான். அதைப் பரபரவென்று தேய்த்து திருநீரை நெற்றியில் பூசுவான். அப்புறம் கை, மார்பு என்று தேய்த்துக் கொள்வான். ஆரம்பத்தில் தண்ணீர் சேர்க்காமல் வெறும் வீபூதியை மட்டும் நெற்றியிலும், மார்பிலும் பூசிக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் அப்பா கந்தசாமி முதலியார் சொல்லிவிட்டார்.

“டேய் ரெங்கசாமி, எப்ப நா கிறிஸ்துவனா மாறுனனோ அப்பவே எனக்கு புதுப் பொறப்பு வந்துருச்சு, ஒன்னைப் பொறுத்த வரை நா புது மனுஷன். நான் உயிரோடு இல்ல. நீ அப்பனை இழந்தவன். அதனால நீ தண்ணில கரைச்ச விபூதியைப் பூசலாம்”ன்னு சொல்லியதால் ரெங்கசாமி திருநீற்றில் தண்ணீர் கலந்து பூசிக் கொள்கிறான். பூசிய உடனே அவனுக்குச் சூரியனைப் பார்த்தாக வேண்டும்.

சூரியனை அவன் பார்ப்பதே வித்தியாசமாக இருக்கும். இரண்டு கை விரல்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு அப்படியே கைகளை உயரத் தூக்குவான். பத்து விரல்களுக்கு நடுவில் தெரிகின்ற இடைவெளியில் சூரியனைப் பார்ப்பான். அப்போது தன் கூட வந்த சுடலையிடம் ஏதாவது பேச வேண்டியிருந்தால் பேசுவான்.

“டேய், ஊர்ல என்ன விசேசம்டா”என்று துபாஷ் கேட்டவுடனே சுடலைக்குத் தைரியம் வந்து விடும். தனக்குத் தெரிந்த ஏதாவது ஓர் ஊர் நடப்பை அவன் சொல்லுவான்.

நான்கு ஐந்து நாட்களாகத் துபாஷிடம் சொல்ல ஒரு முக்கியமான தகவல் அவனிடம் இருக்கிறது. “எப்ப இந்த வார்த்தையைக் கேப்பாரு”ன்னு தான் சுடலை காத்துக் கொண்டிருந்தான்.

“துபாஷ் சாமி, ஒரு முக்கியமான விசயம். ஊருக்குள்ள சத்த மில்லாம நடந்துக்கிட்டிருக்கு. கொஞ்சம் அந்த மரத்தடியில நின்னு நிதானமா கேட்டீங்கன்னா நா படபடப்பில்லாம சொல்லுவேன்.”

“அப்படி என்னடா பெரிய விசயம்? சரி வா, மரத்தடிக்குப் போலாம்” என்று சுடலைக்கு முன்னால் துபாஷ் நடந்தான். மரத் தடியில் துபாஷ் நின்று கொண்டான்.

“சொல்லு.”

“துபாஷ் சாமி, இந்த வருசம் கார்த்திகை, மார்கழி முழுசும் திருச்செந்தூரு கோயிலுக்குக் கூட்டம் சரியா வரலைங்கிறது ஒங் களுக்குத் தெரியும். இங்கயிருந்து நாம திருச்செந்தூருக்கு நடந்து போகயிலேயே நீங்க எங்கிட்ட கேட்டீங்க. “என்னடா ஏதோ வித்யாசமா இருக்கேன்னு” திருச்செந்தூர்ல வச்சும் சிலர சாமி விசாரிச்சீங்க. அப்ப யாருக்கும் பதில் தெரியல. எம் மச்சான அங்கயே பத்து நாளு இருக்க வச்சிட்டேன். அவன் ஒரு தேசாந்திரி. எப்படியோ பத்து நாளு ஒரே இடத்துல இருந்துட்டான். அவன் அப்படியே மதுர, ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம்ன்னு போயிட்டு இப்ப நாலு நாளக்கி முந்திதான் திருநெல்வேலிக்கு வந்தான். என்னடா விவகாரம்ன்னு கேட்டேன். அவன் சொல்லச் சொல்ல எனக்கு வெலவெலத்துப் போச்சு.”

துபாஷ் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டான். “டேய் சுடல, எல்லா அனாச்சாரத்தையும் நாம பாத்துட்டோமடா. நெல்லையப்பர் கோயிலு, திருவண்ணாமல அண்ணாமலயார் கோயிலு, தஞ்சாவூர் பெரிய கோயிலு இதெல்லாம் வெள்ளக்காரங்க வெடிமருந்து வைக்கிற சரக்கு கோடவுனா இருந்திருக்கு. மதுர மீனாட்சி துலுக்கனுங்களுக்குப் பயந்து காளையார்கோயிலுக்கும், மானா மதுரைக்கும் போக வேண்டியதாச்சு. எங்க அப்பன்கூடப் பத்து வருஷத்துக்கு முந்தி காந்திமதி, நெல்லையப்பன்னு கிடந்தவரு, இன்னிக்கு மேரியம்மா, கிறிசாத்துன்னு போயிட்டாரு. நம்ம தம்பிரான் சாமி கூட நெல்லையில இருக்கிறதவிட தஞ்சாவூர் சரபோஜி ராஜாவோட சீமையில இருக்கலாம்னு அங்கேயே போயிட்டாரு”ன்னு சொன்னவர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குரலைக் குறைத்துக்கொண்டு சற்று மெதுவாகச் சொன்னார். “கட்டபொம்மனத் தூக்குல போட்டாச்சு. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்ட தரைமட்டமாயிடுச்சு. சாமியும் ஒரு வருசத்துக்குமேல பாளையங்கோட்ட சிறையில கிடக்கு.”

“துபாஷ்சாமி, நா சொல்ல வர்றதும் சாமியப் பத்தித்தான். ஊமச்சாமி ஜெயில்ல இருக்கிறது அவங்க ஆளுகளுக்கு ஆங்கார மாயிருக்காம்.”

“அவங்க ஆளுன்னா? கம்பளத்து நாயக்கமாருக எவ்வளவு பேருடா இந்தப் பக்கம் இருக்காங்க? மொத்தம் எழுபத்தி மூணு ஜமீன்ல ஒரு பத்து ஜமீன் தேறுமா? மீதிப் பூராம் மறவரு, நாயக்கர் ஜமீன்தானடா? பத்துக் கம்பளத்து நாயக்கர் ஜமீன்ல பாதிப்பேருக்கு மேல கட்டபொம்மன்

சண்டயிலயே செத்துப் போனாங்கடா. இருக்கிறவங்களும் வெள்ளக்காரனுக்குப் பயந்து போயி ஊரவிட்டு ஓடிட்டாங்கல்ல?"

"சாமி, உங்களுக்குத் தெரியாதது ஒன்னுமில்ல. ஊமச் சாமிய எல்லா ஜாதிக்காரங்களுக்கும் புடிச்சிருக்கு. எல்லா ஜாதியிலும் அவருக்கு நெருக்கமான ஆளுங்க இருக்காங்க. இந்த வருசம் கார்த்திக, மார்கழி மாசங்கள்ல திருச்செந்தூருக்கு ஆளுக ரொம்ப வராததுக்குக் காரணம், அவரு சிறையில இருக்கையில நமக்குக் கோயில் திருவிழா எதுக்குன்னுட்டு யாரும் வரலயாம். இன்னொரு பேச்சும் ஓடிக்கிட்டிருக்கு. சாமிய இப்படியே அவரு சாகுற வர பாளையங்கோட்ட சிறையிலயே வச்சிருவாங்களா? இல்ல நம்ம ராமநாதபுரம் சேதுபதி மாதிரி கொஞ்ச நாள் சிறை, கொஞ்ச நாள் அரசாட்சின்னு வெளியே விடுவாங்களா? வெளிய விட்டாலும் சாமிய ராசாவாக்குவாங்களா? இல்ல அவுக அண்ணன் சிவத்தய்யாவ ராசா ஆக்குவாங்களான்னு ஊருக்குள்ள பேச்சு ஓடிக்கிட்டிருக்கு."

"இது எனக்குத் தெரியும்டா. ஒன் சொந்தக்காரன் ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம் போனப்ப ஏதோ விசாரிச்சான்னு சொன்னியே? அங்கயெல்லாம் என்ன பேசுறாங்களாம்டா?"

"அதுதான் சாமி சொல்ல வந்தேன். ஊமச் சாமிக்குச் சிவகங்க சின்ன மருது ரொம்ப நெருக்கமாம். அண்ணன் தம்பி மாதிரி பழக்கமாம். இப்ப ஊமச் சாமி பாளையங்கோட்டைச் சிறையில இருக்கிறது அவருக்குக் கோவத்த உண்டாக்குதாம். இது விசயமா பெரிய மருதுவுக்குப் பெரிய அபிப்ராயம் ஒன்னும் இல்லன்னாலும் தம்பி சொல்லத் தட்ட மாட்டாராம். இந்த ரெண்டு மருதுங்களால பெரிய சண்டை ஒன்னு வரப்போகுதுன்னு மதுரப் பக்கம் பேசிக் கிறாங்களாம். நம்ம திருநெல்வேலி கலெக்டர் லூஷிங்டன் துரை கிட்ட பெரிய மருதுவுக்கு நல்ல பழக்கம் இல்லன்னு துபாசு சாமிக்குத் தெரியும். ஆனா மதுர, திருச்சி கலெக்டருககூடப் பெரிய மருதுக்கு நல்ல பழக்கம் இருக்காம். இந்த நெலமையில இன்னோரு யுத்தத்த சனங்க தாங்காதுங்க. மருது பாண்டியர்களையும் ஊமச் சாமியையும் ஒன்னு சேர விடக்கூடாது துபாஷ் சாமி. ஊரு தாங்காது."

"டேய், பெரிய பெரிய பேச்செல்லாம் பேசாத. எங்கிட்டப் பேசினத, சொன்னத யாருகிட்டயும் சொல்லிறாத. தோல உரிச் சிருவாங்க."

"இல்ல துபாசு சாமி. ஒங்ககிட்ட நா எத மறச்சிருக்கேன்?"

“சரிடா, எனக்கு மனசு சரியில்ல. நா நெல்லயப்பர் கோயிலுக்குப் போறேன். ஒரு ஆள என் வீட்டுக்கு அனுப்பி வேட்டி, சட்ட வாங்கி வரச் சொல்லு. நீ கோயிலுக்கு எனக்கு முன்னாலேயே ஓடிப்போய் ஒனக்கும், எனக்கும் தளிகச் சோறு வாங்கி வை. நான் கோயில்லேயே சாப்பிட்டுக்கிறேன். இன்னிக்கு நான் கோயில்லயிருந்து நேராப் போய்க் கலெக்டரப் பாக்கணும்.”

“சரி சாமி.”

இருவரும் சிறிது நேரத்தில் முன்னும் பின்னுமாக நெல்லையப்பர் கோயில் வந்தனர். இருபத்து ஐந்து ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்த கோயில். இது போன்ற அதிகாலை நேரங்களில் நான்கு, ஐந்து அய்யருகள்தான் கோயிலுக்கு வருவார்கள்.

அன்றும் நான்கைந்து அய்யர்கள் வந்திருந்தார்கள். துபாஷைக் கோயிலுக்குள் பார்த்ததும் துபாஷிற்கு அய்யர்கள் வணக்கம் சொன்னார்கள். துபாஷ் பதில் வணக்கம் சொன்னார்.

சுடலை பரபரவென்று இருந்தான். ஓர் ஆளைத் துபாஷின் வீட்டிற்குத் தகவல் சொல்லி விரட்டி விட்டான். மடப்பள்ளிக்குள் புகுந்து, ‘இரண்டு பேருக்குத் தளிகச் சோறு எடுத்து வை’ என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் ஓடிவந்தான். தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. துபாஷிற்குத் தீபத்தைக் காண்பித்ததும், “எல்லாரும் நல்லாயிருக்கணும்”னு அவர் மெதுவாக முணங்கியது சுடலைக்கு மட்டும் கேட்டது. துபாஷ் சுடலையைத் திரும்பிப் பாத்தார். “எல்லாம் செஞ்சுட்டேன்”ங்கிற மாதிரி தலையை மெதுவாக ஆட்டினான். துபாஷ் கருவறையிலிருந்து அர்த்த மண்டபத்திற்கு வந்தார்.

“டேய் சுடல, கோயிலுக்குக் குத்தக சரியா வருதான்னு பேஷ்காரரை நாளைக்கு விசாரிச்சு வை. தாசில்தார் நேத்துச் சொன்னாரு. மோகினி வரியும், சாமி வரியும் இந்த வருசம் சரியா வசூலாகலன்னு. பெருமாள் கோயிலுக்கு மோகினி வரிய எப்படி யாவது ஐயங்காருங்க குத்தகக்காரங்ககிட்ட இருந்து வசூல் பண்ணிடு வாங்க. சிவன் கோயிலுக்கு வர வேண்டிய சாமி வரிய யாரு சிரத்த எடுத்து வசூலிக்கப் போறா? இருபத்து அஞ்சு ஏக்கர்ல கட்டின நெல்லையப்பர் கோயிலுக்கு நம்ம ஜமீன்தார்களும், தம்பிரானும் செலவு செஞ்சாத்தான் உண்டு. சாமி வரிய குத்தகக்காரங்க கிட்ட வசூல் பண்ண பாளையங்கோட்ட தாசில்தாரத்தான் பிடிக்க வேண்டி யிருக்கு. தாசில்தார்கிட்ட நா பிராது கொடுத்தேன்னா

நல்லா யிருக்காது. பஞ்ச காலத்துல துபாஷ் குத்தகக்காரங்கள கசக்கிப் பிழிய வைக்கிறாரேன்னு தாசில்தாரு நினைச்சாலும் நினைப்பாரு. அதனால நாம புகார் பண்ணுறது மாதிரியில்லாம இருக்கட்டும். கோயில் பட்டர்கிட்ட புகாரா எழுதி வாங்கி அதத் தாசில்தார்கிட்டக் கொடுத்திரு. "ஓய் அய்யருமாருக, நீங்க யாராவது ரெண்டுபேரு குருக்களோட போய் தாசில்தாரப் பாருங்கய்யா. நா அனுப்பினேன், யோசனை சொன்னேன்னு தாசில்தார் கிட்ட சொல்லி வைக்காதேயும். நீங்களா பிராது கொடுத்த மாதிரி கொடுத்துட்டு வாங்க."

"அப்படியே இந்தக் கடிதாசியையும் தாசில்தார்கிட்ட கொடுத்திருங்க. ரொம்ப முக்கியம்னு நான் சொன்னேன்னு தாசில்தார்கிட்ட சொல்லிக் கொடுங்க" என்று சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

மண்டபத்தில் துபாஷ் ரெங்கசாமி உட்கார்ந்தார். தளிகைச் சோற்றைச் சுடலைக் கொண்டுவந்து வைத்தான். கை கழுவத் தண்ணீர் கொடுத்தான். கையில் தண்ணீரை அள்ளிச் சாப்பாடு இருந்த இலையைச் சுற்றி மூன்று முறை தண்ணீரைத் தெளித்தார். சர்க்கரைப் பொங்கல் அன்று நைவேத்தியமாகியிருந்தது. இரண்டு வாய் சாப்பிட்டார். "டேய் சுடல, ஒனக்கு?" என்றார்.

"இருக்கு சாமி, நீங்க சாப்பிட்டுக் கை கழுவுற நேரத்துல நா வாயில அள்ளிப் போட்டுருவேன்."

கோயிலைவிட்டுப் புறப்பட்டு, துபாஷ் நேராகக் கலெக்டர் பங்களாவுக்கு வந்தார்.

•

லூஷிங்டன்னுக்கு குதிரைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அதுவும் கலெக்டர் பங்களாவில் வெள்ளைக் குதிரை ஒன்று இருக்கிறது. அதில்தான் அதிகம் விரும்பிப் பயணம் போவார். குதிரைகளைப் பராமரிக்கிற ஜாபர் பாயிக்கு, குதிரை லாயத்தில் எந்தக் குதிரை முக்கியமானது என்று தெரியும். இந்த புது கலெக்டர் வந்த ஆறு மாசத்தில் இந்த வெள்ளைக் குதிரையில்தான், பலமுறை போயிருக்கிறார் என்பதால் தினமும் காலையில் முதல் வேலையாக அந்தக் குதிரையைத்தான் தடவிக் கொடுப்பான். தண்ணீர் வைப்பான். பச்சைப் புல்லாகப் பார்த்துப் போடுவான். வெள்ளைக் குதிரையின் பெயர் வெள்ளையம்மா. கொள்ளுப் பயிரைக் கல் இல்லாமல் பொறுக்கி வேக வைத்துக் கொடுக்க அவன் பெண்டாட்டி சிக்கந்தர் அதிகாலையிலேயே வந்துவிடுவாள். “சிக்கந்தரு, எனக்குச் சோறு ஆக்கிறதுலகூட முன்னப்பின்ன இருந்துக்க. இந்தக் குதிரகளுக்குக் கொள்ளு அவிக்கிறதுல மாத்திரம் கொற வச்சிராதே. நீதான் பாக்குறேல்ல, கலெக்டர் துர அடிக்கடி இந்த வெள்ளக் குதிரக்கிட்ட வர்றத”ன்னு சொல்லிப் பெண்டாட்டிய மிரட்டி வைத்திருந்தான்.

அதிகாலையில் வெள்ளக் குதிரைகிட்ட நின்று கொண்டு அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான் கலெக்டர் லூஷிங்டன்.

“துர, நீங்க பாக்கும்போதெல்லாம் இந்த வெள்ளையம்மாவக் கழுத்துல தடவிக் கொடுத்தீங்கன்னா, அது உங்கள நல்லா அடயாளம் கண்டுக்கிரும். ஒரே மாதிரி ஒரேயிடத்துல தடவிக் கொடுத்தீங்கன்னா, நம்ம துரதான்னு தெரிஞ்சிக்கிரும். வெள்ளையம்மா அஞ்சறிவு சீவாத்துன்னாலும் மனுசன நல்லா புரிஞ்சிக்கிரும். முதுகு மேலே ஏறுறது புது ஆளு, பழக்கமில்லாத ஆளு, பயப்படுற ஆளுன்னு இப்படி ஏதாவது குதிரைக்குத் தெரிஞ்சா எந்தக் குதிரயும் ஆளக்கீழ தள்ளி விட்டுரும்.”

“யெஸ், எனக்கு டிரயினிங்ல இதச் சொல்லிக் குடுத்திருக்காங்க. ஜீசஸ், இது வரைக்கும் என்னிடம் ஒரு பத்துக் குதிரைகயிருந்திருக்கு. அதுகள்ல இந்த வெள்ளையம்மா பெஸ்ட்.”

துபாஷ் ரெங்கசாமி குதிரை லாயத்தை நோக்கி வேகமாக வருவதை கலெக்டர் லூஷிங்டன் பார்த்தார். காலை நேரங்களில் அவர் கலெக்டர் பங்களாவிற்கு வருவதில்லை. இது துபாஷின் சாப்பாட்டு நேரம். இவ்வளவு வேகமாகவும் அவர் நடந்து வரமாட்டார். துபாஷ் முகத்தில்

பரபரப்பு இருப்பதையும், அவர் துரத்தில் வரும்போதே கலெக்டர் கண்டு பிடித்துவிட்டார்.

“ஜாபர் பாயி. நீ வெள்ளயம்மாவ நல்லா தயார் பண்ணு” என்று சொல்லிவிட்டு, கலெக்டர் உள்ளே போக நடந்தார்.

குதிரை லாயத்தைவிட்டுக் கலெக்டர் நகரும் வரை காத்திருந்த சிக்கந்தர், ஜாபரிடம் ஓடிவந்தாள். “ஏய்யா, நீ எத்தன முற குதிரககிட்ட எத்து வாங்கியிருக்க? கடி வாங்கியிருக்க? தள்ளி விட்டுருக்குக. இந்தத் துர என்னாடான்னா இதுவர பத்து குதிரகக் கூடப் பழகினாலும் எதுவும் அவரத் தள்ளிவிட்டதில்லன்னு சொல்லுறாரு. அதுகளுக்கும் துலுக்கன்னா எத்தலாம், வெள்ளக்காரங்கன்னா பயப்படணும்முன்னு தெரியுமோ?”

கலெக்டர் தூரத்தில் நடந்து போவதை ஜாபர் பார்த்தான். சிக்கந்தரைப் பக்கத்தில் வா என அழைத்தான். அவளும் கலெக்டர் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டே ஜாபரிடம் வந்தாள்.

“இங்கப் பாரு புள்ள. குதிரகளுக்கு வெள்ளக்காரங்க, துலுக்கங்க, கம்பளத்துக்காரங்க, தேவருங்க, ஐயருங்கன்னு வித்தியாசம் எதுவும் தெரியாது. எல்லாக் குதிரையும் காலையில எந்திரிச்சதும் லேசா சண்டித்தனம் பண்ணத்தான் செய்யும். சண்டித்தனம் பண்ணுறதத் தடவிக் கொடுத்து அதுக்குப் புடிச்சதச் சாப்பிடக் கொடுத்தோம்னா, சாதுவாகிரும். குதிரக்காரன் காலைல படுறபாடு துரைக்குத் தெரி யாதுல்ல. அன்னைக்கு எது சண்டித்தனம் பண்ணாத குதிரையோ அதத்தான் அவருகிட்ட கூட்டிக்கிட்டுப் போவோம்.”

“வெள்ளையம்மா மட்டும் ஏன் சண்டித்தனம் பண்ண மாட்டீங்குது?”

“ஒன்னு தெரிஞ்சுக்க. பொம்பள குதிரக பெரும்பாலும் சண்டித் தனம் பண்ணாதுக. அதனால அதுகதான் துரைகளுக்கு சவாரிக்காகப் போகுங்க. ஆம்பள குதிரகிட்ட கடிவாங்கவும், எத்து வாங்கவும்தான் நான் இருக்கேன்ல“ என்றான். சிக்கந்தர் வாய்ப் பொத்திச் சிரித்தாள்.

திருநெல்வேலி கலெக்டர் லூஷிங்டன் குதிரை லாயத்தில் இருந்து வரும்போது துபாஷ் ரங்கசாமி முதலியார் அவரைப் பார்த்து கூனிக்குறுகி உடலை வளைத்து இருகரம் கூப்பிக் கும்பிட்டார்.

“யுவர் எக்ஸலன்ஸி, இந்த வருசம் கார்த்திக, மார்கழியில திருசெந்தூர்ல கூட்டமே இல்லன்னு திருச்செந்தூர் கிராம முன்சீப் சொன்னதாத் தூத்துக்குடி தாசில்தார் தாக்கல் சொல்லிருக்கார். அந்த ஊர் கிராம முன்சீப் ரொம்ப விவரமானவன். அவன மதியம் வரச் சொல்லித் தகவல் அனுப்பியிருக்கேன். தளபதி மெக்காலே வீட்ல சாயங்காலம் நடக்கிற விருந்துல துரைகள் கலந்துகிட்டிருக்கயில அவன் வாயப் புடுங்குறேன். அவன் சொந்தக்காரங்க பாஞ்சாலங் குறிச்சியில், நாகலாபுரத்துல இருக்காங்க. அதுனால அவனுக்கு நாம எதிர்பாக்கிற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்.”

“மிஸ்டர் முதலி, நீங்கள் என்னிடம் சொல்லுவதைவிடக் கூடுதல் தகவல்கள் உங்களிடம் இருக்குமென்று எனக்குத் தெரியும். வாருங்கள் என் அறைக்குப் போவோம்” என்று சொல்லி, கலெக்டர் மாளிகைக்குள் லூஷிங்டன் நுழைந்தான்.

தாமிரபரணி ஆற்றின் கரையில் கட்டப்பட்ட பெரிய கல் கட்டிடம் அது. கட்டிடத்தைச் சுற்றித் திசைக்கு ஒருவராக நான்கு சிப்பாய்கள் நின்றிருந்தனர். ஒருவன் பார்வையில் ஒருவன் விழும்படி நின்றிருந்தனர். நாலு பேரில் ஒருவன் மட்டும் வெள்ளைக்காரன். மற்ற மூவரும் உள்ளூர்க்காரர்கள். வெள்ளைக்காரன் சிகப்பு நிறத்தில் சீருடை அணிந்திருந்தான். உள்ளூர்க்காரர்கள் காக்கி நிறத்தில் சீருடை அணிந்திருந்தனர்.

கலெக்டர் லூஷிங்டன்னுடன் துபாஷ் ரெங்கசாமி முதலியார் பேச வருகிறார் என்றால் குறைந்தது ஒரு மணி நேரமாவது தனியாகப் பேசுவார்கள் என்று கலெக்டர் மாளிகையில் உள்ளவர்களுக்குத் தெரியும். வெளியாட்களோ அதிகாரிகளோ அந்த நேரத்தில் வந்தால் அவர்களை உட்காரவைக்கத் தனியாக ஓர் அறை இருந்தது. அந்த அறையிலிருந்து பார்த்தால் குதிரை லாயம் தெரியும். அந்த அறைக்குள் சென்று சுடலை உட்கார்ந்துகொண்டான். திரைச்சீலைபோல் வெட்டி வேர் தட்டி தொங்கிக்கொண்டிருந்தது. அந்தத் தட்டியை சுடலை விலக்கிப் பார்த்தான். அதேநேரம், ஜாபர் பாயும் அவன் பெண்டாட்டி சிக்கந்தரும் சுடலையைப் பார்த்துவிட்டனர். சுடலை குதிரை லாயத்திற்கு மெதுவாக வந்தான். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு “ஜெயில் சூப்பிரண்டன்டு பொண்டாட்டிய தினமும் சாயங்காலம் ஆத்தங்கரைக்குக் கூட்டிட்டுப்போறது ஒம் பொஞ்சாதிதானே? ஆனா அந்தப் பொம்பள இது மாதிரியில்லயே. இல்ல இது தானா அது?”

“ இல்லய்யா சுடல, அது வேற. அது என் ரெண்டாம் சம்சாரம்” என்றான் ஜாபர்.

“அப்படியா? சரி, சரி. பாயி ஒம் பொஞ்சாதிகிட்ட கொஞ்சம் விசாரிக்கணும்?”

“எதப்பத்தி?”

“ஜெயில் சூப்பிரண்டு பொஞ்சாதி பத்தி.”

“ஏம்ப்பா சுடல, என்ன சொல்லுற? ஜெயில் சூப்பிரண்டு பொண்டாட்டி பத்தி நீ எம் பொண்டாட்டி கிட்ட விசாரிக்கணுமா? ஒனக்கு ஒன் உயிர்மேல பயமில்லயா? எங்க பொழப்புல மண்ண அள்ளிப் போட்டுறாத சாமி. கிளம்பு கிளம்பு. அங்கப் பாரு வெள்ளக்கார சிப்பாய் நம்மளயே பாக்குறான். கூப்பிட்டு என்னைய விசாரிச்சான்னா நாம் பாட்டுக்கு ஏதாவது உளறி வைக்கப் போறன்.”

“பயப்படாதே. அவன் ஒன்னும் நம்மளப் பாக்கல... ஒம் பொஞ்சாதியத்தான் மொறச்சு பாத்துக்கிட்டு இருக்கான். ஒம் பொஞ்சாதிய அவங்கிட்ட ஜாக்கிரதயா பழகச் சொல்லு. ஏற்கனவே அவன் ரெண்டு மூணு பொம்பள விசயத்தில் சிக்கின பய. அதனால்தான் அவனப் படையில வச்சிக்கிரல. வெடி மருந்து காவ காக்கிற வேலைல கூட அவன் இருக்கக்கூடாதுன்னு சரக்கு மூட்டைகள எண்ணுற வேலைக்கு அனுப்பிட்டாங்க. அப்புறம் அங்க இருந்தும் விரட்டி விட்டுட்டாங்க. கெஞ்சிக் கூத்தாடி மறுபடியும் இங்க காவ காக்கிற வேலைக்குச் சேந்திருக்கான். என்னையக் கூட கேட்டுட்டுக்கிட்டே இருக்கான். ஏதாவது பொண்ணு பாருன்னு, விதவைன்னாலும் பரவாயில்லையாம்.”

“சரி கிளம்பு சுடல. சாயந்திரமா வீட்டுப் பக்கம் வா. நா அவகிட்டக் கேட்டு வச்சிருக்கேன்.”

“நானும் அவளப் பாத்து விசாரிக்கணும் பாயி.”

“அப்ப சாயங்காலம் லாயக்குப்படாது. அந்த நேரம் அவ ஜெயில் சூப்பிரண்டு பொண்டாட்டிகூட ஆத்தங்கரப் பக்கம் போயிருவா. ராத்திரி வர்றயா?”

“சரி, பொழுது சாயத் துபாஷ் சாமி அவர் வீட்டுக்குப் போயிருவாரு. அதுவும் இன்னிக்கி சாயங்காலம் தளபதி மெக்காலே

தோட்ட வீட்டுல பார்ட்டியிருக்கிறதால சாயங்காலமே துபாஷ் வீட்டுக்குக் கிளம்பிருவாரு. நா வீட்டுல அவர விட்டுட்டு ஒன் வீட்டுக்கு வர்றேன்."

"யப்பா, சுடல வம்பு தும்புல என்னையும், எம் பொஞ்சாதிகளையும் மாட்டி விட்டுறாதே. நாங்க தாங்கமாட்டோம்."

"அட கிறுக்குப் பாயி, நா பாடுபடுறதே எல்லாத்தையும் காப்பாத்தத்தான். பயப்படாதே, ஒன்னும் தப்பா ஆகாது" என்று சொல்லிட்டு மீண்டும் விருந்தினர்கள் காத்திருக்கும் அறைக்கு வந்த சுடலை கலெக்டரின் அறைக்குள் அவர் துபாஷிடம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவர்கள் பார்வையில் படாமல் ஒதுங்கி உள் நகர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

ரெங்கசாமி முதலியார் சொன்னதைக் கலெக்டர் லூஷிங்டன் கவனமாகக் கேட்டுக்கொண்டான். முதலியார் சொன்ன ஆட்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்களை கருப்பு மையினால் ஒரு தாளில் குறித்துக்கொண்டான். மருது பாண்டியர்கள், ஊமத்துரை, காளையார் கோயில், சிறுவயல், கமுதிக் கோட்டை என்ற பெயர்களை அவர் மெட்ராஸில் அன்டர் செகரட்டரியாக இருக்கும்போதே கேள்விப் பட்டிருக்கிறான். ஹானரபிள் கம்பெனிக்கு எழுதும் கடிதங்களில் இந்தப் பெயர்களை அடிக்கடி எழுதியிருக்கிறார். ஆனால், இப் போதுதான் அவனுக்குத் தெரிகிறது. இந்தப் பகுதியில் நிலவும் அசாதாரணமான அமைதி, பொதுமக்கள் பண்டிகையைக்கூட கொண்டாடாமல் ஒதுங்கியிருப்பது ஏதோ ஒரு பெரிய பிரச்சனைக்கு முன்னோட்டம் என்று முதலியார் இப்போது சொன்னதை லூஷிங்டன் முழுமையாக ஏற்றுக் கொண்டான்.

"முதலியார், ஏதோ பெரும் பிரச்சனை வரப்போகிறது என நீங்கள் கணித்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்லப் போவது நடக்கவே நடக்காததாகக்கூட இருக்கட்டும். இந்த விசயத்தில் நான் உங்களை முழுமையாக நம்புகிறேன். ஏற்கனவே உங்கள் அப்பா கந்தசாமி முதலியார் ஏசு சபைப் பாதிரியாரைத் தவறாக வழி நடத்தியதற்காக அவருக்குத் தரப்பட்ட தண்டனையை நீங்கள் அறிவீர்கள்."

"யுவர் எக்ஸலன்சி, என்னைத் தயவுகூர்ந்து மன்னிக்கவும். எனது தகப்பனார் செய்யாத தவறுக்காகப் பழிவாங்கப்பட்டவர். நியாய உணர்வுடன் வாழ்பவர். வெள்ளைக்காரர்கள்மீது விசுவாசமாக இருந்ததற்காகக் கர்த்தருக்குத் தினமும் நன்றி சொல்லிக்கொண்டு அவர்

இன்றும் மகிழ்ச்சியாக வாழ்கிறார். உயிரைத்தவிர எல்லாவற்றையும் அவர் இழந்திருந்தாலும்."

"பரவாயில்லை மிஸ்டர் முதலியார், நாம் பிரிதொரு சமயம் உங்கள் தகப்பனார் பற்றி விவாதிக்கலாம். இப்போது சொல்லுங்கள் என்ன நடக்கப் போகிறது? முரட்டுத்தனமும் மர்மமும் நிறைந்த இந்தப் பிராந்தியம் என்ன செய்யக் காத்திருக்கிறது?"

"யுவர் எக்ஸலன்சி, நான் தினமும் நெல்லையப்பரைக் கோயிலுக்குச் சென்று வணங்குபவன். கோயிலுக்குச் சென்றால் நேராக வீட்டுக்குத்தான் வரவேண்டும் என்று எங்கள் மதத்தில் சொல்லுவார்கள். ஏனென்றால் நாம் இறைவனிடம் பெற்ற ஆசிர்வாதங்கள் நாம் வாழும் வீட்டிற்கு வர வேண்டும் என்ப தற்காக. இன்று நான் நெல்லையப்பரை வணங்கிவிட்டு எனது பிரார்த்தனையின் பலன்கள் உங்களை அடைய வேண்டுமென்று, நேராக உங்களைப் பார்க்கத்தான் வருகிறேன். நான் ஊருக்குள் சென்று தீவிரமாக விசாரிக்கவேண்டும். வெளியூர் ஆட்களின் நடமாட்டத்தை அதிகமாக நம் ஊருக்குள் பார்க்கிறேன். இன்று காலையில் தாமிரபரணி ஆற்றில் குளிக்கையில என்னையும் என்னுடன் இருக்கிற சுடலையையும் அவர்களில் சிலர் கவனித்துப் பார்த்த மாதிரி தெரிந்தது."

"நீங்க அப்பவே அந்த மாதிரி ஆட்களைக் கூப்பிட்டு விசாரித்திருக்க வேண்டியது தானே?"

"யுவர் எக்ஸலன்ஸி, நா விசாரிச்சா அவனுங்க ஒன்னு என்னையத் தாக்கிட்டு ஓடிருப்பாங்க. அல்லது எதையாவது சொல்லித் தப்பிச்சிருப்பாங்க. அதனால நா நேரா கோயிலுக்கு வந்து தாசில்தாருக்குக் குருக்கள் மூலமாக் கடிதம் கொடுத்தனுப்பித் தகவல் சொல்லிவிட்டேன். அவனுங்கள இப்போ தாசில்தார் கைது பண்ணி வச்சிருக்காரு. கொஞ்ச நேரத்துல அவனுங்கள துரைகிட்ட தாசில்தார் கூட்டிக்கிட்டு வருவாரு. அவரு துரைகளைப் பார்க்க வர்றதுக்குள்ள நான் மார்க்கெட் வரைக்கும் போயிட்டு வந்துறேன். வெளியில நிக்கிற ஐரிஷ் சிப்பாய் மிஸ்டர் ஒயிட் என்கூட வரணும். துரைக உத்தரவு போடணும்."

"அவனா? அவன் எதுக்கு?"

"ஐ வாண்ட் ஹிஸ் ஹெல்ப் யுவர் எக்ஸலென்ஸி."

"ஹி ஸ் எ யூஸ்லெஸ் பெல்லோ. வேல செய்ற ஊர்ல எல்லாம் பொம்பளப் பிரச்சன. நிறைய பனிஷ்மென்ட் வாங்கியும் திருந்தல.

இவனப் பாத்தாலே பெண்கள் முகத்தச் சுழிக்கறாங்கன்னு என் பட்லர் சொல்லுறான். அவன உங்ககூடக் கூட்டிக்கிட்டுப் போயி நீங்க உங்க பேரக் கெடுத்துக்கிறாதீங்க."

"யுவர் எக்ஸலன்சி, மிஸ்டர் ஒயிட்டுக்கு ஊர்ப் பொம்பளககிட்ட கெட்ட பேருன்னாலும் ஊர்லயிருக்கிற ஆம்பளங்ககிட்ட நல்ல பேர்தான் இருக்கு. இவரைப் பாத்தாலே ஆம்பளங்க சிரிப் பாங்க. டூட்டி இல்லாத நேரத்துல மார்கெட்லதான் இவரு இருப்பாரு. இவருகூட நான் சேர்ந்து போனேன்னா, தப்பான ஆளுகப் பயப்படுவாங்க. இந்த ஒயிட் மூலம் நான் ஏதோ தப்பக் கண்டு பிடிச்சுட்டேன்னு நினைச்சு நகருவாங்க. அந்தச் சமயம் நான் கவனிச்சிருவேன். யாரு என்னன்னு..."

"ஐ சீ..." என்றார் கலெக்டர்.

"யுவர் எக்ஸலன்சி, என்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். இன்னைக்குச் சாயங்காலம் தளபதி மெக்காலே ஏற்பாடு செய்துள்ள பார்டியக் கொஞ்சம் தள்ளி வைக்க முடியுமா?"

"நோ நோ. உங்களுக்குத் தெரியாதா? என் மனைவி லில்லி கர்ப்பிணி ஆனதைக் கொண்டாடும் நிகழ்ச்சி அது."

"யுவர் எக்ஸலன்சி, தள்ளி வைக்கத்தான் சொன்னேன்."

"இல்லை துபாஷ், எனக்கும் தெரியும். தள்ளி வைப்பதற்கும் ரத்து செய்வதற்கும் உள்ள வித்தியாசம். எங்கள் பிரிட்டிஷ் பெண்கள் ஏற்பாடு செய்யும் பார்ட்டி இது. இந்தப் பார்ட்டி விசயத்தில் நாங்கள் தலையிட மாட்டோம். இதில் எனது மனைவிக்கு ஆலோசகரா யிருப்பது ஜெயில் சூப்பிரண்டன்ட் வாலரின் மனைவி கேத்தரீன்."

"யுவர் எக்ஸலன்சி, ஜெயில் சூப்பிரண்டு வாலர் துரை..."

"யெஸ். ஜெயில் சூப்பிரண்டு வாலர் ஒரு வாயில்லாப் பூச்சி. அவருக்குப் பைபிள் இருந்தால் போதும். அவர் மனைவி கேத்தரீன் தான் இங்குள்ள பிரிட்டிஷ் பெண்களுக்கு வழிகாட்டி. ஏற்கனவே அவள் நான்கு பிள்ளைகளைப் பெற்று வளர்த்துள்ளதால் அவளது ஆலோசனைகளைப் பிரிட்டிஷ் கர்ப்பிணிப் பெண்கள் கட்டாயம் கேட்பார்கள். கேத்தரீன்தான் இந்தப் பார்ட்டியைத் தளபதியின் பண்ணை வீட்டில் வைக்கச் சொன்னது. சிறையிலிருந்து பேன்ட் செட்டும் ஏற்பாடு செய்தாகிவிட்டது."

“யுவர் எக்சலன்ஸி, இந்த கேத்தரீன் மேடம் தான் தினமும் தாமிரபரணி ஆத்தங்கரைக்குக் காலாற நடந்து வரும் சீமாட்டியா?”

“துபாஷ், இது எப்படி உங்களுக்குத் தெரியாமல் போனது? உங்களுக்கு இந்த விசயம் தெரியாமல் இருக்கும் என்று நான் நம்பவில்லை. அதுவும் வாலரும் கேத்தரீனும் இரண்டு வருடத்திற்கு மேலாக இந்த ஊரில் இருப்பார்கள் என நினைக்கிறேன்.”

“மன்னிக்க வேண்டும் யுவர் எக்ஸலன்சி. வாலர் மட்டும்தான் இரண்டு ஆண்டுகளாக இங்கு இருக்கிறார். அவர் முதலில் தனியாகத்தான் இருந்தார். அவர் மனைவி கமுதி நொண்டிக் கோட்டையில் லெப்ட்டினெனட் இன்ஸ்சின் பாதுகாப்பில் இருப்பதாகச் சொன்னார்கள். நீங்கள் இங்கு வந்தபிறகு தான் கேத்தரீன் திருநெல்வேலிக்கு வந்தார்கள். நமது குதிரை லாயத்தில் உள்ள ஜாபர் பாயின் இரண்டாவது மனைவி பாத்திமா ஜெயில் சூப்பிரண்டின் மனைவி கேத்தரீனுக்கு மிகவும் நெருக்கமானவ. கேத்தரீனின் நாலாவது பிள்ளைக்கு நம்ம ஜாபர் பாயின் மனைவி பாத்திமாதான் இப்போது தாய்ப்பால் கொடுக்கிறாள்.”

“ஓ, நம்ம குதிரை ஜாபர் பாய்க்கு ஜெயில் சூப்பிரண்டன்ட் வீட்டிலும் செல்வாக்கு இருக்கிறதா?”

“யுவர் எக்சலன்ஸி, அவன் ரெண்டு பெண்டாட்டிக்காரன். யாராவது ஒருத்திக்கு எப்பவும் ஒரு கைக் குழந்தையிருக்கும். அதனால் வெள்ளக்காரப் பெண்களுக்கு ஜாபரின் மனைவிகள் ரொம்ப முக்கியம். இவன் பெண்டாட்டிகளை அவர்கள் பங்களாவிற்கு வரச்சொல்லி விடுவார்கள். அங்கு அவர்கள் சாப்பிடுகிற சாப்பாடு, தங்கும் வசதி எல்லாம் கிடைத்துவிடும். அப்புறம் இவளுக துலுக்கச்சிங்களா இருந்தாலும் வெள்ளக் காரக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கையில மிளகு, பச்சமிளகா, வெங்காயம் சேர்த்துக்க மாட்டாளுக. குழந்தைகளுக்குக் காய்ச்சலுன்னா பழைய சோறு சாப்பிட மாட்டாளுக.

அதனால வெள்ளக்காரப் பொம்பளைககிட்ட ஜாபர் பொஞ்சாதிகளுக்கு நல்ல பேரு. இந்த ஜாபர் பயலுக்கு குதிரைக் கிறுக்கு புடிச்சிருச்சு. இவனும் நல்ல பரம்பரையில் வந்தவன்தான். நூறு வருசத்துக்கு முந்தி திருநெல்வேலி மார்க்கெட்ட நம்ம ஜாபரோட தாத்தாவோட அப்பா காதிரி பாய்க்கு ஆற்காடு நவாப்போட மகன் மாபஸ்கான் தானமாகக் கொடுத்திருக்கார். காதிரி பாய் அந்தக் காலத்தில் பிரபலமான மகானாயிருந்தவராம். மாபஸ்கான் முஸ்லீம் ராஜா. அதனால

அவர் காதிரி பாய்க்கு நிலதானம் கொடுத்ததுகூட பெரிய விசயம் இல்ல. இந்து ராஜாவான திருவிதாங்கூர் ராஜாகூட காதிரி பாய்க்குக் காணிக்கையா சில நிலங்களக் கொடுத்திருக்கார். அப்படிப்பட்ட பெரிய குடும்பத்துலயிருந்து வந்தவன் இந்த ஜாபர். அவங்க முன்னோருங்க பேர்லதான் நான் இப்ப போகப் போற மார்க்கெட் இருக்கு. உத்தரவு குடுத்தீங்கன்னா நா மிஸ்டர் ஒயிட்டுடன் போய்ட்டு உடனே வந்திருவேன். போக வர்ற நேரம்தான்."

கலெக்டர் லூஷிங்டன் வெளியே வந்தார். ஒயிட்டை அழைத்து ஏதோ சொன்னார். கலெக்டர் அங்கிருந்து செல்லும்வரை ஒயிட் அட்டென்சனில் நின்றான். அவர் போனவுடன் யூனிபார்மோடு வைத்திருந்த சிறு கத்தியையும் துப்பாக்கியையும் கழட்டி இன்னொரு சிப்பாயிடம் கொடுத்தான். துபாஷ் ரெங்கசாமியோட நடந்து சென்ற ஒயிட்டுக்கு அதுதான் அவன் மார்க்கெட்டுக்குச் செல்லும் கடைசிப் பயணம் என்று தெரியாது.

•

12

பாளையங்கோட்டையும் திருநெல்வேலியும் தாமிரபரணி நதியின் இரு கரைகளிலும் உள்ள ஊர்கள். திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் பிரதானமாகயிருந்ததால் இறை நம்பிக்கை உள்ளவர்கள் கோயிலைச் சுற்றி அதிகமாக வாழ்ந்தனர். வெள்ளைக் காரர்களுக்கு கோயிலைவிட்டுத் தள்ளித் தங்கினால் நல்லது எனத் தோன்றியது. அப்படி உருவானதுதான் பாளையங்கோட்டை.

ஏசு சபை, பாதர்கள் சிறிய ஆஸ்பத்திரியை பாளையங் கோட்டையில் நடத்திக்கொண்டிருந்தார்கள். பாளையங்கோட்டை சிறையும், பள்ளிக்கூடம் நடந்த இடத்திற்கு அருகில்தான் இருந்தது. ஜெயிலர் வாலர் தினமும் காலை அல்லது மாலை ஒரு நேரமாவது பள்ளிக்கூடத்திற்கும், ஆஸ்பத்திரிக்கும் வந்துவிடுவார். ஆரம்பத்தில் யூனிபார்மில் வந்தார்.

இப்போதெல்லாம் யூனிபார்ம் போடாமல் வேட்டி சட்டை யோடு வருகிறார். ஆஸ்பத்திரியிலோ, பள்ளிக்கூடத்திலோ புது ஆட்கள்

யாராவது இருந்தால் அவரே முந்திக்கொண்டு “கர்த்தருக்கு தோத்திரம்” என்பார். அவர்களைவிட தான் பெரிய ஆள் என்றாலும் அவர்கள் வந்து தனக்கு வணக்கம் சொல்லட்டும் என்று நினைக்கமாட்டார். வாலருக்கு வயது ஐம்பது இருக்கும். ஆரம்பத்தில் வாலர் சாதாரணச் சிப்பாயாக இருந்தார். சிவகங்கை அரசர் முத்து வடுகநாத தேவரிடம் வருடாந்திரக் குத்தகை வசூல் செய்ய யுத்தம் நடந்தது. அப்போது மேஜர் பான்ஜோருடன் சென்றவர்தான் வாலர். ஆற்காடு நவாப்புக்குச் சிவகங்கை அரசர் முத்து வடுகநாதர் குத்தகை பாக்கி வைத்திருந்தார். ஆற்காடு நவாப் பலமுறை கேட்டுவிட்டும் முத்து வடுகநாதர் குத்தகைப் பணம் கொடுக்கவில்லை.

ஆற்காடு நவாப் முகமது அலி வாலாஜா, ஈஸ்ட் இந்தியா கம்பெனியை, தனது ஏஜென்டாக நியமித்து, சிவகங்கை அரசர் முத்து வடுகநாத தேவரிடம் குத்தகை வசூல் பண்ணுகிற அதிகாரத்தைக் கொடுத்துவிட்டார். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஈஸ்ட் இந்தியா கம்பெனி முத்து வடுகநாதரிடம் குத்தகைப் பாக்கியைக் கட்டச் சொல்லிக் கேட்டார்கள். சிவகங்கை அரசர் கட்டவில்லை. இதனால் சிவகங்கைக்கும் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்கும் பகை வந்துவிட்டது. ஈஸ்ட் இந்தியா கம்பெனிப் படைகள் ஆற்காடு நவாப் படைகளோடு வந்து இரண்டு லட்சம் குத்தகைப் பணம் கேட்டுச் சிவகங்கை நகரை முற்றுகையிட்டன. மருது சகோதரர்கள் அரசர் முத்து வடுகநாதத் தேவரோட சேர்ந்த நேரமது.

ஆற்காடு நவாப் சிவகங்கையோடு யுத்தம் ஆரம்பித்த சமயம் பெரும் பஞ்சம். விளைச்சல் இல்ல. அதனால் முத்து வடுக நாதத் தேவர் பணத்துக்காக மக்களை துன்பத்திற்கு ஆளாக்க விரும்ப வில்லை. யுத்தம் வேண்டாம், சமாதானமாகப் போகலாம் என்று முடிவு செய்தார். சிவகங்கை மந்திரி பிரதானி தாண்டவராயப் பிள்ளையிடம் அம்பது ஆயிரத்தைக் கொடுத்துவிட்டார். அந்தப் பணம் ஆற்காடு நவாப் இடம் போய்ச் சேர்ந்தது. ஆற்காடு நவாப், “மீதிப் பணம் ஒன்றரை லட்சத்தை எப்பத் தருவீங்க?” என்று கேட்ட பொழுது தாண்டவராயப் பிள்ளை சொல்லிவிட்டார்.

“ஆலம்பனா, நாட்ல கடுமையான பஞ்சம். வரி ஏதும் புதுசாப் போட முடியாது. இந்த ஐம்பதினாயிரம் பணம்கூட குடியானவங்க கிட்ட வசூல் பண்ணுனது இல்ல. அரசர் முத்து வடுகநாதரோட மனைவிக கொடுத்தது. மூத்த ராணி வேலு நாச்சியாரு, இளையராணி கௌரி

நாச்சியாரு, இவங்க ரெண்டு பேரோட சிறுவாட்டிலியிருந்து எடுத்துக் கொடுத்தது. அதனால இன்னும் கொஞ்ச நாள் அவகாசம் கொடுங்க, எப்படியும் மீதியையும் கொடுத்திருவோம்"ன்னு சொல்லிவிட்டார். நவாபிடம், "நமக்குள்ள இருக்கிற பிரச்சனைக்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனிய நுழையவிடுறதும் அவங்கள உங்க ஏஜென்டா பயன்படுத்துறதும் பிற்காலத்துல பெரும் பிரச்சனை யாயிரும், ஆட்சி செய்யுறதுக்கும், ஆளுறதுக்கும் வெள்ளக்காரங்கப் பழகிட்டாங்கன்னா, அது நோய் மாதிரி வளந்திடும். வங்காளத்தில பிளாசிங்ற இடத்துல நடந்த சண்டையில ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஜெயிச்சிருச்சி. அதனால வங்காளத்தில் ஒரு பகுதிய ஆட்சி செய்யும் அதிகாரத்த வங்காள நவாப் கிட்டயிருந்து வெள்ளக்காரங்க வாங்கினாங்க. வட தேசத்து ராஜாங்க இதே மாதிரிதான் ஒருத்தருக்குள்ள ஒருத்தர் சண்டை போட்டுக்கிட்டு ஈஸ்ட் இந்தியா கம்பெனிய வளத்து விட்டுட்டாங்க. அடுத்த ஆறு வருசத்துல அதே வடநாட்டுப் பகுதியில பக்ஸர்ங்கிற இடத்தில் நடந்த போர்ல வெள்ளக்காரங்க ஜெயிச்சு கூடுதலா அதிகாரம் வாங்கிக் கிட்டாங்க. பக்ஸர் சண்டைக்கு நாலு வருசத்துக்கு முன்னால நம்ம பகுதியில நடந்த வந்தவாசிச் சண்டையில ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஜெயிச்சிருந்தாலும் நாடாளும் உரிமைய அப்ப ஆற்காடு நவாப்பாயிருந்த உங்க அப்பா தரல. இப்ப ஏறக்குறைய முழு ஆட்சி அதிகாரத்தையும் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்கிட்ட குடுத்திட்டீங்க. பாண்டிய நாட்டுக்குத் தெற்க உங்களோட ஏஜென்ட்ங்கிற பேர்ல ஈஸ்ட் இந்தியா கம்பெனி ரொம்ப கெடுபிடி காட்டுறாங்க. அவங் களால வர்ற கெட்ட பேரெல்லாம் உங்களுக்குத்தான் ஆலம்பனா. தயவுசெஞ்சு இத நிறுத்துங்க" என்று முத்து வடுகநாதர் ஆற்காடு நவாப்புக்குத் தனது மந்திரி தாண்டவராயப் பிள்ளை மூலமாகத் தகவல் அனுப்பினார். ஆற்காடு நவாப், தாண்டவராயப் பிள்ளை சொன்னத் தகவலை அலட்சியத்துடன் கேட்டுக்கொண்டார்.

"என்ன பிள்ளை, என்னை உங்க அரசர் முத்து வடுக நாதத் தேவர்ன்னு நினைச்சீரா? நீங்க சொல்லுறதக் கேட்டுக்கிட்டு தலையாட்ட? நான் ஈஸ்ட் இந்தியா கம்பெனிகிட்ட வசூல் பண்ணுற பொறுப்பக் கொடுத்ததால்தான இப்ப கால்வாசிப் பணமாவது வந்திருக்கு. எனக்குத் தெரியாதா? யாரை எந்த அளவு வளர விடனும்னு? இப்ப சிவகங்கைக்கு வந்த எனது படையிலதான ஈஸ்ட் இந்தியா கம்பெனி படைக வந்துச்சு. அந்தக் கூட்டுப் படைக்குத் தளபதி எனது மகன் உல்தத் உம்ரா தானே?"

“மன்னிக்க வேண்டும் ஆலம்பனா. எதித்துப் பேசல. உண்மையைச் சொல்லணும்னா கூட்டுப்படை தளபதின்னு நீங்க நம்புற உங்க மகன் கட்டுப்பாட்டுல கர்னல் ஜோசப் ஸ்மித்தோ, மேஜர் பான்ஜோரோ இல்ல. ஆற்காடு இளவரசன் என்ற மரியாதயும் அவங்க உங்க மகனுக்குக் கொடுக்கல. இந்த ஐம்பதினாயிரம் பணத்த பான்ஜோரே வாங்கிக்கிறேன்னாரு. இளவரசர் உல்தத் உம்ரா ஒத்துக்கிறல. மேஜர் பான்ஜோர் பேச்சு வார்த்தயில இருந்து கோவமா வெளியேறிட்டாரு. அப்புறம் எங்களுக்குப் பழக்கமான மெட்ராஸ் கவர்னர் வின்ச் மூலம் பேச்சு வார்த்த நடத்தினோம். இந்தப் பணம் ஒங்களிடம் வருவதுகூட எங்க முயற்சியாலதான். மேஜர் பான்ஜோர் கிட்ட ஜாக்கிரதயாயிருக்கணும்னு இந்தப் போரில் நாங்கத் தெரிஞ்சிக்கிட்டோம் ஆலம்பனா” என்று பவ்யமாக மந்திரி தாண்டவராயப் பிள்ளை சொல்லிவிட்டார். பணம் கை மாறியதை ஒத்துக்கொண்டு ஆற்காடு நவாப் கொடுத்த போர் நிறுத்தக் கடிதத்தை மேஜர் பான்ஜோரிடம் மந்திரி தாண்டவராயப் பிள்ளை சேர்ப்பிப்பதற்காக விரைந்தார்.

“பணம் கொடுத்தாகிவிட்டது. பிரச்சனை முடிந்தது. மேஜர் பான்ஜோருக்குப் போர் நிறுத்தக் கடிதம் அனுப்பப்பட்டு விட்டது. இனி யுத்தம் இல்லை“ என்ற தகவல் முத்து வடுகநாதத் தேவரிடம் சொல்லப்பட்டது. போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து, சூழல் இயல்பு நிலைக்குத் திரும்பியது. அரசரும் இளையராணி கௌரி நாச்சியாரும் சிவகங்கையிலிருந்து கிளம்பிக் காளையார்கோயில் அரண்மனைக்கு வந்தனர். அன்று இரவு அங்கேயே தங்கினர்.

மேஜர் பான்ஜோரும், பாளையங்கோட்டையில் இப்ப ஜெயிலராக இருக்கிற இந்த வாலரும் காளையார்கோயில் மாளிகைக்கு வந்து அரசனை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது நள்ளிரவு நேரம் என்பதாலும், மரியாதை நிமித்தமான சந்திப்புகளுக்கு இரவு சரியான நேரமில்லை என்பதாலும் காவலாளிகள் மேஜர் பான்ஜோரையும் வாலரையும் அரண்மனைக்குள் விடவில்லை. இரண்டு பேரும் காவலாளிகளைத் தாக்கியிருக்கிறார்கள். மாளிகை முன்பு கை கலப்பாகி விட்டது. சத்தம் கேட்டு அரசர் எழுந்துவிட்டார். அரண்மனையின் உப்பரிகையில் இருந்து அரசர் முத்து வடுகநாதத் தேவரும் இளைய ராணி கௌரி நாச்சியாரும் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு முயன்றார்கள். இருட்டில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. எனவே, என்ன நடக்கிறது என்பதை அறிய, இருவரும் வாயிலுக்கே

வந்துள்ளனர். அந்த நேரம் மாளிகையின் வாயிலிலிருந்து வெடித்த குண்டினால் அரசர் முத்து வடுகநாதத் தேவரும், இளைய ராணியும் இறந்து போய்ட்டாங்க. குத்தகைப் பணத்தில் கால்வாசி வசூல் பண்ணி விட்டதால், யுத்தத்தை தொடரமாட்டார்கள் என்று நம்பி ஆயுதம் தாங்காமல் நிராயுதபாணியாக மனைவியோடு ஓய்வில் இருந்த அரசரையும் ராணியையும் மேஜர் பான்ஜோர் சுட்டுக் கொன்றான். அதுவும் ஆற்காட்டு நவாப்பிற்காக வரிவசூல் செய்யச் சென்றவன் அவன். வஞ்சகத்தால் அரசனையும் இளைய ராணியையும் சுட்டுக் கொன்றுவிட்டான்.

பாளையத்தின் அரசரே சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அரசியல் சூழல் இன்னும் நெருக்கடியாகும் என்பதை உணர்ந்த தளவாய் தாண்டவராயப் பிள்ளை, மருது சகோதரர்கள் துணையோடு கைக் குழந்தையுடன் இருந்த வேலு நாச்சியாரை அழைத்துக்கொண்டு பழனி மலைக்குப் பக்கத்தில் இருக்கிற விருப்பாச்சிக் காடுகளில் அடைக்கலம் புகுந்தார்.

மேஜர் பான்ஜோர் அரசனையும் இளைய ராணியையும் சுட்டுக்கொன்றதை லண்டன் பத்திரிகைகள் அதிர்ச்சிச் செய்தியாக வெளியிட்டன. எதிர்கட்சிகள் லண்டன் பாராளுமன்றத்தில் இந்தப் படுகொலையைக் கடுமையாக விமர்சனம் செய்தன. மேஜர் பான்ஜோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் அமளி நடந்தது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் டைரக்டர்கள்கூடி உடனடியாக மேஜர் பான்ஜோரை லண்டனுக்குத் திரும்ப வரச் சொல்லிவிட்டார்கள். அவருடன் இருந்த இந்த வாலரை மிலிட்டரி சர்வீசில் இருந்து ஜெயில் சர்வீசுக்கு மாற்றிப் போட்டார்கள்.அப்படி இந்தச் சிறைச்சாலைக்குச் சூப்பிரண்டெண்டாக வந்தவர்தான் வாலர்.

காளையார்கோயில் மாளிகையில் நடந்த கொலையில் வாலருக்கு எந்தத் தொடர்பும் இல்லை. மேஜருடன் சென்றது தவிர தான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்று வாலர் தெரிவித்ததைக் கம்பெனி நம்பியது. நடந்த சம்பவத்தைப் பற்றி, மேஜர் பான் ஜோருடன் இருந்தவர் என்றதனால், விசாரணையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன. எல்லாக் கேள்விகளுக்கும் வாலர் சிறு குழந்தையைப் போலவே பதில் சொல்லியிருக்கிறார். “தன்னுடைய இடுப்பில் இருந்த துப்பாக்கியை யாரோ எடுப்பது போலிருந்தது, நள்ளிரவு நேரம், என்ன ஏது என்று பார்ப்பதற்குள் அரசரும் ராணியும் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து

விழுந்தார்கள், என்னுடைய துப்பாக்கித் தரையில் கிடந்தது. யார் அந்தத் துப்பாக்கியை எடுத்துச் சுட்டது என்று இன்று வரை தனக்குத் தெரியாது...” இவையே வாலரின் பதில்கள். மேஜர் பான்ஜோரும் தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் ஆயுதம் எடுத்துச் செல்லவில்லை என்றும் தனது உதவியாளர் வாலர் மட்டும்தான் துப்பாக்கி வைத்திருந்தார் என்றும் அதைச் சிவகங்கை வீரர் யாரோ ஒருவர் எடுத்துச் சுட்டுவிட்டார் என்றும் கதை சொல்லி விட்டான்.

கம்பெனி மேஜர் பான்ஜோரை நம்பவில்லை. அதே நேரம் துப்பாக்கிக் குண்டுகள் வாலரின் துப்பாக்கியிலிருந்து சென்றதால் வாலரை மன்னிக்கவும் தயாரில்லை, பெரிதாகத் தண்டிக்கவும் நினைக்கவில்லை. சிப்பாயாக இருந்த வாலரை, ஜெயிலராகப் போட்டது கம்பெனி. பல வருடங்கள் கமுதிக் கோட்டையில் ஜெயிலராக இருந்துவிட்டுக் கடந்த இரண்டு வருடங்களாகப் பாளையங்கோட்டையில் ஜெயிலராக இருக்கிறார். சிவகங்கை அரசர் முத்து வடுகநாதத் தேவரும், இளையராணியும் கொல்லப்பட்டது இவரது துப்பாக்கியால்தான் என்று வாலரைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும். இந்தச் செய்தி அவர் போகும் இடமெல்லாம் பரவிவிடுகிறது. அந்தக் குற்றவுணர்ச்சியை மறைக்க வாலர் முயல்கிறார். அதனால் எப்பொழுதும் சோகமாகவே இருப்பார். பைபிள் பற்றிப் பேசினால் மட்டும் அவர் முகத்தில் மலர்ச்சி வரும்.

ஜெயிலர் வாலருக்கும் அவர் மனைவி கேத்தரீனுக்கும் திருமணம் நடந்தபோது இரண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் சரியாயில்லையென்று கமுதி சர்ச்சில் பேசிக்கொண்டார்கள். ஒரு வெள்ளைக்காரப் பாதிரியார், மதம் மாறிய பத்து பரதவர்கள் மட்டுமே அந்தக் கல்யாணத்திற்கு வந்திருந்தார்களாம். வாலருக்கு அப்பொழுது வயது நாற்பத்து ஐந்துக்குமேல் இருக்கும். ஆனால் மிகவும் வயதானவராகத் தோற்றம் அளித்தார். கேத்தரீனுக்கு இருபத்து ஐந்து வயதுதான் என்றாலும் அவள் விதவை. அவள் கணவனும் மேஜர் பான்ஜோர் படைப்பிரிவில்தான் இருந்தான். அவனுக்கு டாம் என்று பெயர். வெறும் டாம் என்றால் யாருக்கும் தெரியாது. புரோகியூர்மென்ட் டாம் என்றால் எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். புரோகியூர்மென்ட் என்றால் பொருள் சேகரிப்பது. அமைதிக்காலத்தில் படைக்கு உணவுப் பொருள்கள் வாங்க வேண்டி இருக்கும். சண்டைக் காலத்தில் என்னென்ன வாங்க வேண்டி இருக்கும் என்று அவனாலேயே தீர்மானிக்க முடியாது. சில சமயம் கிராமங்களுக்குள் போய் மாட்டு வண்டிகளையும், காளை மாடுகளையும் டாம் வாடகைக்கு வாங்குவான். காளை மாடுகளுக்குத்

தீவனமான வைக்கோலை விலைக்கு வாங்குவான். வீரர்களின் சாப்பாட்டிற்குச் சோளம், கம்பு, அரிசி, கோழி, ஆடு வாங்குவது என்று அமைதியான காலத்திலேயும் யுத்த காலத்திலேயும், புரோகியூர் மெண்ட் டாம் மிகவும் பரபரவென்றே இருப்பான். படைக்குப் பொருட்கள் வாங்கும்போது இருப்பதிலேயே நல்ல பொருளாகப் பார்த்து அதை வீட்டுக்குக் கொண்டு வந்துவிடுவான். மனைவி கேத்தரீனுக்கு பெருமையாக இருக்கும். தனக்குக் கிடைத்ததில் சர்ச் பாதிரியாருக்கும் சிலவற்றைக் கேத்தரீன் கொடுப்பாள்.

.

“கேத்தரீன், உனக்கும் டாமுக்கும் நான் திருமணம் செஞ்சு வச்சது ரொம்ப நல்ல காரியம். வாங்கும் சம்பளத்தைப் பல சோல்ஜர்கள் குடியிலும், பெண்களிடமும் விட்டுடுவாங்க. அதுவும் இந்தப் போர்ச்சுக்கீசியப் பொம்பளக இருக்காளுங்களே, நான் வெளிப்படையாச் சொல்லக் கூடாது... போர்ச்சுக்கீசிய ஆம்பளக சோம்பேறிப் பயலுக. விஸ்கி பாட்டிலக் கொடுத்தா எத வேணும்னாலும் அவன் வீட்டுலயிருந்து எடுத்துக்கிறலாம். மேஜர் பான்ஜோர் வந்தப்புறம் தான் இந்தப் போர்ச்சுக்கீசிய சோல்ஜர்களின் ஆட்டம் குறைந்தது. மேஜர் பான்ஜோர் கிட்டயும் இந்தப் போர்ச்சுக்கீசிய பயல்கள் ஆரம்பத்துல வேலயக் காமிச்சிருக்காங்க. பொருட்களக் கூடுதல் வில குடுத்து வாங்குறதாச் சொல்லுறது, மேஜரிடம் செலவு கணக்குக் கொடுக்கையில வீட்லயிருக்கிற பொம்பளகளக் கூட்டிக்கிட்டுப் போயி அவள்களவிட்டு அவர் கிளாஸ்ல ஒயின் ஊத்தச் சொல்றது, அவள்களவிட்டு மேஜர் குடிக்கிற ஹூக்காவுக்குப் புகையிலப் போட வைக்கிறதுன்னு பலவிதமா மயக்கியிருக்காங்க.

மேஜர் கொஞ்சம் சபலப் பேர்வழி. அதனால சில நேரம் அவனே ஆள் அனுப்பிப் போர்ச்சுக்கீசியக்காரிகள வர வைப்பான். முதல்ல மேஜருக்குக் கைகால அமுக்குறதுன்னு ஆரம்பிச்சது. அப்புறம் மேஜர் கூடவே போர்ச்சுகீசுக்காரிக தங்க ஆரம்பிச்சுட்டாளுக. இவளுக யோக்கியத தெரிஞ்சதுதானே. அவருக்குப் பொம்பள சீக்கு வந்துருச்சு. யூனிபார்ம் போட முடியாம கத்தி கதறிட்டாராம். அப்புறம் சீழ்புடிச்சத எல்லாம் கழுவி சுத்தம் பண்ணினாங்களாம். கம்பெனி டாக்டரும் சர்ச் பாதரும் மேஜர்கிட்ட பேசினாங்க. “போர்ச்சுக்கீசியப் பொம்பளக தொடர்ப விட்டீங்கன்னாத்தான், நீங்க சீக்குல இருந்து தப்புவீங்க. கம்பெனியும் தப்பும். கம்பெனிக்கானப் பொருட்கள குறைச்ச விலைக்கு வாங்கலாம்ன்னு

சொல்லியிருக்காங்க. குறைச்ச விலைக்கு வாங்கித் தர்ற மாதிரி எங்களுக்குத் தெரிஞ்ச ஒரு பையன் இருக்கான்."

"அப்படிப்பட்ட தெறமசாலி யாரு? அவன் எங்க இருக்கான்"னு கேட்டிருக்காரு. மை டியர் கேத்தரீன், அதுதான் உனக்கு நல்ல நேரம். உன் நினைவு எனக்கு வந்துவிட்டது. நான்தான் உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கயிலேயே டாம் பயலப் பாத்திருக்கேன்ல. உங்க கல்யாணத்து அன்னிக்கே டாமோட திறமையப் பாத்துட்டேன். எனக்கு நல்லாத் தெரியும். கல்யாணத்துக்கு ஒரு தம்புடி கூட அவன் செலவழிக்கல. கல்யாணம் நடத்தின பாதர் நான். எனக்கும் அவன் ஒன்னும் செய்யல. பேச்சிலேயே குளிப்பாட்டிருவான்."

"அப்புறம் கல்யாணச் செலவுகள டாம் எப்படி சமாளிச்சார்?" என்று கேத்தரீன் கேட்டாள்.

பாதர் சிரித்தார். "சாயல்குடி ஜமீன்தார்கிட்டப் போய் என் கல்யாணத்துக்கு வாங்கன்னுருக்கான். அந்தச் சமயத்தில் சாயல்குடி ஜமீன்தாருக்கும் கருவாடு வியாபாரம் பண்ணுற கமுதி உடையார்களுக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் இருந்தது. "மிஸ்டர் டாம், உங்களுக்காக லெப்டினென்ட் இன்ஸ் ஏதாவது செய்வாரா?"ன்னு சாயல்குடி ஜமீன்தார் கேட்டிருக்காரு.

லெப்டினென்ட் இன்ஸ்ஸ பொதுவா நொண்டி துரைன்னு தான் கூப்பிடுவாங்க. மத்தவங்ககிட்ட பேசயில மட்டும் அவரை லெப்டினென்ட் இன்ஸ்ன்னு சொல்லுவாங்க. மத்த நேரத்துல நொண்டி துரைன்னு தான் சொல்லுவாங்க. இன்ஸ் ஸ்காட்லாந்துக்காரன். ஸ்காட்லாந்துல இவனப் பாத்துக்கிறதுக்கு யாருமில்ல. அந்த ஊர் பாஸ்டர்கிட்ட எடுபிடியா இருந்திருக்கிறான். அப்பப்ப சின்னச் சின்னப் பொருட்களத் திருடிப் பிடிபட்டி ருக்கான். ஒல்லியா நெடுநெடுன்னு வளந்து இருந்ததால இவன இந்தியாவுல சிப்பாய் வேலைக்கு எடுத்துக்கச் சொல்லி ஒரு பரிந்துரைக் கடிதத்த மைசூர்லயிருந்த மேஜர் கிராண்ட்க்கு எழுதி, அந்த லெட்டரை இவன் கையில பாதர் கொடுத்து விட்டிருக்காரு. லண்டன்ல இருந்து இந்தியாவுக்குக் கப்பல்ல கிளம்பிட்டான்.

ரெண்டு மாசம் கடல் பயணம். வர்ற வழியில குடிச்சிட்டு கப்பல்ல சண்டை போட்டிருக்கான். அப்போ பாதர் கொடுத்துவிட்ட அந்த ரெக்கமன்டேசன் லெட்டர் காணாமல் போயிடுச்சு. இவன் கையில காசு இல்லாததால கப்பல்ல விரும்பியத வாங்கிச் சாப்பிட வழியில்ல. கப்பல்

கேப்டன் இவன்மேல இரக்கப்பட்டு இவனுக்குச் சரக்குகள ஏத்தி இறக்க, கப்பலுக்குள்ள குடிச்சிட்டு வாந்தி எடுக்குறவங்கள கைத்தாங்கலா அவங்க ரூமுக்குக் கூட்டிட்டுப் போக, அவனுங்க வாந்திய கழுவி விடறதுன்னு எல்லாவிதமான எடுபிடி வேலைகளையும் செய்ய வச்சுருக்கான். "இன்ஸ்", "இன்ஸ்"ன்னு கப்பல் கேப்டன் இவனை அடிக்கடி கூப்பிட்டு வேலை வாங்கியதால் எல்லோருக்கும் இவன் பெயர் தெரிஞ்சுடுச்சு. பாரி கம்பெனி டைரக்டரும் அந்தக் கப்பல்ல வந்திருக்கார். அவரு இன்ஸப்பாத்து உனக்கு மெட்ராஸில் ஏதும் வேலை கிடைச்சிருக்கான்னு கேட்டிருக்கார். இவன் "இல்லை"ன்னுருக்கான். "சரி" என்னோட வரயா? உனக்கு வேல தர்றேன்னு, பாரி கம்பெனி துரை கேட்டவுடன் சரின்னுட்டான்.

கடலூர்ல பாரி ஒயின்ஸ் பேக்டரில இன்ஸ் வேலையில சேர்ந்துட்டான். திருநெல்வேலியில இருந்து திருவண்ணாமலை, கடலூர் வரை இருக்கிற பனை மரங்கள்ள இருந்து கள்ள இறக்கி, அதப் பெரியபெரிய பீப்பாய்கள்ல அடச்சு மாட்டு வண்டிகள்ல பாரி கம்பெனியோட கடலூர் பேக்டரிக்குக் கொண்டு வருவாங்க. அந்த பீப்பாய்களப் பூமிக்கு அடியில் புதைச்சு வைச்சு புளிக்க விடுவாங்க. புளிச்சக் கள்ல வெளியில எடுத்து அதப் பனங்கற்கண்டோட சேத்துக் காய்ச்சுவாங்க. அப்படி காய்ச்சயில கசடுக மெதக்க ஆரம்பிக்கும். அந்தக் கசடுகளை வெளியே அள்ளி ஊத்திருவாங்க. அப்புறம் அதைக் குளிர வச்சி பாட்டில்கள்ல நிரப்பி விப்பாங்க. ஈஸ்ட் இந்தியா கம்பெனி பட்டாளத்துக்கு இந்த மதுதான் சப்ளை செய்யப்பட்டது. மது பாட்டில்கள மொத்தமா வாங்கவும் பேரம் பேசவும் மிலிட்டரி அதிகாரிக பாரி கம்பெனிக்கு அடிக்கடி வருவாங்க. அவங்ககிட்டயும் இந்த இன்ஸ் பழகிட்டான். மிலிட்டரிக்கு ரெக்ரூட்மென்ட் நடக்கயில வரச்சொல்லி இன்ஸ்க்கு அந்த மிலிட்டரி அதிகாரிக ஆள் அனுப்பினாங்க. இன்ஸ் மிலிட்டரி தேர்வில் கலந்துக்கிட்டான். இன்ஸ்தான் ஆளும் விறைப்பாயிருக்கானே. மிலிட்டரி ஆபீஸருங்க சப்போர்ட்டும் இருக்கு. அப்புறம் என்ன? அவன மிலிட்டரியில சேத்து விட்டுட்டாங்க.

ஆரம்பத்துல இன்ஸ் சிப்பாயாத்தான் இருந்தான். அடிச்சது யோகம் இன்சுக்கு. வந்தவாசிச் சண்ட நடந்தப்ப இங்கிலீஸ் ஆர்மிக்கு அயர் கூட் தளபதியாயிருந்தாரு. அவரு ஐரீஷ்காரர். இந்த இன்ஸ் ஸ்காட்லாந்துக்காரன். இந்த ரெண்டு ஏரியாக்காரங்களுக்கும் நல்லா ஒத்துப்போகும். இந்த ரெண்டு ஏரியாக்காரங்களுக்கும் மெயின் லேண்டான இங்கிலாந்து காரன் மேல லேசா பொறாமை. அவ்வளவாப்

பிடிக்காது. அவங்க ஊர்ல மூணு ஏரியா ஆட்களும் ஒருத்தனுக்கு ஒருத்தன் முறைச்சிக்கிட்டாலும், ஆறாயிரம் மைல் தாண்டி இந்தியா வந்த பிறகு அவனுங்களுக்குள்ள சண்டயெல்லாம் போட்டுக்கிற மாட்டாங்க. இருந்தாலும் அவங்க மூணு பகுதி ஆட்களுக்குள்ள விரோதமும், அன்பும் நீரு பூத்தப் நெருப்பாவே இருக்கும். வந்தவாசி யுத்தம் நடந்த நாளைக்கு முந்தி வர வந்தவாசியில நடக்கப்போற சண்டையில பிரஞ்சுக்காரங்க ஜெயிப்பாங்களா? பிரிட்டிஷ்காரங்க ஜெயிப்பாங்களான்னு சொல்ல முடியாமலிருந்தது. ரெண்டு நாளுக்கு முன்னால செஞ்சி ராஜா கட்சி மாறி பிரிட்டிஷ்காரங்கப் பக்கம் சேந்துட்டாரு. அதுவரயில அவர் பிரெஞ்சுக்காரங்க கூடத்தான் இருந்தாரு. செஞ்சி ராஜா பிரிட்டிஷ்காரங்க கூட சேர்ந்தத, பிரெஞ்சு தளபதி லாலி பெரிசுபடுத்தல. “போனாப் போறான், இருக்கட்டும். இங்கிலாந்துக்காரன ஒரு கை பாத்து அவன விரட்டிவிட்டுட்டு நேரா செஞ்சிப் போய் இந்த நாயக்கன் கொட்டத்த அடக்குறேன் பாரு”ன்னு கத்தியிருக்கான்.

லாலிக்கு மேலதிகாரியான பாண்டிச்சேரி கவர்னர் டூப்ளேக்கு இது புடிக்கல. ஆனா லாலிய கவர்னரால கன்ட்ரோல் பண்ண முடியல. கவர்னர் டூப்ளேக்கு பிரெஞ்சு அரசாங்கத்திலும் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்கள் மத்தியிலும் ஆரம்பத்துல நல்ல பேருதான் இருந்துச்சு. அவர் பெண்டாட்டிய ஆடவிட்டு கையாலாகாத கவர்னராயிருக்கிறது பிரெஞ்சு அரசாங்கத்துக்கு எப்படியோ தெரிஞ்சிருச்சு. அதனால கவுன்ட் டி லாலிய பிரெஞ்சு தலைநகர் பாரிஸ்ல இருந்து அனுப்பும் போதே, “கவர்னர் டூப்ளே பேச்ச நீ கேட்க வேண்டியதில்ல. எது நல்ல முடிவோ அத நீ எடுத்துக்க. உள்ளூர் ராஜாக்களோடு யுத்தம் தொடங்கவும் முடித்து வைக்கவும், உனக்கு அதிகாரம் வழங்குகிறோம். பிரிட்டிஷ்காரர்கள் மற்றும் மற்ற ஐரோப்பியர்களோட சண்ட ஆரம்பிக்கிறதுக்கும், சமாதானமா போறதுக்கும் மட்டும் பாரிஸ்ஸ கேட்டுச் செய்யணும்”ன்னு சொல்லியனுப்பியதோடு அதையே ஒரு கடிதமாவும் பாண்டிச்சேரி கவர்னருக்குக் கொடுத்து விட்டாங்க. அதனால லாலி பாண்டிச்சேரிக்கு வரயிலேயே கவர்னர் டூப்ளே மேல வெறுப்புலதான் வந்தான்.

கப்பல் பாண்டிச்சேரி வந்ததும் உடனே கவர்னரை அவன் பார்க்கல. பாரீஸ்ல இருந்து பிரெஞ்சு தளபதி பாண்டிச்சேரி வந்தார்னா ஏழு குண்டுகள் வெடித்து வரவேற்பு கொடுக்கணும். அதுவே பிரெஞ்சு

கவர்னர்னா இருபத்தியொரு குண்டு வெடிக்கணும். லாலிக்கு ஏழு குண்டுதான் வெடிச்சது. லாலி கப்பலவிட்டு இறங்கியதுமே கூச்சலிட்டான்.

"ஏழு குண்டுகள் முழங்க வரவேற்பு கொடுக்க நான் வெறும் தளபதியில்ல. கூடுதல் அதிகாரம் உள்ளவன். உள்ளூர் அரசர்களோடு சண்டையிடவும் சமாதானம் செய்யவும் முழு அதிகாரம் பெற்றவன். எனக்கு குறைந்தது பதினைந்து குண்டுகளாவது முழங்க வரவேற்புக் கொடுத்திருக்கணும். ஏன் அப்படி கொடுக்கலை"ன்னு அழிச்சாட்டியம் பண்ணினான். கவர்னரே நேரில் வந்து தனக்கு வரவேற்பு கொடுத்திருக்கணும்னு எதிர்பார்த்திருக்கான். கவர்னருக்கு இந்தத் தகவல் போனது. கவர்னருக்கு லாலியின் அதிகாரம் பிடிக்கலை. வந்த முதல் நாளே ஆரம்பிச்ச வெறுப்பு நாள் ஆக ஆக அதிகமாயிடுச்சு. வந்தவாசிப் போரை நடத்த டூப்ளே விரும்பல. ஏன்னா வந்தவாசிக் கோட்டை ஏற்கனவே பிரெஞ்சுகாரங்கக்கிட்டதான் இருக்கு. பிரிட்டிடீஷ்காரங்க வெளியிலே இருந்து தாக்கினா கோட்டைக்கு உள்ளேயிருக்கிற பிரெஞ்சுக்காரன் எதிர்த்தாக்குதல் நடத்துனா போதும், கோட்டைக்கு வெளியே வந்து யுத்தம் நடத்த வேணாம்னு பிரெஞ்சு கவர்னர் டூப்ளே சொன்னதை, லாலி கேக்கல. "கோட்டைக்கு வெளியே வந்து தாக்குதல் நடத்து வோம்னு" சொல்லிட்டான். பிரெஞ்சுப் படைக்குக் கெட்ட நேரம். காலைல பதினோரு மணிக்கு ஆரம்பிச்ச யுத்தம் மத்தியானம் ரெண்டு மணிக்கு முடிஞ்சிரும்னு யாருமே நினைக்கல. சண்ட ரொம்ப நாள் நடக்கும். ரெண்டு தரப்புல யார் கூப்பிட்டாலும் போய்ச் சண்ட போடலாம்னு நாக்கத் தொங்கப்போட்டுக்கிட்டு வெண்குன்றம் மலையடிவாரத்தில காத்துக்கிட்டிருந்த உள்ளூர் கூலிப்படைகளை பிரெஞ்சுத் தரப்பும் பிரிட்டிஷ்காரர்களும் கூப்பிடவேயில்ல. பிரெஞ்சுக்காரங்க நாம ஜெயிச்சுடுவோம்ற நம்பிக்கையோடதான் கோட்டைக்குள்ளேயிருந்து வெளியே வந்து தாக்கினாங்க.

சண்ட ஆரம்பிச்ச ஒன்றரை மணி நேரத்துல, மதியம் ஒரு மணி அளவுல வந்தவாசிக் கோட்டைக்குள்ள இருந்த வெடிமருந்து கெடங்கு வெடிச்சிருச்சு. பிரெஞ்சுக்காரங்க வச்சிருந்த வெடி மருந்துனாலேயே அவங்க வீரங்க செத்துவிழுந்தாங்க. கோட்டைக்குள்ள கூச்சல் குழப்பம் ஆயிடுச்சு. இத எப்படியோ கோட்டைக்கு வெளியிலயிருந்த சிப்பாய் இன்ஸ் பார்த்துட்டான். பிரிட்டிஷ் தளபதி சர் அயர் கூட்டிடம் போய் சொல்லிட்டான். "இன்ஸ், நீ சுதாரிப்பான, சுறுசுறுப்பான ஆளாயிருக்க.

கோட்டைச் சுவருமேல ஏறி பிரெஞ்சுக் கொடிய வெட்டிச் சாய்க்க முடியுமான்னு? அயர் கூட் கேட்டிருக்காரு. “சரின்னு”ருக்கான்.

“சரி, இந்தா நம்ம ஜான் கம்பெனி கொடி. அந்த பிரெஞ்சுக் கொடிய வெட்டிச் சாய்ச்சுட்டு நம்ம கம்பெனிக் கொடிய கோட்டையில ஏத்து. உன் தலைவிதி அப்பவே மாறிவிடும்” என்றார் லெப்டினென்ட் கர்னல் அயர்கூட். இன்ஸ் முதலில் ஏறினான். அவன் இந்தியாவுக்கு வந்த கப்பலில் சரக்கு ஏற்றிப் பழக்கப்பட்டதால் இலகுவாக கோட்டைமீது ஏறிவிட்டான். கம்பெனியின் கொடியை இடுப்பில் கட்டியிருந்தான். இன்ஸ்க்குப் பின்னால் சர் அயர் கூட்டின் பாதுகாவலன் ஒருவனும் கோட்டைமீது ஏறினான். இன்ஸ், பிரெஞ்சுக் கொடியை வெட்டிச் சாய்த்தான். கம்பெனிக் கொடியை வந்தவாசிக் கோட்டையின்மீது ஏற்றி பலத்த கோஷமிட்டான். கொடிகம்பத்தைப் பிடித்தபடியே, கம்பெனி கொடிக்கு விறைப்பாக சல்யூட் அடித்தான். இன்ஸ் பின்னால் ஏறி வந்த அயர் கூட்டின் பாதுகாவலன் விசிலை எடுத்து ஊதினான். படைவீரர்கள் யுத்தத்தை நிறுத்திக் கோட்டை கொத்தளத்தைப் பார்த்தனர். கிழக்கந்தியக் கம்பெனியின் கொடி கோட்டையில் பறந்தது. பக்கத்தில் நின்ற பாதுகாவலன் சர் அயர் கூட்டிற்கு சல்யூட் செய்து பெரும் குரலில் அறிவித்தான். “லெப்டினென்ட் கர்னல் அயர் கூட், இன் யுவர் பிரெசன்ஸ் அண்ட் அப்ரூவல் ஐ புரோமோட் சோல்ஜர் இன்ஸ் ஆஸ் லெப்டினென்ட் இன்ஸ் பார் த எக்ஸம்பிளரி டிஸ்பிளே ஆப் கரேஜ் அன்ட் ஆக்ட் ஆப் பிரேவரி”ன்னு சத்தமாகச் சொன்னான். அதுவரை சிப்பாய் இன்ஸ்க்குப் புரோமோசன் பெற இப்படி ஒரு குறுக்கு வழியிருக்கு என்று தெரியாது.

சண்டை முடிந்து அன்று மாலை வந்தவாசிக் கோட்டைக்குள் வெற்றி வீரனாக லெப்டினென்ட் கர்னல் சர் அயர் கூட் நுழைந்தபோது லெப்டினென்ட் இன்ஸ் தன் தோள்களில் இரண்டு ஸ்டார்களுடன் புது யூனிபார்மில் நுழைந்தான். உள்ளே பிடிபட்ட நூற்றுப்பத்து பிரெஞ்சு சோல்ஜர்களிடமும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் கோட்டைக்குள் அமர வைக்கப்பட்டனர். அவர்களிடம் லெப்டினென்ட் கர்னல் சர் அயர் கூட் பேசினார்.

“பிரெஞ்சு சோல்ஜர்களே, நீங்கள் முழுவதுமாகத் தோற்கடிக்கப் பட்டிருக்கிறீர்கள். உங்கள் கவர்னர் டியூப்ளே கோட்டையிலிருந்து தப்பித்து ஓடிவிட்டார். உங்கள் தளபதி கவுன்ட் டி லாலி கைது செய்யப்பட்டு வெண்குன்றத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். உங்களை நாளைக் காலை செஞ்சிக் கோட்டைக்கு மாற்றுகிறேன். உங்கள் கைகளில் மட்டும்

விலங்குப் பூட்ட ஆணையிட்டுள்ளேன். நீங்கள் ஒழுங்காக இருக்கும்வரை மரியாதையாக நடத்தப்படுவீர்கள். தப்பிக்க முயன்றாலோ, எங்கள் வீரர்களைத் தாக்க முயன்றாலோ, உங்களுக்கு மரண தண்டனை பிடிபட்ட இடத்திலேயே வழங்கப்படும்”ன்னு அறிவிச்சப்ப, இருபத்து நாலு வயது லெப்டினென்ட் இன்ஸ், லெப்டினெண்ட் கர்னல் பக்கத்துல நின்னுக்கிட்டிருந்தான்.

இரவு உணவு அருந்தும்போது லெப்டினெண்ட் கர்னலின் பாதுகாவலன் அவருக்கு ஒயின் ஊத்திக் கொடுத்தான். பின்பு பதவி உயர்வு பெற்ற புதிய அதிகாரி என்ற முறையில் இன்ஸின் உடல்நலத்திற்காக மது விருந்து நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் சர் அயர் கூட்டின் பாதுகாவலன் பேசினான்.

“லெப்டினென்ட் இன்ஸ் இன்று காலை வரை நம்மில் ஒருவர். இன்று மதியம் நம் அதிகாரி. நான் ஒரு சிப்பாய்தான். போர் நடக்கும்போது எதிரியின் கொடியை வெட்டி நம் கொடியை உயர்த்தும் ஒருவரை, அவரது அடுத்த உயர்ந்த பதவிக்கு ஆணையிடும் தகுதி பக்கத்தில் நிற்கும் சாதாரணச் சிப்பாய்க்குக்கூட உண்டு. அந்த அதிகாரம் இன்று எனக்குக் கிடைத்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். முப்பது வருடம் சிறப்பாகப் பணியாற்றும் ஒரு சிப்பாயை ஒரு கர்னல்தான் சாதாரண சூழ்நிலையில் லெப்டினென்ட்டாக பதவி உயர்வு செய்யமுடியும். இன்று கர்னல் யாரும் நம்மிடம் இல்லை. லெப்டினென்ட் கர்னல் அயர் கூட் மட்டுமே நம்மிடம் இருந்தார். நமது அயர் கூட் நினைத்திருந்தால் கொடிக்கம்பத்தை அவரே வெட்டியிருக்கலாம். யூனியன் ஜாக்கை உயர்த்தியிருக்கலாம். பக்கத்தில் நிற்கும் நானோ, இன்ஸோ அவரை உடனடியாக லெப்டினென்ட் கர்னலிலிருந்து கர்னலாகப் பதவி உயர்வு செய்திருக்க முடியும். இதுதான் நமது ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் பெருந்தன்மை. எப்படியோ என் வாயால் நமது பெருமைக்குரிய தளபதி அயர் கூட்டை கர்னல் சர் அயர் கூட் ஆக அறிவிக்க முடியவில்லை. சிப்பாய் இன்ஸை லெப்டினெட்டாக அறிவிக்க முடிந்தது.

இன்றைய நாள் லெப்டினென்ட் கர்னலுக்கும், லெப்டினென்ட் இன்ஸுக்கும் எப்படி விடிந்ததோ தெரியவில்லை. சாதாரண சிப்பாயான எனக்கு இந்த நாள் நன்றாகவே விடிந்திருக்கிறது. இப்பவும் நான் சாதாரண பாதுகாவலன்தான். சிப்பாய்தான். ஆனால் என்னைப் போன்ற ஒரு சாதாரணச் சிப்பாய்க்கு லெப்டினென்டாக பதவி உயர்வு வழங்க அதிகாரம் பெற்ற ஹானரபிள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் தற்காலிகப்

பிரதிநிதி நான். நாம் அனைவரும் லெப்டினென்ட் கர்னல் சர் அயர் கூட் கர்னலாகப் பதவி உயர்வு பெறவேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவோம்" என்று சொன்னவுடன் வீரர்கள் மண்டியிட்டனர். கைதியாகியிருந்த பிரெஞ்சு சோல்ஜர்களும் மண்டியிட்டனர்.

இரண்டு நாளில் சர் அயர் கூட்டை கர்னலாக சென்னை கவர்னர் பதவி உயர்வு செய்தார். லெப்டினென்ட் இன்ஸ் வந்தவாசிக் கோட்டையின் மேற்பார்வையாளரானான்.

கோட்டையின் குண்டு துளைத்த பகுதிகளை காரைச்சாந்து போட்டு சரி செய்தான். முட்டையின் வெள்ளைக்கரு, கருப்பஞ்சாறு, சுண்ணாம்பு அனைத்தும் ஒரு வாரம் தண்ணீரில் ஊறவைக்கப்பட்டு ராட்சச அம்மிகளில் போட்டு அரைக்கப்பட்டன. அந்தச் சாந்தை எடுத்து செங்கல்மீது பூசி இடிந்த கோட்டையைக் கட்டினான். பத்து நாளில் கோட்டை புதியது போல் மாறிவிட்டது. கோட்டை மீது நின்று வேலைகளை மேற்பார்வை செய்யும் போது லெப்டினென்ட் இன்ஸ் கீழே விழுந்துவிட்டான். பதினைந்து அடி அகழி. நல்ல வேலையாக அகழியில் இரண்டு அடி தண்ணீர் இருந்தது. அதனால் இன்ஸ்க்கு பெரிய காயம் ஏதுமில்லை. ஆனால் வலது கால் ஊனமாகிவிட்டது. மதுரையில் சிறிது காலம் மருத்துவ ஓய்வில் இருந்த இன்ஸ் கமுதிக்கு வந்து நாற்பது வருடங்கள் ஓடிவிட்டன. வந்தவாசிப் போரில் இருபத்தி மூன்று வயது வாலிபனாக நுழைந்த லெப்டினென்ட் இன்ஸ் இன்று அறுபது வயதுக் கிழவன். கால் நொண்டியாகி விட்டதால் வந்தவாசிப் போருக்குப் பிறகு எந்தப் போரிலும் அவன் கலந்துகொள்ளவில்லை. புரோமோசனும் வரவில்லை. நாற்பது வருடமாக ஒரே கோட்டையில் இருந்ததால் கமுதிக் கோட்டையை சிலர் நொண்டிக் கோட்டை என்றும் அழைப்பார்கள். தினமும் காலையும் மாலையும் கோட்டை கொத்தளத்தின்மீது ஒரு காலை நொண்டிக்கொண்டு லெப்டினென்ட் யூனிபார்மில் செல்லும் இன்ஸ்சை பலர் விநோதமாகப் பார்ப்பார்கள். வெயில், மழை, துக்கம், சந்தோசம் எது வந்தாலும் காலை, மாலை இன்ஸின் நொண்டி நடை கமுதிக் கோட்டைக் கொத்தளத்தில் நடந்தே தீரும். இன்ஸின் உதவியாளர்தான் கேத்தரீனின் கணவன் புரக்யூர்மென்ட் டாம்.

சாயல்குடி ஜமீன்தார் டாமிடம், "உனக்காக லெப்டினென்ட் இன்ஸ் ஏதாவது செய்வாரா" என்று கேட்டவுடன் டாம் வார்த்தைகளை மடமடவென்று கொட்டிவிட்டான்.

“லெப்டினென்ட் இன்ஸுக்கு குடும்பம் குட்டி எதுவும் இல்லை. வயசுக் காலத்தில் போர்ச்சுக்கீசிய வேசிகளோட இருந்திருக்கார். அப்புறம் விட்டுட்டார். பைபிள் படிக்கக்கூட மறந்துருவாரு. ஆனா கோட்டைக் கொத்தளத்தின்மீது தினமும் இரண்டு முறை நடக்க மறக்க மாட்டார். என்னைய சொந்த மகன் மாதிரி நடத்துவாரு. என்கிட்ட இரண்டு மூன்று முறை சொல்லிட்டாரு. “டாம், நான் திரும்ப இங்கிலாந்துக்குப் போகப் போறதில்ல. எனக்கு அங்க யாரும் இல்லை. மத்தவங்க எல்லாம் ரெண்டு வருசத்துக்கு ஒருமுறை இங்கிலாந்துக்குப் போறப்ப எனக்கு அங்குப் போக விருப்பமில்லை. என் வாழ்க்க இந்தக் கோட்டையிலேயே முடியட்டும். யுத்தம் செய்து கொண்டோ, நான் கோட்டைமீது நடந்துகொண்டிருக்கும்போதோ, நான் சாகணும். எனக்கு எது நடந்தாலும், அது இந்தக் கோட்டைக் குள்ளதான் நடக்கணும். பதினஞ்சு வயசுல அனாதையா வந்த நான், வந்தவாசிப் போரால லெப்டினென்ட் அதிகாரி ஆனேன். வந்தவாசிக் கோட்டையால் நான் இறவா நிலையை அடையணும். என்னோட சேமிப்பு கொஞ்சம் இருக்கு. அத நீ எடுத்துக்க. உனக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பாத்துட்டு நா செத்தா பரவாயில்லை“ன்னார். அப்பத்தான் இன்ஸ்வோட நண்பரான பாஸ்டர், கேத்தரீன இன்ஸ்கிட்ட அறிமுகப்படுத்தினார்.

“இந்தப் பொண்ணு கேத்தரீன், விதவ. இவ புருசன் ஈஸ்ட் இந்தியா கம்பெனி படையில சோல்ஜரா இருந்தான். திருப்புவனத்துல மருது பாண்டியர்களோட நடந்த சண்டையில செத்துப் போயிட்டான். நம்ம டாமுக்குக் கல்யாணம் பண்ணிவச்சா நல்லாயிருக்கும்னு சொன்னாரு. சரின்னு இப்பக் கல்யாணம் நடக்கப்போகுது. நீங்க கேட்ட மாதிரி நா எது கேட்டாலும் லெப்டினென்ட் இன்ஸ் செய்வாரு.”

“ரொம்ப நல்லது.”

“என்ன செய்யச் சொல்லணும்?” சாயல்குடி ஜமீன்தாரரை டாம் கேட்டான்.

“எனக்கும் கமுதி உடையார்களுக்கும் வியாபாரப் பிரச்சனையிருக்கு, கமுதி பரதவருங்க மீன் பிடிப்பாங்க. அதக் கருவாடு ஆக்கி வியாபாரமும் பண்ணுவாங்க. எனக்கும் உடையார்களுக்கும் ஒத்துப் போகல. எங்களுக்குள்ள வியாபாரப் போட்டியிருக்கு. லெப்டினென்ட் இன்ஸ் நினைச்சா இதச் சுமூகமா சரி பண்ண முடியும். உடையாருங்கள்ள பாதிப்பேரு இப்ப கிறிஸ்துவத்துக்கு மாறிட்டாங்க.

இன்ஸ் அவங்களக் கூப்பிட்டு, “ஜமீன்தார் மதுரப் பக்கம் வியாபாரம் பண்ணட்டும். நீங்க திருநெல்வேலிப் பக்கம் வியாபாரம் பண்ணுங்கன்னு சொல்லணும். அப்படி சொன்னார்னா பரதவருங்க கட்டாயம் கேப்பாங்க.”

டாம் சிறிது நேரம் யோசித்தான்.

“ஜமீன்தார் நான் ஒன்னு சொல்லவா? நீங்க சொன்னத அப்படியே மாத்திச் சொல்றேன். நீங்க திருநெல்வேலி பகுதியில வியாபாரம் பண்ணுங்க. பரதவங்க மதுரப் பக்கம் பண்ணட்டும்னு இன்ஸ்ஸ நான் சொல்ல வச்சா உங்க முடிவு என்னவாயிருக்கும்?”

ஜமீன்தார் “பரவாயில்லை“ என்றார்.

“நான் சொன்னதுல எனக்கு லாபம் கொஞ்சம் கூடுதலா கிடைக்கும். திருநெல்வேலி பக்கம் வியாபாரம்னா லாபம் கொஞ்சம்மா இருக்கும். அவ்வளவுதான்” என்றார் ஜமீன்தார்.

“சரி நான் லெப்டினென்ட் இன்ஸிடம் பேசி நீங்க சொல்லுறபடி செய்ய வக்கிறேன். உங்க ரெண்டு பேரு பகை முடிஞ்சிருதுன்னு வச்சுக்கங்க. எனக்கு என்ன பண்ணுவீங்க?”

“நானும் கமுதி உடையார்களும் சமாதானம் ஆயிட்டோம்னா அப்புறம் என்ன? உங்க சர்ச்ச நல்லா ஆக்கிக் குடுத்திர்றோம். உங்க கல்யாணத்த நல்ல முறையில நடத்தி வைக்கிறோம்.”

ஜமீன்தாரும், உடையார்களும் சமாதானமாகி விட்டனர். டாமுக்கும் கேத்தரீனுக்கும் ஜமீன்தார் செலவிலேயே கல்யாணம் நடந்தது. கல்யாணத்திற்குப் பிறகு இருவரும் கமுதிக் கோட்டைக் குள்ளேயே குடி வந்துவிட்டார்கள்.

டாம் பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் தானியங்கள, கருப்பட்டிய கொறஞ்ச விலைக்கு வாங்கி வியாபாரம் பண்ண ஆரம்பிச்சுட்டான். மருது பாண்டியர்களோட சண்ட வந்தப்ப லெப்டினென்ட் இன்ஸின் அறிமுகத்தில் டாம்தான் கம்பெனிப் படைகளுக்கு பொருட்கள் வாங்கிக் கொடுத்தான். யுத்தக் காலத்தில் பொருள் வாங்கும்போது பணம் முழுசாத் தர வேண்டியதில்ல. யாரும் கண்டிச்சு கேக்கவும் மாட்டாங்க. ஆனா தளபதி பான்ஜோரிடம் பொருட்களுக்கான முழுத் தொகையையும் வாங்கிவிடலாம். வரவு அதிகம். செலவு கம்மி. மருது பாண்டியர்களோட வெள்ளக் காரங்க

கட்டாயம் காளையார்கோயில் காடுகள்ல சண்டை போடு வாங்கன்னு லெப்டினென்ட் இன்ஸ்கிட்ட அஞ்சாறு வருசங்களுக்கு முன்னாலேயே டாம் சொல்லிக்கிட்டிருப்பான். அது ரொம்ப நாள் சண்டையா இருக்கும். அப்போதுதான் நிறைய சம்பாதிப்பேன்னு டாம் சொல்லுவான். அப்படி ஒரு யுத்தம் வந்ததா? ஆம். டாம் நினைத்தபடி காளையார்கோயில் காடுகளில் மருது பாண்டியர் களுக்கும் வெள்ளைக்காரங்களும் நாற்பது நாட்கள் சண்டை நடக்கப் போகிறது. அம்பது மைல் நீளமும் பதினெட்டு மைல் அகலமும் உள்ள காளையார்கோயில் காட்டுக்குள் அந்நியர்கள் யாரும் அவ்வளவு இலகுவாக நுழைய முடியாது. மான், காட்டுப்பன்றி, நரி, ஓநாய், சிறுத்தைப் புலிகள் வாழும் அடர்ந்த காடு. மருதுபாண்டியர்கள் இந்தக் காட்டுக்குள் இருந்துகொண்டுதான் வெள்ளக்காரங்களை கொன்னு குவிக்கப் போறாங்க.

இந்தியாவில் அதுவரையில் நடந்த போர்களில் அதிகமான அளவு வெள்ளை அதிகாரிகள் செத்தது, இந்தக் கானகத்தில் நடக்கப்போகிற போரில்தான். டாம், சண்டையைத்தான் எதிர்பார்த்து காத்திருந்தான். ஆனால் போர் மேகம் சூழும் முன்பே பெயர் தெரியாத நோய் ஒன்றுக்கு டாம் பலியாகிவிட்டான். இரண்டாம் முறையாகக் கேத்தரீன் விதவையாகி விட்டாள் வாலர் அந்தக் காலக்கட்டத்தில்தான் கமுதிக் கோட்டைக்கு லெப்டினென்ட் இன்ஸின் விருந்தினராக வந்திருந்தான். நிராயுதபாணியாக இருந்த சிவகங்கை அரசர் முத்து வடுகநாதரைக் காளையார்கோயில் மாளிகையில் வைத்துக் கொன்றதால் மேஜர் பான்ஜோருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. வாலர் துப்பாக்கியில் இருந்த ரவைகள்தான் அரசரையும், இளைய ராணியையும் கொன்றது என்பதால் வாலரை கம்பெனியின் படையணியிலிருந்து விலக்கி வைத்துவிட்டார்கள். கமுதிக் கோட்டையில வாலர் தங்கியிருந்தபோது இளம் விதவை கேத்தரீனைப் பார்த்திருக்கான். அவளது கதையைத் தெரிந்து கொண்டான். இளம் பெண்ணான கேத்தரீனுக்கு ஆண் ஆதரவு வேண்டும் என்று அவளது காப்பாளரான லெப்டினென்ட் இன்ஸ் கருதினார். வாலரின் விருப்பத்தை அறிந்து கேத்தரீனை வாலருக்கு கல்யாணம் பண்ணி வைத்தார். பின்னர் வாலர் பாளையங்கோட்டை ஜெயிலராகப் பதவி ஏற்றான்.

கேத்தரீன் இப்போது நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகி விட்டாள். இந்தப் பெண் கேத்தரீன் செய்யப்போகும் சிறு உதவியின்மூலம் அவளுடைய இறந்துபோன கணவன் டாமின் வார்த்தைகள்படி, இந்தப் பிராந்தியத்தில் மீண்டும் ஒரு பெரும் போர் உருவாகப் போகிறது

என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. இதைக் குறித்து வைத்துக் கொண்டு காலம் சரியான தருணத்திற்காகக் காத்திருந்தது.

•

13

துபாஷ் ரெங்கசாமிப் பிள்ளையும், ஐரிஷ் நாட்டுச் சிப்பாய் ஒயிட்டும் பாளையங்கோட்டை மார்க்கெட்டுக்கு வந்தார்கள். ஒயிட்டுக்கு மார்க்கெட்டில் உட்காருவதற்கென்றே தனியிடம் ஒன்று உண்டு. அது ஒரு வாழையிலைக் கடை. பக்கத்து ஊர்களிலிருந்து வாழையிலைக் கட்டுகள் இந்தக் கடைக்குத்தான் வரும். தினமும் காலையில் ஏலம் விடுவார்கள். ஒவ்வொரு விவசாயியுடைய வாழை இலையும் ஒரே அளவில் இருந்தால், ஒரு கட்டு என்ன விலைக்கு ஏலம் கேட்கிறார்களோ அதே விலைக்கு எல்லாக் கட்டுகளும் போகும்.

“இந்த ஏலத்த வேடிக்கை பார்க்க எப்பவும் திங்கட்கிழமைகள்ல வெள்ளக்காரன் வருவான். இன்னைக்கு விசாயக்கிழமை வந்திருக்கானே” என்று ஏலம் போடுற தேவர் யோசித்துவிட்டு ஒயிட்டைப் பார்த்துக் கும்பிட்டார். துபாஷைப் பார்த்ததும் தோளில் இருந்தத் துண்டை எடுத்து இடுப்பில் கட்டினார்.

துபாஷ் முகத்தில் புன்னகையுடன், “என்னப்பா, கட்டுக பூராம் அப்படியே அடஞ்ச வச்சது அடஞ்சு வச்ச மாதிரியே இருக்கு. விலை இல்லையா? இப்ப என்ன விலைக்குப் போகுது கட்டு?”

“நல்ல வில சாமி, எல்லா கட்டும் விலைக்குப் போயிடுச்சி. அதனால இன்னிக்கு ஏலம் போடல. ஏதோ விசேசமாம். மொத்தமா வாங்கிட்டாங்க. இன்னும் எடுத்துட்டுப் போகல. எனக்குப் பணம் வந்திருச்சு. அதனால கொஞ்ச நேரம் காத்திருக்கேன். விலைக்கு வாங்கி வச்சவங்க. வந்திருவாங்க இப்ப” என்றான்.

“மிஸ்டர் ஒயிட், வாங்க காய்கறிக் கடைப் பக்கம் போகலாம்” என்றார் துபாஷ்.

“சரி” என்றான் ஒயிட்.

“மிஸ்டர் ஒயிட், நீங்க சந்தைக்கு அடிக்கடி வர்றவரு. இன்னைக்கு ஏதாச்சும் உங்க பார்வையில வித்தியாசமா படுதா?”

“மிஸ்டர் துபாஷ், எனக்கு எந்த வித்தியாசமும் தெரியல. ஏன்னா, இது நா சந்தைக்கு வர்ற நேரம் இல்ல. நா காலங்காத்தால வருவேன். இப்ப மணி பதினொன்னுக்கு மேலயிருக்கும். இந்நேரம் நா வந்ததேயில்ல. ஆனா இலை கடைக்கார தேவர் ஒரு தடவ என்கிட்ட சொல்லியிருக்கார். “காலைல பத்து மணிக்கு நீங்க சந்தைக்கு வந்து பாத்தீங்கன்னா கடைகள்ல ஒரு பொருள் இருக்காது, ஒரு ஈ காக்கா இருக்காது”ன்னுசொல்லியிருக்காரு. இன்னிக்குப் பொருள் பூராம் இருக்கு. அது மட்டும்தான் எனக்கு வித்யாசமாத் தெரியுது.”

இருவரும் பேசிக்கொண்டே காய்கறி கடைகள் பக்கம் வந்தனர். ஒரு கடைக்காரரைப் பார்த்து,

“டேய், காய்கறி விலையெல்லாம் எப்படிடா இருக்கு? தைப்பூசம் வருதுன்னு விலைய ஏத்திறாதீங்க.”

காய்கறிக்கடைக்காரர் துபாஷை ரொம்ப நாட்களுக்குப் பின் பார்க்கிறார். அதனால் முதலில் சரியாக கவனிக்கவில்லை. அவர் பார்வை முழுவதும் ஒயிட்மீது மட்டுமே இருந்தது. திடீரென ஒரு அதிகாரக் குரல் கேட்டவுடன்தான் ஒயிட்டுக்குப் பக்கத்தில் நிற்கும் அந்தக் குட்டை மனிதரைப் பார்த்தார். “இவரை அடிக்கடி கோயிலுக்குள்ள பாத்திருக்கோமே, ஆங். இவரு, சுடலேயோட முதலாளி. வெள்ளக்காரங்க கூடவே இருக்குறவர் ஆச்சே” என்று பதறி அடித்து எழுந்தார்.

“சாமி, கும்பிடுறேன். வியாபாரம் பண்ணுன அசதி. சாமியக் கவனிக்கல. சாமிகிட்ட வேல பாக்குற சுடலயோட ஊர்க்காரன்தான் நான்.

காய்கறி விலய நாங்க எங்க சாமி ஏத்துறம்? இறக்குறோம்? இந்தச் சிப்பாய் ஒயிட் துரை மாதிரியிருக்கிற துரைக சொல்லுற விலதான். பாஞ்சாலங்குறிச்சிச் சண்ட நடந்தப்ப நல்ல வில கிடைச்சது. அப்புறம் வில விழுந்ததுதான். இப்ப துரைக எல்லாரும் குறைச்ச விலைக்குத்தான் வாங்குறாங்க. வியாபாரம் சுறுசுறுப்பு இல்ல. இன்னிக்குப் பாருங்க. வந்த சரக்குல பாதிதான் விலைக்குப் போயிருக்கு. மீதிய எப்படி தள்ளிவிடுறதுன்னு பாத்துக்கிட்டிருக்கேன்."

"ஏன்டா, என் வீட்டுக்குச் சுடலப் பய இங்க இருந்துதான் காய்கறி கொண்டு வர்றானா? காசெல்லாம் ஒழுங்கா குடுக்கிறானா? நா அவன்கிட்ட பணம் கொடுக்கிறேன்டா."

"சாமி, அதெல்லாம் கொற சொல்ல முடியுமா? வாங்குனப் பொருளுக்கு சுடல அண்ணே கூடுதலா பணம் கொடுத்திருப்பாரே ஒழிய கொறச்சுக் கொடுத்து எங்க வகுத்துல எல்லாம் அடிக்க மாட்டாரு."

"இனிமே என்னடா வியாபாரம் நடக்கப் போகுது? கிளம்ப வேண்டியதுதானே?"

"அதான் சாமி கிளம்பலாம்னு பாத்தேன். யாரோ ஒரு புண்ணியவான் நேத்து சந்தைக்கு வந்துருக்கார். நான் அந்த நேரம் இங்கயில்ல. காய்கறி, வாழயிலைய ஏலம் போடாமலே எல்லாத்தையும் வாங்குறேன்னு வந்திருக்கார். வாழையிலைக்குக் காசு முன்பணம் கொடுத்திட்டுப் போயிட்டாராம். பெரிய விசேசம்போல. விசேசத்துக்கு காய்கறியும் வேணும்னு கேட்டாராம். அதுதான் அவர எதிர்பார்த்து காத்துக்கிட்டிருக்கேன். ஆள் வந்தார்ன்னா அவர்கிட்ட தள்ளிட்டு கிளம்ப வேண்டியதுதான்."

கடைக்குள் படுத்திருந்த ஒருவன் துபாஷின் கழுகுப் பார்வையில் பட்டுவிட்டான்.

"யார்லே அது, பட்டப்பகல்ல யாவாரம் பண்ணுற இடத்துல தூங்கிக்கிட்டிருக்கவன்? ஏன்லே? முதலாளி நீ முழிச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்க? ஒன்கிட்ட கூலிக்கு இருக்கிற பய தூங்கிக்கிட்டிருக் காம்? வியாபாரம் உருபட்டமாதிரிதான். உசுப்புடே அவாளே" என்றார் துபாஷ்.

கடைக்காரன் துபாஷ் காட்டிய திசையில் பார்த்தான். "சாமி, இவரு என் கடையில வேல பாக்குற ஆள் இல்ல. வியாபாரம் பண்ண

வந்த ஆளு மாதிரி தெரியுது. வெளியூர்க்காரரு."

"ஏம்பா, காலம் கெட்டுக் கிடக்கு. கவனமாயிருக்க வேணாமா?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி இவரப் பார்த்தேனே? ஆமா, அப்ப விசாரிச்சேன். சந்தையில இருக்கிற இலக்கட்டுகள வாங்க வந்தேன்னாரு. காய்கறி வாங்குறதுக்காக ஆளு வருவாங்க... அதுவர இங்க இருக்கேன்னாரு. கொஞ்ச நேரத்துக்கு முன்னால தான வந்தாரு? அதுக்குள்ள ஆளு தூங்கிருச்சு. அசதி போல.

துபாஷ் அவனைக் கூர்ந்து பார்த்தார். அவன் தூங்கிக் கொண்டிருந்ததுபோலத் தெரியவில்லை. ஆளைப் பார்த்தால் வெளியூர் ஆள் மாதிரிதான் தெரிந்தது. தலையில் நிறைய முடி வளர்த்துக் கொண்டை போட்டிருந்தான். நல்ல உயரம். கருப்பு நிறத்தில் இருந்தான். இடுப்பில் வேட்டி மட்டும் கட்டியிருந்தான். நல்ல இளம் பிராயத்தில் இருந்தான்.

பேச்சு சத்தம் கேட்டு எழுந்தவன், துபாஷைப் பார்த்தான். அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு கையில் தங்கக் காப்போடு நிற்கும் குட்டையான ஆளையும், அவனோடு நிற்கும் வெள்ளைக்காரத் துரை ஒருவனையும் பார்த்தான். யாரோ ஒரு பெரிய ஆள் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் யார் என்று தெரியவில்லையே என யோசித்தான்.

"ஏல, நீ யாரு? ஒன்னயைப் பாத்தா நம்ம பக்கத்து ஆளாத் தெரியலயே?"

"அய்யா, எம் பேரு வேலு. சிவகங்கப் பக்கம் ஊரு. திருச்செந்தூர்க் கோயிலுக்குப் போயி சாமி கும்பிட்டு வர்றேன். இப்பத் தலைவன் கோட்டைக்குப் போயிக்கிட்டிருக்கேன். எங்கூட வந்த ஆளுக ஆத்துல குளிச்சிட்டு கஞ்சி காய்ச்சிக்கிட்டு இருக்காங்க. கொஞ்சம் பேரு காய்கறி இலை வாங்க வந்தோம். கடைக்கு வந்த எனக்கு நல்ல அலுப்பாயிருந்துச்சு, அப்படியே தூங்கிட்டேன்."

"சிவகங்கைக்கு பக்கத்து ஊர்னா? எது?"

"சிறு கூடல்பட்டி"

"செட்டியாரா?"

“இல்ல, தேவமாரு”

“சரி வா, என்கூட” என்று துபாஷ் கூப்பிட்டார். துபாஷிற்குத் தெரிந்துவிட்டது, காலையில் ஆத்தங்கரையில் பார்த்த ஆட்கள் மாதிரியேதான் இவனும் இருக்கிறான். இவனை விலாவாரியாக விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தார் துபாஷ்.

“ஒம் பேரு?”

“வேலு மயில்சாமி. வேலுன்னு கூப்பிடுவாங்க.”

“ஏம்பா, உங்க சிவகங்க ராணி பேரு வேலு நாச்சியார்ல? எப்படியிருக்காங்க?”

“சாமி, பெரிய இடத்து விசயம் என்ன மாதிரி ஒன்னுமில்லாப் பயங்களுக்கு எதுக்குச் சாமி தெரியணும்?” ராணி ஆத்தா செத்துப் போச்சு சாமி. வருசம் நாலு, அஞ்சு ஆயிடுச்சு. பெரியவங்க உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே?”

“ஆமாடா தெரியும். வேலுன்னு ஒம் பேரச் சொன்னவுடனே உங்க சிவகங்கச் சீம ராணி பேரு நாவகம் வந்துச்சு. சரி ஒங்கூட வந்தவங்க இப்ப ஆத்தங்கரயில இல்லைன்னு ஒனக்குத் தெரியாதா?”

“தெரியும் சாமி. தாசில்தார் சாமி விசாரிக்கிறதுக்குக் கூட்டிக்கிட்டுப் போய்ட்டாரு. சாமி நாங்க எங்க யுத்தம் நடந்தாலும் போவோம் வருவோம். லம்பாடிக மாதிரி.”

“ஏன்டா லம்பாடிகளோட ஒங்களச் சேக்குற? போர் செய்யுற வீரங்களோட ஆயுதங்களயும் சோத்து மூட்டையையும் மட்டும்தான் லம்பாடிக தூக்கிக்கிட்டு வருவாங்க. புள்ளப்பூச்சி மாதிரி சண்டயில எப்பவும் கலந்துக்க மாட்டான். லம்பாடி ஆளுக ஓங்குதாங்கா இருந்தாலும், எவ்வளவு உக்கிரமான சண்ட நடந்தாலும் வேலுக்கம்பு, கத்திய தூக்கி வச்சிக்கிட்டு நிப்பானுக. அவனுங்களும் நீங்களும் ஒன்னாடா?”

“சாமி நாங்களும் அவங்களும் எப்படி ஒன்னு ஆவோம்? அவங்க நம்ம தஞ்சாவூர் ராசக்கமாரு பேசுற மராத்தியும், செட்டியாருகப் பேசுற கன்னட பாஷையும் சேத்துப் பேசுவாங்க. நான், நம்ம பக்கத்து ஆளு. சாமி பேசுற அதே பாஷை பேசுறவன்.”

“லம்பாடிக வேற, நீங்க வேறன்னு நானேதான் சொல்லிட்டேனே? அவனுங்கல்லாம் நல்லவங்கடா. யார எதித்துருக்காங்க? யாருகூட சண்ட போட்டிருக்காங்க?”

துபாஷ் ஒயிட் பக்கம் திரும்பினார். “ஆனா இதுல ஒன்னுபாருங்க மிஸ்டர் ஒயிட், உங்களுக்கு லம்பாடிகளப் பத்தி தெரியுமான்னு எனக்குத் தெரியல.”

ஒயிட், “கேள்விப்பட்டிருக்கேன், சரியா நினைவில் இல்லை மிஸ்டர் துபாஷ்” என்றான்

“லம்பாடிக இப்ப ஒரு இருநூறு முன்னூறு வருசமாத்தான் நம்மப் பகுதியில இருக்காங்க. இவங்க பூர்வீகம் பம்பாய்க்குப் பக்கம். சிவாஜி ராஜா கேள்விப்பட்டிருப்பீங்க. அவரோட ஊர் பூனா இருக்குப் பாருங்க, அத ஒட்டினப் பகுதி. ரொம்ப வறுமையான இடம். தண்ணீர் வசதியில்லாத நிலங்க. மழையும் சரியாப் பெய்யாது. அடிக்கடி வறட்சி வரும். மொட்டை வெயில். ஆனா ஆளுங்க நல்லாயிருப்பாங்க. நல்ல உயரம். சிவந்த நிறம். அளவான உடல்வாகு. கண், காது, மூக்கு எல்லாம் செஞ்சு வச்சது மாதிரியிருக்கும். ஆரம்ப காலங்கள்ல மொகலாயர்களோட கொரில்லா முறையில சிவாஜி சண்ட போட்டாரு.

கொரில்லா முறையின்னா, பெரிசா வலுவில்லாத ஒருத்தன் பலமான எதிரிய நிலைகுலைய வைக்க முயற்சிக்கிறது. ஒரு இடத்தில, கோட்டைக்குள்ளயோ, அல்லது மலைக்குள்ளயோ பாதுகாப்பா ஒளிஞ்சிக்கிறது. எதிர்பாக்காத ராத்திரி நேரம், அதிகாலை நேரத்தில மறஞ்சிருந்து எதிரியத் தாக்குறது. தாக்குதல்ல தனது பக்கம் உள்ள ஆள் இறந்துட்டா அந்தப் பிரேதம் எதிரி கையில கிடைக்காத மாதிரி உடனே அப்புறப்படுத்துறது, தனது பக்கம் எவ்வளவு பலம் இருக்கு, தன் கூட இருக்கவங்க எத்தனை பேருன்னு எதிரிக்குத் தெரியவிடாம மறைக்கிறது, முடிஞ்ச வரையில தனக்குப் பலம் இல்லைன்னாலும் மிகப்பெரிய பலம் இருக்கிற மாதிரி எதிரிகிட்டக் காட்டிக்கிறது, தான் உயிருக்குப் பயப்படுகிற ஆள் இல்லங்கிற மாதிரி நடந்துக்கிறது, தன் பக்கத்துல இருந்து எதிரி யாரை வீழ்த்தினாலும், யாரைக் கைது செய்தாலும், அது தன்னைப் பாதிக்காதுங்கிற மாதிரி நடந்துக்கிறது. இந்த மாதிரியான ஒரு புதுப் போர் முறைய நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவரு சிவாஜி ராஜா. அவர் மலைக்குள்ள இருந்துகிட்டே மொகலாயர்கள், சுல்தான்கள், வெள்ளக்காரங்கன்னு அவரோட எதிரிகளைத் தாக்கியிருக்கார்.

நம்ம வெள்ளக்காரங்க அவர, மலை எலின்னு கூப்பிடுவாங்க. ஔரங்கசீப் உயிரோட இருக்கிறவரை அவரு மலைக்குள்ள பதுங்கித் தாக்கிக்கிட்டிருந்தார். ஔரங்கசீப் இறந்த பிறகு வெளிய வந்துட்டாரு. குதிரைப் படையத் திரட்டிக்கிட்டு பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்களோட மோதினார். நம்ம மெட்ராசு, செஞ்சி, தஞ்சாவூர்ன்னுகூட வந்திருக்காரு. அந்தச் சமயங்கள்லதான் அவர்கூட இந்த லம்பாடிக வந்தாங்க. வீரர்களோட ஆயுதங்களத் தூக்க, சாப்பாட்டுப் பொருட்களக் கொண்டு வரன்னு. சிவாஜிகூட சண்ட போடுற அரசர்கள் லம்பாடிகளத் தாக்க மாட்டாங்க. ஏன்னா அவங்க சாதுவான ஆட்கள். சண்டை போட வரல. பொருளத் தூக்கத்தான் வந்தாங்கன்னு அவர்களுக்குத் தெரியும். அதனாலதான் இந்தச் சிறு கூடல் பட்டிக்காரப்பயகிட்ட இப்ப சொல்லிக்கிட்டிருந்தேன்" என்றார்.

"யெஸ் துபாஷ், நானும் கேள்விப்பட்டிருக்கேன். லம்பாடிப் பொம்பளக ரொம்ப அழகாயிருப்பாங்க. கொஞ்சம் முயற்சி பண்ணா கிடைச்சுருவாங்கன்னு சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன்."

"மிஸ்டர் ஒயிட், என்னடா நீங்க பொம்பளகளப் பத்தி பேசலையேன்னு பாத்தேன்? நீங்க சொல்லுறதப் பத்தி எனக்கு ஒன்னும் அபிப்ராயம் இல்ல. நம்மப் பகுதியில நீங்க நினைக்கிற மாதிரி லம்பாடி பொம்பளகளப் பத்தி அந்த மாதிரி பேச்சு எதுவும் இல்ல. இந்த விசயமும் நமக்குத் தேவையில்லை"

கொரில்லா போர் முறையைப் பற்றி சிவாஜியின் பூனாவிலிருந்து எண்ணூறு மைல் தாண்டியுள்ள சிவகங்கைக்கு எப்படித் தெரிந்ததோ? இன்றிலிருந்து ஆறாவது மாதத்தில் கொரில்லாப் போர் முறை காளையார்கோயில் காடுகளில் ஆரம்பிக்கப் போகிறது. கொரில்லாப் போர் பற்றித் துபாஷ் சொன்னதும் நடக்கப் போகிறது. எல்லாமும் துபாஷின் கண்முன்னாலேயே நடக்கப்போகிறது.

•

14

திருச்சிக் கோட்டையின் மேற்குப் பகுதி. குதிரை லாயங்கள் உள்ள பகுதிக்கு அடுத்த மூன்று கட்டிடங்களின் கடைசிக் கட்டிடம். இரு தளங்கள் உடைய கட்டிடம். கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் மூன்று அறைகள் உள்ளன. மூன்று அறைகளிலும் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். வலது பக்கத்தில் அறையில் உள்ளவன் ஒரு கிழட்டு வெள்ளைக்காரன். ஐந்து வருடமாக அந்த அறையில்தான் இருக்கிறான். அவன் கொஞ்சம் கொஞ்சமாக மன நோயாளியாகிக் கொண்டிருக்கிறான். இடது பக்க அறையில் உள்ளவன் ஒரு முஸ்லீம் கைதி. தினமும் ஐந்து முறை தொழுகை செய்வான். மீதி நேரத்தில் ஆற்காடு நவாப்பையும், ஹைதராபாத் நிஜாமையும் முணுமுணுப்பான குரலில் திட்டுவான்.

“இவனுங்களுக்குள்ள அடிச்சிக்கிட்டு, ஒருத்தன ஒருத்தன கொன்னு போட்டுட்டு, வெளிநாட்டுக்காரன் கிட்ட நம்ம ஜனங்கள காவு கொடுத்துட்டாங்க. பண்ணுன பாவத்துக்கு இப்ப வெள்ளக்காரங்க கிட்ட கேவலப்பட்டு நிக்கிறாங்க. இன்னும் இருக்கு. பாவம் பண்ணதுக்குத் தண்டனை அனுபவிச்சுத் தானே ஆவணும்” என்று ஏதாவது சொல்லுவான்.

நடு அறையில் இருக்கும் கைதி ஓர் இளைஞன். வயது முப்பத்தி ஐந்து. சிவந்த மேனியும், நல்ல உயரமும், அழகிய உடற்கட்டும் கொண்டிருந்தான். தினமும் அவனுக்கு முகச் சவரம் செய்தாக வேண்டும். அதற்காக அதிகாலை அவனை அறைக்கு வெளியே மூன்று காவலர்கள் அழைத்துச் செல்வார்கள். அவனுடைய சொந்த ஊர் ராமநாதபுரம். சிறைச்சாலை மலேசியச் சிப்பாய்களின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவனைப் பற்றி அவர்களுக்கு அதிகம் தெரியாது. அவனது பெயர் சேதுபதி என்று மட்டும் மலேசியச் சிப்பாய்களுக்குத் தெரியும்.

பக்கத்து அறையில் உள்ள கிழட்டு வெள்ளைக்காரக் கைதி ஒரு கற்பழிப்பு வழக்கில் மாட்டியிருந்தான். அவன் சில நேரம் பைத்தியம் போல உளறிக் கொண்டிருப்பான். அவன் ஒரு முன்னாள் ராணுவ அதிகாரி. பெயர் கேப்டன் கம்மிங்ஸ். அவனுடைய மேலதிகாரியின் தங்கையை காதலித்திருக்கிறான். “எலிசபெத் மான்செல் பொய் சொல்லுகிறாள். அவளை நம்பாதீங்கள் யுவர் ஆனர்” என்று இவன்

அடிக்கடி கத்துவதிலிருந்து அவள் பெயர் எலிசபெத் மான்செல் என்று சேதுபதி தெரிந்து கொண்டார்.

எலிசபெத்துக்கு இவன் மேல் பிரியம் இல்லை. அவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எலிசபெத்திற்குத் தொடர்ந்து தொந்தரவு கொடுத்துள்ளான். அவள் போகிற இடமெல்லாம் போய் அவள் பின்னால் சுற்றியிருக்கிறான். அண்ணனிடம் அவனைப் பற்றி அவள் புகார் செய்துவிட்டாள். அவள் அண்ணன் அவன் வேலைக்கு உலை வைத்து விட்டான். சஸ்பெண்ட் ஆன அன்று இரவு எலிசபெத்தின் வீட்டிற்குச் சென்று அவள் அறைக்குள் நுழைந்து விட்டான். இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வருடம் கழித்து எலிசபெத் மான்செல் மெட்ராஸ் கவர்னரிடம் ஒரு புகார் கொடுத்தாள்.

“என் அண்ணன் மெட்ராஸில் வேலை பார்க்கிறார். அவரைப் பார்ப்பதற்காக, லண்டனிலிருந்து புறப்பட்ட கப்பலில் நான் மெட்ராஸ் கிளம்பினேன். அந்தக் கப்பலில் என்னோடு கம்மிங்க்ஸ் என்பவனும் வந்தான். கப்பல் கிளம்பியதும் காமப் பார்வை பார்த்து எனக்கு மிகுந்த தொல்லை கொடுத்தான். மெட்ராஸ் வந்த பிறகும் அவன் எனக்குத் தொல்லை கொடுத்தான். என்னைக் காதலிப்பதாகச் சொன்னான். மட்டரகமான கவிதைகளை எழுதிக் காண்பித்தான். நான் அவனது காதலை ஏற்கவில்லை. அவன் தொடர்ந்து எனக்குத் தொந்தரவு கொடுத்து வந்ததால், என் அண்ணனிடம் இவனைப் பற்றிப் புகார் செய்தேன். அண்ணன் இவனைக் கூப்பிட்டு எச்சரித்தான். அண்ணனுக்குப் பயந்து ஆறு மாதம் அமைதியாக இருந்தான். திடீரென ஒரு நாள், இரவில் என் அறைக்குத் திருட்டுத்தனமாக வந்தான். நான் சத்தம் போட்டேன். என் வாயைப் பொத்தி விட்டான். நான் திமிரியும் என்னை விடவில்லை. என்னை கம்மிங்க்ஸ் பலாத்காரம் விட்டான்” என்று புகார் சொல்லியிருக்கிறாள். அதை நம்பிய கவர்னர் ரிச்சர்ட் பென்யான் உடனே இது குறித்து நீண்ட விசாரணை நடத்தினான்.

“இந்தக் கவர்னரே ஒரு அசிங்கம் பிடிச்ச பயல். இங்கிருந்து ரிட்டயர் ஆகி இப்ப லண்டன் பெர்க் ஷயர் நவாப்னு அவனுக்கு அவனே பெயர் வைத்துக்கொண்டான். அங்கு ஒரு பெரிய மாளிகைக் கட்டி நாலு பொம்பளைகளோடு வாழ்ந்துகிட்டு இருக்கான். அவன் என்னைப் பத்தி விசாரிச்சு என்னையப் பொம்பளப் பொறுக்கின்னுட்டான்” என்பான் கம்மிங்ஸ். விசாரணை செய்த வில்லியம் மான்சூன்ங்கிற ஜட்ஜ்தான்

அவனைக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தவன். தீர்ப்பு வெளியானவுடன் கம்மிங்ஸ் நீதிமன்றத் திற்குள்ளேயே கத்தினானாம்.

"டேய் வில்லியம் மான்சூன், உனக்கு அறிவே இல்லையாடா? நான் அவளைக் கற்பழிச்சேன்னே வச்சுக்க. கற்பழிப்புச் சம்பவம் நடந்து ஒரு வருசம் கழிச்சாடா ஒரு பொம்பள புகார் பண்ணுவா? இந்தியாவில இதுதான்டா முதல் கற்பழிப்பு கேஸூ. நல்ல தீர்ப்புக் குடுத்திருக்கடா. இந்த மாதிரிதான்டா இனிமே இந்த நாட்ல விசாரணையும் தண்டனையும் இருக்கும்"ன்னு கத்தியிருக்கான்.

சேதுபதியின் இடது பக்க அறையில் இருக்கும் முஸ்லீம் கைதி, சந்தா சாகிப்புக்கு உறவினன். சந்தா சாகிப்பின் படையில் சிப்பாயாக இருந்திருக்கிறான். எப்படியோ நிறையப் பணம் கிடைத்திருக்கிறது. அதை ஆற்காடு நவாப்பிற்குக் கடன் கொடுத்திருக்கிறான். நவாப்பிட மிருந்து பணம் திரும்ப வரவில்லை. நவாப் அரண்மனைக்கு முன்பு நின்றுகொண்டு பணத்தைத் திரும்பக் கேட்டு சத்தம் போட்டிருக்கிறான். நவாப் புகார் செய்ததால் இவனைப் பிடித்துக் கொண்டு வந்து இங்கு அடைத்து வைத்து விட்டார்கள்.

இரு கைதிகளிடமும் ஒரு நாளைக்கு ஒரு முறை, இரண்டு முறை சேதுபதி பேசுவார். சேதுபதிக்குச் சிறை வாழ்க்கைப் பழக்கமாகி விட்டது. பத்து வயதுச் சிறுவனாக இருக்கும்போதே நவாப்பின் தூண்டுதலில் அவரையும் அவரது தங்கை, தாயாரையும் இதே திருச்சி சிறையில் வெள்ளைக்காரர்கள் அடைத்து வைத்தனர். பத்து வருடம் திருச்சி சிறையிலிருந்தார். ராமநாதபுரம் மக்கள் "தங்களின் அரசர் விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று ஒவ்வொரு ஊரிலும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். கலவரத்தைக் கட்டுப்படுத்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி விரும்பியது. சேதுபதி திரும்ப பதவிக்கு வந்துவிடக்கூடாது என்று ஆற்காடு நவாப் விரும்பினாலும் ஆங்கிலேயர்கள் ஒரு அளவுக்கு மேல் நவாப்பிற்கு இடம் கொடுக்க வேண்டாம் என நினைத்தனர். ராமநாதபுரத்திற்குத் தான் விரும்பும் ஒருவரை கவர்னராக நியமிக்க ஆற்காடு நவாப் அனுமதி கோரினார். ஆனால், ஆற்காடு நவாப்பின் கோரிக்கையை நிராகரித்து சேதுபதியை விடுதலை செய்து, அவரை மீண்டும் ராமநாதபுரம் அரசராக நியமித்தனர். சேதுபதிக்கு அப்போது இருபது வயது. ஆங்கிலக் கல்வி, உடற் பயிற்சி, சிலம்பாட்டம், ஆங்கிலேய உணவுப் பழக்கம் என சிறைச்சாலையில் அவருக்குப் பல விஷயங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தன.

ராமநாதபுரம் வந்து சேதுபதியாகப் பதவியேற்றவுடன் தேவிப்பட்டினம் நவபாஷானக் கோயிலுக்கு வந்து பெருமாளைத் தரிசனம் செய்தார். சேதுக்கரையில் கடலில் நின்றார். அரசரிடம் உள்ள பயபக்தியின் காரணமாக உடன் வந்தவர்கள் தள்ளி நின்றிருந்தனர். எப்போதும் போல் அலை ஏதும் இல்லாமல் கடல் அமைதியாகயிருந்தது. தன் வாழ்க்கையும் இனிமேல் பிரச்சனை யின்றி இந்தக் கடல் போல அமைதியாக இருக்க வேண்டும் என்று தெற்கு நோக்கித் திரும்பி தூரத்தில் தெரிந்த ராமநாதபுரம் ராமநாதசாமியை வேண்டிக் கொண்டிருக்கையில், ஏதோ சத்தம் கேட்டது. சேதுபதி திரும்பிப் பார்த்தார். அவருடைய ஆட்கள் ஒரு பெண்ணிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவள் கத்திக் கொண்டிருந்தாள். பயந்தபடியே அவர்கள் ஏதோ சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தனர். சேதுபதிக்கு அவளை நினைவுக்கு வந்து விட்டது. ஆம், அவள் மங்களேஸ்வரி நாச்சியார். சேதுபதியைவிடப் பத்து வயது மூத்தவள். சேதுபதியின் அப்பாவிற்கும் அவரது இன்னொரு மனைவிக்கும் பிறந்தவள். சிறுவயதில் சேதுபதி அவளைப் பார்த்திருக்கிறார். ஆனால் சேதுபதியின் தாய் “இனிமேல் மங்களேஸ்வரியைப் பார்க்கக் கூடாது” என்று தடை விதித்த பின் அவளைப் பார்க்கவில்லை. திருச்சி சிறையில் இருந்த பத்து வருட காலத்தில் இந்த அக்கா ஒருமுறைகூட வந்து பார்க்கவில்லை என்ற வருத்தம் சேதுபதிக்கு உண்டு.

வளர்ந்து பெரிய பெண்ணாக இருக்கும் அக்காவை இப்போது தான் சேதுபதி பார்த்தார். அவள் தன்னைப் போலவே இருப்பதையும் பார்த்தார். அவள் மிகவும் ஆடம்பரமாக அலங்காரம் செய்து கொண் டிருந்தாள். கைகளில் முழங்கைவரை தங்க வளையல்களும் கழுத்து நிறைய தங்க ஆபரணங்களுமாக நின்றிருந்தாள். “அவரைத் தடை செய்ய வேண்டாம்” என்று சேதுபதி பணித்தார். மங்களேஸ்வரி விடு விடுவென சேதுபதியிடம் வந்தாள்.

“அக்கா எப்படியிருக்கிறீர்கள்?” என்றார் சேதுபதி.

“நான் இருப்பது இருக்கட்டும். முத்து ராமலிங்கம், உன்னுடைய பதவியேற்பிற்கு எனக்கு அழைப்பில்லை. நான் அதைப் பொருட்படுத்தாமல் வந்தபோதும் என்னை உன் ஆட்கள் அனுமதிக்கவில்லை. நீ பத்து வயதுப் பாலகனாகத் திருச்சி சிறைக்குச் சென்றாய். இந்தப் பத்து வருடங்களாக நம் அரண்மனையில் நவாப்பின் ஆட்கள் போட்ட ஆட்டம் கொஞ்சமல்ல. இப்பவும் நீ நவாப்பிற்கு

வருடத்திற்கு மூன்று லட்சம் கிஸ்தி பணம் கட்ட ஒத்துக் கொண்டிருக்கிறாய் என்று பேசிக் கொள்கிறார்கள். நீ சிறைக்குப் போன பிறகு உன்னை நினைத்து நான் வருந்தாத நாளில்லை. நான் நிறைய நகை போட்டுக்கொண்டு சுற்றுகிறேன் என்பார்கள் பொறாமை பிடித்தவர்கள். நான் சாதாரணப் பெண் என்றால் வீட்டின் மூலையில் ஒதுங்கிக் கிடந்திருப்பேன். சேதுபதியின் மகள் நான். ஊருக்காகவாவது நான் சந்தோசமாகயிருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டாமா? ராணி மங்கம்மாகூட நாயக்க அரசர் இறந்த பிறகு தன்னுடைய நகைகளைக் கழட்டினாரா? அல்லது அலங்காரத்தைத்தான் குறைத்தாரா? அவரை நம் ஊர்க்காரன்கள் விட்டு வைத்தான்களா? அச்சையாங்கிற பிராமணனை மயக்குறதுக்காக ராணி மங்கம்மா அலங்காரம் பண்ணிக்கிட்டு திரியுறாள்ன்னுதானே பேசினாங்க. அப்படியும் நான் என்ன ராணி மங்கம்மா மாதிரி நடுத்தர வயசுக்காரியா? முப்பது வயசெல்லாம் ஒரு வயசா? முத்து ராமலிங்கம், என்னைப் பத்தி யாராவது தப்பாச் சொல்லியிருந்தா, நம்பாதே. நானு செம்பி நாட்டு மறத்தி. புருசன் செத்தா உடன்கட்ட ஏறுற ஜாதியில் பிறந்தவ. எச்சிக்கலப் பயலுக பேச்சைக் கேட்காதே."

"இல்லை அக்கா, நான் எதையும் யோசித்தே செய்கிறேன். தேவையின்றி யாரையும் நெருங்க விடுவதில்லை. நான் இன்றைக்கு விடுதலையாகி வந்ததற்குக் காரணம் இவர்கள் யாரும் இல்லை. என் முகத்தைக்கூட பார்த்திராதவர்கள் மக்கள். சேதுக் கோயிலின் காவலர்கள் வழிவந்தவன் என்பதற்காக எனக்காக மக்கள் போராடியிருக்கிறார்கள். அவர்கள் முயற்சியால்தான் நான் இன்று சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறேன். பத்து ஆண்டுகள் சிறையில் இருந்தேன். இனிமேல் எனது மீதிக் காலத்தைப் பிரச்சனையில்லாது நடத்திச்செல்ல நினைக்கிறேன். நமது பக்கத்துச் சீமைகளோடு குறிப்பாக, சிவகங்கையோடு இணக்கமாக இருக்க நினைக்கிறேன். அதற்கான முயற்சிகளும் எடுக்க விரும்புகிறேன். எட்டு வருசம் விருப்பாச்சி மலையில் கோபால் நாயக்கர் ஆதரவில் இருந்துவிட்டு வேலு நாச்சியார் அத்தை போன வருசம் சிவகங்கை ராணியாயிட்டாங்கன்றது நமக்குச் சந்தோசமான விசயம்தானே? நம்ம அரண்மனையிலிருந்த பழனியப்பச் சேர்வையோட மகனுங்க பெரிய மருது, சின்ன மருதுவுந்தான் இப்ப வேலு நாச்சியார் அத்தைக்கு உதவியா இருக்காங்க. அதனால அவங்க கூடவும் சுமூகமாயிருக்கணும்னு நினைக்கிறேன்."

“மருதுகளப் பத்தி ரொம்பத் தூக்கி வச்சுப் பேசாதேப்பா. யார் யார எங்க வைக்கணுமோ, அவங்கள அந்தந்த இடத்தில வைக்கணும். வேலு அத்தைக்கு அந்த யோசனை இல்லாமப் பண்ணிக்கிட்டிருக்கு.”

“எனக்கென்னவோ மருது பாண்டியர்கள் இல்லைன்னா அத்தை அரசி ஆகியிருக்க முடியாது. இதுவரை அத்தை உயிரோடவே இருந் திருக்க முடியாது. மாமா முத்து வடுகநாதரும் சின்ன அத்தை கௌரி நாச்சியாரையும் அந்த மேஜர் பான்ஜோர் சுட்டுக் கொன்னபோது வேலு நாச்சியார் அத்தை கை குழந்தையோடதானே இருந்துச்சு? அந்த நிலையில இருக்கக்கூடிய ஒரு பெண்ணைச் சமாதானப்படுத்தி தைரியம் கொடுத்து விருப்பாச்சிக்குக் கூட்டிக்கிட்டுப் போனது மருது சகோதரர்கள் தானே?”

“இல்ல தம்பி, அத்தையக் கூட்டிட்டுப் போனது சிவகங்கை அமைச்சர் தாண்டவராயப் பிள்ளை.”

“அவர் வயசானவரு. உடம்புக்கும் சௌகரியம் இல்லாதவரு. விருப்பாச்சி போய்ச் சேர்ந்த வருசமே அங்கேயே இறந்தும் போயிட் டாரு. அதுக்குப் பின்னால ஆறு வருசம் விருப்பாச்சிக் காட்டுல சிவகங்கைப் படைகளுக்குப் பயிற்சி கொடுக்கிறது, சிவகங்கையை கிளர்ச்சிக்குத் தயார் பண்ணுறது, ஹைதர் அலி கிட்ட உதவி வாங்க அத்தைய தயார் பண்ணுறதுன்னு எல்லாம் பண்ணுனது மருது சகோதரங்கதானே.”

மங்களேஸ்வரிக்கு மருது சகோதரர்களை அவ்வளவாகப் பிடிக் காது. மறவர் குலப் பெண்ணான வேலு நாச்சியாரை அகம்படியார் இனத்தைச் சேர்ந்த மருது பாண்டியர்கள் வழிநடத்துவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

“சரிப்பா, வேலு அத்தைக்கு மக இருக்கா. வெள்ளச்சின்னு பேரு. வயசு பத்து, பதினொன்னு இருக்கும். ஆளு மூக்கும் முழியுமா நம்ம முத்து வடுகநாதர் மாமா மாதிரி அழகாயிருக்கா. இன்னும் ரெண்டு, மூணு வருசத்தில் பெரிய மனுஷி ஆயிடுவா. ராமநாத சாமி அருள் உனக்கு இருந்திருச்சின்னா அவளக் கல்யாணம் பண்ணிக்க. பிரிஞ்சு போன ரெண்டு சீமையையும் ஒன்னாக்கிறலாம்.”

“அந்தப் பிள்ள பேரு வெள்ளச்சியா? அத்தைக்குப் பெண் குழந்த யிருக்குன்னு கேள்விப்பட்டேன். பேர் தெரியாது. பரவாயில்லை, அக்கா

எல்லா விஷயமும் தெரிஞ்சு வச்சிருக்கீங்க."

"அது மட்டும் தெரிஞ்சு வைக்கல. ரெண்டு பேரு வெள்ளச்சியக் கட்ட துடிக்கிறாங்க. ஒருத்தன் சக்கத்தி வெங்கம் பெரிய உடையணத் தேவன். இவன் நாலுகோட்டக்காரன். அரசர் முத்துவடுக நாதருக்குச் சொந்தக்காரன். வேலு அத்த விருப்பாச்சிப் போகையிலேயே இவன் கூடப் போனவன். வேலு அத்த இந்தப் பயல எப்படி நினைச்சு வளக்குதுன்னு தெரியல. இவன அது மகனா நினைச்சாலும் சரி, மருமகனா நினைச்சாலும் சரி, ரெண்டுமே நமக்கு நல்லதில்லை. வெள்ளச்சிமேல கண்ணு வச்சிருக்கிற இன்னொரு ஆளு படமாத்தூர் ஒய்யாத் தேவர். இவருக்கு ரெண்டு மகனுங்க. மூத்த ஆளுக்குக் கண் பார்வ சரியில்ல. அதனால ஒய்யாத் தேவர் தன் ரெண்டாவது மகன் கௌரி வல்லபருக்கு வெள்ளச்சியப் பொண்ணுக் கேப்பாரு. படமாத்தூர்காரரு நம்ம மாமா முத்து வடுக நாதருக்கு நெருங்கிய ஒடம் பங்காளிங்கிறதுனால வேலு அத்தயால அவங்க கேட்டா மாட்டேன்னு சொல்ல முடியாது. நீ சுதாரிப்பா இல்லைன்னா அத்த மகளக் கட்ட முடியாது. அதனாலதான் உங்கிட்ட சொல்லுறேன், நாலுகோட்டை வெங்கம் உடையணத் தேவர் கிட்டயும், படமாத்தூர் கௌரி வல்லபன் கிட்டயும் சூதானமா நடந்துக்க" என்றாள்.

"சரி" என்றார் சேதுபதி.

"சரி நா கிளம்புறேன். அரண்மனையில இருக்கிறவங்க, என்னைய ஒன்னுடைய முதல் எதிரியா நினைக்கிறாங்க. நா அப்படி நினைக்கலைன்னு அவங்ககிட்ட சொல்லு. ரெண்டு பேருக்கும் அம்மாதானே வேற? அப்பா ஒன்னுதான? அதனால எனக்கு உன் எதிர்காலத்துல அக்கற இருக்குங்கிறத நீ மறந்துராத. உன் மந்திரி முத்திருளப்பப் பிள்ளைய கொஞ்சம் தள்ளியே வச்சுக்க. கவுத்தி விட்டுருவான். நவாப் ஆட்களோடும், வெள்ளக்காரங்களோடும் அவனுக்கு நெருக்கமான தொடர்பு இருக்கு" என்று சொன்னாள்.

"முத்திருளப்பப் பிள்ளை நல்ல ஆள்தானே? நம்மகிட்ட மந்திரியா இருக்கிறவர் ஆச்சே?"

"இந்தக் காலத்துல கூட இருக்கிறவங்களத்தான் நம்ப முடியாது. நீ ஜெயிலுக்குப் போய் வந்ததால ஊர்ல என்ன நடக்குதுன்னு உனக்குத் தெரியல. மைசூர் சமஸ்தானத்தில பூர்ணய்யான்னு இப்ப ஒரு மந்திரிப் பய ரீஜெண்ட்ர பேர்ல இருக்கான். மராத்திப் பார்ப்பனன். தஞ்சாவூர்ல

பிறந்து கோயம்புத்தூர்ல வளந்தவன். அவன் ஹைதர் கிட்டயும், திப்பு சுல்தான் கிட்டயும் மந்திரியா இருந்தவன். வெள்ளக்காரங்க திப்புவக் கொன்னுட்டு உடையார்க ஆட்சியக் கொண்டு வந்த பிறகு இப்ப மூணு வருசமா அதே பூர்ணய்யாதான் மைசூர்ல எல்லா முடிவும் எடுக்கிறவன். அதனால இவனுங்க யெல்லாம் எப்ப நமக்கு எதிரா போவானுங்க, வெள்ளக் காரங்ககிட்ட எவ்வளவு நெருக்கமாயிருக்காங்கன்னு தலைக்கு மேல வெள்ளம் போறப்பத்தான் தெரியும். அப்பத் தெரிஞ்சு ஒன்னும் பிரயோசனம் இல்லாமப் போயிடும்."

"சரி அக்கா, நான் பாத்துக்கிறேன்" என்றார் சேதுபதி.

தன் சகோதரியை வழியனுப்பிவிட்டு கடலுக்குள் சென்று முழங் கால் அளவு தண்ணீரில் மறுபடியும் சேதுபதி நின்று கொண்டார். சிறுது நேரம் கழித்துக் கடலைவிட்டு வெளியே வந்தபோது, சேதுபதி தனது சகோதரி பற்றித் தங்களிடம் ஏதாவது விசாரிப்பாரா என உடன்வந்தவர்கள் எதிர்பார்த்தனர். சேதுபதி எதுவும் பேசாமல் சாரட் வண்டியில் ஏறிக் கொண்டார். முன்னும் பின்னுமாகக் குதிரை வீரர்கள் பயணித்தனர். ராமநாதபுரம் அரண்மனை வாசலில் ஒரு கூட்டுவண்டி நின்று இருந்தது. வண்டியில் திரைச்சீலை தொங்கியது. சாரட் வண்டியைப் பார்த்ததும் வண்டியின் திரைச்சீலைகள் விலகின. இரு இளம் பெண்கள் வண்டியை விட்டு இறங்கினர். ஒருத்திக்கு முப்பது வயது இருக்கும். அடுத்தவளுக்கு இருபது வயது இருக்கும். இரு பெண்களும் சேதுபதியை வணங்கினர். அரண்மனைக்குள் நுழைந்த சேதுபதி, "வெளியில் நிற்கும் பெண்கள் யார்? எதற்காக வந்திருக்கிறார்கள்?" எனக் கேட்டார்.

"யார்னு கேட்டோம் ராஜா. நாங்க அவங்களக் கேட்டதுக்கு ராஜாகிட்டத்தான் பேசணும். அவர் வர்ற வரைக்கும் வெளியிலேயே காத்திருக்கிறோம்னு சொல்லி அர நாளாக் காத்திருக்காங்க."

"சரி, அவங்களுக்குக் கை, கால், முகம் கழுவ ஏற்பாடு பண்ணுங்க, சாப்பிடக் கொடுங்க" என்றார். சேதுபதி முகம், கை, கால் கழுவிவிட்டு புதிய ஆடைகளை அணிந்து கொண்டார். என்ன நினைத்தாரோ? உடலில் சந்தனத்தையும் ஜவ்வாது, புனுகையும் தேய்த்துக் கொண்டு கைகளை முகர்ந்து பார்த்தார். நல்ல வாடை வந்தது. வரவேற்பு அறைக்கு வந்தார். இரண்டு பெண்களும் எழுந்து நின்றனர்.

“நீங்கள் இருவரும் காலையிலிருந்து காத்திருப்பதாகச் சொன்னார்கள். உள்ளே வந்து உட்கார்ந்திருக்கலாமே? ஏதாவது சாப்பிட்டீர்களா?”

“சாப்பிடக் கொடுத்தார்கள் ராஜா. உங்க பதவியேற்புல நாங்களும் கலந்துக்கிட்டோம். திருப்புல்லானி எங்க சொந்த ஊரு. கோயிலுக்கு எதித்தாப்பல இருக்கிற வெள்ளையன் சேர்வக்காரர் சத்திரத்திற்கு அடுத்த வீடு. பொட்டுக்கட்டுற சாதி. என் பேரு சாசுவதம். இவ என் தங்கச்சி ஐசுவரியம்.”

“பேரே வித்தியாசமாயிருக்கே? சாசுவதம், ஐசுவர்யம்னு?

“ராஜா கடக்கண் பார்வ பார்த்தா ஐசுவர்யம் சாசுவதமாகிவிடும்.”

“நல்லாப் பேசுற. நான் என்ன பண்ணனும்?”

“நவாப்போட ஏஜென்ட்னு ஒருத்தன் திரியுறான். ராஜாவுக்குத் தெரியாதுன்னு நெனக்கிறேன்.”

“எனக்குத் தெரியாம யார் அது?” என்றார் சேதுபதி.

“உங்க பதவியேற்புக்கு நாங்க வந்தப்ப அவனப் பார்த்தோம். அவனும் விழாவுக்கு வந்திருந்தான். எங்க மேல அவனுக்கு விருப்பம் இருக்கோ என்னமோ? ஒரு தடவ திருப்புல்லானி கோயில்ல நாங்க சதுராட்டம் ஆடிக்கிட்டிருந்தப்ப கோயிலுக்குள்ளேயே வந்துட்டான். கோயில் பேஷ்கார், “கோயிலுக்குள்ள வர்ற வேலயெல்லாம் வச்சுக்கிறாதீங்கன்னு” கெஞ்சினார். அவரப் புடிச்சித் தள்ளிட்டான்.

“இனிமே உங்க சேதுபதி ராமநாதபுரம் ராஜா இல்ல. எங்க வாலாஜா நவாப்தான் ராஜா”ன்னு கத்தினான்.

அதோடயும் விடல. “நான் இவளுகள பாக்க வந்தா உனக்கு என்னடா? நீ அவளுகள வச்சிருக்கயாடான்னு?” சத்தம் போட்டான்.

எங்களுக்கு ரொம்ப மானக்கேடாப் போச்சு. நாங்களே பேஷ்கார்கிட்ட கை கூப்பி கேட்டுக்கிட்டோம். “வேண்டாம் ஐயா, நீங்க உங்க மரியாதையக் குறைச்சிக்கிற வேணாம்னு.”

அப்பவும் அந்தத் துலுக்கன் விடல. “ஏன்டி, உங்களுக்கு என்னையப் பாத்தா பிடிக்கலையா? உங்கப் பின்னால வர்றேன்றது

உங்களுக்குத் தெரியும்தானே? இவன் என்ன ஏஜென்டா? எகிறுறான்?" என்று எங்களையும் அடிக்கிற மாதிரி வந்தான்.

"அய்யா, நாங்கக் கோயிலுக்கு நேர்ந்துவிடப்பட்டவங்க. கோயில் சாமிதான் எங்களுக்கு எல்லாமே. நீங்களே பாத்திருப்பீங்க. தினமும் காலைல நாலு மணிக்கு வந்தோம்னா, ராத்திரி அர்த்த ஜாம பூஜை முடியுறவரையும் கோயிலுக்குள்ளதான் இருக்கோம். ராத்திரி கோயில் அடச்சதும் கோயில் சாவிய வாங்கிட்டுப் போயி எங்க வீட்டுச் சாமி முன்னால வச்சுட்டு மறுநாள் அதிகாலைல கோயிலத் தொறக்கிற வரையிலகூட எங்களுக்கு வேற நினைப்பு வராது. எப்பவும் எங்களுக்குச் சாமி நினைப்புதான்."

"என்னடி ரொம்ப யோக்கியம் மாதிரிப் பேசுறீங்க. ராமநாதபுரம் சேதுபதி இருந்தப்ப நீங்க அவர் கிட்ட போனதில்லையா?"

"அய்யோ, அபாண்டாமா பேசாதீங்க. நீங்க சொல்லுற மாதிரி சேதுபதியை நாங்க பாத்ததேயில்லை"ன்னு சொன்னோம். நல்ல வேளை ஊர்க்காரங்க கூட்டம் சேந்துட்டாங்க. என்ன? ஏதுன்னு விசாரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதனால உடனே அங்கிருந்து கிளம்பிட்டான்."

"இப்ப எந்த சேதுபதியிருக்காரு? இப்ப சேதுபதியப் பார்க்கணும்னா திருச்சி ஜெயில்ல போய்த்தான் பார்க்கணும். அதுவும் எங்க நவாப் வாலாஜா சொன்னாத்தான் பாக்கமுடியும்" அப்படின்னு அன்னக்கிக் கேவலமாப் பேசுனவன் முந்தா நாளு முத ஆளா பதவியேற்பில உட்கார்ந்திருந்தான்.

அவன் பார்வையிலே குரூரமும், வெறுப்பும் தெரிஞ்சது. முகத்த மட்டும் சிரிக்கிற மாதிரி காட்டிக்கிட்டான். "அவன் கிட்ட ஜாக்கிரதையா இருந்துக்கங்க"ன்னு சொல்லிட்டுப் போகலாம்னு வந்தோம்."

"சரி, அவன அடையாளம் சொல்லுங்க. யாருன்னு பாக்குறேன்."

"கருப்பு நிற குல்லா போட்டிருந்தான். குல்லாவுல குஞ்சம் தொங்கும். தோளில் தங்க நிற துண்டு போட்டிருந்தான்."

"ஆங், தெரியும் தெரியும். அவரு கீழக்கரைதான்னு நினைக்கிறேன். பேரு, பேரு கூட காதர் பாயோ என்னவோ? அவரா அப்படிப் பேசுறாரு? என்னையப் பத்தி? எனக்கும் அவருக்கும் எந்த விரோதமும் இல்லையே?"

“இதுவரையில இது நவாப் ராஜ்ஜியம்னு நினைச்சிக்கிட்டிருந்தாரு. திருச்சிக் கோட்டையில அவங்க கொடி பறக்குதாம். திருச்சி ராப்பள்ளி ஊர் பேர கூட நத்தர் பாக்னு ஏதோ ஒரு முஸ்லீம் சாமியார் பேருல ஆற்காடு நவாப் மாத்திட்டாராம்ல. சிவகங்கைய உசேன் நகர்னு மாத்திட்டாங்களாம். இப்ப ராணி வேலு நாச்சியா சிவகங்கைய திரும்பப் புடிச்சி நவாப் ஆட்கள விரட்டிருச்சி. நீங்க ராமநாதபுரத்திலியிருந்து அவங்கள வெரட்டி விடணும்.”

“நான் என்ன யுத்தம் செய்தா அவர்களை விரட்ட முடியும்?”

“அப்படி சொல்லக்கூடாது ராஜா. நீங்க ஊர்ல இல்லாத பத்து வருசமும் ஊர் ஊராகவா இருந்துச்சு? தினம் கலவரம். நாளும் பிரச்சனை. அதப் பாத்துத்தான் வெள்ளக்காரங்க பஞ்சாயத்துப் பண்ணி நவாப் ஆட்கள ஊர விட்டு வெளியே அனுப்பிச்சாங்க. நீங்க இப்ப வந்திருக்கலைன்னா, ஊர் சனங்கத் தெருவுக்கு வந்து போராட ஆரம்பிச்சிருப்பாங்க. உங்க மாமா சேதுபதியாயிருந்தப்ப அவர் முகத்தப் பாக்கிறதுக்கின்னே ராமேஸ்வரம் வர்ற வடநாட்டு ஜனங்க அரண்மனை முன்னால காத்துக் கிட்டிருப்பாங்களாம். ராமநாதபுரம் சேதுபதியப் பார்த்தாத்தான் ராமேஸ்வர யாத்திர நிறவடைஞ்சதுன்னு சொல்லுவாங்களாம். அப்படியிருந்த அரண்மனையிது.”

“ஆமாம், சிறுவனாயிருக்கும்போது நானே பார்த்திருக்கேன். மாமாவுக்கு என்ன வேலையிருந்தாலும் அரண்மனையில் இருந்தார்னா, யாத்திரை வர்ற வடநாட்டுச் சனங்களுக்கு மாடியில நின்னு முகத்தைக் காண்பிப்பாரு. ஜனங்களுக்கு வணக்கம் சொல்லுவாரு. உங்களுக்கு எங்க மாமாவத் தெரியுமா? பாத்திருக்கிங்களா?

“பாத்திருக்கிறோம். கோயிலுக்கு வர்றப்பயெல்லாம் எங்க அம்மாவோட ஆட்டத்த பார்த்துட்டுப் பாராட்டுவாரு.”

“உங்க அப்பா பேரு?”

“பொட்டுக் கட்டிவிட்டவங்களுக்கு அப்பா யாருன்னு வெளியில சொல்ல மாட்டாங்க. எங்க அம்மாவும் எங்ககிட்ட சொல்லல.”

சேதுபதிக்கு வருத்தமாகிவிட்டது. “விவரம் தெரியாமக் கேட்டுட்டேன். பெருசா எடுத்துக்காதீங்க” என்றார் சேதுபதி.

“என்ன ராஜா, இப்படிச் சொல்லிட்டீங்க. நீங்க எங்களுக்கு ராஜா. எங்க மேல உங்களுக்கு இல்லாத உரிமையா? இந்தச் சீமைக்கு அதிபதி நீங்க. சீமையிலிருக்கிற ஆடு, மாடு, கோழிக்குஞ்சு, சனங்க எல்லாத்துக்கும் சாமி நீங்க. நீங்க என்ன வேணும்னாலும் கேக்கலாம்.”

“பரவாயில்லை. நீ ரொம்ப விவரமாப் பேசுற. நீ அவனப் பத்தி சொன்னதை நினைவுல வச்சிக்கிறேன், புறப்படுங்க நீங்க.” என்று அவர்களிடம் சொன்னாலும், மனம் கீழக்கரை சாயபைப் பற்றி நினைத்தது. “ஆச்சரியமாயிருக்கே. கீழக்கரை முஸ்லீம்கள் சேதுபதி களோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள்.

வள்ளல் சீதக்காதி, ராமநாதபுரம் அரசர் கிழவன் சேதுபதியோட அமைச்சர். நெருங்கிய சகா. சேதுபதிகள் பல தர்க்காக்களுக்கு உதவி செஞ்சிருக்காங்க. சேதுபதிகளுக்கு எப்பவாவது பணத் தேவைன்னா கீழக்கரை சாய்புகள் பணம் கொடுத்திருக்காங்க” என நினைத்தார் சேதுபதி.

யோசித்தபடியே அவர்கள் இருவரும் கிளம்பிச் செல்வதைப் பார்த்தார்.

தன் முதுகை யாரோ கூர்ந்து பார்ப்பதுபோல ஐசுவரியத்திற்குத் தெரிந்தது. திரும்பிப் பார்த்தாள். சேதுபதி அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் சேதுபதி திருப்புல்லானிக் கோயிலுக்கு வந்து விட்டார். சாசுவதமும் ஐசுவரியமும் கோயிலின் ஸ்தல விருட்சம் இருக்கும் இடத்தில் தரையைப் பெருக்கி சுத்தப்படுத்திக் கொண்டிருந் தனர். கோயில் நுழைவாயிலிலிருந்து தூரத்தில் அந்த இடம் இருந்திருந்தால் சேதுபதி கோயிலுக்குள் வந்ததை இரு பெண்களும் அறியவில்லை.

முதல் நாள் ராமநாதபுரம் போய் சேதுபதியைப் பார்த்தது, அவர் அழகாக இருந்தது, அன்பாகப் பேசியது பற்றி இருவரும் இரவு முழுவதும் பேசிக்கொண்டே இருந்தனர். பேச்சின் ஊடே “அவரு ரொம்ப நல்லவருல்ல? கூட்டத்தில் அவரப் பாத்தாலே அரசர்ன்னு தெரிஞ்சு போயிரும். நாம யாருன்னே தெரியாம இருக்கையிலேயே நம்மளச் சாப்பிடச் சொன்னாரு. கை கால் கழுவச் சொன்னாரு. இந்தப் புண்ணியவான் காலத்துக்கும் ராமநாதபுரம் சேதுபதியாயிருக்கணும்”ன்னு பேச்சு வளர்ந்தது.

திருப்புல்லானிப் பெருமாளை வணங்கிய பின்பு கல் மண்டபத்தில் சேதுபதி அமர்ந்தார்.

“ராஜா, திடீர்ன்னு வந்ததாலே எங்களுக்குப் படபடப்பாயிருக்கு” என்றார் பேஷ்கார்.

“சாதாரணமா இருங்க. நான் என்ன கடவுளா?”

“அப்படியெல்லாம் சொல்ல முடியுமா ராஜா? அரசனைக் கண்டாலே பெருமாளைக் கண்ட மாதிரின்னு ஆழ்வாரே சொல்லிருக்காரே. கொஞ்சம் முதல்லேயே தெரிஞ்சிருந்தா சேதுபதி கோயிலுக்கு வர்றதப் பெரிய விழாவா எடுத்திருப்போம்” என்றார்.

“பரவாயில்ல, பெருமாளைப் பார்க்கணும்னு திடீர்னு யோசன வந்தது. தர்ப்பப் புல்லைத் தலைக்கு வைச்சுப் படுத்திருக்கிற அபூர்வமானப் பெருமாள் அல்லவா? நாளைக்கு ராமேஸ்வரம் போறதாயிருக்கேன். அதுக்கு முன்னால தர்ப்ப சயனப் பெருமாளைப் பார்க்கிறது ஐதீகம்னு சொன்னாங்க. அதுதான் திடீர்ன்னு கிளம்பிட்டேன். நான் இங்க வர்றத முன்கூட்டியே தகவல் தர முடியல“ என்றார்.

பெருமாள் தரிசனமும், தாயார் தரிசனமும் முடிந்தது.

“சரி, நான் கிளம்புறேன்” என்றார் சேதுபதி. வாய் இதைச் சொன்னாலும், எதையோ எதிர்பார்த்தபடி, கல்மண்டபத்திற்குள் சென்று அமர்ந்துகொண்டார்.

“ராஜா, எங்களுக்காகக் கொஞ்ச நேரம் பொறுத்திருக்கணும். உங்க மேல உயிரையே வச்சிருக்கிற பொண்ணுக இங்க இருக்குக. பொட்டுக் கட்டுற ஜாதி. சாசுவதம், ஐசுவரியம்னு பேரு.”

“தெரியும். அவர்கள் என்னை நேத்து சந்தித்தார்கள்” என்று சொல்லலாம் என நினைத்தார். அந்தப் பெண்கள் பேஷ்காரிடம் என்னைச் சந்தித்ததை சொல்லி இருக்காங்களோ அல்லது சொல்லாமல் மறைத்து விட்டார்களோ? என்று எந்தப் பதிலும் பேஷ்காருக்குச் சொல்லாமல் பேச்சை மாற்றுவது போல “கோயில் குளம் மிக அருமையாக இருக்கிறது. இந்த வெயிலுக்குக்கூட தண்ணீர் வற்றவில்லை“ என்றார்.

பேஷ்கார் அனுப்பிவிட்ட கோயில் சிப்பந்தி ஐசுவரியம் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு ஓடி வந்தான்.

“ஆத்தா, வா, வந்து பாரு. யாரு வந்திருக்கார்ன்னு. நீயே ஆச்சரியப்பட்டுப் போவே.”

“என்ன அண்ணே, இப்படிப் பதட்டத்தோட வர்ற? நீ கத்துறதப் பாத்தா தர்ப்ப சயனத்தில இருக்கிற பெருமாள் எந்திரிச்சு வந்துட்டாரா?”

“இவரும் பெருமாள் மாதிரி தான? நம்ம சேதுபதி ராஜா?”

“என்ன சேதுபதியா? இப்போ நாலஞ்சு நாளுக்கு முன்னாடி ராமநாதபுரம் வந்தாருன்னு பேசிக்கிட்டாங்களே அவரா?”

“ஆமா, அவரேதான். பேஷ்கார் உங்களப் பத்தி சேதுபதிகிட்ட சொன்னார்.”

“சேதுபதி என்ன சொன்னாரு?”

“சேதுபதி அப்படியான்னு கேட்டுக்கிட்டார். உங்களக் கையோட கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு” என்றான் சிப்பந்தி.

இருவருக்கும் பரபரபப்புத் தொற்றிக் கொண்டது.

ஐசுவரியம் சேலை முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தலைமுடியை இடது கையால் அவிழ்த்து விட்டு வலது கையில் சிக்கெடுத்து அள்ளி முடிந்து கொண்டாள்.

“அண்ணே, நீ முன்னுக்க ஓடிப்போய்ச் சொல்லு, பின்னாலேயே வர்றோம்னு” என்றாள் சாசுவதம். சிப்பந்தி வேகமாக நடந்தான்.

“அக்கா, நான் சொன்னேன்ல நேத்து ராத்திரி? அவரு வருவாருன்னு” என்றாள் ஐசுவரியம்.

“ நீ நேத்து சொன்னப்பவே நா வேண்டிக்கிட்டேன்டி. இந்த புள்ள எதையுமே ஆசப்படாது. அது ஆசப்பட்டது கிடைக்கணும் பெருமாளேன்னு வேண்டிக்கிட்டேன்” என்றாள் சாசுவதம். “சரி, சரி ஓடியாக்கா. வேகமாப் போவோம்” என்று ஐசுவரியம் சொல்ல இருவரும் கல் மண்டபம் நோக்கி ஓடி வந்தனர்.

சேதுபதி அவர்கள் ஓடி வரும் சத்தத்தை வைத்து அவர்கள் வரும் திசையில் பார்த்துக் கொண்டிருந்தார். பேசுவது பேஷ்காரிடம் என்றாலும் அவர் கவனம் முழுவதும் காலடிச் சத்தம் வரும் திசையிலேயே இருந்தது. முன்னால் ஓடிக் கொண்டிருந்த ஐசுவரியத்தை,

அக்காள் நிறுத்தினாள். “ஐசுவரியம் கொஞ்சம் நில்லு, ராஜாவ நேத்து நாம பார்த்தோம்னு காட்டிக்கிற வேணாம்” என்றாள்.

“சரி, வா. நம்மளத்தான் அவர் பாக்குறாரு.”

“இல்ல, அவர் ஏதோ பேஷ்கார்கிட்ட பேசிக்கிட்டிருக்காரு.”

“ஆமா, நீ பாத்தே. பேச்சு அங்க இருக்கு. கவனம் பூராம் இங்கதான். மனுசன் பின்னாலயும் பாக்குறாரு. முன்னாலயும் பாக்குறாரு.”

“என்னடி சொல்லுற?”

“ஒன்னுமில்லக்கா. நேத்து பின்னாலே உத்துப் பாத்தாரு. இன்னிக்கு முன்னால குறுகுறுன்னு பாக்குறாரு.”

“ஏய், வாயை மூடு, அதிகப்பிரசங்கி. அவர் பாக்குறதுக்கு ஆளா கிடைக்காது? நேத்து சும்மா பாத்திருப்பாரு.”

“சரிக்கா, இப்ப நாம அவர் முன்னாலே நிக்கலாமா, இல்ல பின்னால நிக்கலாமா?”

“அவர்கிட்டப் போனவுடனே சாமி கும்பிடுற மாதிரி நிக்கணும். நா முதல்ல நிக்கறேன். நீ என் பின்னால நில்லு. அதுதான் முற” என்றாள் சாசுவதம்.

“அக்கா, நா முன்னால நிக்கிறேன். நீ பின்னால நில்லு. அதுதான் அவருக்குப் பிடிக்கும்” என்று ஐசுவரியம் மெதுவாகச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இருவரும் சேதுபதி முன் நின்றிருந்தனர்.

பேஷ்கார் இரு பெண்களையும் பார்த்தார். “எப்போதும் எடுப்பாக ஆடை உடுத்தும் இந்தப் பெண்கள் ஏன் இன்று இப்படி ஒரு நகையும் போடாமல் சேலையை சுற்றிக் கொண்டுள்ளார்கள்” என நினைத்தார். இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு, “ராஜா, இவங்க இந்தக் கோயில் தேவதாசிங்க. அக்கா தங்கச்சிங்க. பேரு சாசுவதம், ஐசுவரியம்.”

சேதுபதி அவர்களை நிதானமாகப் பார்த்தார். ஐசுவரியத்தைச் சற்றுக் கூடுதல் நேரம் உற்றுப் பார்த்தார் என அவள் நம்பினாள். அவர்கள் இருவரையும் சேதுபதி தனக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் எப்படியிருக்கிறார்கள்? தினந்தோறும் எந்த நேரம் சதுராட்டம் நடைபெறும்? நிலமானியத்திலிருந்து குத்தகைச் சரியாக

வருகிறதா? என்று பொதுவான கேள்விகளாகக் கேட்டார். சேதுபதி கேட்கும் கேள்விகளுக்கு அவள் அக்காவே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவருடைய முறுக்கி விடப்பட்ட மீசை, பல்வரிசை, கைகளின் அழகை ஐசுவரியம் பார்த்துக் கொண்டிருந்தாள். சேதுபதியை இன்று நெருங்கிப் பார்க்க வசதியாகிவிட்டது. அவளுக்கு ஒரு யோசனையும் வந்தது. பத்து வயதில் சிறையில் அடைக்கப்பட்டவர் இந்த இளைஞன். புதிய சேதுபதியாக கிழக்கிந்தியக் கம்பெனியால் நியமிக்கப்பட்டு இன்றோடு இரண்டு மூன்று நாட்கள்தான் ஆகின்றன. அன்று பதவி ஏற்பு நிகழ்ச்சிக்குப் போனபோது இளம் பெண்கள் யாரும் அந்தப் பதவி ஏற்பு வைபவத்தில் இல்லை. ஒருத்தி திடீரென வந்தாள். ஆள் ரொம்ப அழகாக இருந்தாள். ஐசுவரியத்தை விட ஏழு எட்டு வயசு கூட இருந்தாலும் இருக்கும். அவளைப் பார்த்ததும் ஐசுவரியத்துக்குப் பயம். இவ ஏதாவது சேதுபதிக்கு மாமன் மக அத்த மகளா இருப்பாளோ?"ன்னு பயந்தாள். அந்தப் பெண்ணை அந்தக் கூட்டத்தில் யாரும் பெரியதாகக் கண்டுகொள்ளவில்லை. அரண்மனையின் முக்கிய காரியஸ்தர், ரொம்ப மரியாதையாக அந்தப் பெண்ணின் அருகில் வந்து "நீங்க இங்க இருக்க வேணாம்னு கேட்டுக்கிட்டாரு." அந்தப் பெண் "போகமாட்டேன்னு" உறுதியா சொல்லுச்சு. அப்புறம் சில முக்கியமான ஆளுக தலையிட்டு அந்தப் பெண்ணை அனுப்பி வச்சாங்க. அப்பதான் ஐசுவரியத்தின் அக்கா அந்த பெண்ணப் பத்தி விசாரித்தாள். சேதுபதிக்கு அக்கா முறையாம். அப்பா ஒருத்தராம். அம்மா வேற வேறயாம். ஐசுவரியத்திற்கு ரொம்ப சந்தோசமாப் போச்சு. "சேதுபதிக்கு அக்கா முறை உள்ள பொண்ணைத்தான் பார்த்திருக்கோம். எத்தன ராசாக்க மாருக இந்த அழகனுக்குப் பொண்ணுத் தர துடிக்கிறாங்களோ?"

"எப்படியாவது சேதுபதி மனதில் நான் புகுந்து விடுவேன் என்று" ஐசுவரியத்திற்கு நம்பிக்கை வந்தது. அன்றைக்கு சாசுவதம் தங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு விடவேயில்லை. அக்கா கையில் கிள்ளினாள். காதில் கிசுகிசுத்தாள். "சேதுபதிக்கு முன்னால அடுத்த ஆளுகளப் பாக்கக் கூடாது. அவர மட்டும் பாரு" என்றாள்.

"எனக்கு என்ன ஆசையா? மத்த கேவலப்பட்ட பயலுகளப் பார்க்க? ஒரேயடியா சேதுபதிய நா பார்க்குறத யாராவது கண்டுபிடிச்சிட்டா? அதனாலதான அப்ப அப்ப வேற ஆளுகளப்

பார்க்கிற மாதிரி நடிச்சிக்கிட்டிருக்கேன்கிறது கூட தெரியாம என்னயை நீ மிரட்டுற" என்று அக்காவின் காதில் கிசுகிசுத்தாள்.

"இளைய சேதுபதியும் என்னை இரண்டு மூன்ற முறை பாத்தார். என்ன மாதிரி பாக்குறார்? உடம்பே கூசிப் போகுது? பெருமாளே, என்மேல கொஞ்சம் இரக்கம் காட்டு. என் மீதி வாழ்க்கையில இந்த ஆம்பளயோட ஒரு நாளிருந்தாக்கூட போதும். சேதுபதி, பேஷ்காரோடு பேசிக்கொண்டு, தூணை நோக்கி நகர்ந்தார்.

அந்த நேரம் சேதுபதியின் பதவி ஏற்பு விழாவில் பார்த்த துலுக்கன் தூணிற்குப் பின்புறமிருந்து வந்து சேதுபதியை வணங்கினான். பின், எல்லாரையும் விலக்கிவிட்டுப் பூனைபோல் சத்தமில்லாமல் காலடி வைத்து ஐசுவரியமும் அவள் அக்காவும் இருந்த இடத்திற்கு வந்தான்.

"நா சேதுபதிய உத்துப் பார்ககறத துலுக்கன் கொள்ளிக்கண்ணுல பாத்துட்டான் போல" என ஐசுவரியம் முனங்கியபடியே அவனை முறைத்தாள்.

"பார்வையிலேயே சேதுபதிய முழுங்கிறாத ஐசுவரியம். என்னையெல்லாம் பாக்கமாட்டீங்கிற? உனக்குப் பெரிய்ய இடம் கேட்குதோ?"ன்னு மெதுவாகச் சொல்லிட்டு நகர்ந்தான். ஐசுவரியத்தின் அக்கா அவனை எரிக்கிற மாதிரி பார்த்தாள். ஐசுவரியத்தின் கையைப் பிடித்துக் கொண்டு வேறு இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனாள். "அக்கா, என்னைய விடு. சேதுபதி, என்னையப் பாக்கிறாரு. நான் கிளம்பிட்டேன்னு நினைச்சாரு போல. அவரு முகத்தப் பார்த்தாலே ஏக்கம் தெரியுது" என்றாள். நா எப்படி அவரை விட்டுப் போவேன்? அதனால் அக்காவின் கையை லேசாக உதறிட்டேன். அக்காவுக்கு ஆச்சரியம். இதுவரை அக்காவை மீறி நான் எதுவும் செஞ்சதில்ல. இப்ப வித்தியாசம் பார்த்தாங்களோ என்னவோ? 'என்னடி'ங்கிற மாதிரி பார்த்தாங்க. "இங்க இருந்து பாத்தா எல்லாம் நல்லா தெரியுது அக்கா. துலுக்கப்பய நம்மள வேவு பாக்க முடியாது"ன்னு ஐசுவரியம் அக்காவிடம் சொன்னாள். அங்கேயே நின்று கொண்டனர்.

"நேத்துதான் பாத்தோம். அதுக்குள்ள மனசே எங்கிட்ட இல்ல."

"ஆச்சரியமாயிருக்கு. இன்னிக்குப் பெருமாள் அவர நா இருக்கிற இடத்துக்கு வரவச்சிட்டாரே. ஏதாவது பேசலாம்னு பாத்தா அக்கா என்ன நினைக்குமோ? பேஷ்கார் என்ன நினைப்பாரோ" என்று பயந்தாள்.

அதே நேரம் இனி வாய்ப்பு எப்போது கிடைக்கப் போகுதோ என்ற பரிதவிப்பில் சேதுபதியிடம், "அடிக்கடி கோயிலுக்கு வாங்க" என்று சத்தமாகச் சொன்னாள். எல்லோருக்கும் அதிர்ச்சி. கோயில் கும்பாபிசேகம் பற்றிப் பேஷ்கரிடம் சேதுபதி தனிமையில் தூரத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது சம்பந்தமில்லாமல் "அடிக்கடி கோயிலுக்கு வாங்கன்னு" ஐசுவரியம் கத்தியதை சேதுபதி திரும்பிப் பார்த்தார். லேசாக சிரித்தார்.

சேதுபதி சிரித்தவுடன் எல்லாரும் சிரித்தார்கள். ஐசுவரியத்துக்குப் பயமாக போய்விட்டது. மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, வீட்டுக்கு வந்து அக்கா என்ன சொல்லுவாளோ என்று பயந்தாள். அப்போது இரண்டு ஆட்கள் ஓங்குதாங்காக வந்தார்கள். ஒருத்தருக்கு நாற்பது வயது இருக்கும். இன்னொருத்தருக்கு ஐம்பது ஐம்பத்தைந்து இருக்கும். அவர்கள் இரண்டு பேரும் சேதுபதியைப் பாத்து வணக்கம் சொன்னார்கள். பேஷ்கார் அவர்களை சேதுபதிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவரு மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரு. இப்போது பூர்வீகத்த விட்டுவிட்டு ராமநாதபுரம் சிவஞானபுரத்தில் குடியிருக்காரு. இவரு பேரு சித்திரங்குடி மயிலப்பன். சேர்வைக்காரர். ரெண்டு பேரும் கோயிலுக்கு அடிக்கடி வர்றவங்கன்னு" சொன்னார்.

சேதுபதி அவர்களைப் பார்த்து "உங்களப் பார்த்ததுல்ல ரொம்ப சந்தோசம். இப்பத்தான் கோயில் கும்பாபிசேகம் நடத்துறது பத்திப் பேசினோம். இந்தப் பொண்ணு ஐசுவரியம் என்னைய அடிக்கடி இங்க வாங் கன்னுச்சு. நான் கூட எதுக்கு அடிக்கடி இந்தக் கோயிலுக்கு வரணும்னு நினைச்சேன். உங்களப் பார்த்தவுடன் நாம அடிக்கடி இந்தக் கோயிலுக்காக சந்திக்கணும்னு நினைக்கிறேன். நாம சேர்ந்து செய்வோம்" என்றார்.

"ராஜா, நானும் தம்பி மயிலப்பனும் உங்கக்கிட்ட தனியாப் பேசணும்" என்று முத்துக்கருப்பத் தேவர் சொன்னார்.

"நாளைக்கே அரண்மனைக்கு வந்திருங்க. உங்களைப் பாத்துட்டு நா ராமேஸ்வரம் போய்க்கிறேன்" என்றார் சேதுபதி.

"ராஜா, அவசரமா உங்ககிட்ட பேசணும்."

"சரி வாங்க, இங்க மண்டபத்துல உக்காந்து பேசுவோம்."

“இல்ல ராஜா, இது பொது இடம்” என்றார் முத்துக்கருப்பத் தேவர். அப்போது சேதுபதி சொன்னது ஐசுவரியம்மீது ஒரு கூடை மல்லிகைப் பூவைக் கொட்டியது போலிருந்தது.

“சரி, நாளை இதே நேரத்தில இந்தப் பிள்ளக சாசுவதம், ஐசுவரியம் வீட்டுக்கு வந்திர்றேன். நீங்களும் அங்க வந்திருங்க” என்றார் சேதுபதி. முத்துக்கருப்பத் தேவர் ஏதாவது மறுப்பு சொல்லிவிடுவாரோ என ஐசுவரியம் பயந்தாள். நல்லவேளையாக முத்துக் கருப்பத்தேவர் சேதுபதியின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்.

“சேதுபதி இதுக ரெண்டும் நல்ல பிள்ளைக, யார் வம்பு தும்புக்கும் போகாதுக. இதுக வீட்டுலேயே நாம பாக்கலாம்” என்று சொல்லி வணக்கம் சொன்னார்.

இன்னும் பத்து வருடத்திற்கு இந்த வீட்டில்தான் சேதுபதி ரகசியப் பேச்சுக்கு வருவார் என்றோ, இன்றிலிருந்து பதினைந்து வருடம் கழித்து இதே முத்துக்கருப்பத் தேவர் அடுத்த சேதுபதியாக ஆகப் போகிறார் என்றோ, இந்த மயிலப்பன் வெள்ளைக்காரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கப் போகிறான் என்றோ அன்று ஐசுவரியத்திற்குத் தெரியாது.

•

15

“எனக்கு மருது பாண்டியர்களோடயும் வெள்ளக்காரங்களோடயும் பிரச்சன அதிகமாகிட்டிருக்கு. இந்த படமாத்தூர் கௌரி வல்லபர் பேச்சக் கேட்டு மருது சகோதரர்கள்கிட்ட பிரச்சனைப் பண்ணுனது எனக்கு இப்பத் தலைவலியாயிருக்கு. கௌரி வல்லபர் தலைமையில் சிவகங்கையைத் தாக்க நம்ம படைய அனுப்பினேன்ல? ஒரு மாசமா நம் படை விசவனூர்லே முகாமிட்டிருந்தும் நம் படைகள மருது சகோதரர்கள் தாக்கவேயில்ல.”

“நீங்க செய்யுற இந்த அடாவடி வம்புச் சண்டைய மருது சகோதரர்கள் பொறுத்துக்கிட்டிருங்காங்க ராஜா.”

“நீ சொல்லுறது சரிதான்.”

“உங்க அக்காதான் சொல்லியிருக்காம்ல. அந்த வெள்ளச்சிய கட்டு, ரெண்டு சீமையும் ஒன்னாயிரும்னு.”

“விடு, எங்க அக்காளுக்கு என்னப் பத்தி என்ன தெரியும்? அது சொல்லுறதப் பத்தி நீ ஏன் கவலப்படுற? மூத்தத் தாரம் இளைய தாரத்துப் பிள்ளைகளுக்குள்ள என்னைக்கு ஒத்தும இருந்துருக்கு?”

“நானும் அந்தப் பொம்பளய மறக்கத்தான் நினைக்கிறேன். அந்தப் பொம்பளயும் வெள்ளக்கார குரங்கு மார்டின்ஸ் பயலும் துலுக்கப் பயலும் சேர்ந்து உங்களுக்கு எதிரா நிறைய சதித்திட்டம் போடுறாங்க...”

“மருதுபாண்டியர்கள்கிட்ட சமாதானமாப் போகலாம்னு பாக்குறேன். ஆனா பதினேழு நாட்கள் நடந்த ஆனந்தூர்ச் சண்டையக் கூட அவங்க மறந்துட்டாங்க. அடுத்து நடந்த இளையான்குடிப் பக்கம் இருக்கிற அரியாண்டிபுரம், பரமக்குடி சண்டைகளை மருது சகோதரர்களால மறக்க முடியலைங்கிறாங்களாம். அந்தச் சண்டையில பெரிய மருது பாண்டியரின் மகன்கள் கவண்டன் கோட்டத் துரையும், குடைக் காதுடையாரும் சாவாங்கன்னு நானும் எதிர்பார்க்கல. அவங்க சாவுக்கு ராமநாதபுரம் படைகள் காரண மில்லை. பறம்பூர் நாயக்கர்தான் காரணம். அது ராத்திரி நேரத்தில யமனேசுவரத்தில் நடந்து போச்சு. பறம்பூர் நாயக்கரும் தெரிஞ்சு செய்யல. யாரோ கலகக்காரர்கள்ன்னு நினைச்சுத்தான் மருது பாண்டி யர்களின் மகன்களைத் தாக்கியிருக்காரு. யாருமே எதிர்பார்க்காத சாவுக ரெண்டும்.”

“ஆமா ராஜா, நானும் கேள்விப்பட்டிருக்கேன். சூடியூர்ல்ல அவங்களுக்கு மாலையீடு இருக்குன்னு அக்கா சொல்லுச்சு. அவங்க யமனேசுவரத்துக்குப் பக்கத்தில இறந்தாங்கன்னு நீங்க சொல்றீங்களே ராஜா.”

“யமனேசுவரத்துலதான் காயம்பட்டாங்க. ரெண்டு இளம் தளபதிகளையும் காப்பாத்திரலாம்னு சிவகங்கைப் படையினர் தூக்கிட்டுப் போனப்ப சூடியூர் கிட்டப் போகையில அவங்க இறந்துட்டாங்க. அதனால சூடியூர்ல இவங்களோட மாலையீடு இருக்கு.”

சேதுபதியும் ஐசுவரியமும் பேசிக்கொண்டிருந்த அறை மாடியில் இருந்தது. கீழ் வீட்டிலிருந்து இந்த அறைக்கு வர மரப்படிகள் இருந்தன. பெரும்பாலும் சேதுபதி இந்த அறையில் இருக்கும்போது யாரும் மாடிப்படி ஏறி வரமாட்டார்கள். இன்று யாரோ மாடிப்படி ஏறிவரும் சத்தம்

கேட்டது. சேதுபதி எழுந்து உட்கார்ந்தார். ஐசுவரியம் எழுந்து நின்று சேலையைத் திருத்திக் கொண்டாள். முகத்தை சேலைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு சேதுபதியிடம், "சரியா இருக்கிறதா?" என மெதுவாகக் கேட்டாள். சேதுபதி சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினார். அக்கா சாசுவதம் கதவுப் பக்கத்தில் நின்று கொண்டு "நாச்சியா" என்று மெதுவான குரலில் கூப்பிட்டாள். இப்போதெல்லாம் போடி வாடி என்று ஐசுவரியத்தை அக்கா கூப்பிடுவதில்லை. "வா அக்கா" என்று சொல்லி ஐசுவரியம் கதவைத் திறந்தாள். "வேணாம், கதவைத் திறக்க வேணாம்" என்றபடியே கதவுக்கு வெளியிலிருந்து சாசுவதம், கதவை மூடினாள். "முத்துக்கருப்பத் தேவர் அப்பாவும், மயிலப்பன் அண்ணனும் வந்திருக்காங்க. ராஜாவ உடனே பாக்கணுமாம்" என்றாள். ஐசுவரியம் சேதுபதியைப் பார்த்தாள்.

"வந்துருவாருக்கா, அவங்கள ஒக்காரச் சொல்லு" என்று சொல்லி சட்டை, துண்டு, ஆபரணங்களைச் சேதுபதியிடம் எடுத்துக் கொடுத்தாள். அனைத்தையும் நிதானமாக அணிந்து கொண்ட சேதுபதி ஐசுவரியத்தைக் கட்டி அணைத்தார். "என்ன திடீர்ன்னு? இதுவரைக்கும் இதத்தானே பண்ணிக்கிட்டிருந்தீங்க" என்றாள் அடிக்குரலில்.

"என்னமோ தெரியல, ஐசுவரியம் ரொம்ப நாள் உன்னோடு வாழ முடியாதுன்னு நினைக்கிறேன்" என்றார்.

"என்ன ராஜா?"

ஐசுவரியம் அவர் வாயைப் பொத்தினாள். இரண்டு நாட்களுக்கு முன்பு அவள் வைத்திருந்த மருதாணியின் வாசம் சேதுபதியை ஆனந்தப்படுத்தியது. "போனவுடனே வர்றேன், இங்கேயே இரு" என்று சொன்னார். ஐசுவரியம் கண்களில் கண்ணீர். அவர் முதுகைப் பிடித்து செல்லக் கோபத்துடன் அறைக்கு வெளியே தள்ளினாள்.

சேதுபதி வரவும், முத்துக்கருப்பத் தேவரும், மயிலப்பனும் எழுந்து நின்றனர். சேதுபதி வந்தவுடனே, தேவர் பேச்சை ஆரம்பித்துவிட்டார். "ராஜா, நாம கொஞ்சம் முந்திக்கிரணும். இல்லைன்னா அவனுங்க முந்திக்கிருவாங்க. நவாப் வெள்ளக் காரங்களுக்கு நெருக்கடி கொடுக்கிறாரு. மங்களேஸ்வரி நாச்சியார் எழுதிய புகார்க் கடிதத்த நவாப் துருப்புச் சீட்டா வைக்கப் பாக்குறாரு. மந்திரி முத்து இருளப்பப் பிள்ளை நம்ம சந்தேகப்பட்டது மாதிரியே அவங்ககூட சேர்ந்துகிட்டான். குரங்கு

மார்டின்ஸ்ஸை நம்ம ராமநாதபுரம் கோட்டயில பத்து வருசம் தங்க வச்சது ரொம்பத் தப்பாப் போச்சு, ஏதோ சர்ச் கட்டுறதுக்குப் பணம் கேட்டான்னு கொடுத்தீங்க. அவன் நம்ம பணத்த வச்சே நமக்கு எதிரா ஆள் திரட்டுறான். நம்ம அரண்மனையில வச்சே எல்லா சதித் திட்டங்களையும் தீட்டுறான். நாம ஏதாவது செஞ்சாகணும். நீங்க சரின்னு சொன்னீங்கன்னா நானும் மயிலப்பனும் சின்ன மருதுவப் போய் பாக்கிறோம்."

"அது சரியா வருமா தேவரே? என்மீது அவங்க கோவமா யிருப்பாங்கள்ல?"

"என்ன கோவம் ராஜா? படமாத்தூர் கௌரி வல்லவர் வெள்ளச்சியக் கல்யாணம் பண்ண முடியாமப் போயி நம்மளப் பயன்படுத்திக்கிட்டாரு. ஏதோ நீங்க வெள்ளச்சிய..." முத்துக் கருப்பத் தேவர் குரலைத் தணித்தார். "நாச்சியார் காதுல விழுந்திருக்குமா ராஜா?" என்றார்.

"அதனால என்ன? நாம என்ன மறச்சிப் பேசுறோமா? நீங்க சாதாரணமாப் பேசுங்க. நா அந்தப் பிள்ளையக் கல்யாணப் பண்ணனும்னா சொன்னேன்? நா வெள்ளச்சியக் கல்யாணம் பண்ணனும்னு விருப்பப்பட்டா வேலு நாச்சியார் அத்தகிட்ட நேரா கேட்டிறப் போறேன்? எனக்குப் பொண்ணு தர மாட்டேன்னா சொல்லியிருப்பாங்க? எனக்கே தெரியும், வெள்ளச்சி மனசுல நான் இல்லைன்னு. அந்தப் பொண்ணுக்கு வெங்கம் பெரிய உடையணத் தேவன் மீதுதான் பிரியம் இருந்துச்சு. பாவம், இப்ப அந்த வெள்ளச்சி செத்துப் போயி ஒரு வருசம் ஆகுது. ஐசுவரியத்துக்கு என் கத பூராம் தெரியும்."

"ராஜா, சேது நாட்டுல ராஜாவுக்கு வேணாம்ன்னு சொன்னதுதான் அடுத்தவனுக்கு கிடைக்கும்" என்றான் மயிலப்பன்.

"அண்ணே, நீங்க ஒரு ஆள் போதும் சேதுபதியக் கெடுக்கிறதுக்கு. முத்துக்கருப்பத் தேவர் சித்தப்பாகூட மட்டும் சேதுபதியிருந்தாப் போதும்..." என்றாள் சாசுவதம். அவள் உள்ளே வந்ததை அப்போது தான் மூவரும் கவனித்தனர். "எதுக்குத்தா என்னைய திட்டுற. உங்க சித்தப்பாவ புகழ்ந்து தள்ளுற" என்றான் மயிலப்பன்.

"ராமநாதபுரம் சீமைக்கே தெரியும், வெள்ளச்சிக்காக சிவகங்கைச் சீம மேலே நீங்க படையெடுத்துப் போனது... அப்புறம் என்ன சேது

நாட்டுல ராஜாவுக்கு வேணாம்ன்னு சொன்னதுதான் அடுத்தவனுக்கு கிடைக்கும்னு பெரும வேற?"

"என்னம்மா நீ, ராஜாகிட்ட என்ன பேசணும்னு யோசிச்சு பேசுறதில்லையா?" முத்துக்கருப்பத் தேவர் கடிந்து கொண்டார். சாசுவதத்தின் முகம் மாறியது.

"ஊர் என்ன பேசுதுன்னு அவங்களுக்கு நல்லாத் தெரியுமில்ல... அதான் வெளிப்படையா சொல்றாங்க... தப்பென்ன இருக்கு... விடுங்க." என்றபடியே, "எல்லாருக்கும் தாகத்துக்கு எதுனா கொடுங்க" என்றார் சேதுபதி.

சாசுவதம் கொடுத்த புளிக்கரைசலும் கரும்புச் சாறும் சேர்ந்து செய்யப்பட்ட பானகம் பிப்ரவரி மாத வெயில் சூழ்நிலைக்கு ஏற்றதாயிருந்தது.

"அதுசரி, ஒங்கச் சித்தப்பா காவி வேட்டி கட்டாத சாமியாரு பாரு" என்றான் மயிலப்பன் சூழலை இயல்பாக்க. சாசுவதம் சிரித்துக்கொண்டே வீட்டிற்குள் சென்று விட்டாள்.

"ராஜா, புக்குளி வேல்முருகன் சேர்வை எனக்கு ரொம்ப நெருக்கமான உறவினர். அவருதான் ஆனந்தூர்ப் போர்ல சிவகங்கை மருதுவின் மகன்கள் கவண்டன் கோட்டத்துரை, குடைக்காதுடையாருக்குச் சமமாக சிவகங்கைப் படைக்கு தளபதியாயிருந்தாரு. அவருக்கு என்மீது ரொம்பப் பிரியம். புக்குளி வேல்முருகன் சேர்வைக்குப் பெரிய மருது மகன்க உடையனனையும், கருத்தப் பாண்டியனையும் சின்ன மருது மகன் சமாலி உடையார் என்கிற சிவத்தத் தம்பியையும், சிவத்தத் தம்பி மகன் முத்துச்சாமியையும் நெருக்கமாத் தெரியும். மருதுபாண்டியர் களுக்கு நம்ம மேல கோவம் இருந்தாலும், அவங்க பிள்ளைகள வச்சும், பேரனை வச்சும், சரி பண்ணுவோம்."

"மருது சகோதரங்க மகன்க பேச்சக் கேப்பாங்களா? இப்ப வெங்கம் பெரிய உடையணத் தேவர் சிவகங்க அரசராயிருக்காரு. அவரு இப்ப மருது சேர்வையோட மருமகனாயிட்டாரு. மச்சினங்க ரெண்டு பேரு நம்மாள செத்துப் போயிட்டாங்கன்னு நம்மமேல அவர் கோவமாயிருந்தாலும் இருப்பாருல்ல?" என்றான் மயிலப்பன்.

சேதுபதி ஒன்றும் பேசவில்லை. சேதுபதிக்கு நம்பிக்கை தருகின்ற மாதிரி பேசவேண்டும் என்று முத்துக்கருப்பத் தேவர் நினைத்தார்.

மயிலப்பன் நம்பிக்கையில்லாமல் பேசியதுகூட நல்லது என நினைத்தார். மயிலப்பனுக்குப் பதில் சொல்லவும் சேதுபதிக்கு நம்பிக்கை தரவும் தனக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி, பதில் சொன்னார்.

"மருது சகோதரர்களோ, சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரோ நம்மீது கோவமாயிருக்க வாய்ப்பேயில்ல. கௌரி வல்லவர் தேவையில்லாம சிவகங்கை ராணி வேலு நாச்சியாரப்பத்தி தப்பா பேசினார்ன்னு தெரிஞ்சதும் சின்ன மருதுவின் மூத்த மகன் சிவத்தத் தம்பி காளையார்கோயில்ல அவர சிறைவச்சார். அது வேலு நாச்சியாருக்குப் புடிக்கலேன்னு தெரிஞ்சவுடனே கௌரிவல்லவர மருது பாண்டியருங்க விடுதல பண்ணிட்டாங்களே. அப்பத்தான கௌரிவல்லவர் பள்ளிமடம் போயி சிவகங்கமேல படையெடுக்கணும்னு சின்னசாமித் தேவன் மூலமா உங்களுக்குக் கடிதம் அனுப்புனாரு. இன்னிக்கு நமக்கு நண்பர்களேயில்லாம ஆக்கிட்டுப் போயிட்டாரு படமாத்தூர் கௌரிவல்லவர்" என்றார் முத்துக்கருப்பத் தேவர்.

"தேவரே, நீங்களும் மயிலப்பனும் அகமுடையார்கள்தானே? நீங்க ரெண்டு பேரும் மருதுபாண்டியர்ககிட்டப் போகாம உங்க ஜாதி ஆட்கள நமக்கு ஆதரவா திரட்ட முடியுமா?"

"ராஜா, மருதுபாண்டியர்களுக்கு அகமுடையார்கள் மட்டும் இல்ல, எல்லா ஜாதியிலும் அவங்களுக்கு ஆதரவிருக்கு. அதுவும் இல்லாம மருது பாண்டியர்கள கொற சொல்லிக்கிட்டோ அவங்க ஆதரவு இல்லாமலோ சில ஊர்களுக்குள்ளப் போகவே முடியாது. வானக்கருப்பு கோனூர், வெள்ளிக்கானாஞ்சி, வடக் கூர், சிறுவயல், அரியாக்குறிச்சி, பனைக்குளம், வெள்ளியூர், பொன்னெல்லிக் கோட்டை, பனைக்கரை, அதப்படக்கி, வாரப்பூர், கரிசைப்பட்டு, நெடுவயல், கவண்டங்கோட்டை, விசயாபுரம், வெள்ளிக்கட்டி, போருடைப்பு, மருங்கூர், அருங்குளம், கருத்தப்பத்தியூர், பருத்தியூர், கலியநகரி, ஆவரங்குடி, புக்குளி, ஊர்க்குடி, சக்கந்தி, புக்குளம், மறையூர், முறையூர், காளாப்பூர், தொண்டி, சோழபுரம், கீரனூர். கல்லாங்குடி, கொல்லங்குடி, பூங்குடி, மாங்குடி போன்ற ஊருங்க முழுசா மருதுபாண்டியர்கள் பக்கம் இருக்கு. இதைத் தவிர கள்ளர் நாடுகளான மல்லாக்கோட்டை நாடு, மங்கல நாடு, உருவாட்டி நாடு, பெரும்பாலை நாடு, ராசவள நாடு, திருப்பத்தூர் நாடு, சிறுகுடி நாடு, தென்மாறை நாடு ஆகிய பகுதி மக்களும் மருதுபாண்டியர்கள்மீது அன்பு கொண்டவர்கள்."

“நாம இப்ப யோசிச்சு பிரயோசனமில்ல. நான் பறங்கிப் பயல்களையும் நவாப்பையும் எதிர்க்கணும்னு முடிவு பண்ணிட்டேன். சிவகங்கை உடனான ஆனந்தூர்ப் போர கலெக்டர் லாண்டன் சொன்னதால நா நிறுத்தல. அவன் யாரு எனக்குச் சொல்ல? மருது சகோதரர்களோட ரெண்டு பிள்ளைக செத்துட்டாங்கன்னு தெரிஞ்ச உடனேயே போர நிறுத்திட்டேன். மருது சகோதர்கள் வைகை ஆத்த மறிச்சுக் கட்டின அணைய உடைக்கச் சொல்லி கலெக்டர் லாண்டன் கேட்டுக்கிட்டாரு. மருது பாண்டியர்களும் வைகை ஆத்த, மறிச்சுக் கட்டின அணையை உடைச்சுத் தண்ணீய பழையபடி ராமநாதபுரம் வர வச்சிட்டாங்க. என்னைய சிவகங்கச் சாலையத் திறந்துவிடச் சொல்லி கலெக்டர் சொன்னாரு. சாலையத் திறந்து விட்டா எனக்கு சுங்க வரி பாதிக்கும். அதனால நான் கலெக்டர் பேச்சக் கேக்கல. இதுக்கு நவாப் எழுதுறாரு, “நீங்கள் பேரழிவில் சிக்கப் போகிறீர்கள்”ன்னு. நவாப் எனக்குச் சாபம் கொடுக்கிறாரு. இந்த நவாப் பேச்சைக் கேட்டுக்கிட்டு புது கலெக்டர் ஜார்ஜ் பவுனி, அவர நான் வந்து பார்த்து எழுத்து மூலமா விளக்கம் சொல்லணும்ன்னு கடிதம் அனுப்பினாரு. இந்தப் பறங்கிப்பய என்னைய வரச் சொன்னா உடனே நா போயிடுவேனா?”

“ராஜா, போன வருசப் பஞ்சத்தில மருதுபாண்டியருங்க வெள்ளக்காரங்களுக்கு இணக்கமா நடந்துக்கிட்ட மாதிரி நீங்க நடக்கலைன்னு வெள்ளக்காரங்க புகார் சொல்லியிருக்காங்க.”

“சரிதான், பஞ்சம் வந்தது. வெள்ளக்காரங்க மலேசியாவில இருந்தும் சிலோன்ல இருந்தும் தொண்டிக்குக் கொண்டு வந்தப் பொருட்களுக்கு நா ஏன் வரிவிலக்கு கொடுக்கணும்? இவன் வியாபாரத்துல லாபம் சம்பாதிக்கிறவன்தானே? பஞ்சம்னு விலையக் குறைக்கிறானா? விலய ஏத்தித் தானே விக்கிறான்?”

“ராஜா, கோவிச்சிக்கிறக் கூடாது. சிவகங்கைச் சீமை வரி விலக்குக் கொடுத்திருச்சே? இப்பவும் சிவகங்க மருதுபாண்டியர்களையும், உங்களையும் கலெக்டர் ஜார்ஜ் பவுனி வரச்சொல்லியிருக்கார். சிவகங்க மருதுபாண்டியங்க கலெக்டரப் பாக்க வர்றேனுட்டாங்க. நாம கட்டாயம் போகணும்.”

“முத்துக்கருப்பத் தேவர், கிளம்புங்க. உங்களது சேதுபதியின் மரியாத உங்களுக்குத் தெரியல. நான் போய் கலெக்டரப் பார்க்கிறதா? அதுவும் அவன்கிட்டப் போயி நான் விளக்கம் சொல்லுறதா? இதுக்குப்

பதில் என்னை மறுபடியும் சிறையில போய்கூட இருக்கச் சொல்லுங்க, இருந்துக்கிறேன்” என்று சொல்லிட்டு விருட்டென்று எழுந்தார்.

முத்துக்கருப்பத் தேவரும் மயிலப்பனும் பதறி எழுந்தனர். அவர்களுக்கு சேதுபதியின் கோபம் தெரியும். பத்து வருடங்களாகப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்கள். சேதுபதி தாய் தகப்பன் வழிகாட்டுதல் இன்றி வளர்ந்தப் பிள்ளை. எல்லோரையும் சந்தேகப்பட்டுக் கொண்டு எல்லோரிடமும் மோதல் போக்கைக் கொண்டுள்ளவர். இந்தச் சமயத்தில் எதைச் சொன்னாலும் அவர் ஏற்க மாட்டார் என அவர்களுக்குப் புரியும். அவரை வணங்கிவிட்டு இருவரும் கிளம்பினர். நாளைக்கே ஆள் அனுப்பித் தங்கள் இருவரையும் சேதுபதி கூப்பிட்டுவிடுவார் என்று அவர்களுக்குத் தெரியும்.

கோபத்தோடு அறைக்குள் வந்த சேதுபதியைப் பார்த்து ஐசுவரியம் நெருங்கிவந்தாள். சேதுபதியின் முகம் சிவந்திருந்தது. கையை அவரின் மூக்கருகில் வைத்தாள். மூச்சுக் காற்று மிகவும் உஷ்ணமாகயிருந்தது. இதுபோன்ற சமயங்களில் ஐசுவரியம் பேசவே மாட்டாள். அவர் காலை அமுக்குவாள். அல்லது நெருங்கி உட்காருவாள். சேதுபதி இன்று அதிகக் கோபத்தில் இருப்பது ஐசுவரியத்துக்குப் புரிந்தது. மருதாணிக் கையை மீண்டும் அவர் மூக்கில் வைத்தாள். ராஜா அவளைப் பார்க்கவில்லை. “ஐசுவரியம், நா கிளம்புறேன்” என்றார்.

“கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போங்களேன் ராஜா. நா எப்பவும் உங்களுக்குத் தடை சொன்னதில்ல. ஆனா இன்னிக்கு எனக்கு ஏதோ ஒரு பயம் இருக்கு. இரவு இங்க தங்குங்க. அமைதியா தூங்கிட்டு, காலைல பெருமாள கும்பிட்டுப் போங்க. முத்துக் கருப்பத் தேவரும் மயிலப்பன் அண்ணனும் உங்க மேல உயிரையே வச்சிருக்காங்க. நாளைக்குக் காலைல அவங்கள வரச் சொல்லுறேன். நாலு வார்த்த நல்லதா அவங்கிட்ட பேசுங்க” என்றாள்.

“எனக்கு நீயும் புத்தி சொல்ல ஆரம்பிச்சுட்டாயா? சிறையில் நிம்மதியாக இருந்தேன்” என்று சொல்லிக்கொண்டு சேதுபதி கிளம்பினார். ஐசுவரியம் கண்களில் கண்ணீர். தங்கையிடம் சேதுபதி கோபப்பட்டுப் பேசுவதை சாசுவதம், முதன்முறையாகப் பார்த்தாள். இதுதான் கடைசி முறையாகவும் இருக்கப் போகிறது என்பதை சாசுவதம் அறிய மாட்டாள். சேதுபதி தன்னுடைய அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்ததும் ஆங்கிலேயப் படையினரால் கைது செய்யப்பட்டு, திருச்சி கொண்டு செல்லப்பட்டார்.

•

16

வாலர் இன்றும் வழக்கம்போல அதிகாலையில் எழுந்து விட்டார். ஒரு மாதமாக இரவு முழுவதும் ஜெபம் பண்ணி விட்டு படுக்கைக்கு வர ரொம்ப நேரம் ஆகி விடுகிறது. ராத்திரி நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கையில் எழுந்துவிட்டார் என்றால் விளக்கை ஏற்றி வைத்துக்கொள்வார். காலை வரை பிரேயர்தான். அதனால் குழந்தைகளின் இரவுத் தூக்கம் கெட்டுப்போகிறது என்று கேத்தரீன் குழந்தைகளுடன் தனியாகப் படுத்துக்கொள்கிறாள். கேத்தரீனுக்கும் தனியாகப் படுக்க ஏதாவது சாக்குப்போக்கு தேவையாயிருந்தது. வாலரின் வழக்கத்திற்கு மீறிய பக்தியும், காலநேரம் பார்க்காமல் தேவைக்கு அதிகமாகச் செய்யும் அபரிதமானப் பிரார்த்தனைகளும் இயல்பு வாழ்க்கையைவிட்டு வாலர் தடம் புரண்டு சென்றுவிட்டதாகக் கேத்தரீனுக்குத் தோன்றியது. கேத்தரீன் அதிகம் படித்தவள் இல்லை. ஆனால் மிகுந்த அறிவுடையவள். கண் பார்ப்பதை அவளது கைகள் செய்துவிடும். சில திறமையான கிறிஸ்தவப் பெண்கள் போல் சர்ச்சில் தேவனைத் துதி பாடுவது, பியானோ இசைப்பது, வீட்டிலேயே ஒயின் தயாரிப்பது என்று அவளுக்கு நிறைய வேலைகளில் ஆர்வம் இருந்தது. பிறந்து வளர்ந்தது திருவிதாங்கூர்ப் பக்கம். அவள் அப்பா போர்த்துக்கீசியன். திருவிதாங்கூர் ராஜாவின் பாதுகாவலராக இருந்தான். நன்றாகக் குடிப்பான். கேத்தரீனின் அம்மா ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண். அவள் அம்மா மிளகு வியாபாரம் செய்து கொண்டிருந்த போர்த்துக்கீசியனுக்கும் மீன் விற்கும் கேரளப் பெண்ணுக்கும் பிறந்தவள். கேத்தரீனுக்கு அவளது கேரளத்துத் தாய் போல் கருப்பு நிறத்தில் அடர்ந்த தலைமுடி இருந்தது. அவளது

போர்த்துக்கீசியத் தந்தைபோல் நல்ல நிறமும் உயரமும் அமைந்துவிட்டது. ஏற்கனவே இரண்டுமுறை அவள் கணவனை இழந்திருந்தாலும் கூட, அந்த சோகம் அவள் முகத்தில் எப்பொழுதும் இருக்காது. ஓணம் பண்டிகையின்போது மட்டும் அவள் முழு கேரளப் பெண்ணாக மாறிவிடுவாள். தலையை விரித்துப் போட்டு, முடியை காற்றில் பறக்கவிடாமல் சிறு முடிச்சுப் போட்டுக் கட்டியிருப்பாள். வெள்ளை நிறத்தில் முண்டு அணிந்திருப்பாள். ஓணம் நாட்களில் மட்டும் அவள் கவுன் போடுவதில்லை. ஓணம் பண்டிகையின்போது அவளைப் பார்ப்பவர்கள் கட்டாயம் இரண்டு வார்த்தை அவளைப் பாராட்டிப் பேச விரும்புவார்கள். ஜெயில் சூப்பிரண்டு மனைவி என்ற பயத்தையும் மீறி கைதிகளோ, ஜெயிலுக்கு பலசரக்கு, காய்கறி கொண்டு வருபவர்களோ கேத்தரீனிடம் பயந்து பயந்து அவள் அழகாக இருப்பதைச் சொல்ல விரும்பி, பயந்து சொல்லாமல் தவித்தால் அதை கேத்தரீன் புரிந்து கொள்வாள்.

சென்ற வருடம் ஓணம் வந்தபோது ஒரு கைதியைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். ஆள் ஒல்லியாக இருந்தான். சராசரி உயரம். கைகளில் விலங்குப் பூட்டி அவனை அழைத்து வந்தபோது சிறைக்குள் இருந்த தனது வீட்டின் மாடியில் இருந்து அவனைப் பார்த்தாள். அவனும் முகத்தை உயர்த்தி கேத்தரீனைப் பார்த்தான். அவன் கண்களில் இருந்த பெரும் சோகத்தை கேத்தரீன் பார்த்தாள். கைதிகளைக் கூட்டிவரும்போது வெள்ளைக்காரச் சிப்பாய்களோடு சேர்த்து இரண்டு மூன்று உள்ளூர்ச் சிப்பாய்களும் இருப்பார்கள். ஆனால் இவனைச் சுற்றி உள்ளூர்ச் சிப்பாய்கள் யாரும் இல்லை. வெள்ளைக்காரச் சிப்பாய்கள் மட்டுமே அவனை அழைத்து வந்தனர். அவனைப் பார்த்ததிலிருந்து கேத்தரீனுக்கு நிலைகொள்ளவில்லை. வேலைக்காரியை அழைத்து சிறைக்கு வந்த புதியவனைப் பற்றி விசாரித்து வரச் சொன்னாள். அவள் போன வேகத்தில் திரும்பி வந்தாள். “மேம் சாகிபா, நம்ம வாலர் துரை, அந்தக் கைதி சாமியோட இருக்கார், அதனால ஓடியாந்துட்டேன்” என்றாள்.

“புதுக் கைதி பேரு சாமியா? உனக்கு அவரத் தெரியுமா?”

“என்னம்மா அவரத் தெரியாமலிருக்குமா? அவருக் கொஞ்ச நாளா இங்க இருக்காறேம்மா? நீங்க இப்பத்தான் பாக்குறீங்க போல. பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனோட தம்பிம்மா அவரு.”

“ஓ, அவரா? கேள்விப்பட்டிருக்கேன். நான் கமுதி நொண்டிக் கோட்டையில இருந்தப்ப கட்டபொம்மனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கேன். இந்த மனிதனைப் பார்த்தா நல்லவர் போலத் தெரியுது. அவரப் பார்த்தா ரொம்பப் பாவமாயிருக்கு. அவரப் பத்தி உனக்குத் தெரிஞ்சத முழுசாச் சொல்லு.”

“இல்லம்மா... கால நேரம் சரியில்ல. நா ஏதாவது உளறி வைக்க நீங்க அத வாலர் துரைகிட்ட சொல்லிட்டீங்கன்னா, என்னைய அது பாதிக்கும்மா. அப்புறம் என் வீட்டுக்காரர் தெரியும்ல உங்களுக்கு? ஏதாவது கேள்விப்பட்டுச்சுன்னா, என்ன ஏதுன்னு விசாரிக்காது, பட்டுனு கையை நீட்டிடும். நாய அடிக்கிற மாதிரி அடிச்சிப்புடும். நா இங்க வேலைக்கு வரும்போதெல்லாம் ஒரு நாளைக்கு ரெண்டு மூணு தடவ ஜாபர் சொல்லும், “துரை கிட்டயும் துரைசானிகிட்டயும் ஜாக்கிரதயாப் பழகு. ரொம்பப் பேசாதேன்னு.”

“பரவாயில்லை, பாத்திமா. நா என்ன உன்னை வேலக்காரி மாதிரியா நடத்துறேன்?”

“இருந்தாலும் மேம் சாகிபா, நான் வேலக்காரி. உங்களுக்குச் சரி சமமா பேசக்கூடாது.”

“ஒன்ன நான் வேற ஆளா நினைப்பவளா பாத்திமா?”

“இருந்தாலும் இது பெரிய கதம்மா.”

“சும்மா பயப்படாமச் சொல்லு.”

“இருங்கம்மா, கதவப் பூட்டிட்டு வந்துர்றேன்” என்று சொல்லிவிட்டு ஓடிப்போய்க் கதவைப் பூட்டிவிட்டு வந்தாள்.

“மேம் சாகிபா, இவரு பேரு ஊமத் துர. ஆனா எல்லாரும் சாமின்னுதான் கூப்பிடுவாங்க. அண்ணந்தம்பிகள்ல மூணாவது ஆளு. பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மு நாயக்கரு. மூத்தவரு. அடுத்த செவத்தையா. அடுத்தது இவரு. இந்தச் சாமிக்குப் பேச்சு சரியா வராது. எப்பவும் இப்படித்தான் உம்முன்னு இருப்பாராம். எங்க ஜாபருக்கு சாமிகிட்ட பழக்கம் இருக்கு. கட்டபொம்முகிட்ட இருந்த அம்பது முரட்டுக் குதிரைகள எங்க வீட்டுக்காரருதான் பழக்கினாரு. அந்தச் சமயம் சாமிய என் வீட்டுக்காரர் பாத்திருக்காரு., பழகியிருக்காரு.

அப்புறம் வல்ல நாடு வெள்ளயத்தேவன், போத்தி பகடை எல்லாரப் பத்தியும் கூட எங்ககிட்ட சொல்லுவாரு."

"நிறுத்து நிறுத்து. வெள்ளையத்தேவன் யாரு?"

"அவரு பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்முவோட தளபதிம்மா. பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்துல உள்ள வல்ல நாடுதான் அவரு பொறந்த ஊரு. கட்டபொம்மு ராஜா கம்பளத்து நாயக்கர் சாதி. இந்த வெள்ளயத்தேவரு தேவமாரு. அவரு பொஞ்சாதி வெள்ளயம்மா. வெள்ளயம்மாவுக்குச் சாமி பக்தி அதிகம். பின்னால நடக்கப்போறத முன்னாலயே சொல்லிடு வாங்களாம். வெள்ளக்காரங்களோட சண்ட வேணாம், சண்ட வந்தா உயிர் போயிரும்னு மொத மொத சொன்னதே வெள்ளயம்மா ஆத்தாதான். வெள்ளையத்தேவரு சண்டைக்குக் கிளம்பயில கூட "சகுனம் சரியில்ல. வாழ மரம் முறிஞ்சு விழுகிற மாதிரி கனவு கண்டேன். போக வேணாம்"னு வெள்ளையம்மா சொல்லிருக்காங்க. வெள்ளையத் தேவர் வெள்ளையம்மா ஆத்தா பேச்சக் கேக்கல. சண்ட ஆரம்பிச்ச அன்னைக்கே வெள்ளையத் தேவர் செத்துட்டாரு. அப்புறமும் நாலு நாள் சண்ட நடந்துச்சு. அந்தச் சண்டையில பானர்மேன் துரை..."

"பானர்மேன், அந்த ஆளும் அப்போயிருந்த கலெக்டர் ஜாக்சனும் வேணும்னே இந்த விசயத்தப் பெருசாக்கிட்டாங்கன்னு எனக்குத் தெரியும். எங்க வாலர் துரையும் வருத்தப்பட்டாரு. கட்டபொம்மு வரி கொடுக்கிறேன்னுதான சொன்னாரு. வரி கொடுக்க மாட்டேன்னு சொல்லுறவரு எதுக்கு குத்தாலத்திலிருந்து ஆரம்பிச்சு நாகலாபுரம், கமுதி, ராமநாதபுரம்னு கலெக்டர் போய் தங்குற இடத்துக்கு எல்லாம் பின்னாலேயே போறாரு?. கலெக்டர் பேட்டியே குடுக்கமாட்டேன்னுட்டாரே. தேடி வந்து விளக்கம் சொல்ல வந்த கட்டபொம்முவையும், மந்திரி தானாவதிப் பிள்ளையையும் ராமநாதபுரம் அரண்மனையில கைது செய்யச் சொல்லி கலெக்டர் உத்தரவு போட்டதாலதானே பிரச்சனைப் பெருசாச்சு? லெப்டினென்ட் கிளார்க்குன்னு புதுசா மிலிட்டரியில் சேர்ந்த ஒரு ரெக்ரூட் பய. விவரம் தெரியாம இந்தக் களேபரத்துல துப்பாக்கியோட பாஞ்சிட்டான். கட்டபொம்மன் ஆட்களால லெப்டினென்ட் கிளார்க் வெட்டப்பட்டு வீணாச் செத்தான். இதுக்குத்தான் காத்திருந்ததுபோல கலெக்டர் உடனே மெட்ராஸ் கவர்னருக்கு நாயக்கர் மேலே பெரிய புகார்க் கடிதம் எழுதிட்டாரு. யுத்தம் பதினஞ்சு நாள்ல ஆரம்பிச்சிருச்சு. பானர்மேன் என்ன பண்ணினான்னு பேசிக்கிறாங்க?"

“அதாம் மேம் சாகிபா. பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டயத் தரமட்டமாக்கிட்டாரு. கட்ட பொம்மு சிவகங்கச் சீமைக்குத் தப்பிச்சு ஓடுனாரு. மருது சகோதரர்களோட கட்ட பொம்முக்கு நல்ல சிநேகிதம். சிவகங்கையில கட்டபொம்முவ தங்க வச்சு அடைக்கலம் குடுக்க மருது சகோதரங்க நினைச்சாங்களாம். இருந்தாலும் இதனால வெள்ளக்காரங்களோடு பிரச்சனை வரும்னு நினைச்சிருக்காங்க. அதேநேரத்தில கட்ட பொம்முவ எப்படியாவது காப்பாத்தணும்னு நினைச்சாங்களாம். கலெக்டர் ஜாக்சன்மேலே மருது சகோதரங்க கவர்னருக்குப் புகார்க் கடிதம் எழுதினாங்க. கட்டபொம்மு மேலே அநியாயமா நடவடிக்கை எடுத்த அவர கலெக்டர் பதவியிலிருந்து மாத்தனும்னு கேட்டுக்கிட்டாங்க. கவர்னர் கேக்கல.

புதுக்கோட்ட தொண்டைமான் அரசாட்சி செய்யும் பொன்ன மராவதி பக்கம் இருக்கிற காளாப்பூர்க் காட்டுல கட்டபொம்மன் ஒளிஞ்சிருந்தாரு. அவர உடனடியா புடிச்சுத்தரச் சொல்லி புதுக்கோட்ட தொண்டமானுக்குக் கலெக்டர் கடிதம் எழுதினாரு. அப்பத்தான் தொண்டமானுக்கே தெரியும், தன்னோட பகுதியிலதான் கட்டபொம்மன் ஒளிஞ்சிருக்காருன்னு. “குறிப்பிட்டு இந்த இடத்தில கட்டபொம்மு ஒளிஞ்சிருக்காரு, புடிச்சுக்குடுங்கன்னு கலெக்டர் சொன்னபிறகு கட்டபொம்முவ கைது செய்யாமலிருக்க முடியாது, இல்லையா? அதனால புதுக்கோட்ட மகாராஜா கட்டபொம்மனை காளாப்பூர்க் காட்டுல தேடி அவர கைது செய்யச் சொல்லிட்டாரு. கட்டபொம்மனைப் புதுக்கோட்டை படைங்க கைது செஞ்சாங்க. அப்போ அவரோட இப்ப இந்த பாளையங்கோட்ட சிறையில இருக்கிற மூத்த தம்பி சிவத்தையா, இரண்டாவது தம்பி ஊமத்துரை சாமி, கட்டபொம்முவோட மச்சினங்க ரெண்டு பேருன்னு அஞ்சு பேரு புடிபட்டாங்க.

கட்டபொம்மு புடிபட்டவுடனே தற்கொலை பண்ண முயற்சி செஞ்சாராம். புதுக்கோட்டை படைங்க அவரக் காப்பாத்திருச்சு. கைது செஞ்சப்புறம் ரெண்டாவது நாள்லயும் சாகுறதுக்கு முயற்சி பண்ணியிருக்காரு. புதுக்கோட்ட மகாராஜா, கட்டபொம்முவ புதுக்கோட்டையில வச்சிருந்தா அவரு உயிருக்கு உத்திரவாதம் தரமுடியாதுன்னு கலெக்டர்கிட்ட சொல்லிட்டாரு. கம்பெனிப் படைங்க கட்டபொம்மனப் பொறுப்பு எடுத்துக்கிடுச்சுக. அப்புறம் விசாரண, தீர்ப்புன்னு ஓடுச்சு. கயத்தாருல வச்சு மேஜர் பானர்மேன் கட்டபொம்மனத் தூக்குல போட்டுட்டாரு. இது நடந்து இன்னை யோட 325 நாளாகுது. “

“என்னடி, நாள் கணக்கெல்லாம் சரியா வச்சிருக்க?”

“ஆமா மேம் சாகிபா. எங்க வீட்டுக்காரரு ஜாபரு இருக்குல்ல. அது கட்டபொம்மு ராஜாகூட பழகியிருக்கு. அதனால அவரு செத்துப்போன நாளுல இருந்து தெனமும் நமாஸ் பண்ணையில சொல்லும். இன்னிக்கு 325 நாளாச்சின்னு சொல்லுச்சு. அந்த உயிர் இருக்கயில ரொம்ப கஷ்டப்பட்டது. இனிமேலாவது நிம்மதியாயிருக்கட்டும்னு சொல்லும்.”

“கட்டபொம்மனத் தூக்கில போட்டாங்க. அவருகூட கைதானவங்கள என்ன பண்ணினாங்க?”

“கட்டபொம்மனத் தூக்கில போட்ட சமயத்துல சிவத்தையாவும் ஊமத்துரைச் சாமியையும் கைது பண்ணி கயத்தாருலேயே வச்சிருந்தாங்க. இவங்க ரெண்டு பேரு மேலயும் பெருசா குற்றச்சாட்டு எதுவும் இல்லன்னு கம்பெனி அதிகாரிக நினைச்சாங்க. ஊமச்சாமி மேல கை வச்சா பிரச்சனைப் பெருசாகும்னு யாரோ கலெக்டர்கிட்ட சொல்லியிருக்காங்க. ஊமத்துரைச் சாமி மேலயும், சிவத்தையா மேலயும் எந்த நடவடிக்கையும் எடுக்காம கொஞ்ச நாள் விட்டு வச்சிருந்தாங்க. அப்புறம் வெள்ளக்காரங்கள கேக்காமலே பாஞ்சாலங்குறிச்சி சனங்க சிவத்தையாவுக்கு ராஜா பட்டம் கட்டினாங்க. அதனால கலெக்டர் கோவமாயிட்டாரு. முதல்ல சிவத்தையா மேலதான் ரொம்பக் கோவமாயிட்டாரு. அப்புறம் நிதானமா விசாரிச்சப்ப சிவத்தையாவோட முழு பலமே ஊம சாமிதான்னு தெரிஞ்சவுடனே ரெண்டு பேரையும் கைதுபண்ணி, பாளையங்கோட்டை சிறைக்குக் கொண்டுவரச் சொல்லிட்டாரு. உங்ககிட்ட இதப் பத்திப் பேசினா நா ஏதோ பாஞ்சாலங்குறிச்சி ராசாவுக்கு வேண்டப்பட்டவள்ன்னு நினைச்சுக்கிருவீங்கன்னு சொல்லி உங்ககிட்ட இதப் பத்திப் பேச வேணாம்னு எங்க ஜாபர் சொல்லிருச்சு. அதனால நா மூச்சு விடல.”

“சரி, ஊமயப் பத்திச் சொல்லு.”

“மேம் சாகிபா, ஊமச்சாமி ரொம்பப் பேசாது. வெள்ளக் காரங்களை சீமச் சாமின்னு சொல்லுவாங்க. இவர “சீமச் சாமிக்குக் கட்டுப்படாத ஊமச்சாமின்னு” எங்கப் பக்கத்துக் கிராமங்கள்ல சொல்லுவாங்க. அவுக அண்ணன் கட்டபொம்மு மாதிரி ஏதும் பெரிசா

பிரச்சனை பண்ணிருவாருன்னு இப்ப ஊமச் சாமி மேல கலெக்டருக்கு ரொம்ப சந்தேகம் வந்திருச்சிபோல."

"சரி, பாத்திமா, நா ஒன்னு கேக்கணும். சிவத்தய்யாதான பாங்சாலங்குறிச்சி ராஜா. இதுல ஊமைக்கு என்ன மரியாத?"

"மேம் சாகிபா, எங்கப் பகுதி ஊர்கள்ல அண்ணன் தம்பி ஒத்தும அதிகம். அண்ணன் அரசனாயிருந்தாலும் அரசனுக்கு மகன் இருந்தாலும் மகனைவிட அரசனின் தம்பிக்குத்தான் மரியாத. அரசனுக்கு அடுத்து அரசனோட தம்பி அரசன் ஆகமுடியாது. மகன்தான் அரசனாக முடியும். அப்படி அரசனா ஆனாக்கூட சித்தப்பன அனுசரிச்சுத்தான் பிள்ளைங்க ஆட்சி நடத்துவாங்க."

"உங்கத் துலுக்க சாதியில?"

"மேம் சாகிபா, நீங்க கேலி பண்ணக் கத்துக்கிட்டீங்க."

"கேலியெல்லாம் பண்ணல. சும்மா தெரிஞ்சுக்க கேட்டேன். எனக்கு என்னமோ இந்த ஊமை நல்லவர்னு தோணுது."

"வேணாம்மா. நாங்க இரக்கப்பட்டா நாலு வார்த்தையோட முடிஞ்சிடும். நீங்க இரக்கப்பட்டா பிரச்சனையில கொண்டு போய் விட்டுரும். இது ராஜாங்கம் சம்பந்தப்பட்டது. வாலர் துரை உங்கள ஒன்னும் சொல்ல மாட்டாரு. ஆனா கலெக்டரு லூஷிங்கடன் துரை, பாளையங்கோட்டை காரிசன் மேஜர் மெக்காலே இவங்களுக்கெல்லாம் நீங்க ஊமைத்துரை மேல இரக்கம் காட்டுறீங்கன்னு தெரிஞ்சா என்ன நடக்குமோன்னு பயமாயிருக்கு. இன்னொன்னு சொன்னா கோவிச்சுக்கிற மாட்டீங்கன்னா சொல்லுறேன். வாலர் துரைய கம்பெனி நல்ல பதவியில வச்சிருக்கலயாம். ஜெயில்ல சூப்பிரண்டா வேல பாக்குறது நல்ல பதவியில்லைன்னு எங்க வீட்டுக் குதிரக்கார அறிவாளி சொல்லுச்சு. கலெக்டர், மேஜர், பாஸ்டர், சர்ஜன் இதெல்லாம்தான் நல்ல வேலயாம்."

"உண்மைதான் பாத்திமா. ஜெயில் சூப்பிரண்ட் வேலை, ராணுவத்துல பிக்காளி வேலை, இதெல்லாம் கொஞ்சம் மதிப்புக் குறைவான பதவிதான். வாலருக்கு வயசாயிருச்சு. எப்பப் பாத்தாலும் பிரேயர், அறிவுரைன்னு சொல்லிக்கிட்டுத் திரியிறவருக்கு கம்பெனில நல்ல பதவி தரமாட்டாங்கள்ல?. என் பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாயிருக்காரு. என்னை நல்லா வச்சிருக்காரு. அதுபோதும் எனக்கு. தப்புத்தண்டா பண்ணமாட்டாரு. யாருக்கும் கெடுதல் பண்ணத் தெரியாது.

அவரவிட எனக்கு வயசு ரொம்பக் கம்மி. அவரவிட நா நல்லாயிருக்கேன்னு யாராவது சொன்னாக்கூட மத்த புருஷங்க மாதிரி கோவப்பட மாட்டாரு. சர்ச்ல ஒரு தடவ பாஸ்டர் சொன்னாரு, "கேத்தரீன், தேவாலயத்திற்கு வழக்கமா வர்றவங்களுக்கு மட்டும்தான் நீ உன் கணவனோடு வருகிறாய் என்று தெரியும். புதுசா உங்களப் பாக்குறவங்க உங்க ரெண்டு பேரையும் அப்பா மகள்ன்னுதான் நினைப்பாங்க"ன்னு சொல்லி பெரிய நகைச்சுவைச் சொன்ன மாதிரி சத்தம் போட்டுச் சிரிச்சாரு. அவர் பேசினது எனக்குப் பிடிக்கல. வாலர் இருக்காரே, இதப் பத்தி சீரியஸாவே எடுத்துக்கல. என்னிடமே அஞ்சாறு தடவ இதப்பத்தி சொல்லிச் சிரிச்சாரு. "வாலர் எனக்கு எரிச்சலாயிருக்கு கொஞ்சம் நிறுத்திறீங்களா"ன்னு நான் சொன்னப்புறம் தான் இதப்பத்தி பேசறத நிறுத்தினாரு. ரொம்ப நல்லவரு. கொஞ்சம் வயசாயிட்டதால என்ன செய்யுறோம், என்ன பேசுறோம்னு தெரியாம ஏதாவது பண்ணிவிட்டுருவாரு. அவருடைய பல நல்ல குணங்கள ஏத்துக்குற நான் ஒன்னு ரெண்டு குறைகளையும் ஏத்துத்தானே ஆகணும்?"

"உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு மேம் சாகிபா."

"அவருக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

"மேம் சாகிபா, கல்யாணம் ஆகாமலா நாலு பிள்ளைப் பெத்துவிட்டிருக்காரு?"

"என்னடி சொல்லுற? ஊமைத்துரைக்கு நாலு பிள்ளையாயிருக்கு?"

"அய்யோ, மேம் சாகிபா, நாம வாலர் துரையைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம். திடீர்னு அவருக்குக் கல்யாணம் ஆயிடுச்சான்னு நீங்க கேட்டவுடனே நான் வாலர் துரைக்கு நாலு பிள்ளையிருக்குன்னு சொல்லிட்டேன். நீங்க ஊம சாமியப் பத்தி திடீர்ன்னு கேட்டதும் குழம்பிப் போயிட்டேன். சாமிக்குக் கல்யாணம் ஆகியிருக்கும்."

"அவருக்கு வயசு?"

"தெரியல மேம் சாகிபா. உங்களவிட இரண்டு மூணு கூட இருக்கும்."

"உன்னைய விட?"

“நீங்க என்னய குதிரக்கார ஜாபர் கிறுக்குகிட்ட அடி வாங்கித்தரப் போறீங்க மேம் சாகிபா. சும்மாவே அது ஒரு சந்தேகப் பிசாசு. அவரு மூத்த தாரம், அந்தச் சிக்கந்தர் சிறுக்கி இருக்காளே, அவ வேற அப்பப்ப இந்த ஆளத் தூண்டிவிடுவா. நா ஆளு நல்லாயிருக்கேன், அதனால அந்த ஆள மதிக்கல. அவரு பேச்சக் கேக்கலைன்னு ஏதாவது சொல்லிக் கொடுத்துருவா.”

“நீயும் அவளும், அந்தச் சிக்கந்தரும் ஒன்னாவா இருக்கீங்க? ஒனக்கு ரெண்டு பிள்ளைகன்னு தெரியும். அவளுக்கு எத்தன பிள்ளைக?”

“எல்லாம் ஒன்னாத்தான் இருக்கோம். வீடு, ரெண்டா தடுத்திருக்கும் மேம் சாகிபா. அதுனாலதான் அந்தக் குதிரக்காரக் கிறுக்கு ரெண்டு பெண்டாட்டியோட நிறுத்திருச்சி. இப்ப இருக்கிற சின்ன வீடே எனக்குப் போதும் மேம் சாகிபா. வீடு பெரிசா இருந்துச்சுன்னா வீட்டுலயும் பொண்டாட்டிக எண்ணிக்கையக் கூட்டிரும் அந்த ஜாபர் கிறுக்கு.”

“ஏய், கெட்ட வார்த்தையெல்லாம் பேசாதே. ஒன்ன அந்தக் குதிரக்கார ஜாபர் நல்லா வச்சிருக்காரா? இல்ல நானே அவரக் கூப்பிட்டுக் கேக்கவா?”

“வேண்டாம் மேம் சாகிபா, வீட்டு விசயத்த ஒங்கக் கிட்ட சொல்லிட்டேன்னு என்னைய அடிச்சிரும். அதுகிட்ட என்னையப் பத்தி எதுவும் கேக்க வேணாம். என்னைய நல்லாத்தான் வச்சிக்கிரும். என்னையும் அந்தச் சிக்கந்தரையும் துரமாருங்க வீடுகளுக்குக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க அனுப்ப ஆரம்பிச்சபோதே ரெண்டு பேரையும் கூப்பிட்டுச் சொல்லிருச்சு. “ஒங்களுக்குள்ள பிடிக்குதோ பிடிக்கலையோ, ரெண்டு பேரும் ஒருத்தரப் பத்தி ஒருத்தர் மேம் சாகிபா கிட்ட புகார் சொல்லக்கூடாது. அவங்களுக்குத் தெரிஞ்ச மாதிரி சண்ட போட்டுக்கிட்டீங்கன்னா என் வேல போயிரும். ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிக்கலைன்னாலும் பேசாம இருந்துக்கங்க. வெள்ளக்காரங்கப் பிள்ளைங்களுக்குப் பால் கொடுக்கிறீங்கன்னா அத ஒரு புண்ணியமா எடுத்துக்கங்க. என்னையப் பத்தி மேம் சாகிபாகிட்ட புகார் பண்ணவோ அல்லது என்னைய மிரட்டுறதுக்கு ஒரு வாய்ப்புன்னு நினைச்சீங்கன்னாலோ அப்புறம் நா மாபூஸ்கான் மாதிரியிருக்க மாட்டேன். அன்வர்தீனாகவோ, முகம்மது அலி யாவோ மாறிருவேன்னு மிரட்டிருச்சு.”

“மாபூஸ்கான் யாரு, அன்வர்தீன் யாரு?”

“ரெண்டு பேரும் ஆற்காடு நவாப் அன்வர்தீன் கானோட பிள்ளங்கதான், மேம் சாகிபா, ஒரு பத்து வருசத்துக்கு முந்தி இப்ப இருக்கிற மெட்ராஸ்ல இருந்து திருநெவேலி வரைக்கும், ஆற்காடு நவாப்தான் ராஜா. நவாப்போட ரெண்டு பிள்ளைங்க குணமும் வேறவேற மாதிரி. ஒருத்தர் ரொம்ப சாது. அவரு பேரு மாபூஸ்கான். எங்க மதப் பெரியவங்களோட சகவாசம் அவருக்கு ரொம்ப அதிகமாம். இந்துக்களோடும் சுமூகமாப் பழகுவாராம். தானம், தர்மம் நிறைய பண்ணுறதுன்னு வாழ்ந்திருக்காரு. மதுரப் பகுதிக்கு அவர் கவர்னராயிருந்தாரு. இப்ப நம்ம ஊர்லயிருக்கிற கடைவீதிங்க கூட அவரு ஒரு முஸ்லீம் மகானுக்குத் தானமாக கொடுத்தது. அவரு தம்பி அன்வர்தீன் ரொம்ப முசுடா இருந்திருக்காரு. எல்லாரு கூடயும் தகராறு, சின்னத் தப்பு செய்யுற இந்துங்கமீது கடுமையான நடவடிக்கை எடுப்பாராம். அதே தப்பு பண்ணுற முஸ்லீம்ங்க மீது எந்த நடவடிக்கையும் எடுக்காம விட்டுடுவாராம். அதனால அவருக்கு ரொம்பக் கெட்ட பேரு. தம்பி அன்வர்தீன்கான் அப்பா இறந்த பிறகு புது நவாப் ஆயிட்டாராம். தன் அண்ணன் மாபூஸ்கான மதுரை பகுதிக்கான கவர்னர் பதவியிலயிருந்து நீக்கிட்டாரு.

எங்க குதிரைக்கார ஜாபர் மாபூஸ்கான் மரியாத குடுத்த முஸ்லீம் மகானோட வாரிசு.”

“சரி பாத்திமா, நாம கொஞ்ச நேரம் தாமிரபரணி ஆத்துப் பக்கம் போய்ட்டு வருவோம். மனசே சரியில்ல. இந்த ஊமையப் பாத்ததுல இருந்து.”

பாத்திமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஊமைத்துரையின் மீதான கேத்தரீனின் பாசம் பெரும் பிரச்சனையை உண்டாக்கப் போகிறது என்று கேத்தரீனுக்குத் தெரியவில்லை. ஊமைத்துரையின்மீது கேத்தரீனுக்கு உண்டான இனம் புரியாத அன்பும் இரக்க உணர்வுமே பெரும் கலவரத்துக்கும், ஊமைத்துரையின் இறப்பிற்கும் காரணமாகிவிட்டது.

•

17

சிறு வயல் கிராமம். சிவகங்கைக்கும் காளையார்கோயில் காடுகளுக்கும் நடுவில் உள்ள சிற்றூர். பெரும்பாலான நேரங்களில் இந்த ஊரில் உள்ள மாளிகையில்தான் பெரிய மருதுவும், சின்ன மருதுவும் தங்கியிருப்பார்கள். இந்த வருடத்தோடு பெரிய மருதுவுக்கு அறுபத்து ஐந்து வயதாகிறது. ஆள் உயரமாகவும், உயரத்துக்கேற்ற பருமனாகவும் இருக்கிறார். நல்ல நிறம் அவர். அவருக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறையாவது காளையார்கோயில் காட்டுக்குள் வேட்டையாட வேண்டும். அவர் வீட்டில் தினமும் நூறு பேர் வரை சாப்பிடுவார்கள். அதனால் குறைந்தது இருநூறு கிலோ கறி கிடைக்கும் வரை வேட்டையாடுவார். மூன்று மான்கள் வேட்டையாடினால் வேட்டையை நிறுத்திவிடுவார். மான்கள் கிடைக்கவில்லையென்றால் முயல், காட்டுப் பன்றி, பறவைகள் என்று வேட்டையாடுவார். விடியற்காலை நாலு மணிக்கு எழுந்து விடுவார். அவருடைய குதிரை அதிசயமும், நாய் கருப்பனும் தயாராக வாசலில் நிற்பார்கள். அதிசயம் அரேபியாவிலிருந்து வந்தது. நான்கு வயதாகிறது. கோயம்புத்தூர் சேக் உசேன் ஒரு வருடத்திற்கு முன்பு பெரிய மருதுவிடம் அதிசயத்தைக் கொடுக்கும் போதே "அதிசயத்துக்கு அறிவு ஜாஸ்தி. நல்லா பயிற்சி கொடுத்திருக்கேன்" என்று சொல்லித்தான் கொடுத்தார். சேக் உசேனை பெரிய மருது கேலியும் கிண்டலுமாகத்தான் அழைப்பார்.

"டேய் சேக்கு, குதிர ரொம்ப வேகமாயிருக்கேடா. நா கிழவன்டா. என்னையத் தள்ளிவிட்டுறப் போகுது. இதெல்லாம் ஒன்ன மாதிரி இளந்தாரிப் பயக தினமும் கவுச்சி சாப்பிடுற பயலுக ஓட்டணும்டா."

"அரண்மன, சின்ன மறவர் நாட்டின் பிரதானி பெரிய மருது சேர்வக்காரர கிழவர்னு யார் சொல்லுறது? முடி ஒன்னும் நரைக்கல. பத்து வருசமா பாத்துக்கிட்டிருக்கேன், உடம்புக் கட்டு அப்படியே இருக்கு. கையும், காலும், வகுரையும் பாத்தா முப்பது முப்பத்தஞ்சு வயசு பிராயம்னுதானே சொல்ல முடியும். நாப்பது, அம்பது வருசமா காட்டுக்குள்ள வேட்டையாடுறவங்க நீங்க. உங்களால அடக்க முடியாத குதிரையுமாயிருக்கு? கேளுங்க அரண்மன, இந்தக் குதிர, நான் சொல்லி வச்சி வாங்குனது. ராமநாதபுரம் பெரிய மறவர் நாட்டில இருக்கிற தொண்டியில வந்து இறங்குன ஒடனே, மத்தவங்க கண்ணுல படுறதுக்கு முன்னாடி குதிர வரி கட்டி இழுத்துட்டு வந்துட்டேன்."

“ஆமா, ஒனக்குத் தெரியும்ல, பெரிய மறவர் நாட்டு ராஜா முத்துராமலிங்க சேதுபதிக்கும் நமக்கும் உள்ள பிரச்சனை?”

“ஏன் தெரியாது ராஜா, நீங்க என்ன பண்ணுவீங்க? வேலு நாச்சியார் மக வெள்ளச்சி நாச்சியார சேதுபதி விரும்பியிருக்காரு. ஆனா ராணி வேலு நாச்சியார் ஆத்தா வெள்ளச்சிய வெங்கம் பெரிய உடையணத் தேவருக்குக் கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. இதுல ராமநாதபுரம் சேதுபதிக்கு வருத்தம். அது பகையாயிருச்சு.”

“உசேன், இப்ப இதுல சம்பந்தப்பட்ட ரெண்டு முக்கியமான ஆளுங்களும் உயிரோடயில்ல. ராணி வேலு நாச்சியாரும், அவங்க மக இளவரசி வெள்ளச்சி நாச்சியாரும் இறந்துட்டாங்க. வெள்ளச்சிக்குப் பிறந்த பெண் குழந்தையும் இறந்திருச்சி. ஒனக்குத் தெரியும். சக்கந்தி வெங்கம் பெரிய உடையணத் தேவர், சிறு பையனாயிருக்கும் போதே ராணி வேலு நாச்சியார, “அத்த” “அத்த”ன்னு சுத்திச் சுத்தி வருவாரு. நாங்க விருப்பாச்சிக் காட்டுக்குள்ள மறஞ்சி வாழ்ந்தபோதும் வெங்கம் பெரிய உடையணத் தேவர், ராணி வேலு நாச்சியார்கூடத்தான் இருப்பார். கை குழந்தையா இருந்த வெள்ளச்சியத் தூக்கி வச்சிக்கிட்டே இருப்பாரு. அப்படி நெருக்கமா இருந்தவங்களுக்குள்ள இருந்த சிறு வயசு அன்பு, வயசுக்கு வந்த பிறகு மாறிடுமா? மாப்பிள்ளை சேதுபதின்னா? அவர வெள்ளச்சிக்குப் பிடிக்கணும்ல? வெள்ளச்சிய ராணி வேலு நாச்சியார் கேட்டாங்க. “என் விருப்பம் முக்கியமில்ல வெள்ளச்சி. உனக்கு நா சொல்ல வேண்டியதில்ல. நீ விவரமானவ. சின்ன வயசுலயிருந்து உனக்கு வெங்கம் பெரிய உடையணத் தெரியும். அந்தப் பிள்ளை உன்னைய விரும்புது. மருது சேர்வைக்காரர்களுக்கும் வெங்கனப் புடிச்சிருக்கு. சேதுபதி முத்து ராமலிங்கம் என் ஆத்தா வழியில நெருங்கிய சொந்தக்காரர். சேதுபதி நம்ம சிவகங்கச் சீமையவிட பெரிய சீமையான ராமநாதபுரம் சீமைக்கு அரசன். உன்னைக் கல்யாணம் பண்ணுற மொற உள்ளவர். நீ யாரக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னாலும் எனக்கு சரிதான்”னு ராணி சொன்னாங்க. வெள்ளச்சி யோசிக்கவே இல்ல. உடனே பதில் சொல்லிடுச்சு. “அம்மா, நாம கஷ்டப்படுற காலத்தில, அரசாட்சிய விட்டுட்டு, நாம விருப்பாச்சிக் காட்டுக்குள்ள சிரமப்பட்டுக்கிட்டு இருந்த காலத்துல இருந்து, இன்னிக்குவரை நம்மகூட உடையணத் தேவருதான் இருக்காரு. மருது பாண்டியருங்க, தாண்டவராயப் பிள்ளை, ஹைதர் அலி, அவரு மருமகன் சையத் இவங்கயெல்லாம் பண்ணின உதவியால நீங்க சிவகங்க ராணியாயிருக்கலாம். நா இளவரசி ஆகியிருக்கலாம். என்னை

சேதுபதி பெண் கேட்கலாம். சேதுபதி மாதிரி அவரு ஒரு அரசர் இல்லை. அவருக்கு நாடு இல்லாம இருக்கலாம். சேதுபதியவிட பல மடங்கு அந்தஸ்து குறைவா இருக்கலாம். ஆனா என் மனசுக்குள்ள உங்க அண்ணன் பிள்ளைதான் இருக்காரு"ன்னு சொல்லிடுச்சு.

எப்பவும்போல இந்த மாதிரி பிரச்சனைக்குரிய விசயங்கள வேலு நாச்சியார் எங்கிட்டு விட்டுருவாங்க. வேறு வழியில்லாம வெள்ளச்சிக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லைங்கிற செய்திய சேதுபதிகிட்ட சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு. நா அவர்கிட்ட சொன்னவுடனேயே சேதுபதிக்குக் கோவம் வந்திருச்சு. "இதெல்லாம் ஒங்க வேலையா மருது பாண்டியரே? என் அத்த வேலு நாச்சியார் நீங்க சொன்னாத்தான கேக்கும்? ஒங்களக் கேட்டுத்தானே எதையும் செய்யும்? ஒங்களால அவங்க மனச மாத்த முடியாதா? ஏன் நான் வெள்ளச்சியக் கல்யாணம் பண்ணினா அஞ்சில மூணு பகுதி உள்ள ராமநாதபுரம் அரசும் அஞ்சில ரெண்டு பகுதியுள்ள சிவகங்கைச் சீமையும் ஒன்னாகிரும்ல. ஒங்களுக்கு அது புடிக்கலையா? ஒங்க முக்கியத்துவம் போயிரும்னு நினைக்கிறீங்களா?ன்னு சத்தம் போட்டாரு. நான் அவரு பேசி முடிக்கும்வரை பொறுமையா இருந்தேன்.

"சேதுபதி, நீங்க பெரிய மறவர் சீமையின் அரசர். பத்து மாசக் குழந்தையாயிருக்கும்போதே அரசரானவர். பன்னிரண்டு வயசிலேயே வாழ்க்கையின் உச்சத்தையும் மனித வாழ்க்கையின் அவலத்தையும் பார்த்தவர். பனிரெண்டு வயசு பாலகனா ஒங்க தாயாரும் அரசியுமான முத்துத் திருவாயி நாச்சியாருடன் திருச்சி சிறையில இருந்தவங்க. பனிரெண்டு வயசுல ஆரம்பிச்ச ஒங்க சிறை வாழ்கை முடிஞ்சு, பிறகு இருபத்து ஐந்து வயதுல அரசப் பொறுப்ப ஏத்துக்கிறீங்க. ஒங்க அக்கா மங்களேஸ்வரி நாச்சியார் தன் தம்பிக்குப் பெண் கொடுக்க ஆர்வமாயிருக்காங்கன்னு ராமநாதபுரம் சீமை முழுக்கப் பேச்சுயிருக்கு"ன்னு சேதுபதிகிட்ட சொன்னேன்.

அதுக்கு அவரு "சேர்வக்காரரே, நீங்க எங்க வர்றீங்கன்னு எனக்குத் தெரியுது. என் அக்காவுக்கு கலியாணம் பண்ணுற வயசில பொண்ணு இல்ல. அவ வயசுக்கு வந்ததும் அவளக் கட்டுவதும் வேணாம்னு சொல்லுவதும் என் உரிமை. அதில் நீங்க தலையிட வேண்டாம்"ன்னாரு.

“மன்னிக்கணும். நான் அந்தப் பேச்சுக்குள் போற அளவு ஆள் இல்ல. இன்னும் வெள்ளக்காரங்க பெரிய மறவர் சீம மேலயும் சின்ன மறவர் சீம மேலயும் கோவமாத்தான் இருக்காங்க. அவங்களோட கோவம் குறையாதபடி ஆற்காடு நவாப் பாத்துக்கிறார். நான் ஒங்களுடைய ஆதரவாளன். சேதுபதிக்குக் கட்டுப்பட்டவன். எங்க அப்பா மொக்கப் பழனியப்ப சேர்வ ஒங்கச் சீமையில, அரசு ஊழியம் செஞ்சதும் நானும் என் தம்பியும் ஒங்க தாய் மாமனும், சேதுபதியுமான செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதிகிட்ட ஊழியம் செஞ்சோம்கிறதையும் மறக்கல.”

“என்ன சேர்வைக்காரரே, என் தாய்மாமன் செல்லமுத்து விஜய ரகுநாத தேவருக்கு குழந்தையில்லை. வாரிசு இல்லாததால அவர் தங்கை முத்துத் திருவாயி நாச்சியார் மகனான எனக்கு பத்து மாத பாலகனுக்கு, சேதுபதி பட்டம் கிடச்சதுன்னு சொல்ல வர்றீங்களா?”

“சேதுபதிய மீறிப் பேசுறவன் நான் இல்ல. சேதுபதிக்குக் குழந்தை இல்லைன்னா சகோதரி மகன்களைத்தான் தேர்ந்தெடுப்பாங்கன்னு தெரியாதவனா நானு? நீங்க சிறையில இருந்தப்ப ஒங்களப் பத்தி நல்ல வார்த்தைகள நா மதுரை பேஷ்குஷ் கலெக்டர் கிட்டேயும், திருச்சி, திண்டுக்கல் கலெக்டர்கள் கிட்டேயும் சொல்லியிருக்கேன்றது ஒங்களுக்குத் தெரியும். இது பொம்பளப் பிள்ள விசயம். வற்புறுத்த முடியாது” ன்னேன்.

“சேர்வக்காரரே, ஒங்கள நான் வற்புறுத்தச் சொல்லல. என் அத்தை வேலு நாச்சியார், அவங்க மக வெள்ளச்சிய வற்புறுத்த முடியாதா? ஊர் உலகத்துல அம்மாக்கமாரு பேசி மகள்கள வழிக்கு கொண்டுவரது இல்லையா? ஒங்க சிவகங்கப் பொம்பளப் பிள்ளைகளுக்கு அவ்வளவு சுதந்திரமா குடுத்திருக்கீங்க? நீங்க போய் நான் சொன்னதா வேலு நாச்சியார் அத்தகிட்ட சொல்லுங்க. வெள்ளச்சி ராமநாதபுரம் அரண்மனைக்கு ராணியா வந்தே தீரணும். இது நடக்கலைன்னா ரெண்டு சீமைக்கும் யுத்தம் வரும்னு போய்ச் சொல்லுங்க”ன்னார்.

“சேதுபதி, அவங்கச் சொன்னத இங்க சொல்லவும், நீங்க சொல்லுறத அங்க சொல்லவும், நான் இங்கத் தூதனா வரல. ஒங்களுக்கே தெரியும், நா ஒங்க மாமா சிவங்கை அரசர் முத்து வடுகநாத தேவரின் அந்தரங்கப் பணியாளன். அவர் காளையார்கோயில்ல மேஜர் பான்ஜோரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாள்ல இருந்து உங்க அத்த வேலு நாச்சியார் கூடவும் வெள்ளச்சி கூடவும் இருக்கேன். நா என்ன நினைப்பேன்? என்ன செய்வேன்கிறத ஒங்க அத்த வேலு நாச்சியாரும்,

ஒங்க மொறப் பொண்ணு வெள்ளச்சியும் கண்டுபிடிச்சிருவாங்க. அதே மாதிரி நா அவங்க ரெண்டு பேரும் ஒரு விசயத்தில் என்ன முடிவு எடுப்பாங்கன்னும் கண்டுபிடிச்சிருவேன். இந்த விசயத்தில் நீங்க வேகம் காட்ட வேணாம். கிழவன் சேதுபதியோட பேரன் நீங்க. ஒங்கப் பாட்டனார் கிழவன் சேதுபதி இறந்த அன்னிக்கி நாப்பத்தி ஏழு ராணிக அவர் சிதையில தீக்குளிச்சாங்க. அது ஒரு ஆம்பள மேல நாப்பத்தி ஏழு பொண்ணுக வச்ச மரியாத. நாப்பத்தி ஏழு ராணிகள்ல யாரையும் கிழவன் சேதுபதி வற்புறுத்தியோ, மிரட்டியோ கல்யாணம் பண்ணியிருந்தா இது நடந்திருக்காதுன்னு என்னையவிட ஒங்களுக்கு நல்லாத் தெரியும். ஒரு பெண்ணுக்காகச் சீமைக்குள்ள பிரச்சனை வேணாம்.

சேதுக் கரையின் காவலன். இந்த தேசத்துல ராமாயணம் நடந்த காலத்திலேயே சேதுபதின்னு பேரு ஒங்கக் குடும்பத்துக்கு வந்திருச்சு. மறவர் ஜாதிக்குத் தலைவர். ஒங்களத் தாங்கிப் பிடிக்க எத்தனையோ பொம்பளப் பிள்ளைக தவம் இருப்பாங்க. தயாரா இருப்பாங்க. ஒங்கள வேணான்னு ஒரு பொம்பளப் புள்ள சொல்லுச்சின்னா அது சிவகங்க இளவரசி வெள்ளச்சியாயிருந்தாலும், அது ஒங்க அத்த மகன்னாலும் ஒங்களுக்கு எப்படியோ? ஒங்க சாதி ஜனம் கொந்தளிச்சிரும். வெங்கம் ஒங்க கிட்டக்கூட வர முடியாது. அந்தஸ்தில் ஒங்களை விட ரொம்பக் கொறச்சி. நாலு வயசுலயிருந்து நாச்சியார்கூட இருக்கார். வேலு நாச்சியார் விருப்பாச்சிக் காட்டுல மறஞ்சிருந்த காலத்திலயிருந்து “அத்த”, “அத்த”ன்னு

ஒட்டிக்கிட்டிருக்கிறவர். வேலு நாச்சியார் அவர அப்ப யிருந்து “மருமகன்”ன்னுதான் கூப்பிடுவாங்க. வெள்ளச்சி சிறு குழந்தையாயிருக்கும்போது வெங்கம், வெள்ளச்சியை தூக்கிக் கிட்டே திரியும். வெள்ளச்சியும், வெங்கனும் சின்னஞ்சிறிசா இருக்கையில இருந்து ஒன்னா இருக்கிறவங்க. ஒங்க அத்த வேலு நாச்சியார்கிட்டச் சொல்லி வெள்ளச்சி வெங்கம் கல்யாணத்த நடத்தி வையுங்க. அவங்களப் பிரிச்ச பாவம் ஒங்களுக்கு வேணாம்ன்னு சொன்னேன்.” மருதுவின் குரல் கம்மியது. கண்களைத் துடைத்துக் கொண்டார்.

“சேதுபதி என்ன சொன்னாரு அரண்மனை?”

“சேதுபதி என் பேச்சக் கேக்கல. நா சிவகங்க திரும்பி வர்றதுக் குள்ளேயே யுத்தத்த அறிவிச்சிட்டாரு. எப்படா எங்க ரெண்டு சீமைக்குள்ள யுத்தம் வரும், இரண்டு பேர்ல ஒருத்தர அடிச்சு

வீழ்த்தலாம்னு நினைக்கிற தஞ்சை சரபோஜியும், ஆற்காடு நவாப்பும், வெள்ளக்காரங்களும் ராமநாதபுரம் சேதுபதியோட சேர்ந்துக்கிட்டாங்க. ஒரு எளிய காதலைக் காப்பாத்த சிவகங்கச் சீம யுத்தத்துல குதிச்சது. சண்டையில எங்கச் சீம ஆளுங்க வீராவேசத்தோட போராடுனாங்க. வெள்ளக்காரக் கலெக்டருங்க கிட்ட எனக்கு உள்ள செல்வாக்கப் பயன்படுத்தி இந்தத் தேவையில்லாத சண்டைய நிறுத்தனும்னு ராணி வேலு நாச்சியார் எனக்கு உத்தரவிட்டாங்க. நா கலெக்டர்ங்ககிட்ட பேசினபிறகு சேதுபதிக்குக் கலெக்டர் ஆள் மூலம் கடிதம் கொடுத்துச் சொல்லிவிட்டார். "என் பேச்சை ஒங்க சேதுபதி மதிக்கலைன்னா அவர் மறுபடியும் சிறைச்சாலையப் பார்க்க வேண்டிருக்கும்"னு கலெக்டர் சொல்லிவிட்டார்.

"சேதுபதி, இந்தப் பிரச்சனையை இதோட விட்டிருங்க. ஒரு பெண்ணுக்காக ரெண்டு சீமையிலும் இது வரயில செத்தவங்கப் போதும். போரை உடனே நிறுத்தணும்"னு கலெக்டர் இரண்டாவதாக நேரடியாக எச்சரிக்கைக் கடிதமும் அனுப்பினார். வேற வழியில்லாம சேதுபதி போர நிறுத்தினாலும் எங்கமீது உள்ள கோவம் அவருக்குப் போகல. வெள்ளச்சிக்கும், வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கும் சிவகங்கையில கல்யாணம் நடந்த அன்னிக்கு ராமநாதபுரத்தில் சேதுபதி பண்ணின அலம்பலத் தாங்க முடியல."

சேக் மீரான், பெரிய மருது சொன்னதைக் கவனமுடன் கேட்டான். பெரிய மருது முன்பு போல் இல்லை. பெரிய மருது விருப்பாச்சிக் காட்டில் அடைக்கலமாக இருந்த பொழுதே அவரைப் பார்த்திருக்கிறான். இப்பொழுதும் அடிக்கடி விருப்பாச்சி கோபால் நாயக்கர் மாளிகையிலும், வாராப்பூர் ஜமீன்தாரான பொம்மை நாயக்கர் மாளிகையிலும் பெரிய மருதுவைப் பார்த்துப் பேசுவான்.

சேக் மீரான், திப்பு சுல்தானுக்கு நெருங்கிய உறவினன். சிவகங்கைச் சீமைக்குப் பலவகைகளில் உதவிய ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகிய இருவரது அன்பைப் பெற்றவன். சேக் மீரானை பெரிய மருதுவுக்கும் பிடிக்கும். இன்றைக்கு அவன் முக்கியமான வேலைக்காக வந்துள்ளான். எப்பொழுது வந்தாலும் ஏதாவது ஒரு பரிசுப் பொருளோடுதான் வருவான். அப்படி நான்கு வருடத்துக்கு முன்பு சேக் மீரான் கொடுத்ததுதான் இந்தக் குதிரை அதிசயம்.

“சிவகங்கைப் பிரதானியாரே, இன்னிக்கு எல்லாமே மாறிப் போச்சே. ராணி வேலு நாச்சியார் இறந்து போய்விட்டாங்க. அவங்க மக வெள்ளச்சியும் இறந்திருச்சு. வெள்ளச்சியோட மக சின்ன வெள்ளச்சியும் சிறு குழந்தையா இருக்கையிலேயே இறந்து போச்சு. பிரதானியார் எச்சரிக்கை செய்த மாதிரியே ராமநாதபுரம் சேதுபதிக்கும் அவங்க அக்கா மங்களேஸ்வரி நாச்சியாருக்கும் இப்ப பிரச்சனையாயிருச்சு. மங்களேஸ்வரி நாச்சியார் ஆற்காடு நவாப்பிற்கும் வெள்ளக்காரங்களுக்கும் புகார்க் கடிதம் போட்டு தம்பியவே சிக்கலுக்கு ஆளாக்கிருச்சு. தம்பிய “பெண் பித்தன் னும், அரசு கஜானாவைத் தேவையில்லாம ஆடம்பரச் செலவுக்குப் பயன்படுத்தறான்னும்” சொல்லி புகார் பண்ணிருச்சு. வெள்ளக் காரங்க சந்தர்ப்பம் பாத்துக்கிட்டு இருந்தாங்க. சேதுபதி, வெள்ளக் காரங்களுக்கு எதிராக் கலகம் செய்யத் தயாராயிட்டாரு. பாத்தான், வெள்ளக்காரன். சேதுபதிய கலகக்காரன், ரிபெல்ன்னு பிரகடனம் பண்ணி, ராமநாதபுரம் அரண்மனைக்குள்ள போய் கைது பண்ணிட் டான். இப்பப் பத்து வருசமா திருச்சிக் கோட்டைக்குள்ள சேதுபதி கைதியா இருக்காரு.”

“சேக் பாயி, அவரு கோவக்காரருதான்டா. இருந்தாலும் நம்ம சிவகங்கச் சீமய நமக்குப் பிரிச்சுக் கொடுத்த கட்டயத் தேவர் சேதுபதி யோட பேரன்டா. கிழவன் சேதுபதியோட கொள்ளுப் பேரன். கிழவன் சேதுபதியோட மக அகிலாண்டேஸ்வரி நாச்சியார நம்ம நாலுகோட்ட சசிவர்ணத் தேவருக்குக் கட்டிக் கொடுத்ததால தான் நாலுகோட்டைக்கு ஜமீன் அந்தஸ்தே வந்துச்சு.”

“நீங்க சொல்லுறது சரிதான் பிரதானியாரே. நாப்பது குதிரை வீரருங்கள வச்சிருந்த சசிவர்ணத் தேவருக்கு, சேதுபதி தன்னோட மக அகிலாண்டேஸ்வரி நாச்சியாரக் கட்டிக் குடுத்தாரு. சேதுபதியோட மருமகன்கிற கித்தாப்புல நானூறு குதிர வீரங்க வச்சிக்கிற அளவு அந்தஸ்து உயர்ந்துச்சு.”

“ஆமாம் சேக், சசிவர்ணத் தேவர் மகன்தான அரசர் முத்து வடுகநாதர். ராணி வேலு நாச்சியாரின் கணவர். கிழவன் சேதுபதிதான் சிவகங்கைக்குத் தனி சீமை அந்தஸ்து கொடுத்தவர்.”

“ஆனா, கிழவன் சேதுபதி இறந்தவுடன் மருமகன் சசிவர்ணத் தேவர் மரியாதையையும் அந்தஸ்தையும் இழந்துட்டாரே” என்றான் சேக் மீரான்.

“உண்மைதான்பா. மாமனார் கிழவன் சேதுபதி இறந்த உடன் ராமநாதபுரம் சீமையில் வாரிசுப் பிரச்சனை ஆரம்பமாயிடுச்சு. கிழவனோட மூத்தத் தாரத்து மகன் இளவரசர் ரணசிங்கத் தேவர், ராணி மங்கம்மாளுடன் நடந்த போரில் இறந்துவிட்டார். மராத்திய மனைவி மூலம் பிறந்த பவானி சங்கரனை சேதுபதியாக அறிவிக்க முடியாது, செம்பி நாட்டு மறவர் குலப் பெண் மூலம் பிறந்த வாரிசுன்னா மட்டுந்தான் சேதுபதியாக முடியும். ஆகவே, மகன் முறையைவிட்டு அடுத்து முறை உள்ளவரை சேதுபதி ஆக்க வேண்டிய சூழல் வந்திருச்சு. கிழவன் சேதுபதியின் தங்கைக்கும், உத்திரகோசமங்கை கடம்பத் தேவருக்கும் பிறந்த அவர் தங்கை மகன் முத்து வயிரநாதன் ராமநாதபுரம் ராஜா ஆனாரு. கிழவனின் மருமகனான சசிவர்ணத் தேவர் நாலுகோட்டையிலிருந்து ராமநாதபுரம் போய் புது சேதுபதிய வாழ்த்தினாரு.

அகிலாண்டேஸ்வரி நாச்சியாருக்குப் பெருமை. ஆனா அது நிலைச்சுச்சா? மூணு வருசம்தான் அவரு ஆட்சி இருந்துச்சு. அப்புறம் அவர் தம்பி திருவுடையாத் தேவர் சேதுபதியானார். அவரும் வைசூரி நோய் வந்து செத்துப்போனாரு. அப்புறம் யார் சேதுபதியா ஆகக் கூடாதுன்னு நினைச்சாங்களோ, அவரே சேதுபதியானார். கிழவன் சேதுபதிக்கும் மராத்தியப் பெண்ணுக்கும் பிறந்த பவானி சங்கரன் அப்போ பொறுப்பில இருந்த சுந்தரேச சேதுபதியக் கொன்னு, தான் சேதுபதியாயிட்டாரு. நாலுகோட்ட ஜமீனுடைய அந்தஸ்தையும் பவானி சங்கரன் புடிங்கிட்டாரு.”

“குறுக்கு வழியில துரோகம் பண்ண பவானி சங்கரன் வீழ்ந்தார் பாருங்க, பிரதானியாரே, ராமநாதபுரம் அரசுரிமையும், மரியாதையும் மீண்டும் சுந்தரேச சேதுபதி தம்பிக்குத் திரும்பக் கிடச்சுது பாருங்க, அத நீங்க சொல்லிக் கேக்கணும். எத்தனை முறை ஒங்க மூலம் கேட்டாலும் அலுக்காது. அழிவிலிருந்து மனிதர்கள் மீண்டு வர முடியும்னு நிரூபிச்ச நிகழ்ச்சி அது.”

“சரியா சொன்னேப்பா. பவானி சங்கரனுக்கு உதவியாயிருந்தது தஞ்சாவூர் மராத்திய அரசர் சரபோஜி. ராமநாதபுரத்துக்குச் சொந்தமான அறந்தாங்கிப் பகுதிய அவருக்குத் தர்றேன்னு சொல்லித்தான் பவானி சங்கரன் தஞ்சாவூர் மராத்திய அரசனுக்கு நெருக்கமானாரு. எல்லாத்தயும் விட மராத்திய அரசனுக்குப் பவானி சங்கரனின் அம்மா தூரத்துச் சொந்தம். அப்படியிருக்கயில சுந்தரேச சேதுபதியின் தம்பி கட்டயத்

தேவரும், அண்ணன் சுந்தரேசத் தேவனின் மைத்துனருமான சசிவர்ணத் தேவரும், தஞ்சாவூர் போய் தலைமறைவு வாழ்க்க நடத்துனாங்க. பட்டுக்கோட்ட பகுதியில பொதுமக்கள ஒரு புலி அச்சுறுத்திக்கிட்டிருந்திருக்கு. அத யாராவது பிடிச்சுக் கொடுத்தா பரிசுன்னு சரபோஜி அறிவிச்சாரு. அந்தப் பகுதியில சுத்திக்கிட்டிருந்த கட்டயத் தேவருக்கும், மருமகன் சசிவர்ணத் தேவருக்கும் இந்தத் தகவல் தெரிஞ்சிருக்கு. அவங்க புலி இருக்கிற இடத்தத் தேடிக் கண்டுபுடிச்சிட்டாங்க. புலி கட்டயத் தேவர் மேல பாஞ்சுது. கட்டயத் தேவர் கையாலயே புலிய அடிச்சுக் கொன்னுட்டாரு. விசயம் சரபோஜி காதுக்குப் போயிருச்சு. ரெண்டு வீரங்களையும் தர்பாருக்கு வரவழைச்சு பரிசு கொடுத்திருக்காரு. கட்டயத் தேவர் “பரிசு வேண்டாம். வேற உதவி செய்வதாயிருந்தால் சொல்லுறேன்”ன்னு சொல்லிருக்காரு.

“என்னத்தப் பெரிசா கேட்டிறப் போறார்னு நினைச்ச சரபோஜி “சரி கேளுங்கன்னு” சொல்லியிருக்காரு.”

“உங்கப் பாட்டனார் சிவாஜி மேல சத்தியம் பண்ணுங்க. நா கேட்டதக் கொடுப்பேன்”னு கட்டயத் தேவர் சொன்னவுடன்,

“சரி, என் பாட்டன் சிவாஜிமேல சத்தியம், கேளு”ன்னு சரபோஜி சொல்லியிருக்காரு.

கட்டயத் தேவர் “ராமநாதபுரம் அரசு மேல படையெடுத்துச் செல்ல ஐயாயிரம் குதிரைப்படை வீரங்கள எனக்கு இரவலாகத் தரணும்னு” கேட்டிருக்கார். அப்பத்தான் சரபோஜிக்கு விசயம் பிடிபட்டிருக்கு.

“நீங்க யாரு”ன்னு கேட்டிருக்கார்.

“நானு கிழவன் சேதுபதியோட நெருங்கிய உறவினன். உங்கள் உதவி பெற்ற பவானி சங்கரனால் என் அண்ணன் சுந்தரேச சேதுபதி, கொல்லப்பட்டுவிட்டார். இப்ப பவானி சங்கரன்தான் சேதுபதின்னாலும் எங்கப் பகுதியில அவரை யாரும் சேதுபதியா ஏத்துக்கல. உங்களுக்கு வெள்ளாற்றுக்கு தெக்கே உள்ள நிலங்களைத் தருவதாகப் பவானி சங்கரன் சொல்லியிருக்கார். ஆனா இதுவரை உங்களுக்குத் தரவில்ல. இனிமேல் தரவும் மாட்டார். எங்களுக்கு நீங்கள் உதவினால் உங்களுக்கு நாங்கள் நன்றியோடு இருப்போம். வெள்ளாற்றுக்குத் தெற்கே உள்ள பட்டுக்கோட்டை, அறந்தாங்கிப் பகுதிகளை உங்களுக்குக் கொடுக்கிறோம்.

உங்களுக்குப் பிரச்சனைகள் தந்து கொண்டிருக்கும் அனைவரும் எங்களுக்கு எதிரிகள். உங்கள் நண்பர்கள் அனைவரும் எங்கள் நண்பர்கள். மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறோம். உதவுங்கள்" என்று சொன்னவுடன் சரபோஜி கட்டயத் தேவருக்கு உதவ முடிவு பண்ணிட்டார்.

ஐயாயிரம் குதிரை வீரர்களுடன் ராமநாதபுரம் சென்ற மராத்தியப் படை பவானி சங்கரனைக் கொன்றது. அப்பத்தான் கட்டயத் தேவரையும், மைத்துனன் சசிவர்ணத் தேவரையும் சரபோஜியால நல்லா புரிஞ்சுக்க முடிந்தது. ரெண்டு பேருமே சேதுபதி பதவிய ஏத்துக்க மாட்டீங்கிறாங்க. இவர் அவரை, சேதுபதி ஆகட்டும்ங்கிறார். அவர் இவரை சேதுபதியாக இருக்கட்டும்கிறார். மருமகனும் சின்ன மாமனாரும் இவ்வளவு ஒத்துமையாயிருக்கிறதப் பார்த்து சரபோஜிக்கு ஆச்சரியமாகிவிட்டது. வேற வழியில்லாம ரெண்டு பேருமே அரசராகலாம்னு முடிவு பண்ணி அதுக்கு ஒரு வழி கண்டுபிடிச்சாங்க. ராமநாதபுரத்தைப் பிரிச்சுட்றது. அஞ்சுல மூணு பகுதி ராமநாதபுரம். அதுக்கு சேதுபதியா கட்டயத் தேவர். அஞ்சுல ரெண்டு பகுதி சிவகங்க அரசு. அதுக்கு சசிவர்ணத் தேவர் அரசர்ன்னு முடிவானது. அதனால இப்ப இருக்கிற சிவகங்கச் சீமை, ராமநாதபுரம் கிழவன் சேதுபதி அவரு மருமகன் சசிவர்ணத் தேவருக்குக் கொடுத்த சீதனம் அல்ல. மாமனார் கொடுத்த சீதனம் இழந்து, சின்ன மாமனாரும், மருமகனும் சண்டை போட்டுத் திரும்ப ஜெயிச்சு வந்தது. ஒரு திருமண மாலையால் அன்னைக்குச் சிவகங்கை ஜமீன் கிடைச்சிருக்கலாம். இன்னைக்குள்ள சிவகங்கை அப்படிக் கிடைக்கல. அது ஆயுதத்தால கிடைச்சது."

"இப்ப எல்லாம் என்ன ஆச்சு பிரதானியாரே? சின்ன மறவர் சீமைக்கும் பெரிய மறவர் சீமைக்கும் சுமூகமான உறவு இல்ல. எப்ப சிவகங்கச் சீமை வெள்ளக்காரங்களால முழுங்கப்படும்னு சேதுபதி காத்திருந்தார். அது நடக்கிறதுக்கு முன்னாலேயே சேதுபதி சிறைக்குப் போய்ட்டார். இப்ப ராமநாதபுரத்தோட ஆட்சி அந்தக் குரங்குப் பய மார்ட்டின்ஸ் கையில். அடுத்து வெள்ளக்காரங்களின் கைப்பாவையான ஆற்காடு நவாப்புக்கோ அல்லது சேதுபதியின் அக்கா மங்களேஸ்வரி கிட்டயோ ஆட்சி போகப் போகுது."

"சேதுபதி சிறைக்குப் போயி ஆறு வருசம் ஆச்சு. இது வரை கிழக்கந்தியக் கம்பெனி ஆட்சிப் பொறுப்ப யார்கிட்டயும் கொடுக்கல. இப்போதைக்கு கர்னல் மார்டின்ஸ்தான் சேதுபதி பார்க்கிற வேலையப் பார்த்துக்கிட்டிருக்கார்."

“பிரதானியாரே. கோவிக்கக் கூடாது.”

“சேக் உசேன், உன்னை என் மகன் போலத்தானே நினைக்கிறேன். நீயும் ஒவ்வொரு முறையும் ஒரு மகன் தகப்பனுக்கு மரியாதை செய்வதுபோல எனக்குச் செய்கிறாய். ஏதோ கேட்க ணும்னியே, கேளு.”

“கோவிக்கக்கூடாது அரண்மனை.”

“கேளுப்பா, கோவிக்கமாட்டேன்.”

“வெள்ளச்சி இறந்தபிறகு கொஞ்ச நாள் வெங்கம் பெரிய உடையணத் தேவர் விரக்தியில இருந்தாரு. அத சரி பண்ண அவருக்கு மறுமணம் செய்யணும்னு முடிவு செஞ்சீங்க.”

“ஆமா” என்றார் பெரிய மருது.

“நீங்க ஏன் வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு உங்க மகளைக் கட்டி வைத்தீர்கள்? ராமநாதபுரம் சேதுபதி வீட்டுப் பெண்களைக் கேட்டிருக்கலாம். அது முடியவில்லை என்றால் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள சேத்தூர், சிங்கம்பட்டி,நெல்கட்டும் சேவல், கடம்பத்தூர் மறவர் ஜமீன்களில் அவருக்குப் பெண் பார்த்திருக்கலாம். அகம்படியர் ஜாதியான உங்கள் ஜாதியிலிருந்து மறவர் அரசருக்குப் பெண் தரவேண்டிய காரணம்?”

“உனக்குத் தெரியாத மாதிரி புதுசா என்கிட்ட கேட்கிறாய்? சரி, என்கிட்ட நேரடியா கேட்க முடியாதவங்க, உன்னை மாதிரி என்கூட இருக்கிறவர்கள் கிட்டதானே கேட்டு தெரிந்து கொள்ள நினைப்பார்கள்? பலர் கேட்க நினைப்பார்கள். ஆனால் பயந்து கொண்டு கேட்க மாட்டார்கள். நமக்குத்தான் ஜாதி முக்கியம். அரசனுக்கு அல்ல. அரசன் ஜாதிகளுக்கு அப்பாற்பட்டவன். அமைதிக் காலத்திலும், போர்க்காலத்திலும் அவனுடைய நாட்டில் உள்ள அனைத்து ஜாதியினரும் அவனுக்கு உறவினர்களே. அந்த வகையில முக்குலத்தோர் பிரிவில் உள்ள என் மகளை அரசர் மணமுடித்தது தவறில்லை. நடைமுறையில் உள்ளதுதான். எப்படி அரசி வேலு நாச்சியார்மீது அத்தை என்ற பாசத்தோடு அரசர் வெங்கம் உடையணத் தேவர் இருந்தாரோ, அதேபோல என் மீதும், என் தம்பி சின்ன மருது மீதும் வெங்கம் உடையணத் தேவர் பாசமாக இருப்பார். எங்கள் இருவரையும் “அம்மான்” என்று தான் அழைப்பார். நான்கூட பல முறை சொல்லியிருக்கிறேன்.

“நீங்கள் அரசர், நான் உங்கள் சேவகன்” என்று. அதற்கெல்லாம் அவர் உடன்படவே மாட்டார். “அம்மான் நீங்களும் சின்ன அம்மானும், இல்லையென்றால் இந்த ராஜ்ஜியம் ஏது? எனது அத்தை வேலு நாச்சியார் பெரும் வீராங்கனையாக இருந்திருக்கலாம். ஆனால் அவரை ஒரு வீராங்கனை என்று உணர வைத்தது நீங்கள் இருவரும் தானே?” என்று சொல்லுவார்.

வெள்ளச்சியைக் கல்யாணம் பண்ணி சந்தோசமாக இருக்கையில் என் மகளை அவர் பெண் கேட்கவில்லை. நானும் பெண் கொடுக்கவில்லை. பொண்டாட்டி இறந்தபிறகு என் மகளைக் கேட்டார். நான் என்ன சொல்ல முடியும்? சின்ன மருதுவிடம் கேட்டேன். நாமே இதைப் பற்றிப் பேசிக் கேட்டிருக்க வேண்டும்? மாப்பிள்ளைய வாய்விட்டுப் பெண் கொடுங்க அம்மான்னு கேக்க வச்சிட்டோமேன்னு சொன்னான். வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு எனது மகளைத் திருமணம் செய்து கொடுத்ததால்தான் நான் பிரதானியாகவும், என் தம்பி அமைச்சனாகவும் இருக்கிறான் என்பதில்லை. திருமணத்திற்கு முன்பிருந்தே நாங்கள் இருவரும் இதே பொறுப்பில்தான் இருக்கிறோம். தாண்டவராயப் பிள்ளை காலத்திற்குப் பிறகு நாங்கள் இருவரும் சிவகங்கைச் சீமைக்கு எங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து விட்டோம்.”

“சரி அரண்மனை, பல நாள் கேக்கணும்னு நினைச்சது. கோவிக்காம நிறைவான பதிலும் கொடுத்திட்டீங்க.”

“சரி சேக் உசேன். இந்த வருடமும் மொகரம் கடைசி நாள் எல்லாம் தயார் தானே?”

“அது பற்றிப் பேச விருப்பாச்சி கோபால் நாயக்கர் ஒரு ரகசியக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து எல்லோருக்கும் தகவல் அனுப்பி யிருக்கிறார். வாராப்பூர் ஜமீன்தாரிடமும் தேளி ஜமீன் தாரிடமும் சொல்லி விட்டேன். நீங்களோ அல்லது சின்ன மருதுவோ அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டால் தான் முக்கிய முடிவே எடுக்க முடியும்.”

“மராத்தியக் குதிரை.”

“ஆம், பிரதானியாரே, மராத்திய மாவீரர் தூந்தாஜி வாக் வீர மரணம் அடைந்துவிட்டதால் அவரது மகன் தனது பிரதிநிதிகளை அனுப்புகிறார்.”

“விரைவில் சந்திப்பதாகச் சொல்லிவிடு.”

அந்நேரம் பெருஞ்சிரிப்புச் சத்தத்துடன் சின்ன மருது அரண்மனைக்குள் புகுந்தார். காவலாளிகள் வணங்கினர். பெரிய மருது உள்ளேயிருக்கிறார் என்பதைக் கண் ஜாடையில் காட்டினர், சின்ன மருது ஆர்ப்பாட்டத்தைக் குறைத்துத் தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டினார். கையிலிருந்த வாளை உடன் வந்த வீரனிடம் கொடுத்துவிட்டு பெரிய மருது அமர்ந்திருந்த அறைக்குள் மெதுவாக நுழைந்து அண்ணன் முன் வீழ்ந்து வணங்கினார்.

“எழுந்திருப்பா. மகராஜனாகயிரு” என்ற பெரிய மருது,

“பாரு, உன் கூட்டாளி சேக் உசேன் வந்திருக்கிறான். என்ன சொல்கிறான் என்று விசாரித்து தெரிந்து கொள்ளலாமா?” என்றார்

“அண்ணே, சேக் உசேன் நாம் சொல்வதைச் சிரமேற்கொண்டு செய்பவன். திருமணம்கூட செய்துகொள்ளாமல் பிறரின் நன்மைக்காக உழைப்பவன். ஊர் விட்டு ஊர் சென்று என்ன நடக்குது என்று தகவல் தருபவன். தகவல் சேகரிப்பவன். இது ஜனவரி மாதம் என்பதால் வெள்ளையர்களுக்கு மிகுந்த விருப்பமான குளிர்ச்சியான மாதம் இது. அவர்கள் கொடைக்கானலுக்கோ, ஊட்டிக்கோ, ஏற்காட்டிற்கோ, மாஞ்சோலைக்கோ, குமுளிக்கோ செல்லாமல், ராமநாதபுரத்திலும் கமுதியிலும் தங்கியிருக்கிறார்கள்.”

“அவர்கள் இங்குதான் இருக்கிறார்கள். முன்பெல்லாம் மதுரை, திருச்சியிலிருந்து கூட நம்முடைய காளையார்கோயிலுக்கு வந்து என்னுடன் வேட்டைக்குச் செல்ல விரும்புவார்கள். ஆனால் இப்போது இங்கேயே நெருங்கிய தூரத்தில் இருக்கிறார்கள். இருந்தாலும் வேட்டைக்கு இங்கு வர வேண்டும் என்று என்னிடம் கேட்பதில்லை.”

“ஆம் அண்ணா, அவர்களுக்கு இப்போது மனித வேட்டை யில்தான் ஆர்வம். நமக்கு எப்போதும்போல மிருக வேட்டைக்கான நேரம் வந்துவிட்டது. அவர்கள் நம்மிடம் இப்போது விலகியே இருக்கிறார்கள். ஆரவாரமான நெருக்கம் இல்லை. அவர்கள் அமைதியாக இருப்பதுபோலக் காட்டிக்கொண்டாலும் அவர்கள் அமைதியாக இல்லை. ராமநாதபுரம் சேதுபதியை திருச்சிக் கோட்டை சிறையிலிருந்து மெட்ராஸ் கோட்டைக்கு மாற்றலாமா என யோசிக்கின்றனராம்.

கட்டபொம்மனைத் தூக்கில் ஏற்றி விட்டனர். பூனா பகுதியிலிருந்த தூந்தாஜி வாக்கை கொன்றுவிட்டனர். சிவத்தையா வையும் ஊமத்துரையையும் பாளையங்கோட்டை சிறையில் அடைத்துவிட்டனர். சிவகங்கையையும், மற்ற பாளையங்களையும் கைப்பற்ற காலம் கனியட்டும் எனக் காத்திருக்கின்றனர். அவர்கள் முந்துவதற்குள் நாம் முந்திக் கொள்ள வேண்டும். உங்களது முயற்சியால், நம் விருப்பாச்சி கோபால் நாயக்கர், கோவைப் பகுதி யிலிருக்கும் இந்த சேக் உசேன், காங்கேயம் சின்னமலை, தேளி நாயக்கர், வாராப்பூர் ஜமீன்தார், நெடுவயல் ஜமீன்தார், நாங்குநேரிப் பகுதி வீரர்கள், திருவிதாங்கூர் நாட்டு பழசி ராஜா, வீரன் வேலுத்தம்பி என்று பெரும் வீரர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்துவிட்டோம்.உங்கள் ஆணைக்காகக் காத்திருக்கிறோம். தங்களிடம் இது குறித்து விரிவாகப் பேச விரும்புகிறேன்."

"பிரதானியாரே, சின்ன மருது சேர்வைக்காரர் தங்களிடம் முக்கியமான பொருள் குறித்துப் பேச விழைகிறார் எனக் கருதுகிறேன். நான் சற்று வெளியில் சென்று விட்டு மாலை பிரதானியாரைச் சந்திக்கிறேன்" என்றார்.

"சரி" என்றார் பெரிய மருது.

சேக் உசேன் சென்றவுடன் தம்பியிடம்,

"சொல்லுப்பா" என்றார்.

"அண்ணே, நான் சொல்லப் போவது தங்களுக்குக் கோபம் ஊட்டலாம். ஆனால், நாம் கட்டாயம் செய்தே ஆகவேண்டும். கட்டபொம்மன் நம் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் பிடிபடவில்லை யென்றாலும் நமது விருந்தினராகச் சில நாட்கள் இருந்துவிட்டு நம் பகுதியைத் தாண்டிச் சென்று புதுக்கோட்டை அரசரின் கட்டுப்பாட்டில் உள்ள காளாப்பூர்க் காட்டில்தான் பிடிபட்டார். அது நம் இனத்திற்குப் பெரும் தலைகுனிவு. அந்த அவமானத்தை நாம் துடைக்க வேண்டும். கட்டபொம்மனும் அவரது தகப்பனார் ஜெகவீரப் பாண்டியரும் நமக்கும் மிகவும் நெருக்கமானவர்கள். ஜெகவீரப் பாண்டியர் நம் இருவரையும் தன் மகன்கள் போலவே கருதினார். எப்போது நான் பாஞ்சாலங்குறிச்சியின் விருந்தினராக அங்கே தனியே சென்றாலும் உங்களை என் பெத்த மகன் எப்படியிருக்கிறார் என்று கட்டாயம் கேட்பார். அப்படிப்பட்ட தகப்பனுக்குப் பிறந்த கட்டபொம்மு, நமக்குச் சகோதரன் போன்றவன். அவன் மரணத்திற்கு காரணமானவர்களை நாம் பழி வாங்கிட வேண்டும்."

“சின்ன மருது, நீ சொல்லி நான் எதையும் மறுத்ததில்லை. ஆனால் எதையும் ஒன்றுக்கு இரு முறை யோசித்துக் கொள். நாம் பல துன்பங்களைச் சந்தித்து விட்டோம். நம்மீது அவ்வளவு பிரியமாக இருந்த ராணி வேலு நாச்சியாரே வயோதிகத்தின் காரணமாகவோ, மகள் வெள்ளச்சி, பேத்தி சின்ன வெள்ளச்சி என்ற இளம் தளிர்களின் அகால மரணத்தின் காரணமாகவோ அல்லது நாச்சியாரின் மருமகன் வெங்கம் பெரிய உடையணத் தேவர் நம் வீட்டுப் பெண்ணை மணந்ததற்காகவோ நம்மீது வெறுப்புற்று, விருப்பாச்சி போய் இறந்தும் விட்டார். பக்கத்துச் சீமையின் மங்களேஸ்வரி நாச்சியாரை தவறான முன்னுதாரணமாகக் கொண்டு மெட்ராஸ் கவர்னருக்கு நம்மைப் பற்றிப் புகார் மனு அனுப்பிவிட்டார். வேலு நாச்சியாரின் மரணமும் விருப்பாச்சி நாயக்கர் மாளிகையிலேயே நடந்தது நமக்கு தர்மசங்கடம்தான். அவர் இறந்து நான்கு வருடங்களாகிறது. வேலு நாச்சியாரின் புகார் மனுமீது கவர்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆங்கிலேயர்கள் நம்மீது நம்பிக்கை வைத்துப் பிரியமாக இருப்பது போலத் தான் சில நேரங்களில் தெரிகிறது. குறிப்பாக மேஜர் வெல்ஷ் போன்றவர்கள் நமக்கு நண்பர்களாகத் தெரிகிறார்கள். இந்த நிலையில் மராத்திய வீரன் தூந்தாஜி வாக்கின் மகனிடமிருந்து இந்த சேக் உசேன் தகவல் கொண்டு வந்திருக்கிறான். மொகரம் கடைசி நாளில் ஆங்கிலேயர்களுக்குக் கோயம்புத்தூரில் மீண்டும் ஒரு அதிர்ச்சி கொடுக்கலாம் என்று. நீ என்ன நினைக்கிறாய்?”

“அண்ணே, தாங்கள் கோயம்புத்தூரில் வருகிற மொகரத்தன்று அதிர்ச்சி தரலாம் என்கிறீர்கள். ஏற்கனவே சென்ற ஆண்டு மொகரத்தன்று நாம் கொடுக்க நினைத்த அதிர்ச்சி முன்கூட்டியே வெளியில் தெரிந்துவிட்டது. இந்த ஆண்டு மொகரம் அன்று நிச்சயம் கவனமாக இருப்பார்கள். அதனால் அதை விட்டுவிடுவோம். இன்னும் ஒரு மாதத்தில் பாளையங்கோட்டையில் நாம் ஒரு அதிர்ச்சி தருவோம்.”

“சிவத்தைய்யாவும், ஊமத்துரையும் ஏறக்குறைய ஒரு வருசமாகப் பாளையங்கோட்டைச் சிறையில் இருக்காங்க. வீர பாண்டியருக்கு அடுத்த ஜமீன்தாரா சிவத்தையாவ நியமிக்கிறதுக்கும் வெள்ளக்காரங்க ஒத்துக்கிறல. பக்கத்துலயிருக்க எட்டயபுரம் ஜமீன்கூட பாஞ்சாலங்குறிச்சி ஜமீன சேர்ப்பாங்கன்னு நாம நம்புனோம். எட்டயபுரம் ஜமீன்தார் ரொம்ப எதிர்பார்த்திருந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன்கூட நடந்த சண்டையில எட்டயபுரம் படைங்க வெள்ளக்காரர்களுக்கு முழு ஆதரவு கொடுத்தன.

வெள்ளக்காரங்க என்னைக்கும் எட்டயபுரத்து ஜமீன்தாரை முழுசா நம்ப மாட்டாங்க. இன்னைக்கு வேணும்னா எட்டயபுரம் ஜமீன்தார் வெள்ளக்காரங்ககூட இருக்கலாம். அந்தப் பகுதியில அம்பது வருசத்துக்கு முன்னால புலித்தேவர் வெள்ளக்காரங்களோட முதல்ல மோதினார். அவருக்கு அடுத்ததா வெள்ளக்காரங்களோட மோதியது எட்டயபுரம் ஜமீன்தார்தான். எட்டயபுரம் ஜமீனுக்கு ஆதரவா எந்த ஜமீன்தாரும் வரல. வெள்ளக்காரன்கிட்ட தனியா அடிபட்டு எட்டயபுரம் ஜமீன்தார் தெளிஞ்சிட்டாரு. "இனிமேல் வெள்ளக்காரனை எதிர்க்கிறது இல்லை"ன்னு கட்டபொம்மனுக்கு எதிரான போர்ல ஆங்கிலேயர ஆதரிச்ச எட்டயபுரம் ஜமீன்தாருங்க வருங்காலத்திலேயும் வெள்ளக்காரங்களுக்கு ஆதரவாத்தான் இருப்பாங்க. ஆனா வெள்ளக்காரன் பழச மறக்கமாட்டான். எட்டயபுரத்துக்குப் பெரிசா எதுவும் செய்யமாட்டான். அதேசமயம் பெருசா எந்தக் கெடுதலும் செய்யமாட்டான்."

"அண்ணே, வெள்ளக்காரங்க இதுவரை நம்மகூட நல்லாத்தானே இருக்கிற மாதிரி நடந்துக்கிறாங்க."

"அவங்க நம்மகிட்ட பேசுறது, பழகுறத வச்சு என்னால முழுசா ஒரு முடிவுக்கு வரமுடியல. ஆற்காடு நவாப்போட ஏஜென்டா வந்த கர்னல் ஜோசப் ஸ்மித்தின் மிரட்டலுக்குப் பயந்து நாம கப்பம் கட்ட முடிவு செய்தோம். முழுத் தொகை இல்லைன்னாலும் கால்வாசித் தொகையைக் கட்டினோம். ஆற்காடு நவாப்பும் அதை ஏத்துக்கிட்டு சண்டைய நிறுத்தச் சொல்லி கர்னல் ஸ்மித்துக்கு கடிதம் கொடுத்தாரு. நாலு நாள்ல சண்ட நின்னுச்சுன்னு நம்பி காளையார்கோயில் போன நம்ம அரசர் முத்து வடுகநாதரையும் இளைய ராணி கௌரி நாச்சியாரையும் கர்னல் ஸ்மித்தோட துணை தளபதி மேஜர் பான்ஜோர் ஒரு ராத்திரி சுட்டுக் கொல்லலையா? இது பெரிய தவறுன்னு பிரிட்டிஷ் பார்லிமென்ட்ல பேசப்பட்டாலும் என்ன பெரிசா நடந்துச்சு? மேஜர் பான்ஜோர லண்டனுக்குத் திரும்ப அழைச்சிக்கிட்டாங்க. அவ்வளவுதானே? வெள்ளக்காரனுக்கு எந்த நியாய உணர்ச்சியும் கிடையாது. அதேசமயம் பழிவாங்க எவ்வளவு காலம் வேணும்னாலும் காத்திருப்பான்."

"பாஞ்சாலங்குறிச்சி விசயத்துல..."

"பாஞ்சாலங்குறிச்சி விசயத்துலயும் அவனுங்க காத்துக் கிட்டிருக்கான்க. ஏதாவது செய்து பெரிசா மீண்டும் ஒருமுறை பழி வாங்கணும்னு. எனக்கு என்னவோ சிவத்தையாவையும் ஊமைத்

துரையையும் இந்தப் போராட்டத்திலயிருந்து உருவி விட்டுரலாம்னு தோணுது. அந்தக் குடும்பம் ஏற்கனவே ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கு. வீரபாண்டியரத் தூக்குல போட்ட முறைய யாரு மறந்தாலும் அந்தப் பகுதி ஜமீன்தாருங்க மறந்திருக்க மாட்டாங்க. தூக்குல போட்டு ஒரு வருசம் ஆகுது. ஏறக்குறைய பதினெட்டு நாளு விசாரணைங்கிற பேருல எல்லா ஜமீன்தாரர்களையும் உக்கார வச்சி அவங்க முன்னிலையில் விசாரணை நடத்தினாங்க. தண்டனையைக்கூட மத்த ஜமீன்தாருங்க கண்ணு முன்னாலதான் நடத்தினாங்க. மத்த சின்ன விசயங்களுக்கெல்லாம் மெட்ராசு கவர்னருக்குக் கடிதம் எழுதுவாங்க. அங்கயிருந்து பதில் வரும்வரை காத்திருப்பாங்க. ஆனா கட்டபொம்மன் விசயத்தில விசாரணைக் கமிட்டி மெட்ராஸ் கவர்னர்கிட்டயிருந்து உத்தரவு வர்ற வரை காத்திருக்கலையே? விசாரணை நடந்து முடிஞ்ச உடனே தூக்குல ஏத்திருச்சுல்ல? கவர்னரும் இந்த விதி மீறல சுத்தமாகக் கண்டுக்கிறலைல்ல? அதனால சொல்றேன். இங்க இருக்கிற கலெக்டர் மொதக்கொண்டு கவர்னர்வரை கட்டபொம்மன் விசயத்தில் கடுமையா இருந்திருக்கிறாங்க. அதனால நாமளும் அந்தக் குடும்பத்தப் புதுப் பிரச்சனைக்குள்ள கொண்டுவர வேணாம். அவங்கள விட்டுட்டு யோசிப்போம்.”

“அண்ணா, ஒங்களுக்கு நான் யோசன சொல்ல முடியாது. என்னைவிட ஐந்து வயசு மூத்தவர்ன்னாலும் எனக்கு அப்பா மாதிரி நீங்க. என்னையவிட வெள்ளக்காரங்களோட ஒங்களுக்கு நல்லா பழக்கம் இருக்கு. திருச்சி, மதுரைன்னு எந்தக் கலெக்டர் பதவிக்கு வந்தாலும் ஒங்களுக்கு அவங்க நெருக்கமாயிடுவாங்க. ஒங்களுக்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனி நடவடிக்கைங்கப் பத்தித் தெரியாதது இல்ல. போர், சமாதானங்கிற விசயத்தில முடிவெடுக்கிறது மிலிட்டரி அதிகாரிங்கதான். மிலிட்டரி ஆபிசர்க சொல்லுறத கலைக்டர்க பெரும்பாலும் ஏத்துக்கிட்டுத்தான் போவாங்க. வெளியில பாத்தா கலெக்டர் முடிவு செய்யுற மாதிரி தெரியும். ஆனா மிலிட்டரிக்காரங்கதான் பெரிய முடிவெல்லாம் எடுக்கிறாங்க. குறிப்பா சண்டை இல்ல சமாதானம் என்கிற முடிவ எடுக்கிறது மிலிட்டரிக்காரங்கதான்.

என் நண்பர் மேஜர் வெல்ஷ்கூட நான் நெருங்கிப் பழகுறேன்கிறது ஒங்களுக்கு நல்லாத் தெரியும். அந்தப் பழக்கத்த வச்சு சொல்லுறேன். நாம வெள்ளக்காரங்ககூட ஏதாவது பிரச்சனை பண்ணினோம்னா முதல்ல சிறையில் இருக்கிற சிவத்தைய்யா மேலயும், ஊமைத்துரை மேலயும்தான் அவன் கை வைப்பான். சிறையில இருக்கிற

ரெண்டு வீரங்களையும் தூக்கில போடுவான். சிறைக் கைதியாயிருக்கையில தூக்குல மாட்டி சாகிறத எந்த வீரனும் விரும்ப மாட்டான். சாகிறதாயிருந்தாலும் போராடி செத்தாத்தான் பரவாயில்ல. சிவத்தைய்யாவை, ஊமைத்துரையைப் பத்தியும் ஒங்களுக்கு நல்லாத் தெரியும். அவங்க நிலையில இருந்து யோசிச்சோம்னா நாம என்ன செய்யறதுன்றத புரிஞ்சுக்க முடியும்."

"சரிப்பா, நல்லா யோசிச்சுக்க."

"யோசிச்சிட்டேன் அண்ணே, பிரான்மலை சிவன் கோயில்லேயும், குன்றக்குடி சிவாலயத்திலும் பிரார்த்தனை பண்ணிட்டேன். சகுனம் நல்லாத்தான் இருக்கு."

"சரி, நான் ஆயுதக்கூடம் வரை போய் வர்றேன்."

"அண்ணா, ஒரு விண்ணப்பம். அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரிடம் இந்த விசயம் குறித்துப் பேசிட்டேன். உங்களிடம் அபிப்ராயம் கேட்பதாக சொன்னார்."

"சரி, நான் நாளை அரசரைப் பார்க்கிறேன். இது குறித்துப் பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு, பெரிய மருது அரண்மனையை விட்டு வெளியில் வந்தார். சேக் உசேன் வாசலில் நின்று கொண்டிருந்தான். அதிசயம் குதிரைமீது ஏறுவதற்கு சேக் உசேன் தோள் கொடுத்தான். அவன் தோளில் கை வைத்து குதிரைமீது பெரிய மருது குதித்து ஏறினார். அவனையும் உடன் வரும்படி பெரிய மருது சைகை காட்ட, சேக் உசேன் ஓடிப்போய் பக்கத்தில் நின்றிருந்த அவனுடைய குதிரையின் மீது தாவி ஏறினான்.

18

சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு வயது முப்பத்தி ஒன்று முடிந்திருந்தது. புது வருடம் பிறந்ததை முன்னிட்டு அரசரை ஓரியூர் தேவாலயத்திற்குப் பாதிரியார்கள் அழைத்திருந்தனர். இளமையும் அழகும் உள்ள வெங்கம் உடையணத் தேவர் பேசும் போதும் சிரிப்பு இருந்து கொண்டேயிருக்கும். மனைவி மருதாயியை அரசர் அழைத்தார்.

"மருதாயி, நான் ஓரியூர் தேவாலயம்வரை போய் வரலாம் என நினைக்கிறேன். அந்த தேவாலயத்திற்கு நமது மந்திரி பிரதானி பெரிய

மருது சேர்வைக்காரர் பெரும் பண உதவி செய்துள்ளார்."

"அரசருக்கு அவர் பிரதானி மட்டும்தானா? மாமனார்னு சொன்னால் என்ன சாமி?"

"உன்னோடு திருமணம் ஆன பிறகு என்னை அவர் ஒரு முறை கூட மருமகன் என்று அழைத்ததில்லை. நான் அவரை எப்பவும் 'அம்மான்' என்றுதான் அழைப்பேன். நான் சிறுவனாக இருக்கும்போது கூட 'மாப்பிள்ளை'என்றுதான் கூப்பிடுவார். இப்ப எல்லாம் 'அரசர்" என்கிறார். அவரே என்னை இப்போது மாப்பிள்ளை என்று அழைக்காதபோது..."

"என் அப்பா வேண்டுமானால் உங்களை அரசர்ன்னு கூப்பிடட்டும் சாமி. நீங்கள் அவரை மாமான்னு கூப்பிடுங்கள் என் முன்பாகவாவது."

"கூச்சமாக இருக்கும் மருதாயி எனக்கு."

"ஒரு முறையாவது எனக்காக சாமி."

"ஒன் சித்தப்பாவை ஒன் முன்னால் மாமான்னு கூப்பிடுறேன். பழகியவுடன் அடுத்து ஒன் அப்பாவைக் கூப்பிடுகிறேன்."

"ஆள விடுங்க சாமி. என் சித்தப்பா கிட்ட வம்பு இழுத்து விட்டுறாதீங்க. அவரு முன்னால ஒங்க மகதான் ஒங்கள மாமான்னு கூப்பிடச் சொல்லுச்சின்னு நீங்க நிச்சயம் அவருகிட்ட சொல்லிருவீங்க. சித்தப்பா ஒங்க முன்னால என்னைய ஒன்னும் சொல்லமாட்டாரு. நீங்க போன பிறகு கிறுக்குக் கழுத, அறிவில்லையா?ன்னு திட்டுவாரு. அதனால சித்தப்பா முன்னாலே பயிற்சி எல்லாம் வேணாம். நேரா அப்பாவையே கூப்பிடுங்க. அப்பா என்னைய ஒன்னும் சொல்ல மாட்டார்."

"ஏய் மருதாயி, நான் ஒன்கிட்ட பழகுறதுக்கு முன்னாடியே பயிற்சி எடுத்துக்கிட்டுத்தானே பேசினேன். சரி, சொல்லு என்னைய எப்ப முதல்ல பாத்த?"

"என்னோட பேச ஒங்களுக்குப் பயிற்சி எதுக்கு? வெள்ளச்சி அக்கா ஒங்களுக்கு மனைவியா இருக்கயிலேயே அரண்மனைக்கு நான் ரெண்டு மூணு தடவ வந்திருக்கேன். அப்ப உங்களப் பாத்ததில்ல. அப்போயெல்லாம் சித்தப்பா சின்ன மருது சேர்வக்காரரோடதான் நாங்க

சாயங்கால நேரங்களச் செலவழிப்போம். அவரு சின்னப்பிள்ளயாக மாறி எங்களுக்குச் சமமா விளையாடுவாரு. விளையாடிக் கிட்டே வளரி, சிலம்பம்னு எங்களுக்குக் கத்துக் கொடுப்பாரு. அப்பத்தான் 'அரசி வெள்ளச்சியும் அரசரும் கண்ணத்தா கோயிலுக்கு வர்றாங்க'ன்னு ஒரு நாள் எங்கிட்ட சொன்னாரு. எங்களையும் வர்றீங்களான்னு கேட்டாரு. நானும் என் அண்ணன் குடைக்காது உடையாரும் அன்னைக்கி சித்தப்பா கூட கண்ணாத்தா கோயிலுக்கு வந்தோம். அப்போ எனக்குப் பதினோரு வயசிருக்கும். ஏன் மாமா, அப்ப ஒங்களுக்கு ஒரு இருபது இருபத்தஞ்சு வயசு இருக்கும்ன்னு நினைக்கிறேன். வெள்ளச்சி அக்காவும் அன்னைக்கு ஒங்ககூட வந்திருந்தாங்க. அவ்வளவு அழகு அவங்க. சரி அவ்வளவு அழகானப் பெண்ணோடு வாழ்ந்துட்டு என்னை எப்படி ஒங்களுக்குப் பிடிச்சது?"

"நீ மட்டும் அழகியில்லையா என்ன?"

"அப்புறம் எதுக்கு என்னைய கருவாச்சின்னு கூப்பிடுறீங்க."

"எப்பவாவது தானே?"

"நான் ஒன்னும் ரொம்பக் கருப்புயில்லை."

"ஆமா, ஆடைகளோட இருக்கும்போது மட்டும்தான் கருப்பு. மத்த நேரங்கள்ல கருப்பு இல்லை."

"என்னாயிது? நல்லா பேசிக்கிட்டிருக்கையிலேயே அசிங்கமாப் பேசுவீங்களே."

"அசிங்கமா என்ன பேசினேன்? நீ வேணும்னா இப்ப வா... பார்ப்போம்."

"கடவுளே, ஒங்ககிட்ட நெறத்தப் பத்தி பேசினது தப்பு. என்னப் பேசினாலும் கடைசியில அங்க வந்திருவீங்க."

"எங்க வருவேன்?"

"கையெடுத்துக் கும்பிடுறேன் சாமி. ஆள விடுங்க. நாட்டரசன் கோட்டை கண்ணத்தா கோயில்ல ஒங்கள மொத மொதப் பார்த்ததைப் பத்தி பேசிக்கிட்டிருக்கேன். கையி, காலு அங்கங்க இருக்கட்டும்."

“சரி சொல்லு. கையை மட்டும் ஒன் தோளுல போட்டுக்கிறேன். பெரிய சேர்வைக்காரர் மகள் சொன்னா கேக்கணுமில்ல.”

“ஒங்க பேச்ச நா நம்ப மாட்டேன்.”

“ஒன் அப்பாவும் சித்தப்பாவும் என்மீது எவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கிறாங்க தெரியுமா?”

“அவங்களுக்கு ஒங்களப்பத்தி என்ன தெரியும்? ரொம்ப நல்ல பிள்ளை. அப்பிராணின்னு நினைச்சுக்கிட்டிருக்காங்க. ஒங்களப் பத்தி எனக்குத்தான தெரியும்? இப்ப தேவாலயத்துக்குப் போகலாமான்னு கேக்கத்தானே வந்தீங்க? வெள்ளக்காரச் சாமியாருங்க ஏதோ நீங்க பெரிசா என்கிட்ட கேட்டு என்னையும் தேவாலயத்துக்கு கூட்டிக்கிட்டு வரப் போறீங்கன்னு நினைச்சு தர்பார்ல உக்காந்திருப்பாங்க. நீங்க இங்க வந்து என்ன வேல பண்ணப் பாக்குறீங்கன்னு எனக்குத்தானே தெரியும்.”

“ ஏய் மருதாயி, நான் மறவன்.”

“இந்த விசயத்தில நீங்க பெரிய கள்ளன்.”

“சரி தள்ளி உக்காந்துக்கிறேன். சொல்லு, என்னைய முதல்ல எப்பப் பாத்தே” வெங்கம் தள்ளி உட்கார்ந்தார்.

“மாமா ஒங்கக்கிட்ட எத்தனை முற சொன்னாலும் அலுக்கல எனக்கு. ஒங்களுக்கும் எத்தனை முற கேட்டாலும் சலிக்காது. கடவுள் நமக்கு அப்படி ஒரு முடிச்சப் போட்டிருக்காரு” என்று சொன்னவாறு அவன் மேலே கை போட்டுக் கொண்டாள்.

“மந்திரி பிரதானி மகளுக்குப் பேச சொல்லித் தரணுமா? பேசியே ஆள மயக்கிருவியே?”

“பேச்சு மட்டும்தானா?”ன்னு மருதாயி சிணுங்கினாள் “ராணிக்குப் பேச்சு சாமர்த்தியம் கால்வாசிதான். மத்தது மீதி.”

அடுத்து பேசவிடாமல் வெங்கம் பெரிய உடையணத் தேவரின் வாயை மருதாயி இரு கைகளாலும் பொத்தினாள்.

“ஒங்கள முடிஞ்சு வச்சுக்க எத்தனப் பேரு ஆசப் பட்டிருப்பாங்க. கண்ணத்தா கோயில்ல அன்னிக்கு அவ்வளவுக் கூட்டம். சித்திர மாச வெயிலு கொளுத்துச்சு. நாட்டரசன் கோட்ட கம்மாயில தண்ணீக்

கொஞ்சமாத்தான இருந்துச்சு. அந்தக் கம்மாயில, கை, கால் கழுவிட்டு மாவிளக்கு எடுத்துக்கிட்டு வந்தோம். எங்க அண்ணனுக்கு ரெண்டு வருசத்துக்கு முந்தி கண்ணு வலியும் எனக்கு வகுத்த வலியும் இருந்துச்சு. அதனால அன்னிக்கு எங்க ரெண்டு பேரையும் கோயில்ல அம்மன் முன்னால படுக்க வச்சாங்க. என் வகுத்தில மாவிளக்குப் போட்டாங்க."

"அப்படியா? மா விளக்குன்னா என்னா?"

"ஆகா, பச்சப்பிள்ள. கொஞ்சம் ஒரசாம கேக்குறீங்களா."

"தெரியாதுன்னுதான கேக்கிறேன்."

"பச்சரிசி மாவு இடிச்சி, சலிச்சு அதுல கரும்புப்பாலு ஊத்தி, ஏலக்கா போட்டு, மாவு மாதிரி ஆக்கிருவாங்க. சின்னப் பந்து மாதிரி மாவ உருட்டி அத ஒரு விளக்கு மாதிரி செய்வாங்க. அந்த விளக்கில் நெய் ஊத்தி திரி போட்டு விளக்கு ஏத்துவாங்க. அந்த விளக்குக்குப் பேரு மா விளக்கு. போதுமா?"

"அப்போ அந்த மா விளக்குக்கும் உன் வகுத்துக்கும் வித்தியாசம் இருந்திருக்காதே?"

"ஆரம்பிச்சிட்டீங்களா? அப்ப நா இவ்வளவு நிறமில்ல."

"இப்ப ஒன் நிறம் கூடிருச்சா?"

"ஆமா, ஒங்ககூட இருக்கிறதுனால. சாதாரணப் பெண்ணா இருந்த என்னய அரசர் ஏத்துக்கிட்டீங்கயில்ல? நிறம் கூடிருச்சு சந்தோசத்துல" மருதாயி கண்ணீர் சிந்தினாள்.

"ஒன்கிட்ட கெட்ட பழக்கம்டி இது? கண்ணுக்குள்ளேயே குளத்த வச்சிருக்கியா? சொல்ல வந்ததச் சொல்லு."

"என் கண்ணீர் உப்புக் கரிக்காது. சந்தோசத்தில அழுகிறேன்."

"கண்ணுக்குப் பக்கத்திலேயே தண்ணிக்குடம் வச்சிருக்கிறாய் போல."

வெங்கம் தனது மேல் துண்டால் மருதாயியின் கண்களைத் துடைத்தான்.

"மாமா, கண் மை அழியாமத் துடையுங்க."

“அப்போ, கண் மை போடுற பொம்பளக அடிக்கடி அழுகக் கூடாது.”

“மாமா, நா கண் மை போட்டாலும் நீங்க என்னை நல்லா வச்சிக்கிட்டிருப்பத நெனைச்சு அப்ப அப்ப நான் கண்ணீர் விட்டாலும் கண் மை அழியாது.”

“எப்படிச் சொல்லுற? புதுசாயிருக்கு?”

“ஒங்களுக்கு ஒன்னுமே தெரியாது. அதாவது மனசு கஷ்டப்பட்டு அழுதா கண்ணீர் கண்ணோட உள்பக்க ஓரத்துல வரும். மனு நீதிச் சோழன் மகன், தேர்க்கால்ல பசு மாட்டு கன்னுக்குட்டி மேல ஏத்திக் கொன்னான்ல. அப்ப அந்தத் தாய்ப்பசு மனு அரசன் கிட்ட நீதி கேட்டப்ப அந்தப் பசு மாட்டின் கடைக்கண் ஓரத்தில் கண்ணீர் இருந்ததா சிலப்பதிகாரத்தில கண்ணகி சொல்லுறா”

“ஆமா. பாண்டியன் அரசவையில தன்னை அறிமுகப்படுத்தயில கண்ணகி சொல்லுவா. கண் ஓரத்தில் கண்ணீரோடு அரசனிடம் பசு வந்ததுன்னு.”

“வருத்தத்துல கண்ணீர் வந்தா வெளிப்பக்க கண்ணு ஓரத்துல வரும். சந்தோசத்துல கண்ணீர் வந்தா உள்பக்க கண்ணு ஓரத்துல வரும்.”

“அப்படியா, அப்ப கண் மை அழியாதா?”

“ஆமா, அப்படித்தான்.”

“விவரமான ஆளாயிருக்கயே. பெரிய சேர்வக்காரர் மகள்ல. இதுகூட இல்லாமலா இருக்கும். சரி. நம்ம இடத்துக்கு வர மாட்டீங்கிறீயே? நா அன்னைக்கு வெள்ளச்சியோட வந்தேன். அப்புறம் சொல்லு.”

“நீங்க சொல்லுங்க.”

“ஒன் சித்தப்பா என்னிடம் வந்து வணக்கம் சொன்னார். வெள்ளச்சியப் பார்த்து, “ஆத்தா, நல்லாயிருக்கியான்னு கேட்டு அவளுக்கும் வணக்கம் சொன்னார்.”

“அப்புறம்?”

“வேலு நாச்சியார் ஆத்தா வர்றேன்னு சொல்லியிருந்தாங்களே, அவங்க வரலையான்னு ஒங்க சித்தப்பா கேட்டாரு. அப்ப வெள்ளச்சி சொல்லுச்சு. “ஆத்தாவுக்கு கொஞ்சம் கால் வலி. நேத்து பூராம் மல்லிகச் செடிங்களுக்கு களை எடுத்தாங்க. அந்த வேலய மட்டும் யாரு கிட்டயும் விடமாட்டேங்கிறாங்க. அவங்க கை ராசிக்குப் பூ அப்படிப் பூக்குது. அதுகளப் பறிச்சி மாலையாக் கட்டி எனக்குத் தலையில வச்சிக்கக் கொடுத்தாங்க. அம்மனுக்கு ஒரு மல்லிகைப்பூ மாலை போடுன்னு சொல்லி இந்த மாலையைக் கொடுத்து விட்டாங்கன்னு வெள்ளச்சி சொல்லுச்சு.”

“ஆமா. அக்கா அப்படித்தான் சொன்னாங்க. எனக்கு அந்த சமயம் அவ்வளவு வெவரம் தெரியாதா? யார்கிட்ட எப்படிப் பேசுறதுன்னு... வெள்ளச்சி அக்கா வெள்ளையா அழகா இருந்தாங்க. அவங்களத் தொட்டுப் பாக்கணும்னு ஆசயா இருந்துச்சு. நா அவங்களப் பாக்குறத அக்கா பாத்துட்டு என்னைப் பக்கத்தில கூப்பிட்டாங்க.”

“என் பெயர் ஒங்களுக்குத் தெரியுமா” ன்னு அக்காகிட்டக் கேட்டேன்.

“அதுக்கு அக்கா, ஏன் தெரியாதுன்னு கேட்டுட்டு நான் யார்ன்னு சொல்லு பார்ப்போம்ன்னு சொன்னாங்க.”

“நீங்க எங்க சிவகங்க ராணி. வெள்ளச்சி அக்காள்னேன்.”

அக்கா சிரிச்சுக்கிட்டு என்னைக் கட்டிப்பிடிச்சிட்டாங்க. அவங்க வச்சிருந்த மல்லிகப் பூ வாசம் ரொம்ப நல்லாயிருந்துச்சு.”ரொம்ப வாசனையாயிருக்கீங்க அக்கா. இப்படியே ஒங்களக் கட்டிப்பிடிச்சுக் கிட்டே இருக்கலாம்போல இருக்குன்னு அவங்க காதுல சொன்னேன்.”

அதுக்கு அவங்க “இவரும் உன்னை மாதிரியேதான் சொல் லுறாரு”ன்னு சொன்னாங்க. நான் அப்ப ஒங்களைப் பார்த்தேன். எங்க ரெண்டு பேரையும் பார்த்து சிரிச்சிக்கிட்டிருந்தீங்க.

எனக்கு மல்லிகப்பூ வாசம் ரொம்பப் புடிச்சிப்போச்சு.

“அக்கா எனக்குக் கொஞ்சம் இந்த பூவைத் தர்றீங்களான்னு கேட்டேன்.

அக்கா உடனே “நீ இங்க வருவேன்னு தெரியாது மருதாயி. இல்லைன்னா ஒனக்குத் தனியா ஆத்தாகிட்ட கேட்டு வாங்கிக்குனு

வந்திருப்பேன். பரவாயில்ல, நா நிறைய வச்சிருக்கேன்னு சொல்லி, தலையில இருந்தத எடுத்து பாதிப் பூச்சரத்த பல்லால கடிச்சாங்க. பாதிய அவங்க தலையில வச்சிக்கிட்டு மீதிய எனக்கு வச்சாங்க.

“மருதாயி, அரண்மனைக்கு வா”ன்னு கூப்பிட்டாங்க. நா பேசாம இருந்தேன்.

“சரி வர்றேன் ராணின்னு சொல்லு கழுதை”ன்னு சித்தப்பா சின்ன மருது என் காதுல சொன்னாரு. சித்தப்பா என் காதுல சொன்னத வெள்ளச்சி அக்கா பாத்துட்டாங்க.

“சித்தப்பா, அவ என்னைய ராணின்னு கூப்பிட வேணாம். அக்கான்னே கூப்பிடட்டும்.”

“இப்ப இவ்வளவு வாய் பேசுற. அப்ப நீ ரொம்ப அப்பிராணியாயிருந்த?”

“என்ன மாமா சொல்றீங்க?”

“இப்பயிருக்கிற மாதிரி அப்பயில்ல. சின்னவளா இருந்த. கொஞ்சமா தலை முடியிருந்துச்சு. கை கால் எல்லாம் சின்னச் சின்னதா இருந்துச்சு.”

“போதும், நிறுத்துங்க. அடுத்து என்ன சொல்லுவீங்கன்னு தெரியும்.”

“ஏய், அந்த நேரம் ஒனக்கு அறிவும் சின்னதா இருந்துச்சுன்னு சொல்ல வந்தேன். என்னைய நம்பு, எப்பவுமே தப்பா பேசுவேன்னு நினைக்காதே.”

“நீங்கதானே? உண்மைதான். எப்பவாவது தப்பா பேசுகிற ஆளு நீங்க. ஆனா எப்பவுமே தப்பா நடக்கிற ஆளு. வெளியில இருந்து பாக்கிறவங்களுக்கு நல்ல அரசர், தான தர்மம் பண்ணுறவர், பெரியவங்களுக்கு மரியாத செய்யுறவர்ன்னு பேரு, இங்க வந்து பார்த்தா அத்தனையும் தலைகீழ். நானு ஒங்களப் பத்தி எங்க அப்பா சித்தப்பாகிட்ட சொன்னா யாராவது நம்புவாங்களா? இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு? அதுவும் மாமனார்களுக்கு முன்னால முகத்த அப்பிராணி மாதிரி வச்சிக்கிறது. பண்ணுறதெல்லாம் சுத்த மோசம்.”

“சரி, நான் மோசமான ஆளு. கெட்டவன்தான். விடு, நா கிளம்புறேன்.”

“சும்மாயிருந்தவள அத இதப் பேசி, அங்கயிங்கத் தொட்டு உசுப்பேத்திட்டு எங்க போறீங்க, இருங்க. கிளம்புனீங்கன்னா அவ்வளவுதான்.”

“நான்தான் கெட்டவன்ல.”

“ஆமா நீங்க கெட்டவரு, நா ஒங்களவிட கெட்டவள்னு வச்சுக்கங்க.”

“என்னடி வச்சுக்க அது இதுன்னு அசிங்க அசிங்கமா பேசுற?”

“ஆமா நான் அசிங்க அசிங்கமா பேசுறேன். நீங்க அசிங்க அசிங்கமா நடந்துக்கிறீங்க? இருங்க கதவப் பூட்டிட்டு வந்துற்றேன்.”

“வேணாம், யாரும் வரமாட்டாங்க”

“சரிதான், ஒங்களப் பத்தி இங்க வேல பாக்கிற எல்லாப் பொம்பளகளுக்கும் நல்லாத் தெரியும்ல. பகல் நேரத்தில் தர்பார்லேயிருந்து பாதியில கிளம்பி வந்தீங்கன்னா போதும். இங்கயிருக்கிற பொம்பளகளுக்குச் சிரிப்பும் கும்மாளமும்தான். நீங்க கிளம்பிப் போனவுடனேயே “ஆத்தா குளிக்க தண்ணித் தயார் பண்ணவான்னு சிரிச்சுக்கிட்டே கேக்குறாளுங்க.”

அறைக்கு வெளியே இருந்த வேலைக்காரப் பெண் திரைச்சீலையை மெதுவாக மூடினாள். சர்க்கரையும், புளியும் சேர்த்துக் கரைத்த பானகத்தை வெள்ளி தம்பளர்களில் எடுத்துக் கொண்டு தர்பாருக்கு விரைந்தாள். வெள்ளைக்காரப் பாதிரியாரும் அவருடன் வந்தவர்களும் பானகத்தை வாங்கிக் கொண்டனர். “ராஜா கிட்ட நாங்க வந்து காத்திருப்பதைச் சொல்லியாச்சாமா”ன்னு வேலைக்காரியிடம் பாதிரியார் கேட்டார்.

“தோத்திரம் சாமி.”

“தோத்திரம்.”

“இதக் குடிச்சிடுங்க சாமி, அப்புறம் அப்படியே எதித்தாப்பல இருக்கிற மல்லிகத் தோட்டதுல கொஞ்சம் உலாத்திக்கிட்டிருங்க. ராஜா

குளிச்சிக்கிட்டிருக்காரு. வந்திருவாரு" என்றாள் வாயை மூடிச் சிரித்தபடி. ராஜா குளிப்பதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? என்று பாதிரியாருக்கு விளங்கவில்லை.

.

19

தை மாதம் முதல் நாள். விருப்பாச்சி ஜமீன்தார் கோபால் நாயக்கர் மாளிகை முன்பு ஒரு பல்லக்குத் தயாராக இருந்தது. அந்தப் பல்லக்கில் ஒருவர் மட்டும் உட்காரலாம். பத்து ஆயுதம் தாங்கிய காவலர்கள் வீட்டுக்கு வெளியே தயார் நிலையில் இருந்தனர். இரண்டு நாட்கள் வெளியில் தங்குவதற்குத் தேவையான பொருட்களை ஜமீன்தாரின் வேலையாட்கள் ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். கோபால் நாயக்கர் எங்குப் போகிறார் என்று அவருக்கு மிக நெருக்கமானவர்களுக்கு மட்டும்தான் தெரியும். இரண்டு நாள் வெளியூர்ப் பயணம் என்று மட்டும்தான் பல்லக்குத் தூக்குபவர்களுக்கும், உடன்

வரும் சிப்பாய்களுக்கும் தெரியும். எங்குப் போகிறார் என கிளம்பும்போது தான் அவர்களுக்குச் சொல்லப்படும்.

அதிகாலையில் எழுந்த கோபால் நாயக்கர் குளித்துத் தயாரானார். குளியல் அறையிலிருந்து இடுப்பில் ஒரு துணியை மட்டும் கட்டிக்கொண்டு, மாட்டுத் தொழுவத்திற்கு வந்தார். மாட்டுத் தொழுவத்தில் நாயக்கரின் மனைவி பங்காரு கையில் சாம்பிராணிக் கரண்டியுடன் நின்றுகொண்டிருந்தாள். தொழுவத்தில் ஐம்பது மாடுகள் இருந்தன. அதில் லட்சுமி என்ற காராம்பசு கோபால் நாயக்கருக்கு மிகவும் பிடித்தமானது. இப்போது மூன்று ஈத்து ஈன்றுவிட்டது. போட்ட கன்றுக் குட்டிகள் சொல்லி வைத்தாற்போல் மூன்றுமே காராம்பசுக்கள். கண், நாக்கு, உடல்,வால்,பால் மடி என்று எல்லாம் கருப்பு நிறத்தில் உள்ள இந்த லட்சுமி காராம்பசு ரொம்பவும் சாதுவும் கூட. சாதுவான பசுக்கள்கூட கன்று போட்ட சமயத்தில் ஆக்ரோசமாக இருக்கும். கன்றுக்குட்டியைத் தொட்டால் முட்டுவதற்குச் சீறிப்பாயும். லட்சுமி கன்று போட்ட சமயத்திலும் மூர்க்கம் காண்பிக்காது. கன்றுக்குட்டியிடம் யாராவது போனால் லேசாகத் திரும்பிப் பார்க்கும். அவ்வளவுதான்.

“பங்காரு, லட்சுமி ரெண்டு பேரும் தயாரா இருக்கீங்களா?”

பெரும்பாலும் அதிகாலையில் இதுதான் கோபால் நாயக்கர் பேசும் முதல் வார்த்தையாக இருக்கும்.

“வாங்க நாயக்கரே, ரெண்டு பேரும் தயராயிருக்கோம்” என்றாள் பங்காரு.

கோபால் நாயக்கர் லட்சுமி பசுவை மூன்று முறை வலம் வந்தார். கழுத்திலும், முதுகிலும் தட்டிக் கொடுத்தார். சிறுமலையிலிருந்து வந்த ஒரு சீப்பு வாழைப்பழத்தை கோபால் நாயக்கரிடம் பங்காரு நீட்டினாள். நாயக்கர் அதை வாங்கி ஒவ்வொரு பழமாக லட்சுமியிடம் கொடுத்தார்.

“டேய் தம்புடுகளா, கன்னுக்குட்டிய அவுத்துவுடுங்கடா” என்றார் ஜமீன்தார். அதுவரை முகம் தெரியாமல் இருட்டுக்குள் இருந்த ஆட்களில் ஒருவன் ஓடிவந்து கட்டிப் போட்டிருந்த கன்றுக்குட்டியை அவிழ்த்துவிட்டான்.

கன்றுக்குட்டி குதித்து ஓடி வந்து தாயின் மடியில் வாய் வைத்தது. லட்சுமி பசு உடலை நெளித்து கன்றுக்குட்டிக்குப் பால் கொடுக்க ஏதுவாக மடியைக் காண்பித்தது. கன்றுக்குட்டி நான்கு காம்பிலும் வேகவேகமாய்

வாய் வைத்துக் குடித்துவிட்டு மடியில் முட்டியது. லட்சுமி பசு திரும்பிப் பார்த்தது. பின் வாலைத் தூக்கியது. நாயக்கர் கைகளில் பிடித்தக் கோமியம் இளஞ்சூட்டில் இருந்தது. கோமியத்தை நாயக்கர் தன் தலையிலும் பங்காரு தலையிலும் தெளித்தார். லட்சுமியின் பின்புறத்தைத் தொட்டு வணங்கினார். அடுத்து லட்சுமி சாணி போடும் என்பதைத் தெரிந்திருந்த பங்காரு அம்மாள் கைகளை நீட்டி, சாணம் பூமியில் விழுவதற்கு முன்பே, தங்க வளையல் அணிந்த கைகளில் தாங்கினாள். அதை பவ்யமாக ஒரு வேலைக்காரன் வாங்கிக் கொண்டு ஓடினான்.

"இன்னைக்கு நீ எந்தக் கோயிலுக்குப் போகிறாய்? தாடிக்கொம்புப் பக்கம் கொஞ்ச நாட்களுக்குப் போக வேண்டாம்" என்றார் நாயக்கர்.

"சரி" என்ற பங்காருவிடம், "ஏன்னு கேக்க மாட்டாயா?" என்றார் நாயக்கர்.

"பாவா, நீங்க சொன்னீங்கன்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும். காரணமில்லாம எதுவும் சொல்ல மாட்டீங்க, செய்யவும் மாட்டீங்கன்னு எனக்கு மட்டுமில்ல, ஒங்ககூட இருக்கிற அத்தனைச் சேக்காளிங்களுக்கும் தெரியும். பேருதான இத்தனூண்டு விருப்பாச்சிப் பாளையக்காரர். ஆனானப்பட்ட வேலு நாச்சியா அக்கா, பெரிய மருது சேர்வக்காரரு, உசிலம்பட்டி கள்ளருங்க, மேலூர் அம்பலக்காரங்க, திப்பு சுல்தானு, தேளி யாதுல நாயக்கரு, அப்புறம் சிவகங்கை அரசர் வெங்கம் தம்புடு, எல்லாரும் ஒங்கள எப்படி மதிக்கிறாங்கன்னு நேரடியா பாத்தவள்ல நானு?"

"ஏன் வெள்ளக்காரங்க, ஆற்காடு நவாப், எட்டயபுரம் ஜமீனு, திருவிதாங்கூர் ராஜா, புதுக்கோட்டை தொண்டமான் எல்லாத்தையும் விட்டுட்ட?"

"பாவா, எல்லாருக்கும் புடிச்ச மாதிரி நடக்க முடியுமா? ஒன்னு சொன்னா என்னையக் கேலி பண்ணக்கூடாது. பெரிய அறிவாளி மாதிரி பேசுறேன்னு கிண்டல் பண்ணக் கூடாது."

"சரி சொல்லு. கேலி பண்ணுறதா, கிண்டல் பண்ணுறதான்னு நீ சொல்லுறதக் கேட்ட பிறகு சொல்லுறேன்."

"ஒங்களத் தெரிஞ்சவங்க ஒன்னு ஒங்களுக்கு ரொம்ப நெருக்கமானவங்களா இருப்பாங்க. இல்ல ஒங்களுக்குப் ரொம்பப்

பிடிக்காதவங்களா இருப்பாங்க. பிரியம் வச்சா அவங்களுக்காக எது வேணாலும் செய்வீங்க, புடிக்கலைன்னாலும் எது வேணாலும் செய்வீங்க."

"பங்காருகூட ரொம்ப விவரமாத்தான் இருக்கே. நீ சொல்லுறதெல்லாம் இருவது, இருவத்தஞ்சு வருசத்துக்கு முந்தி. இப்ப வயசாயிருச்சில்ல? நா யாருக்குப் பெரிசா உதவ முடியும்?"

"நீங்க ஒன்னும் முடியாத ஆள்ன்னா, இன்னிக்கும் இத்தன கூட்டம் வருமா? ஒங்களத் தேடி வர்ற கூட்டம் எங்கக் குறைஞ்சிருக்கு? என்ன உதவிய நீங்க நிறுத்தியிருக்கீங்க?"

"சரியாத்தான் பேசுற, நேரமாச்சு. நா இன்னைக்குப் பழனிவரை போய்ட்டு வரணும். நான் திரும்பி வர ரெண்டு நாளாகும்."

"சரி பாவா, கை கால் கழுவிட்டுச் சாப்பிட வாங்க.மனப்பலகையப் போட்டுவைக்கிறேன்" என்று சொல்லி ஜமீன்தாருக்கு முன்னால் பங்காரு நடந்தாள். ஜமீன்தார் பங்காருவின் முதுகைப் பார்த்தார். பங்காருவுக்குத் தன்னை ஜமீன்தார் உற்றுப் பார்க்கிறார் என்று உள்ளுணர்வு சொல்லியது போல், திடீரெனத் திரும்பிப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்தபடியே ஜமீன்தார் அவளின் முதுகை உற்றுப் பார்த்ததைப் பார்த்து விட்டாள்.

"பாவா, நீங்க முன்னால போங்க. பார்வையும் நடவடிக்கையும் பாரு. வயசாச்சாம்ல" என்றாள் அவருக்கு மட்டும் கேட்கும் குரலில்.

"என் பாரியாளப் பாக்குறதுக்குக் கூட உரிமையில்லையா?"

பங்காரு சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் இல்லை என்பதை உறுதி செய்துவிட்டு அவரது மீசையை முறுக்கிவிட்டு அவரது தொந்தியில் வலிக்காமல் குத்தினாள். வலிப்பதுபோல ஜமீன்தார் நடித்துச் சிரித்தார்.

"பங்காரு, வக்கீலு வந்திருப்பாரு. அவருக்கும் சாப்பாடு தயார் பண்ணு. கை, கால் கழுவிட்டு வந்துர்றேன்" என்றார்.

ஜமீன்தார் சாப்பிட வரும்போது, வக்கீல் காத்திருந்தார். வேலையாட்கள் பாயை விரித்துவிட்டனர். அதில் ஜமீன்தார் உட்காரும் மரப்பலகையை வைத்தனர். மரப்பலகையில் உட்கார்ந்த ஜமீன்தார் வக்கீலைப் பார்த்தார். வக்கீல் பாயில் உட்கார்ந்தார்.

“என்ன கூழு பங்காரு? வக்கீல் சாமிக்கு என்ன இருக்கு?” என்றார் மனைவியிடம்.

“ஒங்க ரெண்டு பேருக்கும் கம்பங்கூழு, பசு மோரு, மொளகா ஊறுகா, ஆவக்கா ஊறுகா இருக்கு” என்றாள் பங்காரு.

“ஜமீன்தார், கார சாரமாதான் சாப்பாடே?”

“ஆமா சாமி, காரசாரத்த விட முடியல. அதனால பிரச்சனைகளும் நம்மள விடமாட்டீங்குது. எல்லாரையும்போல நமக்கென்னான்னு இருக்க முடியல.”

“பாவா, சாப்பிடயில கண்டத நினைக்காதீங்க, அப்புறம் சாப்பாட்ட பாதியில வச்சிட்டுக் கிளம்பிடுவீங்க.”

“இல்ல பங்காரு, இன்னைக்குக் கொஞ்சம் வக்கீல் சாமிகிட்ட பேசணும். இவரத்தான் கலெக்டர் ஹார்டிஞ்ச்கிட்ட வக்கீலா அனுப்பலாம்னு இருக்கேன். நா கொஞ்சம் விளக்கமா சொன்னாத்தான வக்கீலு சரியாப் புரிஞ்சிக்கிட்டு அதக் கலெக்டர் கிட்ட பேச முடியும்?”

“பாவா நானும் கூட இருக்கவா?”

“நீ வெளியே போனாலும் இங்க என்ன பேசிக்கிறோம்னு கேட்டுக்கிட்டுத்தான இருப்ப? பேசாம அதுக்கு இங்கேயே இருந்திரு” என்றார்.

“பாவா, பாத்தீங்களா? நா ஒங்கப் பேச்சுக்கு இடைஞ்சலா இருக்கனான்னு கேட்டா, நா ஒட்டுக் கேக்கிறதா சொல்றீங்களே?”

“இல்ல பங்காரு. நீயும் கூட இரு. நான் பழைய விசயங்களப் பத்தியும் பேச வேண்டியிருக்கு. நீதான் ஹைதர் அலி காலத்துப் பழசையும் மறக்காம நாபகம் வச்சிருப்பயே?”

“பாவா, என்னையப் பாராட்டித்தானப் பேசுறீங்க.”

“ஆமா ஆமா. வக்கீல் அய்யருக்குக் கூழு எடுபடலைன்னு நினைக்கிறேன். ஏதாவது பழம், பொரிவிளங்காய் உருண்ட இருந்தாக் கொடு.”

“ஆமா ஜமீன்தார், கூழு எனக்கு இழுக்கல. ஒங்கள மாதிரி முரட்டு வேல செய்யுறவங்களுக்குத்தான் இது லாயக்கு. நா வேதம்

சொல்லிட்டுப் பாராயணம் பண்ணுறவன்."

"உண்மைதான் சாமி. ஒங்களுக்குத் தான் உருது, மராத்தி, இங்கிலீஸ் தெரிஞ்சிருக்கு. ஒங்கள மாதிரி ஒரு ஆளு நமக்கு ரொம்பத் தேவையா இருக்கே."

"அப்படியெல்லம் பெரிசா ஒன்னும் இல்ல, நாயக்கர்வாள். நீங்க பண்ணுற வேலைய எடுத்துச் சொல்லுற என்னைப் புகழ்ந்தீங்கன்னா, நான் சொல்லக்கூடிய அளவுத் தகுதியான வேல செய்யுற ஒங்கள எந்த அளவு புகழலாம்? சொல்லுங்க. இந்தப் பகுதியில ஏறக்குறைய ஐம்பது வருசமா ஒங்களது தலையீடு இல்லாம என்ன நடந்திருக்கு? சுத்துப்பட்டு இருநூறு மைல்ல ஒரு லட்சம் நாயக்கருங்க இருந்தாலும் நாயக்கர்ன்னு சொன்னாலே போதுமே, ஒங்க முழுப்பேருகூட சொல்ல வேண்டியதில்லை. நாயக்கருன்னா அது ஒங்களைத்தான் குறிக்கும்னு எல்லாருக்கும் தெரியுமே."

"ஆமா பாவா, ஒங்க கூட்டாளி மருது அண்ணனையும், அப்படித்தான் சொல்லுவாங்கன்னு நீங்க சொல்லியிருக்கீங்க. அகம்படியார் ஜாதியில எத்தன சனம் இருந்தாலும் வெறுமனே சேர்வக்காரர்ன்னு சொன்னா அது சிவகங்கை மந்திரி பிரதானி பெரிய மருது சேர்வைக்காரரைத்தான் குறிக்கும்னு சொல்லுவீங்க. நம்ம கோயில்னு சொன்னா, 'ஸ்ரீரங்க'த்த சொல்லுறதப் போல."

"ஆமா நாயக்கர்வாள், எங்க சம்பிரதாயத்துல 'கோயில்'ன்னு பொதுவாச் சொன்னாலும் அது சிதம்பரம் கோயிலத்தானே குறிக்கும்."

"பரவாயில்ல, பங்காரு. ஒரு நிமிசத்தில சிவகங்க, ஸ்ரீரங்கம், சிதம்பரம்ன்னு ஒரு சுத்து சுத்தி வந்திட்டோம். எனக்குக் கை கழுவ வட்டியக் கொடு" என்றார் நாயக்கர். பங்காரு கொடுத்த தண்ணீரில் கை கழுவினார். கை கழுவியத் தண்ணீர் இருந்த வட்டியச் சட்டியை வேலக்காரனை அழைத்து பங்காரு கொடுத்து விட்டாள். அவனிடம் "கொஞ்ச நேரத்திற்கு யாரும் வரவேணாம்பா" என்றாள்.

அந்த அறையில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. நாயக்கர் மௌனத்தைக் கலைத்தார்.

"பங்காரு, நீ என் கூடவே இருக்கிறவ. உனக்குத் தெரியாத விசயங்கள் இல்ல. இப்ப நாம பெரும் பிரச்சனையில இருக்கோம்.

திண்டுக்கல் கலெக்டர் ஹார்டிஞ்சுக்கு ஏனோ என்னப் பிடிக்கல."

"பாவா, ஒங்கள எப்படி அவருக்குப் பிடிக்கும்? வருசத்துக்கு ஆயிரத்து ஐநூறு ரூவா சம்பளம் வாங்கிக்கிட்டு, ஊர் சுத்திக்கிட்டு திரியற கலெக்டருக்கு வேறென்ன வேல? தாசில்தாருக நாலு பேருக்கு வருசத்துக்கு அம்பது ரூபாவச் சம்பளமா குடுத்திட்டு யார் யார் வெள்ளக்காரங்களுக்கு எதிரியாயிருக்காங்கன்னு பாத்து பாத்து கவர்னருக்குப் புகார் பண்ணுறதுதானே கலெக்டர் வேல?"

"இல்ல பங்காரு. வெள்ளக்காரங்களும், ஆற்காடு நவாப்பும் இப்போ ஒன்னு மண்ணா ஆயிட்டாங்க. புதுசு புதுசா சட்டம் கொண்டு வர்றாங்க."

"மதுரை விசுவநாத நாயக்கரும், தளவாய் அரியநாத முதலி யாரும் தீர யோசிச்சு இந்தப் பகுதிக்குப் பாளைய முறையக் கொண்டு வந்தாங்க. திருச்சிக்குத் தெக்கே திருநெல்வேலி வரை யுள்ள பகுதிங்களை எழுபத்தி ரெண்டு பாளையமாப் பிரிச்சாங்க. பாளையக்காரங்க படை பலம் வச்சிக்கிரலாம். குடி படைக கிட்ட வரி வசூல் பண்ணி கொஞ்சத்த மதுர நாயக்கருக்கு கப்பமாக் கட்டிட்டு மீதிய ஜமீன்தார்களே வச்சிக்கிறலாம்னு மதுரை விசுவநாத நாயக்கர் அறிவிச்சாரு. ஜமீன்தாருங்ககிட்ட இருக்கிற பணத்த வச்சு ஒரு படைய பராமரிச்சாங்க. நாயக்க அரசருக்குப் படை தேவைன்னா வீரர்கள அனுப்புவாங்க. மதுரை நாயக்க அரசரைப் பாதுகாக்குற கவசம் மாதிரி ஜமீன்தாருங்க நாங்க இருந்தோம். அது வெள்ளக்காரனுக்குப் பிடிக்கல. ஆற்காடு நவாப்பு, கடைசி நாயக்க அரசர் குமார திருமலைய ஊர் ஊரா விரட்டிவிட்டாரு. அந்த சமயத்தில மருது சேர்வக்காரரு மதுரை நாயக்கருக்கு வெள்ளக்குறிச்சியில அடைக்கலம் கொடுத்தாரு."

"இதே வெள்ளக்குறிச்சியில கடைசி நாயக்க அரசர் குமார திருமலையோட அப்பா விஜயகுமார நாயக்கருக்கு சிவகங்கை முதல் அரசர் சசிவர்ணத் தேவர் அடைக்கலம் கொடுத்த மாதிரியில்ல பாவா."

"ஆமா, சிவகங்கைச் சீமை நன்றி உணர்ச்சிக்குப் பேர் போனது. சசிவர்ணத் தேவர், நாயக்கர் அரசர் விஜய குமார நாயக்கருக்கு வெள்ளக்குறிச்சியிலே அடைக்கலம் கொடுத்த மாதிரியே மருது சேர்வைக்காரருக விஜயகுமார நாயக்கர் மகன் குமார திருமலை நாயக்கருக்கு அடைக்கலம் கொடுத்தாங்க. ஏனோ திருமலை நாயக்கருக்கு வெள்ளக்குறிச்சியில தங்க விருப்பம் இல்லை. எரசக்க நாயக்கனூர்,

சாப்ட்டூர், போடி ஜமீன்தாருங்க பேச்சக் கேட்டுக்கிட்ட குமார திருமலை நாயக்கர் கண்டமனூர்ல வந்து தங்கினாரு. அப்புறம் அங்கேயே இறந்தும் போயிட்டாரு. ஹம்பியிலிருந்து நம்ம ஜனங்கள காப்பாத்த வந்த குமார கம்பணின் வாரிசுங்க திருச்சி, மதுரைன்னு தலைநகர வச்சிக்கிட்டு ஆட்சி செஞ்சிட்டு இருநூறு வருச காலத்துல எல்லாம் இழந்துட்டாங்க. ஆண்ட பரம்பரை எல்லாம், வீழ்ந்துதானே போவும்? குமார கம்பணன், கிருஷ்ண தேவராயர், திருமலை நாயக்கர்ன்னு பேரும் புகழுமாயிருந்த நாயக்கர் வம்சத்தின் கடைசி அரசன் குமார திருமலை ஏதோ ஒரு மூலையில இருக்கிற கண்டமனூர்ல செத்துப்போனது பெரிய சோகம். நானும் மத்த ஜமீன்தாரர்களும் போயி அவர நல்லடக்கம் பண்ணினோம். அத மோப்பம் பிடிச்ச ஆற்காடு நவாப் எங்கமேல விரோதமாயிட்டான். எங்களைக் கூப்பிட்டு "ஏன் கண்டமனூர் போனீங்க? அங்க என்ன கூட்டம் போட்டுப் பேசினீங்கன்னு?" கேட்டாரு."

"பாவா, இதுகூடவா இந்த நவாப்புக்குத் தெரியாது? இந்த எழுபத்தி ரெண்டு ஜமீன்தாருங்களும் மதுர நாயக்க அரசருக்குச் சொந்தக்காரங்கதானே? சொந்தக்கார நாயக்கர் செத்தா எல்லாரும் போகணும் தானே?"

"இல்ல பங்காரு. உன்னயை மாதிரியேதான் நவாப்பும் தப்பா புரிஞ்சிக்கிட்டாரு. எங்கள அவர் இப்படித்தான் கேட்டாரு. குமார பாங்காரு ஒங்க பழைய ராஜான்னா எழுபத்தி ரெண்டு பாளையக்காரங்களும்ல கண்டமனூர் போயிருக்கணும். நீங்க நாலுபேரு மட்டும் போனீங்கன்னா என்ன அர்த்தம்? மத்தவங்கள்லாம் சொந்தக்கார சாவுன்னு நினைக்கல. ஒங்களுக்கு மட்டும் என்ன அக்கறைன்னு கேட்டாரு. எழுபத்தி ரெண்டும் நாயக்கர் ஜமீன் இல்லைன்னு, நா அவருகிட்ட சொன்னேன். "

"சரி பாவா, சொல்லுங்க. நா இத்தன நாளு ஒங்க கூடவேதான் இருக்கேன். இது தெரியாமப் போச்சே."

"நா இன்னும் முழுசா சொல்லவே ஆரம்பிக்கல பங்காரு... சரி விடு, மூஞ்சியத் தூக்காத."

"இல்ல பாவா, சாதாரணமாத்தான் இருக்கேன்."

"நீ சாதாரணமா இருக்கியா? கோவமா இருக்கயான்னு தெரியாதா எனக்கு?"

“நாயக்கர்வாள், ஒங்களயும் பங்காரு அம்மாவயும் பாக்கையில எனக்குப் பெருமாளயும், ஆண்டாளயும் பாத்த மாதிரியிருக்கு. அவ்வளவு மனப் பொருத்தம், ஒங்களுக்குள்ள.”

“சாமி, இப்ப பங்காரு அம்மா முகத்தப் பாருங்க, இன்னைக்கி நீங்க ஒங்க வீட்டுக்குப் போகையில வண்டி முழுக்கப் பழங்களும், தானியமும் கட்டாயம் உண்டு. நான் பெருமாளோ இல்லையோ, இவ ஆண்டாளுதான். நல்ல குணவதி.”

“பாவா, எழுபத்திரெண்டு பாளையக்காரர்களும் மதுர நாயக்கர்களுக்குச் சொந்தக்காரங்க இல்லைன்னு சொன்னீங்களே.”

“ஆமா, மதுரைய நோக்கிப் படையெடுத்து வந்து இங்க ஆட்சியிலிருந்த முஸ்லீம்கள அப்புறப்படுத்தின விசுவநாத நாயக்கர் யோசிச்சிருக்காரு. அவரு நாயக்க அரசர் இல்ல. விஜய நகர அரசனின் தளவாய்தான் அவரு. அரசனின் பிரதிநிதின்னு வச்சுக்கலாம். நாயக்கருங்க காலத்திலதான் தளவாய்ன்னு ஒரு புது பதவியே உருவாச்சு. அதாவது அமைதிக் காலங்கள்ல வரி வசூல் செய்கிற மந்திரியாவும், போர்க் காலங்கள்ல படையை நடத்துற தளபதியாவும் இருப்பாங்க.”

“மந்திரின்னா அறிவு அனுபவம் இருக்கணும். தளபதின்னா உடல் வலிமை, சமயோசிதம் இருக்கணும். தளவாய்னா ரெண்டு இருக்கணும். அப்படிப்பட்ட தளவாய்தான் அரியநாத முதலியார் “ என்றார் வக்கீல்

“நம்ம மருது அண்ணன் மாதிரிதான பாவா?”

“சரியாச் சொன்னே, அது சரி. மருது அண்ணனை ஒரு நாளைக்கு எத்தனை தடவதான் சொல்லுவ?”

“இப்பச் சொல்லுறது பத்தாது. இப்ப நம்ம வக்கீல் சாமி சாப்பிட்டாருல்ல விளாம்பழம், அது கூட மருது அண்ணனோட சிறுவயல் அரண்மனையில இருந்து வந்ததுதான். தினம் அங்கயிருந்து ஏதாவது ஒன்னு இந்தத் தங்கச்சிக்கு வந்துக்கிட்டுகிட்டுத்தான இருக்கு?”

“அது மட்டும்தான் காரணமா? இல்ல அவரது பெண்டாட்டி மீனாட்சிக் காரணமா?”

“யாரு ஜமீன்தார்வாள் அது, மீனாட்சி? புதுப் பேரா இருக்கே. மருது சேர்வக்காரர் புதுசா கல்யாணம் ஏதும் பண்ணியிருக்காரா?”

“ஓ, அந்த விசயம் தெரியாதா ஒங்களுக்கு. மீனாட்சி நம்ம சொந்தக்காரப்பிள்ள. இந்த பங்காருவுக்கு அண்ணன் மக மொற. இப்ப அந்த மீனாட்சிய சேர்வக்காரர் கல்யாணம் பண்ணிருக்காரு. அவங்களுக்கு ஒரு பொம்பளக் குழந்த கூட இருக்கு. தங்கம்னு பேரு.”

“அப்படியா? எனக்குத் தெரியாது ஜமீன்தார்வாள். பரவாயில்ல, சேர்வக்காரர் வாழ்க்கைய அனுபவிக்கிறார். இது நாலா? அஞ்சா?”

“ஆறு, ஏன் சாமி பொறாமப் படுறீங்க? பொண்டாட்டிகளை விடுங்க. இது ஒன்னுதான் அவருக்கு நிம்மதி. மத்தபடி அவரு வாழ்ற வாழ்க்கைக்கு வேற ஒருத்தன்னா என்னைக்கோ தற்கொலை பண்ணிட்டுச் செத்துப் போயிருப்பான். எந்த நேரத்துல ராமநாதபுரத்து ராஜா இவரக் கையப்புடிச்சு சிவகங்கை ராஜா முத்து வடுகநாதர்கிட்ட அனுப்பிச்சாரோ அன்னியில இருந்து இன்னிக்கி வரை சோதனைதான். யாராவது ஒரு எதிரி தொல்ல கொடுத்துக்கிட்டுத்தான் இருப்பான். ஒரு நாள் நிம்மதியா தூங்கியிருக்க மாட்டாரு. இங்க நம்ம விருப்பாச்சி காட்டுல எட்டு வருசம் இருந்தாருல்ல. அவரும் சரி, அவரு தம்பி சின்ன மருதுவும் சரி, வேலு நாச்சியாரோட கனவு எதுவோ, அவங்களுக்கு எது நல்லதோ அதப்பத்தித்தான் யோசிப்பாங்க. அப்படியில்லைன்னா திண்டுக்கல் கோட்டைக்கு வேலு நாச்சியாரக் கூட்டிக்கிட்டுப் போயி கோட்டை கிலேதார் சையதுகிட்ட பேச வச்சு ஐயாயிரம் குதிர வீரர்கள இரவல் வாங்க முடியுமா? இல்ல சிவகங்கையில எட்டு வருசமா ஆட்சியிலிருந்த நவாப்போட ஏஜென்ட அடிச்சு விரட்டத்தான் முடியுமா? சின்ன மருது பெரிய அறிவாளி. அதுவும் கொரில்லா சண்டையில. நான்கூட சொன்னேன்.

நாம நத்தம், மேலூர் வழியா படைய நடத்திட்டுப் போயி சிவகங்கையத் தாக்கி ஆற்காடு நவாப்போட ஆட்கள விரட்டுவோம்னு. சின்ன மருது சொல்லிட்டாரு, “நாயக்கரே, திடீர்ன்னு தாக்கி சிவகங்கைய கைப்பற்றிக் கொள்ள, வேலு நாச்சியார் சிவகங்கையின் ஆக்கிரமிப்பாளர் இல்ல. அரசாட்சி செய்ய உரிமையுள்ள ராணி அவர். சிவகங்கை முதல் அரசர் சசிவர்ணத் தேவரின் மருமகள். அரசர் முத்து வடுகநாதரின் மனைவி. இளவரசி வெள்ளச்சியின் தாயார். சிவகங்கை மக்களின் ஆதரவு அவர்களுக்கு இருக்குன்னு நவாப்புக்கும் வெள்ளக்காரங்களுக்கும் தெரியணும். அதனால, சிவகங்கையை நம் படை அடைவதற்கு முன்பாக இரண்டு மூன்று இடங்கள்ல நவாப் படைகளோடு நாம் மோதுவோம். சிவகங்கையில நமக்கு ஆதரவா மக்கள் கட்டாயம் கிளர்ச்சிப்

பண்ணுவாங்க. நவாப் நம்மகிட்டயும், சிவகங்கை மக்கள் கிட்டயும் மாட்டிக்கிட்டு அடிவாங்கி ஓடுவான்"னு சொன்னாரு. அதேமாதிரி நவாப் படைகளோட சின்ன மருது முதல்ல சோழவந்தான்ல மோதினாரு."

"சோழவந்தான் நவாப் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியா? இல்லையே?" என்றார் வக்கீல்.

"நீங்க சொல்றது சரிதான். சோழவந்தான் ஆங்கிலேயக் கலெக்டர் கட்டுப்பாட்டுல இருந்துச்சு. அங்கப் போய் ராணி வேலு நாச்சியாரோட படை தங்கிருச்சு. வேணும்னே அங்க இருந்துகிட்டு ஊரவிட்டு நகரல. ஆனா நவாப்புக்குத் தகவல் போய்ச் சேர்ற மாதிரி சின்ன மருது பாத்துக்கிட்டாரு. நவாப் படை அங்க வந்துச்சு. அத எதிர்பார்த்துத்தான மருது சகோதரங்க சோழவந்தான்ல காத்திருந்தாங்க. வந்த இடத்துல நவாப் படை அடிவாங்கி திரும்ப ஓடுச்சு. சரி, முன்னேறிக்கிட்டு வர்ற வேலு நாச்சியார் படைய திருப்புவனத்தில நிறுத்தலாம்னு நவாப் முயற்சி செஞ்சார். தோல்விதான். வேலு நாச்சியார் படை சிவகங்கய நெருங்கும்போது ஜனங்க ஆரவாரம் செய்து வரவேத்தாங்க. அதப் பாத்து ஓடின நவாப் ஆளுங்க இந்த இருபத்தி ஏழு வருசமா சிவகங்கப் பக்கம் போகக்கூடப் பயப்படுறாங்கள்ல?"

"பாவா, அந்த எழுபத்தி ரெண்டு பாளையங்களும் நாயக்கர் பாளையங்கள் இல்லைன்னு சொன்னீங்களே..."

"மதுர விஸ்வநாத நாயக்கர் கடைசி வரயில தன்னை அரசரா நினைச்சுக்கிறல. விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாத்தான் நினைச்சிக்கிட்டார். அப்படித்தான் நடந்துக்கிட்டார். இந்த நினைப்பு வழிவழியா வந்துருச்சு. அரசி மீனாட்சி சொக்கநாத நாயக்கர் காலத்தில விஜய நகரப் பேரரசு நம்ம விருப்பாச்சி ஜமீனவிட சின்னதாப் போயிருச்சு. படையும் இல்ல, ஒன்னும் இல்ல. இருந்தாலும் மதுர அரசி மீனாட்சித் தன்ன விஜயநகர பேரரசின் ஏஜென்ட்னு தன்னுடைய சாசனங்கள்ல தெரிவிச்சுக்கிட்டாங்க. தன்னை விஜயநகரப் பேரரசனின் ஏஜென்டா நினைச்சு விஸ்வநாத நாயக்கரும், அரியநாத முதலியாரு ஆலோசனைப்படி சேர்ந்து மதுரைப் பகுதிக்கு வந்த தெலுங்கு ஆட்களுக்குப் பாளையங்கள ஒதுக்கினார். இந்த எழுபத்தி ரெண்டு பாளையங்கள்ல இருவது பாளையங்கள்தான் என்னைப்போல நாயக்கர்களுக்கு விஸ்வநாத நாய்க்கர் கொடுத்தது. மீதி பாளையங்கள் கன்னடம் பேசுற கவுண்டர்கள், கம்பளத்து நாயக்கர்க, இந்தப்

பகுதியிலேயே பிறந்து, காலங்காலமா வாழ்ந்துகிட்டு இருக்கிற மறவர்களுக்குன்னு கொடுத்தாரு. ஹம்பியில இருந்து அவர்கூட வந்த ஒட்டர் ஜாதிக்குக் கூட ஒரு ஜமீன் கொடுத்தாரு."

"என்னது பாவா, ஒட்டருங்களுக்குக்கூட ஜமீன் இருக்கா? இந்தப் பகுதியில அவங்க ரொம்பப் பேரு இல்லைன்னு சொல்லுவாங்களே?"

"அரசனுக்கு எல்லா ஜாதியும்தான் முக்கியம். அந்த வகையில அவனுக்கு உதவின எல்லாருக்கும் ஆளுக்கு ஒரு பாளையமா கொடுத்தாரு. இப்படிச் சொல்லி ஆற்காடு நவாப்புக்குப் புரிய வச்சேன். இருந்தாலும் மனுசன் விடல. என்னைய ஹைதர் அலி கூடயும் திப்பு சுல்தான் கூடயும் சேரக்கூடாதுன்னு சொன்னாரு. நா சொன்னேன், "நவாப், அவரும் ஒங்கள மாதிரி ஒரு முஸ்லீம். எங்கள ஜாதி ரீதியா ஒன்னாயிருக்கணும்ன்னு சொல்றீங்க. குமார பங்காரு ராஜா செத்துப்போன துக்க நிகழ்ச்சிக்குக்கூட ஜாதி ரீதியா எல்லாரும் ஒரேமாதிரி முடிவு எடுத்து கேதத்துக்குப் போயிருக்கக் கூடாதுன்னு சொல்றீங்க. நீங்களும் திப்பு சாகிப்பும் ஒரே மதந்தான? நீங்க ஒன்னாயிருக்கலாம்ல"ன்னு கேட்டேன்

"இல்ல நாயக்கரே, எங்களுக்கும் அவங்களுக்கும் வித்தியாசம் இருக்கு. நாங்க சன்னி முஸ்லீம். அவங்க ஷியா முஸ்லீம்"ன்னு சொன்னார்."

நா சொல்லிட்டேன். "ஆலம்பனா, எனக்கு அந்த வித்தியாசமெல்லாம் தெரியாது. அவங்க மசூதியையும். ஒங்க மசூதியையும் பாத்தா எனக்கு வித்தியாசம் தெரியல. நான் திப்பு சாகிப்ப பகைச்சிக்கிற முடியாது. என் ஊர்லயிருந்து முப்பதாவது மைல்ல திண்டுக்கல் கோட்டையில அவங்க கொடி பறக்குது. எனக்கு ஏதாவது ஒன்னுன்னா அவர்தான் முதல்ல வர முடியும். எங்க ஊர்லயிருந்து இருநூறு மைல் தூரத்தில இருக்கிற ஆற்காட்ல முன்ன இருந்தீங்க. இப்ப நானூறு மைல் தள்ளியிருக்குற மெட்ராசுக்குப் போயி கடற்கரை ஓரமா தங்கிட்டீங்க. எனக்கு அவர் பக்கத்தில இருக்காரு. அவரு தயவும் வேணும்னேன். "சரி பாத்து நடந்துக்கங்க"ன்னு சொல்லி ஆற்காடு நவாப் அனுப்பிட்டாரு.

"பங்காரு, நான் சொன்னதைப் புரிஞ்சுக்கிட்டிருப்பே. வக்கீல் சாமிக்கு நா சொன்னதைவிட அதிகமாத் தெரியும். நிற குடம் தளும்பாம இருக்காரு. இப்ப நா பழனி கிளம்புறேன். ஐயரு நீங்க கலெக்டரப்

பார்த்துப் பேசுங்க. எதுவும் பிடிகொடுக்க வேணாம். எது கேட்டாலும் எங்க பாளையக்காரருக்கு வயசாயிருச்சு, கோயில் கோயிலா ஏறியிறங்குறாரு. இப்பக்கூட பழனி கோயிலுக்குத்தான் போய்க்கிட்டிருக்காரு. மருது சகோதரங்ககூட பழைய பழக்கம்தான் இருக்கு. மராத்தியக்காரங்களோ, வேற மொழி பேசுறவங்களோ யாரும் இப்ப விருப்பாச்சிப் பக்கம் வர்றதில்லைன்னு சொல்லிட்டு வந்திருங்க" என்று சொன்ன நாயக்கர், மனைவி பக்கம் திரும்பினார்.

"பங்காரு, வெளியூரிலிருந்து என்னைத்தேடி வர்றவங்கள விருந்தினருங்க தங்குற இடத்திலேயே இருக்கச் சொல்லு. ஊருக்குள் அலைய வேணாம்னு சொல்லிவிடு. காலம் சரியில்லாமல் இருக்கு" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து பல்லக்கில் ஏறி உட்கார்ந்தார். பல்லக்குக் கிளம்பியது.

பல்லக்குக்கு முன்னும் பின்னும் ஆயுதம் தாங்கிய வீரர்கள் சென்றனர்.

கோபால் நாயக்கர் சென்றதும் பங்காரு வீட்டுக்குள் வந்தாள். "பங்காரு காரு, நான் திண்டுக்கல் கலெக்டரைப் பார்த்துப் பேச முடியாது. என்னைப் பார்த்தாலே கலெக்டர் சிறைப்படுத்திவிடுவார். நாயக்கர் கோயிலுக்குப் போவதால், நான் விளக்கமா ஒன்னும் சொல்லவில்லை. மருது பாண்டியர் அனுப்பிய கோயமுத்தூர் சேக் உசேனும், தூந்தாஜி வாக் மகன் அனுப்பிய மராத்திய வீரனும் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்க வந்திருவாங்க. அவங்க கொண்டு வர்ற செய்தி நிச்சயம் சந்தோசப்படும்படியான செய்தியாயிருக்காதுன்னு நினைக்கிறேன். என்ன செய்யலாம்?"

"நீங்க சொல்லுறது சரிதான் சாமி. ஜமீன்தார் ரெண்டு நாளாவது நிம்மதியா இருக்கட்டும். வெளியூர்ல இருந்து வர்றவங்கள நேரா விருப்பாச்சிக் காட்டுக்குப் போகச் சொல்லுங்க. அவங்க காட்டுக்குள்ள இருக்கிற வேலு நாச்சியார் குகையில தங்கட்டும். அவங்கப் போகையிலயே சாப்பாட்டு ஏற்பாடுகளையும் பண்ணிக் கொடுத்திடுங்க. நாம நாயக்கர் வந்தவுடனே அவருகிட்ட பதமாச் சொல்லிட்டு, காட்டுக்குள்ள தங்கியிருக்கிற இவங்களை வரவழைப்போம்" என்றாள்.

•

20

பிப்ரவரி மாதம், இரண்டாம் தேதி. மாலை நாலு மணிக்குப் பாளையங்கோட்டை சிறைக்கு முன்பு சிறு கூட்டம் கூடியது. ஒவ்வொருவர் தலையிலும் ஒரு சுமை இருந்தது. சிலர் சாக்கு மூட்டையை தலையில் சுமந்துகொண்டிருந்தனர். சிலர் வாழைத்தாரை தலையில் தூக்கி வைத்திருந்தனர். சிலர் வாழை இலைக்கட்டை தலையில் வைத்திருந்தனர். இந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் சிறையில் வாசலில் இருந்த சிப்பாயி அவர்களை விரட்டினான். "இங்கக் கூட்டம் சேராதீங்க. யாரும் இங்க நிக்கக்கூடாது, கிளம்புங்க. ஜெயிலர் துரை வெளியே கிளம்பிட்டிருக்காரு. ஒங்களப் பாத்தாருன்னா சுட்டுப் புடுவாரு. ஒதுங்கறதுக்கு எடம் பாத்திருக்கீங்கப் பாரு. கூறு கெட்ட பயலுகளா" என்றான்.

கூட்டம் மெதுவாக சிறை வாசலைவிட்டு கொஞ்சம் பின்னால் நகர்ந்தது. ஒருவன் மட்டும் காவலாளியிடம் வந்தான். "ஐயா, உள்ளே ஏதோ விசேசம்னு சொல்லிவிட்டாங்க. காய்கறி வேணும்னு கேட்டாங்க. அதான் கொண்டு வந்தோம்."

"தினமும் சிறைக்குக் காய்கறியெல்லாம் கொடுக்கிறதுக்கு முத்து ராக்கு முதலியாரு இருக்காரு. அவரு ஆளுக காலையிலேயே வந்து காய்கறி, பலசரக்கு எல்லா கொடுத்திட்டுப் போயிட்டாங்க. அவர்தான் எப்பவும் கொடுக்கிறவரு. மத்த நேரத்தில எந்தப் பொருளும் சிறைக்கு உள்ள போக முடியாது. சரி, நீ எந்த ஊரு?"

"நாங்குநேரிங்க."

"அடப்பாவி, எம் மச்சினன் அந்த ஊர்லதான்டா கல்யாணம் பண்ணியிருக்கான்."

"அப்படியா, யார் வீட்டுல?"

"கடலாடி நாடார் வீட்ல."

"அடடா, நம்மப் பங்காளி வீட்லயா? ஒங்க மச்சினன் ஆள் கொஞ்சம் கறுப்பா உயரமாயிருப்பாருல்ல? சுருட்ட முடி?"

"உயரமா கறுப்பாயிருப்பாரு. சுருட்ட முடியில்ல."

"சரி சரி, நா இன்னொரு மருமகன சொல்றேன்னு நினைக்கிறேன்."

“இல்லையே, அவருக்கு ஒரு மகதான? இவன் ஒருத்தன்தான் மருமகன்.”

“சரி சரி, நாவகம் வந்திருச்சி. சுருட்ட முடியில்ல. சரியா, தெரியுமே? யேப்பா, நாங்க இந்த யாவாரத்த முடிச்சிட்டுக் கிடைக்கிற லாபத்த திருச்செந்தூர் முருகனுக்கு உண்டியல்ல போடணும்னு வேண்டியிருக்கோம். ரெங்கசாமி முதலியார் கிட்டக் கேட்டோம். அவர்தான் இங்க அனுப்பினாரு.”

“எந்த ரெங்கசாமி முதலியாரு?”

“என்னப்பா விசயம் தெரியாத ஆளாயிருக்க? ரெங்கசாமி முதலியார் தெரியாதா? துபாசுப்பா. கலெக்டர் கூட இருப்பாரே? அவருதான் சொன்னாரு. போய் எம் பேரச் சொல்லு. இல்லைன்னா வாலர் துரை வீட்டில வேல பாக்கிற பாத்திமா பேரச் சொல்லுன்னு சொல்லிவிட்டாரு.”

“யாரு பாத்திமா?” மேம் சாகிபா கூட தினமும் சாயங்காலம் ஆத்து வரைக்கும் போயிட்டு வருமே, துலுக்கப் பொம்பள, அதுவா?”

“அட ஆமாப்பா, நம்ம ஜாபர் பாய் இருக்குல்ல... கலெக்டர் வீட்டுக் குதிரய பாத்துக்கிற ஜாபர். அவருப் பொண்டாட்டிதான் இந்தப் பாத்திமா.”

“சரிசரி, ரொம்ப நெருங்கிட்டோம். நீ ஒன்னு செய்யி. உள்ள போயி நா சொல்லிட்டு வர்றேன். கோட்டை மேஸ்திரி ஒரு கிறுக்குப் பிடிச்ச வெள்ளக்காரன். அவன்கிட்ட சொல்லி அனுமதி வாங்கணும். நீயும் வர்றயா?”

“சரி வர்றேன்” என்றான்.

“அப்பா நாங்குநேரி, ஊருக்குப் போகயில என் மச்சினனக் கேட்டதாச் சொல்லு. நல்லது கெட்டதுக்குக்கூட வரமாட்டீங்கிறான்.”

“சொல்றேன் சொல்றேன். டேய் கிறுக்கா, ஒம் மச்சினன் பாளையங்கோட்ட சிறையையே முழு கட்டுப்பாட்டுல வச்சிருக்கான்டா. அவன அண்டிப் பொழச்சிக்கடான்னு சொல்லிர்றேன். ஓடி வந்துருவான் பாரு” என்றான். இருவரும் முதல் வாசலில் இருந்து அடுத்த வாசலுக்கு வந்தனர். சிப்பாயுடன், தலையில் மூட்டையோடு வரும் புது ஆள் யாரு

என்று யோசித்தபடியே இருவரையும் வெள்ளைக்கார மேஸ்திரி பார்த்தான். “ஸ்டாப்” என்றான். சிப்பாய் நின்றான். அவனைப் பார்த்து நாங்குநேரிக்காரனும் நின்றான்.

சிப்பாய் விளக்குவதற்கு முன்பே நாங்குநேரிக்காரன் பேசினான்.

“துர, கேத்தரீன் மேம் சாகிபாகிட்ட இந்தக் காய்கறியெல்லாம் கொடுக்கணும்.”

நாங்குநேரிக்காரனைக் கூட்டி வந்தச் சிப்பாய்க்கு வித்தியாசமாகத் தெரிந்தது. வாசலில் தன்னிடம் இவன் கூறியது வேறு. இப்ப இந்தக் கிறுக்கு வெள்ளைக்கார மேஸ்திரிகிட்ட நாங்குநேரிக்காரன் வேற மாதிரி பேசுறானே. என்னிடம் கேத்தரீன் மேம் சாகிபா பற்றி இவன் பேசவே இல்லையே? என்று நினைத்தான். “சரி பரவாயில்ல, நம்ம மச்சினன் ஊர்க்காரன். இந்த வியாபாரத்தில் லாபம் கிடைத்தால் திருச்செந்தூர் முருகனுக்கு காணிக்கைப் போடுவான். அந்த புண்ணியம் நமக்கும் கிடைக்கட்டும் என்று சமாதானம் செய்து கொண்டான்.

கிறுக்கு வெள்ளக்கார மேஸ்திரிக்குக் கேத்தரீன்மீது மிகுந்த ஈர்ப்பு உண்டு. அதை இரண்டு முறை வெளிப்படையாகவும் அவளிடம் சொல்லியிருந்தான். முதன்முதலாக கேத்தரீனைப் பார்த்தபோதே விளக்கமாகப் பேசிவிட்டான்.

“கேத்தரீன், இந்தக் கிழட்டு வாலருடன் உன் வாழ்க்கை முடியப் போகிறது. பேருக்குத்தான் ஜெயில் சூப்பிரண்டு. சதா காலமும் பைபிளும் கையுமா அலையறான். உன்னை அவன் சரியா கவனிப்பதில்லை என்று உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுது. என்னை ஏன் நீ ஏத்துக்க கூடாது?” என்றான்.

“ஜென்டில்மேன், பலமுறை ஒங்கள் கண்களில் தெரியும் காதலையும் காமத்தையும் நான் பார்த்திருக்கேன். ஒங்களைப் பற்றியும் விசாரித்தேன்.”

“யாரிடம்?”

“ஏன், என் கணவர் வாலரிடம்தான்.”

“நல்லாச் சொன்னாரா?”

“நிச்சயமாக. ஒங்களைப் பற்றி நன்றாகச் சொன்னதால்தான் ஒங்களை ஜென்டில்மேன் என்று அழைத்தேன். அவர்தான் சொன்னார், நீங்கள் பெரும் காதல் மன்னன் என்று.”

“அப்படியா?”

“ஆம், ஒங்க நண்பர் கலெக்டர் வீட்டுக் காவலாளியாக இருக்கிற மிஸ்டர் ஒயிட்டும் நீங்களும் இந்தப் பகுதியில் ரொம்ப பிரபல்யமாமே? ஆனால் வெளியில் ஒயிட் தன்னை கலெக்டருக்குப் பாதுகாப்பு அதிகாரி என்று சொல்லி பெண் வேட்டை நடத்துவாராம். நீங்களும் இங்குக் காவலாளிதான். ஆனால் வெளியில் மற்றவர்களிடம் துணை ஜெயில் சூப்பிரண்டு என்றும் வாலர் விரைவில் ரிட்டயர் ஆகி லண்டன் போய்விடுவார், அடுத்து நான்தான் பாளையங்கோட்டை ஜெயிலர் என்றும் சொல்லி காய்கறி சப்ளை ஏஜென்ட் முத்து ராக்கு முதலியார்கிட்ட சொல்லியிருக்கீங்க? என்கிட்ட அவரு கேட்டாரு. நானும் அப்படியே சொல்லிட்டேன். வாலர் ரிட்டயர் ஆகி லண்டன் போன அடுத்த நொடி நம்ம ஜென்டில்மேன் ஜெயில் சூப்பிரண்டு ஆயிடுவாருன்னு சொன்னேன்.”

“கேத்தரீன், அதுக்குக் கொஞ்சமாவது படிச்சிருக்கணுமே? படிக்காத நான் எப்படி ஜெயில் சூப்பிரண்டு ஆக முடியும்? அது நடக்காது. வேண்டுமானால் அடுத்தமுறை முத்து ராக்கு முதலியாரைப் பார்க்கும்போது நடக்கக்கூடியதை அவர் கிட்ட சொல்லிடு.”

“நடக்கக் கூடியது என்ன ஜென்டில்மேன்?”

“வாலர் ரிட்டயராகி லண்டன் கிளம்பின அடுத்த நொடி நான் ஜென்டில்மேனுக்கு மனைவி ஆயிடுவேன்னு சொல்லிடு” என்றான் இளித்தபடி.

கேத்தரீன் அவனை முறைத்துப் பார்த்தபடியே, “சரி சரி ஜென்டில்மேன். புதுசா ஜெயிலுக்கு வந்திருக்காங்கல்ல. பாஞ்சாலங்குறிச்சிக்காரங்க. சிவத்தையாவோ என்னவோ? இன்னொரு ஆளு ஊம மாதிரி இருக்குமே?”

“ஆமா.”

“அந்த டம்பிய நம்ம வாலருக்கு ஏனோ பிடிக்கல. ரொம்பப் போக்கிரி. முரடன்னு சொல்லுறாரு. அந்த டம்பி நிலையில இருந்து பாக்கணும். அவங்க அண்ணனை தூக்கிலப் போட்டாச்சு. ஒரு

வருசத்துக்கு மேல ஜெயில்ல இருக்காங்க. லண்டன்ல இருந்து சொந்தக்காரங்கள விட்டுட்டு இங்கயிருக்கிற உனக்கே எப்படியிருக்கு? நாலு வருசத்துக்கு ஒரு தடவ, அஞ்சு வருசத்துக்கு ஒரு தடவ நீ லண்டனுக்கு போகலையா?"

"கேத்தரீன் உனக்குத் தெரியாதா? நான் கம்பெனி சார்பா வியாபாரம் பண்ணுறேனா? காசுல கொழிக்க. இல்லை, நான் என்ன பெரிய மேஜரா? கலெக்டரா? உன் புருசன் மாதிரி ஜெயில் சூப்பிரண்டா? வருசத்துக்கு ஆயிரத்துக்கு மேல சம்பளம் வாங்க?"

"வருசச் சம்பளம்னா ஆயிரமா?"

"அப்பத்தான இரண்டு மூணு வருசத்துக்கு ஒரு முறையாவது லண்டனுக்குப் போக முடியும். நா வாங்குறது வருசத்துக்கு இருநூறு. இதுல எங்க லண்டன் போறது? ஒன்னு இங்கேயே சாகுறவர கிடக்கணும். இல்லைன்னா இருக்கிறவரை காலத்தைக் கழிச்சிட்டு ரிட்டயர் ஆன பிறகு லண்டன் போகணும்."

"ஏன், நீ இப்பக்கூட பெரிய வேலைக்கு போகலாமே? கவர்னர் ஜெனரல் காரன் வாலீஸ் ஒரு ஆர்டர் போட்டாருல்ல. வருசச் சம்பளம் ஐநூறுக்கு மேல உள்ள எல்லாப் பதவிகளும் வெள்ளக்காரங்களுக்கு மட்டும்தான்னு? அதனால பல நேட்டிவ் அய்யருங்க, முதலியாருங்க, பிள்ளமாருங்க ஆங்கிலோ இந்தியன்க வேல இழந்தாங்கல்ல. அந்த வேலய நீ பிடிச்சிருக்கலாமே?"

"முயற்சி பண்ணினேனே? நான் ஒரு பெண் பித்தனாம். எனக்கு வருசம் ஐநூறு சம்பளம் வாங்க அருகத இல்லையாம். மேலதிகாரியா இருந்த போர்த்துக்கீசியக்காரன் எழுதி வச்சிட்டான் என் ரிக்கார்ட்ல. அவனே ஒரு போக்கிரிப்பய. என்னையப் பெண் பித்தன்னு எழுதி வச்சிட்டான்."

"ஓ. அதனால பெரிய வேல கிடைக்கலையா?"

"இல்ல, அது மட்டும் இல்ல. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாதுல்ல. அது ஒரு காரணம்."

"அடப்பாவமே."

"பரவாயில்ல, எனக்காக நீ வருந்துகிறாய் அல்லவா? இந்த ஒரு நிமிடம் போதும். என் மகிழ்ச்சிக்கு. இந்த மகிழ்ச்சியை நான் என்

வாழ்நாள் முழுவதும் கொண்டாடுவேன். இன்னொன்னுக்காகவும் நான் லார்ட் காரன் வாலிஸீக்கு நன்றி செலுத்துகிறேன்."

"அவுருதான் உனக்குப் பெரிய வேல குடுக்கலை இல்ல ஜென்டில்மேன். அப்புறம் எதுக்கு அவருக்கு நன்றி சொல்லுற."

"இல்ல, வெள்ளக்காரங்க நடத்துற பார்ட்டிகள்ல உள்ளூர் ஆட்கள் கலந்துக்கக் கூடாது. ஆங்கிலேயர்கள் மட்டும்தான் கலந்துக்கிறணும்னு லார்ட் காரன் வாலிஸ் சொன்னாருல்ல. சொன்னதுமில்லாம அத உத்தரவாப் போட்டாருல்ல, அது எனக்கு ரொம்ப நல்லதாப் போச்சு. நானும் நம்ம கலெக்டர் ஆபிஸ் ஒயிட்டும் முழுக் குடியன்களா மாறுனதே இதனாலத்தான். பார்ட்டியில மிஞ்சினது பூராம் நமக்குத்தான். என்ன சனியன்? நம்மகூட கலெக்டரு, ஜட்ஜ், மேஜர்க யாரும் பேசமாட்டாங்க. அவங்க வீட்டுப் பொம்பளகளும் எங்களப் பாத்தா முகத்தத் திருப்பிக்கிறாளுக. பெரிய யோக்கியம் மாதிரி. ஒவ்வொருத்தியும் இந்த ஊர் ராஜாங்ககிட்டயும், ஜமீன்தார்ககிட்டயும் பல்லக் காமிக்கிறது, எங்களுக்குத் தெரியாதுன்னு நினைக்கிறாளுங்க. நீதான் தேவதை. எங்களப் பார்ட்டியில பாத்தாலும் சிரிப்ப, சில நேரம் கை குடுப்ப. இந்த ஊர் ராஜாங்ககிட்ட நீ பேசி நா பாத்ததில்ல. லண்டன் நகரப் பெண்களின் மரியாதையக் காப்பாத்துற அழகி நீ."

"ரொம்ப நன்றி."

"அதெல்லாம் ஒன்னுமில்லை கேத்தரீன்."

"வாலர்கிட்ட ஒங்களப் பத்தியும், மிஸ்டர் ஒயிட்டப் பத்தியும் நல்லபடியா சொல்லி வைக்கிறேன். நீங்க அந்த சிவத்தையாவுக்கும், ஊமை டம்பிக்கும் நல்ல சாப்பாடு, பழங்கள் கொடுங்க."

"அவனுங்களுக்கு நாம சாப்பாடு கொடுப்பது இல்லையே கேத்தரீன், அவங்க ஆளுங்கதான் அவனுங்களுக்குச் சமைக்கிறாங்க".

"தெரியும், சமைக்கிறதுக்கு நல்ல காய்கறிங்க கொடுங்கன்னு சொன்னேன்."

"சொல்லிட்டேல்ல. இனிப் பாரு. அடுத்து நாம எப்போ சந்திப்பது கேத்தரீன்?"

“கொஞ்சம் பழகிக்கிட்டிருப்போம். இந்த வாலர் இருக்கே? ரொம்ப நல்ல மனிதர். வயதாகிவிட்டது. கொஞ்சம் கிறுக்கு, அவ்வளவுதான். அவர் மனதைப் புண்படுத்த எனக்கு மனம் வரவில்லை.”

“நல்லவளாவும், அழகானவளாவும் பொண்டாட்டி இருந்துட்டா. எல்லாப் புருசன்காரங்களும் கிறுக்காயுடுவானுங்க. அதுவும் கிழவனுங்க சங்கதியக் கேட்கவே வேணாம். பரவாயில்லை, நான் காத்திருக்கிறேன் உனக்காக.”

“மிஸ்டர் ஜென்டில்மேன், உங்கள் உடல்நலத்தையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமில்லாத ஐரோப்பிய போர்த்துக்கீசியப் பெண்கள், உள்ளூர் வேசிகளின் தொடர்பு உங்களுக்கு இருந்தால் அதை விட்டுவிடுங்கள். உங்கள் நண்பர் மிஸ்டர் ஒயிட் டிற்குப் பெண் நோய் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். இந்த நோய் இருப்பதால் தான் அவர் நேராக நடக்காமல் கால்களை அகட்டி அகட்டி நடக்கிறார் என்றும் ஊரில் பேசிக் கொள்கிறார்கள். உங்கள் நண்பர் என்ற முறையில் அவர் பழகிய வேசிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்தினால் அதை உதாசீனப்படுத்தி விடுங்கள். உங்கள் ஆரோக்கியம் முக்கியம். பெண் சீக்கு உங்களுக்கும் பரவி அது எனக்கும் வந்துவிட கூடாது அல்லவா?”

“கேத்தரீன், நீ இவ்வளவு சொல்லிய பிறகு நான் பொறுப்பாக நடந்து கொள்கிறேன். அந்த ஒயிட் பயலையும் திருத்த முயற்சி செய்கிறேன்.”

“வேண்டாம் ஜென்டில்மேன், பின்பு அவரும் உங்களுக்குப் போட்டியாளராக மாறக்கூடும்.”

“ஓ ஜீசஸ், வேண்டாம். அந்த நாறப் பயல். அவன் அப்படியே காலை அகட்டி அகட்டி நடக்கட்டும். இன்றே சொல்லி விடுகிறேன். இப்படி நடப்பது மிக நன்றாக இருக்கிறது என்று கேத்தரீன் சொன்னாள் என்று.”

.

21

இப்போது கேத்தரீன் என்ற பெயரை நாங்குநேரிக்காரன் உச்சரித்தவுடன் காவல் மேஸ்திரிக்கு இந்த நினைவுகள் தொடர் சங்கிலிபோல வந்தன. இது நல்ல சந்தர்ப்பம் கேத்தரீனைப் பார்க்க. ஆனால் நான் இப்போது இந்த இடத்தை விட்டுப் போக முடியாது. கேத்தரீனும் பிடி குடுக்க மாட்டேங்கிறாள். நல்லாப் பேசுறாளே ஒழிய ஒன்னும் பிரயோசனமில்லை. ஆனா இந்தக் கேத்தரீன் எப்பப் பேசினாலும் சிவத்தையாவையும் டம்பியப் பத்தியும் கேட்டுக்கிறா. நானும் இவ சொல்லுறத அவங்க கிட்ட சொல்லுறேன். அவனுக சொல்லுறத இவகிட்ட சொல்லுறேன். ஒன்னும் தப்பா சொல்லிடமாட்டா. "கடவுள் ஒங்கள ஆசீர்வதிப்பாரு... ஒங்க கஷ்டங்கள் எல்லாம் காத்துல கறஞ்சு போயிடும்... ராத்திரின்னு வந்தா பகல்னு ஒன்னு வரும். எல்லோரும் ஒருநாள் சாகப் போறவங்கதான். அதனால சாகப் போறவங்க செத்தவங்கள நினைச்சு உடம்பக் கெடுத்துக்கிறக் கூடாது" அப்படின்னு பொதுவா ஏதாவது சொல்லிடுவா. அவனுங்க பதிலுக்கு "நன்றி கேத்தரீன் மேடம். பிள்ளைக நாலும் எப்படியிருக்கு? ஒங்களது செய்தி எங்களுக்கு ஆனந்தத்தைத் தருது. ஜக்கம்மாவே எங்க மேல அன்பு காட்டுற மாதிரி நீங்க அன்பு காட்டுறீங்கன்னு" சொல்லி விடுவானுங்க. இதப் போயி கேத்தரீன்கிட்ட சொல்லுவேன்.

"அப்போ கேத்தரீன்கூட இருந்த பாத்திமாவப் பாத்தேன். அவளும் ஆள் நல்லாத்தான் இருந்தா. கழுத்தில கருப்புப் பாசி மணி மாலை போட்டிருந்தா. ஆளு சிகப்பா கொஞ்சம் குள்ளமா இருந்தா. ஒரு நா சாயங்காலம் கேத்தரீன்கிட்ட டம்பிச் சொன்னதை சொல்லிட்டு வரயில, பாத்திமா எதுத்தாப்பல வந்தா. துலுக்கச்சி அன்னைக்கும் கழுத்துல கருப்புப் பாசி மாலை போட்டு ரொம்ப அழகா இருந்தா. என்னையப் பார்த்துச் சிரிச்சா. வெறி வந்துருச்சு எனக்கு. அவ கையப் பிடிச்சேனா, கைய விடுவிக்கப் பாத்தா. நா படிஞ்சிட்டாள்னு நினைச்சு கட்டிப்புடிச்சேன். "அய்யோ, அம்மா"ன்னு கத்தி, கூட்டத்தக் கூட்டத் தெரிஞ்சா. எனக்கு பயமாயிருச்சு. "தெரியாம தப்புப் பண்ணிட்டேன். மன்னிச்சுக்கோ. கேத்தரீன் கிட்ட சொல்லிறாதேன்னு" அவ கை கால்ல விழற மாதிரி ஆயிப்போச்சு. வெள்ளக்காரக் கேத்திரீன வளைக்கலாம்னா முடியல. சரி, இந்த பாத்திமா துலுக்கச்சிக் கூட ஒட்டிக்கிறலாம்னா அதுவும் நடக்கல. வேற வழியில்ல. ஒயிட் பய கூட போய் ஏதாவது வேசிக கூடயிருக்கலாம்னா அதுவும் பயமாயிருக்கு. சனியன் கால

அகட்டி அகட்டி நடக்கணும். சரி, இன்னிக்கு நல்ல வாய்ப்பு. ஜெயில் சூப்பிரண்டு வாலர் மேஜர் மெக்காலே வீட்டு பார்ட்டிக்கு போறார். கேத்தரீன் போகலைன்னு காய்கறி முத்து ராக்கு சொன்னாரு. இன்னிக்கு முடிச்சிற வேண்டியதுதான். பிப்ரவரி ரெண்டு என் வாழ்க்கையில முக்கியமான நாளாகப் போகுது" என்று நினைத்துக்கொண்ட வெள்ளைக்கார மேஸ்திரி " யப்பா, ஒம் பேரு என்னா?" என்று கேட்டான்.

நாங்குநேரிக்காரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்ன பெயர் சொல்லலாம் என யோசித்தான். கூட வந்த காவல்காரனிடம் ஏதாவது பெயரைச் சொல்லியிருக்கிறோமா என யோசித்தான். நல்ல வேளையாக காவல்காரன் பதில் சொல்லிட்டான்.

"இவன் பேரு நாங்குநேரிங்க, துரை" என்றான்.

"என்னப்பா பேரு, புதுசாயிருக்கு?"

"நாங்குநேரிங்கிறது ஊர்ப் பேருங்க" என்ற நாங்கு நேரிக்காரனுக்கு உயிர் வந்ததுபோல இருந்தது.

"ஆளுக ஊர் பேரா வச்சிக்கிறது எல்லா நாட்டிலேயும் வழக்கம்தானங்க துரை. ஒங்க கவர்னர் ஜெனரல் பெரிய தொர காரன் வாலிஸ் இருந்தாரு. அதுவும் ஊர்ப் பேருதான? இப்ப இருக்கிற கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி துரை இருக்காரு... அதுவும் ஊர்ப்பேரு தான?"

வெள்ளைக்கார மேஸ்திரிக்குப் பயமாகிவிட்டது.

"யேய், ஒம் பேரு என்னடா நாங்குநேரியா? நரி மேடா? எத வேணும்னாலும் வச்சுக்க. பெரிய ஆளுங்க பேரெல்லாம் இழுக்காதே. ஏற்கனவே என்னையப் பெண் பித்தன்னு மட்டுந்தான் எழுதி வச்சிருக்காங்க. இப்பப் பெரிய ஆட்களப் பத்தி அக்கிரமமா பேசினான்னு எழுதி வச்சுருவாங்க. இருக்க மேஸ்திரி வேலையில இருந்தும் தூக்கிடபோறாங்க. வாய மூடுடா" என்றான்.

"துரை, நானு கேத்தரீன் மேம் சாகிபாவப் பாக்கணும்" என்றான் நாங்குநேரிக்காரன்.

"சரி பாக்கலாம், இந்த மூட்டய இறக்கி வை.சிப்பாயி, நீ இந்த நாங்குநேரிய கூட்டிக்கிட்டுப் போ. கேத்தரீன் கிட்ட நா அனுப்புனதா சொல்லு. வீட்டுல யார் யார் இருக்காங்கன்னு பாரு. அப்படியே அந்த துலுக்கச்சி பாத்திமா இருக்காளான்னும் பாத்துட்டுவா" என்றான் மேஸ்திரி.

நாங்குநேரியானும், காவலாளியும் ஜெயில் சூப்பிரண்ட் மாளிகைக்கு வந்தனர். அப்போது மாலை ஐந்து இருக்கும். வெயில் அவ்வளவாக இல்லை. மரத்தடியில் நாற்காலிப் போட்டு சூப்பிரண்ட் வாலரும் கேத்தரீனும் அமர்ந்திருந்தனர். நான்குக் குழந்தைகளும் அவர்களுக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

தன்னை நோக்கி வரும் இருவரையும் வாலர் பார்த்தார். ஒருவன் சிறையில் வேலை பார்க்கும் காவலாளி. இன்னொருவன் யாரோ கிராமத்து ஆள்போலத் தெரிந்தது. "கேத்தரீன், அவர்கள் எதுக்கு வருகிறார்கள் என விசாரி" என்றார். கேத்தரீன் எழுந்து சென்றாள்.

நாங்குநேரி அவளை வணங்கினான். "கேத்தரீன் ஆத்தா நீங்கதானா சாமி?"

"யெஸ்" என்றாள் கேத்தரீன்.

"ஆத்தாகிட்ட தனியாப் பேசணும்" என்றான்.

"சரி" என்ற கேத்தரீன் சிப்பாயைப் பார்த்தாள். "நீ போ" என்று காவலாளியை அனுப்பி வைத்தாள்.

சிப்பாய் வாலருக்கு சலாம் வைத்துவிட்டு கிளம்பினான். "பாத்தா கிறுக்குப் பய மாதிரியிருக்கான். கேத்தரீன் மேம் சாகிபா கிட்ட பயமில்லாமல் தனியா பேசணும்கிறான்"னு நினைத்துக் கொண்டு சிறைக் காவலன் கிளம்பினான். இப்போது உடனே திரும்பிப் போனால் மேஸ்திரி வெள்ளைக்காரன் பிடித்துக்கொண்டு விடுவான். கேத்தரீன் பற்றிக் கேட்பான். கொஞ்ச நேரம் இந்தக் கேத்தரீன் கண்ணுலேயும், அந்த வெள்ளைக்கார மேஸ்திரிக் கண்ணிலும் படாமல் நிம்மதியாக மரத்தடியில் உட்காருவோம் என்று ஓர் இடம் பார்த்து உட்கார்ந்து கொண்டான்.

"என்ன சொல்லனும்?" என்றாள் கேத்தரீன்.

"ஆத்தா, என் சொந்த ஊர் சிவகங்க. சேர்வக்காரருடைய வேலயாள்."

"சேர்வக்காரரு, டம்பிக்கும் சிவத்தையாவுக்கும் வேண்டியவருல்ல... சொல்லு."

"ஆத்தா, கட்டபொம்மு அய்யாவத் தூக்குலப் போட்டு ஒரு வருசத்துக்குமேல ஆகுது. துர்மரணம் ஆகிப்போச்சு. வருசம் முடிஞ்ச

வுடனேயே பரிகாரம் பண்ணி இருக்கணும்."

"என்ன பரிகாரம்?"

"அய்யருக்கு அரிசி, காய்கறி கொடுக்கிறது, கொஞ்சம் பேருக்குச் சாப்பாடு போடுறதுன்னு இங்கக் குடுக்கணும்."

"அத பாஞ்சாலங்குறிச்சியிலோ, இல்ல ஒங்க சேர்வக்காரு இருக்கிற சிவகங்கையிலோ பண்ணலாம்ல."

"ஆத்தாவுக்குத் தெரியாததில்ல, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்ட இருந்த இடம் இப்பத் தர மட்டமாயிருச்சி. கட்டபொம்முவுக்குத் திவசம் கொடுக்க வேண்டிய அவரோட ரெண்டு தம்பிங்களும் இங்கப் பாளையங்கோட்டை சிறையில இருக்காங்க. இறந்தவருக்கும் அவங்க வாரிசுங்களுக்கும் சம்பந்தம் இல்லாத சிவகங்கையில திவசம் கொடுக்க முடியாது. இங்கேயே தான் கொடுக்கணும் ஆத்தா. கட்ட பொம்மு துரை இறந்து போன கார்த்திக மாசமே பண்ணியிருக்கணும். நாங்களும் நாலு மாசமா முயற்சி பண்ணுறோம். முடியல. இப்ப ஒரு வாய்ப்பு இருக்கு. ஒரு இருபது பேரு சாப்பிடுற மாதிரி காய்கறிக, இல, பழங்க கொண்டாந்திருக்கோம். வாலர் துரைக கிட்ட அனுமதி வாங்கிக் கொடுத்தீங்கன்னா காய்கறி, வாழையிலைக் கட்டுக்களை சிறைக்குள்ள கொண்டு வந்து கொடுத்திருவோம். அப்படியே சமையல் பண்ணி, கூட வந்த ஆளுங்களுக்குச் சாப்பாடு போட்டிருவோம். ரெண்டு சாமிக முகத்தப் பாத்துட்டுப் போயிருவோம்."

"அப்படியா? இருபது பேர உள்ள விடுறது கஷ்டம். பத்துப் பேர வேணும்னா விடச் சொல்லி வாலர் கிட்ட கேட்டுப் பார்க்கிறேன்."

"இல்ல ஆத்தா, பத்துப் பேரு மட்டும் உள்ள விட்டுட்டு மீதி பத்துப் பேர வெளியில உட்கார வச்சா, பய புள்ளக ஊருக்குத் திரும்பிப் போனதும் என்னையத்தான் வையுங்க. எங்கள வெளிய உட்கார வச்சுட்டுப் போயிட்டயேடான்னு. எல்லாரும் உள்ள வர்றமாதிரி ஆத்தா ஏற்பாடு பண்ணீங்கன்னா எங்க எல்லாருக்கும் சந்தோசமா இருக்கும்."

"கேத்தரீன், என்ன ரொம்ப நேரமாப் பேசுற? யார் அவரு?"

"வாலர், இவரு எனக்குத் தெரிஞ்சவரு. இந்த டம்பியோட அண்ணன் கட்டபொம்மன் இருந்தாருல்ல?"

“யெஸ்,அவரத்தான் தூக்குல போட்டோம்ல்ல. ஒரு வருசத்துக்கு மேலாகுதே.”

“யெஸ் டியர், அவங்க வழக்கப்படி ஒரு வருசம் முடிஞ்சதும் இறந்து போன மனிதனின் ஆத்மாவுக்குச் சாந்தி பண்ணனுமாம். இவங்க இறந்து போன கட்டபொம்முவுக்கு வேண்டியவங்க. காய்கறி, இல, பழமெல்லாம் கொண்டு வந்திருக்காங்க. ஒரு இருபது பேரு. அவங்கள உள்ள விட்டா காய்கறிகளை விலைக்குக் கொடுத்திட்டு டம்பி ஆளுங்ககிட்ட பணம் வாங்கிருவாங்களாம். திவசம் அன்னைக்குச் சமையல் பண்ணிச் சாப்பாடு போட்டா புண்ணியம் கிடைக்குமாம். சாப்பாடும் இவங்களே தயார் பண்ணிக்கிருவாங்களாம். இவங்களே சாப்பிட்டுக்கிறவும் செய்வாங்களாம்.”

“என்ன புதுமையா இருக்கு? பொருட்கள விலைக்கு விக்கவும் செய்யுறாங்க? அந்தக் காசில வாங்கின காய்கறிகள வித்தவங்களே சாப்பிடவும் செய்வாங்களா?”

“வாலர், இந்த நாட்டுப் பழக்கம் இது. அதெல்லாம் கேலி செய்யக் கூடாது நம்ம சர்ச்சுகள்ல அப்பத்தையும், ஒயினையும் கொடுத்துட்டு நீங்க அத ஜீசஸோட உடல் ரத்தம்னு சொல்லுறதில்லையா? அது மாதிரி ஒவ்வொரு நாட்டுலயும் ஒரு பழக்கம், நம்பிக்கை.”

“கேத்தரீன், இந்த ஜெயிலுக்குள் காவலாளிங்க முப்பது பேருதான் இருக்காங்க. ஆங்கிலேயர்கள் மூணு பேரு, மீதி இருபத்தி ஆறு பேரு நேட்டிவ் சிப்பாயி. மூணு ஆங்கிலேயர்கள்ல ஒருத்தன் எந்தவித பிரயோசனமும் இல்லாதவன். உன்னிடம் வழிந்து கொண்டிருப்பானே அவன்.”

“ஓ, ஜென்டில்மேனா? இப்போது அவர் நல்லவராகிக் கொண்டிருக்கிறார். வாலர், விரைவில் உங்களுக்கு உதவியாக சர்ச்சிற்கும் வந்து விடுவார்.”

“அவனா? இப்பத்தான் பொம்பளைகளிடம் அடிவாங்க ஆரம்பித்திருக்கிறான். பாத்திமாவிடம் அவன் அடி வாங்குன கத தெரியும்ல.”

“அடியெல்லாம் வாங்கல. அவ கால்ல விழுந்து அழுதிருக்கான். பாவ மன்னிப்பு கேட்டுட்டாரு நம்ம ஜென்டில்மேன்.”

“ஜென்டில்மேன்? அவன் ஆளும் லட்சணமும்... கலெக்டர் வீட்ல வேல பாக்கிற சிப்பாய் ஒயிட் பயலும் இவனும் காமப் பிசாசா அலையுறானுங்க. இன்னிக்குக் மேஜர் மெக்காலே வீட்டுப் பார்ட்டிக்கு நாக்கத் தொங்கப் போட்டுக்கிட்டு வந்துருவானுங்களே? ட்யூட்டியில இப்ப இருந்தாலும் பார்ட்டி நினைப்பிலதான் இருப்பானுங்க. இப்பவே பார்ட்டிக்கு தயாரா இருப்பான். இன்னைக்கு மாலை நேர பார்ட்டிக்கு அவனும் நம்மோட வந்துட்டான்னா, வெறும் ரெண்டு ஐரோப்பியச் சிப்பாய்ங்க, இருபத்தி ஏழு நேட்டிவ் சிப்பாய்ங்க இருக்கக்கூடிய இடத்தில் இருபது ஆட்கள எப்படி அனுமதிப்பது?”

“டியர், அவர்கள் வெறும் காய்கறி, வாழையிலை வியாபாரிங்க. விவசாயிங்க. ஆயுதமா வச்சிருக்காங்க?”

“கேத்தரீன், உனக்கு இந்தப் பகுதியைப் பத்தி சரியாத் தெரியாது. இங்குப் படைவீரர்கள் என்று தனியாக யாரையும் பராமரிப்பது இல்லை. விவசாயக் காலங்களில் விவசாயி. போர்க்காலங்களில் அவனே படைவீரன். அதனால விவசாயின்னு யாரையும் சாதாரணமா எடுத்துக்க கூடாது. எந்த நேரத்திலும் படை வீரனாக மாறுவான்கள். அதனால நாம் யோசிக்கணும்.”

“வாலர் டியர், உங்களுக்கு உள்ள அதிகாரத்தை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். இவங்க காய்கறிகளைக் குடுத்திட்டு சமையல் பண்ணுற நேரத்தில சிவத்தையாகூடவும், டம்பி கூடவும் கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்துட்டுக் கிளம்பப் போறாங்க. வேணும்னா நா இவங்க கூட இருக்கேன். நீங்களும் பிள்ளைகளும் பார்ட்டிக்குப் போயிட்டு வந்துருங்க” என்றாள்.

“நோ, கேத்தரீன் எனக்கு இது என்னவோ சரியாத் தெரியவில்லை. உன்னுடைய இரக்கம் பிரச்சனைய கொண்டுவரப் போகுதுன்னு என் உள்ளுணர்வு சொல்லுது.”

“என்ன பெரிய உள்ளுணர்வு? டியர், கொல்லப்பட்ட கட்டபொம்மன் பாவம்.”

“எனக்கு யோசனையா இருக்கு கேத்தரீன். என்னை நிர்பந்திக்காதே.”

“ஒரு பாவப்பட்ட ஜீவனுக்கு சொர்க்கம் போக நாம உதவி செய்யுறோம்னு நினைச்சுக்கோங்க வாலர். அப்படி ரொம்ப யோசிச்சீங்கன்னா எல்லாரையும் முழுசா சோதனை போட்டுட்டு ஜெயிலுக்குள்ள அனுப்பச் சொல்லுங்க. காய்கறிகளும் இலைகளும், பழங்களும் அதத் தூக்கிட்டு வர்ற மனுசங்களும் மட்டும்தான உள்ள வரப்போறாங்க?”

இளவயது மனைவியை கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என மனதில் நினைத்தபடியே, “சரி கேத்தரீன், உன் விருப்பப்படியே நடக்கட்டும். என்ன நடக்குதோ அத அதன் வழியிலேயே போக விடுவோம். “சரி, நீ வரலையா பார்ட்டிக்கு? அப்ப அந்தக் கிறுக்கு ஜென்டில்மேன நான் என்கூடவே கூட்டிக்கிட்டுப் போயிர்றேன்.”

“மை டியர் வாலர், என்மீது சந்தேகமா? நான் தனியாக இருப்பதால் அவன் இங்கே வந்துருவான். நான் அவனை அனுமதிப்பேன்னு நினைக்கறீங்களா?”

“நோ கேத்தரீன், நான் கிளம்பியதும் நீ இங்கு இருக்க மாட்டாய்ன்னு தெரியும்.”

“என்ன வாலர் சொல்றீங்க?”

“மை டியர் கேத்தரீன், நீ ரொம்ப இரக்க சுபாவம் உள்ளவள். துன்பப்படுபவர்கள்மீது கூடுதலாக இரக்கப்படுவாய். எந்த வழி யிலாவது உதவ வேண்டும் என நினைப்பாய். அதனால்தான் உடல் ஊனமுற்றவனாக உள்ள டம்பியை, அவன் ஆபத்தானவன் என்று தெரிந்தும், அவனைப் பற்றி அதிகம் வருந்துகிறாய். நீ அடிக்கடி அவனைப்பற்றி விசாரிப்பதும் எனக்குத் தெரியும். இன்று நீ நிலை கொள்ளாமல் இருக்கிறாய் என்பதையும் அறிந்து கொண்டேன்.”

“சரி வாலர். எல்லாம் தெரிந்துமா என்னிடம் பொறுமையாக இருக்கிறீர்கள்?”

“கேத்தரீன் வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளை பார்த்தவன் நான். இன்னும் எத்தனை காலம் இந்த உலகில் இருப்பேன் என்றும் தெரியாது. எனது வயோதிகம் என்னை இப்போது பேச வைக்கிறது. ஆனால் நீ ஒரு அன்பான பெண். உனது அன்பு, குடும்பம் என்ற எல்லையைத் தாண்டிச்

செல்வது எனக்கும் பிடிக்கிறது. உன் அன்பு பரிசுத்தமானது என்று தெரியும்."

"வாலர், ஒங்களைத் தவிர, நான் யாரையும்..."

வாலர் அவளை அணைத்துக்கொண்டார். கன்னங்களைத் தடவினார்.

"கடவுள் உன்னோடு இருக்கட்டும் கேத்தரீன்" என ஆசிர்வதித்தார்.

வீட்டிற்குள் சென்று சீருடை அணிந்துகொண்டார். ஒரு சிப்பாயை அனுப்பி "மேஸ்திரி ஜென்டில்மேனை வரச்சொல்" என்றார். மேஸ்திரி ஜென்டில்மேன் வாயெல்லாம் பல்லாக வந்தான். கேத்தரீனைப் பார்த்து சிரித்தான். வாலரைப் பார்த்து சல்யூட் அடித்தான்.

"மிஸ்டர் ஜென்டில்மேன், என் மனைவி கேத்தரீன் உம்மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறாள். பெண்களிடம் மரியாதையைப் பெறுவது பெரும் பேறு. உனக்கு அந்தப் பெருமை கிடைத்திருக்கிறது. வாழ்த்துக்கள்" என்றார்.

"மிகுந்த பெருமைப்படுகிறேன் சார். கேத்தரீன் மேம் சாகிபாவிற்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மறுபடியும் வாலருக்கு சல்யூட் அடித்தான்.

"ஜென்டில்மேன், இதோ நிற்கிறாரே, உன் பேர் என்னப்பா? யெஸ், நாங்குநேரி. இவருடன் வந்தவர்களை ஜெயிலுக்குள் அனுப்பு. அவர்கள் சிவத்தையா ஊமைத்துரையோட கொட்டடியில் அவர்களைப் பார்க்கட்டும். உணவு சமைப்பதற்கும், சாப்பிடுவதற்கும் அனுமதி கொடு."

"சார், கொஞ்சம் யோசிக்கலாம். எனக்குக் கொஞ்சம் பயமாக உள்ளது. ஒருத்தர் ரெண்டு பேரை வேண்டுமானால் அனுமதிக்கலாம். நம்மிடம் போதுமான காவல் ஆட்களும் இல்லை" என்றான்.

"என்ன ஜென்டில்மேன், இப்பத்தான் சொன்னேன். கேத்தரீன் உன்மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறாள் என்று. கேத்தரீன் விரும்புகிறாள். அனைவருடைய நன்னடத்தைக்கும் அவள் உத்திர வாதம் தருகிறாள். என்ன சொல்லுகிறீர்கள்."

“சார், ப்ளீஸ். அவர்கள் பெண். தாய்மை உணர்ச்சி அதிகம். அதனால்தான் என்னைப் போன்ற ஒழுக்கமற்ற பிறவிகள்மீது கூட அன்பு செலுத்துகிறார்கள். உங்களை மறுத்துப் பேசுவதால் மன்னிக்கவும்.”

வாலர் தனது தொப்பியை மாட்டினார். சீருடையைச் சரி செய்து கொண்டார்.

“சரி, நான் சொன்னதைச் செய்யுங்கள். பிரதான வாயிலைத் திறந்து வெளியில் காத்திருக்கும் தலைச்சுமைக்காரர்களைச் சிறைக் குள் அனுப்ப உமக்கு உத்தரவிடுகிறேன். அவர்களைப் பரிசோதித்து உள்ளே அனுப்பவும் அனுமதிக்கிறேன்” என்றார். மேஸ்திரி தன் குதிகால்களை ஒன்று சேர்த்து விறைப்பாக நின்றான்.

“உத்தரவுக்குக் கட்டுப்படுகிறேன் சார்” என்றான். வாலரின் மாளிகையிலிருந்து பிரதான வாயிலுக்கு வெள்ளைக் கார மேஸ்திரி ஓடிவந்தான். நாங்குநேரியும் அவன் பின்னால் ஓடி வந்தான்.

“வாயிற் கதவைத் திற” என மேஸ்திரி உத்தரவிட்டான். எல்லோரும் தலைச்சுமையோடு வரிசையாக நில்லுங்கள்” என்றான். ஒவ்வொரு மூட்டையாக இறக்கிப் பரிசோதனை செய்து ஒவ்வொருவராக அனுப்பினான். காய்கறி, பழங்கள் கொண்டு வந்தவர்கள் ஒவ்வொருவராக உள்ளே சென்றனர். அப்பொழுது வாழையிலைக் கட்டுகளைத் தலையில் சுமந்து கொண்டு வந்தவர்கள் உள்ளே நுழைய வந்தனர்.

“வாழையிலைக் கட்டை உடைத்துப் பார்க்க வேண்டும்” என்றான் மேஸ்திரி.

“துரை, வாழையிலைக் கட்டை ஒடச்சா எங்களுக்குத் திரும்பக் கட்டத்தெரியாது. கட்டு உதிரியாப் போவும். உதிரிய எப்படி உள்ள கொண்டு போவ முடியும்? வீணாப்போகும், அப்புறம் சாப்பிட இல இல்லாமப் போகுமய்யா” என்றவுடன், “சரி, எடுத்துப் போங்கள்” என்றான்.

வாழையிலைக் கட்டுக்குள் இருந்த ஆயுதங்கள் ஜெயில் காவலர்களின் கண்களில் இருந்து தப்பித்தன. இன்னும் சில மணிநேரத்தில் இந்தச் சிறைச்சாலை ரத்தக்களரி ஆகப் போகிறது என்று தெரியாமல் ஜெயில் சூப்பிரண்ட் வாலர் வீட்டிலிருந்து விருந்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

.

22

தளபதி மெக்காலேயின் பண்ணைவீடு பாளையங்கோட்டை சிறைச்சாலையிலிருந்து இரண்டு மைல் தள்ளியிருந்தது. ஐம்பது ஏக்கர் பரப்பில் பெரும் பண்ணையைத் தளபதி மெக்காலே நிர்வகித்து வந்தான். எட்டயபுரம், சிவகிரி ஜமீனைச் சேர்ந்த பணியாளர்கள் பண்ணையிலேயே தங்கி வேலை பார்த்தனர். தாமிரபரணித் தண்ணீரும் ஜமீன் பணியாளர்களின் உழைப்பும், மெக்காலேயின் பண்ணையைப் பசுமைச் சோலையாக மாற்றியிருந்தது. மாலை விருந்து என்பதாலும், அது இரவுவரை நீளும் என்பதாலும் பணியாளர்கள் மாளிகையின் முன்பு இருந்த மரத்தடியில் சிம்னி விளக்குகளைத் தயார் செய்துகொண்டிருந்தனர். விளக்குகளில் ஊற்ற நெய்யும், திரியும் இரண்டு பேர் தயார் செய்து கொண்டிருந்தனர். இருவர் சிம்னி விளக்குகளின் கண்ணாடிப் பகுதியில் சாம்பல் வைத்து தேய்த்து சுத்தப்படுத்திவிட்டு, பின்பு கண்ணாடிகளை வெள்ளைத்துணியால் சுத்தப்படுத்தினர். கைகள் வேலை பார்த்தாலும், அவர்கள் கண்கள் தோட்ட வீட்டின் நுழைவாயிலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தன.

விருந்து நேரங்களில் தளபதி மெக்காலே வீட்டிற்கு வருபவர்களை வேடிக்கைப் பார்ப்பதே வெகு சுவாரஸ்யமான வேலை அவர்களுக்கு. காலையில் இருந்து, இடுப்பு ஒடியும் வேலை இருந்தாலும், மாலையில் பார்க்கப்போகும் பெரிய மனிதர்களை நினைத்து அவர்கள் உற்சாகமாகவே இருப்பார்கள். ஆடம்பரமான அணிகலன்கள் அதிகம் இல்லாமலேயே கவர்ச்சியாக வந்து நிற்கும் வெள்ளைக்காரச் சீமாட்டிகளைப் பார்ப்பது, ஒவ்வொரு பதவியில் உள்ளவர்களையும் ஒவ்வொருவிதமாக வரவேற்கும் முறையைப் பார்ப்பது, எட்டயபுரம், சிவகிரி போன்ற ஜமீன்களின் வேலைக்காரர்களிடையே தங்களின் ஜமின்தாரைப் பார்க்கும் ஆவல் என வேலைக்காரர்கள் ஆளுக்கொரு ஆவலில் காத்திருப்பார்கள். விஸ்கி பாட்டிலுக்காகவும், விதவிதமான இறைச்சி உணவுகளுக்கான விருப்பத்துடன் காத்திருப்பவர்கள் வேலைக்காரர்கள் மட்டுமல்ல...

முதல் ஆளாக ரெங்கசாமி துபாஷும், சிப்பாய் ஒயிட்டும் குதிரைகளில் வந்தனர். வேலையாட்கள் ஓடிப்போய் ஒயிட்டின் குதிரையைப் பிடித்தனர். அவன் குதித்து கீழே இறங்கினான். துபாஷ் ரெங்கசாமிக்கு மெக்காலே வீட்டு வேலைக்காரப் பயல்களைப் பற்றி நன்றாகத் தெரியும். மாதத்திற்கு ஒருமுறை வேலையாட்களை மெக்காலே

மாற்றி விடுவான். இவர்கள் எல்லா வெள்ளைக்காரனையும், கலெக்டர், மேஜர் என்றுதான் நினைப்பார்கள். ஆகவே இவர்கள் “இந்த பொம்பளப் பொறுக்கி ஒயிட் பயல, பெரிய கலெக்டர்னு நினைச்சு நமக்கு முன்னாலேயே அவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரவேற்கிறாங்க” என்று துபாஷ் ரெங்கசாமி புரிந்து கொண்டார்.

குதிரையிலிருந்து இறங்கிக் கொண்டே “டேய், உடனே ஓடிப்போய் மெக்காலே துரைகிட்ட துபாஷ் ரெங்கசாமி வந்திருக்கேன்னு சொல்லுடா” என்றார். அவரை இறக்கிவிட்ட வேலையாள் இரு நூறு அடி தூரத்திலிருந்த தளபதியின் மாளிகைக்கு ஓடினான். ரெங்கசாமி துபாஷும், ஒயிட்டும் அவன் பின்னால் வேகமாக நடந்தனர். மாளிகைக்குள்ளிருந்து தளபதி மெக்காலேயும் திருமதி மெக்காலேயும் வெளியே வந்தனர். அவர்கள் இருவரும் துபாஷையும், ஒயிட்டையும் பார்த்துக்கொண்டு கையாட்டும் போது வேலையாள் துண்டை இடுப்பில் கட்டியவாறு துபாஷை நோக்கி கையைக் காண்பித்து ஏதோ சொன்னான்.

மெக்காலே “தனக்குத் தெரியும் என்பது போல“ சைகைக் காண்பித்து அவனைப் போகச் சொல்லிவிட்டார். ஒயிட் அட்டென்சனில் நின்று சல்யூட் அடித்தான். மேஜர் காலின் மெக்காலே நல்ல உயரம். அவர் மனைவி மிஸஸ் காலின் அவர் உயரத்துக்குச் சரிசமமாக இருப்பாள். இருவரும் அழகிய தம்பதிகள் என்று வெள்ளைக்காரர்கள் மத்தியில் பேச்சு உண்டு. மேஜர் காலினுக்குப் பின்னால் அவனைப் போன்றே தோற்றமுடைய ஒருவன் வந்தான். துபாஷ் ஆங்கிலேயர்கள் முன்பு மிகவும் தமாஷாகப் பேசக் கூடியவர் என்பதால் மேஜர் காலின் மெக்காலே அவரிடம் விளையாட்டாகப் பேச நினைத்தார். தன் பின்னால் வரும் தன்னைப் போன்றே உருவம் உடையவனைச் சுட்டிக்காட்டி, “மிஸ்டர் துபாஷ், மீட் மேஜர் காலின் மெக்காலே, எனது மூத்த அண்ணன்” என்றார்.

“மேஜர், எனக்கு வயதாகிவிட்டது, கண் கொஞ்சம் பிரச்சனை செய்கிறது என்பதெல்லாம்கூட உண்மைதான். அதற்காக ஆணழகன் மேஜர் மெக்காலேயையும், அவர் உயரத்திற்கும் தோற்றத்திற்கும் பொருத்தமானப் பேரழகி மிஸஸ் காலின் இருவரையும் என்னால் அரைத் தூக்கத்தில்கூட அடையாளம் காணமுடியும். இருப்பினும், உங்கள் உடன் வரும் இந்த இளைஞர் உங்களைப் போலவே இருக்கிறார். இவர் யார் என்று சொன்னீர்கள் என்றால் மகிழ்வேன்” என்றார்.

சிப்பாய் ஒயிட் மேஜர் மெக்காலேவுடன் வந்தவனைப் பார்த்ததும் சல்யூட் அடித்து "கேப்டன் சார்லஸ் மெக்காலே, எப்படியிருக்கிறீர்கள்?" என்றான்.

"மிஸ்டர் துபாஷ், இந்த ஒயிட்டுக்கு ஆண்களையும் அடையாளம் தெரிகிறது என்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒயிட் அழைத்ததுபோல, இவன் என் ஒன்று விட்ட தம்பி கேப்டன் சார்லஸ்" என்றான்.

துபாஷ் அவனை வணங்கினார். "கேப்டன், இந்தப் பகுதிக்கு பழக்கமானவரா? இந்தப் பகுதி பிடித்திருக்கிறதா" என்று கேட்டார். இது ஒரு சம்பிரதாயமான கேள்வி என்பதால் சார்லஸ் மெக்காலே விரிவாகப் பதில் சொல்லவில்லை. "ஆம்" என்று மட்டும் சொன்னான். "மேஜர் ரொம்ப முக்கியமான ஒரு விசயம் குறித்துப் பேச என்னை வரச்சொன்னீர்கள் என்று சொன்னார்கள்" என்றார் துபாஷ். "நீ விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துகொண்டிரு. நானும் சார்லஸும் இவர்களிடம் பேசிவிட்டு வருகிறோம்" மனைவியிடம் சொல்லிவிட்டுத் தன் தம்பி, துபாஷ், ஒயிட்டுடன் மேஜர் ஒரு மரத்தடி நோக்கி நடந்தான்.

பெரிய மாமரம். மரத்திற்குக் கீழ், எதிரெதிராக கல் பலகை இரண்டு இருந்தது. தன்னோடு தம்பியை உட்கார வைத்துக்கொண்டு எதிர் கல் பலகையில் துபாஷையும், ஒயிட்டையும் உட்காரச் சொன்னான். "ம்ம்... சொல்லுங்கள்" என்றான் மேஜர். துபாஷ் முகத்தில் வழிந்த வேர்வையைத் துடைத்துக்கொண்டு பேச்சை ஆரம்பித்தான்.

"மேஜர், நானும் ஒயிட்டும் சந்தையில் இருக்கும்போது உடனடியாக என்னை அழைத்தீர்கள் என்று உங்கள் சிப்பாய் சொன்னான். நான் ஒரு முக்கியமான வேலையாக வந்திருக்கிறேன், பின்பு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் உங்களை நாங்கள் அழைப்பது கலெக்டர் லூஷிங்டன்னுக்கும் தெரியும் என்று சொல்லிக் கையோடு அழைத்து வந்துவிட்டனர்" என்றார்.

"உண்மைதான். நீங்கள் சந்தையில் விசாரித்துக் கொண்டிருந்தது பிரயோசனமில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி திருச்செந்தூர் முருகன் கோயிலில் சந்தேகத்திற்கு இடமாக சிலர் நடமாடுவதாகத் தகவல்

கிடைத்தது. நமது தூத்துக்குடி கிடங்குகள் தாக்கப்படக்கூடும் என ஒற்றர்கள் ரகசிய தகவல்கள் அனுப்பியுள்ளனர்."

"மன்னிக்கவேண்டும் மேஜர், தூத்துக்குடியில் தாக்க என்ன இருக்கிறது?"

"நமது வாணிபப் பொருட்கள் இருக்கின்றன. சில சிப்பாய்கள் இருக்கிறார்கள். அதைவிட முக்கியமான இடம் பாளையங்கோட்டை ஜெயில். இது தாக்கப்பட வாய்ப்பிருக்கிறது. கட்டபொம்மனின் தம்பிகளும், நாகலாபுரம் சாப்டூர், ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, சூலத்துர் கலகக்காரர்கள் இந்தச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களை வெளிக் கொண்டுவர மருது பாண்டியர்களோ, அல்லது தூத்துக்குடி பரதவர்களோ முயற்சிப்பார்கள் எனச் சந்தேகிக்கிறேன்."

"துபாஷ், உங்களுக்கு மருது பாண்டியர்களையும், தூத்துக்குடி பகுதி பரதவர்களையும் ஏதோ காரணத்திற்காகப் பிடிக்கவில்லை என நினைக்கிறேன். ஒருவேளை, அவர்கள் உங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்ற காரணத்தால், நீங்கள் அவர்கள்மீது குற்றம் சாட்டுகிறீர்கள் என்று கூட நான் சந்தேகிக்கிறேன்."

துபாஷ் ரெங்கசாமிக்கு மிகவும் வருத்தமாகவும் கோபமாகவும் ஆகிவிட்டது. "இந்த வெள்ளைக்காரப் பசங்க யாரையும் நம்ப மாட்டான்கள். அம்பது வருசத்துக்கு முன்பு ஆங்கிலேயருங்களை எதிர்த்துக்கிட்டு ஜெனரல் ஹெரான்னோடு சண்டையிட்ட எட்டயபுரம் பாளையம் இன்னைக்கு இவனுங்களுக்கு நெருக்கமா இருக்கு. கான் சாகிப்பை இதே வெள்ளக்காரங்கத் தலையில் தூக்கி வைச்சு ஆடினாங்க. மதுரை கவர்னராகவும் நியமிச்சாங்க. ஐந்து வருசத்துல கான் சாகிப்புக்கும் அவனை மதுரை கவர்னராக்க உதவி செஞ்ச ஆற்காடு இளவரசர் மாபஸ்கானுக்கும் இடையே யார் பெரியவர்ன்ற அதிகாரப் போட்டி வந்துடுச்சு. இந்தப் பிரச்சனைப் பெரிசா வளர்ந்தபோது வெள்ளைக்காரங்க கான் சாகிப்பைக் கைவிட்டுட்டாங்க. மதுரை கவர்னர் ஆன ஐந்தாவது வருசம் அதே மதுரையில கான் சாகிப்பை ஆற்காட்டு நவாப் படை கொலை செஞ்சபோது ஆங்கிலேயருங்க எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கலை. இப்படிப்பட்ட பயல்கள் என் பேச்சையா கேட்கப் போறான்கள்" என்று நினைத்தார்.

“சரி, இவன்கள் குணமே நிலையில்லாதது” என்று முடிவு செய்து தளபதி மெக்காலேவுக்கு உடனடி பதில் தர வேண்டாம் என்று சற்று உறுதியாகப் பேசுவது என்றும் முடிவு செய்தார்.

“நீங்க என்னைத் தப்பா நினைச்சாலும் பரவாயில்லை மேஜர். பாளையங்கோட்டை ஜெயிலுக்குக் கூடுதல் பாதுகாப்புப் போடணும்.”

“துபாஷ், நீங்கள் சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்றாலும், ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். ஊமைத்துரை, அவன் அண்ணன், சில கலகக்காரர்களை பாளையங்கோட்டை சிறையில் அடைத்து வைத்த இரண்டாவது மாதத்திலேயே சிவகங்கை ஆட்கள் இந்தக் கலகக்காரர்களைக் காப்பாற்ற முயற்சித்தனர். அவர்கள் பிடிபட்டு தூக்கிலிடப்பட்டனர். தூக்கிலிடப்படுவதற்கு முன்பு அந்த இருபது பேரையும் எவ்வளவு துன்புறுத்தி விசாரித்தும் எங்கிருந்து வந்தோம் என்று வெளிப்படையாகச் சொல்ல மறுத்து விட்டனர். அவர்களுக்குத் தெரியாமல் அவர்களை நோட்டம் விட்டதில் அவர்கள் சிவகங்கையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தது. மருது சகோதரர்கள் ஆங்கிலேயக் கலெக்டர்களுக்கு நெருக்கமான நண்பர்களாக இருப்பதால் அவர்களிடம் நேரடியாக விசாரிக்க முடியவில்லை. சந்தேகத்தின் பலனை மருது சகோதரர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இருப்பினும் எங்களது கண் அவர்கள்மீது உள்ளது. எங்களுக்கு மருது சகோதரர்கள்மீது சந்தேகம் இருப்பது, அவர்களுக்கும் தெரியும். அதனால் அவர்கள் ஊமைத்துரைக்கு உதவ முன்வரமாட்டார்கள். துபாஷ் நீங்கள் துன்பப்பட்டு நிறைய செய்திகள் சேகரித்திருக்கிறீர்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலெக்டர் வருகிறார் என நினைக்கிறேன், வாருங்கள் போகலாம்” என்று சொல்லி எழுந்து நின்றார். கலெக்டர் வரும் திசையை நோக்கி வணங்கிக்கொண்டே துபாஷ் ஓடினார்.

கலெக்டர் லூஷிங்டன் அன்று நேர்த்தியான கோட் சூட் அணிந்திருந்தான். அவன் மனைவி அவன் கையைக் கோர்த்துக்கொண்டு நடந்து வந்தாள். அவர்கள் வந்த கோச் வண்டியை தூரத்தில் நிறுத்திவிட்டு இருவரும் அரை மைல் தூரம் நடந்தே வந்திருந்தனர். கோச் தூரத்தில் மெதுவாக அவர்களைத் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

கேப்டன் சார்லஸ் மெக்காலே கலெக்டரின் மனைவிக்கு முதலில் சல்யூட் அடித்தான். அடுத்து கலெக்டருக்கு சல்யூட் செய்தான். கலெக்டர்

சிரித்துக் கொண்டு அவனிடம் கை குலுக்கினார்.

“என்ன இளைஞரே? எப்போது திருமணம்? பெண் தயாராகி விட்டதா?” என்றார் லூஷிங்டன். மேஜர் வேகமாக வந்து கலெக்டருக்கு சல்யூட் அடித்தார். மேஜரின் மனைவி கலெக்டரின் மனைவியை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள். அந்த இடம் பரபரப்பாகியது. கலெக்டர் துபாஷையும், ஒயிட்டையும் பார்த்தார்.

“மிஸ்டர் ஒயிட், எங்கே உங்களது நண்பன் அந்த ஜென்டில்மேன்? பாளைச் சிறையில் இருப்பவன்? அவனும் நீயும் ஒன்று சேர்ந்து வந்தால்தான் பெண்கள் முகத்தில் சிரிப்பு வருகிறது. அவன் வந்துவிட்டானா? ஜெயில் சூப்பிரண்டு வாலர் இன்னும் வரவில்லையோ?”

மேஜர் மெக்காலே அந்த இடத்தில் உள்ள ஒரு வேலைப்பாடான மர இருக்கையைக் காண்பித்து அதில் கலெக்டரை அமரச் செய்தார்.

“யுவர் எக்ஸலன்ஸி, பார்ட்டியை ஆரம்பிக்கலாமா?” என கலெக்டரைக் கேட்டார்.

“யெஸ் மேஜர்.”

மேஜர் மெக்காலே தலையை அசைத்ததும் துபாஷ் வேலையாட்களிடம், “ஆரம்பியுங்கள்” என்று சைகைக் காண்பித்தார். தலையில் முண்டாசு கட்டி, மார்பில் துண்டைப் போர்த்திய நான்கு கேரள இளைஞர்கள் மதுக் கோப்பைகளை எடுத்து வந்தனர்.

விருந்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒயின் ஊற்றப்பட்டது.

அப்பொழுது வாலரும், அவரது நான்கு பிள்ளைகளும் கோச் வண்டியில் வந்திறங்கினர். வேகமாகப் பார்ட்டி நடக்கும் இடத்திற்கு வந்து கலெக்டருக்கு வணக்கம் தெரிவித்தார். மேஜர் மெக்காலேயிடம் கை குலுக்கினார். அவர் பின்னால் வந்த நான்கு குழந்தைகளும் கலெக்டரிடம் வந்தன.

“குழந்தைகளே, உங்கள் அம்மா எங்கே? அவர் வந்திருந்தால் இந்த இடம் இன்னும் அழகாகி இருக்குமே?” என்றார்.

“இல்லை யுவர் ஆனர், கேத்தரீனுக்கு இன்று சற்று உடல்நிலை சரியில்லை. என்னையும் குழந்தைகளையும் அனுப்பி வைத்தாள்.

கலெக்டருக்கும், மேஜர் மெக்காலேவுக்கும் தனது வணக்கத்தையும் அன்பையும் தெரிவிக்கச் சொன்னாள்."

"பரவாயில்லை, அடுத்த வாரம் என் வீட்டில் நடக்கும் பார்ட்டியில் பார்த்துக் கொள்வோம். இது தூரத்தில் உள்ள இடம். அதனால் பெண்கள் வர சிரமப்படுவர். நான்கூட இந்தப் விருந்தை என் மாளிகையில்தான் வைக்கலாம் என்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தேன். மேஜர் மெக்காலே இந்த விருந்தைத் தனது தோட்டத்தில் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று என் மனைவியிடம் அனுமதி வாங்கிவிட்டார். நான் இது போன்ற குடும்பம் சார்ந்த விசயங்களில் மனைவி பேச்சை மட்டும்தான் கேட்பேன்" என்றார். அருகிலிருந்த ஆங்கிலேயர்கள் சத்தமாகச் சிரித்தனர். துபாஷ் ரெங்கசாமி வாய்ப் பொத்தி பவ்யமாகச் சிரித்தார்.

விருந்துக்குக் குறைவான பெண்கள் வருகைத் தந்திருப்பதின் காரணம் அவருக்குத் தெரியும். மெக்காலேவின் மனைவி அழகி மட்டுமல்ல, நன்றாக நடனம் ஆடக் கூடியவள். மெக்காலேயின் மனைவியின்மேல் பல வெள்ளைக்காரப் பெண்களுக்குப் பொறாமை. அவளைப் பிடிக்காததுபோல் நடந்துகொள்வார்கள். எனவே, மெக்காலேயின் மனைவி அழைத்தும் பெரும்பாலான பெண்கள் விருந்துக்கு வரவில்லை. மெக்காலே அழைத்த அனைத்து ஆங்கிலேயர் ஆண்களும் விருந்துக்கு வந்துவிட்டார்கள். பெண்கள் தங்கள் கணவனையும், பிள்ளைகளையும் மட்டும் அனுப்பி விட்டனர். தளபதியின் மனைவி தன்னுடைய பண்ணை வீட்டில் புதிதாக வளர்க்கும் செடிகொடிகளையும் பூச்செடிகளையும் வருபவர்கள் எல்லாரிடமும் காட்டிப் பெருமைப் பேசுகிறாள். பெண்கள் தளபதியின் மனைவியைப் பார்த்தாலே ஓடி விடுகிறார்கள் எனத் துபாஷ் கேள்விப்பட்டிருந்தார். துபாஷின் சிரிப்புக்கு மட்டும் தனிப்பொருள் இருந்தது.

எல்லோருடைய கையிலும் மதுக்கோப்பை வந்தவுடன் "மதிப்பிற்குரிய நமது கவர்னர் எட்வர்ட் கிளைவ், நம் நண்பர்களான திருவிதாங்கூர் அரசர், புதுக்கோட்டை அரசர் விஜய ரகுநாத தொண்டைமான், சிவகிரி மூத்த பாளயக்காரர், எட்டயபுரம் பாளையக்காரர் மற்றும் பாஞ்சாலங்குறிச்சிப் போரின் வெற்றி வீரர் மேஜர் பானர்மேன் ஆகியோரின் உடல் நலனுக்காக" என்று சொல்லி மதுக்கோப்பையைக் கலெக்டர் உயர்த்தினார்.

கலெக்டர் சொல்லிய நண்பர்கள் பட்டியலில் இதுவரையில் ஆங்கிலேயர்களுக்கு நெருக்கமான நண்பர்களாக இருந்த ஆற்காடு நவாப் முகமது அலி, ஆற்காடு இளவரசன் உம்தத் உல் உம்ரா, மருது பாண்டியர்கள், சிவகிரி இளைய பாளையக்காரர் ஆகியோர் விடுபட்டுப் போனதைத் துபாஷ் மனதில் குறித்துக் கொண்டார். மற்ற இருவரையும் விட்டுவிட்டது கூட பரவாயில்லை. ஆற்காடு நவாப்பை எப்படிக் கலெக்டர் மறந்துவிட்டார்?

இன்றுவரை கிழக்கிந்தியக் கம்பெனி ஆற்காடு நவாப்பின் ஏஜென்டாகத்தானே செயல்படுகிறது? அம்பது ஆண்டுகளுக்கு முன்பு புலித்தேவரிடம் சண்டை நடந்ததிலிருந்து இன்றுவரை ஆங்கிலேயச் சிப்பாய்களும், ஆற்காடு நவாப் படையும் சேர்ந்துதானே போரிட்டிருக்கின்றன? இந்த ஐம்பது ஆண்டுகளில், ஆங்கிலேயர்கள் அவர்களது எதிரிகளான டச்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர்கள், பிரெஞ்சுக்காரர்களோடு போரிட்ட அனைத்துப் போர்களிலும் ஆற்காடு நவாப் படை ஆங்கிலேயர்களோடு சென்றிருக்கிறதே.

ஒரே வருடத்தில் ஆற்காடு நவாப் தன் நண்பனை எதிரி என்று அறிவித்துப் போருக்குப் போனாலும், திடீரென மனம் மாறி எதிரியை நண்பன் என அரவணைத்தாலும் அதை ஆங்கிலேயக் கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்கள் அப்படியே ஏற்றுக் கொண்டுதானே உள்ளார்கள்? ஏன் எதிரி நண்பனானான்? ஏன் நண்பன் எதிரி ஆனான்? என்று நவாப்பிடம் கிழக்கிந்தியக் கம்பெனி எப்போதாவது கேட்டிருக்கிறதா? அப்படியிருக்கையில் இன்று ஆற்காடு நவாப்பை ஓரங்கட்டுவது போலத் தெரிகிறதே என்று துபாஷ் நினைத்துக் கொண்டார்.

.

23

பாளையங்கோட்டை சிறை முன்பாகக் காய்கறி, பழங்கள், இலைக்கட்டுக்களோடு காத்திருந்த கும்பலை ஜென்டில்மேன் சிப்பாய் அழைத்தான். அனைவரும் ஓடி வந்தனர். "உங்கள் மூட்டைகளை அவிழ்த்துக் காண்பியுங்கள். என் சிப்பாய்கள் சோதனை செய்வார்கள்" என்றான். கூட்டமாக நின்று "என்னுடையதை முதலில் சோதனை போடுங்கள்","இல்லை இல்லை, என்னுடையதைத்தான் முதலில் சோதனை போட வேண்டும்", "நான் ரொம்ப நேரமாக நிற்கிறேன்" என்று கும்பலில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். அப்போது தூரத்தில் பெரும் கூச்சல் கேட்டது.

காவிவேட்டி, மேல் துண்டு, காவி நிறத்தில் தலையில் உருமா கட்டிய ஒரு கூட்டம் சிறையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதில் பத்துப் பதினோரு ஆட்கள் இருந்தனர். அவர்கள் "கந்தனுக்கு அரோகரா, திருச்செந்தூர் முருகனுக்கு அரோகரா" எனச் சத்தமிட்டு வந்தனர். சிலர் சங்கை ஊதிக் கொண்டு நடந்தனர். சிலர் திருநீர்ப் பைகளை கைகளில் வைத்திருந்தனர். திருநீர் வைத்திருப்பவர்களிடம் திருநீர்க் கேட்டு சில உள்ளூர்க்காரர்கள் பின்னாலேயே ஓடி வந்தனர். இந்த திடீர் கூட்டத்தைப் பார்த்து சிறைக் காவலாளிகள் பிரதான வாயிலை இழுத்து மூடினர். "இப்போது சோதனை நடத்த முடியாது, உள்ளேயும் அனுமதிக்க முடியாது, கிளம்புங்கள்" என்றனர்.

திருச்செந்தூர்ப் போகும் கூட்டம் சிறைச்சாலையின் பிரதான வாயிலுக்கு வரும்வரை காய்கறி விற்க வந்தவர்கள் பொறுமை காத்தனர். திருச்செந்தூர்ப் போகும் பக்தக் கூட்டத்திடம், காய்கறி மூட்டைக்காரர்கள் காலில் விழுந்து திருநீர் வாங்கினர். சிலர் காணிக்கையும் கொடுத்தனர். சிறைச்சாலை வாசலில் கூட்டமாக இருந்தது. பின்னர் பக்தர் கூட்டம் சிறைச்சாலை வாசலில் அமர்ந்தது. அவர்களைச் சுற்றி காய்கறி விற்பவர்கள் உட்கார்ந்து கொண்டனர்.

சிறைக்குள்ளிருந்து கேத்தரீனும், அவளது பெண் உதவியாளர் பாத்திமாவும் சிறைச்சாலையைவிட்டு வெளியே வந்தனர். பிரதான வாசலை நெருங்கினர். கேத்தரீனை மேஸ்திரி ஜென்டில்மேன் பார்த்து விட்டான். ஓடிவந்து சிரித்துக்கொண்டு வணங்கினான்.

“என்ன ஜென்டில்மேன், ஒரே கூட்டம்? ஏதாவது விசேசத்திற்குப் போகிறார்களா?” எனக் கேத்தரீன் கேட்டாள். அப்போது சிறைக்குள்ளிருந்து விநோதமான ஒலி வந்தது. சிறிது இடைவெளிக்குப் பின் அடுத்து அதே ஒலி வந்தது. பக்தர்கள் கூட்டத்தில் ஒருவித ஆவேசம் வந்ததுபோலத் தெரிந்தது. பக்தர்கள் கூட்டத்தில் பக்தர் வேடம் போட்டிருந்த பாண்டியன் சேர்வைக்காரன் பக்கத்தில் நின்றிருந்த கிருஷ்ணப்ப நாயக்கனிடம் அவன் காதில் கேட்டுக்கும்படி, “சாமி உத்தரவு கொடுத்திருச்சு” என்றான்.

பக்தர்கள் கூட்டத்திலிருந்த பாண்டியன் சேர்வைக்காரனும், கிருஷ்ணப்ப நாயக்கனும் கூட்டத்திலிருந்து வெளியில் வந்து கேத்தரீனைப் பார்த்து வணங்கினர். அவர்கள் யார்? என்று கேத்தரீனுக்குத் தெரியவில்லை. எங்கேயோ இவர்களைப் பார்த்திருக்கிறேனே என்று கேத்தரீனுக்குக் குழப்பமாக இருந்தது.

“ஆத்தா, என்னையும் இவனையும் தெரியலையா? அன்னிக்கு நம்ம பங்களாவுக்கு வந்திருந்தோம். பெரிய மரத்தை வெட்டினோமே? தோட்டம் போட்டோமே? போத்தி பகடையோட ஊர்க்காரங்க.”

“ஆமாம், அப்போ பாத்ததுக்கும் இப்போ பாக்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கே.”

“ஆமாம் மேம் சாகிபா, நீங்க பாத்தபோது மீசை, தாடி வைச்சிருந்தாங்க. இப்ப எடுத்துட்டாங்க. அப்பவே யோசிச்சேன். ஏதோ கோயிலுக்கு வேண்டுதல் போல” என்றாள் பாத்திமா.

சிறைக்காவலர்களுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை. “வாலர் மெக்காலே பண்ணை வீட்டிற்குச் சென்றிருக்கிறார். இந்நேரம் பார்த்து இந்தக் கும்பல் வந்திருக்கிறது. அதுவும் கும்பலில் உள்ள இரண்டு பேருக்கு கேத்தரீனைத் தெரிந்திருக்கிறது. சரி, கேத்தரீனும் பாத்திமாவும் வெளியில் கிளம்பிய பிறகு இவர்களைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அனுப்புவோம்” என ஜென்டில்மேன் மேஸ்திரி முடிவு செய்தான். கேத்தரீனை மிகவும் காதலோடு பார்த்தான்.

“நீங்கள் விருந்துக்குப் போகவில்லைதானே மேம் சாகிபா? நான் உங்களை வந்து சந்திக்கலாம் என்று இருந்தேன்” என்று உளறினான்.

“நான் வெளியே காலார நடந்து செல்லும் நேரம் இது என்பது உங்களுக்குத் தெரியும்தானே ஜென்டில்மேன்? நான் திரும்பும்போது பார்க்கலாம்” என்றாள்.

அதுவரை அமைதியாக நின்றிருந்த பாண்டியன் சேர்வைக்காரன், “ஆத்தா, இந்த காய்கறி விக்கிற கும்பல் எங்களுக்குப் பக்கத்து ஊர்க்கராங்க. எங்களுக்கு நிறையக் காணிக்கக் கொடுத்து திருநீறு வாங்கிக் கிட்டாங்க. வியாபாரம் செய்யக் காலையிலயிருந்து இந்த வாசல்லேயே காத்துக்கிட்டிருக்காங்க. காலையிலேயே வெளியே யாருகிட்டயாவது இந்தக் காய்கறிகள வித்திருந்தாலாவது நல்ல விலைக்கு வித்திருக்கலாம். இப்ப நேரமாயிருச்சு. சாயங்கால நேரத்துல காய்கறிகள விலைக்கு விக்க முடியாது. சிறைக்குள்ள ஊமைத்துரையும், சிவத்தையாவும் அவங்க அண்ணனோட திவசத்துக்கு காய்கறி, இலக்கட்டுகளை விலைக்குக் கேட்டாங்களாம். கொஞ்சம் பண வசதி உள்ள ஆளுங்க. இவனுங்கள உள்ள விட்டா கொஞ்சம் வியாபாரம் பண்ணுவாங்க. அதுல வர்ற லாபத்தில எங்களுக்கும் இன்னும் கொஞ்சம் காணிக்கை கிடைக்கும்” என்றான்.

“ஆமாம், ஊமைத்துரைக்கும் சிவத்தையாவுக்கும் அவங்க அண்ணனின் திவசத்திற்குக் காய்கறி, வாழையிலை வாங்கிக் கொள்ள ஏற்கனவே என் கணவர் அனுமதி கொடுத்தாரே? ஏன் மிஸ்டர் ஜென்டில்மேன் உங்களிடம்தானே சொன்னார்?”

“யெஸ் மேடம். ஆனால்...”

“என்ன ஆனால்? மிஸ்டர் ஜென்டில்மேன் ஊமைத்துரை வாய் பேச முடியாத பாவப்பட்டவர். அண்ணனை இழந்துள்ளார். பாவம், இவர்கள் காலையில இருந்து காத்திருக்கிறாங்க. இருட்டப் போகிறது. இவர்களை அனுமதியுங்கள். நான் வாலரிடம் சொல்லிக் கொள்கிறேன்” என்றார்.

“கேத்தரீன், வேண்டாம். இது விஷப்பரிட்சை போலத் தெரிகிறது” என்றான்.

அதுவரை தன்னை மேடம் என்று அழைத்தவன் உரிமையுடன் கேத்தரீன் என அழைப்பதை நினைத்து அவனைப் பார்த்து சிரித்தாள்.

“உங்கள் மேலதிகாரி சொன்ன உத்தரவை நடைமுறைப்படுத்த மாட்டேன் என்கிறீர்களே? உங்களை எப்படி இனி ஜென்டில்மேன் என

அழைப்பது?” எனப் பொய்க் கோபம் காட்டினாள் கேத்தரீன்.

“கார்ட்ஸ், வாயிற் கதவைத் திறந்து விடுங்கள்” என்று ஜென்டில்மேன் மேஸ்திரி ஆணையிட்டான். கையிலிருந்த சாவியை இன்னொரு வெள்ளைக்காரச் சிப்பாயை நோக்கித் தூக்கிப் போட்டான். அந்தச் சாவிக்கொத்தை லாவகமாகப் பிடித்த சிப்பாய் பூட்டைத் திறந்தான். கதவு முழுதாகத் திறந்தது. காய்கறி மூட்டையை வைத்திருந்தோர் உள்ளே வரிசையாக அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொருவரைச் சோதனையிடும் போதும் அவர்களைப் பார்த்து கேத்தரீன் சிநேகமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். சோதனையிடப்பட்டவர்கள் சிறைக்கு உள்ளே வரிசையாகச் சென்றனர். அவர்களாடு சேர்ந்து கேத்தரீனும் நடந்தாள்.

“மேம் சாகிபா, நாம் தாமிரபரணி ஆற்றங்கரைக்குச் செல்ல வேண்டியுள்ளது”என்றார் பாத்திமா.

“தினமும்தானே ஆற்றங்கரைக்குப் போகிறோம். இன்று இவர்களோடு போய் அந்த ஊமையையும், சிவத்தையாவையும் பார்ப்போம். திவசம் எப்படிக் கொடுப்பார்கள் என நானும் பார்த்தது கிடையாது” என்றாள்.

இரண்டு பெரும் வாசல் கதவுகள் தாண்டி கருங்கல் கட்டிடம் ஒன்று வந்தது. அதில் வரிசையாக கட்டப்பட்ட அறைகள் பத்துக்கும் மேலிருந்தன. முதல் அறையிலிருந்து சிவத்தையா வெளியே வந்தான். கேத்தரீனும் பாத்திமாவும் சிவத்தையா கண்ணில்படாமல் சுவரோரமாக இருந்த ஒரு பெரிய மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர். சூரியன் மறையும் நேரமாக இருந்ததால் சிவத்தையா நின்ற மேற்குப் பகுதி சூரிய வெளிச்சத்தில் இருந்தது. கேத்தரீன் கிழக்குப் பக்கம் மரத்திற்குப் பின்னால் இருந்தாள். சிவத்தையாவின் பார்வையில் அவர்கள் படவில்லை. சிவத்தையாவைப் பார்த்ததும் காய்கறிக் கும்பல் அவர் காலில் விழுந்தது. அவர்களை அவர் ஆசிர்வதித்தார்.

“ரெண்டு அண்ணனும் நல்லாயிருக்காங்களா?” என்றார் சிவத்தையா.

“ஆமா சாமி, ஒங்கள எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்காங்க” என்றனர்.

“ரெண்டு அண்ணன்னா யாரு பாத்திமா” என்றாள் மெதுவான குரலில்

“மேம் சாகிபா, மருது சகோதரங்களாயிருக்கும்.”

“சிவத்தையா ஏன் மருது பாண்டியர்களைப் பற்றிக் காய்கறிக்காரர்களிடம் கேட்க வேண்டும்?” என்றாள் கேத்தரீன்.

“ஏதோ தப்பா தெரியுது மேம் சாகிபா. நம்ம குடி கெடப்போகுது. வாங்க திரும்ப ஓடிருவோம்” என்று பாத்திமா கேத்தரீனின் கையைப் பிடித்து இழுத்தாள்.

“ஒன்னும் ஆகாது, பொறு” என்றாள் கேத்தரீன் கையை விடுவித்துக்கொண்டே.

சிவத்தையா சிப்பாய்களிடம், “தம்பியையும் திறந்து விடுங்கள். அவனே என் அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மிகவும் பிடித்தமான தம்பி” என சொன்னார். சிறிது நேரத்தில் ஊமைத்துரை வந்தார். அவருடன் இரண்டு சிப்பாய்கள் வந்தனர். இந்த முறை அவரை யாரும் கைத்தாங்கலாக அழைத்து வரவில்லை. அண்ணனைப் பார்த்து வணங்கினார்.

மொத்தக் காய்கறி விற்பவர்கள் கூட்டமும் ஊமைத்துரை காலில் விழுந்தது. அவர் நின்ற இடத்தில் தரையில் கிடந்த மண்ணை அள்ளி நெற்றியில் பூசிக் கொண்டனர். “சாமி,சாமி” என்று அழுது புலம்பினர். அவர்கள் சிறிது நேரம் அழுக அனுமதித்த ஊமை, தன் கண்ணீரையும் துடைத்துக் கொண்டார். மரத்திற்குப் பின்னால் இருந்த கேத்தரீன் மெதுவாக ஊமைத்துரை நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்தாள். பாத்திமா அவள் கையைப் பிடித்து இழுத்து “வேண்டாம் மேம் சாகிபா” என்று கத்தியதை ஊமைத்துரையும் சிவத்தையாவும் பார்த்தனர். ஊமையைப் பார்த்து கேத்தரீன் கை ஆட்டினாள். “எப்படியிருக்கிறீர்கள்? உடம்பு பரவாயில்லையா?” எனச் சைகை மொழியில் கேட்டாள். ஊமையும் பதில் சைகை செய்தான். பிரதான வாயிலில் இருந்த சிப்பாய் ஒருவன் ஓடிவந்தான்.

“மேம் சாகிபா, வெளியில் நிற்கும் பக்தர் கூட்டமும் சிறைக்கு உள்ளே வந்து ஊமைத்துரையைப் பார்க்க வேண்டும் என்று

வற்புறுத்துகின்றனர். என்னை ஜென்டில்மேன் அனுப்பி, இந்த காய்கறி ஆட்களை வெளியே அனுப்பிவிடச் சொன்னார்”’என்றான்.

கேத்தரீன் இதைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே ஒருவித ஒலி வந்தது. சிறிது நேரத்திற்கு முன்பு அவள் வெளி வாயிலில் இருக்கும்போது கேட்ட அதே ஒலி. கேத்தரீன் திரும்பிப் பார்த்தாள். ஊமைத்துரைதான் அந்த ஒலியை எழுப்பியவன். கேத்தரீன் ஊமையைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே காய்கறி விற்பவர்கள் கூட்டம் ஆவேசமாக மாறியது. வாழையிலைக் கட்டுக்களைப் பரபர வென்று பிரித்தனர். மேட்ச் லாக் துப்பாக்கிகள், குத்தீட்டிகள் என அதிலிருந்த ஆயுதங்கள் வெளிப்பட்டன. வந்திருந்தவர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் வரிசையாக ஆயுதம் தாங்கினர்.

மிகச்சரியாக அதேநேரத்தில், பிரதான வாயிலை உடைத்துக் கொண்டு பாண்டியன் சேர்வைக்காரனும், கிருஷ்ணப்ப நாயக்கனும், போத்தி பகடையும், ஊமைத்துரை இருந்த கட்டிடத்தை நோக்கி ஓடி வந்தனர். அவர்களைத் தடுத்த இரண்டு உள்ளூர்ச் சிப்பாய்களை வெட்டிச் சாய்த்தனர். உள்ளிருந்தவர்கள் கையில் கிடைக்கும் பொருளைக் கொண்டு எதிரில் ஓடிவரும் சிப்பாய்களைத் தாக்கினர். சிறைக்குள் பெரும் கலவரம் வெடித்தது. சிறையில் கலவரம் நடப்பதை வெளி உலகுக்கு தெரிவிக்க நினைத்த ஜென்டில்மேன் அவசர மணியை அடிக்க ஓடினான். அவனை விரட்டிச் சென்று அவன் இரு கைகளையும் வெட்டினர். ஜென்டில்மேன் ரத்த வெள்ளத்தில் மிதந்தான். பதின்மூன்று கைதிகளின் சிறைக்கதவுகளையும் அடித்து நொறுக்கினர். ஊமைத்துரையையும், சிவத்தையாவையும் தங்கள் தோள்களில் ஏற்றிப் பிரதான வாயிலுக்கு விரைந்தனர்.

போர் முனையில், தளபதியில்லாமல் போரிட நேர்ந்துவிட்ட வீரர்களைப்போல் அவர்கள் இருந்தாலும், இலக்கை நோக்கிச் சரியாகப் பாயும் அம்புகளைப்போல், எல்லோரும் ஒரு திசையை நோக்கியே பாய்ந்தனர். சிறைச்சாலையைவிட்டு ஊர் எல்லை வரை ஓடி வந்தனர். இருள், ஊரை மெல்ல ஆக்கிரமிக்கத் தொடங்கி இருந்தது. ஆனால், தங்கள் மண்ணின் விடுதலை வெளிச்சத்தைத் தோளில் சுமந்து ஓடுவதுபோல், அவர்கள் முகங்கள் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தன.

எல்லைக்கு வந்ததும் தயாராக இருந்த ஐந்து குதிரைகளில் சிவத்தையா, ஊமைத்துரை, பாண்டியன் சேர்வைக்காரன், போத்தி பகடை, கிருஷ்ணப்ப நாயக்கர் என ஆளுக்கு ஒரு குதிரையில் ஏறினர்.

ஊமைத்துரையின் குதிரை முன் செல்ல நான்கு குதிரைகளும் அணி வகுத்துப் பின் சென்றன. வல்ல நாடு நோக்கிக் குதிரைகள் விடுதலை வேட்கையுடன் பாய்ந்தோடின.

.

24

மெட்ராஸ் சேப்பாக்கத்திலிருக்கும் செங்கல்லால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான சிகப்புக் கட்டிடம். கடற்கரையை ஒட்டிய ஆற்காடு நவாப் மாளிகை. நான்கு பக்கமும் ஒரு மைல் சுற்றளவிற்கு எந்தக் கட்டிடமும் இல்லை. தெற்கே திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், வடக்கே செயின்ட் ஜார்ஜ் கோட்டை, கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே திருவல்லிக்கேணி மசூதி. நவாப்பின் மாளிகையைச் சுற்றி உயர்ந்த நீண்ட மதில் சுவர்கள். கோட்டை மதில் சுவருக்கு வெளியே கடல் மணல்தான்.

நவாப் உம்தத் உல் உம்ரா தனது மாளிகையின்மேல் தளத்திலிருந்த அறையில் அமர்ந்திருக்கிறார். பிப்ரவரி மாத இதமான காற்று அவருக்குச் சற்று மகிழ்ச்சியைத் தந்தது.

கவர்னர் எட்வர்ட் கிளைவைப் பார்க்க வேண்டும் என்று, தான் இருமுறை சொல்லி அனுப்பியும் கவர்னர் இதுவரை நேரம் கொடுக்கவில்லை. “ஆற்காடு நவாப்கள் என் உயிர் தோழர்கள். எனக்கு ஆற்காடு வீரர் என்று பெயர் வாங்கித் தருவதற்கு காரணமானவர்கள்” என்று இதே எட்வர்ட் கிளைவின் தகப்பனார் ராபர்ட் கிளைவ் கவர்னராக இருக்கும்போது அடிக்கடி சொல்லுவாரே? இந்த நாற்பது ஆண்டுகளில் ஆற்காடு நவாப்பின் மதிப்புக் குறைந்து விட்டதா? எத்தனை முறை எனது தகப்பனார் வாலாஜா முகம்மது அலியையும், நவாப் அன்வர்தீனையும் பார்ப்பதற்காகக் கவர்னர் ராபர்ட் கிளைவ் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

இந்தக் கிழக்கிந்தியக் கம்பெனி நச்சு மரமாக வளர்ந்துவிட்டதே என நவாப் யோசித்தார். இருநூறு வருசத்துக்கு முன்பு கிழக்கிந்தியக் கம்பெனியை ஆரம்பித்தார்கள். பனிரெண்டு ஆண்டுகள் பெயருக்குக் கம்பெனி நடத்திக் கொண்டிருந்தவர்கள், கிராம்பு, மசாலாப் பொருட்கள், இலவங்கம், பட்டை முதலியவற்றை டச்சுக் கிழக் கிந்தியக் கம்பெனி மூலம்தானே வாங்கி விற்றுக் கொண்டிருந்தனர். அந்தக் காலகட்டத்தில்தான் ஸ்பெயின் நாட்டிலிருந்து, ஹாலந்து விடுதலை பெற்றிருந்தது. புதிய தேசத்தின் பிரதிநிதிகளான டச்சுக் காரர்கள் இந்தியாவுடனான வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

டச்சுக்காரர்கள் மூலம் வாங்கி விற்றால் கிடைக்கும் லாபம் போதவில்லையென்றுதானே, இந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நேரடி வியாபாரத்திற்கு ஆசைப்பட்டார்கள்? இந்தியப் பேரரசர் ஜஹாங்கீரிடம் கெஞ்சிக் கூத்தாடி குஜராத்திலுள்ள சூரத்தைக் குத்தகைக்கு வாங்கினார்கள். கல்கத்தாவில் உள்ள ஹூக்ளியைக் குத்தகைக்கு வாங்கினார்கள். மொகலாயப் பேரரசரின் அன்புக்குப் பாத்திரமாகியிருந்த போக்டன் என்ற ஆங்கிலேய டாக்டரின் உதவியால்தான் ஹூக்ளி குத்தகைக்குக் கிடைத்தது. போர்ச்சுக்கீசிய இளவரசி கேத்தரீன் பிரகன்சாவை இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் மணந்ததால் பம்பாய் நகரம் அவருக்குச் சீதனமாகக் கிடைத்தது. தனக்குக் கிடைத்த சீதனத்தை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இளவரசர் கொடுத்துவிட்டார்.

இந்தியாவின் முக்கிய வியாபாரத் தலங்கள் ஆங்கிலேயர்களின் கைகளுக்கு எளிதாகக் கிடைத்து விட்டன. அவர்கள் அதிர்ஷ்ட சாலிகள்தான். முஸ்லீம் அரசர்களின் ஆதரவில்தானே ஈஸ்ட் இந்தியா கம்பெனி வளர்ந்தது? ஆங்கிலேயர்கள் ஜஹாங்கீரைச் சந்தித்து அவரது ஆதரவு பெற்று 194 வருடங்களாகின்றன. எத்தனை மாற்றங்கள்? முஸ்லீம் அரசர்களைப் பார்க்கும்போதெல்லாம் காலில் விழுந்து பல்லைக் காட்டிய ஆங்கிலேயர்கள் இன்று? வெறும் வியாபாரிகளாக இருந்த அவர்களுக்கு ஆட்சி செய்ய ஆசை வந்தபோது, அந்த ஆசைக்குத் தூபம் போட்டு வளர்த்தவர்கள் நாங்கள்தானே? நாங்கள் இல்லாமல் ஈஸ்ட் இந்தியா கம்பெனி இந்தியாவில் காலூன்றி இருக்குமா? வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டதுடன், இந்திய அரசர்களையும் அடக்கியாள ஆரம்பித்திருக்கிறார்கள். இவை எங்களின் தோள்மேல் அவர்கள் பெற்ற வெற்றியில்லையா? இன்று... வளர்ந்துவிட்ட நிலையில் எங்களை விலக்கி வைக்க நினைக்கிறார்களா? என்றெல்லாம் யோசித்தார்.

சிறுவனாக இருக்கும்போது பார்த்திருக்கிறேன், எத்தனை உக்கிரமான போர்களை ஆங்கிலேயத் தளபதிகளோடு சேர்ந்து நடத்தியிருக்கிறோம்? எத்தனை உடன்படிக்கைகளில் ஆங்கிலேயர் களோடு சேர்ந்து கையொப்பமிட்டிருக்கிறோம்? எனது தந்தை, நவாப் வாலாஜா முகம்மது அலியோடு போட்ட ஒப்பந்தத்தின்படி வடக்கே நெல்லூரிலிருந்து தெற்கே திருநெல்வேலிவரை எங்கள் ராஜ்ஜியம் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதே? எங்கள் ஆளுகையில் வட ஆற்காடு, தென் ஆற்காடு, நெல்லூர் மாவட்டங்களுக்கும் உடையார்பாளையம், துறையூர், அரியலூர் தொடங்கி ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, பாஞ்சாலங்குறிச்சி, சேத்தூர், நெல்கட்டும் சேவல், கடம்பூர், வடகரை என்று பரந்திருந்த எங்கள் பகுதிக்கு எங்கள் சார்பாக நஜர், பேஷ்குஷ் வசூலிக்கும் ஏஜென்டாக ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை நியமித்தோமே? என் தந்தை வாலாஜா முகம்மது அலி உடன் செய்து கொண்ட உடன்படிக்கை இதுவரை ரத்து செய்யவோ, மாற்றப்படவோ இல்லையே?

நாங்கள் எதிரியாக நினைப்பவர்களை எங்கள் உத்தரவின் பேரில் ஆங்கிலேயர்கள் தாக்கி இருக்கிறார்கள். சமாதானம் என்று சொன்னவுடன் சண்டையை நிறுத்தியிருக்கிறார்கள். ஏன், எதற்கு என்று கேட்டதில்லை. எதிரியை அடக்கிய பிறகு கிடைக்கும் தொகையைச் சமமாகப் பிரித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுடன் உடன்படிக்கை செய்த மூன்றாம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி தன்னிச்சையாக நடக்க ஆரம்பித்துவிட்டது. எங்கள் பகுதியிலிருந்த ஜமீன்தாரர்களிடம் தன்னை 'ஆற்காடு நவாப்பின் ஏஜென்ட்' என்று பெருமையுடன் சொல்லிக்கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனி இப்போது இறுமாப்புடன் 'நாங்கள்தான் உண்மையான ஆட்சியாளர்கள்' என எங்களிடமே காட்டிக் கொள்கிறதே?

ராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு நியமித்திருந்த முஸ்லீம் கவர்னரை ஆங்கிலேயர்கள் ராமநாதபுரம் கோட்டையைவிட்டு வெளியேற்றினார்கள். சேதுபதியைத் திருச்சிராப்பள்ளிக் கோட்டை யில் சிறை வைத்துள்ளனர். அவரைப் பார்க்கும் துயரம் வேண்டாம் என்பதற்காகவே நான் திருச்சிராப்பள்ளிப் பக்கம் போவதில்லை. மெட்ராஸ் கோட்டைக்குள் உள்ள செயின்ட் மேரி தேவாலயத்தில் நடக்கும் ஆங்கிலேய அதிகாரிகளின் திருமணங்களுக்கும்கூட போவதில்லை. இதெல்லாம் இந்தக் கவர்னர் எட்வர்ட் கிளைவிற்குத் தெரியாதா? அவர் இங்குப் பணியில் சேர்ந்தபோது மரியாதை நிமித்தமாக நான் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் சென்று அவரைச் சந்தித்து வாழ்த்தினேனே?

அப்போது என்னைச் செயின்ட் மேரி தேவாலயத்திற்கு அழைத்துச் சென்ற கவர்னர் எட்வர்ட் கிளைவ், “நவாப், இந்தச் சர்ச்சிற்கும் என் குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று உங்களுக்குத் தெரியும். எனது தகப்பனார் ராபர்ட் கிளைவின் நண்பர் நீங்கள். எனது தகப்பனாருக்கும் தாய் மார்கரெட்டுக்கும் இதே தேவாலயத்தில் திருமணம் நடந்தபோது நீங்கள் உங்கள் தந்தையோடு வந்திருப்பீர்களே? என்ன பரிசு கொடுத்தீர்கள்?” என்று சிறு குழந்தைபோல கேட்ட இந்த எட்வர்ட் கிளைவ் இன்று என்னை உதாசீனப்படுத்துகிறாரா? உம்ராவின் மனம் ஆழமான வலியில் தோய்ந்து நின்றது.

நவாப் உம்தத் உல் உம்ராவின் சிந்தனை ஓட்டத்தைத் தடை செய்யும் விதமாக மரப்படிகளில் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது.

“யார்?” என்றார் நவாப் உம்தத் உல் உம்ரா.

“நவாப், நான் அமீர் உல் உம்ரா. ஆற்காடு நவாபை, என் மரியாதைக்குரிய அண்ணனான தங்களை வணங்குகிறேன் “ என்றார்.

உம்தத் உல் உம்ராவும் அமீர் உல் உம்ராவும் உடன்பிறந்தவர்கள். இருவரும் தோற்றத்தில் ஒரே மாதிரி இருப்பார்கள். உம்தத் உல் உம்ரா வயோதிகத்தின் காரணமாகச் சற்றுப்பருமனாகவும், தலை முடி நரைத்தும் காணப்பட்டார்.

அமீர் உல் உம்ரா உடம்பை நன்கு பேணுபவர். தினமும் குதிரை ஏற்றமும், உடற்பயிற்சியும் செய்பவர். நரைத்துப்போன தலைமுடிக்கும், தாடிக்கும் மருதாணியிட்டு முடியைச் சிவப்பு நிறத்தில் வைத்திருந்தார்.

“அமீர், நான் உன்னை அழைத்துப் பேச வேண்டும் என நினைத்திருந்தேன். நீயே வந்துவிட்டாய். பணியாட்களை அனுப்பி நம் இருவருக்கும் தாழ்வாரத்தில் ஆசனம் இடச் சொல். மாலை நேரம் கடலுக்குள் மறையும் சூரியனையும், இரவில் உதிக்கும் நிலவையும் எந்தவிதத் தடங்களும் இல்லாமல் பார்க்க வேண்டும் என்றுதான் நமது தகப்பனார் வாலாஜா முகம்மது அலி, தனது ஆற்காட்டு மாளிகையை விட்டுவிட்டு, மெட்ராஸ் சேப்பாக்கத்தில் கடற் கரையை ஒட்டிய இந்த மாளிகையைக் கட்டினார். நான்கு புறமும் நம்மைச் சுற்றிக் குடியிருப்புகளே இருக்கக் கூடாது என்று இங்கு வாப்பா வந்தார். ஆனால், இன்று நம்மைச் சுற்றி நண்பர்கள் யாருமே இல்லாமல் போனது போல் ஆகிவிட்டது.”

“ஹுசூர், நீங்கள் இப்படியெல்லாம் பேசி எங்களைப் போன்றோரை வருத்தமடையச் செய்ய வேண்டாம். காலம் மாறிக் கொண்டிருக்கிறது. வினை விதைத்தால் வினையை அறுப்பான் என்று இந்துக்கள் சொல்லுவார்கள். நாம் வளர்த்து விட்டவனே இன்று நம் வாழ்வில் விளையாடுகிறான்.”

“நீ சரியாகத்தான் சொல்லுவாய். ஆசனங்களைத் தயார் செய்து விட்டு வா. நான் சிறிது நேரத்தில் அங்கு வருகிறேன்” என்றார் நவாப் உம்தத் உல் உம்ரா.

“இருபது வருடங்களுக்கு முன்பு உம்தத் உல் உம்ரா என்ற தன் பெயரைக் கேட்டால் பாளையங்கள் மிரளுமே? திருச்சி சிறையிலிருந்த சேதுபதி முத்துராமலிங்கத் தேவரை என் தகப்பனார் விடுதலை செய்து சேதுபதி என அறிவித்தாரே, அப்போது ஆற்காடு இளவரசர் என்ற முறையில் நான் சேதுபதியோடு ராமநாதபுரத்திற்குச் சென்றபோது கிடைத்த மாலைகள், மரியாதைகள் என்னென்ன? பத்து வயதுப் பாலகனாகச் சிறையில் அடைக்கப்பட்ட முத்துராமலிங்க சேதுபதி, இருபது வயதில் விடுதலையாகி வந்தபோது, ஆற்காடு நவாப்பான என்னுடைய சிபாரிசில்தானே மீண்டும் ராமநாதபுரம் சேதுபதியாக அறிவிக்கப்பட்டார்? முத்துராமலிங்க சேதுபதியின் மதிப்பைக் குறைக்க, சேதுபதியின் தகப்பனாரின் மற்றொரு மனைவி மூலம் பிறந்த மங்களேஸ்வரி நாச்சியார், ‘முத்துராமலிங்க சேதுபதி ஒரு பெண் பித்தர்’ என்று புகார் கொடுத்தபோது ராமநாதபுரத்தின் ஆங்கிலேயப் பிரதிநிதி கர்னல் மார்டின்ஸ் என்னிடம்தானே ஆணை வேண்டி நின்றான்.

மங்களேஸ்வரி தன் சகோதரன்மீது கொடுத்த புகார் மனுவை நான் படித்துப் பார்க்கும்போது கர்னல் மார்ட்டின்ஸ் பணிவுடன் நின்று கொண்டுதானே இருந்தான்? அந்தக் கடித வாசகங்கள் தமிழில் இருந்ததால் துபாஷ் அதைப் படித்தபோது கர்னல் மார்டின்ஸ் மிகவும் மரியாதையுடன் என்னிடம் “நீங்கள் இந்த விசயத்தில் என்ன நினைக்கிறீர்களோ, அதைக் கவர்னர் ஜெனரல் செய்வார் என்று சொன்னானே?” துபாஷ் கடிதத்தைப் படித்த நிகழ்வு இன்றும் ஆற்காடு நவாப் உம்தத் உல் உம்ராவுக்கு நினைவுக்கு வந்தது.

“மரியாதைக்குரிய ஆற்காடு நவாப் உம்தத் உல் உம்ரா சமூகத்திற்கு, சேதுபதியின் மகள் மங்களேஸ்வரி நாச்சியார் எழுதும் புகார் மனு. எனது சகோதரர் முத்துராமலிங்கம் உங்களது ஆதரவால் சேதுபதி

ஆனார். கடந்த பத்து ஆண்டுகளாக அவர் என்னோடு மட்டுமின்றி எங்களது உறவினர்களாக உள்ள சிவகங்கை அரசோடும் மோதல் போக்கைக் கொண்டிருக்கிறார். சிவகங்கை அரசராக எங்களது அத்தை அகிலாண்டீஸ்வரியின் கணவர் சசிவர்ணத் தேவர் இருந்தார். அவர் மறைவுக்குப்பின் அவரது மகனும் எங்களது சித்தப்பா மகள் வேலு நாச்சியாரை மணந்தவருமான முத்து வடுகநாத தேவரோடும் எங்கள் சமஸ்தானம் நல்ல தொடர்பில் இருந்தது.

முத்து வடுகநாதர் ஓர் அசாதாரணமானச் சூழலில் இறந்ததை, நீங்கள் அறிவீர்கள். முத்து வடுகநாதருக்கும் வேலு நாச்சியாருக்கும் பிறந்த வெள்ளச்சியைத் தனக்குத் திருமணம் செய்து தரச் சொல்லி சிவகங்கையோடு முத்துராமலிங்க சேதுபதி பிரச்சனை செய்தார். விருப்பப்படாத பெண்ணை வழிக்குக் கொண்டு வர தொண்டித் துறைமுகத்திற்கு வந்த சிவகங்கைச் சரக்குகளைப் பறிமுதல் செய்தார். சிவகங்கைக்குச் செல்லும் பாதைகளை அடைத்தார். இதற்கு பதிலடியாக சிவகங்கை மருது பாண்டியர்கள், வைகை நதி ராமநாதபுரம் கண்மாய்க்கு வராதவாறு அங்கங்கே அணைகளைக் கட்டி நீரைத் திருப்பினர். ஆற்காடு நவாபான தங்களது தலையீட்டினால் சேதுபதி சிவகங்கைக்குச் செல்லும் பாதைகளைத் திறந்துவிட்டார். மருது சகோதரர்கள் வைகை நதியின்மீது கட்டிய அணையை உடைத்து நீரை ராமநாதபுரம் வர வைத்தனர்.

இப்போது அரண்மனைக்குள் அவர் செய்யும் அட்டூழியங்களை விவரிக்க முடியவில்லை. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதியான கர்னல் மார்டின்சையும் சேதுபதியின் அமைச்சர் முத்து இருளப்ப பிள்ளையையும் விசாரித்தாலே உண்மைகள் தெரிய வரும். நான் சொல்லுவதைக்கூட மாற்றாந்தாயின் மகள் பொறாமையில் சொல்லுகிறாள் என்று எடுத்துக்கொண்டாலும், கர்னல் மார்டின்சும், அமைச்சர் முத்து இருளப்ப பிள்ளையும் ஏன் சேதுபதி மீது பொய்க் குற்றம் சாட்டப்போகிறார்கள்? கர்னல் மார்டின்சின் தோற்றத்தைக் கேவலப்படுத்திச் சேதுபதி அடிக்கடி பேசுகிறார். கர்னல் மார்டின்சை ‘குள்ளக் குரங்கு மனிதன்’ என்று தனது நெருங்கிய சகாக்களிடம் கேவலமாகப் பேசிச் சிரிக்கிறார். சேதுபதி ஒரு பெண் பித்தர். கணவர்கள் கண் முன்னாலேயே மனைவிகளை மானபங்கப்படுத்துகிறார். தகப்பனுக்குத் தெரிந்தே மகள்களைப் பெண்டாளுகிறார். மொத்த அரண்மனையையும், அந்தப்புரமாக்கி விட்டார். இதைக்கூட அவரின் தனிப்பட்ட நடவடிக்கை என்று அவர் மன்னிக்கப்பட்டு விடலாம்.

தற்போது சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரன் என்ற ஒரு புரட்சிக்காரனோடு நெருங்கிய தொடர்பில் உள்ளார். இந்த மயிலப்பன் ஒரு ஆபத்தான மனிதன். யாருக்கும் கட்டுப் பட மாட்டான். அவன் இப்பொழுது சேதுபதிக்கு மட்டும் கட்டுப்பட்டவன்போல் காட்டிக்கொண்டு சேதுபதியுடன் இருக் கிறான். மயிலப்பனும், அகம்படியார் ஜாதியைச் சேர்ந்த மீனங்குடி முத்துக் கருப்பத் தேவரும் அடிக்கடி சேதுபதியைச் சந்தித்து ரகசியப் பேச்சு நடத்துகின்றனர். பக்கத்தில் உள்ள சின்ன மறவர் நாட்டின் நிர்வாகம், மறவர் இனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து அகம்படியார் இனத்தைச் சேர்ந்த மருது பாண்டியர்களின் முழுக் கட்டுப்பாட்டிற்கு வந்துவிட்டது. எனது அத்தை வேலு நாச்சியாரின் மகள் வெள்ளச்சி ஏழாண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். அத்தை வேலு நாச்சியாரும் உடல்நிலை சரியில்லாது விருப்பாச்சிக்குப் போய் விட்டார். வெள்ளச்சியின் கணவர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் இப்போது சிவகங்கையின் அரசராக இருக்கிறார். அவர் பெரிய மருது சேர்வைக்காரரின் மகள் மருதாத்தாளை மணந்துள்ளார்.

சிவகங்கை மறவர் சீமை அகம்படியார்களான மருது சேர்வைக்காரர்களின் குடும்பத்திற்குச் சென்றுவிட்டது. இப்போது சிவகங்கைப் பகுதிகளில் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் 'ராஜமான்ய' என்றும் 'ஆதின கர்த்தர்" என்றும் மருது சகோதரர்கள் தங்களை அழைத்துக் கொள்கின்றனர். வேலு நாச்சியாரின் கணவர் முத்து வடுகநாதர் சிவகங்கை அரசராகயிருந்தபோது பெரிய மருது சிறுவயல் ஜமீன்தாராக அறியப்பட்டார். சின்ன மருது சேர்வைக்காரர் உள்ளிக்கோட்டை ஜமீன்தார் என்று அறியப்பட்டார். மதுரையின் நாயக்க அரசர்களைப்போல், இப்போதுள்ள சிவகங்கை அரசர் பெரிய உடையணத் தேவரும் முந்தைய அரசர்களும் தங்களை 'ராஜமான்ய' என்று அழைத்துக் கொள்கின்றனர். அதுபோலவே மருது சகோதர்களும் தங்களை அழைத்துக்கொள்கிறார்கள்.

'ராஜமான்ய' 'ஆதினகர்த்தர்" போன்ற பட்டங்கள் அரசர்கள் சூடிக்கொள்பவை. மந்திரி பிரதானிகளாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் மருது சகோதரர்கள் எப்போது சிவகங்கை அரசர்கள் ஆனார்கள் என்று தெரியவில்லை. இதே வழியில் ராமநாதபுரம் சீமையில் உள்ள அகம்படியார் ஜாதியைச் சேர்ந்தவர்கள் எனது தம்பியை ஓரம் கட்டிவிட்டு அவர்கள் ராமநாதபுரம் சேதுபதியாகி விடுவார்களோ என அஞ்சுகிறேன். இந்த மயிலப்பனையும், ராமநாதபுரம் முத்துக் கருப்பத் தேவரையும் தாங்கள் அடக்க வேண்டும். இல்லையென்றால் இவர்கள் நவாபாகிய

தங்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பிரச்சனைக்குரியவர்களாக ஆகிவிடுவார்கள். ஏற்கனவே உங்களுக்குத் தொந்தரவு கொடுத்த கான் சாகிப்போல, கட்டபொம்மன்போல, நெல்கட்டும் சேவல் புலித்தேவர்போல, என் தம்பி முத்துராமலிங்க சேதுபதியும், மயிலப்பனும், ராமநாதபுரம் முத்துக்கருப்பத் தேவரும் வளர்ந்துவிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, சேதுபதியைப் பதவியிலிருந்து உடனடியாக நீங்கள் நீக்க வேண்டும்" மங்களேஸ்வரி நாச்சியார் எழுதிய கடிதம்.

ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி எனது ஆட்சிக்கும், ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்கும் தொடர்ந்து பிரச்சனை கொடுத்து இப்போது சிறையில் அடைக்கப்பட்டு அமைதியாகிவிட்டார். ஆனால் இன்று என் நிலையும் ஏறக்குறைய அவரைப் போலவே ஆகிவிட்டது. ரிபெல் முத்துராமலிங்கம் எனது மாளிகையிலிருந்து நூறு மைல் தூரத்தில் உள்ளார். என்னையும், அவரையும் இன்று பிரித்துப் பார்க்க முடியாதவாறு ஒரே நிலையில் இருக்கிறோம் என்று பலவாறாக நவாப் உம்தத் உல் உம்ரா மனத்தில் புழுங்கிக் கொண்டிருக்கையில் தம்பி அமீர் உல் உம்ரா அறைக்குள் நுழைந்தார்.

"நவாப், ஆசனங்கள் தயாராக உள்ளன" என்றார். "சரி வருகிறேன்" என்று சொன்ன உம்தத் உல் உம்ரா தனது தம்பியின் தோள்மீது கைபோட்டுக்கொண்டு தாழ்வாரத்தை நோக்கி நடந்தார். அண்ணனின் மிருதுவான கை தன் தோளில் அழுத்துவதை உணர்ந்து தனது இடது கையால் அவர் வலது கையை அழுத்திக்கொண்டு அமீர் உல் உம்ரா மெதுவாக நடந்தார்.

நவாப் உம்தத் உல் உம்ராவை ஆசனத்தில் அமர வைத்துவிட்டு நின்றார். நவாப் தனது கால்களை நீவி விட்டார். கடலைச் சிறிது நேரம் கூர்ந்து பார்த்தார். தம்பியையும் உட்காரும்படி சைகை செய்தார். தொலைவில் பணியாளர்கள் நின்றுகொண்டிருந்தனர். நவாப் கையசைத்ததும் சிற்றுண்டிகள் கொண்டு வைத்தனர். வெள்ளி டம்ளர்களில் சர்பத், குடிநீர் வைத்தனர். கடற்கரைக் காற்று சத்தத்துடன் வீசியது. டம்ளர்கள்மீது சிறு தட்டுகளை வைத்தனர். "நான் கூப்பிடும்போது வந்தால் போதும்" என்று சொல்லி நவாப் வேலையாட்களை அனுப்பினார்.

"தம்பி, நான் மிகுந்த குழப்பத்தில் உள்ளேன். கவர்னர் எட்வர்ட் கிளைவிடம், அவரைப் பார்க்க வேண்டும் என்று பேட்டி கேட்டு ஒரு மாதமாகிறது. பதில் எதுவும் இல்லை. கவர்னரை நான் எனது பழைய

நண்பர் ராபர்ட் கிளைவின் மகனாகத்தான் கருதுகிறேன். ஆனால் எட்வர்ட் கிளைவ் தன்னைக் கவர்னர் என்று மட்டும் நினைக்கிறான். பையன் ஏதோ நிறையப் படித்தவனாம். நாற்பத்தி ஐந்து வயதில் இப்படியிருக்கிறானே?" என்றார் நவாப்.

"ஆலம்பனா, மேலே இருப்பது கீழே போவதும், கீழே இருப்பது மேலே வருவதும்தான் இயற்கை."

"உண்மைதான். இப்போதுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு ஆண்டும் வருடத்தின் முதல் நாள் கவர்னர் இதே மாளிகைக்கு நேரில் வந்து என்னைப் பார்த்து அன்பளிப்புத் தருவார். ஆரம்பக் காலங்களில் எனக்கு யானை, குதிரை, ஒட்டகம் எல்லாம் கூடப் பரிசாகத் தந்துள்ளனர். தங்கத்திலும், வெள்ளியிலும் அன்பளிப்புக் கொடுத்தார்கள். 'சல்லாத்து' எனும் துணிப் பொட்டலம் ஒன்று தந்தார்கள். அதில் தொப்பி, கையுறைகள், இரண்டு கால் சட்டைகள், இரண்டு மேல் சட்டைகள், துணியிலான இடுப்பு பெல்ட் என்று அனைத்தும் ஒரு பொட்டலத்திற்குள் இருக்கும். எல்லாம் போய் இந்த ஆண்டு புத்தாண்டு பரிசு வெறும் சால்வையாக மாறிற்று. நமக்கு இந்தப் புதிய நூற்றாண்டு நன்றாகப் பிறக்கவில்லை என நினைக்கிறேன்."

"சால்வையைக்கூட கவர்னரின் பாதுகாவலர்தானே கொண்டு வந்து கொடுத்தார் ஆலம்பனா?"

"ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய கவர்னர் லார்டு ராபர்ட் ஹோபர்ட் என்னைச் சந்தித்து என்னிடம் ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தார். "ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும் நவாப் வாலாஜா முகம்மது அலியும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதில் நவாபின் ஆளுகைக்கு உட்பட்ட பாளையங்களில் நவாபின் சார்பாக கிழக்கிந்தியக் கம்பெனி வரிவசூல் செய்து கொடுக்கும்" என்று எழுதப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த உடன்படிக்கையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது என்று என்னிடம் கவர்னர் சொன்னார்.

"மூன்று ஆண்டுகளில் என்ன பெரிய மாற்றம் வந்துவிட்டது? உடன்படிக்கையில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் சார்பாக வங்காளக் கவர்னர் ஜெனரலும், எனது வாப்பா வாலாஜா முகம்மது அலியும் சேர்ந்து கையெழுத்திட்டிருக்கிறார்கள். உடன்படிக்கை கையெழுத்திட்ட ஆண்டே என் தந்தை இறந்துவிட்டார். அப்போ தெல்லாம் என் தந்தையிடம்

வங்காளத்திலிருந்த கவர்னர் ஜெனரல் மட்டும்தான் நேரடியாகப் பேசுவார். மெட்ராஸ் கவர்னரை என் தந்தையோடு பேசுவதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி அனுமதிக்காது. என் தந்தைக்கு நீங்கள் கொடுத்த மரியாதையை எனக்குத் தருவதில்லை. இப்போது என்னிடம் வங்காளத்திலுள்ள கவர்னர் ஜெனரல் பேசுவதேயில்லை. மெட்ராஸ் கவர்னர்தான் பேசுகிறார். மூன்று ஆண்டுகளில் இந்த மாற்றத்தைத்தவிர வேறு எந்த மாற்றமும் இல்லை. ராமநாதபுரம் அரசரை நான் சொல்லித்தான் பதவியிலிருந்து நீக்கி, திருச்சிக் கோட்டை ஜெயிலில் வைத்ததாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் அவரிடமிருந்து எடுத்துக்கொண்ட ராமநாதபுரம் அரசாட்சியை நான் கேட்ட போது என்னிடம் ஒப்படைக்கவில்லையே? பலமுறை நான் கேட்டும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டு இப்போது பேஷ்குஷ் கலெக்டரை நியமித்து நீங்களே நேரடி அரசாட்சி செலுத்துகிறீர்கள். இது என் தந்தையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு எதிரானது. ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையே மீறப்படும்போது, புதிதாக என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்” என்று சலிப்பாகக் கேட்டேன்.

“கவர்னர் லார்ட் ராபர்ட் ஹோபர்ட் மிகவும் நிதானமான மனிதர். பெரும் ஆடம்பரப் பிரியர். இரவில் தூங்கும் போதும் கூட தன்னைக் கவர்னராக நினைத்துக் கொள்வார். ராணுவ அதிகாரிக்கான முழு சீருடை அணிந்து தோள்பட்டையில் சின்னங்கள், மார்பில் பதவிக்கான பதக்கங்கள் ஸ்டார்களை அணிந்துதான் தூங்குவார். இப்போதுள்ள கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லியும் இதே மாதிரி இரவில் யூனிபார்ம் அணிந்து கொண்டுதான் தூங்குவாராம்...” நவாபும் தம்பியும் சிரித்துக் கொண்டனர்.

கவர்னர் ராபர்ட் ஹோபர்ட் நிதானமாகச் சொன்னார்.

“நவாப், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட இந்த உடன்படிக்கை கம்பெனி போர்ட் மீட்டிங்கில் விவாதிக்கப் பட்டிருக்கிறது. கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனரலுக்குக் கம்பெனி சில ஆணைகளை வழங்கியுள்ளது. ஈஸ்ட் இந்தியா கம்பெனி, நவாப்பின் ஏஜென்டாக இருந்து பாளையக்காரர்களிடம் வரி வசூல் செய்யும் என்று பழைய ஒப்பந்தப்படிதான் நடந்து கொள்கிறது. சில பாளையங்கள் சரியான முறையில் ஆளப்படுவதில்லை என்றும் நிர்வாகச் சீர்கேடுகள் பெருகிவிட்டன என்றும் புகார்கள் லண்டனுக்குச் சென்றுள்ளன. அதுமட்டுமில்லாமல், இப்போது புகார்கள் கம்பெனிக்கும் அடிக்கடி வருகின்றன. ஆகவே சிறப்பாக இயங்கக்கூடிய பாளையங்களுடைய எல்லைகளை அதிகரிக்கவும் சரியாக நடந்து கொள்ளாத பாளையங்களின்

அதிகார எல்லைகளைக் குறைக்கவும், மிகவும் மோசமான பாளையக்காரர்களைப் பதவியிலிருந்து நீக்கவும், அந்த இடங்களில் புதிதாகப் பாளையக்காரர்களை நியமிக்கவும் கம்பெனிக்கு அதிகாரம் தேவைப்படுகிறது. கவர்னர் ஜெனரலின் ஆணையை நீங்கள் ஏற்றுக்கொண்டு புதிய உடன் படிக்கையில் கையெழுத்திட வேண்டும்" என்றார்.

அப்போது நான் உடலளவில் இவ்வளவு மோசமாக இல்லை. திடகாத்திரமான உடம்புதானே ஆட்சியாளனுக்கு மூலதனம்? ஆரோக்கியமான தேகத்தில் யோசனைகள் நிறைவாக இருக்கும். வேகமான செயல்பாடுகள் அதிகமாக இருக்கும். பயம் இருக்காது. அன்று அப்படித்தான் பயமின்றி கவர்னரிடம் எதிர்க்கேள்வி கேட்டேன்.

"லார்ட் ராபர்ட் ஹோபார்ட், உடன்படிக்கையை மீறி, நீங்கள் நியாயமில்லாமல் இப்படிக் கேட்பதும், நேரில் வந்து என்னை நிர்பந்திப்பதும் தவறான அணுகுமுறையாகும். இதுவரை உங்களது கவர்னர் ஜெனரல்களிடம்தான் முக்கிய விஷயங்கள் குறித்து, எனது தந்தையும் நானும் விவாதித்திருக்கிறோம். இப்போது கவர்னர் நிலையில் நீங்கள் என்னுடன் உடன்படிக்கை குறித்து விவாதிக் கிறீர்கள். என்னைத் தரம் தாழ்த்தாதீர்கள்.

எனது முன்னோரான சுல்பிகர் அலிகான் **1694**-ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பால் ஆற்காடு நவாப்பாக நியமிக்கப்பட்டார். இதற்கு முன்பாகவே, தென்னிந்தியாவைக் கட்டுப்படுத்த ஹைதரா பாத் நிஜாம் பதவியை ஔரங்கசீப் ஏற்படுத்தி யிருந்தார். சுல்பிகர்கான் இறந்தபிறகு அவர் மகன் தாவூத்கான் ஆற்காடு நவாப் ஆனார். ஔரங்கசீப் இறந்ததும் ஆற்காடு நவாப்பாக இருந்த தாவூத்கானை ஹைதராபாத் நிஜாம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நினைத்தார். மொகலாய அரசு இச்சமயத்தில் வலுவிழந்துவிட்டது.

ஹைதராபாத் நிஜாமும், ஆற்காடு நவாப் தாவூத்கானும் தங்களை யாருக்கும் கட்டுப்படாத சுதந்திர அரசர்களாக அறிவித்துக் கொண்டனர். ஆற்காடு நவாப் தாவூத் அலிகானுக்கு அடுத்து சதத் உல்லா கான், சதத் உல்லா கானுக்குப் பிறகு அவரது மருமகன் தோஸ்த் அலி. தோஸ்த் அலிக்கு மதத்தில்தான் ஆர்வம். தொழுகை செய்வது, முகமதிய மகான்களின் பேச்சைக் கேட்பது என்று வாழ்ந்தார். நாடு பிடிப்பதிலும் அரசாட்சியிலும் அவருக்கு விருப்பமில்லை. தோஸ்த் அலி ஆற்காட்டைவிட்டு வெளியில் அதிகம் செல்லவில்லை. அவர் மகன்

சப்தர் அலிகானும் மருமகன் சந்தா சாகிப்பும் கூட்டாகத் தஞ்சாவூர், மதுரை, திருவிதாங்கூர்வரை சென்று அரசர்களிடமிருந்து கப்பம் பெற்று வந்தனர்."

நவாப் என்ன சொல்ல வருகிறார் எனக் கவர்னருக்குப் புரிந்தது. அதேசமயம் தான் பதில் சொன்னால் அவர் மிகவும் வருந்துவார் என்றும் தெரியும். இருப்பினும் வந்த காரியம் பெரியது. எப்படியாவது உடன்படிக்கையில் நவாப்பிடம் கையெழுத்து வாங்க வேண்டுமே என்பதற்காகப் பேச்சை வளர்க்க முடிவு செய்தார்.

"சந்தா சாகிப் மதுரை நாயக்க மன்னரிடமும், திருச்சியிலிருந்து ஆட்சி செய்த, நாயக்க மன்னரின் உறவினரான அரசி மீனாட்சியிடமும் முறையாக நடந்து கொள்ளவில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன் நவாப்" என்றார் கவர்னர்.

"அப்படிச் சொல்ல முடியாது லார்ட் ஹோபார்ட், நான் சொல்வதைக் கேட்ட பின்பு நீங்கள் முடிவு செய்து கொள்ளலாம்" என்று சொல்லி நவாப் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளுக்குள் மனத்தைச் செலுத்தினார். எதை முதலில் சொல்வது, எதை அடுத்துச் சொல்வது என யோசித்தார். பின்பு கவர்னரிடம் சொன்னார்.

"லார்ட் அவர்களே, மதுரை நாயக்க அரசர் விஜயரங்க சொக்கநாத நாயக்கன் இறந்தபிறகு அவருக்கு நேரடி வாரிசு என்று யாரும் இல்லை. அவரின் அன்பிற்குரிய மனைவியான மீனாட்சி திருச்சிக்கு வந்து நாயக்க அரசியாக முடிசூட்டிக் கொண்டாள். இதை ஏற்றுக்கொள்ளாத விஜயரங்க சொக்கநாத நாயக்கனின் உறவினரான பங்காரு திருமலை மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆளத் துவங்கினான். பல பாளையக்காரர்கள் பங்காரு திருமலை நாயக்கனை அரசனாக அங்கீகரித்து அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க ஆரம்பித்தனர்.

சில நாட்களில் திருச்சியிலிருந்த மீனாட்சி தரப்பும் மதுரையில் இருந்த பங்காரு திருமலை தரப்பும் மோத ஆரம்பித்தனர். திருச்சியிலிருந்த மீனாட்சியின் கோட்டையைப் பங்காரு முற்றுகை யிட்டான். சந்தா சாகிப் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். மீனாட்சியிடம் பணம் வாங்கிக்கொண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்தார். பின்பு பங்காருவிடமும் கூடுதல் பணம் வாங்கிக் கொண்டு பங்காருவிற்கும் சந்தா சாகிப் ஆதரவு அளித்தார். பின்பு இருவரையும் விலக்கிவிட்டு மதுரை நாயக்க அரசிற்குத் தானே அரசர் என சந்தா

சாகிப் அறிவித்தார். சந்தா சாகிப்பின் துரோகத்தைப் பொறுக்க முடியாத அரசி மீனாட்சி விஷம் அருந்தி, தற்கொலை செய்துகொண்டார்.

சிவகங்கை அரசர் சசிவர்ணத் தேவரிடம் பங்காரு திருமலை நாயக்கர் அடைக்கலம் புகுந்தார். ராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளின் கூட்டுப்படைகள் பங்காரு திருமலை நாயக்கரை மதுரை அரசராக்கின. பங்காரு மதுரை நாயக்க அரசராகப் பொறுப்பேற்ற சிலநாட்களில் இறந்தார். அவர் நஞ்சு வைத்துக் கொல்லப்பட்டதாக பேசப்பட்டது.

சந்தா சாகிப் இந்தத் தருணத்தில் தஞ்சாவூர் மராத்திய அரசை வென்றார். அதுவரை அமைதியாக, சந்தா சாகிப்பிற்கு ஒத்துழைப்புக் கொடுத்துக்கொண்டிருந்த இளவரசர் சப்தர் அலிகான் தனக்குத் தஞ்சாவூரின் அரசாட்சி தரப்படவேண்டும் என்று அக்காவின் கணவரான சந்தா சாகிப்பைக் கேட்டார். இதற்குச் சந்தா சாகிப் ஒத்துக்கொள்ளவில்லை. இதனால் தனது தகப்பனாரும் ஆற்காடு நவாப்புமான தோஸ்த் அலியிடம் சந்தா சாகிப் பற்றி இளவரசர் புகார் தெரிவித்தார். மகனுக்கும் மருமகனுக்கும் இடையில் மாட்டிக் கொண்டார் தோஸ்த் அலி.

தஞ்சாவூரில் இருந்து கொண்டு நவாப்பின் மகனும் மருமகனும் கொடுக்கும் தொல்லைகளைப் பொறுக்கமுடியாத தஞ்சை மன்னர் பூனாவிலிருந்த தனது இனத்தைச் சேர்ந்த மராத்திய மன்னருக்குச் செய்தி அனுப்பிப் படை உதவி கேட்டார். இந்த வாய்ப்பிற்காகக் காத்திருந்த மராத்தியப் படை தஞ்சாவூர் நோக்கிக் கிளம்பி வந்தது. மராத்தியப் படை சித்தூரில் மறிக்கப்பட்டது. அங்கு நடந்த போரில் நவாப் தோஸ்த் அலியையும், அவரது மகன் அசன் அலியையும் மராத்தியப் படையினர் கொன்றனர். சந்தா சாகிப்பைக் கைது செய்து மராத்தியத்திலுள்ள சத்தாராவில் சிறை வைத்தனர். நவாப்பின் மகனான இளவரசர் சப்தர் அலிகானிடம் ஒரு கோடியே நாற்பது லட்சம் பணம் வாங்கிக் கொண்டு ஆற்காடு நவாப்பாகப் பதவி ஏற்க மராத்திய அரசர் அனுமதித்தார்.

இதை தோஸ்த் அலியின் இன்னொரு மருமகனான வேலூர் முர்தாசா விரும்பவில்லை. இவன் தனது மைத்துனனும், புதிய நவாபுமான சப்தர் அலியைக் கொலை செய்தான். தங்களது நவாப் கொலை செய்யப்பட்டதால் ஆற்காடு நவாபின் படை கலகம் செய்து, ஆற்காட்டிலிருந்து முர்தாசாவை விரட்டியது. இறந்து போன நவாப் சப்தர் அலிகானின் மகனான சதத் உல்லா கான் என்ற சிறுவனை ஆற்காடு நவாபின் படையினர் புதிய நவாபாக முடி சூட்டினர். இந்தச் சிறுவனின்

பாதுகாவலராக முதலில் வாலாஜா அப்துல்லா கான் இருந்தார். பின்பு அன்வருதீன் காப்பாளரானார். சிறிது காலத்தில் சிறுவன் இறந்து விட்டதால் சிறுவனின் காப்பாளரான அன்வருதீன் ஆற்காடு நவாப் ஆகிவிட்டார்."

"நவாப், நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அன்வருதீன் உங்கள் தகப்பனாரான வாலாஜா முகம்மது அலியின் தகப்பனார். உங்களது தகப்பனின் தகப்பன், அய்யா முறை. வரலாற்றை முறையாக நீங்கள் சொல்லும்வரை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் சொன்னபடி சிறுவன் இயற்கையாக நோய் வந்து இறக்கவில்லை. அவன் கொல்லப்பட்டான். அவனைக், காப்பாளரான அன்வர்தீன்தான், அதாவது உங்களது தகப்பனின் தகப்பனார் கொலை செய்தார்."

"நான் மறுக்கவில்லை. அரசியலில் தந்தையை மகன் கொல்வதும், மாமனாரை மருமகன் கொல்லுவதும் உண்டுதானே? அந்த வகையில் இதுவும் ஒன்று என்று எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்றார் நவாப் உம்தத் உல் உம்ரா.

"மன்னிக்கவேண்டும் நவாப். உங்களது தந்தையார் வாலாஜா முகம்மது அலிகூட நவாப் அன்வர்தீனுக்கு மூத்த வாரிசு இல்லை. உண்மையில் நவாபின் மூத்த மகனான மாபூஸ்கான்தான் நவாப் ஆகியிருக்க வேண்டும். மாபூஸ்கான் நெல் கட்டும் சேவல் பாளையக்காரர் புலித்தேவரோடு போரிட்டவர். மாபூஸ்கானின் அன்புற்குரியவராக மருதநாயகம் என்ற கமாந்தான் கான் சாகிப் இருந்தார். மாபூஸ்கானின் பரிந்துரையின்படி நவாப் அன்வருதீன் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அழுத்தம் கொடுத்து மதுரை கவர்னராக கான் சாகிப் நியமிக்கப்பட்டார். சிறிது காலம் கழித்து கான் சாகிப் வரம்பு மீறிப் போவதாக மாபூஸ்கான் உணர்ந்தார். இதனால் கான்சாகிப் மீது நவாப்பிற்கு வெறுப்பு வளர்ந்தது, வெறுப்பு முற்றியது. கான் சாகிப்பை நவாப் படைகளும் ஆங்கிலேயப் படைகளும் மதுரையில் கைது செய்து தூக்கிலிட்டன."

"லார்ட் ஹோபார்ட், நீங்கள் சொல்லுவது சரிதான். நான் சொல்லுவதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் நீங்கள் குறுக்கிடலாம். சத்தாரா சிறையிலிருந்த சந்தா சாகிப் எப்படியாவது சிறையிலிருந்து வெளியே வந்து தன் மனைவி பிறந்த ஆற்காட்டிற்கு நவாப் ஆக வேண்டும் என நினைத்தான். அவனது குடும்பம்

பாண்டிச்சேரியிலிருந்தது. அவர்கள் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு கவர்னர் டுயூப்ளேயின் மனைவியை சந்தித்தனர்.

பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சு கவர்னர் டுயூப்ளேயின் மனைவி சிரியோலில் பிறந்தவள். அவள் பெயர் ஜீன். அவள் படித்தது, வளர்ந்தது எல்லாம் கல்கத்தாவில்தான். கல்கத்தாவில் அவள் திருமண வயதை அடைந்தபோது அங்கிருந்த பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலகத்தில் டுயூப்ளே வேலைக்குச் சேர்ந்திருந்தான். மற்ற பிரெஞ்சுக்காரர்களைப்போல இந்தியாவின் முக்கியமான மொழிகள் அனைத்தும் அவளுக்கும் அத்துபடி. அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு இந்திய மொழிகளில் பேசுவதற்கும், எழுதுவதற்கும் அவ்வளவு பிடிபடவில்லை. கணவன் டுயூப்ளே சார்பாக இந்திய மன்னர்களிடம் அவர்களது தாய்மொழியில் பேசுவது, சிற்றரசர்களுக்குள் பிரச்சனை என்றால் பஞ்சாயத்துச் செய்வது என்று ஜீன் மிகக் குறுகிய காலத்தில் பிரபலமாகிவிட்டாள். அவளை ஜீன் பேகம் என்றுதான் எல்லோரும் மரியாதையுடன் அழைப்பார்கள். கத்தோலிக்கர்கள், குறிப்பாக ஏசு சபையினர், பிரெஞ்சுக் கவர்னர் டுயூப்ளேவுக்கு மிகவும் நெருக்கமாகயிருந்ததால் அவர்கள் மூலமும் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு இந்தியாவில் வளர்ந்தது. பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்திய மொழியறிவு மட்டுமின்றி பொய்யுரைக்கும் சாகசமும் அதிகமாக இருந்தது. சதுரங்கப்பட்டினத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நடந்த சமரசக் கூட்டத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்களிடமிருந்த மொகலாய அரசர்கள் வழங்கிய அனுமதிக் கடிதங்களைக் காண்பித்தபோது ஆங்கிலேயர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் காண்பித்ததில் பல அனுமதிக் கடிதங்கள் அவர்களே தயாரித்தப் போலி ஆவணங்கள் என்று பின்னாளில் ஆங்கிலேயர்கள் கண்டுபிடித்தனர். அந்த வகையில் மொகலாய அரசர் ஷா ஆலத்தை மிரட்டியோ, மயக்கியோ வங்காளத்திலுள்ள சில மாவட்டங்களுக்கான ஜமீன்தாரராகப் பிரெஞ்சுக்காரரான டுயூப்ளே நியமனம் செய்யப்பட்டார். மராத்தியர்களிடம் சந்தா சாகிப் சார்பாக சமரசம் பேசினார். சந்தா சாகிப் வீட்டுப் பெண்கள் தங்கள் நகைகளை எல்லாம் விற்று ஏழரை லட்சம் ரூபாயை, டுயூப்ளே மூலம் மராத்தியர்களுக்குக் கொடுத்தனர். பணத்தைப் பெற்றுக்கொண்டு சந்தா சாகிப்பை மராத்தியர்கள் விடுவித்தனர். சந்தா சாகிப் முதலில் சென்றது ஹைதராபாத்திற்குதான். நிஜாமைச் சந்திக்கச் சென்றவனுக்கு அதிர்ச்சி. ஐதராபாத்தில் நிஜாம் அசப்ஜா இறந்து விட்டிருந்தார். அவர் மகன் நாஜர்

ஜங்கிற்கும் மகள் வழிப் பேரன் முஜாபர் சங்கிற்கும் யார் அடுத்த நிஜாம் என்பதில் போட்டி. சந்தா சாகிப் தன்னைப் போலவே மகள் வழி வாரிசாக வந்த முசாபர் ஜங்கின் ஆதரவாளராக மாறினான்.

ஆற்காடு நவாப்பை நியமிக்கும் அதிகாரம் உள்ளவனாக ஹைதராபாத் நிஜாம் தன்னைக் கருதிக் கொண்டான். அந்த அதிகாரம் நிஜாமிற்கு ஒரு காலத்தில் இருந்தது. இருந்தாலும் தன் மூதாதையருக்கு இருந்த பழைய அதிகாரத்தைப் பயன்படுத்திய நிஜாம் முஜாபர் ஜங் உதவி கேட்டு வந்த சந்தா சாகிப்பை ஆற்காட்டு நவாப்பாக நியமனம் செய்தான். பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சுக் கவர்னர் டுயூப்ளே இதற்கு ஆதரவு தெரிவித்தான். சந்தா சாகிப்பை அழைத்து வந்த நிஜாமின் படைகளால் ஆம்பூர் போரில் ஆற்காடு நவாப்பாக இருந்த அன்வர்தீன் கொல்லப்பட்டான். சந்தா சாகிப் ஆற்காட்டை ஆக்கிரமித்தான். ஹைதராபாத்தின் புதிய நிஜாமாகத் தன்னை அறிவித்துக் கொண்ட முஜாபர் அலி, ஆற்காட்டின் புதிய நவாபான சந்தா சாகிப், பிரெஞ்சுக்காரர்கள் என ஒருபுறம். எதிர் அணியாக ஹைதராபாத் நிஜாம் நாஜர் ஜங், ஆங்கிலேயர்கள், ஆற்காட்டின் போட்டி நவாப்பான முகம்மது அலி, ஒரு புறம் என்று அணி வகுத்தனர்.

ஆற்காடு நவாப் அன்வருதீனின் முதல் மகன் மாபூஸ்கானுக்கும் இரண்டாவது மகன் முகம்மது அலிக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. பல காலம் தனக்கு எதிரியாக இருந்த நெல் கட்டும் சேவல் புலித்தேவரிடமே மாபூஸ்கான் அடைக்கலம் புகுந்துவிட்டார். இதற்குப்பிற்கு அவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. இரண்டாம் மகன் முகம்மது அலி என்ற வாலாஜா ஆங்கிலேயர்களின் நவாபாக மாறினார். ஆங்கிலேயத் தளபதி கிளைவ் ஆற்காட்டிற்கு வந்தார். முகம்மது அலி சார்பாக ஆற்காட்டை முற்றுகையிட்டார். அந்த நேரம் ஆற்காடு, சந்தா சாகிப்பின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆற்காடு முற்றுகையிடப்பட்ட சமயம் சந்தா சாகிப் திருச்சியில் இருந்தான். ஆற்காடு நகரம் ஐம்பத்து மூன்று நாட்கள் முற்றுகையிடப்பட்டது. சந்தா சாகிப் திருச்சியிலிருந்து ஆற்காடு வரவில்லை. ஐம்பத்து நான்காவது நாள் ஆற்காட்டில் முகம்மது அலி நவாப்பாகப் பதவி ஏற்றார்.

சத்தாரா சிறையிலிருந்து வெளிவந்த சந்தா சாகிப் இரண்டு வருடம் ஒன்பது மாதமே உயிரோடு இருந்தான். பின் திருச்சியில் தஞ்சாவூர் மராத்திய அரசனின் தளபதி மானோஜியால் கொல்லப்பட்டான்."

மெட்ராசிற்குக் கவர்னராகப் பதவி ஏற்பதற்கு முன்பே ஆற்காடு நவாப்கள் பற்றியும், இங்குள்ள சூழல் பற்றியும், ஹைதராபாத் நிஜாம்கள் பற்றியும் கவர்னர் ராபார்ட் ஹோபர்ட்டிற்கு விவரமாக விளக்கப்பட்டிருந்தது. முந்தைய மெட்ராஸ் ஆளுநர் பாரோன் மகார்ட்னே தன்னை மரியாதைக் குறைவாக நடத்தியதாக நவாப் லண்டனுக்குப் புகார் மனுவாக அனுப்பியதைப் புதிய கவர்னர் ஹோபர்ட் அறிவார். புகார்க் கடிதம் கிடைத்ததும் கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்கள் விரிவான விசாரணைக்கு ஆணையிட்டனர். அன்றைக்கு நவாப்பிற்கு இருந்த செல்வாக்கினால் ஆங்கிலேயக் கவர்னர் பாரோன் மகார்ட்னே பதவி விலக வேண்டியதாயிற்று.

நவாப் வாயாலேயே அவர் கதையைக் கேட்டதில் புதிய கவர்னருக்கு மகிழ்ச்சி. அவர் கிளம்புவதற்கு முன்பு ஒன்று சொல்ல வேண்டியிருந்தது. “நவாப் அவர்களே, உங்கள் தகப்பனார் தான் ஆற்காடு தனக்குப் பாதுகாப்பில்லாதது என்று கருதி மெட்ராஸ் வந்து இந்தப் பெரும் மாளிகையைக் கட்டியவர். பல பாளையக்காரர்களின் மாளிகைகள் உங்கள் குதிரை லாயத்தைவிடச் சிறியவையே. ஆனால், அதற்காகப் பலரிடம் கடன் பெற்றுள்ளார். பாரி அன்ட் சேஸ் கம்பெனியின் உரிமையாளர் ஜான் பாரி உட்பட. ஜான் பாரி உங்கள் தகப்பனாருக்கு ஏஜென்டாகச் செயல்பட்டு வெளியில் பணம் வாங்கிப் பிரச்சனையில் மாட்டி இரண்டு வருடங்கள் சிலோனில் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியதாயிற்று.”

“தெரியும், ஆங்கிலேயர்களாகிய நீங்கள் எங்கள் பகுதியில் எங்குப் போரிட்டாலும் வருமானத்தில் எங்களுக்குப் பாதியைக் கொடுப்பீர்கள். செலவுக் கணக்கு முழுவதும் எங்கள் மீதுதான். அந்த வகையில்தான் எங்களது கடன் சுமை ஏறிவிட்டது.”

“நவாப், உங்களுக்கும் கடன் அதிகம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். உங்களது சொந்தச் சொத்துக்களிலிருந்து பணம் பெற்றுக் கடனை அடையுங்கள். பாளையக்காரர்கள் வசூலிக்கும் நாட்டுக்காவல் பணம் அவர்களுக்கானது. அதை நீங்கள் பாளையக்காரர்களிடம் கேட்டுப் பெறுவதை கம்பெனி விரும்பவில்லை. பல பாளையக்காரர்கள் புகார் செய்ததால் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து விட்டேன்” என்றார் கவர்னர்.

ஐந்து வருடம் கழித்து நடந்த பேச்சு வார்த்தையை நவாப் உம்தத் உல் உம்ரா இன்று நினைத்துப் பார்த்து அதைத் தம்பி அமிர் உல் உம்ராவுடன் பகிர்ந்து கொண்டார்.

“ராமநாதபுரம் சீமை முழுவதுமாக ஆங்கிலேயர்களிடம் வந்துவிட்டது. திண்டுக்கல், சிவகங்கைப் பற்றி ஏதேனும் உங்களிடம் செய்தியுண்டா ஆலம்பனா?”

“ராமநாதபுரத்தை ஆங்கிலேயர்கள் தங்கள் வசப்படுத்தி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தையும் திப்புவின் இறப்பிற்குப்பின் கைப்பற்றி விட்டனர். சிவகங்கைதான் அவர்களது அடுத்த இலக்காக இருக்கும்” என்றார் நவாப்.

“மைசூர் திப்பு சுல்தானை வெள்ளையர்கள் கொன்று இரண்டு வருடம் ஆகிறது. பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டு ஓராண்டு ஆகிறது. இப்போது அவர்கள் கண்ணை உறுத்துவது சிவகங்கையின் மருதுபாண்டியர்கள்தான். சிவகங்கை அரசி வேலு நாச்சியாரும், அவரது மகள் வெள்ளச்சியும் இறந்த பிறகு, சிவகங்கையை வாரிசு இல்லாத அரசாகக் கவர்னர் எட்வர்ட் கிளைவ் கருதுகின்றார். விருப்பாச்சி கோபால் நாயக்கர், தேளி யாதுல் நாயக்கர், அண்மையில் கொல்லப்பட்ட மராத்திய குதிரை வீரன் தூந்தாஜி வாக் என்று ஆங்கிலேய விரோதிகளோடு சின்ன மருது சேர்வைக்காரர் நட்பு பாராட்டுபவர். சின்ன மருதுவுக்கும் பாஞ்சாலங்குறிச்சிக் கலகக்காரர்களான சிவத்தையா, ஊமைத்துரைக்கும் உள்ள தொடர்புகள் குறித்தும் கவர்னர் எட்வர்ட் கிளைவ் ரகசியமாக விசாரித்து வருகிறார். விசாரணையின் முடிவில் இருதரப்பிற்கும் தொடர்பு இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் மருது பாண்டியர்கள்மீது கட்டாயம் நடவடிக்கையிருக்கும்.”

“ஆமாம் ஆலம்பனா. திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் கொல்லப்பட்டவுடன் திப்புசுல்தானுக்கும் நெப்போலியனுக்கும் தொடர்பு இருந்ததாக ஆங்கிலேயர்கள் அறிவிக்கவில்லையா? ஆற்காடு நவாப்பான நமது தந்தைக்கும், உங்களுக்கும் திப்பு கடிதம் தொடர்ந்து எழுதியிருக்கிறார் என்று குற்றம் சுமத்தவில்லையா? மதரீதியாக நாமும் திப்புவும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்க்கச் சதி திட்டம் தீட்டினோம் என்று ஆங்கிலேயர்கள் கதை கட்டி விடவில்லையா? அந்தக் கதையையே காரணம் காட்டி நம்மைத் தற்போது உதாசீனப்படுத்துகிறார்களே?” என்றார் அமீர்.

“ஆம் தம்பி, திப்புசுல்தான் இறந்த பிறகு அவர் மாளிகையில் என் கடிதங்கள் கிடைத்ததை வைத்துக் கம்பெனிக்கு எதிராக நான் சூழ்ச்சி செய்தேன் என்று கம்பெனி நம்புகிறது. ஒரே மதத்தைச் சார்ந்த இரு அரசர்களுக்குள் கடிதப் பரிமாற்றம் தவறு என்று எண்ணுகிற அளவு சிறுமை மனம் படைத்ததாக கிழக்கிந்தியக் கம்பெனி ஆகிவிட்டது. நாம் சந்தித்துக் கொண்டிருப்பதை இனி மருது சகோதரர்களும் சிவகங்கையும் சந்திக்க வேண்டும். நம் ஆளுகையிலிருந்த எழுபத்தி இரண்டு பாளையங்களும், சிவகங்கை, ராமநாதபுரம் அரசும் நம் கையை விட்டுப் போய்விட்டன. கடற்கரையிலுள்ள இந்த மாளிகையில் ஒடுங்கி விட்டேன். இனி என் நிலை என்ன ஆகுமோ?” என்றார் நவாப் உம்தத் உல் உம்ரா.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் இந்த நாளிலிருந்து சரியாக ஐந்து மாதங்களில் ஆற்காடு நவாப்பின் பதவி முழுவதுமாக பறிக்கப்படப் போகிறது என்றோ, இனிமேல் பாளையங்களுக்கும், நவாப்பிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று கவர்னர் எட்வர்ட் கிளைவ் அறிவிக்கப் போகிறார் என்றோ நவாப் உம்தத் உல் உம்ராவுக்குத் தெரியாது.

ஔரங்கசீப்பால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆற்காடு நவாப் பதவி பல்வேறு ஏற்ற இரக்கங்களுக்குப் பிறகு, அவர்களின் ஆரம்பக் காலம்தொட்டு நண்பராக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாலேயே ஆற்காடு நவாப் பதவி முடித்து வைக்கப்பட இருந்தது. ஔரங்கசீப்பின் டெல்லி தர்பாரில் கோலாகலமாக வழங்கப்பெற்ற ஆற்காடு அரசுரிமை **107** வருடங்கள் கழித்து சேப்பாக்கம் மாளிகையில் சுவடு இன்றிக் கிழக்கிந்தியக் கம்பெனியால் முடித்து வைக்கப்படப் போகிறது.

•

காலின் மெக்காலேயின் பண்ணை வீட்டில் விருந்து நடந்து கொண்டிருந்தது. உணவு அருந்திய பின் ஆங்கிலேயக் கலெக்டரும், தளபதிகளும் நடனமாடிக் கொண்டிருந்தனர். திருவிதாங்கூர் அரசர் அனுப்பிய பேண்ட் கச்சேரியின் தாளத்திற்கு ஏற்ப ஆங்கிலேயர்கள் நடனமாடிக் கொண்டிருக்கும்போது, இரவு எட்டு மணியிருக்கும். நான்கு ஐந்து குதிரை வீரர்கள் பண்ணை வீட்டை நோக்கிப் பெரும் வேகத்தில் வந்தனர். கலெக்டரைப் பார்த்து சல்யூட் அடிப்பதற்குகூட மறந்து "சாப், ஜெயில் உடைக்கப்பட்டது. ஊமைத்துரையும் சிவத்தையாவும் தப்பிவிட்டனர். ஜென்டில்மேன் மேஸ்திரியையும் இரண்டு ஆங்கிலச் சிப்பாய்களையும், சிறையை உடைத்தவர்கள் கொலை செய்து விட்டனர். உள்ளூர்க் காவலாளிகள் கடுமையாகத் தாக்கப்பட்டதில் மூர்ச்சையாகிக் கிடக்கின்றனர்" என்றனர் பதற்றமாக. எல்லோரும் நடனத்தை நிறுத்தினார்கள்.

தன் நான்குக் குழந்தைகளையும் சாப்பிட வைத்துக் கொண்டிருந்த ஜெயில் சூப்பிரண்ட் வாலர் பதறியடித்து ஓடி வந்தார். வாலருக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. எல்லோரும் நடனத்தை நிறுத்தினார்கள். அருகிலிருந்த சார்லஸ் மக்காலேவின் கையைப் பிடித்துக் கொண்டார். மிகவும் மெல்லிய குரலில் "என் மனைவி கேத்தரீன்" என்றார்.

"கேத்தரீன் மேம் சாகிபாவை கலக்காரர்கள் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள்" என்று சொன்னதைக் கேட்டவுடன் வாலர் அந்த இடத்திலேயே, அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டார். ஆங்கிலேய டாக்டர் ஓடி வந்தார். "தரையில் படுக்க வையுங்கள்" என்று சொல்லியபடியே, வாலரின் கையை நாடிப் பிடித்து பார்த்தார். "பயப்படும்படி ஒன்றுமில்லை" என்றார். "மிஸ்டர் வாலர், கலெக்டர், தளபதி மெக்காலே எல்லோரும் இங்கு உங்களோடு இருக்கிறோம். அமைதியாக இருங்கள். எல்லாம் சரியாகி விடும்" என்று ஆறுதல் வார்த்தைகளைச் சார்லஸ் மெக்காலே சொல்லிக் கொண்டே வாலரின் யூனிபார்மைத் தளர்த்தி விட்டான். கலெக்டர், உடனடியாகப் பண்ணை வீட்டின் பெருங்கதவை அடைக்கச் சொல்லி, பாதுகாவலர்களை எச்சரித்தார். "மேஜர் மெக்காலே, நமது பாளையங்கோட்டைப் படையின் படைப்பிரிவில் பாதியை உடனே ஜெயிலுக்கு அனுப்புங்கள். மீதிப் படை பாஞ்சாலங்குறிச்சிப் பாதையில் விரைந்து சென்று தப்பித்தவர்களைக் கைது செய்யட்டும். அவர்களைக் கைது செய்ததும் உடனே

தூக்கிலிடுங்கள். அவர்கள் விசாரணைக்குத் தகுதியற்ற முரடர்கள்" என்று கத்தினார்.

மேஜர் மெக்காலேவுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. "யுவர் ஹானர், நமது பாளையங்கோட்டைப் படை அணி இங்கு இல்லை. பயிற்சிக்காக அவர்கள் சங்கரன் கோயிலுக்குச் சென்றுள்ளனர்" என்றார். கலெக்டர் லூஷிங்டன் சிறிது யோசித்துவிட்டு, "நம் கைவசம் உள்ள வீரர்களை வைத்துச் சிறையிலிருந்து தப்பித்தவர்களைக் கைது பண்ண முடியுமா" என்றார்.

"யுவர் ஹானர், ஊமைத்துரை தப்பித்த செய்தி வெளியில் தெரிந்தால் பல ஊர்களிலிருந்தும் அவனது ஆதரவாளர்கள் கிளம்பி வருவார்கள். கம்பெனியின் சரக்கு குடோன்கள் உள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி, கமுதி, அபிராமம் ஆகியவைகளைக் கட்டாயம் தாக்கி அழிக்க முயற்சி செய்வார்கள். ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம், குளத்தூர், காடல்குடி, நாகலாபுரம், கோலார்பட்டி, ஏழாயிரம் பண்ணைப் பகுதிகளில் தகுந்த ராணுவ ஏற்பாடு இல்லாமல் நாம் ஊருக்குள் நுழையவே முடியாது" என்றார்.

கலெக்டர் லூஷிங்டன் துபாஷ் ரங்கசாமியை அழைத்தார். துபாஷ் நடுங்கிக் கொண்டே வந்தார். "துபாஷ், காடல்குடி கருத்தையாவையும், வீரபாண்டிய கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையின் தம்பி வீரபத்திரப் பிள்ளையையும் பாளையங்கோட்டைச் சிறைக்கு மாற்ற அனுமதி கேட்டார்களே... இரண்டு நாட்களுக்கு முன்புதான் அனுமதி கொடுத்தேன். அந்த அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறைக்குக் கொண்டுவர வேண்டாம் என்று தகவல் அனுப்ப வேண்டும்" என்றார்.

"யுவர் ஆனர், இன்று காலைதான் அவர்கள் பாளையங் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டனர். ஆதலால் அவர்களும் இந்தக் கூட்டத்தோடு சேர்ந்து தப்பித்திருப்பார்கள் என நினைக்கிறேன்" என்றார் தயங்கியபடி. "சரி, சிறைச்சாலைக்குப் போய்ப் பார்ப்போம், கிளம்புங்கள்" என்றார் கலெக்டர்.

கலெக்டர் லூஷிங்டன்னும் மேஜர் மெக்காலேயும் பாளையங்கோட்டைச் சிறைக்கு வந்தனர். இரவு பத்து மணி இருக்கும்.

உடன் வந்தவர்கள் லாந்தர் விளக்குகள் வைத்திருந்தனர். எங்கும் அபயக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. மருத்துவர்கள் அடிபட்டவர்களின் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர். இறந்தவர்களின் பெயர், அங்க அடையாளங்கள் குறிக்கப்பட்டு மூட்டையாகக் கட்டப்பட்டனர். வாலரின் குழந்தைகள் திருமதி மெக்காலேயின் பொறுப்பில் விடப்பட்டனர். கேப்டன் சார்லஸ் மெக்காலே கைத்தாங்கலாக வாலரைச் சிறைக்குள் அழைத்து வந்தார். காய்கறிகளும், வாழையிலைகளும் சிறைக்குள் ஆங்காங்கு இறைந்து கிடந்தன. யாரிடமும் கலெக்டரால் விசாரிக்க இயலவில்லை. சிறிது நேரம் அமைதியாக சிறையின் ஒவ்வொருப் பகுதிக்கும் சென்று வந்த கலெக்டரிடம் வாலர் வந்தார். “யுவர் ஆனர், இந்தப் படுபாதகச் செயலை நடத்தியவர்களைப் பற்றி எனக்குத் தெரியும்” என்றார்.

“சொல்லுங்கள் மிஸ்டர் வாலர். தப்பிச் சென்றவர்களை வழி மறிக்க நீங்கள் கூறும் தகவல்கள் உதவிகரமாக இருக்கும்” என்றார் கலெக்டர். “யுவர் ஆனர், பாண்டியன் சேர்வைக்காரன், கிருஷ்ணப்ப நாயக்கன், போத்தி பகடை என்ற மூவர்தான் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும். அவர்கள்தான் வீரபாண்டிய கட்டபொம்மனின் திவசம் பற்றிப் பேசி, காய்கறி, வாழையிலைகளை உள்ளே கொண்டு வந்தனர்.”

“மிஸ்டர் வாலர், ஊமைத்துரையும், சிவத்தையாவும் ஏற்கனவே ஒருமுறை சிறையில் இருந்து தப்பிக்க முயன்றார்களே? அதுகுறித்து நான்கூட மருது பாண்டியர்கள் மீது சந்தேகம் கொண்டுள்ளேன் என்று உங்களுக்குத் தெரியுமே? அப்படியிருக்கையில் நீங்கள் ஏன் அந்த மூவருக்கும் அனுமதி கொடுத்தீர்கள்?” என்றார் சற்று கோபமாக.

வாலருக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. தன் மனைவியால்தான் இந்தப் பெரும் தவறு நடந்தது என்ற உண்மையைச் சொல்லலாமா வேண்டாமா? என யோசித்தார். கேத்தரீனையும் கலகக்காரர்கள் தூக்கிச் சென்றிருப்பதால், இப்பொழுது உண்மையைச் சொல்லவில்லையென்றால் இன்னும் நிலைமை மோசமாகிவிடும் என்று அவருக்குத் தோன்றியது. கலெக்டரிடம் உண்மையையே கூறினார். “சார், என் மனைவி கேத்தரீன் மிகவும் மென்மையானவள். இரக்க சுபாவம் உள்ளவள். மிகுந்த ஏமாளி. அவளை எப்படியோ ஏமாற்றி அவள் மூலமாக என் சம்மதத்தைப் பெற்றனர். அவளை எப்படியாவது காப்பாற்றித் தாருங்கள். என் நான்குக் குழந்தைகளும் அவர்களது

தாயின்றி ஒருநாள் கூட இருக்கமாட்டார்கள். அவளும் குழந்தைகளை விட்டு இருக்க மாட்டாள். போதும் இந்த வாழ்க்கை" வாலர் அழுதார்.

நான்கு மணி நேரத்திற்கு முன்பு சீருடையணிந்து மிடுக்காக இதே சிறைச்சாலையை விட்டு, பண்ணை வீட்டு விருந்துக்குச் சென்ற வாலர் இப்பொழுது புழுதி படிந்த அழுக்குச் சீருடையில் கண்களில் கண்ணீரோடு கெஞ்சிக் கொண்டிருந்தார். நான்கு மணி நேரத்திற்கு முன்பாக அவருக்கு மிடுக்காகச் சல்யூட் அடித்து வழியனுப்பி வைத்தச் சிப்பாய்கள் இப்போது பாய்களில் சுருட்டப்பட்டு பிரேதமாகி விட்டனர். முதல் கட்ட விசாரணையை முடித்த கலெக்டர் அதிகாலை இரண்டு மணிக்கு கவர்னர் எட்வர்ட் கிளைவிற்கு அனுப்ப வேண்டிய அறிக்கையை நிதானமாகச் சொல்ல, அதைத் துபாஷ் ரெங்கசாமி பதிவு செய்தார். கடைசி வரி எழுதும்போது ரங்கசாமி முகத்தைத் துடைத்துக் கொண்டார். உடம்பு முழுவதும் வேர்த்திருந்தது.

"மேஜர் மெக்காலே, இந்தக் கடிதம் உடனடியாக மெட்ராசுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். சங்கரன்கோயில் வழியாக அனுப்பாதீர்கள். தூத்துக்குடி கடற்கரை வழியாகச் செல்லட்டும்" என்று சொல்லி நிறுத்தியவர், "எனக்கு வேறு வழி தெரியவில்லை மிஸ்டர் வாலர். நான் இப்போது அனுப்பியது முதல் தகவல் அறிக்கைதான். இது குறித்து நான் தீவிர விசாரணை நடத்த வேண்டியுள்ளது. இந்தச் சிறை உடைப்பில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நான் விசாரிக்க வேண்டும். இந்தக் கலகக்காரர்களோடு சேர்ந்து உங்கள் மனைவியும் தலைமறைவாகி யுள்ளார் " என கலெக்டர் லூஷிங்டன் சொல்லி முடிக்கும்முன் வாலர் தலையில் அடித்துக்கொண்டு அழுதார்.

"அவள் தலைமறைவாகி விட்டாளா அல்லது கடத்தப்பட்டாளா எனத் தெரியவில்லையே யுவர் ஆனர்" என்றார் ஜெயில் சூப்பிரண்டு வாலர்.

"ஆம், இதைத்தான் நான் கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் கடைசி வரியாகச் சொல்லியிருக்கிறேன்."

கலெக்டர், மேஜர் மெக்காலேவின் பக்கம் திரும்பினார்.

"விசாரணை முடியும் வரை ஜெயில் சூப்பிரண்டு மிஸ்டர் வாலரை தடுப்புக் காவலில் வைக்கும்படி மேஜர் மெக்காலேவிற்கு உத்தரவிடுகிறேன்" என்றார்.

கலெக்டர் இந்த வார்த்தைச் சொன்னவுடன் கேப்டன் சார்லஸ் வாலரின் கையை விட்டுவிட்டு அவரை விட்டுத் தள்ளி நின்றான். மேஜர் மெக்காலே, வாலரின் யூனிபார்மில் இருந்தச் சின்னங்களை அகற்றினார்.இடுப்பில் அவர் அணிந்திருந்த பெல்ட் கழட்டப்பட்டது. கைகளில் விலங்கு பூட்டப்பட்டு, கேப்டன் சார்லஸ் மெக்காலேவின் பாதுகாப்போடு சூப்பிரண்ட் வாலர் சங்கரன்கோயில் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

•

26

பாளையங்கோட்டைச் சிறையில் இருந்து தப்பிய நால்வரும் ஒரு குளத்திற்கு அருகில் வந்தனர். முதலில் வந்த ஊமைத்துரை தனது குதிரையை நிறுத்தினார். மற்ற நால்வரும் தங்கள் குதிரைகளை நிறுத்தினர். அப்போது சூரியன் மறைந்துகொண்டிருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூடிய அளவு வெளிச்சம் இருந்தது. நால்வரும் கீழே இறங்கித் தரையில் அமர்ந்தனர். குதிரைகள் நீரை நோக்கி நடந்தன. “சாமி, இப்ப நேரா பாஞ்சாலங்குறிச்சி போயிருவோமா? இப்பக் கிளம்பினோம்னா விடியறதுக்குள்ளப் போயிரலாம்...” என்றான் கிருஷ்ணப்ப நாயக்கர். ஊமைத்துரை ‘வேண்டாம்’ என்று தலையசைத்தான். வல்லநாடு இருக்கும் திசையைக் காண்பித்துக் கைகளால் மரங்கள் இருக்கும் இடத்தில் இன்று தங்கலாம் என்று சைகை காண்பித்தான். சிவத்தையா விளக்கினார். “டேய், வல்லநாடு காட்டுக்குள்ள போகலாம்னு சாமி சொல்லுறான்டா” என்றார்.

ஊமைத்துரை தான் முதலில் செல்வதாகவும் அடுத்து சிவத்தையா அண்ணன், அடுத்து கிருஷ்ணப்ப நாயக்கன், அடுத்து போத்தி பகடை,

கடைசியாகப் பாண்டியன் சேர்வைக்காரர் என ஒருவர் பின் ஒருவராகச் செல்ல வேண்டும் என்றும், சைகையில் சொன்னார். குதிரைகள் தண்ணீர் குடித்து முடித்திருந்தன. ஊமை அதன் கழுத்துப் பகுதியில் தடவிக் கொடுத்தார். அதன் காதுகளிலும், முகத்திலும் முத்தம் கொடுத்தார். குதிரைத் தலையைச் சிலுப்பியது. ஐவரும் முகத்தில் கண் மட்டும் தெரிகிறபடி தலையைச் சுற்றித் துணி யால் தலைப்பாகை கட்டிக் கொண்டனர்.

"போகலாம்" என்று சைகைக் காண்பித்து குதிரையில் ஊமைத் துரை தாவி ஏறினார். மற்ற நால்வரும் ஏறினர். ஏறக்குறைய இரண்டு மணி நேரப் பயணத்தில் வல்ல நாட்டுக் காட்டுக்குள் வந்தனர். ஏற்கனவே ஓரிரு முறை அந்தக் காட்டுக்குள் ஊமைத்துரை வந்து இரவில் தங்கியுள்ளார். குதிரைகளை மரங்களின் கிளைகளில் கட்டினர். பசிப்பதுபோல இருந்தது. "பாண்டியா, இது புளியம்பழம் காய்க்கிற நேரம். ஏதாவது கிடைக்குதான்னு பாரு" என்றார் சிவத்தையா.

பாண்டியன் கிளம்பிச் சென்றான். கிருஷ்ணப்பா அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தான். தரையில் தும்பைச் செடிகள் நன்றாக முளைத்திருந்தன. அவைகளை வேரோடுப் பறித்து ஒன்றாக்கித் தரையைச் சுத்தமாகக் கூட்டிவிட்டான். தும்பைச் செடியின் வாசம் அந்த இடத்தை ரம்யமாக்கியது. தரையைத் தடவிப் பார்த்து ஒன்றிரண்டு சிறு கற்களைப் பொறுக்கி எடுத்து அவைகளைத் தூர எறிந்தான். சிவத்தையா அந்த இடத்தில் உட்கார்ந்து காலை நீட்டிக் கொண்டார். ஊமை ஒரு கையைத் தலைக்கு வைத்துப் படுத்தார். சிறுது நேரத்தில் ஊமைத்துரை தூங்கி விட்டார். காட்டிற்குள் மனித நடமாட்டம் இருப்பதை அறிந்த கோட்டான்களும், ஆந்தைகளும் சத்தம் எழுப்பின.

பாண்டியன் ஒரு மணி நேரம் கழித்து வரும்போது அவனது மேல் துண்டு நிறைய பயிறு வகைகளும், புளியம்பிஞ்சுகளும், புளியம்பழங்களும், மாங்காய் பிஞ்சுகளும் இருந்தன. சிவத்தையா துணிப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஏற்பட்ட சிறு சத்தத்தில் ஊமை எழுந்து விட்டார். ஆளுக்குக் கொஞ்சமாகச் சாப்பிட்டனர்.

"பாண்டியா, மருது அண்ணனுக்குத் தகவல் தெரிஞ்சிருக்கும். வெள்ளக்காரங்க உடனே நம்ம ஊருக்கு நம்மளத் தேடிவரமாட்டாங்க.

ஒரு வாரம், பத்து நாள் கழிச்சுத்தான் வருவாங்க. அதுக்குள்ள நாம பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டயத் தயார் பண்ணனும்."

"அரண்மனை, எனக்குத் தெரிஞ்சு சங்கரன்கோயில்ல ஒரு ஆங்கிலேயப் படைப்பிரிவு முகாமிட்டிருக்கு. தளபதி காலின் மெக்காலேயும் அவன் தம்பி சார்லஸ் மெக்காலேயும் நாமத் தப்பிச்ச விஷயம் தெரிஞ்சவுடனே சங்கரன்கோயிலுக்குத் தகவல் சொல்லி விட்டிருப்பானுக. அதனால கம்பெனிப் படை உடனே பாஞ்சாலங்குறிச்சி நோக்கிக் கிளம்பிரும். சம்பவம் நடந்தபோது கலெக்டர்கூட மெக்காலே வீட்டுலதான் இருந்திருப்பான். அப்பவே உத்தரவு போட்டிருப்பான். நம்ம ஆளுகளவிட்டு சங்கரன்கோயில்ல இருந்து அவனுங்கள அடிச்சுப் பத்தி விட்டுருவோமா, அரண்மனை?"

"வேண்டாம்டா. ஆள், படை, அம்பு, ஆயுதங்கள் என பெரிய ஆர்மி வச்சிருக்கிறவன். அவனைத் தாக்கணும்னா நமக்கு இன்னும் பலம் வேணும். திடீர்த்தாக்குதல் வேண்டாம். அவன் உடனே நம்மைத் தேடி வரமாட்டான். எப்படியும் நாம பாஞ்சாலங் குறிச்சிக்குத்தான் போவோம்னு அவனுங்களுக்குத் தெரியும். அதனால் நிதானமாத்தான் கிளம்பி வருவான்."

"குமாரசாமி, நீ என்னப்பா நினைக்கிற? நம்ம ஊருக்கேப் போவோமா? இல்ல, நேரா மருது அண்ணன்கிட்டப் போவோமா?"

"மருது அண்ணன்களிடம் இப்போது போக வேண்டாம். வெள்ளக்காரன் அவர்களை இதுவரை விட்டு வைத்திருக்கிறான். அது அப்படியே இருக்கட்டும். இப்போதைக்கு அண்ணனிடமிருந்து நமக்குத் தேவையான ஆளுங்க, வெடி மருந்துகளை மட்டும் வாங்கிக்கிடுவோம். நமக்கு ரொம்பத் தேவைன்னு வரும்போது அண்ணனைத் தேடி அவங்க ஊருக்குப் போவோம்" என்றார் ஊமைத்துரை.

"இப்ப நம்மால ஒரு இருபதாயிரம் பேர திரட்ட முடியும். பரதவர்கள் கிட்ட வெடிமருந்து கேட்டுப்பாக்கலாம். போர்த்துக் கீசுகாரங்ககிட்டேயும் உதவி கேட்கலாம். ஆனா அது சரியா வருமான்னு தெரியல. அவங்களுக்கு இப்ப யுத்தத்தில ஆர்வம் குறைஞ்சிருச்சு. சர்ச் கட்டுறதுலயும், ஆஸ்பத்திரிக் கட்டுறதுலயும் தான் இப்ப ஆர்வமா இருக்காங்க. அதனால ஒரே வழி மருது அண்ணன்கிட்ட படை உதவி கேட்கிறதுதான். அண்ணன்களோட மகனுங்க வரவேண்டாம். அவங்க வந்தா நம்மகூட மருது அண்ணங்க இருக்கிறது ரொம்ப வெளிப்படையா

தெரிஞ்சிரும். அதனால அண்ணங்களோட ஆளுக மட்டும் வந்தாப் போதும். சிவகங்கையில ஊர் ஊருக்குத் தாக்கல் சொல்லிவிட்டாருன்னா மருது அண்ணங்களால இருபதாயிரம் பேர ரெண்டு நாள்ல கூட்டிற முடியும். அதனால அண்ணன்கிட்ட பாண்டியன் சேர்வைக்காரன அனுப்பிரலாம்னு நினைக்கிறேன். என்ன குமாரசாமி? சரியா இருக்குமா?" என்றார்.

ஊமைத்துரை, "சரி" என்றார்.

சிவத்தையா, பாண்டியனை அருகில் அழைத்தார்.

"பாண்டியா, நீ கொஞ்ச நேரம் தூங்கிக்க. விடியறதுக்குள்ள தூத்துக்குடிப் போயி கடல் ஓரமாப் புடிச்சுப்போ. நேரா எங்கயும் நிக்காம கமுதி போயிடு. கமுதியில மயிலப்பன் இருப்பாரு. நாம தப்பிச்சதை மருது அண்ணன் இந்நேரம் அவருக்குச் சொல்லி இருப் பாரு. அவருகிட்ட என்ன உதவிப் பெற முடியுமோ அத வாங்கிக்க. அப்படியே அரண்மன சிறுவயல் போயிரு. மருது அண்ணனைப் பார்த்து, "ஊமைத்துரை அண்ணன் ஒரு இருபதாயிரம் பேரக் கேட்டார்"னு சொல்லு. எவ்வளவுக்கெவ்வளவு வேகமா திரும்ப நீ வரமுடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு சிவகங்க ஆட்களோட வந்தா நல்லது. நீ வரும்போது சிவகங்க வீரர்களோடுதான் வரணும். ஒரு இருபது மாட்டுவண்டி வெடிமருந்தும் அண்ணன்கிட்ட கேட் டேன்னு சொல்லு" என்று சொன்னார். ஊமை யோசனையில் ஆழ்ந்தார். பாண்டியனைப் பார்த்து, மூக்கில் விரலை வைத்து காண்பித்தார். பாண்டியனுக்குக் குழப்பமாக இருந்தது. ஊமை தன் உள்ளங்கையைக் காண்பித்தார். "ஒ, வெள்ளைக்காரப் பெண்ணா?"

"அந்தப் பெண்ணை என்ன செய்தீர்கள்?"

"ஆம், கேத்தரீனைப் பத்தித்தான் சாமி கேட்கிறார்" எனத் தெரிந்து கொண்டான்.

"டேய், பாண்டியா, அந்தப் பெண்ணின் உதவியை மறக்க முடியாதுடா. இந்த ஒரு வாரமாகவே ஒவ்வொரு நிலையிலும் அந்தப் பெண் நமக்கு உதவியிருக்கு. யார் பெத்தப் பிள்ளையோ? சக்கம்மா அது மனசுக்குள்ளப் புகுந்து நமக்குப் பெரிய உதவி பண்ணியிருக்கு. எப்படிடா அந்தப் பொம்பளப் பிள்ளயப் பிடிச்சீங்க?"

“அரண்மன, அது ரொம்பத் தங்கமான அம்மா. அவனுங்க சாதி யில தப்பிப் பொறந்திருச்சி. நம்ம போத்தி பகடைதான் சொன்னான். ஜெயிலுக்குள்ள எது பண்ணனும்னாலும் இந்த வெள்ளக்கார ஆத்தாவப் புடிங்கன்னு. அந்த துலுக்கப் பொம்பளப் பிள்ளைய நம்ம கிருஷ்ணப்ப நாயக்கர் சரி பண்ணிட்டான்.”

“எப்படிடா? “

“நீ எனக்குத் தங்கச்சி முற. ஜெயிலுக்குள்ள இருக்குற ஊமச் சாமியும் சிவத்தையா அரண்மனையும் என்னைய மாதிரி தெலுங்குப் பேசுறவங்கதான். தெலுங்குப் பேசுற எல்லா ஆம்பளகளும் துலுக்கப் பொம்பளகளுக்கு அண்ணன் தம்பி முறதான். நீ எங்களுக்குச் செய்யப் போற உதவி ஒன் அண்ணன் தம்பிகளுக்குச் செஞ்சதா நினைச்சுக்கோ ஆத்தான்னு” ஆரம்பிச்சான்.

துலுக்கப்பிள்ள முதல்ல ஒத்துக்கிறல. “புருசன் அடிப்பான், அப்படியிப்படின்னு சொல்லுச்சு.” சரின்னு அதுகிட்ட சத்தியம் வாங்கிக்கிட்டோம். உதவி செய்யலேன்னாலும் பரவாயில்லை. நாங்க உங்கிட்ட உதவி கேட்டத ஒம் புருசன் கிட்டயோ அப்புறம் அந்த ஜெயில் சூப்பிரண்டு பொண்டாட்டிகிட்டயோ யாருகிட்டயும் சொல்லக்கூடாதுன்னு சொன்னோம். அந்தப் பொண்ணு சரின்னு சத்தியம் பண்ணிக் கொடுத்துட்டுப் போயிருச்சு. ரெண்டு நாள் கழிச்சு பார்த்தோம். “வா”னு கூப்பிட்டுச்சு. போய் பேசினோம். கடைசியில சொல்லுச்சு. “கேத்தரீன் அம்மாக்கிட்ட சொன்னேன். உங்களப்பத்தி முழுசா சொல்லல. உள்ளயிருக்கிற ஊமச்சாமிக்கும் சிவத்தையா அரண்மனைக்கும் ஏதாவது உதவி தேவையா இருந்து கேட்டா ஜெயில் சூப்பிரண்டு கிட்டச் சொல்லி செய்ய முடியுமான்னு கேட்டேன். கேத்தரீன் நம்ம சாமியப் பத்தி நிறையக் கேள்விப்பட்டிருக்காம். நம்ம கூட இருந்து இப்ப சாமியாப் போயிட்ட வீரபாண்டிய ராஜா, வெள்ளையத் தேவர்ன்னு எல்லாத்தையும் விவரமா கேட்டுக்கிட்டுச்சு. அப்புறம் சொல்லிச்சு. “சரி, நா உதவி பண்ணுறேன்னு சொல்லிருச்சு.” இன்னொன்னு நம்ம கேத்தரீன் அம்மாவுக்கு பானர்மேன் பயலப் பிடிக்காது. அவன் மூஞ்சியும் மொகரையும், அடுத்தவங்களுக்கு கெடுதல் பண்ணுறது தான் பானர்மேன் பயலுக்கு வேலைன்னு திட்டும். அத வச்சுத்தான் அம்மாகிட்ட சொன்னேன். பானர்மேன் தான் எங்கப் பாஞ்சாலங்குறிச்சி அழிஞ்சதுக்குக் காரணம்னு, அதனாலதான் அம்மா

நமக்கு உதவி செய்ய ஒத்துக்கிருச்சு. இன்னொன்னு நம்ம சாமியப் பத்தி கேத்தரீன் ஆத்தாவுக்கு நல்ல அபிப்ராயம் இருக்கு."

"சரிடா பாண்டியா, நீயும், போத்தி பகடையும், நம்ம சாமியோட நல்ல பேரும் சேர்ந்து எங்கள வெளியே கொண்டு வந்திட்டீங்க. அந்த ரெண்டு பொம்பளகளயும் வெள்ளக்காரப் பயலுக என்ன பாடுபடுத்தப் போறானுகளோ தெரியலையேடா" என்றார் சிவத்தையா. "அரண்மனை, அவங்க ரெண்டு பேருக்கும் ஒன்னும் ஆகாது. அவங்க இனி நம்ம கூடத்தானே இருக்கப் போறாகா? நம்ம கிளம்பின அப்பவே அவங்களும் கிளம்பிட்டாங்க."

"டேய் படுபாவி, என்னடா சொல்லுற? வெள்ளக்காரப் பொம்பளையும் துலுக்கப் பொம்பளையையும் நாம எங்கடா கூட்டிக்கிட்டுத் திரியறது? வெள்ளக்காரங்களும், துலுக்கன்களும் வெறியாயிருவானுங்களேடா? துலுக்கப் பொம்பளயக் கூட்டிக்கிட்டு வந்துட்டோம்னு தெரிஞ்சா ஆற்காடு நவாப் கொதிச்சிருவாரேடா? அதிகாரம் அவருக்கு முழுசாப் போயிட்டதாலே. வெள்ளக்காரங்க மேல என்ன குத்தம் சொல்லலாம்னு நவாப் காத்துக்கிட்டிருக்காரு. பொண்ணு விசயம் போதுமே, பிரச்சனையைக் கையில எடுத்துக் கிருவாரேடா?"

"அதெல்லாம் ஒன்னும் பெரிய விசயம் இல்ல அரண்மனை. நவாப்பும் வெள்ளக்காரங்களும் ஒன்னாத்தான் இருக்காங்கன்னு நா நினைச்சுக்கிட்டிருந்தேன். அப்படி ஒன்னும் இல்லையாம். உங்களுக்குச் சரியாத் தெரிஞ்சிருக்கும். ரெண்டு பேரும் எந்த விசயத்திலேயும் இனி ஒன்னு சேர மாட்டாங்கன்னு பேச்சு ஓடுது. இந்தப் பொம்பளக விசயத்துல ஒன்னு சேந்தா பின்னாலே பாத்துக்கிருவோம். வெள்ளக்காரம்மாவும், துலுக்கப்பிள்ளை பாத்திமாவும் நம்ம சிறையிலிருந்து தப்பிச்ச அப்பவே அவங்களும் கிளம்பிட்டாங்கன்னு சாமிக்குத் தெரியும்" என்று பாண்டியன் சொன்னவுடன் ஊமைத்துரையை சிவத்தையா பார்த்தார்.

"என்ன குமாரசாமி இது? தலவலி போயி திருகு வலியக் கொண்டுவந்து விட்டுட்ட" என்றார் சிவத்தையா.

ஊமைத்துரை ஒன்றும் பதில் சொல்லவில்லை.

ஐவரும் படுத்தனர். அதிகாலையில் எழுந்தபோது பாண்டியன் சேர்வைக்காரனும் போத்தி பகடையும் கிளம்பிப் போயிருந்தனர். கிருஷ்ணப்ப நாயக்கன் பக்கத்தில் குளம் குட்டை இருக்கிறதா எனப்

பார்த்து விட்டு வந்தான். நல்ல வேளையாகப் பக்கத்திலேயே குளம் ஒன்று இருந்தது. தண்ணீரும் பாதிக்குளத்திற்குமேல் இருந்தது. அங்குச் சென்ற மூவரும் அசதி தீரக் குளித்தனர்.

பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று 'பாஞ்சாலங்குறிச்சி சகோதரர்கள் இருவரும் வந்திருப்பதை' சொல்லிவிட்டு வருமாறு கிருஷ்ணப்பாவைப் பணித்தார் சிவத்தையா. அந்தப் பகுதியில் ஊமைத்துரைக்கு நல்ல அறிமுகம் இருந்தது. தளபதி வெள்ளையத் தேவனின் சொந்த ஊர் வல்ல நாடு என்பதால் ஊமைத்துரைக்கு அங்குச் செல்வாக்கு இருந்தது. அதனால்தான் சிவத்தையா துணிந்து தகவல் தரச் சொன்னார். கிருஷ்ணப்பா சென்ற பிறகு அண்ணன் தம்பி இருவரும் தனிமையில் இருந்தனர். இரவு நன்றாகத் தூங்கியதாலும், காலையில் குளத்தில் குளித்து முடித்ததாலும் நல்ல மனநிலையில் இருந்தனர்.

"குமாரசாமி, என்னப்பா விளையாட்டுப் பிள்ளையா இருக்க? சிறையில இருந்து தப்பிச்சோம்ங்கிறதக் கூட யாரும் பெருசா எடுத்துக்கிற மாட்டாங்க. ஆனா இந்தப் பொம்பள விஷயத்த..."

"அது ஒன்றும் பிரச்சனையில்லை. அது பற்றிப் பின்பு பேசலாம். இப்போ வேண்டாம்" என்றார் ஊமைத்துரை.

பின்பு, இருவரும் எந்தெந்த பாளையக்காரர்கள் நம்முடன் வருவார்கள், யார் யார் படை, பணம் இரண்டும் தருவார்கள்? யார் பணம் மட்டும் தருவார்கள்? யார் நமக்கு எதிரியாகயிருப்பர் என்று கணக்கிட்டனர். சிவத்தையா இறுதியாகச் சொன்னார். "யார் உதவி செய்தாலும் செய்யவில்லை என்றாலும் மருது பாண்டியர்களும் விருப்பாச்சி கோபால் நாயக்கரும் நம்முடன் இருப்பார்கள்" என்றார். தூரத்தில் மக்கள் வரும் சத்தம் கேட்டது. ஊமைத்துரை மரத்தின் மீது ஏறிப் பார்த்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சிப் பொங்கியது. அவருக்குத் தெரிந்த முகங்கள்தான் வந்து கொண்டிருந்தன. கையில் கிடைத்த சாப்பாடு, தானியங்கள், பழங்கள், தேன் என தூக்கிக் கொண்டு வந்தனர். இருவரையும் பார்த்தவுடன் தரையில் விழுந்து வணங்கினர். கொண்டு வந்த பொருட்களை அவர்கள் முன் பரப்பி வைத்துக் கை கட்டி நின்றனர்.

பாஞ்சாலங்குறிச்சியின் எதிர்காலம் இனி என்னாகுமோ என்ற பயத்தில் இருந்த மக்களுக்கு, சிவத்தையாவும், ஊமைத் துரையும்

கண்ணெதிரில் நின்றவுடன் ஆசுவாசமாக இருந்தது. ஊமைத்துரையைப் பார்த்தவுடன் அவர்களின் கண்கள் நிறைந்திருந்தன.

"கட்டபொம்மு ராஜாவைத் தூக்குல போட்டதும் இல்லாம ஒங்க ரெண்டு பேரையும் சிறையில் போட்டதால, ஒங்க பாஞ்சாலங்குறிச்சியே ஒளியிழந்து கிடக்கு சாமி... அந்த ஜனங்களைப் பாக்க முடியலை."

"சாமி இளச்சுப் போயிட்டீங்க, ஒங்களுக்கு இப்படி ஆனதும் எங்களுக்குச் சாவு வரலயேன்னு சாமிய கேட்டுக்கிட்டிருந்தோம். ஒங்களத் திரும்பப் பாக்குறதுக்குத்தான் உசிரப் புடிச்சிக்கிட்டு இருந்தோம் போல சாமி. சரின்னு சொல்லுங்க, ஒங்கள இந்தப் பாடு படுத்தியவன உண்டு இல்லைன்னு பண்ணிர்றோம். அவனுங்கள சும்மாவிட மாட்டோம். எங்க கூப்பிடுறீங்களோ, வர்றோம்..." என்றார், ஊர்ப் பெரியவர். ஊர்மக்கள் கை கூப்பி அதை ஆமோதித்தனர்.

"முதல்ல சாப்பிடுங்க சாமி. அப்புறம் பேசிக்கிருவோம். வாங்கப்பா கொஞ்சம் தள்ளி நிப்போம்" என்று கூட்டத்தை அழைத்துச் சென்றனர். இரு சகோதரர்களும் சாப்பிட்டு முடிக்கும் போது இளைஞர்கள் பெரும் கூட்டமாக வந்து சேர்ந்தனர். கைகளில் கத்தி, சூரிக்கத்தி, வாள் என வைத்திருந்தனர். ஊமையைப் பார்த்ததும் தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை எடுத்து கையில் வைத்துக் கொண்டனர்.

முந்தைய இழப்புக்கான கனத்த சோகமும், எதிர்காலத்தை மீட்டெடுப்பதற்கான போராட்ட நெருப்பும் கனன்ற அந்த இடம், வீசும் காற்றிலேயே தீப்பிடித்து எரிவதுபோல் கனன்று கொண்டிருந்தது.

•

27

மூன்று நாள் கழித்துப் பாஞ்சாலங்குறிச்சிக்குள் ஊமைத்துரை நுழைந்தபோது ஊமைத்துரையுடன் ஐயாயிரம் பேர் வந்தனர். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த பாஞ்சாலங்குறிச்சி இதுவல்ல என்பதை முதல் பார்வையிலேயே தெரிந்துகொண்டனர். ஊரின் அமைப்பு மாறியிருந்தது. கோட்டையும், கோட்டையைச் சுற்றிய கட்டிடங்களும் தரைமட்டமாகியிருந்தன. பெரும் புளியந்தோப்புக்கு நடுவில் பாதுகாப்புடன் இருந்த கோட்டை மண்மேடாகக் கிடந்தது. ஒன்றரை வருடத்திற்குள் இத்தனை மாறுதல்களா? மண்மேட்டின் மீது நின்று

அண்ணன் கட்டபொம்மன், வெள்ளையத்தேவன், சுந்தரலிங்கம் எல்லோரையும் நினைத்து ஊமைத்துரை கண்ணீர் விட்டான்..

ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் இருந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முன்பு கூடியிருந்தனர். சிவத்தையாவும் ஊமைத்துரையும் இடிந்து மண்ணோடு மண்ணாக இருந்த தங்களின் கோட்டையைப் பார்த்தார்கள். குரங்குகள் பிய்த்துப்போட்ட தூக்கணாங்குருவியின் கூடுபோல், கோட்டையின் சிதிலங்கள் கிடந்தன. இந்த மண்ணின் வாழ்வைக் கோட்டையின் இடிபாடுகளுக்குள் இருந்தே மீட்டெடுக்க வேண்டும் என்ற வெறி கிளம்பியது. சிதறிக் கிடந்த பெரிய பெரிய மண் கட்டிகளை ஊமைத்துரை ஒற்றைக் காலால் எத்தித் தள்ளினான். மெலிந்த அவனுடைய காலுக்குள் இவ்வளவு வலுவும் வேகமும் வந்ததைக் கூடியிருந்த மக்கள் வியப்போடு பார்த்தனர்.

ஊமைத்துரைக்கு அண்ணன் கட்டபொம்முவின் நினைவு அதிக மாகியது. அப்படியே கால்கள் துவள, தரையில் விழுந்தான். அழுகை முழுமையாக வெளிவராமல், உள்ளுக்குள் அடங்கியும் போகாமல், பெரும் கேவலாக ஊமைத்துரையிடம் இருந்து வெடித்துச் சிதறியது. அந்த வட்டாரமே அதிரும்படி அடிவயிற்றிலிருந்து கத்தினான். என்றுமே கலங்கிப் பார்த்திராத தங்கள் சாமியின் கேவலைக் கேட்ட மக்களும் கலங்கி நின்றனர். “சக்கம்மா, உன்னோட மக்களையும் மண்ணையும் நீதான் காப்பாத்தணும்” என நெஞ்சுருக வேண்டியபடி, எல்லோரும் குனிந்து இடிபாடுகளுக்குள் இருந்த மண்ணை அள்ளி நெற்றியில் பூசிக் கொண்டிருந்தனர்.

தரையில் கிடந்த வைக்கோல்களில் ஒன்றைப் பொறுக்கி எடுத்தான். வைக்கோலை இரு கைகளிலும் வைத்து பரபரவெனத் தேய்த்தான். ஒரு கையில் வைக்கோலை வைத்துக்கொண்டு மற்றொரு கையை அதன்மீது பலமாகத் தட்டினார். வைக்கோல் தூரத்தில் போய் விழுந்தது. அவர்களுடன் இருந்த வீரர்கள் கைகளிலிருந்த ஆயுதங்களை உயர்த்தி முழக்கம் எழுப்பினர். சப்தம் குறையட்டும் என ஊமைத்துரை சிறிது நேரம் காத்திருந்தார். பின்பு கீழே குனிந்து இடிந்து கிடந்த கோட்டைச் சுவரின் கற்களை எடுத்து ஒன்றின்மீது ஒன்றாக வைத்து அடுக்க ஆரம்பித்தார்.

“குமாரசாமி, என்ன வேலை செய்கிறாய்? நாம் இந்த இடத்தை விட்டு உடனே கிளம்புவோம். நாம் தப்பித்து வந்த இரண்டு நாளில் ஐயாயிரம் வீரர்கள் நம்மோடு சேர்ந்து விட்டார்கள். நாம் பாளையங்

கோட்டையிலிருந்து கிளம்பும்போது பாஞ்சாலங்குறிச்சிக்கு வர நினைத்தது சரிதான். அப்படித்தான் இங்கு வந்தோம். இங்குதான் இவ்வளவு வீரர்களைச் சேர்க்க முடியும். ஆனால் ஒன்றை மறந்துவிட்டோம். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இடிக்கப் பட்டிருந்தாலும் சிதிலமாகி இருக்காது என நினைத்தோம். அண்ணன் கட்டபொம்மனோடு நாம் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைவிட்டு வெளியேறியபோது கோட்டை இடிபாடுகளோடுதான் இருந்தது, வெள்ளைக்காரன்கள் இப்படி மண் மேடாக ஆக்கியிருப்பார்கள் என நினைக்கவில்லை. இந்த இடம் நமக்கு எந்த விதத்திலும் பாதுகாப்பானதாக இல்லை. சிவகங்கையிலிருந்து வரப்போகும் வீரர்களை நாம் இங்கு வைத்துப் பராமரிக்க முடியாது. நம்மைப் பற்றிக் கேவலமாக நினைப்பார்கள். நாம் இந்த இடத்திலிருந்து வெள்ளையர்களை எதிர்க்க முடியாது. வீரர்கள் நம் மீது நம்பிக்கையிழந்து விடுவர்.”

ஊமைத்துரை தன் அண்ணனைப் பார்த்தான். “வேண்டாம். இந்த இடத்தை விட்டுப் போக வேண்டாம். நான் மட்டும் சொல்லவில்லை. இந்த இடத்தை விட்டுப் போனது நாம் செஞ்ச தப்புன்னு சாகிறதுக்கு முந்தி பெரிய அண்ணன் இரண்டு தரம் சொன்னார்” என்றார். “வேண்டாம்” என்பது போலப் பலமாகத் தலையை இடது, வலது புறமாக ஆட்டினார். ஊமைத்துரை கீழே உட்கார்ந்து விட்டார்.

புதுக்கோட்டைக் காளாப்பூர்க் காட்டில் தொண்டைமானின் வீரர்களால் கைது செய்யப்பட்ட போதும், கயத்தாறில் தூக்கில் ஏறுவதற்கு முன்பும் அண்ணன் கட்டபொம்மன் சொன்னதைச் சிவத்தையாவும் அறிவார். அதை நினைத்துப் பார்த்தார். “நான் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைவிட்டு வெளியே வந்திருக்கக்கூடாது”. இதுதான் கட்டபொம்மன் இருமுறையும் சொன்ன வார்த்தை.

சிவத்தையா தன் தம்பியைத் தூக்க முயன்றார். ஊமைத்துரை தன் அண்ணணைப் பார்த்து கையை எடுத்துக் கும்பிட்டார். உட்கார்ந்த இடத்தை விட்டு எழ மாட்டேன் என மறுத்தார்.

“தம்பி, நம்மோட அண்ணன் அப்போது சொன்னதும் சரி, நீ இப்போது நினைப்பதும், சரியில்லை அப்போது கோட்டை இருந்த நிலை வேறு. இப்போது இது இருக்கும் நிலை வேறு. இப்போது இது கோட்டையில்லை. மண்மேடு. வெட்ட வெளியில் ஆங்கிலேயர்களைத் தடுத்து நிறுத்திப் போரிட நம்மிடம் பெரும் பீரங்கிகளும் இல்லை. மாட்டு

வண்டியில் ஏற்றிய சிறு பீரங்கிகளை வைத்துக் கொண்டு நாம் பெரிதாக என்ன செய்ய முடியும்? இரண்டு நாட்கள் கூட இந்த இடத்தில் நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது. நாம் ஜெயிக்கணும். கட்டபொம்மு அண்ணன் காளாப்பூர்க் காட்டில் பிடிபட்ட போது அங்கு தங்கியிருந்ததைவிட வேறு ஒரு இடத்தில் தங்கியிருந்திருக்கலாம் என நினைத்தார். நீ விரும்புவதால் அண்ணன் செய்த மாதிரியே நாமும் செய்வோம். ஆனால் ஒரே ஒரு மாறுதலோடு. அவர் சிவகங்கை மருது அண்ணன்களிடம் ஐநூறு வீரர்களோடு சென்று தங்கினார். நாமும் அதேபோல் இருபதினாயிரம் வீரர்கள் கூட்டத்தோடு சிவகங்கை செல்வோம். அண்ணன் சிவகங்கையிலிருந்து தொண்டைமானின் பகுதிக்குள், காளாப்பூர்க் காட்டுக்குள் சென்று தங்கினார். நாம் அதைச் செய்ய வேண்டாம். சிவகங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள காளையார்கோயில் கோட்டைக்குப் போய் அங்கிருந்து போராடச் சின்ன மருதுவிடம் அனுமதி பெறுவோம். காளையார்கோயில் கோட்டையும் அதைச் சுற்றிய காடும் நமக்குப் பெரும் உயிர் அரண். உயிரில்லாத செங்கல்லும், கல்லும், மண்ணும் தர முடியாத பாதுகாப்பை நெருக்கமாக உயர்ந்து ஓங்கிய காளையார்கோயில் புதர்க் காடுகள் நமக்கு வழங்கும். யோசித்துப் பார் குமாரசாமி.”

“வேண்டாம்” என்றார் ஊமை. மறுபடியும், மறுபடியும் தான் சொல்வதைத் தம்பி கேட்க மறுப்பது சிவத்தையாவிற்கு வருத்தமாக இருந்தது. ஊமைத்துரை தன் அண்ணனை அழைத்துத் தன் அருகில் உட்காரச் சொன்னார். சுற்றியிருந்த வீரர்கள் கூட்டம் உடனடியாக விலகியது. சிவத்தையாவும், ஊமையும் பேசட்டும் என்று கூட்டம் சற்றுத் தள்ளிச் சென்று வட்டமாக நின்றது. “யாரும் பேச வேண்டாம்” என ஒருவருக்கொருவர் சைகை செய்தனர்.

அண்ணனிடம் ஊமைத்துரை தனது திட்டத்தைச் சைகைகளில் விவரித்தார். மண்ணில் ஒரு வரைபடம்போல் வரைந்து காட்டினார். சுற்றி நின்ற வீரர்கள், அண்ணன் தம்பிகள் ஆலோசனை செய்வதைக் கூர்ந்து கவனித்தனர்.

சிவத்தையாவின் முகத்தில் இருந்த கவலை மாறி, முகத்தில் தெளிவு வருவதை வீரர்கள் கண்டனர். ஊமை தரையில் கிடந்த வைக்கோலையும், மண்ணையும் கையில் எடுத்து வைத்ததையும், வைக்கோலோடு மண்ணைச் சேர்த்து வைத்ததையும் வீரர்கள் பார்த்தனர். சிவத்தையாவிற்கு நம்பிக்கை வந்தது. எழுந்து நின்றார். தம்பியை கை

கொடுத்து துவக்கினார். வீரர்களை அருகில் அழைத் தார். கூட்டம் அருகில் வந்தது. அமைதியாக இருக்கும்படி தளபதிகள் தங்களது கைகளை உயர்த்தினர்.

"வீரர்களே, இந்தப் பாஞ்சாலங்குறிச்சி மண் வீரம்மிக்கது. தாய்க் கோழி, தன் குஞ்சுகளைத் தூக்க வந்த வல்லூரை விரட்டிய பூமி. அந்தக் காட்சியைப் பார்த்துத்தான் நமது முன்னோர்கள் இங்கே கோட்டையைக் கட்டினார்கள். இந்த இடத்திலிருந்து போரிட்டால் நம்மைவிட வலிமையாகத் தெரிபவனையும் நாம் வெல்ல முடியும். சாமியிடம் நான் பேசியதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். என்னிடம் சாமி விளக்கமாகச் சொன்னான். சாமி இங்கே கோட்டையைத் திரும்ப எழுப்பலாம் என்கிறான். சாமி சொல்வது சரிதான். இந்தக் கோட்டை நம் முன்னோர்கள் வாழ்ந்த இடம். இந்தக் கோட்டைக்குள் இருந்து கொண்டு போரிட்ட காலம் வரை நாம் தோற்றதில்லை. ஆகவே, இந்தக் கோட்டையை மீண்டும் நிர்மாணிப்போம். நம்மிடம் கைவசம் உள்ள வீரர்கள், நம்மிடம் இப்போது வந்து கொண்டிருக்கிற சிவகங்கைச் சீமையின் இருபதினாயிரம் வீரர்களை வைத்து உடனடியாக தரைமட்டமாகியுள்ள இந்தக் கோட்டையை எடுத்துக் கட்டுவோம்" என்றார்.

சிவத்தையா பேசிமுடித்தவுடன், ஊமைத்துரை அவரின் காலில் விழுந்தார். சிவத்தையா ஊமைத்துரையைத் தொட்டுத் தூக்கினார். அண்ணைன் பிடிக்குள் அடங்காமல், ஊமைத்துரையின் உடல் மீண்டும் மண்ணை நோக்கியே நழுவியது. "சாமி, எழுந்து வாங்க, நாங்க இருக்கோம். எங்க கடைசி மூச்சு இருக்கிற வரைக்கும் இந்தக் கோட்டையையும் ஒங்களையும் விழ விடமாட்டோம்" உணர்ச்சிப் பெருக்குடன் மக்களின் குரல்கள் ஒன்றுபோலவே ஒலித்தன. குரல்களின் ஒலி கூடக்கூட ஊமைத்துரையின் கேவல் அடங்கியது. எழுந்து நின்றான்.

ஊமைத்துரை, சிவத்தையாவைக் கோயில் படிக்கட்டில் உட்கார வைத்தார். சக்கம்மா சிலைமேலிருந்த துணியை அவிழ்த்து சிவத்தையாவின் சிரசில் கட்டினார். சிறைச்சாலையில் சரியான சாப்பாடு இன்றி, இன்னும் மெலிந்து நோஞ்சானாக இருந்த ஊமைக்கு எங்கிருந்துதான் பலம் வந்ததோ, அண்ணனை உயரத் தூக்கினார். கூட்டம் "அரசர் சிவத்தையா" என ஆர்ப்பரித்தது. சிவத்தையாவும் ஊமைத்துரையும் இடிந்த கோட்டைக்குள் இருந்த சக்கம்மா கோயிலுக்குச் சென்று வணங்கினர். கோயில் மட்டும் அதிகம் இடிபடாமல் இருந்தது. கோயிலுக்குள் இருந்த சிவத்தையாவின் வீட்டுப் பெண்கள் சேலைத்

தலைப்பை வாயில் வைத்துக் கொண்டு அழுதனர். சிலர் வாய்விட்டுக் கத்தினர். ஊமைத்துரை கையைத் தூக்கி அமைதியாக இருக்கச் சொன்னார். கூட்டம் அமைதி காத்தது.

வீர பாண்டிய கட்டபொம்மன் தூக்கில் போடப்பட்டு அன்று நானூற்று எழுபத்தி இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. வீரபாண்டியனுக்குப் பின்பு ஆங்கிலேய அரசு யாரையும் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரராக நியமிக்கவும் இல்லை. வீரபாண்டியர் குடும்பத்திலிருந்து யாரும் முடிசூட்டப்படவும் இல்லை. ஊமைத்துரையின் இந்த அறிவிப்பு எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. சிவத்தையா அரசனாக அறிவிக்கப்பட்டவுடன் கிராமத்துத் தலைவர்கள் அவர் காலில் விழுந்து வணங்கினர். கைகளில் கொண்டு வந்திருந்த குறுங்கத்திகளையும், சிறு வாள்களையும், அரசனின் கால்களில் தங்களின் காணிக்கைபோல் வைத்தனர்.

அன்று இரவு, சிவத்தையா தஞ்சை மராத்திய அரசருக்கும், புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கும் ஊத்துமலை ஜமீன்தார் மருதய்யாத் தேவருக்கும், தங்களது மிகப் பெரும் எதிரியாகிய எட்டயபுரம் எட்டப்ப நாயக்கருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதினார்.

ஊத்துமலை ஜமீன்தாருக்கு எழுதிய கடிதம்.

“பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் சிவத்தையா எழுதுவது. சங்கர நயினாரின் அருளால் நாங்கள் சிறையிலிருந்து தப்பித்து பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்துவிட்டோம். எனது அண்ணன் வீரபாண்டிய கட்டபொம்மன் உயிரோடு இருந்தபோது துரதிஷ்டவசமாக நமக்குள் நல்ல உறவு இல்லாமல் போய்விட்டது. எங்களால் நீங்கள் துன்பப்பட்டிருப்பீர்கள். அதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம். நமக்குள் உள்ள வேற்றுமைகளை ஆங்கிலேயர்கள் பயன்படுத்தி நம்மை சிறுமைப்படுத்திவிட்டார்கள். ஆகவே, பெரிய மனது பண்ணி நமக்குள் உள்ள பகைமையை மறந்து விடுங்கள். எங்களால் நீங்கள் பட்ட துன்பத்தைக் கருத்தில் கொள்ளாமல், எங்களுக்கு ஆதரவு தாருங்கள்.”

வல்ல நாட்டிற்கு அருகிலுள்ள கார்ச்சேரிப் பகுதி மக்களுக்கும் பாஞ்சாலங்குறிச்சி மக்களுக்கும் காலங்காலமாகப் பகையிருந்தது. கட்டபொம்மனின் கடைசிக் காலங்களில் கார்ச்சேரி மக்கள் கிழக் கிந்தியக் கம்பெனியின் பயன்பாட்டிற்காக அரிசி, பருப்பு, புளி போன்ற அத்தியாவசியப் பொருட்களைத் திரட்டிக் கொடுத்தனர். அதைப்

பாஞ்சாலங்குறிச்சி மக்கள் எப்படியோ தெரிந்துகொண்டனர். கட்டபொம்மனை தூக்கில் போட்ட அன்று, அந்த கிராமத்திற்குள் பாஞ்சாலங்குறிச்சிப் போராளிகள் புகுந்து கார்ச்சேரிக் கிராமத்தினரை அடித்து உதைத்தனர்.

அதை மனதில் வைத்துக் கார்ச்சேரி கிராமத் தலைவருக்கு சிவத்தையா எழுதிய கடிதத்தில், "எங்கள்மீது பாசம் கொண்ட சிலர் எங்கள் அண்ணன் இறந்த அன்று உங்கள் கிராமத்தினருக்குத் தொல்லைகள் கொடுத்ததாகக் கேள்விப்பட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். எங்கள்மீது அன்பு வைத்ததால் அந்தக் குற்றத்தை அவர்கள் செய்துவிட்டனர். அவர்களைத் தற்போது எச்சரித்து உள்ளேன். அது போன்ற தவறு இனி ஏற்படாது. இதையும் மீறி உங்களுக்கு யாராவது தொந்தரவு செய்தார்கள் என்றால், நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான். வல்ல நாட்டுப் பகுதியில் என்னுடைய தளபதிகளான கட்டப்ப நாயக்கரும் சிவசுப்பிரமணிய பிள்ளையும், முகாமிட்டு இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்துப் புகார் செய்யலாம். உங்கள் பகுதியின் அரசன் நான் என்ற முறையில் தேசக் காவல் பணிக்கான வரியை எங்களுக்கு இதுவரை நீங்கள் கட்டுவதில்லை. ஆங்கிலேயக் கம்பெனியை அரசனாக நினைத்து அவர்கள் உங்களுக்குப் பாதுகாப்புத் தருவார்கள் என்று நம்பி அவர்களுக்குத் தேசக் காவல் வரி தந்து கொண்டிருக்கிறீர்கள். இனிமேலும் நீங்கள் கம்பெனிக்குத் தேசக் காவல் வரியைத் தொடர்ந்து தரலாம். எங்களை மட்டும் எதிரியாக நினைக்க வேண்டாம்" என்று மிகப் பெருந்தன்மையுடன் சிவத்தையா கடிதம் எழுதினார்.

தொண்டைமானுக்கும், தஞ்சாவூர் சரபோஜிக்கும் எழுதிய கடிதங்கள் சிவத்தையாவை ஒரு தேர்ந்த தலைவராகக் காட்டியது.

"உங்களது ஒத்துழைப்பைப் பெற்றதால்தான் ஆங்கிலேயர்கள் தங்களை வீரர்கள் என்று கருதிக் கொண்டு எங்களைப் போன்றவர் களை அடக்கியாள நினைக்கின்றனர். இந்த நாடு மிகப் பெரியது. நாம் எண்ணிக்கையில் அதிகம். ஆனால், நாம் தனித்தனியாகப் பிரிந்திருப்பதால் வலிமை குன்றி நிற்கிறோம். இந்தத் தேசத்தில் மட்டுமல்ல, உலகின் பல தேசங்களிலும் ஆங்கிலேயர்கள் நச்சு மரமாக வளர்ந்துள்ளனர். அந்தந்த ஊர் வாழ்வாதாரத்தை ஆங்கிலேயர்கள் அழித்து வருகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் நம்மைப் போல் துன்பப்படும் மக்கள் ஒரே நேரத்தில் வெகுண்டு எழுந்தால் குறைந்த

எண்ணிக்கையில் உள்ள ஆங்கிலேயர்களால் நம்மை அடக்கியாள முடியாது. அவர்களது படைப்பிரிவுகளை கலவரம் நடக்கும் எல்லா இடங்களுக்கும் அனுப்ப முடியாது. அது போன்ற ஒரு அசாதாரண சூழல் உருவானால் ஆங்கிலேயர்கள் இந்தப் பெரும் நாட்டிலிருந்து தப்பி ஓடி விடுவார்கள். ஒற்றுமை கொண்ட மக்கள் வெள்ளத்தில் அவர்கள் மூழ்கி அழிவார்கள். உருவாகப் போகும் பெரு வெள்ளத்தில் நீங்களும் ஒரு அங்கமாக இருங்கள்" என்று புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கும், தஞ்சாவூர் மராத்திய அரசனுக்கும் கடிதம் எழுதினார். இந்தக் கடிதங்களுக்கு யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. ஆனால், சிவகிரி, சிவகங்கைப் பகுதியிலிருந்து வீரர்கள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி வந்து கொண் டிருப்பதாகத் தகவல் வந்தது.

ஊமைத்துரையின் தூதுவர் பாண்டியன் சேர்வைக்காரர் கமுதியில் மயிலப்பனைச் சந்தித்தார். பாஞ்சாலங்குறிச்சி சகோதரர் கள் சிறையிலிருந்து தப்பித்துவிட்டார்கள் என்ற செய்தி அறிந்து மயிலப்பன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் ஏற்றிக்கொண்டு மயிலப்பன் பாஞ்சாலங் குறிச்சி நோக்கி விரைந்து வந்தபோது உறவினனை வரவேற்பதுபோல நாயக்கர் குலப் பெண்கள் குலவையிட்டு வரவேற்றனர்.

பெண்கள் தாங்கள் அணிந்திருந்த விலையுயர்ந்த பொருட் களைக் கழட்டி மயிலப்பனிடம் கொடுத்தனர். அன்பால் திக்குமுக்காடிப் போன மயிலப்பன் பாஞ்சாலங்குறிச்சி ஊமத்துரையையும், அரசன் சிவத்தையாவையும் சந்தித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைக் குறித்து விவாதித்தான். திருநெல்வேலி நாகராஜ மணியக்காரர், மருது பாண்டியரின் தளபதிகளான திருநெல்வேலி சுப்பையனும் ராமநாதபுரம் மண்டலம் மாணிக்கமும் வீரர்களுடன் பாஞ்சாலங்குறிச்சி வந்து சேர்ந்தனர்.

சிவத்தையா வீரர்கள் மத்தியில் பேசினார். "வீரர்களே, நமக்கு ஏதுவான சூழல் நிலவுகிறது. இப்போதுதான் அறுவடையும் முடிந்திருக்கிறது. இந்த வருடம் கார்த்திகை மாத மழை சிவகங்கைப் பக்கம் குறைவு என்று சொல்கிறார்கள். ஆனால் நம் பகுதியில மழை நன்றாகப் பெய்திருக்கிறது. இந்த வருடம் சாப்பாட்டுப் பிரச்சனை இல்லை. குளம், குட்டைகளில் தண்ணீர் இருக்கிறது. ஆடு, மாடுகள் நன்றாக இருக்கின்றன. அதனால் நாம் கோட்டையைக் கட்டுவதில் சிரமம் இருக்காது. நம்மில் ஒவ்வொருவரும் ஒரு வேலையை எடுத்துச் கொள்வோம். இப்பொழுது கோட்டைச் சுவர் எழுப்பும் இடத்தை சாமி

நடந்து சென்று காண்பிப்பான். நம் தானாவதிப் பிள்ளை அதைக் குறித்துக் கொள்வார்.

நான் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையை ஒதுக்குகிறேன். கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நம் கூட்டத்தில் முழுதாக மீசை நரைத்தவர்களே. உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் கையிலுள்ள ஆயுதங்களை இங்கேயே பத்திரப்படுத்திவிட்டு நான்கு திசைகளுக்கும் செல்லுங்கள். இரண்டு மைல்கள் தாண்டினால் நல்ல செம்மண் கிடைக்கும். அந்தச் செம்மண்ணை அள்ளிக் குவித்து வையுங்கள். மீசை நரைத்த ஆட்கள் புரிந்து கொண்டீர்களா? அடுத்து நம் கூட்டத்திலுள்ள பாதி மீசை வெளுத்த வீரர்கள் செய்ய வேண்டிய வேலை, குவித்து வைத்துள்ள அந்த மண்ணை மாட்டு வண்டியிலோ, தலைச்சுமையாகவோ இங்குக் கொண்டுவர வேண்டும். அடுத்து இளைஞர்களே, உங்களுக்கு என்ன வேலை என்றால், இளைஞர்களில் உயரமானவர்கள் இருபது மைல் சுற்றளவில் கிடைக்கும் வைக்கோல், கருப்பட்டி, வரகு கதிர், வரகரசி முதலானவற்றை இங்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

அடுத்து உயரம் குறைவாக உள்ள இளைஞர்களும் வீரர்களில் குள்ளமானவர்களும், ஊர்ப் பெண்களும், சிறுவர், சிறுமிகளும் மண்ணையும், வைக்கோலையும், கோட்டை எழுப்பத் தேவைப் படும் வேறு பொருட்களையும் தண்ணீரில் சேர்த்து கலந்துதர வேண்டும். நம் பகுதி கொத்தனார்கள், சித்தார்கள் கோட்டைச் சுவரை எழுப்ப வேண்டும். மூன்றே நாளில் நம்முடைய கோட்டையைக் கட்டி முடிப்போம். இரவும் பகலும் இந்தப் பாஞ்சாலங்குறிச்சிக்கு இல்லை.

நம் கோட்டை நம்முடைய வசிப்பிடம் மட்டுமல்ல. நம் பாதுகாப்பு. பாதுகாப்பான ஒரு கோட்டை கட்டி, அந்தக் கோட்டைக்குள் இருப்போம். அப்புறம் வெள்ளைக்காரன் என்ன, அவன் பீரங்கியும் நம்மிடம் பிச்சை வாங்கும். உள்ளிருந்து நாம் எறியும் தீப்பந்தங்கள், கவண் கற்கள், வளரி, குத்தீட்டிகள் அவன்களுக்கு எமன்கள் ஆகிவிடும். அவர்களால் நம் கோட்டையைத் தாண்டி நம்மை நெருங்க முடியாது" என்றார் சிவத்தையா.

சிவத்தையாவின் உத்தரவுப்படி கூட்டம் நான்காகப் பிரிந்தது. பொருட்கள் சேகரிக்கப்பட்டன. புதிதாக ஒரு கோட்டையைக் கட்டுவதற்கான சடங்குகள் செய்யப்பட்டன. கட்டுமானம் ஆரம்பிப்பதற்கு முன் பலி கொடுக்கும் விதமாக நூறு ஆடுகள் வெட்டப்பட்டன. ஒருபுறம்

ஆட்டுக்கறி வெந்து கொண்டிருந்தது. ஒரு புறம் கோட்டைச் சுவர் வேலை. ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டு வேலை செய்தனர். மண்ணையும் வரகு வைக்கோலையும், கருப்பட்டியையும் குழைத்துக் கட்டிய பெண்கள், "மண் வர வில்லை", "எங்களுக்கு வைக்கோல் பத்தவில்லை" என்று சத்தம்போட்டு எதிர்தரப்பை விரட்டி வேலை வாங்கினர். ஊமைத் துரையும், சிவத்தையாவும் ஆளுக்கு ஒரு திசையிலிருந்து வீரர்களை ஊக்குவித்தனர். மூன்று நாட்களில் கோட்டைச் சுவர் எழுப்பப்பட்டது. ஊமைத்துரையின் நம்பிக்கை உறுதியானது.

•

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பித்த ஊமைத்துரை, பாஞ்சாலங்குறிச்சியில் புரட்சியாளர்கள் கூட்டத்தைப் பெருமளவில் சேர்த்துக் கொண்டிருக்கிறான் என்ற தகவல் மேஜர் மெக்காலேவிற்குச் சொல்லப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி நோக்கி திருவிதாங்கூர், புதுக்கோட்டை, எட்டையபுரப் படைகளை வரச் சொல்லி மேஜர் மெக்காலே தகவல் அனுப்பினான். ஊமைத்துரைக்கு ஆதரவாக, மயிலப்பனும் முத்துக்கருப்பத் தேவரும் கமுதி, அபிராமம் பகுதிகளில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கலகம் செய்து உணவுக் கிடங்குகளைக் கொள்ளையடித்தனர்.

முத்துக்கருப்பத் தேவரையும் மயிலப்பனையும் அடக்க யாருடைய உதவியைப் பெறலாம் என மெக்காலே தீவிரமாக யோசித்தான். மயிலப்பன், சேதுபதியின் ஆள் என்று நம்பப்பட்டது. மேஜர் மெக்காலேவுக்கும் அது நன்றாகத் தெரியும். சேதுபதி தற்போது திருச்சிக் கோட்டையில் கைதியாக உள்ளார். ராமநாதபுரத்திற்கும் அவருக்கும் உள்ள தொடர்பு விட்டுப்போய் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. சிறையில் உள்ள சேதுபதியின் உத்தரவின் பேரில் இந்த மயிலப்பன் கலகம் பண்ணுகிறானா அல்லது சிறையில் இருந்து தப்பித்த பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரையின் ஆதரவாளனாக மாறித் தொல்லை தருகிறானா எனத் தெரியாமல் மேஜர் மெக்காலே குழம்பினான். மருது பாண்டியர்களிடம் அவனை அடக்கச் சொல்லி கேட்டுப் பார்க்க முடிவு செய்தான். முத்துக்கருப்பத் தேவரையும் மயிலப்பனையும் மருதுபாண்டியர்கள் அடக்கினால் வேலை குறைச்சல். அடக்க மாட்டேன் என்று மருது பாண்டியர்கள் சொல்லிவிட்டால் சந்தேகம் தீர்ந்துவிடும். மருதுபாண்டியர்கள் கம்பெனியின் நண்பர்களாக இருக்கிறார்களா?

அல்லது எதிரியாக இருக்கிறார்களா என்று இதுவரை அறியமுடியாமல் இருக்கிறது.

ஐந்து வருடத்திற்கு முன்பு பஞ்சம் வந்தபோது உணவுப் பொருட்களைத் தொண்டித் துறைமுகத்தின் வழியாக ஆங்கிலேயர்கள் இறக்குமதி செய்தனர். கிழக்கிந்தியக் கம்பெனி, தான் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரும் பொருட்களுக்கு வரிவிலக்குக் கேட்டபோது சேதுபதி கொடுக்க மறுத்துவிட்டார். ஆனால் மருதுபாண்டியர்கள் உடனே வரிவிலக்குக் கொடுத்து விட்டனர். ஐந்தாண்டுகளுக்கு முன்பு சேதுபதியை ராமநாதபுரம் அரண்மனையில், கைது செய்து திருச்சிக்குக் கொண்டு சென்றபோது மருது எதிர்ப்பைக் காண்பிக்கவில்லை. மயிலப்பன் விசயத்தில் அவர்கள் என்ன நிலை எடுக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த முடிவு செய்தான். அதற்காக அவன் தேர்ந்தெடுத்தது சின்ன மருதுவின் நண்பனும் கம்பெனியின் ராணுவ அதிகாரியுமான மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ். மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் மூலம் மருது பாண்டியர்களைப் பற்றி அறிந்து கொள்ள நினைத்தான்.

மேஜர் ஜேம்ஸ் வெல்ஷும் சின்ன மருதுவும் நண்பர்கள். வெல்ஷ் பல நாட்கள் அரண்மனை சிறுவயலில் சின்ன மருதுவின் மாளிகையில் தங்கியுள்ளான். வெல்ஷுக்கு அரண்மனை சிறுவயல் கிராமம் மிகவும் பிடித்தமான ஊர். தான் பார்த்த ஊர்களிலேயே மிக அழகான ஊர் இதுதான் என்பான். அரண்மனை சிறுவயல் அகலமான தெருக்களுடன் இருந்தது. வரிசையாகப் பெரியபெரிய தோட்ட வீடுகள், கழிவுநீர் தடங்கலின்றி செல்வதற்கேற்றவாறு வசதிகள். அரண்மனை சிறுவயல் கிராமத்தில் இருந்த மருது பாண்டியர்களின் மாளிகைகள் இரவு நேரத்தில்கூட திறந்திருப்பதையும் மாளிகைக்கு முன்போ அருகிலோ காவலாளிகள் யாருமின்றி, கிராமத்தின் நிலச்சுவான்தார்களின் வீடுகள்போல் இருப்பதையும் கண்டு வெல்ஷ் அதிசயப்பட்டிருக்கிறான்.

மேஜர் வெல்ஷ் தனது அதிகாரியான மேஜர் மெக்காலேயிடம் ஒருமுறை சொன்னான்.

“பெரிய மருது ரொம்பத் தன்மையான மனிதர். யாரிடமும் அவர் கோபம் கொள்ளமாட்டார். முடிந்தவரை எல்லோரையும் அன்பாக நடத்துவார். வேட்டையாடுவதில் அவருக்கு விருப்பம். அவருக்கு ஆங்கிலமும் உருதும் நன்றாகப் பேச வரும். ஆங்கிலேய அதிகாரிகளைச் சிவகங்கைக் காட்டுக்கு அழைத்துச் சென்று வேட்டையாட கற்றுக்கொடுப்பார். வேட்டையாடும்போது விருந்தினர்களிடம் மிகவும்

அன்பாக நடந்துகொள்வார். ஐரோப்பிய விருந்தாளிகள் யார் வந்து அரண்மனை சிறுவயலில் தங்கினாலும் அவரைக் கட்டாயம் காளையார்கோயில் காட்டிற்கு அழைத்துச் செல்வார். வேடடையாடும்போது ஐரோப்பியர்கள் மிருகங்களிடம் மாட்டி காயம் அடைந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். நல்ல வலுவான திடமான ஆள். விரல்களுக்கிடையே வைத்தே ஆற்காடு நவாப்பின் செப்புக் காசை வளைத்துவிடுவார்."

"ஜேம்ஸ், நீ சொல்லுற இந்தப் பெரிய மருது, செப்புக்காசையே கையால் நெளிக்கிறான் என்றால் அவனுக்குத் தொல்லை தரும் ஆற்காடு நவாப் கையில கிடைச்சான்னா?"

"நீங்கள் சொன்னமாதிரி நவாப் இவர் கைல கிடைச்சா அவ்வளவுதான். நான்கூடப் பலமுறை அவரிடம் நவாப் பத்திப் பேசியிருக்கேன். நவாப்பை அவர் 'விதவை'ன்னு சொல்லுவார்."

"விதவையா"

"ஆம், விதவைன்னுதான் சொல்லுவாரு."

"ஏன் விதவைன்னு சொல்றாருன்னு எனக்குத் தெரியாது. நான் சின்ன மருதுவுக்குத்தான் முதலில் பழக்கமானேன். என்னை அவர் அண்ணனிடம் கூட்டிக்கிட்டுப் போயி அறிமுகப்படுத்தினப்ப இந்தப் பெரிய மருது கொஞ்சம் பழைய காலத்து ஆளாயிருப்பாருன்னு நினைச்சேன். அப்புறம்தான் தெரிஞ்சது, அவரு ஒரு நிம்ராட்டுன்னு."

"நிம்ராட்டா?"

"மேஜர், நிம்ராட்னா, கிரேக்க நாட்டின் புகழ் பெற்ற வேட்டை அரசனோட பெயர். இந்தப் பெயர் பெரிய மருதுவுக்கு ரொம்பப் பொருந்தும். உங்களுக்குத்தான் தெரியுமே? எனக்குக் காட்டுக்குள்ள வேட்டையாடிப் பழக்கமில்ல. பெரிய மருதுதான் என்னைக் கூட்டிக்கிட்டுப் போனாரு. சிப்பிப்பாறை நாய்க பத்துப் பதினைந்து எப்பவும் அவரு கூடவே வருங்க. வெள்ளை உடம்புல கருப்புப் புள்ளிகளோடு நம்ம இடுப்பு உயரத்திற்கு அந்த நாய்க இருக்குங்க. மருதுவோட ஆளுக புதர்க்குள்ள குச்சிய வச்சுத் தட்டுவாங்க. புதருக்குள்ள பதுங்கியிருக்கிற மிருகங்க புதரவிட்டு வெளியே தாவுங்க. அதுகள இந்த நாய்க விரட்டிக்கிட்டு ஓடயில பெரிய மருது அந்த நாய்களுக்கு இணையா ஓடுவாரு. அப்பப்ப ஏதாவது அந்த நாய்களுக்கு உத்தரவு போடுவாரு.

அதுக்கு ஏத்த மாதிரி அதுக நடந்துக்குங்க. வரையாடு, மான், மயில்ன்னு சின்ன மிருகங்களா இருந்தா என்னைய வேட்டையாட விடுவாரு. கொஞ்சம் முரட்டு மிருகமோ, சிறு புலியோ மாட்டுச்சுன்னா முதல் அடிய அவர் அடிச்சிட்டு, அடுத்த அடிகள நம்மளவிட்டு அடிக்க விடுவாரு."

" எதுக்கு?"

"நாமதான் அந்தப் பெரிய மிருகத்தை வேட்டையாடினோம்ங்கிற பெருமையை நமக்குக் கொடுக்கிறதுக்காகத்தான் அப்படிச் செய்வாரு. வேட்டையாடிய மிருகங்கள வீட்டுக்குக் கொண்டு வந்து சமைச்சுச் சாப்பிடும்போதும் நாமதான் இந்த வேட்டைய நடத்தினோம்னு பெருமையா சொல்லுவாரு. அவரு பேசுறது உண்மையிலைன்னு நமக்குத் தெரிந்தாலும் நாம அவர் சொல்லுறத நம்புற மாதிரி பெருமையாயிருக்கும். அவரிடம் வளரின்னு ஒரு ஆயுதம் இருக்கு. அத எப்படி எறியுறதுன்னு எனக்கு ஒரு நாள் முழுசும் வகுப்பு எடுத்தாரு. தனக்குத் தெரிஞ்சத அடுத்தவங்களுக்கு சொல்லித் தர்றதுல்ல பெரிய மருதுவுக்கு ஆர்வம் அதிகம்."

மேஜர் வெல்ஷ் பற்றிய நினைவு வந்தவுடன், மேஜர் மெக்காலேவின் ராணுவ மூளை வேலை செய்தது. இந்த வெல்ஷ் ஒரு ராணுவ அதிகாரி என்றாலும் இவனுக்கு ராணுவத்தைவிட ஊர் சுற்றுவதிலும், புது ஆட்களிடம் பழகுவதிலும், எழுதுவதிலும்தான் ஆர்வம் அதிகம். இவனைப் பயன்படுத்தி மருது பாண்டியர்களை வேவு பார்க்க முடிவுசெய்து வெல்ஷை வரவழைத்தான்.

"ஜேம்ஸ்,உனக்கு அவர் ரொம்ப வேண்டியவர். நீ போய் அவரைச் சந்தித்துப் பேசு. முத்து கருப்பத் தேவரையும் மயிலப்பனையும் உயிரோடவோ பிணமாகவோ பிடித்து நம்மிடம் ஒப்படைக்க வேண்டும் எனச் சொல்லு."

"மேஜர், சின்ன மருது எனது அன்புக்குரியவர். ஆனால் அவர்களுடைய அரசாங்க விஷயத்தில் எந்த அளவிற்கு எனக்குக் கட்டுப்படுவார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனியின் மேஜரான உங்களுக்கு நான் கட்டுப்பட்டவன். நான் முயற்சிக்கிறேன்."

•

28

வெல்ஷ் சிறுவயல் கிராமத்திற்கு வந்தபோது சூழல் மிகவும் இறுக்கமாக இருந்தது. வெங்கம் பெரிய உடையணத் தேவர் மாமனார் பெரிய மருது வீட்டிற்கு வந்திருந்தார். மருமகனுக்கு பெரிய மருதுவும் சின்ன மருதுவும் அதிகபட்ச மரியாதை தருவார்கள். அந்த வகையில் அவரை எப்போதும் மாப்பிள்ளை என்று கூப்பிட மாட்டார்கள். "அரசர்" என்றுதான் சொல்லுவார்கள். மேஜர் வெல்ஷ் எப்போதும் அரசரை "வெங்கம்" என்று கூப்பிடுவான் . அன்றும் அதே மாதிரிதான் கூப்பிட்டான். "வெங்கம், ஒரு முக்கியமான விசயமாகப் பேச வந்திருக்கிறேன். கலெக்டர் லூஷிங்டன்னும் மேஜர் மெக்காலேயும் என்னை அனுப்பினர்" என்றான்.

"மேஜர் வெல்ஷ், அரசரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்" என்றார் சின்ன மருது. பெரிய மருது அமைதியாக இருந்தார். அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் எப்போதும்போல புன்சிரிப்பை உதிர்த்தார். "மேஜர் வெல்ஷ், நீங்கள் சின்ன அம்மானின் நண்பர். நீங்கள் அம்மானிடம் விவாதித்தப் பிறகு நாம் வசதிப்படி சந்தித்துப் பேசுவோம்" என்று சொல்லி எழுந்தார். அரசரை வாசல்

வரை சென்று வழியனுப்பி வைத்த சின்ன மருது திரும்பி வந்தார்.

"மேஜர் வெல்ஷ், நம் நட்பை மேஜர் மெக்காலே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைக்கிறார். பாஞ்சாலங்குறிச்சிப் போர் நடக்கையில் எங்களது நிலை என்ன? என்று வேவு பார்க்க உங்களை அனுப்பியிருக்கிறார். நாங்கள் பலமுறை எங்கள் நட்பைப் பறைசாற்றி விட்டோம். இருந்தாலும் உங்கள் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எங்கள்மீது நம்பிக்கையில்லை" என்றார் சின்ன மருது.

அண்ணன் வரும்வரை மேஜர் வெல்ஷோடு சின்ன மருது பேசிக்கொண்டிருந்தார். அண்ணன் வந்தவுடன், "மேஜர் வெல்ஷ் நீங்கள் தம்பியிடம் பேசிவிட்டு வாருங்கள். நான் குன்றக்குடி கோயில்வரை போய்விட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு பெரிய மருது கிளம்பினார். சின்ன மருதுவிடம்தான் தன்னால் பேச இயலும் என்பதால், வெல்ஷ் பெரிய மருதுவிடம் வேறொன்றையும் சொல்லவில்லை. மேஜர்

வெல்ஷும் சின்ன மருதுவும் தனித்து விடப்பட்டனர். வெல்ஷ்தான் முதலில் பேசினான்.

"சின்ன மருது, பாஞ்சாலங்குறிச்சியின் ஊமைத்துரையையும் சிவத்தையாவையும் பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பிக்க வைக்க இரண்டு முயற்சிகள் நடந்துள்ளன. முதல் முயற்சி அவர்கள் சிறைக்கு வந்த இரண்டாவது மாதத்தில் நடந்தது. அந்த முயற்சி தோற்றுப்போனது. இரண்டாவது முயற்சி அவர்கள் சிறைக்கு வந்த பதினான்காவது மாதத்தில் நடந்தது. அது நடந்து இப்போது ஒரு மாதம் ஆகிறது. உங்களிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. இந்த இரண்டு நடவடிக்கைகளையும் நீங்கள்தான் செய்தீர்கள் என்று கலெக்டர் லூஷிங்டன்னும் மேஜர் மெக்காலேயும் சந்தேகப்படுகிறார்கள். இப்போது சிறையிலிருந்து தப்பித்த ஊமைத்துரைக்கு ஆதரவாக, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் சிவகங்கை வீரர்கள் இருபதாயிரத்திற்குமேல் இருக்கிறார்கள் என்று கவர்னர் எட்வர்ட் கிளைவிற்குச் சொல்லப்பட்டிருக்கிறது."

"மேஜர், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முவின் சகோதரர்கள், எங்களுக்கு வேண்டியவர்கள்தான். கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிப் போரிலிருந்து தப்பித்து வந்தபோது கமுதி பசுமாத்தூரில் வைத்து, எங்கள் ஊர்ப் பெண்கள் அவருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். எங்கள் பெண்கள் எப்போதும் போராடும் வீரனுக்கு வரவேற்பு கொடுப்பார்கள். அந்த வகையில் கொடுத்த வரவேற்புதான் அது. எங்கள் சீமை வழியாகத்தான் புதுக்கோட்டைக் காளாப்பூர்க் காடுகளுக்குக் கட்டபொம்மன் சென்றார். காளாப்பூர்க் காட்டில் கட்டபொம்மன், ஊமைத்துரை, சிவத்தையா, இரண்டு போராளிகள் கைது செய்யப்பட்டார்களே? அந்தக் காளாப்பூர் எங்கள் பகுதியா? நீங்கள் தொண்டைமானை நம்புகிறீர்கள். ஆனால் கட்டபொம்மன் ஒளிந்திருந்தது தொண்டைமானின் கட்டுப்பாட்டிலுள்ள காளாப்பூர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதுவும் அவராகவா பிடித்து உங்களிடம் கொடுத்தார்? கலெக்டர் லூஷிங்டன் கட்டபொம்மன் இந்த இடத்தில் இருக்கிறார் என்று சொன்னவுடன்தானே வேறு வழியின்றி கைது செய்தார்? நீங்கள் தயவுசெய்து உங்கள் மேலதிகாரிகளிடம் சொல்லுங்கள். எங்கள் ஊர்க்காரர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கட்டாயம் போய் இருப்பார்கள். பாஞ்சாலங்குறிச்சி ஆட்களின் உறவினர்கள் எங்கள் சீமையில் குடியிருக்கிறார்கள். எங்களது ஊர்க்காரர்களின் உறவினர்கள் பாஞ்சாலங்குறிச்சிப் பகுதியில் குடியிருக்கிறார்கள். உறவினர்கள்

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதை எங்கள் சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரால் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?" என்றார் சின்ன மருது.

"சின்ன மருது, வெளிப்படையான நட்புடன் நம் இரு தரப்பும் இல்லை என்று தெரிந்துவிட்டது. உன் நிலையை நீ மாற்றிக் கொள்ளாவிட்டால் நாம் அன்புடன் சந்திக்கும் கடைசி நிகழ்வாகக் கூட இந்தச் சந்திப்பு மாறிவிட வாய்ப்பிருக்கிறது. அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரும், நீங்களும் பெரும் பிரச்சனையில் மாட்டிவிடக்கூடாது என்பதற்காக நான் விரும்பியும் விரும்பாமலும் இந்த வேலையை ஏற்றுக்கொண்டு வந்தேன். நான் வேவு பார்க்க வரவில்லை" என்றான், வெல்ஷ்.

"எங்கள் விதிப்படி நடக்கட்டும் மேஜர்" என்றார் சின்ன மருது.

"சரி, நான் அரசனைப் பார்க்க அனுமதியுண்டா சின்ன மருது?" மேஜர் வெல்ஷ்.

"நான் சொன்தைத்தான் அரசரும் சொல்லுவார். ஒன்று மட்டும் கலெக்டரிடம் சொல்லிவிடுங்கள். கலெக்டர் கேட்டுக்கொண்டபடி மயிலப்பனை அடக்க நாங்கள் படை அனுப்புகிறோம், அவனைக் கைது செய்கிறோம்" என்றார் சின்ன மருது.

வெல்ஷுக்குச் சின்ன மருதுவின் திட்டம் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. இனி இவனிடம் பேசி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது என்பதால், வெல்ஷ் உடனே திருநெல்வேலி கிளம்பி விட்டான்.

சின்ன மருதுவும் அண்ணனைப் பார்க்கக் குன்றக்குடி விரைந்தார். கோயில் மண்டபத்தில் சகோதரர்கள் இருவரும் சந்தித்தனர். உடன் வந்தவர்கள் தள்ளி நின்று கொண்டனர். சின்ன மருது, வெல்ஷிடம் பேசியவற்றை அண்ணனிடம் விளக்கினார்.

"முத்துக்கருப்பத் தேவரை ராமநாதபுரத்தின் அடுத்த சேதுபதியாக மயிலப்பன், அறிவித்துவிட்டான். மறவர் சீமையில இன்னும் ஓர் அகம்படியாரான்னு மங்களேஸ்வரி நாச்சியார் கொதிச்சுப் போயி கவர்னருக்கு மனு கொடுத்திருக்கு. இந்தச் சமயத்தில நாம் மயிலப்பனைக் கைது செய்யலாமா?" என்றார் பெரிய மருது

“கைது செய்வதாகச் சொல்லுவோம். காலம் கடத்துவோம். இனிமேல் வெள்ளையர்கள் வழிதான் நம் வழி. பேசுவது ஒன்று, செய்வது ஒன்று” என்றார் சின்ன மருது.

“சரி மருது, நீ எதையும் கொஞ்சம் யோசித்து செய். அரசரிடம் இது குறித்து நாம் விவாதிக்க வேண்டும்” என்றார் பெரிய மருது.

“உங்களுக்கும் அரசருக்கும் தெரியாமல் நான் எதையும் செய்ய மாட்டேன்” என்று சொன்ன சின்ன மருது, “அண்ணா, பாஞ்சாலங்குறிச்சிப் போர் எப்படிப் போகிறது என்று பார்ப்போம். அதுவரை மயிலப்பனின் கொட்டத்தை அடக்குவதாக நடிப்போம். ஊமைத்துரை வென்றால் மயிலப்பன் வேட்டையை நிறுத்திக் கொள்வோம்.”

“வெள்ளையர்கள் வென்றால்?” பெரிய மருதுவின் கேள்விக்குச் சின்ன மருது தடுமாறினார்.

“மயிலப்பனையும், ஊமைத்துரையையும் காளையார்கோயில் காடுகளுக்குள் ஒளித்து வைப்போம்.”

“வெள்ளையர்கள் ஊமைத்துரையைத் தேடி நம் பகுதிக்கு வந்தால் நம் நிலை?”

“வெல்வோம் அல்லது பெரும் வீரர்களாக வீழ்வோம்” என்றார் சின்ன மருது.

29

பாஞ்சாலங்குறிச்சி அரண்மனையின் அந்தப்புரம். பெண்கள் வளவில் கேத்தரீன் அமர்ந்திருந்தாள். அவள் அருகில் பாத்திமா நின்றுகொண்டு, அவளது முதுகில் ஆதரவாகக் கையை வைத் திருந்தாள். கேத்தரீன் எதுவும் சாப்பிடவில்லை. குழந்தைகளையும் வாலரையும் நினைத்து அழுதுகொண்டிருந்தாள்.

சிறுவயதிலிருந்தே கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டதால் எது செய்தாலும் அமைதியாகவே செய்து பழக்கப்பட்டு விட்டாள். சிரிப்பதும் ஆர்ப்பாட்டமில்லாமல், அமைதியாகச் சிரிப்பாள். அழுவ தும்கூட. கண்ணீர் மட்டும் வந்து கொண்டிருந்ததே ஒழிய சத்தம் போட்டு அழவில்லை. இந்த வெள்ளைக்காரப் பெண் பற்றிப் பாஞ்சாலங்குறிச்சி அந்தப்புரப் பெண்கள் பாத்திமாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

தங்கள் அரசர்களைக் காப்பாற்றியதற்காகக் கேத்தரீனின் கையைப் பிடித்து அந்தப்புரப் பெண்கள் நன்றி சொன்னார்கள்.

“நான் போக வேண்டும். என் பிள்ளைகள் என்னைத் தேடு வார்கள். வாலருக்கு என்னால் பெரும் பிரச்சனையாகி இருக்கும். அவர் என்னைப் பெரிதும் காதலித்தார். அந்தக் காதலுக்கு நான் தகுதியானவளாக நடந்துகொள்ளவில்லை. ஒரு மனைவியாக நான் தோற்று விட்டேன். நான்கு சிறு குழந்தைகளின் எதிர் காலத்திற்காக வாவது என்னை மீண்டும் பாளையங்கோட்டையில் கொண்டு போய் விட்டுவிடுங்கள்” என்றாள்.

சிவத்தையாவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் வந்து கேத்தரீனைப் பார்த்தார்.

“நீங்கள் எங்களுக்குப் பெரிய உதவி செய்தீர்கள். எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறக்க மாட்டோம். உங்களை மீண்டும் பாளையங்கோட்டைக்குப் பாதுகாப்புடன் அனுப்பி வைக்க நான் தயாராக உள்ளேன். ஆனால் கலெக்டர் லூஷிங்டன் உங்களை நிம்மதியாக இருக்க விடமாட்டார். உங்கள் கணவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். உங்களையும் விசாரணைக் கைதியாக அடைத்து வைப்பார்கள். உங்களால், உங்கள் குழந்தைகளையும் கணவரையும் பார்க்க முடியாது. இப்போது இங்கு உங்களுக்கு எந்தத் தொல்லையும் எங்களால் உண்டாகாது. உங்கள் குழந்தைகள் மேஜர் மெக்காலே வீட்டில், பத்திரமாக இருக்கிறார்கள். வாலர் மீது கலெக்டர் நடவடிக்கை எடுத்துவிடுவார். தன்னை, நிரபராதி என்று நிரூபிக்க வாலரால் முடியும்.

ஆனால் அதற்குச் சிறிது காலம் தேவைப்படும். உங்களையும் நிரபராதி என்று கலெக்டர் அறிந்து கொள்வார். ஆனால் அதற்கு இன்னும் கூடுதல் கால அவகாசம் வேண்டும். எங்கள் விருந்தினராகச் சில காலம் இருங்கள். எல்லாம் சரியாகிவிடும். நாங்கள் வென்றால் உங்களை வெள்ளையர்களிடம் ஒப்படைகிறோம். வெள்ளையர்கள் வென்றால் உங்களைக் காப்பாற்றிக் கூட்டிச் சென்றுவிடுவார்கள். நாங்கள் வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் மதிப்பிற்குரிய பெண்மணியாகவே உலகம் உங்களை ஏற்றுக்கொள்ளும்” என்றார். கேத்தரீனால் ஒன்றும் பேச முடிய வில்லை.

பாத்திமாவும் தன் பங்கிற்கு ஆறுதல் சொன்னாள்.

“மேம் சாகிபா, நாம் இப்படி நடக்கும் என்று நினைக்கவில்லை. ஊமைச்சாமிக்கும், அரண்மனைக்கும் உங்களையும் என்னையும் பாளையங்கோட்டையிலிருந்து இங்கு அழைத்து வந்ததில் முதலில் உடன்பாடு இல்லை. நம்மைக் காப்பாற்றுவதாக நினைத்து, இவர்களது ஆட்கள் நம்மைத் தூக்கி வந்துவிட்டார்கள். உங்களுக் காவது உங்களைப் புரிந்துகொண்ட கணவர். எனக்கு அப்படியில்லை. ஒரே ஒரு நாள் நான் வெளியூர் போனாலே சந்தேகப்பட்டு அந்தக் குதிரைக்கார ஜாபர் சத்தம் போடும். இப்போ ஆறு நாட்கள் ஆகிவிட்டது. நான் யாரையோ நிக்கா பண்ணிவிட்டேன் என்று கத்திக் கொண்டிருக்கும். நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். வருடம் ஒருமுறை கொடைக்கானல் போவீர்களே, அதேபோல நினைத்துக் கொள்ளுங்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும்.”

ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் இருந்தார். அப்போது அவரிடம் தகவல் சொல்ல ஒரு காவலாளி உள்ளே வந்தான்.

“எதுவும் அவசரமா?” என்றார் சிவத்தையா.

“ஆம், அரண்மனை. தூத்துக்குடி கோட்டையிலிருந்து தகவல் வந்திருக்கிறது. நமது படையின் ஒரு பகுதி தூத்துக்குடி கோட்டையைத் தாக்கியிருக்கிறது. கோட்டையிலிருந்த கம்பெனி அதிகாரி எட்வர்டு ஓமஸ்லி நமது ஆட்களைத் திருப்பித் தாக்குவதற்குக் கோட்டைக்குள் இருந்த வீரர்களுக்கு உத்தரவு இட்டுள்ளான். அவனது படையிலிருந்த நம் மக்கள் அவன் ஆணைக்குக் கட்டுப்படவில்லை. எங்கள் ஆட்கள்மீது நாங்கள் ஆயுதங்கள் பிரயோகிக்க முடியாது” என்று சொல்லி ஆயுதங்களை அவனிடம் ஒப்படைத்துவிட்டு நம் படையினரோடு சேர்ந்துவிட்டனர்.

நம் படையினர் கோட்டைக்குள் புகுந்து சரக்குகளை கைப் பற்றியதோடு கோட்டையின் தலைவன் பிக்காட்டையும் சிறை வைத்துள்ளனர். அவன் மனைவிக்குத் தகவல் தெரிந்ததும் அவள் கோட்டைக்குள் வந்து விட்டாள்.

“என் கணவர் போரில் ஈடுபட்டுள்ள ஆங்கிலப் போர் வீரர் அல்ல. இதுவரை அவர் எந்தப் போரிலும் ஆயுதம் தாங்கியதில்லை. வணிகப் பொருட்களைக் கையாளும் ஒரு சாதாரண எழுத்தர் அவர். அவரை எப்படி நீங்கள் சிறைப்படுத்தலாம்? உங்களிடம் நியாயமே

கிடையாதா?" என்று தன்னுடைய அரைகுறைத் தமிழில் நாராசமாகக் கத்தினாள்.

இந்த நேரம் கேத்தரீனும் பாத்திமாவும் அந்த இடத்தைக் கடந்தனர். பிக்காட் என்ற பெயரைக் கேட்டவுடன் ஊமைத்துரையும், சிவத்தையாவும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு கேத்தரீன் வந்தாள். "மேம் சாகிபா, உட்காருங்கள்" என்று சிவத்தையா ஓர் இருக்கையைக் காண்பித்தார். பாளையங்கோட்டைச் சிறையில் இருந்து வந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டதால் சிவத்தையாவும் ஊமைத்துரையும் தோற்றத்தில் சற்றுத் தேறியிருந்தனர். நல்ல உடையும், சில நகைகளும் அணிந்திருந்தனர். அரசருக்கானத் தோரணையும் வந்திருக்கிறது.

"மன்னிக்க வேண்டும், தலையிடுவதற்கு. பிக்காட் எனக்குத் தெரிந்த மனிதர். ரொம்பவும் நல்லவர். பயந்தாங்கொள்ளி. அவரை ராணுவத்தில் சேரவேண்டும் என்று கட்டாய அறிவிப்பு இரண்டு முறை வந்த போதும் மனைவியோடு சென்று, கவர்னரைச் சந்தித்து, அந்த ஆணையை ரத்து செய்துவிட்டு வந்தவர். அவர் மனைவியும் அவ்வளவு விவரமானவர் அல்ல. ஆனால் அந்தப் பெண்ணுக்குப் பிடிவாதம் அதிகம். மிஸ்டர் பிக்காட்டைக் கைது செய்தாலோ, கொன்றாலோ உங்களது எண்ணிக்கையில் வேண்டுமானால் ஒன்று கூடுமே தவிர அதனால் எந்தப் பெருமையும் உங்களுக்கு கிடைக்காது" என்றாள். சிவத்தையா, ஊமைத்துரையைப் பார்த்தார். ஊமைத்துரை தலையசைத்தார்.

"மேம் சாகிபா, நாங்கள் உங்கள் எண்ணத்தை மதிக்கிறோம். நீங்கள் சொன்னதைத்தான் எங்களது உதவியாளரும் நீங்கள் வரும்போது சொல்லிக் கொண்டிருந்தார். பிக்காட் மீது எங்களுக்கு எந்த வெறுப்பும் இல்லை. அவரையும் அவரது மனைவி மற்றும் கோட்டையில் இப்போது காவலில் உள்ள எட்வர்டு ஓம்ஸ்லி ஆகிய மூவரையும் விடுதலை செய்யச் சொல்லுகிறேன். அவர்களது உடமைகளை எடுத்துக்கொண்டு அவர்கள் விரும்பும் இடத்திற்குச் செல்லவும் அனுமதிக்கிறேன்" என்றார்.

"எனது குழந்தைகளையும் வாலரையும் நான் சந்திக்க வேண்டும். என்னால் இங்கு இருக்க முடியவில்லை. நடந்துகொண்டிருக்கிற நிகழ்வுகளைப் பார்க்கும்போது, சூழ்நிலை இன்னும் மோசமாகும் என்றே எனக்குத் தோன்றுகிறது. என் வாழ்க்கையுடன், இந்தப் பாத்திமாவின் வாழ்க்கையும் சிக்கலுக்குள் இருக்கிறது. பாத்திமா மிகவும் அன்பான பெண். எனக்காகப் பல துன்பங்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறாள்.

அவள்மீது எந்தக் குற்றமும் இல்லை. அவளை வெளியில் விட்டால் எங்கள் அதிகாரிகள் அவளை ஒன்றும் தொந்தரவு செய்யமாட்டார்கள். அவளையாவது அவளுடைய கணவனிடம் அனுப்பிவிடுங்கள். அவள் தினம் தினம் தன்னுடைய கணவனை நினைத்து, பயந்துகொண்டு மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறாள். பாவம் அவள்" என்றாள் கேத்தரீன்.

"மேம் சாகிபா, உங்களது பாதுகாப்பிற்கும், எதிர்காலத்திற்கும் நானும் ஊமைத்துரையும் உத்திரவாதம் தருகிறோம். உங்களுக்கு எந்தத் துன்பமும் வரவிடமாட்டோம். நீங்கள் செய்த உதவிகளை வார்த்தைகளாகச் சொல்லி, உங்களைப் பெருமைப்படுத்த முடியாது. உங்களையும், உங்கள் கணவர், குழந்தைகளையும் விரைவில் ஒன்றாகச் சேர்த்து வைப்போம். சின்ன மருது சேர்வைக்காரர் மூலம் பழக்கமான ஓர் ஆங்கிலேய இந்திய மேஜர் இருக்கிறார். அவர் தனியாக சிறு படை ஒன்றை நடத்தி வருகிறார். அவரோடு நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். மிக விரைவில் உங்கள் குடும்பத்தோடு சேர்ந்து நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதுவரை எங்களது விருந்தினராக, மன வருத்தம் இன்றி இங்கு இருங்கள். பாத்திமா அருமையான பெண்தான். உங்களோடு சேர்த்து அவளுக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தருகிறோம்" என்றார் சிவத்தையா.

"உங்கள்மேல் நான் கொண்ட இரக்கத்தினால்தான், எனக்கு இந்த நிலை. என் இரக்கம் எனக்கு நன்மையைச் செய்ததா, இந்தப் பாஞ்சாலங்குறிச்சிக்காரர்களுக்கு நன்மை செய்ததா என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும். ஆனால், என் நான்குக் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்து இன்று தனியாக நிற்கிறேன். உங்களை நான் நம்புகிறேன். எதைச் செய்தாலும் விரைந்து செய்யுங்கள்" என்றாள் கேத்தரீன்.

•

மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வடக்குப் பகுதியிலிருக்கும் சிறைச்சாலை. திருச்சிக் கோட்டையில் இருந்து கொண்டுவரப்பட்ட சேதுபதி சிறை வைக்கப்பட்டிருந்தார். பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத்துரை, சிவத்தையா மற்றும் போராளிகள் தப்பித்தவுடன் திருச்சிச் சிறையிலிருந்து, மெட்ராஸ் கோட்டைக்கு மாற்றப்பட்டார். சேதுபதி சிறை வைக்கப்பட்டிருக்கும் ஊரில்தான் நாங்களும் இருப்போம் என்று தொண்ணூற்று ஐந்து குடும்பங்கள் ராமநாதபுரத்திலிருந்து மெட்ராஸிற்கு வந்துவிட்டன. வாரத்திற்கு சில உறவினரைச் சேதுபதி சந்திக்கலாம் என்று கம்பெனி அனுமதித்திருந்தது. ஒவ்வொரு வாரமும், முறை வைத்துக்கொண்டு உறவினர்கள் சேதுபதியை சந்தித்து வந்தனர்.

மெட்ராஸ் கோட்டையிலும் கெடுபிடிகள் அதிகமாயின. சேதுபதியை உறவினர் சந்திக்கும்போது மூன்று சிப்பாய்கள் சுற்றி நிற்பார்கள். திருச்சியில் இவ்வளவு கெடுபிடிகள் இல்லை. சிப்பாய்கள் மூவரில் தமிழ் தெரிந்த சிப்பாய்கள் இருவர் இருப்பார்கள். ஒரு ஆங்கிலேயச் சிப்பாய் இருப்பான். இப்போது அனைவருமே ஆங்கிலேயச் சிப்பாய்கள். இன்றும் மூன்று ஆங்கிலேயச் சிப்பாய்கள் சுற்றி நின்றனர்.

சேதுபதியுடன் ஒரு சாது அமர்ந்திருந்தார். சேதுபதியைச் சந்திக்க வேண்டிய நபரின் குருவாம் இந்த சாது. கங்கை, காசி என்று சுற்றிவிட்டு, சாது ராமேஸ்வரம் வந்தாராம். ராமேஸ்வரப் பயணம் சேதுபதியின் தரிசனத்தோடு நிறைவு பெற வேண்டும் என்று திருச்சிக் கோட்டைக்கு வந்திருக்கிறார். சேதுபதி திருச்சிக் கோட்டையில் இல்லை என்று தெரிந்து கொண்டிருக்கிறார். பின்பு விசாரித்து மெட்ராஸ் வந்தாராம். சேதுபதியை இன்று சந்திக்க வேண்டிய குடும்பம் சாதுவுக்குத் தெரிந்த குடும்பமாம். சேதுபதியைச் சந்திக்கும் வாய்ப்பை அவர்கள் சாதுவுக்குக் கொடுத்துவிட்டு தாங்கள் அடுத்தமுறை பார்த்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டார்களாம். சாதுவைப் பார்த்ததுமே அவர் யார் என சேதுபதிக்குத் தெரிந்துவிட்டது. சேதுபதிக்கு சாது திருநீறு கொடுத்தார். திருநீறை மூன்று ஆங்கிலேயச் சிப்பாய்களுக்கும் கொடுக்க முயன்றார். அவர்கள் “வேண்டாம்” என்று சைகைக் காட்டிவிட்டனர். சாது தனது திருநீற்றுப் பையை வேண்டுமென்றே தவறவிட்டார். சேதுபதியின் காலுக்கருகில் திருநீற்றுப்பை விழுந்தது. சாது அதைத் திரும்ப எடுப்பதுபோல் தரையில் குனிந்து சேதுபதியை வணங்கினார். மார்ச் மாத வெயில், ராமேஸ்வரம் கோயில் பற்றிப் பொதுவாகச் சாது பேசினார்.

பக்கத்து அறையிலிருந்த கேப்டன் கம்மிங்கஸ் சாப்பாட்டுத் தட்டை இரும்புக் கம்பியின் மீது அடித்துச் சத்தம் எழுப்பினான். “சேதுபதி, நாம திருச்சியில இருக்கிறப்ப எப்பவும் உங்களப் பார்க்க வர்றவங்க ஒங்க குடும்ப விசயத்தப் பேசுவாங்க. இது யாரு நாட்டு விசயத்தப் பத்திப் பேசுறாரு” என்று கத்தினான்.

“யார் இப்படி சத்தம் போடுவது சேதுபதி?”

“அவரும் இங்குள்ள கைதிதான். என்னுடைய நண்பர். இவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் முன்னாள் ராணுவ அதிகாரி. அவரால் இந்த இடத்தைப் பார்க்க முடியாது. ஆனால் இங்குப் பேசுவது அவருக்குக் கேட்கும். வயது எண்பது. ஆனாலும் காது நன்றாகக் கேட்கிறது.”

“சேதுபதி, இவர் தமிழ் நல்லாப் பேசுறாரே. உச்சரிப்புதான் வித்தியாசமாக உள்ளது” என்றார் சாது.

சேதுபதி சிரித்துக்கொண்டே குரலைத் தாழ்த்திக்கொண்டார், “இவர் பெயர் கேப்டன் கம்மிங்கஸ். முன்னாள் ராணுவ கேப்டன். இளம் வயதில் கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலையில் சேர்ந்து கேப்டனாக இருந்துள்ளார். அப்போது கற்பழிப்பு வழக்கு ஒன்றில் சிக்கிவிட்டார். ஏதோ தண்டனை கிடைத்திருக்கிறது. பின்பு விடுதலையும் அடைந்துவிட்டார். ஆனால் வழக்கின் மனரீதியான பாதிப்பு இவரிடம் தொடர்கிறது. அதனால் மிலிட்டரியிலிருந்து இவரை அனுப்பிவிட்டார்கள். பின்பு ஏதேதோ வேலைகள் பார்த்திருக்கிறார். வெயில் காலங்களில் நோய் முற்றிவிடும் போலத் தெரிகிறது. அதனால் அந்தச் சமயங்களில் மாற்றிமாற்றி பேசுவார். பக்கத்து அறையில் ஒரு முஸ்லீம் இருக்கிறார். அவர் ஆற்காடு நவாப்பிற்குக் கடன் கொடுத்திருக்கிறார். நவாப், கடன் வாங்கி விட்டு அதைச் சுத்தமாக மறந்துவிட்டாராம். நவாப்பிடம் இவர் பணத்தைத் திருப்பிக் கேட்டபோது, பிரச்சனையாகி விட்டதாம். நவாப்பின் காவலர்களைக் கொலை செய்ய முயன்றதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணையும் நடந்திருக்கிறது. வழக்கு விசாரணையின் முடிவில் இவரைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்து விட்டார்கள். இப்போது ஆயுள் கைதியாக இருக்கிறார். இருவரும் என்னோடு திருச்சிச் சிறையில் இருந்தார்கள். அங்கிருந்து நான் மாற்றப்பட்ட போது என்னோடு இவர்களையும் மாற்றிவிட்டார்கள். கம்மிங்ஸ் ஒரு பாவப்பட்ட மனிதர். ஒரு பெண்ணால் மனநிலை பாதிக்கப்பட்டவர்.”

“நாமும்தான் ஒரு பெண்ணால் பாதிக்கப்பட்டோம் சேதுபதி. உங்களைப் பற்றிப் புகார் கூறிய உங்கள் அக்காவிற்காவது, ஏதாவது நன்மை ஏற்பட்டதா என்றால் அதுவும் இல்லை.”

“கேள்விப்பட்டேன். எனது அக்கா ஆற்காட்டு நவாப்பைச் சந்தித்துத் தனக்குச் சேதுபதி பதவி வேண்டும் என்று கேட்டாராம். நவாப் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். “ராமநாதபுரம் ஆட்சியை நானே நேரடியாக நடத்தப் போகிறேன். ஆங்கிலேயர்களிடம் இது குறித்து கடிதத் தொடர்பு கொண்டுள்ளேன்” என்று சொல்லிவிட்டார். என் அக்கா மங்களேஸ்வரி நாச்சியாருக்கு இப்போதுதான் நவாப்பினுடைய உண்மை ரூபம் தெரிகிறது.”

“உங்களோடு நாச்சியார் மோதும்போது, ஆற்காட்டு நவாப் தனது முழு ஆதரவை நாச்சியாருக்குக் கொடுத்தார். உங்களை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் மங்களேஸ்வரி நாச்சியாரை உட்காரவிட நவாப் என்ன விவரமில்லாதவரா?”

“என்னை ராமநாதபுரத்திலிருந்து அப்புறப்படுத்தி இன்றோடு ஆறு வருடங்கள் முடிந்துவிட்டன. கலெக்டர் பவுனியின் ஆட்சி தானே அங்கு நடக்கிறது?”

“பெயருக்குத்தான் பேஷ்குஷ் கலெக்டர் பவுனி. கர்னல் மார்ட்டின்ஸும் மந்திரி முத்திருளப்பப் பிள்ளையும்தான் சூத்திரதாரிகள்.”

“இப்போது நாட்டு நடப்பு எப்படியிருக்கிறது?”

“சேதுபதி, நவாப் மன்றாடிக் கேட்டும் ராமநாதபுரத்தை அவருக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி கொடுக்கவில்லை. அவரும் ஆங்கிலேயர்களை நம்பி ஏமாந்துவிட்டார். அவரை ஆங்கிலேயர்கள் இப்பொழுது மதிப்பதேயில்லை.”

சாது, சுற்றி நிற்கும் மூன்று சிப்பாய்களைப் பார்த்தார். சிப்பாய்களை தனக்கு அருகில் வருமாறு சேதுபதி அழைத்தார். “என் உயிரைவிடப் பெரிதாக மதிக்கத்தக்க ராமேஸ்வரம் ராமநாதசாமிமீது ஆணையாகச் சொல்லுகிறேன். நான் சிறையிலிருந்து தப்பிக்க மாட்டேன். என் உயிர் போனாலும் இந்தச் சிறைச்சாலைக்குள்தான் போகும். நான் உயிரோடு இருக்கப் போகும் சிலகாலம் ஊர் நடப்புகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தச் சாது உலகம் முழுக்கச்

சுற்றுபவர். ஆகவே இவரிடம் மனம் விட்டுப்பேச விரும்புகிறேன். நீங்கள் எங்கள் பேச்சை இடையூறு செய்ய வேண்டாம்" என்றார்.

சிப்பாய்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். வயதான ஆங்கிலேயச் சிப்பாய் மற்ற இருவரிடமும் ஆலோசித்துவிட்டு, "சரி" என்றான். சேதுபதி அவர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தார்.

"சொல்லுங்கள் எப்படியிருக்கிறது நாட்டு நடப்பு?"

"ஒன்றும் சொல்வதற்கில்லை சேதுபதி. கம்பளத்து நாயக்கர்கள் பாளையங் கோட்டைச் சிறையிலிருந்து தப்பி வந்து, ஒரு மாதம் ஆகிறது. அவர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்துவிட்டார்கள். கோட்டையைப் பலப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். விரைவில் யுத்தம் நடக்கப் போகுதாம், ஆங்கிலேயர்கள் இன்னும் ஏனோ தாக்குதலை ஆரம்பிக்கவில்லை. ஆங்கிலேயர்கள் தங்களது நிலையைப் பலப்படுத்திவிட்டார்கள். அவர்களது நண்பர்களை அடையாளம் கண்டுகொண்டார்கள்.

தொண்டைமானையும், திருவிதாங்கூர் அரசரையும், எட்டப்ப நாயக்கரையும் இனி என்றென்றும் தங்கள் நண்பர்கள் என்று முடிவு செய்துவிட்டனர். திப்புவின் மரணத்திற்குப் பின்பு மைசூர் அரசு இப்போது ஆங்கிலேயர்கள் கைக்கு முழுமையாக வந்துவிட்டது. பெயருக்கு அரசராக இருக்கும் மைசூர் உடையார் இனி அடுத்த திருவிதாங்கூர் அரசர்கள் போலத்தான். எதிரிகளை ஒழித்துக் கொண்டுவரும் ஆங்கிலேயர்களுக்கு, பாஞ்சாலங்குறிச்சி தான் அடுத்த குறி. எதிரிகள் எல்லோரையும் ஆங்கிலேயர்கள் முடித்துவிட்டார்கள்.

வேலியில் போகிற ஓணானை காதில் விட்டுக்கொண்டது போல இப்போது நவாப் வருந்துகிறார். கவர்னர் எட்வர்ட் கிளைவ், நவாப்பிற்கு எந்த முக்கியத்துவமும் தருவதில்லை. நவாப் கேட்பது ஆங்கிலேயர்களுக்குப் பிடித்திருந்தால் செய்வார்கள். பிடிக்கவில்லை என்றால் பதில்கூடச் சொல்ல மாட்டார்கள். இந்த அவலநிலையில் அவர் இருப்பதைத்தான் சின்ன மருதுவும் பெரிய மருதுவும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஆற்காடு நவாப்பை 'விதவை' என்கிறார்கள்.

"நாச்சியாரையும் முத்துக்கருப்பத் தேவரையும் அழைக்கலாமா சேதுபதி? நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்பதால் முதலில் வந்தேன். தேவரும் நாச்சியாரும் சிறைக்கு வெளியே மரத்தடியில் காத்திருக்கிறார்கள்."

“பொறு மயிலப்பா, நமக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் இன்னும் மூன்று மணிநேரம் இருக்கிறதே? அதற்குள் நான் உன்னிடம் சில விஷயங்கள் பேசிவிடுகிறேன். நம் இருவரது கருத்தும் ஒன்றாக யிருந்தால் நாம் இருவரும் சேர்ந்து முத்துக்கருப்பத் தேவரை ஒப்புக் கொள்ள வைக்கலாம். நாம் தேவரிடம் பேசும் நேரத்தில் ஐசுவரியமும் நம் கூட இருக்கட்டும். அவள் தேவரை தனது சொந்த தந்தைபோல நினைக்கிறாள்.”

“சேதுபதி, நீங்கள் முத்துக்கருப்பத் தேவரை சமாதானப் படுத்தவோ ஒத்துக்கொள்ள வைக்கவோ தேவையில்லை. உங்கள் எண்ணத்தைச் சொன்னால் போதும். நீங்கள் விரும்புவதைச் செய்துமுடிப்பவர்கள் நாங்கள் இருவரும். சேதுபதியை அடிக்கடி சந்திக்க வாய்ப்பில்லாததால் நாங்கள் செய்வதை நாச்சியாரிடம் சொல்லி விடுகிறோம். உங்களுக்காக ராமநாதபுரத்திலிருந்து இங்கு வந்து குடும்பத்தோடு தங்கியுள்ள தொண்ணூற்றி ஐந்து குடும்பங்களிடமும் நாச்சியாருக்கு நல்ல பழக்கம் இருக்கிறது. சேதுபதியின் மனம் கவர்ந்த பெண் என்ற கர்வம் துளியும் நாச்சியாரிடம் கிடையாது. அதேசமயம் தனது பிறப்பு, வளர்ப்பு குறித்த கசப்பான நினைவுகளையும் நாச்சியார் மனத்தில் வைத்துக் கொள்வதில்லை.”

மயிலப்பன் ஐசுவரியத்தைப் பற்றி விவரிக்க விவரிக்க சேதுபதிக்கு வருத்தமாக இருந்தது. “என்ன பெண் இவள்? இவளுக் கென்று எந்த தனித்த அடையாளமும் இல்லை. ஐசுவரியத்தின் காது படவே சிலர் “சேதுபதியை முந்தானையில் முடிந்து வைத் திருக்கிறாள். இவள் மீது கிறுக்குப் பிடித்துத்தான் சேதுபதி இந்தக் கதி ஆனார்” என்று கூட பேசுகிறார்கள் என்பது அவளுக்கும் தெரியும். ஆனால் தன்னுடைய அவலநிலைக்கு எந்தவிதத்திலும் அவள் காரணமல்ல என்று சேதுபதி அறிவார். சில நேரங்களில் “சேதுபதி, நீங்கள் செய்வது சரியாக இருக்குமா? என்று ஐசுவரியம் லேசாக ஆரம்பிப்பாள். எப்படி ஏற்றுக்கொள்கிறேன் என்று நோட்டம் பார்ப்பாள். அவள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் இருக்கிறேன் என்றால் சொல்லுவாள். என் முகம் சரியில்லையென்றால் பேச்சை மாற்றிவிடுவாள்.

சிறைக்கு வந்த ஐந்து ஆண்டுகளில் அவளுக்கு என்ன வருமானம்? எப்படி வாழ்கிறாள்? என்றெல்லாம் நான் கேட்டது கூடக் கிடையாது. கேட்டால் அவள் சொல்லப் போகும் பதில் மிகுந்த மனவருத்தத்தைத் தரும் என்பதால் சேதுபதி அவளுடைய திருச்சி,

மெட்ராஸ் வாழ்க்கையைப் பற்றிக் கேட்பதேயில்லை. மாதத்திற்கு எப்படியாவது ஒருமுறை சேதுபதியைப் பார்க்க வரக்கூடிய ஆட்களோடு சேர்ந்து வந்து விடுவாள். அவர்களும் சேதுபதியையும் ஐசுவரியத்தையும் தனியாக விட்டுவிடுவார்கள். மூன்று நான்கு சிப்பாய்கள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது இருவரும் என்ன செய்ய முடியும்? இப்படித்தான் ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. சென்ற முறை சேதுபதியைப் பார்க்கத் திருச்சிக்கு வந்தபோது இருவருக்கும் கொஞ்சம் மனவருத்தம் ஆகிவிட்டது. அந்த நிகழ்ச்சிக்குப் பின் இப்போதுதான் வருகிறாள். தவறு தன்மீது இருந்தும், அன்று சேதுபதி மன்னிப்பு கேட்கவில்லை. இன்று மன்னிப்பு கேட்டுவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

“சொல்லுங்க சேதுபதி, ஏதோ எங்கிட்ட தனியாப் பேசணும்னு சொன்னீங்களே” மயிலப்பன் அழைத்ததும் சேதுபதியின் எண்ண ஓட்டம் தடைபட்டது. ஐசுவரியம் பற்றிய எண்ணத்திலிருந்து விடுபட்ட சேதுபதி மயிலப்பன் கேட்டதைப் பற்றிச் சிந்தித்தார்.

“நீ ஊருக்குத் திரும்பிப் போனதும் கமுதிக்கும் பசுமாத் தூருக்கும் போய் சூழ்நிலையைக் கவனி. எப்படியும் கமுதிக்கோட்டையிலிருந்து படைகளை ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்கு நகர்த்துவார்கள். அப்போது கமுதிக்கோட்டைப் பாதுகாப்பின்றி இருக்கும். உன்னால் ஐநூறு ஆட்களைத் திரட்ட முடிந்தால் கமுதிக் கோட்டையைக் கைப்பற்றிவிடலாம். கமுதிக்கோட்டை முக்கியமான இடத்தில் இருக்கிறது. ஒருவேளை பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயருக்கு உதவத் தொண்டைமான் நினைத்தால் தொண்டைமானின் படைகள் கமுதி வழியாகத்தான் போக வேண்டும். அப்போது தொண்டைமான் படைகளைக் கமுதியில் வைத்து மறிக்கலாம்.”

“சேதுபதி நீங்கள் சொல்வதுபோல ஒருவேளை கடைசியாக மருது பாண்டியர்களைத் தாக்க நினைத்து பாளையங்கோட்டை யிலிருந்து ஆங்கிலேயப் படை சிவகங்கை வந்தாலும் அது கமுதி வழியாகத்தான் வரவேண்டும். கமுதியில் வைத்து அவன்களை பொலி போடமுடியும்.”

“மயிலப்பன், மக்களை வழி நடத்த உங்களுக்கு ஒரு பதவி தேவை. உங்கள் பெயர் நம் ஆட்களுக்குத் தெரியும். உங்களுக்கென்று ஒரு கூட்டத்தையும் வைத்திருக்கிறீர்கள். ஆனால் அது போதாது. நான் சிறையில் இருப்பதால் உங்களைச் சேது நாட்டின் தளபதி என்று

நியமிக்கவும் முடியாது. ஆனால் ஒரு சேதுபதியால் உங்களைச் சேது நாட்டின் தளபதியாக நியமிக்க முடியும்."

"ராஜா, நாம் தப்பிக்கப் போகிறோமா? ஆணையிடுங்கள், இப்போதே இவர்களைத் தாக்குவோம். சிங்கம் போன்ற தேவர் வெளியில் இருக்கிறார். அவர் ஊரில் வெறுங்கையிலேயே இரண்டு ஆட்களை அடித்துக் கொன்றவர்."

"மயிலப்பன், நீங்கள் சொல்லுவது முப்பது வருடத்திற்கு முந்தைய முத்துக்கருப்பத் தேவர். இப்போ அவர் கிழச் சிங்கம்."

" கிழடாயிருந்தாலும் சிங்கம் சிங்கம் தானே சேதுபதி."

சேதுபதிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"அவர் வர்றதுக்குள்ள கேட்டுர்றேன். அது சரி, இப்பயெல்லாம் முத்துக்கருப்பத் தேவர் வலது காலுல சண்டியர் வளையம் போடுறாரா? அவுத்துட்டாரா?"

"சேதுபதி, நீங்க கேப்பீங்கன்னு தெரியும்."

"திருபுல்லாணிக் கோயில்ல முதன்முதல்ல தேவரப் பாத்தப்ப, கூட்டம் அதிகமாயிருந்ததால அப்போ நா சரியா அவரு வலது காலக் கவனிக்கல. ஐசுவரியம் வீட்ல வச்சுத் தேவரைப் பாத்தப்பத் தான் நிதானமாப் பாத்தேன். வலது கால்ல சிலம்பாட்ட வீரர்கள் போட்டிக் கிட்டிருக்க கழல் போட்டிருந்தார். தேவர் போட்ட வளையம் வித்தியாசமா இருந்தது. வழுவழுப்பான இரும்பு வளையம், அதுல ஒரு சின்னச் சங்கிலி தொங்கும்."

"மத்தவங்கயெல்லாம் சங்கிலியில்லாம வளையம் மட்டும் போட்டிருப்பாங்க. தேவர் போட்டிருக்கும் இரும்பு வளையத்துல அந்தச் சங்கிலி ஒரசும்போது சின்னதாச் சத்தம் வரும். பொம்புளப் புள்ளைக தண்டை, கொலுசு போட்டிருக்கிற மாதிரி.சிறு சத்தத்தோட நடந்துவரையில ஆட்கள் திரும்பிப் பாப்பாங்க, சண்டியர் வர்றான்னு நின்னு தோளில போட்டிருக்கும் துண்ட எடுப்பாங்க."

"அதுல சிக்கலும் இருக்கு. உள்ளூருக்குள்ள சண்டியர்ன்னு தெரியும். அதனால மரியாதையிருக்கும். வெளியூர்ல மாட்டிக் கிட்டா?"

“வெளியூர்ல எவனாவது அந்த ஊர் வஸ்தாது பார்த்துட்டான்னா, அவன் சிலம்பச் சண்டைக்குக் கூப்பிட்டிருவான். சண்டையில ஜெயிச்சா கால் வளையத்தோட ஊருக்குத் திரும்பலாம். இல்லைன்னா அத அவன்கிட்ட கழட்டிக் கொடுத்திட்டு வர வேண்டியதுதான். தேவர் வீட்ல பத்துப் பதினைஞ்சு கழல், அந்தக் காலத்தில கிடந்தது. தினமும் ஒன்ன எடுத்துப் போட்டுக்கிட்டுத்தான் தேவர் வீட்ட விட்டு வெளியே வருவாரு.”

“இன்னிக்கிப் போட்டுக்கிட்டு வந்திருக்காரா?”

மயிலப்பன் சிரித்தான். “சேதுபதி, இப்ப அவர் வரயில நாம் பாட்டுக்குச் சிரிக்கப் போறோம். நீங்க எல்லா வில்லங்கமான கேள்விகளையும் கேட்டுட்டு ஒன்னுந் தெரியாத மாதிரி இருப்பீங்க, அவர் என் மேல பாயப்போறாரு.”

“நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லல.”

“என்னத்தச் சொல்லுறது? நீங்களே அவர கிழச் சிங்கம்னு சொல்லிப்புட்டீங்க. அப்புறம்? இப்பயெல்லாம் அவர் காலுல கழல் போடுறதில்ல. ஆனா அவர் காலுல ரொம்ப நாள் போட்டதால அந்த இடம் கன்னிப்போச்சு. அத வச்சு நம்மளத் தெரியாத வெளியூருக்குப் போனாலும் அவருக்கு மரியாத தர்றாங்க. ஆனா அந்தக் கழல் மேல இப்பவும் அவருக்கு விருப்பம். நான் போட்டிருக்க இந்தக் கழல அடிக்கடி பார்ப்பாரு. மீசைய தடவிக்கிருவாரு.”

மயிலப்பன் தனது வலது காலை சேதுபதியிடம் காண்பித்தான்.

“சிலம்ப விளையாட்ட வெள்ளைகாரனுக்குப் புடிக்கலை யாமே?”

“அவனுங்களால நம்ம விளையாடுற எல்லா விளையாட்டையும் விளையாட முடியாது. வளரிச் சண்டை, கத்திச் சண்டை, காடுகள்ல வேட்டை, இதையெல்லாம் பழகிக்கிருவாங்க. ஏன் நம்ம தமிழ் பாசையைக் கூடப் பேசிர்றாங்க. ஆனா ஜல்லிக்கட்டுக் காள மாட்டை அணைய மாட்டான், வளரியத் தொடமாட்டான். சிலம்பம் பழகிக்கவே மாட்டான். எனக்குத் தெரிஞ்சு மேஜர் வெல்ஷ் மாதிரி சில பேருதான் வளரி எரியறத பெரிய மருது மாதிரி ஆட்கள்கிட்ட பழகியிருக்காங்க.”

“மயிலப்பா, நாம எதிர்பார்க்கிறபடி மருது சேர்வைக்காரர், பிரச்சனையிலிருந்து தப்பிச்சு நின்னுட்டார்ன்னா வளரியும், சிலம்பாட்டமும்

தப்பிக்கும். இல்லைன்னா அவர்கூடச் சேர்ந்து இந்த ரெண்டையும் வெள்ளைக்காரன் ஏறக்கட்டிருவான்."

"நீங்க விளையாட்டா பேசுறதப் பாத்தா தேவரும், ஐசுவரியமும் சந்தோசப்படுவாங்க. நாம விசயத்துக்கு வருவோம். நான் கேட் கிறதுக்கு உத்தரவுகொடுங்க... நாம் சிறைய ஒடைக்கிறோமா?"

"நான் ஊமைத்துரையைப் போலச் சிறையில் இருந்து தப்பிக்கப் போவதில்லை. கவர்னரிடம் உயிர்ப்பிச்சையும் கேட்கப் போவதில்லை. நான் சொன்னபடி நீங்க செயல்பட்டு, ஒருவேளை நாம் வெற்றி பெற்றால் சுதந்திர மன்னனாக வெளியே வருகிறேன். ராமேஸ்வரம் கோயிலில் சேதுக்கரையின் காவலனாக வழிபாடு நடத்துகிறேன். இல்லையென்றால் வெள்ளைக்காரர்கள் எனக்குக் கொடுத்த 'ரிபெல்' என்ற புதிய பட்டப் பெயரோடு நான் இந்த சிறையிலேயே செத்துவிட்டுப் போகிறேன்."

மயிலப்பன் கண்ணீர்விட்டான். "சேதுபதி, நாங்கள் உயிரோடு இருக்கும்போது நீங்கள் இப்படியெல்லாம் பேசலாமா? உங்களுக்காகச் சொந்த ஊரைவிட்டு வந்து நீங்க சுவாசிக்கும் காற்றை, நீங்க மிதிக்கும் மண்ணை, உங்கமேல் படும் வெயிலை, மழையை அவர்களும் அனுபவித்தால் போதும் என்று மெட்ராஸில் வாழ்ந்து கொண்டிருக்கும் தொண்ணூற்று ஐந்து குடும்பங்களுக்காகவாவது நீங்கள் தைரியத்தை விடக்கூடாது.

இப்போது நீங்கள் சொன்னபடி கமுதியில், அபிராமத்தில் என்னால் ஐநூறு ஆட்களைத் திரட்ட முடியும் என்றால் அதற்குக் காரணம் சேதுபதி என்ற மந்திரச் சொல்தான். நீங்கள் ராமநாதபுர ராமலிங்கவிலாஸ் அரண்மனையில் இல்லையென்றாலும் சேதுபதி பதவியிலிருந்து ஆங்கிலேயர்களால் விலக்கி வைக்கப் பட்டிருந்தாலும், மக்களின் மனதில் சேதுபதி என்றால் அது நீங்கள்தான். சேதுபதி பதவியை யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள இது என்ன ஆற்காடு நவாப்பும், ஆங்கிலேயர்களும் கொடுத்தப் பதவியா? ராமாயணத்தின் நாயகன் ராமன் கொடுத்தப் பதவியல்லவா? நீங்கள் இப்படியெல்லாம் விரக்தியாகப் பேசினால் நான் செத்தே போய்விடுவேன் சேதுபதி."

மயிலப்பனைப் போன்ற வீரனிடம் தலைவன் நம்பிக்கை இழந்து உள்ளான் என்று காண்பித்துக்கொள்ளக் கூடாது என சேதுபதிக்குப் புரிந்துவிட்டது.

“சரி, மயிலப்பன். நான் சொன்னதை மறந்து விடுங்கள். நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். கமுதிக் கோட்டையை நெருங்கியதும் நான் உங்களிடம் சொல்லும் ஒருவர் சேதுபதியாக நியமிக்கப்பட வேண்டும்.”

“ராஜா, நீங்கள் இருக்கையில் வேறொருவர் எப்படி புதிய சேதுபதியாவார்?”

“சொல்லுவதைக் கேளுங்கள் மயிலப்பன். இதுவரை நீங்கள் பார்த்த சேதுபதி அனுபவம் இல்லாதவன். வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தவன், யார் பேச்சுக்கும் அடங்காதவன், நல்லது கெட்டது சீர் தூக்கிப் பார்க்காதவன், யார் சொன்னாலும் கேட்டுக் கொள்பவன். இப்போது நீங்கள் பார்க்கும் சேதுபதி அடிபட்டு அனுபவப்பட்டவன். காலம் நடத்திய பாடத்தைக் கவனமுடன் படித்துக் கொண்டவன். இனி நான் தப்பே பண்ணக்கூடாது.”

“சரி சொல்லுங்க சேதுபதி.”

“பொறுங்கள். நான் உங்கள் மூவரிடமும் பேசிய பிறகு கடைசியாக என் முடிவைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். நான் இதுவரை சொன்னது சரிதானே? ஒத்துக் கொள்கிறீர்களா?”

“என்னுடைய சேதுபதி சொல்லுவதால் ஒத்துக்கொள்கிறேன்.”

“அவர்கள் இருவரையும் வரச் சொல்லுவோம்” என்று சொல்லி ஆங்கிலேய வீரர்களிடம் சேதுபதி ஆங்கிலத்தில் சொன்னார். மூவரில் இருவர் அங்கேயே நின்றுகொண்டு ஒருவன் கோட்டை வாசலுக்கு வந்து “சேதுபதியைப் பார்க்க யார் யார் வந்திருக்கீங்க?” என்றான்.

முத்துக்கருப்பத் தேவரும், ஐசுவரியமும் மரத்தடியில் இருந்து எழுந்து வந்தனர். முத்துக் கருப்பத் தேவர் சேதுபதியைப் பார்க்க சிறைக்கு வருவது இதுதான் முதல்முறை. ஐசுவரியம் பல முறை வந்ததால் அவளுக்குச் சிறை நடைமுறைகள் தெரியும். கேட்பது சம்பிரதாய கேள்விகள் என்றாலும் கட்டாயம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டும் என்று அவளுக்குத் தெரியும்.

“ஆமாங்க, நாங்கதான் சேதுபதியப் பார்க்க வந்திருக்கோம்” என்றாள். தேவருக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. “ஏம்மா நாச்சியாரு

நம்மைத் தவிர்த்து இங்க யாரும் இல்லை. வரயிலையும் மூணு பேரா வந்தோம். மயிலப்பனை மட்டுமே உள்ளே கூப்பிட்டாங்க. மீதி ரெண்டு பேரு மட்டும்தான் இங்க இருக்கோம்."

"சித்தப்பா பேசாம வாங்க. நான் அப்புறம் சொல்லுறேன்" என்றாள்.

இருவரும் சிறைக்குள் வந்தனர். தேவரை உடல் முழுவதும் ஒரு சிப்பாய் சோதனை செய்தான். ஐசுவரியத்தைப் பார்த்து "சேதுபதிக்கு மனைவியா?" என்றான். ஐசுவரியத்திற்குப் பெரும் மகிழ்ச்சியாகயிருந்தது. பதில் சொல்ல வேண்டாம் என நினைத்தாள். அதேசமயம் சிறை நடைமுறைப்படி கேட்கப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டும் என்பதால் "இல்லை, அவருக்குச் சொந்தம்" என்றாள். தேவருக்குத் தெரியாமல் கண்களில் சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். சிப்பாய் முன்னே நடக்க இருவரும் சிறிது நேர நடைக்குப் பின் சேதுபதி இருக்கும் கொட்டடிக்கு வந்தனர். முத்துக்கருப்பத் தேவர் சாதாரணமாகக் கொட்டடியைப் பார்ப்பதுபோல அதன் அமைப்பை மனதில் வாங்கிக் கொண்டார். சின்ன மருது ஆட்கள் பாளையங்கோட்டைச் சிறையை உடைத்து ஊமைத்துரையையும் சிவத்தையாவையும் வெளியே கொண்டு வந்ததுபோல சேதுபதியையும் வெளியே கொண்டு வரவேண்டும் என்ற மனக்கணக்குடன் சிப்பாய்க்குப் பின்னால் நடந்தார். தூரத்தில் வரும்போதே இருவரையும் பார்த்துச் சேதுபதி சிரித்தார். ஐசுவரியம் சேதுபதியின் காலைத் தொட்டு வணங்கினாள். அடுத்து முத்துக்கருப்பத் தேவர் சேதுபதியை வணங்கினார். "தேவர், காலில் விழ வேண்டாம். நீங்க வயதில் மூத்தவர்" என்றார் சேதுபதி.

" வயசு என்ன சேதுபதி, எங்க கண்கண்ட தெய்வம் நீங்க."

"வாங்க, மூணுபேரும் உக்காருங்க" என்றார் சேதுபதி. மூவரும் உட்கார்ந்தார்கள்.

"என்ன தேவரே, உங்க மக ஏதாவது சொல்லுச்சா என்னப் பத்தி? எம்மேல ரொம்பக் கோவமாயிருக்குத் தெரியுமா?" என்றார்.

தேவர், ஐசுவரியத்தைத் திரும்பிப் பார்த்தார். "அப்படி ஒன்னும் சொல்லலையே சேதுபதி" என்றார்.

“சரி பரவாயில்லை, எப்படியும் கொஞ்ச நேரத்தில அந்தப் பேச்சு வந்திடும். நா ஒங்க ரெண்டு பேரையும் கொஞ்சம் தாமதமாகக் கூப்பிட்டதுக்குத் தப்பா நினைச்சுக்காதீங்க. நான் மயிலப்பன் கிட்ட என்ன பேசினேன்னு இப்ப சொல்லிர்றேன். நான் ராமநாதபுரத்தில் இருக்கையில எந்த விசயத்தைப் பத்தி பேசணும்னாலும் நானா முடிவு பண்ணிடுவேன். முடிவு பண்ணிட்டு என் கூட இருக்கிறவங்கள “இதைச் செய்யுங்கன்னு” சொல்லுவேன். அது பலமுறை தப்பாப் போயிருக்கு. இப்ப என் பழக்கத்தை மாத்திக்கிட்டேன். நான் இப்போல்லாம் முதல்ல யோசிக்கிறேன். நான் சொன்னா உடனே கேக்குற ஆளுககிட்டயும் ஏன்னு எதுத்துப் பேசுறவங்ககிட்டயும் விவாதிக்கிறேன்.”

“ இப்ப எங்க ரெண்டு பேரக் கூப்பிட்டுருக்கீங்களே? நாங்க?”

“ எதுத்துப் பேசுறவங்க.”

“பாத்தீங்களா சித்தப்பா, நீங்களும் நானும் எதுத்துப் பேசுறவங்களா? நாம இதுவரை எதாவது எதுத்துப் பேசிருக்கோமா? சேதுபதி எந்த முடிவ நமக்காக மாத்தியிருக்காரு. முதல்ல இதுக்கு பதில் கேட்டுட்டு அடுத்த பேச்சுக்கு வரச் சொல்லுங்க” என்றாள் ஐசுவரியம்.

“நாச்சியாரு, என்னத்தா, மரியாதயில்லாம என்ன பேச்சு? சேதுபதிகிட்ட எப்படி நடந்துக்கிறதுன்னு உனக்குத் தெரியாதா? அதுக்குத்தான் சாசுவதம்கூட சொல்லிவிட்டுச்சு. சித்தப்பா, நாச்சியாருக்குக் கொஞ்சம் வாய் அதிகம். சேதுபதி முன்னால பேச விடாமப் பாத்துக்கங்கன்னு சொல்லுச்சு. அது சரியாத்தான் இருக்கும் போல“ என்றார் தேவர்.

சேதுபதி சத்தம் போட்டுச் சிரித்தார்.

“தேவர், ஒங்கபாடுதான் பிரச்சனையேயில்ல.”

தேவர் சிரித்துக் கொண்டார்.

“ஆமா சேதுபதி, தேவர் வீட்டுல யாரும் தேவர தேடுறதுமில்ல. கிளம்பி வந்தார்ன்னா திரும்ப வீடு போய்ச் சேருகிறவரையில ஒரு குஞ்சு விசாரிக்காதுக. குத்தம் சொல்லாதுக” என்றார் மயிலப்பன்.

“ஐசுவரியம், நா சொல்லப்போறது தனிப்பட்ட முறையில நமக்கு நல்லது செய்யுமா, கெட்டது செய்யுமான்னு தெரியல. ஆனா நிச்சயம் நம்ம சீமைக்கு நல்லது செய்யும். நாம ஒரு பெரிய முடிவ இப்போ

எடுத்தாகணும். இன்னைக்கு இருக்கிற சூழ்நிலையில ஒன்னு வெள்ளக்காரனோடு சேர்ந்து இப்போ ராஜ வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கிற ஆற்காடு நவாப், புதுக்கோட்டை, திருவிதாங்கூர் ராஜாக்கள் மாதிரி வாழலாம். இல்ல புலித்தேவர், திப்புசுல்தான், கட்டபொம்மன், தூந்தாஜி வாக் மாதிரி வெள்ளக்காரன எதுத்து, முடிஞ்சு போகணும். ரெண்டுக்கும் நடுப்பட்ட இடத்துல நாமளும் சிவகங்கையும், சிவகங்கையோட சினேகமாயிருக்கிற சில பாளையங்களும் இருக்கோம். "என்னோடு இல்லாதவர்கள் யாவரும் என் எதிரிகள்"ன்னு பைபிள படிக்கிற வெள்ளக்கார கவர்னருங்க, பைபிள் வரிய கெட்டியா பிடிச்சிக்கிட்டாங்கபோல. அவங்ககூட இல்லாதவங்கள ஒன்னு அவங்க அழிப்பாங்க, இல்ல நாம அவங்கள அழிக்கணும்."

"சேதுபதி, நீங்க இப்ப சொல்லுறத ஐசுவரியம் வீட்ல ஒங்கள கடைசியாப் பார்த்தப்பவே நான் பேசினேனே. நாமளும் சின்ன மருது தலைமையில சேந்திடுவோம்னு சொன்னேன். வடக்கே மராத்தியத்திலிருந்து தெக்கே நாங்குனேரி வரயில மருதுக்கு ஆள் இருக்குன்னு வெளிப்படையாவே பேசிக்கிறாங்க."

"அது உண்மைதான் தேவரே. சேர்வைக்காரர் நம்மை சேத்துக்க மாட்டாங்கன்னுதான் அப்போ நீங்கள் பேசிய சமயத்துல நினைச்சேன். ஆனா இப்போ அவர் சிவகங்கையைத் தாண்டி சிந்தித்துக் கொண்டிருப்பதாக நினைக்கிறேன். சின்ன மருது என்மீது கோவப்படுவதற்கான காரணங்கள் அனைத்தும் நான் கைது செய்யப்பட்டவுடன் மறைந்திருக்கும். அதனால மயிலப்பன் சின்ன மருதுவ சிவகங்கையில போய் பார்க்கட்டும்" என்று சொல்லி நிறுத்தினார். மூவரும் சேதுபதியைப் பார்த்தனர். "முத்துக்கருப்பத் தேவர, சின்ன மருதுவப் பாக்க வேணாம்னு நான் சொல்றது காரணமாகத்தான்."

"சரி சேதுபதி, சின்ன மருதுவப் பார்த்து பேசலாம்னு அஞ்சு வருசத்துக்கு முந்தியே இந்த நாச்சியார் வீட்லவச்சு ஒங்ககிட்ட சொன்னேன். அன்னைக்குக் கேட்டிருந்தீங்கன்னா இன்னிக்கு இந்த நில வந்திருக்காது ராஜா. ஒங்கள இந்த நிலையில பாக்குறதுக்கா நாங்க உயிர வச்சிக்கிட்டிருக்கோம்?"

ஐசுவரியம், முத்துக் கருப்பத் தேவரைப் பார்த்தாள்.

"சரி சித்தப்பா, சும்மா சொன்னதையே சொல்லாதீங்க. இப்பத்தான் ராஜா எல்லாரையும் புரிஞ்சிக்கிட்டாருல்ல. அன்னிக்கு அவங்க ஆளுக,

அவங்க அக்கான்னு எல்லார் பேச்சையும் கேட்டாரு. இன்னைக்கு அந்த அக்காவப் பத்தி ராஜா என்ன? நம்ம சீமையே நல்லாத் தெரிஞ்சுக்கிருச்சு."

"சரி விடுத்தா, நமக்குத் தெரிஞ்சு சேதுபதிய கொற சொன்ன ஒரே பொம்பள அதுதான். ராஜா கோவிச்சுக்கிறாதீங்க. ஒங்க அக்காவ இப்படிப் பேசுறேனேன்னு" என்றார் முத்துக்கருப்பன்.

"அத விடுங்க. இப்ப நடக்கிறதப் பார்ப்போம். நா சொன்னபடி மயிலப்பன் மட்டும் சின்ன மருதுவப் போய் பாத்து நம்ம சீமையும் அவரோடு சேத்துக்கச் சொல்லணும்."

"ஏதாவது நிபந்தனை வைக்கிறோமா சேதுபதி" என்றான் மயிலப்பன்.

"ஒரு நிபந்தனையும் இல்லை. நான் திரும்ப ராமநாதபுரம் சுதந்திர அரசனாக உதவ வேண்டும் என்பதைத் தவிர."

"சரி சேதுபதி."

"நம்மோடு அன்பாக இருக்கத்தான் சின்ன மருது விரும்புவார். ராமநாதபுரம் சீமையில பெரிய படை பலத்தை நம்மால் கூட்ட முடியாது என்று வேண்டுமானால் நினைப்பார். நம்ம சீமையில படைபலம் கூட்டுவதற்கு ஒன்று நான் அங்கு வரவேண்டும் அல்லது என் பதவி தாங்கிய ஒருவர் அங்கு இருக்க வேண்டும். நான் ராமநாதபுரம் வர வழியில்லை. புதிய சேதுபதியாக நான் முத்துக்கருப்பத் தேவரை நியமிப்பதாகச் சொல்லுங்கள்."

நெருப்பைத் மிதித்ததுபோல எழுந்தார் முத்துக்கருப்பத் தேவர். "என்ன சேதுபதி? என்னை வதைப்பதென்று முடிவு செய்து விட்டீர்களா? நான் எந்தவிதத்தில் பொறுத்தமானவன்? ஒங்க சாதி சனம் இத்தனை பேர் இருக்க என்னை நியமித்தால் உள்நாட்டுக் கலகம் வராதா? ஒங்க அக்கா மங்களேஸ்வரி இப்பத்தான் சும்மாயிருக்கார். அவருக்கு என்னை நீங்கள் சேதுபதியாக நியமிப்பது தெரிந்தால் நம் கூடாரத்திற்குள்ளேயே பெரும் கலவரத்தை உருவாக்கிவிடுவார்."

"இல்லை தேவரே, நான் நன்றாக யோசித்தேன். என் உறவினர்கள் யாரை நியமித்தாலும் நான் திரும்ப ராமநாதபுரம் வரும்போது எப்படி நடந்து கொள்வார்கள் எனத் தெரியாது. ராமநாதபுர அரசுக் கட்டில் பலரை வழிதவறவிட்டிருக்கிறது. நூறு வருடங்களுக்கு

முன்பு கிழவன் சேதுபதி தன் மனதிற்கினிய காதலியாக இருந்த கள்ளர் குலப் பெண்ணின் சகோதரனுக்குத் தன் நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்து, அதற்குப் புதுக்கோட்டை என்ற பெயரிட்டுக் கொடுத்தபோது யோசித்திருப்பாரா ராமநாதபுரமும் புதுக்கோட்டையும் ஒரு நாளில் வெவ்வேறு திசையில் பயணிக்கும் என்று? தஞ்சை அரசனின் ஆதரவோடு ராமநாதபுரத்தைக் கைப்பற்றிக் கிழவன் சேதுபதியின் மராத்திய மனைவியின் மூலம் பிறந்த மகன் கௌரி சங்கரனைக் கொன்று ராமநாதபுரத்தின் ஒரு பகுதியைப் பிரித்து சிவகங்கைச் சீமை என்று கொடுத்தார் கட்டையத் தேவர். அவர் நினைத்திருப்பாரா தன் மருமகன் சசிவர்ணத் தேவனின் வழிவந்த சிவகங்கை ஆட்சி தன்னிடமிருக்கும் ராமநாதபுரத்தோடு மோதும் என்று. ஏன் என் அக்கா மங்களேஸ்வரி நாச்சியாரையே எடுத்துக் கொள்ளுங்கள். எந்தப் பொண்ணும் என்மீது சொல்லாத புகாரை நான் ஏதோ பெரிய பெண்பித்தன்போல சித்தரித்து அவர் வெள்ளக்காரக் கவர்னருக்கு கடிதம் எழுதத் தூண்டியது எது? ராமநாதபுரம் அரசாட்சிக் கிடைக்கும் என்பதால்தானே? என் ஜாதி, மற்ற ஜாதி என்ற வளையத்திற்குள் நான் போக விரும்பவில்லை. நான் நன்றாக யோசித்து எடுத்த முடிவு இது. சின்ன மருதுவிடம் சொல்லிவிட்டு, கமுதிக் கோட்டையில் முத்துக்கருப்பத் தேவரை அடுத்த சேதுபதி என முடி சூட்டுங்கள். ராமநாதபுரம் சீமை வீரர்கள் சின்ன மருதுவின் பின்னால் அணி வகுப்பர். சிவகங்கைப் படையோடு ராமநாதபுரம் படையும் சேர்ந்து சின்ன மருதுவின் கட்டளைப்படி நடந்து கொள்ளட்டும்” என்றார்.

மயிலப்பன் எழுந்து சென்று மண் பானையிலிருந்து தண்ணீர் எடுத்து, சேதுபதியிடம் பவ்யமாக நீட்டினான். சேதுபதி நீரை வாங்கிப் பருகினார். அவர் குடித்து முடித்ததும் ஐசுவரியம் அதை வாங்கிக் கீழே வைத்தாள். சூழ்நிலை இறுக்கமாயிருப்பதை உணர்ந்த சேதுபதி, இயல்பு நிலைக்குக் கொண்டு வர விரும்பினார்.

“உலகச் சரித்திரங்களைப் படிப்பவர்களுக்குத் தெரியும். ஆட்சி மாற்றங்கள், வாரிசு நியமனம் போன்ற முடிவுகள் எல்லாம் அரண்மனையில் எடுக்கப்பட்டதைவிடச் சிறைச்சாலையில் எடுக்கப்பட்ட நிகழ்வுகள்தான் அதிகம்” என்றார். சேதுபதி வாய்விட்டுச் சிரித்தார். ஐசுவரியம் சேதுபதியை வைத்தக் கண் வாங்காமல் பார்த்தாள். தேவரும் மயிலப்பனும் சேதுபதி பேசியதை ஆமோதிப்பதுபோலத் தலையசைத்தனர்.

“ராஜா, நான் விவரம் தெரியாதவள். பெரிய பெரிய விசயங்கள் பேசுகிற இடத்தில் எனக்கு வேலையில்லை. சேதுபதியைத் தவிர எனக்கு எதுவும் முக்கியமில்லை. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். முத்துக்கருப்பத் தேவர் எனக்கு உறவினர் இல்லை. பத்து வருசப் பழக்கத்தில் சித்தப்பா எனக் கூப்பிடுகிறேன். அவருக்குத் திருமணமாகவில்லையே தவிர நானும் என் அக்கா சாசுவதமும் இவரைத்தான் அப்பாவாக நினைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அழுதாள். சேதுபதி அவளது தலையில் கை வைத்து ஆசுவாசப்படுத்தினார். “நான் உங்கள் நிழலில் பத்து வருசமாக இருக்கிறேன். என்மீது ஒரு நாளும் நீங்கள் கோபப்படும்படி நான் நடந்துகொள்ளவில்லை. உங்கள் யோசனை, திட்டம், கருத்து அத்தனையும் அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டேன். இப்போது நீங்கள் சொன்ன திட்டம் சரியாகக்கூட இருக்கும். மயிலப்பன் அண்ணனும் சரி, சித்தப்பா முத்துக்கருப்பத் தேவரும் சரி உங்களுக்குத் துரோகம் நினைக்க மாட்டார்கள்.” என்றாள்.

“நீ சொல்வது முழுவதும் உண்மை ஐசுவரியம். நீ செய்ய வேண்டிய முக்கியமான வேலை ஒன்று உள்ளது. நீயும் இவர்களோடு சேர்ந்து சிவகங்கைக்குப் போக வேண்டும்.”

“ராஜா, அதைச் சொல்லித்தான் போன முறை என்னை அழவைத்தீர்கள். இப்போது மறுபடியும் ஆரம்பிக்கிறீர்களே.”

தேவரும் மயிலப்பனும் ஐசுவரியம் பக்கம் திரும்பி, “அம்மா, இப்பத்தானே சொன்ன ராஜா என்ன திட்டம் சொன்னாலும் யோசிக்காம ஏத்துக்கிருவேன்னு?”

“அதுக்காக என்னைய மறந்திருன்னு அவரு சொல்லுவாரா? போன தடவ வந்தப்ப அப்படித்தான் சொன்னாரு. பத்து வருசமா என் வாழ்க்கைய நான் வீணாக்கிட்டேனாம். இனிமேலாவது திருப்புல்லானி போயி பொழச்சிக்கிறவாம். சொல்லுறாரு ராமநாதபுரம் சேதுபதி. இப்படிச் சொல்லித்தான் நான் ஒரு மாசமா அழுதுகிட்டிருக்கேன்.”

“இல்லை ஐசுவரியம். அப்போது நான் சொன்ன காரணம் வேறு. இப்போது சொல்லப்போகும் காரணம் வேறு. நீ அங்கு இருந்தால் ரொம்பவும் நல்லது. மயிலப்பன் தேவர் கூட்டணியில் ஐசுவரியமும்

இருக்கிறாள் என்றால் இந்தக் குழுவிற்கு எனது ஆதரவு இருக்கிறது என்று ராமநாதபுரம் சீமை மக்களுக்குத் தெரியும்."

ஐசுவரியத்திற்குக் கண்களில் கண்ணீர் வழிந்தது. "இந்த ஒரு வார்த்தைப் போதும் ராஜா. நா வாழ்ந்துட்டேன். என்னையப் பாத்தா ஜனங்க நீங்கன்னு நினைப்பாங்கன்னு சொன்னீங்களே. எனக்கு இதுக்குமேல வாழவே வேணாம். போதும் இந்த வாழ்க்கை. உங்கக் கண் முன்னாலேயே என் உயிர் போனாக்கூட சந்தோசமா செத்துருவேன்" என்று சேதுபதியின் காலில் விழுந்தாள். சேதுபதி அவளைத் தொட்டுத் தூக்கினார். தேவரும் மயிலப்பனும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தனர்.

"ஐசுவரியம், நான் ஐந்து வருடமாக உன்னோடு இருக்க வில்லையே தவிர உன்னை நினைக்காத நாள் இல்லை. உன்னோடு நான் நன்றாக வாழ்ந்திருக்கலாம். பலமுறை உன்னை கோபித்திருக்கிறேன். உன்னைக் கெஞ்ச விட்டிருக்கிறேன். உனக்கு எந்த அங்கீகாரமும் நான் தந்ததில்லை" சேதுபதி ஆங்கிலேயச் சிப்பாய்களைப் பார்த்தார்.

அவர்களை அருகில் வருமாறு தேவர் வணங்கிக் கேட்டுக் கொண்டார். மூன்று சிப்பாய்களும் தேவர் வந்தனர். அவர்கள் மூவரது கைகளிலும் தன் கையிலிருந்த மூன்று மோதிரங்களை தேவர் கழட்டி மாட்டினார். ஒருவனுக்கு மட்டும் மோதிர விரலில் தேவரின் மோதிரம் பொருந்தியது. மற்ற இருவருக்கும் சுண்டு விரலுக்குத்தான் பொருந்தியது. தேவர் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் "இந்த ஆண்டு மார்ச் மாதமே கடுமையான வெயில் ஆரம்பித்து விட்டது" என்று பேசி அவர்கள் மூவரையும் சற்று தூரத்திற்கு அனுப்பினார். வெயிலுக்கு என்னென்ன சாப்பிடலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தார். யாராவது மேல் அதிகாரி வருகிறார்களா என்று சிப்பாய்கள் அடிக்கடி வாயிற் கதவைப் பார்த்துக் கொண்டனர். தேவர் கொடுத்த மோதிரத்தையும் கைகளையும் அடிக்கடி பார்த்துக் கொண்டனர்.

"யாருக்கும் கிடைக்காத பாக்கியம் எனக்குக் கிடைத்திருக் கிறது. என்னைப் பற்றி நீங்கள் சித்தப்பாவிடமும், மயிலப்பன் அண்ணனிடமும் சொன்னதற்கு ஈடாகச் சொர்க்கம் கிடைத்தாலும் எனக்கு வேண்டாம் ராஜா" என்று மறுபடியும் காலில் விழுந்தவளிடம்,"நான் எப்பவாவது உன் மனதைப் புண்படுத்தியிருந்தால்..." என்றார் சேதுபதி

"அப்படி எதுவுமேயில்லை. உங்களுக்குத் திருமணங்கள் நடந்த அன்றெல்லாம் துன்பப்பட்டிருக்கேன். இரண்டு நாளில் நீங்கள் வரும்போது

அது எதுவும் என் நினைவில் இருக்காது. அரசனாகயிருந்து கொண்டு அதுவும் இருபது வயது வரை சிறைக் கொட்டடியில் வாழ்ந்த உங்களைப் போன்ற ஒருவருக்கு இந்த இன்பங்கள் கூட இல்லை என்றால் எப்படி? என்று நினைத்துக் கொள்வேன். நீங்களும் புது மாப்பிள்ளைப்போல் என்னிடம் நடந்துகொள்ளமாட்டீர்கள். நானும் உங்கள் பழைய ஐசுவரியம் என்பதுபோல நடந்து கொள்ள மாட்டேன். அன்றுதான் புதிதாகப் பழகியதுபோல நினைத்துக் கொள்வேன். உங்களைத் திருமணம் செய்யாததுகூட ஒரு விதத்தில் நல்லதுதான்."

"ஏன்?" என்றார் சேதுபதி

"திருமணம் நடந்திருந்தது என்றால் மனைவி என்ற என் உரிமையை நிலைநாட்டவும் அதற்கான அங்கீகாரத்தைப் பெறவுமே நான் போராடியிருப்பேன். இப்போது மனைவியில்லைதான். மனைவிக்கான அனைத்துக் கடமைகளையும் உங்களுக்குச் செய் திருக்கிறேன். உங்கள்மீது எந்தக் காலத்திலும் எனக்கு அன்பு குறையாது" என்றாள்.

"அவர்களை வரச் சொல்லவா?" என்று சேதுபதி கேட்பார்.

"சரி" என்று ஐசுவரியம் தலையை ஆட்டினாள்.

"தேவர் வாருங்கள்" என்றார். தேவரும் மயிலப்பனும் உள்ளே வந்து வணங்கினார்கள்.

"சரி, நீங்கள் கிளம்பலாம். நீங்கள் மூவரும் வெற்றிகரமாகச் சென்று வாருங்கள். உங்களது வருகைக்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்ற சொல்லிச் சிரித்தார்.

சேதுபதி கம்பீரமாக எழுந்தார். அவர் சிறையின் கொட்டடிக்குள் செல்லும்வரை அவரின் முதுகையே மூவரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இன்னும் சில மாதங்களில், இந்த மூவரில் இருவர் தூக்கில் தொங்கவிடப்படுவார்கள் என்பதை அறிந்த காலம், அவர்களின் முதுகுக்குப் பின்னால், இரக்கமில்லாமல் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

•

31

சேதுபதி சொன்னபடி மயிலப்பன் சின்ன மருதுவை சிவகங்கையில் சந்தித்தான். “என்ன மயிலப்பா, வராத ஆளு வந்திருக்கே?” என்றார் சின்ன மருது.

“நான் என்ன வரக்கூடாத ஆளா அரண்மனை? சூழ்நிலை நம்மை இங்கேயும் அங்கேயும் பிரிச்சிருச்சு. நான் உங்களைப் பார்க்கணும்னு சொன்னவுடனே சரின்னு சொல்லுவீங்கன்னு சேதுபதி சொன்னாரு.”

“என்னப்பா, சேதுபதி எப்படியிருக்காரு? பாத்தியா நீ? மெட்ராஸ்லதான இருக்காரு?”

“ஆமா அரண்மன. மெட்ராஸ் கோட்டை சிறையிலதான் இருக்காரு. ரொம்பக் கெடுபிடி. நெறைய இடங்கள்ல சோதனை பண்ணுறாங்க. வெள்ளக்கார கவர்னர், சேதுபதி பத்தி என்ன நினைக்கிறாரோ? தெரியல. ஆனா அங்கக் காவலுக்கு இருக்கிற சிப்பாய்களுக்கு சேதுபதிமேல நல்ல அபிப்பிராயம் இருக்கு. உங்களையும் பெரிய அரண்மனையையும் சேதுபதி விசாரிச்சாரு. அவரு சிறைக்குள்ளயிருந்தாலும் வெளியில நடக்கறதத் தெரிஞ்சு வச்சிருக்காரு. பாளையங்கோட்டை சிறை உடைப்புக்கூட அவருக்குத் தெரிஞ்சிருக்கு.”

சின்ன மருது பாண்டியருக்குப் பாளையங்கோட்டைப் பற்றிய பேச்சை மாற்ற வேண்டும் என்று தோன்றியது. அரசியல் சூழல் குழப்பமாக இருப்பதால் யார் எதிரி? யார் நண்பன்? என்று தெரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. இந்த மயிலப்பன் சேதுபதியின் ஆள். கொஞ்சம் முரடனும்கூட. சேதுபதியுடன் ஏற்பட்ட போரில் அநியாயமாக அண்ணன் பெரிய மருதுவின் மகன்கள் இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். மயிலப்பன் எப்படியும் வெள்ளைக்காரர்களுக்கு எதிரானவன்தான். ஆனால் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கோ, திருவிதாங்கூர் அரசனுக்கோ, ஆற்காடு நவாப்புக்கோ இவன் நெருக்கமாகயிருந்தால், அது சிவகங்கையின் நலனுக்கு உகந்ததல்ல என்று சின்ன மருது யோசித்தார்.

“இதுவரை நடந்ததைப் பெரிய மனது பண்ணி மறந்து விடுங்கள் சின்ன பாண்டியரே, நீங்கள் சேதுபதியோடு இணக்கமாக இருக்க விரும்பினால் அதற்கு இப்போது வாய்ப்பிருக்கிறது.”

“என்ன நிபந்தனையின் அடிப்படையில்?” என்றார் சின்ன மருது

“சேதுபதியிடம் இதே கேள்வியை கேட்டேன். அவர் தன்னை சுதந்திர அரசனாக அங்கீகரித்தால் போதும் என்றார். ஒரு செய்தி அரண்மனை, நம்ம சேதுபதிக்கு இப்போதெல்லாம் பதவி ஆசை துளியும் இல்லை. உங்களோடு எங்கள் ராமநாதபுரம் சீமையின் படைகள் சேர்ந்துவிடும். இராமநாதபுரம் சீமைக்குத் தலைமை ஏற்க முத்துக்கருப்பத் தேவரைச் சேதுபதி நியமித்திருக்கிறார். தேவர் உங்களுக்கு நெருங்கிய உறவினர். நல்ல மனிதரும்கூட.”

“முத்துக்கருப்பத் தேவரையா? தளபதியாகவா?”

“ஆம் பாண்டியரே, முத்துக்கருப்பத் தேவர்தான். தளபதியாக அல்ல. புதிய சேதுபதியாக.”

“மங்களேஸ்வரி நாச்சியாரின் ஒப்புதல் கிடைக்குமா?”

“தேவையில்லை பாண்டியரே. சேதுபதியின் விருப்பப்படி ராமநாதபுரம் படைகள் முத்துக்கருப்பத் தேவரை ராமநாதபுரத்தின் புதிய சேதுபதியாக நியமிக்கும்.”

“இதற்கு நாங்கள் செய்ய வேண்டியது?”

“கமுதிக் கோட்டையைத் தாக்க ஆட்கள், துப்பாக்கி, வெடி மருந்து தந்தால்போதும்.”

“கோட்டையைப் பிடித்த பிறகு ராமநாதபுரம் செல்வீர்களா?”

“இல்லை பாண்டியரே, நீங்கள் சொல்லுமிடம் செல்லுவோம்.”

“சரி மயிலப்பா. உன்னை நம்பாமல் இல்லை. நீ சேதுபதிக்கு எவ்வளவு வேண்டியவன் என்று தெரியும். சேதுபதி அவர் மனைவிகளைக்கூட நம்ப மாட்டார், உன்னை நம்புவார் என்று சொல்லுவார்கள். இருப்பினும் நம்பமுடியாத ஒரு பெரிய விசயத்தைச் சொல்லுகிறாய். சேதுபதியாக மறவர் அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்கிறாய். முத்துக்கருப்பத் தேவர் சேதுபதி ஆவதற்குத் தகுதியான ஆள்தான். ஜாதி பார்த்து நம்பிக்கை வைப்பதில்லை. எங்கள் அரசர் முத்துவடுக நாதரின் மந்திரி தாண்டவராயப் பிள்ளையும் உங்கள் சீமையின் அமைச்சர் தாமோதிரம் பிள்ளையும், மதுரை முகமதிய ஆட்சியை அகற்றிப் பங்காரு

விஜயரங்கனை நாயக்க மன்னனாக நியமித்தனர். தாமோதிரம் பிள்ளை தன்னுடைய இறுதிக்காலம்வரை அப்போதிருந்த சேதுபதிக்கு விசுவாசமுடன் இருந்தார். அதேபோல முத்துக்கருப்பத் தேவர் மறவர் அல்லாத வேற்று ஜாதியினராக இருந்தாலும் உங்கள் சேதுபதிக்கு நாணயமாகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் இருப்பார். நான் உன்னை நம்புகிறேன். இருந்தாலும் எங்கள் அரசர் கேட்டால் நான் சொல்ல வேண்டும். முத்துக்கருப்பத் தேவரை அடுத்த சேதுபதியாக நியமிக்கவேண்டும் என்று சேதுபதி சொன்னபோது உங்கள் இருவரைத் தவிர வேறு சாட்சியங்கள் யாரும் உண்டா?"

"உண்டு."

"அவரை அழைத்து வர முடியுமா?"

"முடியும்."

"யார் அவர்?" என்றார் சின்ன பாண்டியர்

"ஐசுவரியம். திருப்புல்லானிக் கோயில் தேவதாசி."

"ஓ, அந்தப் பெண்ணா, சரிசரி. அந்தப் பெண்ணோடுதான் சேதுபதி இருந்தார் என்று தெரியும். கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார்

"மயிலப்பன், நீ என்னை வந்து பார்த்து நட்புக் கோரியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ராமநாதபுரமும், சிவகங்கையும் சகோதர சீமைகள். நாம் ஒன்றாக இருந்த காலங்களில் எல்லாம் பகைவர்களை வெற்றி கொண்டுள்ளோம். மீண்டும் காலம் திரும்பியிருக்கிறது. சில நாட்கள் எனது விருந்தினராக இரு. நான் அண்ணனிடம் பேசிவிட்டு உன்னை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரிடம் அழைத்துச் செல்கிறேன். அரசரைச் சந்தித்த பிறகு நாம் மேற்கொண்டு நடக்க வேண்டியதைச் செய்வோம்."

"நான் இதை வெற்றியாக எடுத்துக் கொள்ளலாமா பாண்டியரே?"

"அப்படியென்றால்?

"இல்லை, நீங்கள் பேசும்போது எனக்கு நம்பிக்கை வந்தது. ஒருவேளை பெரிய அண்ணனோ அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரோ உங்கள் கருத்துக்கு மாறாக..."

“அப்படியெல்லாம் பயப்படாதே. அவர்கள் மனத்தில் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அண்ணன் என்னைவிட ஐந்து வயது பெரியவர். ஆனால் சிறுவயது முதல் நாங்கள் இருவரும் ஒன்றாகவே வளர்ந்தோம். அதேபோல அரசரை சிறு குழந்தையாக இருந்ததிலிருந்து நான் தூக்கி விளையாட்டுக் காண்பித்திருக்கிறேன். அன்றைக்குக் குழந்தையாக இருந்தபோது என்னைப் பார்த்து எப்படி வாஞ்சசையாக வருவாரோ அதே வாஞ்சையோடுதான் இன்றும் என்னைப் பார்க்கிறார். அவர் எங்கள் வீட்டில் திருமணம் செய்ததுகூடப் பெரிதில்லை. சிறுவனாக இருக்கும் போது எங்களை ‘அம்மான்’ என்று அழைத்ததைப் போலவே இப்போதும் அதே அன்போடு அழைப்பார்.”

“நீங்கள் அவரை எப்படி அழைப்பீர்கள்?”

“ராணி வெள்ளச்சி உயிரோடு இருக்கும்வரை அவரை ‘மாப்பிள்ளை’ என்ற அழைப்போம். வெள்ளச்சி இறந்தபின் அவர் அரசராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து ‘அரசர்” என்போம். ஆனால் அவர் எப்போதும் எங்களை ‘அம்மான்’ என்றுதான் அழைப்பார். எந்தச் சூழலும் அவரை மாத்தாது” என்றார்.

என்ன நினைத்தாரோ, சின்னப் பாண்டியரின் கண்களில் கண்ணீர். அதை மறைத்துக் கொண்டு மேல் துண்டில் முகத்தைத் துடைத்தார். “ஓய்வெடு மயிலப்பா, நான் பேசிவிட்டு, உனக்குச் செய்தி சொல்லி ஆள் அனுப்புகிறேன்” என்று சொல்லிவிட்டு, பெரிய மருதுவைப் பார்க்கச் சென்றார்.

சின்ன மருது, பெரிய மருதுவின் மாளிகைக்குள் சென்றார். பெரிய மருதுவோடு அரசரும் இருந்தார். அரசரைப் பார்த்ததும் சின்ன மருது வணங்கினார். அரசர் எழுந்து நின்று “வாங்க அம்மான்” என்றார். பெரிய மருதுவின் கால்களைத் தொட்டு சின்ன மருது வணங்கி, நேரடியாகப் பேச்சை ஆரம்பித்தார். சேதுபதியின் தூதனாக மயிலப்பன் வந்து காத்திருப்பது, அவர்களது வேண்டுதல், எதிர்பார்ப்பு, எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார்.

“நீ என்னப்பா நினைக்கிறாய்?” என்றார் பெரிய மருது.

“இது நமக்கொரு நல்ல வாய்ப்பு. வடக்கே மராத்தியம், பூனா வரையில் நம்மால் நட்புக்கரம் நீட்ட முடிகிறது. தெற்கே நாங்குனேரி வரை நம் கருத்தை ஏற்றுக்கொள்ள வைக்க முடிகிறது. நமக்கு அடுத்த

எல்லையில் உள்ள ராமநாதபுரத்துடன் மோதல் போக்கு எப்படி வந்தது என்ற பலமுறை யோசித்துப் பார்த்திருக்கிறேன். தொண்டைமானிடமும், தஞ்சை சரபோஜியிடமும், எட்டயபுரம் பாளையக்காரரிடமும்கூட நட்புக்கரம் கேட்டுப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் சிவத்தையா கடிதம் எழுதியிருக்கிறார். அதேபோல நாம் ராமநாதபுரத்தை நம் நட்பு வளையத்திற்குள் கொண்டு வந்தால் நம் படை பலப்படும். சிவகங்கை அரசர் நம் குடும்பத்தில் திருமணம் செய்துள்ளார். உள் பிரிவுகளுக்குள் திருமணம் என்பது அங்கீகரிக்கப்பட்டது என்றாலும் சில மறவர் கிராமங்களில் இது குறித்து அதிருப்தியிருக்கலாம் என்று நமக்குத் தெரியும். ராமநாதபுரம் சேதுபதி நியமிக்கும் புதிய சேதுபதியோடும், அவரது தீவிர ஆதரவாளரான மயிலப்பனோடும் நாம் கூட்டுச் சேருவது மறவர் குலமக்களை நம்மை நோக்கி இழுக்கும். நமக்கும் நன்மைதரும். சேதுபதிக்கும் அவரது பக்கம் பலப்படும்" என்றார்.

"அம்மான், புதிய சேதுபதி முத்துக்கருப்பத் தேவர் உங்களுக்கு உறவினரா?" என்றார் அரசன் வெங்கம் பெரிய உடையணத் தேவர். சின்ன பாண்டியர் அண்ணனைப் பார்த்தார். அண்ணனே சொல்லட்டும் என்று அமைதி காத்தார்.

"ஆம் அரசே, முத்துக்கருப்பத் தேவன் எங்கள் உறவினன்தான். நல்ல வீரன். சேதுபதியின் பணியில் தீவிரமாக இருப்பவன். திருமணம்கூடச் செய்துகொள்ளவில்லை" என்றார்.

"அரசர் திரு முன்பு மயிலப்பன் வர விரும்புகிறான். தாங்களே தங்கள் வாயால் சேதுபதியின் சீமையோடு சேர்ந்து செயலாற்றுவோம் என்று அறிவித்தால் அவன் மகிழ்வுடன் படை சேர்ப்பான். படை நடத்துவான்" என்றார் சின்ன மருது.

"சரி" என்றார் அரசர்.

மயிலப்பனுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. மயிலப்பன் சிறிது நேரத்தில் அங்கு வந்தான். இப்போதுதான் முதன்முறையாக அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரை மயிலப்பன் பார்க்கிறான். சிவகங்கை அரசருக்கு சேதுபதி வயதுதான் இருக்கும். சிரித்த முகமும், தலை நிறைய முடியுமாக இருந்தார். நிறமும் சராசரி சிவகங்கை மனிதர்களின் நிறத்தைவிடக் கூடுதல் நிறமுமாக இருந்தார். காதுகளில் வைரக் கடுக்கண் போட்டிருந்தார்.

“வாருங்கள் மயிலப்பன், நீங்கள் ராமநாதபுரம் சீமையின் மிகச் சிறந்த வீரர் என்று அறிவேன். நீங்களும் பெரியவர் முத்துக்கருப்பத் தேவரும் என் அன்பிற்குரிய ராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதிக்கு விசுவாசத்துடன் இருப்பதையும் அறிவேன். உங்கள் கோரிக்கைப் பற்றி என்னிடமும் பெரிய அம்மானிடமும் சின்ன அம்மான் ஆலோசித்தார். நாங்கள் சில விசயங்களை மறக்க நினைக்கிறோம். உங்களுக்கு நான் எதைக் குறிக்கிறேன் என்று தெரியும். ராமநாதபுரத்துடன் நாங்கள் நடத்தியப் போரில் தனது இரு சகோதரர்களை இழந்ததை நினைத்து தினந்தோறும் எனது மனைவி ராணி மருதாத்தாள் கண்ணீர் விடுகிறாள்.

ஒருவிதத்தில் நானும் சேதுபதிபோல வாழ்ந்திருக்க வேண்டியவன்தான். என்னுடைய நல்ல நேரம் எனக்குப் பெரிய அம்மானும், சின்ன அம்மானும் அமைந்தது. ஒருவேளை இன்று சேதுபதிக்கு விசுவாசமானவராகத் தெரிந்துள்ள முத்துக்கருப்பத் தேவர் சேதுபதிக்குப் பத்து வருடங்களுக்கு முன்பே அறிமுக மாயிருந்தால் இன்று ஏற்பட்ட அவலநிலை ஏற்பட்டிருக்காது. தேவையில்லாத பழைய விஷயங்களைப் பேசிப் பயனில்லை. எனது மனைவி ராணி மருதாயியை சமாளிக்கும் பொறுப்பை சின்ன அம்மானிடம் விட்டுவிடுகிறேன்” என்று சொல்லி நிறுத்திய வெங்கம் பெரிய உடையணத் தேவர், “சிறையில் சேதுபதி எப்படியிருக்கிறார்?” என்றார். மயிலப்பன் சேதுபதியை சந்தித்த சூழல்களை விளக்கினான். அனைத்தையும் கேட்டுக் கொண்ட வெங்கம் பெரிய உடையணத் தேவர் “சரி மயிலப்பன், நீங்கள் உங்கள் வசதிப்படி கமுதியிலோ, அபிராமத்திலோ கலகத்தை ஆரம்பியுங்கள். எங்களது உதவி உங்களுக்கு உண்டு. சின்ன அம்மானிடம் தொடர்பில் இருங்கள்” என்றார்.

“அரசே ஒரு சந்தேகம் எனக்கு வருகிறது. அருள்கூர்ந்து தீர்த்து வையுங்கள்” என்றான் மயிலப்பன்.

“சொல்லுங்கள்” என்றார் அரசர்.

“அரசே, இதுவரை வெள்ளைக்காரர்களிடம் நீங்கள் நடுநிலையாளர் என்ற பெயர் வாங்கியதாக...”

“இல்லையில்லை. நாங்கள் நடுநிலையாளர் என்று அவர்களும் நம்ப மாட்டார்கள். அவர்கள் எங்களைச் சகாக்களாக எண்ணுகிறார்கள்

என்று நாங்களும் நம்பமாட்டோம். சரியான காலத்திற்காக இருவருமே காத்திருக்கிறோம் என்பதை நாங்கள் இருவருமே நன்கறிவோம்."

"அதனால்தான் அரசே கேட்கிறேன். உங்களை நடுநிலையாளர் என்று ஒப்புக்குச் சொன்னாலும் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கம்பெனியார் உங்களை நிச்சயம் ஈடுபடுத்த மாட்டார்கள். பாஞ்சாலங்குறிச்சிப் போர் இன்னும் ஆரம்பிக்கவில்லை. அவர்களுக்கு மிகவும் நம்பிக்கையான தொண்டைமானின் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய்விட்டன. இந்தச் சமயத்தில் உங்கள் படை சிவகங்கையிலேயேதான் இருக்கிறது. அதனால் என்னை அடக்க உங்கள் படையை அனுப்பச் சொன்னால்..."

"நல்ல கேள்வி கேட்டாய் மயிலப்பா. அறிவாளி நீ. ஒரு தளபதி என்பவன் இப்படித்தான் இருக்க வேண்டும். பெரிய மருது எங்களிடம் பெரிய அளவில் நிலையான படை இல்லையென்று வெள்ளைக்காரர்களுக்கு நன்றாகத் தெரியும். நமது படைவீரர்கள் முழுநேர வீரர்கள் அல்ல. அவர்கள் போர் நடக்கையில் மட்டும்தான் படைவீரர்கள். மற்ற நேரங்களில் விவசாயிகள், தொழிலாளிகள், நெசவாளர்கள். போருக்கு ஆள் வேண்டும் என்று சொன்னவுடன் கிடைக்கும் ஆயுதத்தை ஏந்தி வந்துவிடுவார்கள். இருந்தாலும் நாற்பதினாயிரம் வீரர்கள் கொண்ட படையை இரு நாட்களில் எங்களால் உருவாக்க முடியும் என்று வெள்ளைக்காரர்களுக்குத் தெரியும். அதனால் எங்களிடம் உன்னை அடக்க ஆங்கிலேயர் உதவி கேட்பார்கள். "இப்போது கோடை உழவுக் காலம். ஆட்களை பெரும் அளவில் திரட்ட முடியாது" என்ற சாக்குப் போக்குச் சொல்லி சிறு படையை உனக்கு எதிராக அனுப்புகிறோம். பெரிய அம்மானோ, சின்ன அம்மானோ, நானோ உன்னை அடக்க வரும் படைக்குத் தலைமை ஏற்க மாட்டோம். அப்படி வரும் படையிடம் நீங்கள் சரணடைந்து விடுங்கள். சூழ்நிலையை அனுசரித்து பின்பு முடிவெடுப்போம்."

"அதையும் விளக்கமாகச் சொல்லிவிடுங்கள் அரசே" என்றார் மயிலப்பன். அரசர் சிறிது நேரம் யோசித்தார். "பிரான்மலை ஈசுவரன் ஆசியில் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயர் தோற்றுவிட்டால் உங்களை விடுதலை செய்து, ராமநாதபுரத்திற்குச் சகல மரியாதையுடன் அனுப்பி வைக்கிறோம்."

"அரசே, நான் கேட்கக் கூடாது. இருந்தாலும் எனக்கு மேல் முத்துக்கருப்பத் தேவர் இருக்கிறார். அவர் கேட்டால் நான் பதில் சொல்ல

வேண்டும். ஒரு வேளை பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஊமைத்துரை தோற்றுவிட்டால்?" பெரிய மருது சிறிது யோசனைக்குப்பின் அரசனைப் பார்த்தார். அரசன் வெங்கம் பெரிய உடையணத் தேவரின் முகத்திலிருந்த சிரிப்பு மறையவில்லை. "அப்படி ஒரு சூழல் வந்தால் கம்பெனிப் படையினர் நேராக இங்குதான் வருவார்கள். எங்களோடு மோதுவார்கள். அப்படி நிகழ்ந்தால், உடனடியாக உங்களை விடுதலை செய்து விடுவோம். நீங்கள் விரும்பினால் எங்களோடு சேர்ந்து போராடலாம்."

"என்ன அரசே, இதில் எங்கள் விருப்பம் எங்கே வருகிறது?"

"இல்லை மயிலப்பா. நாங்கள் உங்களைச் சிறைப்படுத்தினால் நீங்கள் எங்கள் விருந்தினராக இருப்பீர்கள். விருந்தினரைப் போருக்கு அழைத்துச் செல்வது முறையன்று."

மயிலப்பனுக்கு அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர்மீது மரியாதை கூடியது. "சொல்லுங்கள் அரசே, நாங்கள் விரும்பினால் அழைத்துச் செல்வீர்கள்தானே? நாம் எதிர்பாராதது நடந்தால்? நாங்களும் உங்களோடு வருகிறோம்."

"சரி, அப்போது ஏற்படும் சூழலுக்கு ஏற்றவாறு நடந்து கொள்வோம்" என்றார் அரசர்.

"எழுத்து மூலமாக உடன்படிக்கை செய்து கொள்ளலாமா அரசே? எங்களது புதுச் சேதுபதியிடம் நான் சொல்ல வேண்டும்."

"மயிலப்பன், உங்கள் புதுச் சேதுபதிக்கு வரும் எல்லாச் சந்தேகங்களையும் ஒரே நாளில் தீர்த்து வைக்க முயல்கிறீர்கள் என்று கருதுகிறேன். நாம் ஒன்று நினைக்கிறோம். காளையார்கோயில் இறைவன் என்ன நினைக்கிறாரோ? அவர்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்" என்றார் அரசர்.

காளையார்கோயில் இறைவன் என்று அரசர் சொன்னது வாய் தவறித்தான். அவர் குன்றக்குடி தெய்வத்தைத்தான் சொல்ல நினைத்தார். ஆனால் வாய் தவறிச் சொன்னபடி இந்தப் பேச்சு வார்த்தையில் சம்பந்தப்பட்டுள்ள சிவகங்கை அரசர், பெரிய மருது, சின்ன மருது, ராமநாதபுரம் புதிய சேதுபதி முத்துக்கருப்பத் தேவர், மயிலப்பன் என்று அனைவரும் காளையர்கோயில் காடுகளில் ஒளிந்து கொண்டு, நாற்பது

நாட்கள் பெரும் போர் நடத்தப் போகிறார்கள் என்பதை அப்போது யாரும் அறியவில்லை.

•

32

ஊமைத்துரை சிறையிலிருந்து தப்பித்ததுமுதல் ஆங்கிலேயப் படை வன்மம் கொண்டு அலைந்தது. கலெக்டர் முதல் சாதாரணச் சிப்பாய்வரை, பாஞ்சாலங்குறிச்சிக்காரர்கள், தங்களுக்குவிட்ட சவாலாகச் சிறை உடைப்பை நினைத்தனர். இந்தச் சிறு வெற்றியை வளரவிட்டால், கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரம் நிலைகுலைய ஆரம்பித்துவிடும் என்று கவர்னர் கிளைவும், மேஜர் மெக்காலேவும் தீவிரமாக நம்ப ஆரம்பித்தனர். ஒரு மாதத்தில் மேஜர் மெக்காலே பேயாட்டம் நடத்திக் கொண்டிருந்தான். போராளி களுக்கு உதவுபவர்கள் எனச் சந்தேகப்படுவர்களை எல்லாம் தூக்கில் இட்டான். சில போராளித் தலைவர்களின் குடும்பத்தினரைச் சிறையில் அடைத்து வைத்து அச்சுறுத்தினான். போராளிகளுக்கு உதவ நினைக்கும் கிராமத்

தலைவர்களை அழைத்துக் கடுமையாக எச்சரித்தும் இருக்கிறான். ஆனாலும், பாளையங்கோட்டை சிறை உடைப்பு, ஒரு சிறைச்சாலையில் நடந்த சிறு அசம்பாவிதமாக ஒருபோதும் இருக்கப்போவது இல்லை என்றும், எல்லாப் பாளையங்களுக்கும் புற்றுப்போல் பரவும் என்பதும் தெரிந்து விட்டது. அவர்களின் இந்த நம்பிக்கைக்கு, திருநெல்வேலிச் சீமை முழுக்கத் தினம் தினம் நடந்த கலகங்கள் ஆதாரங்களாக இருந்தன.

ஊமைத்துரை சிறையிலிருந்து தப்பித்த முப்பத்து ஆறாவது நாள் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கமுதிக் கோட்டையை பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் தாக்கினர். இந்தத் தாக்குதலில் பாஞ்சாலங்குறிச்சி விடுதலை வீரர்களோடு, ராமநாதபுரம் மயிலப்பனும் சேர்ந்து கொண்டான். எதிர்பாராத இந்தத் தாக்குதலில், நிலை குலைந்த கோட்டைத் தளபதி மில்லர் பக்கத்தில் இருந்த அபிராமம் கிராமத்திற்கு ஓடி, அங்கிருந்து தனக்கு வேண்டியவர்களை அழைத்து வந்தான். உள்ளூர் ஆட்களே, ஆங்கிலேயத் தளபதியுடன் சேர்ந்து, பாஞ்சாலங்குறிச்சி வீரர்களுக்கு எதிராகப் போராட முன்வந்தனர். கோட்டையில் இருந்த ஆங்கிலேயப் படைவீரர்களை மட்டும் கணக்கில் கொண்டு தாக்குதல் நடத்த வந்த விடுதலை வீரர்கள், பெருமளவில் திரண்டுவந்த அபிராமம் கிராம மக்களைப் பார்த்துத் திகைத்தனர். அபிராமம் கிராம மக்களும், ஆங்கிலேயப் படையினரும் சேர்ந்து விடுதலை வீரர்களைத் தாக்கினர். பெரும் சேதம் உண்டானதையடுத்து, விடுதலை வீரர்கள் கோட்டையை விட்டு வெளியேறிச் சோழக்கிராமம், வீரவாணி, செங்கல்பாடி, பரத்தை வயல் வழியாகக் காட்டுக்குள் புகுந்தனர். விடுதலை வீரர்களைத் தோல்வியடையச் செய்து, கோட்டையில் இருந்து விரட்டினாலும், வீரர்களின் தோல்விதான் பாளையம் முழுக்கப் பேச்சாக இருந்தது.

ஒவ்வொரு பகுதியாகச் சென்று, படைவீரர்களைத் திரட்டத் தொடங்கினான் மேஜர் மெக்காலே. அத்துடன் மக்களிடையே விடுதலை வீரர்கள்மேல் அனுதாபமும், அன்பும் உருவாகி இருக்கிறதா என்றும் நோட்டம்விடத் தொடங்கினான். அந்தப் பயணத்தில் ஒருநாள், பாளையங்கோட்டையிலிருந்து கிளம்பிய மேஜர் காலின் மெக்காலே கடையநல்லூர் வந்து சேர்ந்தான். தனக்குச் சாதகமாக உள்ள பாளையக்காரர்களையும், திருவிதாங்கூர், புதுக்கோட்டை, எட்டயபுரம் படைகளையும் கடையநல்லூருக்கு வரவழைத்திருந்தான். திருவிதாங்கூர் அரசின் அமைச்சர் வேலுத்தம்பியிடம் மேஜர் மெக்காலேயின் கடிதம்

கொடுக்கப்பட்டவுடனேயே திருவிதாங்கூர் படைகள் கடையநல்லூர் வந்து சேர்ந்தன.

திரண்டிருந்த பெரும் படைவீரர்கள் மத்தியில் மேஜர் மெக்காலே நின்று கொண்டிருந்தான். அவன் மனத்தில் பெரும் நம்பிக்கை வந்தது. கம்பெனி நினைத்தால், எவ்வளவு படைகளை வேண்டுமானாலும் திரட்ட முடியும், அதுவும் நேட்டிவ் வீரர்களையே திரட்ட முடியும் என உள்ளூர மகிழ்ந்தான். மாலை நான்கு மணி அளவில் மேஜர் மெக்காலே தனது படைகளை ஒழுங்குப்படுத்தினான். வீரர்கள் அனைவரையும் ஓரிடத்தில் திரட்டி, அவர்களிடையே பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் தற்போதைய நிலை குறித்துப் பேசினான். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை எந்தெந்தத் திசைகளில் யார் யாருடைய படைகள் தாக்க வேண்டும் என்று அறிவுறுத்திக் கொண்டிருந்தான்.

வீரர்கள் தங்களிடமிருந்த எல்லாப் பொருட்களையும், ஆயுதங்களையும், ஓரிடத்தில் வைத்துவிட்டு அதைச் சுற்றி உட்கார்ந்தபடி, மேஜர் மெக்காலேயின் அறிவுரைகளைக் கேட்டபடி இருந்தனர். திடீரென வெடிச்சத்தம் கேட்டது. கண் இமைக்கும் நேரத்தில், கொஞ்சமும் எதிர்பார்க்காத தருணத்தில், நான்கு திசைகளில் இருந்தும் ஆங்கிலேயப் படை தாக்கப்பட்டது. அந்நேரத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலினால், வீரர்கள் நிலைகுலைந்து போயினர். அப்பொழுது லேசாக மழையும் பெய்ய ஆரம்பித்ததில் வீரர்கள் தடுமாறினர். அடுத்து என்ன என மேஜரால் வழிநடத்தப்படாத படை, திணறிப்போனது. வீரர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடாரத்தின் மூலைகளுக்கு ஓடி ஒண்டிக் கொண்டனர். இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தனர். இரவு முழுவதும் பீதியில் கழித்தனர். தன் கண்ணெதிரில் நடந்த தாக்குதலால் மேஜர் மெக்காலேவும் நிலைகுலைந்து போனான். கடையநல்லூரில் ஆங்கிலேயப் படை சந்தித்த இந்தத் தாக்குதல் பாளையங்களில் செய்தியாகப் பரவியது.

மெக்காலேவின் கண்முன்னால் நின்று மிரட்டிக் கொண்டே இருந்தது, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைதான். ஒன்றே கால் வருடத்திற்கு மூன்பு வீரபாண்டிய கட்டபொம்மனோடு நடந்த போரின்போது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை மேஜர் மெக்காலே பார்த்திருக்கிறான். அந்தப் போரில் கோட்டை தரைமட்டமாகியிருந்தது. சிறையில் இருந்து தப்பித்து, பாஞ்சாலங்குறிச்சி வந்த மூன்றே நாட்களில், ஊமைத்துரையும் அவன் சகோதரனும், மண்ணோடு மண்ணாகத் தரைமட்டமாகி இருந்த

கோட்டையை, பழையபடி எழுப்பிவிட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டு, மெக்காலே அதிர்ந்து போனான். ஆங்காங்கே நடக்கும் எழுச்சியை அடக்குவதற்காகப் பயணப்படுவதைவிட, கோட்டையை தரைமட்டமாக்குவது அவசியம் என்ற கோபம் அவனுக்குள் கனன்று கொண்டிருந்தது.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிய மேஜர் மெக்காலே, அவனே வெடிக்கும் குண்டொன்றாக மாறத் தொடங்கி இருந்தான். மூன்று நாட்களில் எழுப்பட்டிருக்கிற மண் கோட்டையை ஒரு நாளில் தகர்த்துவிட வேண்டும் என்ற வேகத்தில் படைதிரட்டிக் கொண்டு பாஞ்சாலங்குறிச்சிச் சென்றான். படைவீரர்களைவிட வெறும் பீரங்கிகள் போதும் என நம்பி, பாஞ்சாலங்குறிச்சிப் புறப்பட்டான் மெக்காலே.

பாஞ்சாலங்குறிச்சிக்கு மேஜர் மெக்காலே படையுடன் வந்து சேர்ந்தான். கோட்டை பழைய பொலிவுடன் நின்றதைப் பார்த்த மேஜர் மலைத்தான். மலைப்பு குரோதமாக மாற, கோட்டையைத் தாக்க ஆணைப் பிறப்பித்தான். அவனுடைய படை வீரர்கள் தாக்குதலைத் தொடங்கும் முன்பே, கோட்டைக்குள் இருந்து தாக்குதல் தொடங்கிவிட்டது. சிவகங்கையிலிருந்து மருது பாண்டியர்கள் அனுப்பிய இருபதாயிரம் மறவர்களும் ஊமைத்துரையின் கட்டுப்பாட்டில் இருந்த விடுதலை வீரர்களும், கோட்டைக்குள் இருந்து தாக்குதலைத் தொடங்கினர். மெக்காலே, தாக்குதல் தொடங்கும் முன்னே கோட்டைக்குள்ளிருந்து வந்த பலமான எதிர் தாக்குதலில் நிலைகுலைந்தான். ஆங்கிலேயப் படை பின் வாங்கியது. வேறு வழியின்றி படையை பாளையங்கோட்டைக்குத் திருப்பிச் செல்ல மேஜர் மெக்காலே ஆணையிட்டான்.

கோட்டையின் பாதுகாப்பில்தான் ஊமைத்துரையின் ஆட்கள் உள்ளிருந்து கொண்டு போராட்டத்தை நடத்துகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட மெக்காலே, பாஞ்சாலங்குறிச்சிக்கு மீண்டும் படையெடுத்து வரும்போது, படைவீரர்களைவிட, பீரங்கிகளின் எண்ணிக்கையைக் கூட்டினான். கோட்டையைச் சிதிலமாக்கினால், ஊமைத்துரையின் படையும் சிதறிப்போகும் என மெக்காலே கணக்குப் போட்டான்.

மிகத் துல்லியமான திட்டமிடலோடு வந்திருக்கும் மெக்காலே பீரங்கிகளை முன்னிறுத்தி, கோட்டையைத் தாக்கச் சொன்னான். பீரங்கிகள் அடுத்தடுத்து குண்டுகளைப் பொழியத் தொடங்கின. பீரங்கியில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு குண்டும், கோட்டையின் சுவரில் பட்டன.

குண்டுகள் பாய்ந்த வண்ணம் இருந்தாலும், கோட்டையின் சுவரில் சிறுகீறலைக் கூட ஏற்படுத்தவில்லை. பஞ்சுப் பொதிக்குள் பொதிந்து போகும் கற்குண்டுகள்போல் உள்ளே சென்று பொதிந்து போயின. குண்டுகள் தீரும்வரை தாக்கியும், கோட்டையின் சுவரில் சிறுகீறல்கூட விழவில்லை.

மெக்காலே மிரண்டுபோய் நின்றான். குண்டுகள் ஏன் கோட்டையின் சுவர்களைச் சிதைத்துத் தள்ளவில்லை? பீரங்கிகளை இயக்குபவர்களிடம் கேட்டான். அவர்களுக்கு, பீரங்கிக்குள் குண்டைத் திணிக்கவும், இலக்கை நோக்கிச் சுடுவதற்கும் மட்டும்தான் தெரிந்திருந்தது. குண்டு ஏன் கோட்டைச் சுவற்றைத் தகர்க்கவில்லை என்று பதில் சொல்லத் தெரியவில்லை. படைக்கு முன்பு நின்று கம்பெனியின் கொடியைப் பிடித்துக்கொண்டிருக்கும் என்சைன் என்ற பதவியிலுள்ளவனை அழைத்து "நம் பீரங்கிக் குண்டுகளுக்கு என்ன ஆயிற்று?" என்று மேஜர் கேட்ட போது, அவனும் "எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது மேஜர். கல் கோட்டைகளையே இந்த பீரங்கிக் குண்டுகள் கலகலக்க வைத்துள்ளன. வெறும் மண் கோட்டையிது. தாக்குகிற குண்டுகள் எல்லாம் சுவருக்குள் போகின்றன, ஆனால், வெடிக்கவில்லை. என்ன நடக்கிறது இங்கு என்றே எனக்கும் புரியவில்லை" என்றான்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தொடர்ந்து முற்றுகையிட்டதில் எந்த முன்னேற்றமும் கிடைக்கவில்லை. கவர்னர் எட்வர்டு கிளைவ் மேஜர் மெக்காலே மீதான நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தார். மேஜர் மெக்காலேவுக்கு நெருக்கடிகள் அதிகமாயின. மேஜர் மெக்காலே சரியாகப் போர் நடத்தவில்லை என்று கலெக்டர் லூஷிங்டன் கவர்னர் எட்வர்ட் கிளைவிற்குக் கடிதம் எழுதினான். மேஜர் மெக்காலேவுக்கு தன் பதவிப் போகிறதோ இல்லையோ, தான் சாதாரண ஒரு மண் கோட்டையிடம் தோற்றுப் போய் நிற்கிறோமே என்று அவமானமாக இருந்தது.

கவர்னர் எட்வர்ட் கிளைவ் புதியதாக ஒரு ராணுவ அதிகாரியை நியமித்தான். லெப்டினென்ட் கர்னல் பாட்ரிக் அலெக்ஸாண்டர் அக்னியூ. அக்னியூ சூழ்ச்சியும், நெளிவும் சுளிவும் உள்ள ராணுவ அதிகாரி. கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லிக்கு நெருக்கமான ஜெனரல் ஹாரிஸின் உதவியாளன். ஜெனரலிடம் மிலிட்டரி அட்டாச்சியாக இருந்தவன். யாரையும் பேசியே வழிக்குக் கொண்டு வந்து விடுவான். பயந்தவர்களை

மிரட்டியும் ஏமாந்தவர்களுக்கு உதவிகள் செய்தும் ஆட்களைத் தன் வயப்படுத்துவான். யுத்தமில்லாத காலங்களில் இவன் பகல் நேரங்களில் வீட்டைவிட்டு வெளியே வரமாட்டான். அமைதிக் காலங்களில் இரவு நேரங்களில் வேட்டையாடுதல், உல்லாசமாக இருத்தல், மது அருந்துதல் என்று கேளிக்கை வாழ்க்கை வாழ்பவன். போர் என்று வந்துவிட்டால் அந்த அக்னியூவா இப்படியிருக்கிறான் என்று நினைக்கும்படி நடந்து கொள்வான். போர்க்காலங்களில் இரவிலும்கூடத் தூங்குவதே இல்லை. தனது துணைத் தளபதிகளுக்குப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு அவர்கள் சரியாகப் போரிடுகிறார்களா என்று பார்க்க அரிக்காரர்கள் எனும் வேவு பார்ப்பவர்களை அனுப்புவான். ஊமைத்துரையுடன் இப்போது யுத்தம் நடத்தப்போகும் அக்னியூ இன்னும் மூன்று மாதங்களில் மருது பாண்டியர்களோடும் மோதப் போகிறான். பாஞ்சாலங்குறிச்சிக்கு வரப்போகும் பாட்ரிக் அக்னியூவின் முன்னிலையில் எத்தனை மாவீரர்கள் தூக்கிலேற்றப்படப் போகிறார்களோ?

பாட்ரிக் அக்னியூ பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து சேர்ந்ததும் மேஜர் காலின் மெக்காலேவிடமிருந்து போரின் தலைமைப் பொறுப்பை ஏற்றான். மெக்காலே தலைமைப் பொறுப்பில் இருக்கும்போது வராத வெளியூர் ஆங்கிலேயப் படைகள் அக்னியூ போர்த் தலைமையேற்ற மறுநாளே பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து சேர்ந்தன. கவர்னர் எட்வர்ட் கிளைவின் ஆணைப்படி மெட்ராஸ் புனித ஜார்ஜ் கோட்டை, பரங்கிமலை, ஆற்காடு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, திருவிதாங்கூரிலிருந்தும் படைகள் பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்து சேர்ந்தன. அக்னியூவுக்குக் காலம் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது. லெப்டினென்ட் கர்னல் ஸ்பிரே, கேப்டன் சிங்க்லெர், கேப்டன் டவுன் சென்ட், கேப்டன் டௌட்டன் தலைமையில் தனித்தனிக் குழுக்களை லெப்டினென்ட் கர்னல் அக்னியூ ஏற்படுத்தினான்.

தென்னகத்தில் முதன்முறையாக போரிடப் போகும் மலேசியா வீரர்கள் கேப்டன் வைட்லி தலைமையில் வந்திருந்தனர். இன்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜேம்ஸ் வெல்ஷை லெப்டினென்ட் கர்னல் அக்னியூ அழைத்து கோட்டைச் சுவர்களில் ஏன் பீரங்கிக் குண்டுகள் செயலற்றுப் போகின்றன என ஆராயுமாறு உத்தரவிட்டான். மற்றொரு பீரங்கிப் படைத்தலைவனை லெப்டி னென்ட் கர்னல் அக்னியூ அழைத்தான். ஏன் நமது பீரங்கிக் குண்டுகள் கோட்டைச் சுவரைத் தகர்க்காமல் செயலற்றுப் போகின்றன என்று நேரடியாகவும் விசாரித்தான்.

“லெப்டினென்ட், என்ன ஆயிற்று உங்கள் பீரங்கிகளுக்கு? ஏன் கோட்டைச் சுவரை உடைக்கவில்லை? அது வெறும் மண்கோட்டை தானே? மராத்திய அரசன் ஹோல்கரின் சண்டையில் பயன்படுத்திய பீரங்கியைத்தானே பயன்படுத்துகிறீர்கள்? உங்கள் பீரங்கிகள் ஏன் இப்படி உங்களைப் போலவே கையாலாகாமல் இருக்கின்றன?” என்று கர்னல் அக்னியூ கத்தினான்.

“கர்னல், நாம் எப்பொழுதும் போரில் பயன்படுத்தும் பீரங்கியைத்தான் பயன்படுத்துகிறேன். இருந்தும், இந்தப் பீரங்கிகள் ஏன் செயலிழந்து போயின என எனக்குப் புரியவில்லை.”

“எத்தனை டிகிரி கோணத்தில் பீரங்கியை வைத்துச் சுடுகிறீர்கள்?”

“நான் 45 டிகிரியில்தான் சுடுகிறேன். எப்பொழுதுமே அந்தக் கோணத்தில் வைத்துதான் தாக்குதலை நடத்துவோம்.”

“யெஸ், குண்டுகள் அதிக தூரம் செல்லுவதற்கு 45 டிகிரியில் தான் சுட வேண்டும். ஆனால், கோட்டை சுவற்றைப் பலமாகத் தாக்க, குண்டுகள் அதிக தூரத்திற்கும் செல்ல வேண்டும், அதே சமயத்தில் வலுவாகவும் தாக்க வேண்டும். நீங்கள் பயன்படுத்திய பீரங்கிக் குண்டுகளில்தான் தவறு உள்ளது. பவன்பூர் அஜிதாபிரசாத் தயாரித்த பீரங்கிகளை இதுபோன்று தூரத்திலிருந்து தாக்கும் யுத்தங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. லெப்டினென்ட் டபிள்யூ எப்.கின்மேன், லண்டனிலிருந்து வந்த ரிவய்யர் 121, பீரங்கிகளைக் கொண்டு வந்து நிறுத்து.”

“கர்னல், எனக்கு ஒருநாள் அவகாசம் தாருங்கள். டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் இரு வி.ஓ.சி. பீரங்கிகளை நாகலாபுரத்தில் நிறுத்தி வைத்துள்ளேன். ஒன்று பன்னிரண்டு பவுண்டர் பீரங்கி. மற்றது இருபது பவுண்டர் பீரங்கி.”

“ஊமைத்துரையிடம் உள்ள பீரங்கி எத்தனை பவுண்டர்?”

“கர்னல், அவனிடம் ஒரே ஒரு பீரங்கி மட்டுமே இருக்கிறது. அது ஆறு பவுண்டர் பீரங்கி. ஆனால் ஏனோ இதுவரை அவன் அதைப் பயன்படுத்தவில்லை.”

“கோட்டைக்குள்ளே தானே அவன் இருக்கிறான். அதனால் அந்தப் பீரங்கியை அவன் பயன் படுத்தமாட்டான். அவனுடைய பீரங்கி

ஆறு பவுண்டர் சக்தி உள்ளதுதானே?”

“யெஸ் கர்னல், ஹானரபிள் கம்பெனி ஆறு பவுண்டருக்குமேல் உள்ள பீரங்கிகளை உள்ளூர் அரசர்கள் பயன்படுத்தக் கூடாது எனத் தடை விதித்துள்ளது. அதனால் அவனிடம் நம்மிடம் இருப்பதுபோல பன்னிரண்டு, இருபது பவுண்டர் பீரங்கிகள் இல்லை. நமக்கு அவன் எந்த விதத்திலும் போட்டியில்லை. இப்பவே நாகலாபுரத்திற்கு தகவல் அனுப்புகிறேன் கர்னல்” என்றான்.

அடுத்த நாள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள்ளிருந்து வெளியே வேவு பார்க்க வந்திருந்த வீரன் ஒருவன் ஆங்கிலேயர்களிடம் பிடிபட்டான். அவன் கோட்டைச் சுவரைக் கட்டியவர்களில் ஒருவன் என்று அரிக்காரர்கள் பாட்ரிக் அக்னியூவிடம் சொல்லிவிட்டார்கள். அவனை விசாரித்தபோது அவன் வாய் திறக்கவில்லை. அவனைப் பேச வைத்தே ஆக வேண்டும் என அக்னியூ முடிவு செய்தான். அவன் அதே ஊரைச் சேர்ந்தவன் என்று தெரிந்து கொண்டு அவன் குடும்பத்தினரை அழைத்து வரச் செய்தான். குடும்பத்தினர் அழுது புலம்பினர். குடும்பத்தினர் முன்னிலையில் அவனை விசாரித்தனர். அவனுக்குத் தெரிந்ததைச் சொல்லி விடும்படி குடும்பத்தினர் அழுது வற்புறுத்தினர். குடும்பத்தினரிடம் விசாரணை என்ற பெயரில் சித்ரவதைகளை ஆரம்பித்தான். கர்னல் பாட்ரிக் அக்னியூவின் கெடுபிடியான விசாரணைத் தொடர்ந்தது. வேறு வழியற்ற பாஞ்சாலங்குறிச்சி வீரன் கோட்டையைக் கட்டிய விதம் பற்றிய உண்மைகளை விவரித்தான்.

வீரனிடமிருந்து தகவல்களைச் சேகரித்த பாட்ரிக் அக்னியூ, வீழ்ந்தது பாஞ்சாலங்குறிச்சி என்ற மகிழ்ச்சியில் கொக்கரித்தான். உடனே, தனது தளபதிகளை கூடாரத்திற்கு அழைத்தான்.

“இந்தக் கோட்டை, கல்கோட்டையைவிட உறுதியானது. கல்கோட்டையின் ஒரு கல்லை உருவினால், மொத்தக் கோட்டையையும் நம்மால் நிமிடத்தில் சரித்துவிட முடியும். இந்த மண்கோட்டையின் சுவர்கள், களிமண்ணோடு வைக்கோல், வரகு, சர்க்கரைப் பாகு சேர்த்துக் கட்டப்பட்டுள்ளன. அதனால்தான் பீரங்கிக் குண்டுகள் மண் சுவற்றுக்குள் புதைந்து விடுகின்றன. ஆண்டுக்கணக்காக நாம் பீரங்கி குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தாலும், இந்த மண் கோட்டையின் சுவரில் சிறு விரிசலைக்கூட நம்மால் உண்டாக்க முடியாது” என்றான்.

“அப்படியென்றால்...” என்பதுபோல் படைவீரர்கள் பெரிய கேள்விக் கணைகளோடு கர்னலைப் பார்த்தனர்.

“போரில், வெற்றி எந்த வழியில் கிடைக்கும் என்பது கடைசி வினாடிவரை தெரியாது. ஆனாலும் வென்றுவிடுவோம் என்ற நம்பிக்கையுடந்தான் ஒவ்வொரு வீரனும் கடைசிவரை போராட வேண்டும். இது வீரனின் போர் தர்மம். சிறந்த போர்த் தளபதி, எதிரிப் படையை நிலைகுலைய வைப்பதுடன், வெற்றி எங்கிருக்கிறது எனத் தேடிக் கொண்டே இருப்பான். வெற்றியோ, போர்க்களத்தின் ஏதோ ஒரு இடுக்கில் சிக்கிக்கொண்டு, மூச்சுத் திணறப் பார்த்துக் கொண்டிருக்கும், தன்னை யாராவது அடையாளங்கண்டு தன்னுடன் சேர்த்துக்கொள்ள மாட்டார்களா என்று. பல நாட்களாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் இந்தப் போரின் வெற்றி, இந்த மண் கோட்டையின் சிறு விரிசலில் சிக்கிக் கொண்டுள்ளது. அதை மீட்டுக்கொண்டு வந்து, ஹானரபிள் கம்பெனியின் வெற்றியை, விடியலில் அறிவியுங்கள் நண்பர்களே.”

கர்னலின் பேச்சு, வீரர்களின் கூட்டத்தை நெருப்பைப் போல் கவ்விக்கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட வெற்றிக்காக வெள்ளையர் படை அப்பொழுதே ஆர்ப்பரிக்கத் தொடங்கியது.

மறுநாள் நாகலாபுரத்திலிருந்து பீரங்கிகள் வந்தன. கோட்டைச் சுவர்கள் சேரும் இடங்களுக்கு பீரங்கிகள் இழுத்துச் செல்லப்பட்டன. கர்னல் அக்னியூ பீரங்கி வண்டிக்கு அருகில் நின்றான். முதல் இரு குண்டுகள் பழையபடியே மண்ணுக்குள் புதைந்தன. மூன்று, நான்கு, ஐந்து என குண்டுகள் தொடர்ந்து சுவர்கள் சேரும் இடத்தின்மீது விழுந்தபோது பத்தாவது சுற்றில் சுவரில் விரிசல் விழத் தொடங்கியது. கோட்டையின் சுவரில் விரிசல் தொடங்கிய கணத்தில் பெரும் மழையும் தொடங்கியது. கோடை மழை. சுழன்றடித்த பெரும்காற்றும் மழையும், ஊரை சூறையாடிக்கொண்டிருக்க, வெள்ளையர் படை கோட்டையை சூறையாடியது. கோட்டையின் விரிசலை அதிகமாக்கிய பீரங்கி குண்டுகள், கொஞ்சங்கொஞ்சமாகச் சுவர் விரிசலின் வழியாகத் தாக்குதலை அதிகமாக்கின. கோட்டையைத் தகர்த்து, வெள்ளையர் படை உள்ளே வரும் என்பதை எதிர்பார்க்காத, பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள், எதிர்த்தாக்குதலுக்குத் தயாரானார்கள். வேல் கம்புகளையும் சிறு சிறு ஆயுதங்களையும் கொண்டு போராடினர். மழையின் காரணமாக ஊமைத்துரையின் படைவீரர்களால் வேல் கம்புகளை எதிரிகள்மீது குறி பார்த்து எறிய முடியவில்லை. வடக்குப் பக்கத்திலிருந்த கோட்டைச் சுவர்

தகர்ந்து விழுந்தது. கோட்டைக்குள் பீதி ஏற்பட்டது. மக்கள் அலைபாயத் தொடங்கினர். ஊமைத்துரையின் வீரர்கள் நம்பிக்கையிழந்தனர். மலேசியா வீரர்கள் மூர்க்கத்துடன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் நுழைந்தனர்.

வெடிமருந்துப் புகை, திடீரெனப் பெய்த பெரும் கோடை மழை எல்லாம் சேர்ந்து ஊமைத்துரையின் வீரர்களைத் தடுமாற வைத்தன. போர்த் தளபதி என்று யாரும் வீரர்களை வழிநடத்தாதால், வீரர்கள் அவர்களுக்குத் தோன்றிய வகையில் இலக்கற்றுப் போராடி கண்முன்னாலேயே மாண்டு விழுந்தனர். ஊமைத்துரை அல்லாடினார். நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்தார். கோட்டைக்குள் புகைமண்டலம் சூழ்ந்தது. அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போதே ஊமைத்துரை மூர்ச்சை ஆனார். பெரும் கூச்சலும், அழுகையும், மரண ஓலமுமாக பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை சரியத் தொடங்கியது.

கோட்டைக்குள் இருந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும், வழி நடத்த தலைவர்கள் இல்லாமையாலும், திடீரென ஆங்கிலேயப் படை உள்ளே நுழைந்து தாக்குதலைத் தொடங்கி யதாலும், சிதறினர். தொடர்ச்சியாக பீரங்கிக் குண்டுகள் வெடித்ததால் உருவானப் புகைமண்டலத்தில் இலக்கற்றத் தாக்குதலை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது.

கோட்டைக்குள்ளிருந்து எதிர்த்தாக்குதல் நின்றுவிட்டது. மனிதர்களின் அபயக் குரல்களும், அழுகையொலியும் கேட்கத் தொடங்கியது. அக்னியூ தாக்குதலை நிறுத்தச் சொன்னான். நாற்பத்து இரண்டு நாட்கள் ஹானரபிள் கம்பெனிக்குச் சவால் விட்டுக்கொண்டு, கவர்னரையும் கலெக்டரையும் தூக்கமற்று அலைக்கழித்துக் கொண்டிருந்த கோட்டை, இப்பொழுது கண்முன்னால் சரிந்து விழுந்திருப்பதை நிதானமாகப் பார்த்தான். சிதைந்த சுவர்களுக்குள்ளிருந்து வைக்கோலும், வரகுப் புல்லும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. பெரிய தூக்கணாங்குருவிக்கூடு ஒன்று சிதைக்கப்பட்டு கிடப்பதைப்போல் கோட்டை சிதிலமாகிக் கிடப்பதைப் பார்த்தான். இடிபாடுகளுக்குள் சிக்கிய வீரர்கள் அரைகுறை உயிருடன் கதறிக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சிகள் கர்னலின் மனத்தில் களிப்பையே உண்டாக்கின.

கோட்டைக்குள் சென்று ஆங்கிலேயச் சிப்பாய்களிடம் ஊமைத்துரையையும் சிவத்தையாவையும் தேடச் சொன்னான். சிப்பாய்கள், இறந்து கிடக்கும் வீரர்கள் ஒவ்வொருவராகப் புரட்டிப்

பார்த்துக் கொண்டிருந்தனர். யுத்தம் நின்றுவிட்டதால் ஒரு படைவீரனின் தாய், தன் மகனைத் தேடிக்கொண்டு பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் வந்தாள். விழுந்து கிடக்கும் வீரர்கள் ஒவ்வொருவராகப் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்தவள், தன் மகனைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டாள். அவன் தலையைத் தூக்கி தன் மடியில் வைத்து அவனுக்கு நினைவு இருக்கிறதா என்று பார்க்க அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள். முதல் குரலிலேயே படைவீரன் கண் விழித்தான். தன் தாயின் குரலைக் கண்டுகொண்டான். தாயின் மடியிலிருந்து தலையைத் தூக்கி சுற்றிலும் பார்த்தான்.

தனக்கு அருகில் மயங்கிக் கிடக்கும் ஊமைத்துரையைப் பார்த்தான். அவன் உடலும் மனதும் பரபரத்தன. தன்னை யாராவது பார்க்கிறார்களா? என சுற்றியும் பார்த்தான். பின், தன் தாயிடம் மெதுவாகக் கூறினான். “ஆத்தா, எனக்கு ஒன்றுமில்லை. என்னைக் கைது செய்து கொஞ்ச நாளில் விட்டுவிடுவார்கள். உனக்கு அருகில் மூர்ச்சையாகிக் கிடப்பது நம்ம சாமி. அவரை ஏதாவது சொல்லித் தூக்கிட்டுப் போயிரு. அவரப் பார்த்தாங்கன்னா வெள்ளக்காரங்க விடமாட்டாங்க” என்றான். “சாமி?” என்றபடி பக்கத்தில் கிடந்த உருவத்தை அந்தத் தாய் பார்த்தாள். மெல்லிய உடம்பும் நடுத்தர உயரமும் சாதாரணத் தோற்றமும் கொண்ட அந்த அசாதாரணமான மனிதன் மயங்கிக் கிடந்தான்.

தன் மடிமேல் இருந்த மகனின் நெற்றியில் குனிந்து முத்தமிட்டாள் அந்தத் தாய். மகனின் கண்களை ஆழமாக ஊடுருவிப் பார்த்த தாயின் கண்களில் இருந்து ஒரு துளி கண்ணீர்த் துளி அவன் நெற்றியில் விழுந்தது. படைவீரன் சீக்கிரம் என்பதுபோல், தன் தாயின் முகத்தைத் தன்னிடம் இருந்து விலக்கி, ஊமைத்துரையைக் காண்பித்தான். தாய் தன் கண்களைத் துடைத்துக் கொண்டபடி, மகனின் தலையைக் கீழே இறக்கிவிட்டு, அப்படியே திரும்பி, ஊமைத்துரையின் தலையைத் தூக்கித் தன் மடிமேல் வைத்துக் கொண்டாள். அவர் முகத்தை தன்னுடைய முந்தானையால் மூடினாள். தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி ஊமைத்துரையைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் தள்ளாடி நடந்தாள்.

தரையில் கிடந்த வீரர்களை ஒவ்வொரு ஆளாகப் புரட்டிப் பார்த்து ஊமைத்துரையைத் தேடிக் கொண்டிருந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் பெண் ஒருத்தி காயம்பட்ட ஒருவனைத் தூக்கிச்

செல்வதைப் பார்த்தனர். “ஏய் நில்லு” என்றனர். தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு நின்ற அந்தப் பெண் நின்றாள்.

“என்னங்க அய்யா?” என்றாள்.

“யாரத் தூக்கிட்டுப் போற? அவன் மூஞ்சியக் காமி, பாக்கணும்” என்றனர்.

சாமியை எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டும் என்று முடிவு செய்த அந்தத் தாய் இரண்டு பொய்களை உண்மை போலச் சொன்னாள். “அய்யா, இது என் மகன். உடம்புக்குச் சௌகரியமில்லாம வீட்டுல கிடந்தான். பெரிய அம்ம. தலைக்குத் தண்ணி ஊத்தலாம்னு வேப்ப இலையும் தண்ணியும் எடுக்கப் போனேன். எமனா வந்துட்டானுங்க, இவன் சேக்காளிக. கோட்டைக்குள்ள நெறைய தங்கம், வெள்ளி கிடைக்கும்னு சொல்லி இவனைக் கோட்டைக்குள்ள கூட்டிக்கிட்டு வந்துட்டாங்க. கோட்டைக்குள்ள வந்ததும் இவன விட்டுட்டு அந்தக் கூட்டாளிக எங்கிட்டோ ஓடிப் போயிட்டாங்க. இன்னமும் தண்ணி ஊத்தல. இவன் சீக்காளி, உடம்புல சத்தில்லாததால மயக்கம் போட்டுட்டான். அதுதான் தூக்கிக்கிட்டு போறேன்.”

“ஊரே சண்டையில கிடக்குது, ஒம் மவனுக்குத் தங்கம் வெள்ளி கேக்குதா?”

“இல்ல சாமி, சேக்காளிங்க சொன்னதை நம்பி வந்துட்டான்.”

“சரி, அவன் மூஞ்சியக் காமி.”

“அய்யா, வாங்க, வந்து நல்லாப் பாருங்க. சாகப்போற காலத்துல நா ஏன் பொய் சொல்லப் போறேன்? இந்தா பாருங்க. பெரியம்ம போட்ட பிள்ளய” என்று சொல்லி சேலைத் தலைப்பை விலக்கப் போனாள்.

“மூடு மூடு. இன்னும் தண்ணி ஊத்தலையா? வெயில் காலத்துல மழை பேஞ்சிருச்சின்னாலே பெரியம்ம வர ஆரம்பிச்சுரும். எங்களுக்கு இழுத்து விட்டுறாத. கௌம்பு, கௌம்பு” என்றனர்.

நன்றி தெரிவிக்கும் பார்வையுடன் ஊமைத்துரையைத் தோளில் சுமந்தபடி, அந்தத் தாய் நடந்து சென்றாள். அவளின் நடை மட்டும்தான் தடுமாறியது.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்த மூன்றே நாளில் லெப்டினென்ட் கர்னல் அக்னியூ கோட்டையைத் தரைமட்டமாக்கி விட்டான். கர்னல் அக்னியூ கோட்டைக்குள் காயப்பட்டுக் கிடந்தவர்களைக் கைது செய்தான். போர்க் கைதிகள் கையில் இருந்தால், எதிரியோடு பேரம் பேச வசதியாக இருக்கும் என்று படைத்தளபதிகள் போர்க் கைதிகளைப் பிடித்து தனிமைச் சிறையில் வைத்தனர். பிடிபட்டவர்களில் யாராவது பெரிய மனிதர்கள் இருந்தால் எதிர்த்தரப்போடு இன்னும் கூடுதலாகப் பேரம் பேச முடியும். பிடிபட்டவர்களின் பெயர், ஊர், வகிக்கும் பதவி, பாஞ்சாலங்குறிச்சி அரசனுக்கும் அவர்களுக்கும் உள்ளத் தொடர்பு போன்ற பல செய்திகளைக் கம்பெனி வீரர்கள் விசாரித்து அதைக் குறித்துக் கொண்டிருந்தனர்.

மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் அன்று போர் முடிந்தவுடன் கோட்டைக்குள் இருந்தவர்களைப் பற்றிய ஒரு கணக்கெடுப்பை எடுத்திருந்தார். கோட்டைக்குள் மூவாயிரம் போராளிகள் இருந்தனர். இரவு எட்டு மணி அளவில் கோட்டைக்குள் வெல்ஷ் உள்ளிட்டவர்கள் கணக்கெடுத்தபோது, இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து இருநூறாக இருந்தது. காயம்பட்டவர்கள் எண்ணூறு பேர். காயம்பட்டவர்களை ஆங்கிலேயப் படைகள் தனியாகப் பிரித்து, பாஞ்சாலங்குறிச்சியின் இடிந்த கோட்டைக்கு முன்பு நிறுத்தினர். இறந்தவர்களை ஒரு பக்கத்தில் கிடத்தினர். பிரேதங்களின்மீது விறகுகளை அடுக்கி அனைவரையும் எரித்துவிட உத்தரவிட்டான் கர்னல் அக்னியூ.

“கர்னல் அக்னியூ, நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்... மேஜர் மெக்காலேயின் தலைமையில் நாங்கள் பத்து நாட்களுக்கு முன்பு இதே பாஞ்சாலங்குறிச்சியில் சண்டையிட்டபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதை உங்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று மேஜர் மெக்காலேவை நான் கேட்டுக் கொண்டேன். அவர் மறுத்துவிட்டார். ஆனால் என் மனசாட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. உங்களிடம் சொல்லியே ஆக வேண்டும் என்று கருதுகிறேன். மற்றபடி நான் சொன்னதைக் கேட்ட பிறகு நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அதற்கு நான் கட்டுப்படுகிறேன்” என்றான் மேஜர் வெல்ஷ்.

மேஜர் வெல்ஷிற்கு கர்னல் அக்னியூவை ரொம்பவும் பழக்கம் இல்லை. ஆனால் கொஞ்சம் கெடுபிடியானவர் என்று மட்டும் தெரியும். எதிராளிகளை துச்சமாக நினைத்துப் பேசுவான் என்றும், வெற்றிக்காக

எதையும் செய்வான் என்றெல்லாம் மேஜர் வெல்ஷ் கர்னல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது மேஜர் வெல்ஷ் பேசப் போவது போரில் இறந்த வீரர்கள் பற்றியது. ஆகவே கர்னல் அக்னியூ என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று நினைத்துத்தான் இந்தப் பேச்சை கர்னல் அக்னியூவிடம் ஆரம்பித்தான்.

"யெஸ், மேஜர் வெல்ஷ் சொல்லு" என்றான் கர்னல்.

"கர்னல், பத்து நாட்களுக்கு முந்தையப் போரில் நம் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்தக் கோட்டையைத் தகர்க்க நம் ஐரோப்பிய வீரர்களை ஒவ்வொருவராக அனுப்பினோம். பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் கோட்டைக்குள்ளிருந்து ஈட்டிகளை வீசினர். அன்று இரவும் போர் நடந்தது. ஈட்டியோடு சேர்த்து கட்டப்பட்ட வெடிமருந்துகள் நம் முகாமைத் தாக்கின. சிறிதுநேரம் அமைதி காத்தோம். மேஜர் மெக்காலே அன்று பொறுமையிழந்து விட்டார். பீரங்கி வைத்து கோட்டைக் கதவுகளை தகர்க்க உத்தரவிட்டார். பீரங்கி வண்டிகளை இழுத்துக்கொண்டு பிரதான கதவுக்குச் சென்று குண்டுகளை வீசினோம்.

நமது இரும்புக் குண்டுகள் அவர்களைத் தாக்கியபோது பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் கோட்டைக்குள்ளிருந்து சிறுசிறு கற்கள் போன்ற பொருட்களை எங்கள்மீது எறிந்தனர். அந்தக் கற்களால் தாக்கப்பட்டவர்கள் வலியால் துடித்தனர். கற்களால் தாக்கப்பட்ட பலர் சுருண்டு விழுந்தனர். கீழே கிடந்த கற்களைப் பொறுக்கி சோதித்துப் பார்க்குமாறு தளபதி மெக்காலே உத்தரவிட்டார். களிமண்ணும் கோழி முட்டையும் சேர்த்து உருண்டையாக உருட்டி வைக்கப்பட்ட அந்தக் குண்டுகள் நம் இரும்புக் குண்டுகளைவிட அதிக பலத்துடன் தாக்கியதில் பலர் உயிர் இழந்தனர்.

அதிகாலையில் போர் ஓய்ந்தபோது நம் பக்கத்தில் எண்பத்தி ஐந்து பேரைக் காணவில்லை. அவர்கள் கோட்டைக்குள் இறந்து கிடக்கலாம் அல்லது கோட்டைக்குள் பிடிபட்டிருக்கலாம் என்று நம்பினோம். மேஜரிடம் நான்தான் சொன்னேன். சிவத்தையாவும், ஊமைத்துரையும் மனிதாபிமானம் உள்ளவர்கள். காணாமல் போன ஐரோப்பியர்களின் குடும்பத்திற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். ஆகவே கோட்டைக்குள் இறந்து கிடக்கும் ஐரோப்பியர்கள் அல்லது சிறைப்பட்டவர்கள் பற்றித் தகவல் கேட்கலாம் என்று சொன்னேன். அதன்படி வெள்ளைக் கொடி தாங்கிய ஒரு ஆங்கிலேயச் சிப்பாய் காலை நேரத்தில் கோட்டைக்குள் அனுப்பப்பட்டான். அவனுக்கு முன்பாக

பாண்டு இசைக்கும் கருவியை இருவர் வாசித்துக் கொண்டு சென்றனர். நாங்கள் கோட்டைக்கு வெளியே காத்திருந்தோம். கோட்டைக்குள் சென்றவர்கள் நல்ல செய்தி கொண்டு வர வேண்டுமே என மனதிற்குள் வேண்டிக் கொண்டிருந்தோம்.

வெள்ளைக் கொடி ஏந்திய ஐரோப்பியச் சிப்பாய்க் கோட்டை கதவிற்கு முன் நின்றான். கதவு திறக்கப்படவில்லை. பாண்டு வாத்தியம் நிறுத்தப்படவில்லை. வெள்ளைக் கொடி ஏந்தியவன் கோட்டைக் கதவிற்கு முன் நின்று கொண்டே இருந்தான். சிறிது நேரத்தில் கோட்டைக் கொத்தளத்திலிருந்து ஒருவன் எட்டிப்பார்த்தான். பிறகு நான்கு ஐந்து பேர்கள் வந்து எட்டிப் பார்த்தார்கள். மேஜருக்கு நம்பிக்கை போய்விட்டது.

ஆனால், நான் மேஜரிடம் சொன்னேன், “நிச்சயம் அவர்கள் கோட்டைக் கதவைத் திறப்பார்கள். வெள்ளைக் கொடிக்கும் சமாதானத்திற்கும் மதிப்பு தருவார்கள் என்று.”

நான் நினைத்தபடியே பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் கோட்டைக் கதவைத் திறந்தார்கள். வெள்ளைக்கொடி வீரனை மட்டும் உள்ளே அனுமதித்தனர். பாண்டு வாத்தியம் வாசித்தவர்களை வெளியே நிற்கச் சொல்லிவிட்டனர். சிறிது நேரத்தில் வெள்ளைக் கொடி வீரன் திரும்பினான்.

“இறந்தவர்களின் எண்ணிக்கை எண்பத்து ஐந்து” என்று எங்களிடம் சொன்னான். “காயம்பட்டவர்கள்?” “காயம்பட்டவர்கள் யாரும் உள்ளேயில்லை“ என்றான்.

அப்போது மேஜர், நான் எதிர்பார்க்காத ஒரு வேண்டுகோளை வைத்தார். “அந்த பிரேதங்களை நம்மிடம் ஒப்படைக்கச் சொன்னால் ஒப்படைப்பார்களா?” என்று என்னைக் கேட்டார். நான், “ஊமைத் துரையும் சிவத்தையாவும் நல்லவர்கள் என்று தெரியும். அதனால் நம் வெள்ளைக்கொடி வீரனை உள்ளே அனுமதித்தார்கள். நீங்கள் கேட்பதுகூட நடக்கும், நான் நினைப்பதைவிட அவர்கள் ரொம்ப நல்லவர்களாகயிருந்தால்” என்று சொன்னேன்.

மேஜர் முயற்சிச் செய்ய தீர்மானித்தார். மேஜர் மறுபடியும் வெள்ளைக்கொடி வீரனை பாண்டு குழுவினருடன் அனுப்பினார். இந்த

முறை அதிகச் சோதனையின்றி அவனை உள்ளே அழைத்தார்கள். திரும்பி வந்து மிக நல்ல செய்தி சொன்னான்.

அப்போது அவனிடம் சிவத்தையா சொன்னாராம் "எங்களது மத வழக்கம் எரியூட்டுதல்தான். எரியூட்டுதலை யார் வேண்டுமானாலும் செய்துவிடலாம். ஆனால் உங்கள் வழக்கப்படி பிரேதங்கள் புதைக்கப்பட வேண்டும். ஆகவே உங்கள் தளபதி விரும்பினால் பிரேதங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கிறேன்" என்று சொன்னாராம். அவர் அனுமதித்தபடியே பிரேதங்களை எடுக்கப் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் அனுமதித்தனர். அப்படிப்பட்ட நல்லவர்கள் சிவத்தையா வும் ஊமைத்துரையும். இன்று இறந்தவர்களை அவர்கள் விருப்பப் பட்டால் எடுத்துச் செல்ல நாம் அனுமதிக்கலாமா?" என்றான் மேஜர் வெல்ஷ்.

கர்னல் அக்னியூ அவனுக்குப் பதில் சொல்லவில்லை. "காயம் பட்டவர்களை பிணைக்கைதியாகப் பாஞ்சாலங்குறிச்சிக்குகோ சங்கரன்கோயிலுக்கோ அனுப்பலாமா?" என்ற கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை. அக்னியூவின் நடவடிக்கை வெல்ஷை திகைப்படைய வைத்தது. அக்னியூ, "வேண்டாம், காயம் அடைந்து நம்மிடம் கைதியாக இருப்பவர்கள் யாரையும் விசாரிக்க வேண்டாம். அவர்களைப் பற்றி நீங்கள் எழுதிய குறிப்புகளைக் கிழித்து எறியுங்கள். அனைவரையும் கோட்டைக்கு முன்பு தூக்கிலேற்றுங்கள்" என்றான். ஊமைத்துரையை தப்பவிட்ட கோபம் அவன் உத்தரவில் வெளிப்பட்டது. மேஜர் வெல்ஷ் அதிர்ச்சியில் உறைந்து நின்றார்.

"கர்னல், இது முறையல்ல. கலெக்டர் உத்தரவின்றி, விசாரணை யின்றி, கைதிகளைத் தூக்கிலிட நமக்கு அதிகாரமில்லை."

"மிஸ்டர் வெல்ஷ், உங்களுக்கு வேண்டுமானால் அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். எனக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தது என்ற செய்தி மட்டும்தான் இப்பொழுது கவர்னருக்குத் தேவை. அந்த நல்ல செய்தியை எதிர்பார்த்தே அவர் காத்திருக்கிறார். ஹானரபிள் கம்பெனியின் ஆட்சி அமைதியாக நடந்து கொண்டிருக்கும் மாகாணத்தில், வால் பகுதியில் பற்றிய இந்தத் தீ அணைந்தது என்பதே நம் கவர்னருக்கு நல்ல செய்தி. அதற்காக கவர்னர் எட்வர்ட் கிளைவ் எனக்குத் தோன்றியதைச் செய்யச் சொல்லியிருக்கிறார். சொல்லிவிட்டுச் செய் என்றார். நான் செய்துவிட்டுச்

சொல்லப் போகிறேன். அவ்வளவுதான்” என்று சொல்லி பெருஞ்சிரிப்பு சிரித்தான்.

ஊமைத்துரையைக் காப்பாற்றிய தாயின் மகனும் அன்று தூக்கிலேற்றப்பட்டான். காயம்பட்ட கைதிகளைத் தூக்கில் ஏற்றும் போது லெப்டினென்ட் கர்னல் பாட்ரிக் அக்னியூ ஓர் ஆசனத்தில் அமர்ந்து ஒவ்வொருவரின் மரணத்தையும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

போராளிகளின் மரணத்தை ரசிப்பவர்களுக்கு, அவர்கள் மரணத்தை ரசிக்கத் தொடங்கும் முந்தைய கணத்திலேயே அவர்களிடம் இருந்து வரலாறு கணக்குத் தீர்த்துக்கொள்கிறது. இறந்துபோகும் போராளிகள் வரலாற்றின் பக்கங்களில் வாழத் தொடங்குகிறார்கள்.

•

33

“வெல்ஷ், அந்தப் பெண்ணைத் தேட வேண்டும்” என்றான் கர்னல். வெல்ஷுக்குத் தெரியும். அவன் கேத்தரீனைத்தான் சொல்லுகிறான் என்று.

“கர்னல், அவள் உள்ளேயிருக்க வாய்ப்பில்லை. தப்பியோடிய கூட்டத்தோடு அவளும் வெளியேறியிருக்கலாம். இறந்து கிடந்தவர்களில் அவள் இல்லை. இன்று தப்பித்தவர்கள் எங்குப் போகிறார்களோ அங்கு அவளும் போயிருப்பாள்.”

“அவளை விடுங்கள்... ஊமை?”

“தெரியவில்லை கர்னல்.”

“என்ன மேஜர், ஊமைத்துரை எங்கே போவான் என்று உங்களுக்குத் தெரியாதா? உங்கள் நெருங்கிய நண்பனைத் தேடித்தான் போவான்...” கர்னல் மேஜர் வெல்ஷை சீண்டினான். மேஜர் வெல்ஷும் சின்ன மருதுவும் நண்பர்கள் என்று கர்னல் அக்னியூ தெரிந்து வைத்திருந்தான்.

“கர்னல், நீங்கள் என்னைவிட சீனியர், உலகம் சுற்றியவர். கவர்னர் காரன்வாலிசிடம் பணியாற்றியவர். திப்பு சுல்தானைக் கொன்ற ஜெனரல் ஹாரிஸின் நெருங்கிய உதவியாளர். உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. அமைதிக் காலங்களில் நாம் பாளையக்காரர்களிடம் நன்றாகப் பழக அனுமதிக்கப்பட்டுள்ளோம். இந்த ஆண்டுவரைகூட நாம் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்து கொள்ளவும் கம்பெனியால் அனுமதிக்கப்பட்டிருந்தோம். இந்த ஆண்டுதான் அந்த உரிமை தடை செய்யப்பட்டுவிட்டது. நானே வியாபாரம் செய்வதால் எனக்கு வேண்டிய சிலரோடு நட்பாக இருக்க வேண்டிய சூழல் உள்ளது. அப்படிப் பழகியவர்கள்தான் சின்ன மருதுவும் பெரிய மருதுவும். அதற்காக நான் நமது ரகசியங்களை அவர்களிடம் பகிர்ந்து கொண்டதில்லை. அவர்களும் நம்மைப் பற்றி அதிகம் கேட்டதில்லை. மருது எனது நெருங்கிய நண்பன் என்று நீங்கள் சொன்னதால் சொல்கிறேன். என்னைப் போரிட அனுமதித்தால் நான் என் முழு ஆற்றலையும் பயன்படுத்தி மேன்மைமிகு கம்பெனி வெற்றி பெற உழைப்பேன். மேன்மைமிகு கம்பெனிதான் எனக்கு முக்கியம். நண்பர்கள் எனக்கு இரண்டாம்பட்சம். என் மீது நம்பிக்கையில்லை என்றால் தயவுசெய்து என்னைப் போரில் ஈடுபடுத்த வேண்டாம்” என்றான்.

“மேஜர் வெல்ஷ், உங்களுக்கு இந்தப் பகுதியில் நல்ல பரிச்சயமிருக்கிறது. பலமுறை மருது சகோதரர்களின் விருந்தினராக இந்தப் பகுதியில் இருந்துள்ளீர். இந்தப் பகுதி ஆட்களையும் உங்களுக்குத் தெரிகிறது. ஊர்களுக்குச் செல்லும் குறுக்கு வழிகள், நீர் நிலைகள், மலைக்குன்றுகள் என்று போருக்குத் தேவைப்படும் அனைத்துச் செய்திகளும் உங்களுக்குத் தெரிந்திருப்பதால் நீங்கள் என்னுடன் இருக்கலாம். ஆனால் போரிட வேண்டாம்” என்றான் அக்னியூ.

கர்னல் பாட்ரிக் அக்னியூவிற்கு கமுதிக் கோட்டையிலிருந்து அப்போது ஒரு தகவல் வந்தது. “சிவகங்கைப் படையினர் மயிலப்பனைக் கைது செய்து சிவகங்கைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்” என்ற தகவலைக் கேட்டதும் அக்னியூ சிரித்துக் கொண்டான். “கைது செய்த

மயிலப்பனைக் கமுதிக்கோட்டையில் உள்ள ஆங்கிலேயப் படையிடம் ஒப்படைக்காமல் சிவகங்கைக்குக் கொண்டு சென்றதில் மருது சகோதரர்களின் சூழ்ச்சியிருக்கிறது என்று புரிந்து கொண்டான்.

போர் முடிந்து மூன்று நாட்கள் பாஞ்சாலங்குறிச்சியிலே தங்கி, பொதுமக்களிடம் கம்பெனிப் படைகள் கொள்ளையடிக்க அக்னியூ அனுமதித்தான். தொண்டைமான் படையினரும், திருவிதாங்கூர் படையினரும் ஊருக்குள் புகுந்தனர். கிராமத்தில் வயதானவர்களும் நோயாளிகளும் மட்டும் இருந்தனர். கிராமத்தில் கட்டப்பட்டிருந்த ஆடு, கோழி, மாடு என அனைத்தையும் பிடித்தனர். விலையுயர்ந்த பொருட்கள் ஏதாவது கிடைத்தால் அதையும் எடுத்துக் கொண்டனர்.

மறுநாள் கொள்ளையடித்தப் பொருட்களை மைதானத்தில் வைக்கச் சொல்லி கர்னல் அக்னியூ உத்தரவிட்டிருந்தான். போர் வீரர்கள் ஒவ்வொருவரும் வரிசையாகத் தாங்கள் கொள்ளையடித்த விலையுயர்ந்தப் பொருட்களைக் காட்சிப்படுத்தியிருந்தனர். ஒருவன் தன் முன்பு சில வைரங்களைப் பரத்தி வைத்திருந்தான். அவைகள் அனைத்தையும் பறிமுதல் செய்த அக்னியூ, அன்று கலெக்டருக்கு கடிதம் எழுதினான். “... என்ற இந்தப் பெயர் கொண்ட சிப்பாய், மிளகு அளவுடைய பதினைந்து விலையுயர்ந்த வைரக் கற்களை பிடிபட்ட கோட்டைக்குள்ளிருந்து கண்டுபிடித்திருக்கிறார். இன்று மைதானத்தில் என் முன்பாக அவைகளைக் காட்சிப்படுத்தினார். அவைகளை நான் கைப்பற்றியுள்ளேன். இந்த விலையுயர்ந்த கற்களையும் நான் என் கடிதத்தோடு இணைத்துள்ளேன். கலெக்டர் பரிசீலனை செய்து கம்பெனிக்கு எத்தனை கற்களை எடுத்துக் கொள்ளலாம், கண்டுபிடித்தச் சிப்பாய்க்கு எத்தனை கற்கள் கொடுக்கலாம் என்று தெளிவுபடுத்தக் கேட்டுக் கொள்கிறேன். சிப்பாய்க்குத் தர வேண்டிய கற்களை எனக்கு அனுப்பி வைக்கவும்” என்று கடிதம் எழுதினான்.

•

34

படை வீரனின் தாய் ஊமைத்துரையை வீட்டிற்குத் தூக்கிச் சென்று கை வைத்தியம் செய்ததில் ஊமைத்துரை மூன்றாவது நாள் எழுந்து நடக்க ஆரம்பித்தார். படை வீரனின் தாய்க்கு நன்றி தெரிவித்து வணங்கிவிட்டு ஊமைத்துரை கிளம்பினார். இனி மருது பாண்டியர்களைச் சென்றடைவதே ஊமைத்துரைக்கு இருந்த ஒரே வழி. கமுதிக் கோட்டையை நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

ஊமைத்துரை கமுதிக்கு வந்தபோது மாலை ஐந்து மணி இருக்கும். பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து அவர் நேரடியாகக் கமுதிக்குத்தான் வருகிறார். பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து இடை விடாமல் நடந்த இரு நாட்கள் பயணத்தில் அவர் சோர்வடைந் திருந்தார். அவரோடு எண்ணூறு போராளிகள் வந்திருந்தனர். ஊமைத்துரைக்கு உடலில் காயங்கள் அதிகமாகயிருந்தன. அதனால் குதிரையில் வராமல் ஒரு சாரட் வண்டியில் வந்திருந்தார்.

பாஞ்சாலங்குறிச்சிப் போரின் போக்குக் குறித்து சின்ன மருதுவிற்குத் தகவல்கள் வந்தன. லெப்டினென்ட் கர்னல் அக்னியூ பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தவுடனேயே போரின் போக்கு பாஞ்சாலங்குறிச்சி வீரர்களுக்கு எதிராகப் போகிறது என்று மருதுவிற்குத் தெரிந்துவிட்டது. அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவருடன் ஆலோசனை நடத்தினார். சிவகங்கைச் சிறையில் விருந்தினராக இருக்கும் மயிலப்பனையும் முத்துக்கருப்பத் தேவரையும் ஆலோசனைக்காக சிவகங்கை அரண்மனைக்கு வரச்சொல்லி சின்ன மருது தனது வீரர்களை அனுப்பினார். ராமநாதபுரத்தின் புதிய சேதுபதி என்ற முறையில், முத்துக்கருப்பத் தேவருக்கும், வெங்கம் பெரிய உடையணத் தேவருக்குப் போடப்பட்ட ஆசனம் போலவே, ஒரே மாதிரியான ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. இந்தச் சமயத்தில் பெரிய மருதுவும் அங்கு வந்து சேர்ந்தார்.

போர் நிகழ்ச்சிகளைச் சின்ன மருது விளக்கினார். “பாஞ்சாலங்குறிச்சி முழுவதுமாக விழுந்துவிட்டது. கோட்டை தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. எண்ணூறு வீரர்களுடன் ஊமைத்துரையும் சிவத்தையாவும் கமுதி நகருக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கின்றனர். கமுதிக் கோட்டை ஆங்கிலேயர் வசம் இருக்கிறது. லெப்டினென்ட் கர்னல் பாட்ரிக் அக்னியூ இன்னும் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து கிளம்பவில்லை. அவன் மதுரை வந்து திருப்புவனம் வழியாக நம்மைச் சந்திக்கப்

போகிறானா? அல்லது கமுதி வழியாக நம்மைச் சந்திக்கப் போகிறானா? எனத் தெரியவில்லை. உடனடியாகவோ, சில நாட்கள் கழித்தோ எப்படியும் அவன் சிவகங்கைச் சீமைக்கு வந்தே தீருவான். தப்பி வந்த ஊமைத்துரையையும், சிவத்தையாவையும் பிடிக்க நம் சீமைக்குள் வருகிறேன் என்பான். இப்போது நம்முன் உள்ள கேள்வி ஒன்றே ஒன்றுதான். ஊமைத்துரையைக் கமுதியில் வரவேற்பதா? வேண்டாமா? இதில் எனது கருத்தை நான் சொல்லுவதற்கு முன்பு எங்களது அரசர் என்ன நினைக்கிறார் எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றார் சின்ன மருது.

"அம்மான், நீங்கள் கூறியவற்றை நானும் ராமநாதபுரம் சேதுபதி முத்துக்கருப்பத் தேவரும் செவிமடுத்தோம். இந்த இடத்திற்குத்தான் நாம் வருவோம் என்று நினைத்திருந்தோம். நாம் எதிர்பாராதபடி எதுவும் நடக்கவில்லை. இது எதிர்பார்த்ததுதான். ஆங்கிலேயப் படை திருப்புவனம் வழியாகவோ, கமுதி வழியாகவோ சிவகங்கையை அடையும். நாம் அதைப் பற்றிப் பின்னர் யோசிப்போம். முதலில் ஊமைத்துரையைப் பற்றி இப்பொழுது முடிவு செய்வோம். ஊமைத்துரையும் சிவத்தையாவும் நமது சகோதரர்கள் போன்றவர்கள். கட்டபொம்மனும் இதேபோல் நம் ஊருக்கு வந்திருக்கிறார். அவருக்கும் அடைக்கலம் கொடுத்திருக்கிறோம். அவராகத்தான் ஆங்கிலேயர்கள் வர மாட்டார்கள் என்று நம்பித் தொண்டைமானின் காளாப்பூர்க் காடுகளுக்குச் சென்றார். இப்போதும் ஆங்கிலேயர்களுக்கு ஊமைத்துரை இங்குதான் வருவார் என்று தெரியும். ஆகவே அவரைக் கமுதியில் ஓர் அரசருக்குரிய மரியாதையோடு வரவேற்கலாம் என கருதுகிறேன். ராமநாதபுரம் சேதுபதி மாற்றுக் கருத்து தெரிவித்தால் அதையும் கேட்டுக் கொள்வோம்" என்றார்.

"பெரிய மருது சேர்வைக்காரர் இருக்கிறார். போர்களில் ஆங்கிலேயர்களைச் சந்தித்தவர். ஆங்கிலேய அதிகாரிகள் மற்றும் கலெக்டர்களுடன் விருந்து உண்பவர். அவர்களுக்கு விருந்து கொடுப்பவர். பல ஐரோப்பியர்களுக்கு வேட்டையாடவும், சிலம்பு, வளரி எறியும் கலைகளையும் கற்றுக் கொடுத்தவர். ஆங்கிலேயர்களின் மனநிலை என்ன என்று, பெரிய மருது சேர்வைக்காரருக்குத் தெரியும். எங்களுக்கு, ராமநாதபுரம் சீமைக்காரர்களுக்கு அந்த குரங்குப் பயல் மார்டின்ஸ் பற்றி மட்டும்தான் தெரியும். அவனைத் தவிர கடந்த பத்து

வருடமாக வேறு வெள்ளைக்காரன் ஒருவனைக்கூட நாங்கள் பார்த்ததில்லை“ என்றார் முத்துக்கருப்பத் தேவர்.

பெரிய மருது தம்பியை நோக்கினார். “விதி அது வழியில் நம்மை நடத்துகிறது. நாப்பத்தி மூணு வருசத்துக்கு முந்தி வங்காளத்துல பிளாசிப்போர் நடந்துச்சு. அது கல்கத்தா பக்கத்தில் இருக்குதா? அதனால தெக்குச்சீமையில இருக்கிற நமக்கு என்னன்னு நாம நெனச்சோம். நாப்பது வருசத்துக்கு முந்தி நம்ம ஆற்காடு நவாப் ஊருக்கு அடுத்து இருக்கிற வந்தவாசியில போர் நடந்தப்ப பக்கத்து ஊர்தானே? நமக்கு என்னன்னு பேசாம இருந்தோம். முப்பத்தாறு வருசத்துக்கு முன்னால வாரனாசிக்குப் பக்கத்திலிருக்கிற பக்ஸார்ல சண்ட நடந்ததுன்னு சொன்னாங்க. நமக்கு ஒன்னும் இல்லைன்னு அப்பவும் பேசாம இருந்தோம். இப்ப நம்ம சீமையைச் சுத்தியே நடக்குது.

இன்னைக்கு நாம எல்லாமே வெள்ளக்காரங்களுக்கு எதிரியாயிட்டோம். சின்ன மருது, நீ பல இடங்களுக்குப் போறவன். உனக்கு நண்பர்கள் அதிகம். நாட்டு நடப்பும் உனக்கு முழுசா வந்து சேர்ந்திருக்கும். நிச்சயம் உனக்கும் இப்படி நடக்கப்போகுதுன்னு தெரிஞ்சிருக்கும். நீ சொல்லு, இங்க ரெண்டு அரசருங்க இருக்காங்க. இவங்க நம்ம அரசர்கள் மட்டும் இல்ல. நம்ம மண்ணயும் மக்களையும் காக்கறவங்க. நம் உயிர் மேல முழு உரிம உள்ளவங்க. அரசர்கள் இருவரும் என்ன சொல்றாங்களோ, அதுக்கு சிவகங்கைச் சீமையும், ராமநாதபுரம் சீமையும் கட்டுப்படும்” என்றார் பெரிய மருது.

சின்ன மருது எழுந்து நின்றார். அரசர்களை வணங்கினார். தன் அண்ணனின் காலில் விழுந்தார். “எங்கள் அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கும் எனது அண்ணன் வெள்ள மருது சேர்வைக்காரருக்கும் என் உயிரைக் கொடுக்க சித்தமாக இருக்கிறேன். நமக்கு நெருங்கிய சகாக்களான பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை, சிவத்தையா, விருப்பாச்சி கோபால் நாயக்கர், தேளி யாதுல் நாயக்கர், திப்பு சுல்தானின் படையிலிருந்த தூந்தாஜி வாக்கின் பிரதிநிதிகள், கோயம்புத்தூர் சேக் உசேன், ஓடாநிலை சின்ன மலை, இங்க இருக்கிற இந்த மயிலப்பன் எல்லோரும் நான்கு நாட்கள் விருப்பாச்சி மலையில தங்கி கலந்து பேசினோம். அந்தக் கூட்டத்தில் ஆங்கிலேயர்கள் எப்படி ஒவ்வொரு சண்டையிலும் நம்மை வெல்கிறார்கள் என்று ஆராய்ந்தோம்.

அவர்களுக்குப் படைபலம் நம்மைவிடக் குறைவு. நமக்குத் தெரிந்த நம் ஊர்ப்பாதைகள், குறுக்கு வழிகள் அவர்களுக்குத் தெரியாது.

நம் மொழி தெரியாது. இருந்தாலும் அவர்கள் வெல்வதற்குக் காரணம் இரண்டு. ஒன்று நம்மில் சிலர் சோரம் போய் அவர்களுக்கு உதவுவது. அந்தத் துரோகிகளை நாம் ஒன்றும் செய்ய முடியாது. இரண்டாவது காரணம் அவர்கள் ஒரு நேரத்தில் ஒரு எதிரியை மட்டும் தாக்குகிறார்கள்.

இந்த உண்மையைக் கண்டுபிடித்தோம். ஒரே நேரத்தில் நாம் அனைவரும் சேர்ந்து ஆங்கிலேயர்களைத் தாக்கினால் அவர்கள் கட்டாயம் தோற்றுத்தான் போவார்கள் என்றும் கண்டுபிடித்தோம். அதன்படி ஒரே நேரத்தில் தூந்தாஜி வாக்கின், பூனாவிலிருந்து கலகத்தை ஆரம்பிக்கவேண்டும். கோயம்புத்தூர், திண்டுக்கல், விருப்பாச்சி, ராமநாதபுரம், சிவகங்கை, பாஞ்சாலங்குறிச்சி, வடகரை, நாங்குனேரி என பல இடங்களில் ஒரே நேரத்தில் கம்பெனிக்கு எதிராகக் கலகத்தை ஆரம்பித்தால் அவர்களால் நம்மை வீழ்த்த முடியாது. அப்படி ஒரு நெருக்கடியை நம்மால் கொடுக்க முடிந்தால் வெள்ளைக்காரன் நம் நாட்டை விட்டே ஓடி விடுவான்."

"இந்தப் போராட்டத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக மற்ற ஐரோப்பியக் குழுக்களான பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்களைப் பயன்படுத்தும் எண்ணம் உள்ளதா சின்ன மருது" என்றார் முத்துக்கருப்பத் தேவர்.

"சேதுபதி நாங்கள் இவர்களைச் சந்தித்து இன்னும் ஆதரவு கேட்கவில்லை. கேட்டாலும் உபயோகமிருக்காது. பிரெஞ்சுக்காரர்கள் இப்போது புதுச்சேரி, மாகி, ஏனாம், காரைக்கால் என்று முடங்கிவிட்டனர். போர்த்துக்கீசியர்கள் கோவாவில் நிலைகொண்டு விட்டனர். இப்போதெல்லாம் போர்த்துக்கீசியர் களுக்கு நமது கடற்கரைப் பகுதியில் பரதவர்களை மதமாற்றம் செய்வதில் மட்டும்தான் ஆர்வமிருக்கிறது. டச்சுக்காரர்களைக் கேட்கவே வேண்டாம். இந்தியாவில் வியாபாரமே வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டனர். இவர்கள் மூவரை நாம் வலிந்து அழைத்தாலும் வரமாட்டார்கள். இவர்கள் வந்தாலும் நமக்கு உபயோகமில்லை. நாம்தான் அவர்களைத் தூக்கிச் சுமக்க வேண்டும். இன்னொன்று தலைவலி போய் திருகுவலி வந்த மாதிரி ஆனாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. ஆங்கிலேயனை விரட்டிவிட்டுப் பிரெஞ்சுக்காரன் வருவான். போர்த்துக்கீசியக்காரன் வருவான் அல்லது டச்சுக்காரன் வருவான். இது வேண்டாம் என்று எங்கள் பேச்சு வார்த்தையில் முடிவு செய்தோம். மயிலப்பன், நீ விருப்பாச்சிக் காடுகளில்

நடந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டாயே. நான் இப்போது சொன்னதெல்லாம் சரிதானே?"

"ஆமாம், சின்ன மருது சேர்வைக்காரரே. நான் இந்த விசயங்களை எங்களது சேதுபதி முத்துராமலிங்கத் தேவருக்கும் சொல்லியிருக்கிறேன். புதிய சேதுபதி முத்துக்கருப்பத் தேவருக்கும் சொல்லியிருக்கிறேன். எங்களுக்குப் பாளையங்கோட்டை சிறை உடைப்புகூட இரண்டு நாட்களுக்கு முன்கூட்டியே தெரியும்."

முத்துக்கருப்பத் தேவர் மயிலப்பனைப் பார்த்தார். அவன் உட்கார்ந்ததும், "சின்ன மருது சேர்வைக்காரரின் திறமையைப் பறைசாற்றப் பாளையங்கோட்டைச் சிறை உடைப்பு ஒன்றே போதும். ஏற்கனவே ஒருமுறை முயற்சி செய்து தோல்வியில் முடிந்த ஒன்றை, அடுத்த ஓராண்டிலேயே வெற்றிகரமாக நடத்தி முடித்தவர் சின்ன மருது சேர்வைக்காரர். அதே வழியில் பூனாவிலிருந்து நாங்குநேரி வரையான பெரும் நிலப்பரப்பில் பெரும் கலவரத்தை உருவாக்குவோம்" என்றார் சேதுபதி முத்துக்கருப்பத் தேவர்.

சின்ன மருதுவிற்குத் தன் அண்ணன் மீதும், சிவகங்கை அரசர் மீதும் பயமும், மரியாதையும் இருந்ததால் எல்லா விசயத்தையும் அவர்களிடம் வெளிப்படையாகச் சொல்லுவதில்லை. அவர்களும் சின்ன மருதுவிற்கு முழு சுதந்திரம் கொடுத்திருந்தனர். அந்தச் சுதந்திரத்தை சின்ன மருது ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தியதில்லை.

மயிலப்பன் எழுந்தான். "விருப்பாச்சியில் நடந்த கூட்டத்தில் தான் நேரடியாகச் சின்ன மருது சேர்வைக்காரர்மீது மற்ற பகுதிப் போராளிகள் வைத்திருந்த மரியாதையைக் கண்டேன். கூட்டம் ஆரம்பிக்கும்போதே தனக்குத் தரப்பட்ட பெரும் கல் ஆசனத்தை விருப்பாச்சி கோபால் நாயக்கர், தான் உட்காராமல் சின்ன மருது சேர்வைக்காரரை அதில் வற்புறுத்தி அமர வைத்தார். அந்தக் கூட்டத்தில் சின்ன மருது சேர்வைக்காரர் பேசிய எழுச்சியான பேச்சு பெரிதும் பாராட்டப்பட்டது. வெளியூர்ப் போராளிகள் குறிப்பாக முஸ்லீம் போராளிகள் அவர்களது மதவழக்கப்படி சின்ன மருது சேர்வைக்காரருக்குச் சலாம் செய்து அவரது வலது கையை எடுத்து முத்தமிட்டனர். புளங்காகிதம் அடைந்து போனேன். சின்ன மருது சேர்வைக்காரர் புனாவிலிருந்து நாங்குனேரி வரையான அனைத்து ஊர்களின் புரட்சியாளர்களின் தலைமை ஒருங்கிணைப்பாளர் என்று எனக்கு அப்போதுதான் தெரிந்தது" என்றார்.

பெரிய மருது தனது மீசையைத் தடவி தம்பியைப் பார்த்து புன்னகைத்தார். அரசன் வெங்கம் உடையணத் தேவர் உணர்ச்சிப் பெருக்கில் மரபை மீறினார். ஆசனத்திலிருந்து எழுந்து வந்து சின்ன அம்மானைத் தழுவி அவர் காலில் விழுந்தார். சின்ன மருது, "அரசே, என்னை தர்மசங்கடத்தில் ஆழ்த்துகிறீர்கள்" என்று சின்ன மருது அதிர்ந்தார். பெரிய மருது பதறி எழுந்தார்.

•

35

மே **28, 1801**

ஆலோசனைக் கூட்டம் முடிந்தவுடன் சின்ன மருது வீட்டிற்குக்கூட செல்லவில்லை. மயிலப்பனை அழைத்து, "சேதுபதி முத்துகருப்பத் தேவர் அரண்மனையில் இருந்து ஓய்வெடுக்கட்டும். நீ இன்று இரவு அவரோடு தங்கி ராமநாதபுரம் பகுதியில் படை சேர்ப்பது குறித்து விவாதித்துவிட்டு நாளைக் காலை கிளம்பி கமுதி வா" என்றார். மயிலப்பனையும் பெரும் கூட்டத்தையும் சிவகங்கையிலிருந்து அழைத்துச் செல்ல வேண்டாம் என்று மருது முடிவு செய்தார். மயிலப்பனுக்குக் குழப்பமாக இருந்தது.

"அரண்மனை, நான் உங்களுடன் வருகிறேன். புதிய சேதுபதியும் நம்மோடு வந்தால் இன்னும் எழுச்சியாக இருக்கும். பெரும் கூட்டத்தோடு சென்று கமுதிக் கோட்டையைக் கைப்பற்றுவோம்" என்றார்.

"இல்லை மயிலப்பன். இன்னும் ஆங்கிலப் படை கமுதிக்கு வரவில்லை. இரண்டாம் பஞ்சாலங்குறிச்சிப் போரில் தோற்ற ஊமைத்துரையை விரட்டிக்கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அக்னியூ ஊமைத்துரையை விரட்டிக்கொண்டு வரவில்லை. மூன்று நாட்களாக அவன் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து கிளம்பவும் இல்லை. அவனின் அடுத்த நடவடிக்கை என்ன? என்று நாம் தெரிந்து கொள்ள

வேண்டும். இப்போதைக்கு கமுதிக் கோட்டையைத் தாக்கி ஆங்கிலேயர்களுடான போரை நாம்தான் ஆரம்பித்து வைத்தோம் என்று இருக்க வேண்டாம். எப்படி அவன் ராஜதந்திரமாக நம்மீது குறை சொல்ல சந்தர்ப்பம் பார்த்திருக்கின்றானோ அதுபோல நாமும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருப்போம். நான் சொன்னபடி நீ நாளை வந்தால் போதும்" என்ற சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

எப்போதும் உடன் வருகின்ற பத்துப் பதினைந்து குதிரைப் படையினரை மட்டும் அழைத்துக் கொண்டு, அதிக கூட்டத்தைச் சேர்த்துக்கொள்ளாமல், கமுதிக்குப் புறப்பட்டார் சின்ன மருது. ஆனால் வழிநெடுகிலும் சின்ன பாண்டியரைப் பார்த்தவர்கள் விரைந்து செல்லும் அவர் குதிரையைப் பின் தொடர்ந்தனர். அபிராமம் கடைத்தெருவில் சிறிது நேரம் சின்ன மருது நின்று ஓய்வெடுத்தார். சின்ன மருதுவைப் பார்க்கப் பெரும் கூட்டம் கூடிவிட்டது. அவர்களிடம் ஊமைத்துரை கமுதிக்கு அருகில் காத்திருப்பதை சின்ன மருது தெரிவித்தார். தகவல் அபிராமம் கிராமத்திற்குள் பரவிய கணத்தில் இளைஞர்கள் பெருமளவில் சேர்ந்தனர். கமுதி நோக்கி சின்ன மருது முன்னேறினார்.

கமுதி நகரில் பெரும் ஆலமரத்தின்கீழ் ஊமைத்துரை படுத்திருந்தார். உடலில் ஐந்து, ஆறு இடங்களில் காயம் இருந்தது. அவருடன் வந்த எண்ணூறு வீரர்கள் ஊமைத்துரை படுத்திருந்த மரத்தடியைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முகத்தில் எந்த உணர்ச்சியும் காண்பிக்கவில்லை.

"சிவகங்கைக்கு ஊமைத்துரை தகவல் சொல்லி விட்டிருக்கிறாராம். அதுவரை காத்திருக்கணுமாம்" என்று மட்டும் ஊமைத்துரையின் படைவீரர்களுக்குத் தெரிந்திருந்தது. சின்னமருது பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பிய சிவகங்கைப் போராளிகள் சிலரும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். சிவகங்கைப் படைவீரர்களை ஊமைத்துரை அவரவர் ஊருக்குப் போகச் சொன்னார். இதுபோன்ற நெருக்கடியான நிலையில் ஊமைத்துரையை விட்டுவிட்டுப் போவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட சிவத்தையா அவர்களிடம் பேசினார். "எங்களை நடு வழியில் விட்டுவிட்டு போகக் கூடாது என நீங்கள் நினைக்கிறீர்கள். உங்களது வீரத்தையும் பெருந்தன்மையையும் நாங்கள் அறிவோம். இப்போதைக்கு நான் எந்த முடிவும் எடுக்கவில்லை. சின்ன மருது சேர்வைக்காரருடன் கலந்துபேசி அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். அது வரையில் நீங்கள் உங்கள் ஊருக்குப் போய் உங்கள்

வேலைகளைப் பாருங்கள். மீண்டும் அழைக்கும்போது வாருங்கள்” என்றார். சிவத்தையா சொன்னதை ஏற்றுக்கொண்ட, படைவீரர்கள் சிவத்தையாவையும் ஊமைத்துரையையும் வணங்கிவிட்டு தங்கள் கிராமங்களுக்குப் பயணப்பட்டனர்.

கமுதியில் இருந்து சிவகங்கைப் போய்க் கொண்டிருந்த, சிவகங்கைப் போர் வீரர்கள், சின்ன மருது கமுதிக் கடைத்தெருவை கடந்து வருவதைப் பார்த்து அவரை நோக்கி ஓடி வந்தனர். ஊமைத்துரையின் நிலையையும் அவர் தங்கி இருக்கும் மரத்தின் அடையாளத்தையும் கூறினர். சின்ன மருது பெரும் மக்கள் கூட்டத்துடன் கமுதி நகருக்கு வெளியே வந்தார். கையில் விளக்குகளுடன், எழுச்சியுடன் கூட்டம் வருவதையும் பார்த்து, தங்களை நோக்கி வருவது சின்ன மருதுதான் என சிவத்தையா தெரிந்துகொண்டார். “விளக்குகளை ஏற்றுங்கள். தீப்பந்தங்களைக் காண்பியுங்கள். சின்ன மருது சேர்வைக்காரர் வந்து கொண்டிருக்கிறார்” என்று அறிவித்தார். தூங்காமல் தரையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்களும், விழித்திருந்தவர்களும் விரைந்து எழுந்து தீப்பந்தங்களைத் தயார் செய்தனர். தூங்குபவர்களையும் காயம் அடைந்தவர்களையும் மெதுவாக அசைத்து, “சேர்வைக்காரர் வருகிறார்” என்று தகவல் தெரிவித்தனர்.

சின்ன மருது சேர்வைக்காரரின் குதிரை அந்தக் கூட்டத்தின் முன்பாக வந்தது. அவருக்குப் பின்னால் கமுதி கிராமத்துப் பெண்கள் சிலரும் வந்திருந்தனர். மருது குதிரையைவிட்டு இறங்கினார். சிவத்தையா மருதுவை வணங்கி கட்டிப்பிடித்தார். தரையில் படுத்திருந்த ஊமைத்துரையின் கைகளை சின்ன மருது பிடித்துக் கொண்டார். விளக்கு வெளிச்சத்தில் ஊமைத்துரையின் உடம்பிலிருந்த காயங்களைப் பார்த்தார். சின்ன மருதுவுடன் வந்திருந்த பெண்கள் குலவையிட்டனர். இரவு நேரத்தில் பெண்களின் குலவைச் சத்தத்தில் ஆலமரக்காடு அதிர்ந்தது.

கமுதி கடைத்தெருக்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பழங்கள் அனைவருக்கும் தரப்பட்டன. ஊமைத்துரையின் காயங்களுக்கு கமுதி வைத்தியர் மருந்து வைத்துக் கட்டினார். சில வீரர்கள் வைத்தியரிடம் மருந்தை வாங்கிக் காயம் பட்ட வீரர்களின் காயங்களின்மீது பூசினர். சின்ன மருது ஊமையிடமும் சிவத்தையாவிடமும் பேசட்டும் என்று கூட்டம் சற்றுத் தள்ளி நின்றது.

சின்ன மருது, “யுத்தம் பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். உங்கள் இருவருக்கும் ஓய்வு முக்கியம்” என்று சொல்லிவிட்டு “உங்களோடு வந்துள்ள வீரர்களை என்ன செய்வதாக இருக்கிறீர்கள்? நம்முடனே சிவகங்கைக்கு அவர்களும் வரட்டுமா? இங்கிருந்து இப்போதைக்கு அனுப்பிவிடுவோமா?” என்று கேட்டார்.

எண்ணூறு வீரர்களும் கொஞ்சம் ஓய்வெடுத்து வந்தால் நல்லது என்று சிவத்தையாவுக்குத் தோன்றியது. “ஆம் சேர்வைக்காரரே. நானும் இவர்களை இப்போதைக்கு அவர்களது ஊர்களுக்கு அனுப்பிவிடலாம் என்றுதான் யோசிக்கிறேன். நீங்கள் அனுப்பிய சிவகங்கை வீரர்களைக்கூட இப்போதுதான் அவரவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். அதேபோல் எங்கள் பகுதி ஆட்களையும் அனுப்பி வைக்கலாம் என யோசிக்கிறேன்” என்றார்.

“நல்ல யோசனைதான். காயம்பட்டவர்களும் அவர்களுக்கு உதவியாக இருப்பவர்களும் இதே இடத்தில் தங்கிக் கொள்ளட்டும். கமுதி வைத்தியர் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பார். கமுதி நாடார் வகையறா பலசரக்கு காய்கறிகள் தருவார்கள். கடைத்தெருவில் உள்ள செட்டியார்கள் உணவைச் சமைத்துக் கொடுப்பார்கள். உங்கள் ஊருக்கு உடனடியாகத் திரும்பப் போக வேண்டியவர்கள் ஆயுதங்களை எங்களிடம் ஒப்படைத்துவிடட்டும். ஆயுதங்களோடு ஊருக்குத் திரும்புவதை வெள்ளைக்காரர்கள் பார்த்தால் கடுமையாகத் தண்டிப்பார்கள். ஆயுதம் ஏந்தாமல் சென்றால் இவர்களை விவசாயிகள் என்று நினைத்துத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்” என்றார்.

பாஞ்சாலங்குறிச்சிப் போர் முடிந்தவுடன் கையில் ஆயுதங்களுடனும், உடலில் காயங்களுடனும் சிக்கிய பாஞ்சாலங் குறிச்சி வீரர்கள் எண்ணூறு பேரை லெப்டினென்ட் கர்னல் அக்னியூ பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வாசலில் தூக்கில் போட்டதை இப்போதைக்கு சிவத்தையாவிடமும் ஊமைத் துரையிடமும் சொல்ல வேண்டாம் என்று சின்ன மருது அவர்களிடம் சொல்லவில்லை.

ஊமைத்துரையையும் சிவத்தையாவையும் சாரட் வண்டியில் சின்ன மருது ஏற்றினார். அவர்கள் இருவருக்கும் பணிவிடை செய்ய அவர்களுக்கு நெருக்கமானவர்கள் பத்துப் பேரை மட்டும்கூட இருக்க அனுமதித்தார். மீதி உள்ள அனைவரும் அவரவர் ஊர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். பின் இரவு நேரத்தில் சின்ன மருது, ஊமைத்துரை,

சிவத்தையாவுடன் ஒரு கூட்டம் கமுதி, அபிராமம் கிராமங்களைக் கடந்து சிவகங்கையை நோக்கி நகர்ந்தது.

சிவகங்கை வரும் வழியில் அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரும், அண்ணன் பெரிய மருதுவும் சிறுவயலுக்கு வந்து விட்டதாகச் சின்ன மருதுவிற்குத் தகவல் கிடைத்தது. சிவகங்கைக்குப் போகும் திட்டத்தை சின்ன மருது உடனடியாக மாற்றினார். தான் சிறுவயலுக்கு வருவதாகவும், சிவகங்கை அரசர் வெங்கம் உடையணத் தேவர், சிவத்தையாவையும், ஊமைத்துரையையும் நேரில் வந்து வரவேற்றால் சிறப்பாக இருக்கும் என்று குதிரைப்படை வீரர்கள் மூலம் அரசருக்கு முன் தகவல் அனுப்பினார்.

அதிகாலையில் சிறுவயல் பெரிய மருதுவின் அரண்மனைக்கு சின்ன மருதுவின் ஆட்கள் வந்து சேர்ந்தனர். வரவேற்பு வெடிகள் வெடிக்கப்பட்டன. பெண்கள் குலவையிட்டனர். ஆரத்தி எடுத்தனர். அரசரும் பெரிய மருதுவும் அரண்மனைக்கு வெளியில் வந்து ஊமைத்துரையும், சிவத்தையாவையும் வரவேற்றனர். ஊரே கோலாகலமாகிவிட்டது. பக்கத்து கிராமங்களுக்குத் தகவல் சொல்லிவிடப்பட்டது. கையில் கிடைத்த கோழி, ஆடு, காய்கறிகள் என எடுத்துக் கொண்டு மக்கள் ஊமைத்துரையைப் பார்க்கச் சிறுவயல் கிராமத்திற்கு வந்தனர். ஊமைத்துரையின் காயங்கள் முழுவதுமாக ஆற சிறிது நாட்கள் தேவைப்படும் என்பதால் அவர் சிறுவயலிலேயே தங்கி இருக்கட்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பெரிய மருதுவுடனும் அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவருடனும் சின்ன மருது சிவகங்கை அரசின் எதிர்காலம் குறித்து விவாதித்தார்.

அரசரிடம் விடைபெற்ற சின்ன மருது அண்ணனின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார். கிளம்பும்போது வாசல்படி தடுக்கியது. அரசர் பதறியபடி ஓடி வந்தார். “அம்மான், பாத்து அம்மான், சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு செல்லுங்கள்” என்றார் அரசர். சின்ன மருது உட்கார்ந்திருந்தார். காலைத் தளரவிட்டுக் கொண்டார். “இந்த நீரையும் அருந்துங்கள் அம்மான், தண்ணீர்தான் சகுனத் தடைக்கு மருந்து” என்று சொல்லிச் சிரித்தார். மருது எழுந்து நின்று அரசரிடமிருந்து தண்ணீரை வாங்கிக் குடித்தார்.

•

36

அறந்தாங்கியில் ஒதுக்குப்புறமான இடத்தில் பெரிய வீடு ஒன்று இருக்கிறது. அந்த வீட்டில் இப்போது பரபரப்புத் தெரிகிறது. கடந்த பத்து வருடமாக அந்த வீட்டில் இருப்பவர்கள் இதே வீட்டில்தான் இருக்கிறார்கள். கிராமத்தில் அவர்கள் யார் கூடவும் பேச மாட்டார்கள். வயதான பெரியவர் ஒருத்தர் மட்டும் வீட்டுக்கு வெளியே கொஞ்சம் தலையைக் காட்டுவார். அவர் தடித்த மீசை வைத்துக்கொண்டிருப்பார். அவருக்குத் தினமும் சவரம் செய்து கொள்ள வேண்டும். பெரியவருக்கு சவரம் செய்வதற்கென்றே தனி ஆள் ஒருவன் இருக்கிறான். இரண்டு மூன்று மாதங்கள் வரை பெரிய வீட்டிற்கு முன்புள்ள ஒரு குடிசையில் அந்த ஆள் குடியிருப்பான். ஒவ்வொரு நாளும் பெரிய வீட்டில் பெரியவருக்குச் சவரம் செய்துவிட்டு அந்த வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருப்பான். இரவு நேரம் வந்தவுடன் குடிசைக்குள் அடைந்து கொள்வான். இரண்டு மாதம் கழித்துப் புது ஆள் வருவான்.

இன்றைக்குப் பெரிய வீட்டிற்குள் நிறைய ஆட்கள் இருப்பது தெரிந்தது. அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு என்ன வருமானம் எனத் தெரியாது. ஆனால் தினமும் நல்ல சாப்பாடு நடக்கும். தினமும் சமையலில் நெய் வாசனை வரும். வீட்டிற்கு வெளியே கிடக்கும் வாழை இலைகள் பளபளவென்று எண்ணெய்ப் பசையோடு இருக்கும். வீட்டில் பத்து இருபது பெண்களும் இருந்தார்கள். குழந்தைகள் யாரும் இல்லை. எப்போதாவது மாதத்திற்கு ஒருமுறை, இருமுறை ஒரு மாட்டுவண்டி வீட்டிற்கு வரும். மறுநாளே கிளம்பிவிடும். மாட்டு வண்டி கூட எங்கிருந்து வருகிறது என யாருக்கும் தெரியாது. கூண்டு வண்டி. வண்டிக்குள் உட்கார்ந்திருப்பது யார் என்று தெரியாத அளவு வண்டியைச் சுற்றி திரைச்சீலை போடப்பட்டிருக்கும். வண்டி கிளம்பிப் போனால் இரண்டு மூன்று நாட்கள் கழித்து நள்ளிரவு நேரத்தில் வீட்டுக்குத் திரும்பும். வண்டி வருவதுகூட நாய்கள் குறைப்பதை வைத்துத்தான் சொல்ல முடியும். அவர்கள் இந்த வீட்டிற்கு குடி வந்த புதிதில் யார் அவர்கள் என அறிந்துகொள்ள ஊர் மக்கள் ஆர்வம் காண்பித்தனர். ஒருமுறை புதுக்கோட்டை தொண்டைமானின் ஆட்கள் அந்த வீட்டுக்கு வந்து, வீட்டிற்குள் இருந்த கடா மீசை வைத்தப் பெரியவரிடம் மரியாதையுடன் பேசிவிட்டுச் சென்றதைப் பார்த்ததும்தான் ஊர் மக்களுக்கு பயம் வந்துவிட்டது. தொண்டைமானுக்கு வேண்டிய ஒரு குடும்பம் அந்த வீட்டில் தங்கியிருக்கிறார்கள். பெரிய இடத்து விசயம். நமக்கு எதற்கு

வம்பு என்று யாரும் அந்த வீட்டுப் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. தீபாவளி, பொங்கல் என்றால்கூட அந்த வீட்டில் எந்தச் சலனமும் இருக்காது.

பத்து ஆண்டுகளாக இல்லாத சலனம் இப்பொழுது வீட்டில் தெரிய ஆரம்பித்து விட்டது. தொண்டைமானின் திருமயம் கோட்டை அமில்தார் திடீரென வீட்டிற்கு வந்தார். வீட்டிற்கு வெளியே வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார். மரியாதையாக நின்றார். அவருடன் வந்த சிப்பாய் ஒருவன் வீட்டிற்குள் போய் ஏதோ சொல்லிவிட்டு வந்தான். தடித்த மீசைக்காரர் வெளியே வந்தார். வெள்ளை வெளேரென வேட்டி கட்டி, பட்டுத்துண்டு போர்த்தியிருந்தார். உடம்பில் சந்தனம் பூசியிருந்தார். மீசைக்காரர் வீட்டிற்கு வெளியே வந்ததும் அமில்தார் கை கூப்பி அவருக்கு வணக்கம் தெரிவித்தார். ஒரு காகிதத்தைப் பெரியவரிடம் காட்டினார். அதை நின்றபடி படித்துப் பார்த்தப் பெரியவர், “எனக்கு ஒருநாள் அவகாசம் வேண்டும். நாளைக் காலையில் இதே நேரத்தில் வரச் சொல்லுங்கள். நான் தயாராக இருக்கச் சொல்லுகிறேன்” என்றார்.

திருமயம் அமில்தார் மீண்டும் வணங்கினார். பெரியவர் பதில் வணக்கம் தெரிவித்தார். பெரியவர் வீட்டுக்குள் செல்லும் வரை பார்த்திருந்த அமில்தார் தனது குதிரைப் பூட்டிய சாரட்டில் கிளம்பினார். ஊர்ச் சிறுவர்கள் சாரட் வண்டியையும் வண்டிக்கு முன்னும் பின்னும் செல்லும் குதிரை வீரர்களையும் பயத்துடன் பார்த்தனர். எப்போதெல்லாம் இதுபோல் சாரட் வண்டிகளும் குதிரை வீரர்களும் வீட்டிற்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் பெரும் யுத்தங்கள் வந்துள்ளன. அறந்தாங்கியின் வெள்ளாற்றங்கரை காலங்காலமாகப் பாண்டிய நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் எல்லையாக இருந்துள்ளது. பாண்டியர்கள் காலத்திற்குப் பின்பு ராமநாதபுரம் சேதுபதியின் ஆட்சியின் போதும் இப்போது புதுக்கோட்டை தொண்டைமான் ஆட்சியின் போதும் இதுதான் அவர்களது வடக்கு எல்லை. தஞ்சை அரசர் ஏகோஜி தஞ்சாவூரில் இருந்தாலும் அடிக்கடி அவரது படைகள் பட்டுக்கோட்டை, அதிராமப்பட்டினம், சேதுபாவாசத்திரம் என்று வந்து தங்கும். பல நேரங்களில் தஞ்சாவூர்ப் படைகளுக்கும் புதுக்கோட்டை தொண்டைமான் படைகளுக்கும் சண்டை நடக்கிற இடம் அறந்தாங்கிதான். அதனாலேயே அரண்மனை சேவகர்கள் அறந்தாங்கியில் அதிகமாக தட்டுப்பட்டால் ஊர் மக்களுக்கு கதி கலங்க ஆரம்பித்துவிடும். திருமயம் அமில்தாரின் வண்டி கிளம்பியதை வீட்டிற்குள் இருந்தவர்கள் ஜன்னல் வழியாகப் பார்த்தார்கள்.

மீசை வைத்தப் பெரியவர் “வீட்டுல இருக்க அத்தனைப் பேரையும் என் அறைக்கு வரச் சொல்லு” என்று வேலைக்காரர்களிடம் சொல்லிவிட்டு தனது அறைக்குள் போய் சுவரில் மாட்டியிருந்த கௌரி வல்லபர் சாமி படத்தின் முன்பு நின்றார். அவரை அறியாமல் தோளில் போட்டிருந்தத் துண்டு இடுப்புக்கு வந்தது. வீட்டில் இருந்த குடும்பத்தினர் அனைவரும் பெரியவரின் அறைக்கு வந்தனர். பெரியவர் ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என குடும்பத்தினர் ஆவலுடன் அவர் முகத்தைக் கவனித்தனர். பெரியவர் வரிசையாக ஒவ்வொருவராகப் பார்த்தார். மூத்த மகன் படமாத்தூர் ஒய்யாத் தேவர். தன்னுடைய பெயரையே மகனுக்கும் வைத்து விட்டார். வயது நாற்பது. ஆனால் அறுபது வயதானவன் போன்ற கிழட்டுத் தோற்றம். பார்வைக் குறைபாடு இருக்கிறது. எழுதப் படிக்கப் பழகவில்லை. சிறுவயதிலிருந்தே யார் கூடவும் பேசாமல் அமைதியாக இருப்பான். இப்போதுகூட அவன் மனைவிதான் கையைப் பிடித்து கூட்டி வந்திருக்கிறாள். பெரியவர் மருமகளைப் பார்த்தார்.

“ஆத்தா, பெரியவனைப் பதட்டப்படாம உட்கார வை. நீயும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவனைப் பிடித்துக்கொள். என்னமோ, ஏதோ என்று பயப்படுவான்” என்று சொன்னார். பெரியவர் சொன்னவுடன் “ஏங்க, மாமா உங்கள உட்காரச் சொல்லிட்டாரு. உட்காருங்க” என்று அவன் காதுக்குள் சொல்லி அவனை உட்கார வைத்து அவளும் உட்கார்ந்துகொண்டாள். கம்பீரத் தோற்றமுடைய தனது இரண்டாம் மகனைப் பார்த்ததும் பெரியவருக்குப் பூரிப்பு ஏற்பட்டது. அவரது கை மீசையை முறுக்கியது.

“படமாத்தூர் முத்து விஜயரகுநாத கௌரி வல்லபத் தேவன், நம் குலதெய்வம் கௌரி வல்லபரின் அருளில் பிறந்தவனே” என்றார்.

“என்ன அப்பா, என் முழுப்பெயரை சொல்லுகிறீர்கள். மகிழ்ச்சி யாக இருக்கிறீங்க மாதிரி தெரியுது. நம் வீட்டிற்கு இப்போது திருமயம் அமில்தார் வந்தாரே, ஏதோ ஒரு காகிதம் கொடுத்ததாக மதினி சொன்னார்கள். ஏதும் நல்ல செய்தியாப்பா? அல்லது புதுப் பிரச்சனையாப்பா” என்றான் கௌரி வல்லபன்.

“என்னடா கௌரி? காகிதம் வந்தது என்றால் இதுவரை பிரச்சனைதான். இப்போது நல்ல செய்தி தாங்கிக் கடிதம் வந்திருக்கிறது.”

“இதுவரை வராத நல்ல செய்தி புதிதாக என்ன வரப் போகுது அப்பா?” என்றான் கௌரி வல்லவன்.

“கௌரி, நீ இளைஞன். இந்தச் சிறு வயதிற்குள் சந்தித்தப் பிரச்சனைகள் உன்னை விரக்தியாகப் பேச வைக்கின்றன. காலச்சக்கரம் எப்போதும் ஒரே மாதிரியாகச் சுற்றாது. காலம் மாறும்...”

“காலம் மாறும் என்று தெரியும் அப்பா. நமக்கு என்ன மாற்றம் வரப்போகிறது?. ஏறக்குறையப் பத்து வருடமாக நமக்கு இந்த ஒதுக்குப்புற மாளிகைதானே நம் சிறைச்சாலை. சரபோஜி மன்னரின் தயவிலும் தொண்டைமான் தயவிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.”

“ஆமாம் கௌரி, சரபோஜி பாவம். இப்போது அவர் ஏறக்குறைய நம் நிலைக்கு வந்துவிட்டார். கலெக்டரின் அதிகாரத்திற்குள் தஞ்சாவூர் வந்துவிட்டது. ஆரம்பத்தில் அவர் அதிகாரத்தில் இருக்கும்போது நமக்கு உதவினார். அதை மறக்கக் கூடாது. அதேபோல ஆங்கிலேயரை மறந்துவிட்டாய்? குறிப்பாக, திருநெல்வேலி கலெக்டர் லூஷிங்டன், நாம் மறக்கக்கூடாத ஆள் அவர்.”

கௌரி வல்லபரின் ஆறாவது மனைவி தெலுங்கு மொழி பேசுபவள். மருது பாண்டியர்கள் ஒரு முறை கௌரி வல்லபரைச் சிறைப்படுத்த ஆட்களை அனுப்பியபோது கௌரி வல்லபர் மாறு வேடமிட்டு, தஞ்சாவூர் நாட்டிற்குள் அலைந்து திரிந்தார். அப்போது பட்டுக்கோட்டைக்கு அருகில் சென்றுகொண்டிருக்கும்போது பசி மயக்கத்தில் மயங்கி விழுந்துவிட்டார். அந்த வழியாக வயல்காட்டு வேலைக்குச் சென்று கொண்டிருந்த ஒருத்தி அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கத்திலிருந்து எழுப்பினாள். அவருக்கு நல்ல பசி என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. அவளுக்கு வைத்திருந்த சாப்பாட்டைக் கொடுத்தாள். சாப்பிட்டவுடன் கௌரி வல்லபருக்குப் பசி மயக்கம் தீர்ந்துவிட்டது. அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தார். அவள் பெயர் பர்வதவர்த்தினி என்றும் சொந்தக்காரர்கள் ஆதரவில் வளரும் பெண் என்றும் தெரிந்துகொண்டார். சாப்பிட்டுவிட்டு எழுந்த அழகிய வாலிபனைப் பார்த்த பர்வதவர்த்தினிக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது. சிறிது நேரத்தில் கிளம்பத் தயாரானவனைப் பார்த்து “உங்களைப் பற்றி ஒன்னும் சொல்லவில்லையே” எனக் கேட்டாள்.

“என் பெயர் கௌரி வல்லபதேவன். சொந்த ஊர் சிவகங்கை பக்கம் உள்ள நாலுகோட்டை கிராமம். தகப்பனார் ஒய்யாத்தேவர் என்ற

தேசக்காவலர் நமச்சிவாயத் தேவர்” என்று சொல்லி நிறுத்தினான்.

“திருமணம் ஆகிவிட்டதா?”

“ஏன்? எதுக்குக் கேட்கிறாய்?” என்றான்.

“இல்லை. கேட்கத் தோணுச்சு. பார்க்க ராசாவாட்டம் இருக்கீங்க? பாத்துக்கிட்டே இருக்கலாம் போலயிருக்கு.”

“கல்யாணம் ஆகிவிட்டது.”

“பரவாயில்லை. அப்படியிருந்தாலும் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போலயிருக்கு.”

“விளையாட்டுப் பெண்ணாக இருக்கிறாய்? எனக்குச் சரியான நேரத்தில் உணவு கொடுத்துக் காப்பாற்றினாய். எனக்கு நல்ல காலம் எப்பவாவது வரும். அப்போது உன்னைத் தேடி இந்த ஊருக்குக் குதிரை பூட்டிய சாரட் வண்டியில் சிப்பாய்கள் வருவார்கள். இங்கு வந்து உன்னைத் தேடுவார்கள்.”

“அய்யய்யோ, எதுக்கு? தூக்குல போடவா?”

“இல்லை. உனக்கு சன்மானம் தர.”

“அதுவரைப் பொறுக்க என்னால் முடியாது. இப்பவே உங்ககூட வர்றேன். எங்க வேணும்னாலும் கூப்பிட்டுப் போங்க. உங்களப் பார்த்தா வயக்காட்டு வேல செஞ்சு பொழைக்கிற ஆளு மாதிரி தெரியல. பரம்பரையா உக்கார்ந்து சாப்பிடுற ஆள் மாதிரி இருக்கீங்க. நா எல்லா வேலையும் பார்ப்பேன். ஒங்கள உக்காரவச்சு நா சோறு போடுறேன். என் பெத்தப்பா, பெத்தம்மாவிடம் வந்து என்னை ஒங்களோடு கூட்டிக்கிட்டுப் போகப் போறேன்னு சொல்லுங்க.”

“என்னம்மா விளையாட்டுப் பிள்ளையா இருக்கியே? என்னை யாருன்னு முழுசா உனக்குத் தெரியாது. உன் பெத்தம்மா பெத்தப்பாவை இப்பத்தான் பார்க்கப் போகிறேன். எடுத்தவுடனேயே பொண்ணு குடுங்கன்னு கேட்டா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?”

“ஒன்னும் நினைக்க மாட்டாங்க. ரெண்டு நாளைக்கு முன்னால தான் குறிகாரி சொன்னா. எனக்குப் பெரிய யோகம் வருது. நா ஒரு ஆம்பளயப் பார்ப்பேன். பாத்தவுடன் அவர எனக்குப் பிடிச்சுப் போகும். நானும் அவரும் சேர்ந்து வாழ்ந்தா சகல ஐசுவரியங்களும் கிடைக்கும்னு

சொன்னா. அவ சொன்னது எங்க வீட்ல எல்லாருக்கும் தெரியும். இப்ப ஒங்களப் பார்த்தாங்கன்னா குறிகாரி சொன்னது உண்மைன்னு நினைச்சுக்கிட்டு என்னைய ஒங்க கூட அனுப்பி விடுவாங்க."

"நான் ஏற்கனவே திருமணம் ஆனவன்னு அவங்களுக்குத் தெரிந்தால்?"

"ஒன்னும் ஆகாது. எனக்கு மட்டும் தெரிந்தால் போதும்."

"ஊர் பெயர் தெரியாதவனுக்குப் பெண் குடுக்க மாட்டோம்னு சொல்லிட்டா?"

"ஆமா, என்னைய இதுவர எவன் பொண்ணு கேட்டான்?"

"ஏன், நீ ஆள் ரொம்ப அழகாத்தான இருக்கே. புது நிறத்துல, சிரிச்ச முகமா, உயரமா ஓங்கு தாங்கா சுருட்ட முடியோட இருக்க. இதுவர யாரும் உன்னைப் பொண்ணு கேக்கலையா? ஆச்சரியமா யிருக்கே?"

"இந்த ஊர்க்கார நாறப்பய கண்ணுகளுக்கு நா அழகியா தெரி யாதது என் நல்ல நேரம் தான். ஒங்களப் போல ஒரு ஆண் அழகனோட வாழணும்னு என் தலையில எழுதியிருந்திருக்கு."

"ஜாதியைக் காட்டி என்னை உன் வீட்டில் நிராகரிச்சா?"

"அவங்க என்ன ஒங்கள நிராகரிக்கிறது? நா என் குடும்பத்த நிராகரிச்சிருவேன். நான் ஒங்க கூட வந்திருவேன். "

"நானே நாடோடியா பயந்து பயந்து வாழ்கிறேன். என்னைப் பக்கத்து நாட்டில் உள்ள ஒரு அரசாங்கம் தேடிக்கிட்டு இருக்கு. என்னால் உனக்குத் துன்பம்தான் வரும். எந்த சுகமும் கிடைக்காது."

"வாழ்வோ, சாவோ, அது ஒங்களோடதான். வாங்க வீட்டுக்குப் போவோம். எங்க வீட்டுல சரின்னு சொன்னாங்கன்னா இன்று இரவு என் வீட்டிலேயே ஒங்களுக்கு மனைவியாக வாழ்வேன். இல்லைன்னாலும், ஏதோ ஒரு மரத்தடியில் ஒங்கள் மனைவியாவேன்."

கௌரி வல்லபனுக்கு அந்தப் பெண் மீது ஆசை அதிகமாயிற்று. அவள் கையைப் பிடித்தான். கைகள் வாளிப்பாக இருந்தன. தலை நிறைய இருந்த முடியை அள்ளி முடிந்திருந்தாள். பற்கள் சீராக வெள்ளையாக இருந்தன. கைகளில் நேற்றோ அதற்கு முந்தைய நாளோ

வைத்திருந்த மருதாணியின் வாசம் மயக்கியது. தோளைத் தொட்டான். அவள் கையைத் தட்டி விட்டாள்.

“நேரத்தோட வீட்டுக்குப் போகலாம். வீட்டுல நாம ரெண்டு பேரும் சேர்ந்து போறதப் பார்த்து என்ன கலாட்டா நடக்குமோன்னு நான் யோசிச்சிக்கிட்டிருக்கேன். நீங்க என்ன வேல பார்க்க இப்ப தவதாயப்படுறீங்க?அய்யாவுக்குப் பார்வ சரியில்ல. ஆளு பேரு வர்ற இடம்” என்றபடி கௌரிவல்லபனின் கையை விலக்கிவிட்டாள். அவனுக்கு முன்னால் வேகமாக நடந்தாள். கௌரி வல்லபன் அவள் பின்னால் நடக்கவில்லை. வயல் ஓரத்தில் ஓடிய கால்வாய்த் தண்ணீரை இரு கைகளிலும் அள்ளி முகத்தையும் கை கால்களையும் கழுவினான். இரண்டு வாய் தண்ணீர்க் குடித்துவிட்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டான். வேகமாகச் சென்ற பர்வதம் திரும்பிப் பார்த்தாள். கௌரி வல்லபன் வரவில்லை. திரும்பி ஓடி வந்தாள். “என்ன பாவா உட்கார்ந்துட்டீங்க?”

“நேத்துக் காலைல நடக்க ஆரம்பிச்சேன்”

“எங்கயிருந்து?”

“அறந்தாங்கியிலிருந்து.”

“எங்கயும் ஒக்காரலையா? ஓய்வு எடுக்கலையா?”

“இல்ல. தொடர்ந்து நடைதான். அதுதான் கால் சோர்ந்து வருது. கொஞ்ச நேரம் உக்கார்ந்துட்டு வர்றேன். நீ வேணும்னா முன்னால போய் வீட்லயிரு.”

“எப்படி என் வீட்டக் கண்டு பிடிப்பீங்க?”

“ரொம்ப சுலபம். பர்வதம்ன்னு தெலுங்கு பேசுற அழகி வீடு எதுன்னு யாரையாவது ஒரு இளந்தாரிப் பயலப் பாத்துக் கேட்டா சொல்லிட்டுப் போறான்.”

“இங்கப் பாருங்க பாவா. எங்க ஊர்ல யார் கிட்டயும் எம் பேரச் சொல்லியெல்லாம் விசாரிக்காதீங்க. அசிங்கம். சரி நா கொஞ்ச நேரம் ஒங்க கூட உக்கார்றேன். காலக் குடுங்க. பிடிச்சு விடுறேன். சரியாயிடும்” என்று சொல்லி கௌரி வல்லபனின் கால்களைப் பிடித்துவிட்டாள்.

அவளைப் பார்த்து சிரித்த கௌரி வல்லபன் வாய்க்காலில் ஓடிய தண்ணீரைக் கையில் அள்ளி அவள் மீது ஊற்றினான். ரவிக்கை போடாத அவளது சேலையின் மேல் பகுதி நனைந்து விட்டது.

"என்ன பாவா, விளையாட்டு? பாவம்னு கை காலப் புடிச்சுவிட்டா? சரியான ஆளால்ல இருக்கீங்க. சரி நீங்க சரிப்பட மாட்டீங்க. ஒங்க முகம் மாறுது. நா கிளம்புறேன்" என்றாள். கௌரி வல்லபனின் கைகள் அவள் கைகளைச் சிறைப்படுத்தின. கையை விடுவிக்க முயன்றாள். முடியவில்லை.

"என்னைய மறந்துற மாட்டீங்களே?"

"மறக்கக்கூடிய ஆளா நீ? நிச்சயமா ஒன்னை மறந்துற மாட்டேன். எங்க ஊர்ல ஒன்னைய மாதிரி தெலுங்குப் பேசுற பொம்பள ஒன்னு இருக்கு. மீனாட்சின்னு பேரு. ஒன்னைய மாதிரியே இருக்கும். அன்பான அழகி. அதக் கல்யாணம் பண்ணின பிறகுதான் எங்க ஊர்ல சாதாரண ஆளாயிருந்த ஒருத்தர் இன்னிக்கு மந்திரி பிரதானியா ஆயிட்டாரு?"

"அப்படியா? எங்க தஞ்சாவூர் மராத்திய தர்பார்லையா?"

"இல்லை. சிவகங்கைச் சீமையில."

"அப்படியா, அவர் பேரு."

"பெரிய மருது சேர்வைக்காரர்."

"ஒங்களுக்குச் சொந்தக்காரரா?"

"இல்லை. அவர் அகம்பாடியார். நாங்க மறவர் ஜாதி."

"சரி, நான் கிளம்புறேன். போய் வெடக் கோழிக் குழம்பு சமைச்சு வைக்கிறேன். பின்னாலேயே வந்திருங்க. எலும்பு, கறின்னுப் பாத்து ரொம்ப நாளாச்சுப் போலத் தெரியுது." என்று சொல்லிச் சிரித்தாள்.

சொன்னபடியே கௌரி வல்லபன் சிறிது நேரத்தில் பர்வதம் வீட்டிற்குப் போனான். கோழிக் குழம்பு, சோறு சாப்பிட்டான். பர்வதத்தைப் பிடித்திருக்கிறது என்று சொன்னபோது பர்வதத்தின் வீட்டில் எந்த எதிர்ப்பும் இல்லை. அன்று இரவு அங்கு தங்கினான். மறுநாள் இருவரும் அறந்தாங்கி வந்தனர்.

வீடு பெரிதாக இருந்தது. மீசை வைத்த பெரியவர்தான் கௌரி வல்லபனுக்கு அப்பா என்று பர்வதத்திற்கு அவரைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிட்டது.

கௌரியோட அண்ணனுக்கு அவ்வளவு தெளிவு இல்லை. அண்ணன் மனைவிகள் நல்ல பெண்கள். கௌரி வல்லபனின் மூத்த மனைவிகளான வெள்ளை நாச்சியார், ராக்கு நாச்சியார், வேலு நாச்சியார், முலுதார் நாச்சியார், அங்கமுத்து நாச்சியார் எல்லாம் வீட்டிற்குள் இருந்தனர். கௌரி வல்லபனோடு சேர்ந்து வீட்டுக்குள் வந்த பர்வதவர்த்தினியைப் பார்த்தனர்.

கௌரி வல்லபன் தன் தகப்பனிடம் பர்வதவர்த்தினியை அழைத்துச் சென்று, "மருது பாண்டியரின் ஆட்கள் என்னை விரட்டி வந்தனர். அப்போது நான் பட்டுக்கோட்டைக்கு அருகில் சென்று விட்டேன். அன்றைக்குச் சாப்பாடு கிடைக்காததால் மயங்கி விட்டேன். இந்தப் பெண்தான் என்னைக் காப்பாற்றினாள். எங்கள் ரெண்டு பேருக்கும் பிடித்துவிட்டது. கூட்டிக்கொண்டு வந்து விட்டேன். இவள் பெயர் பர்வதவர்த்தினி. வேத்து மொழிக்காரி" என்றான். பெரியவர் கேட்டார், "வேத்து மொழின்னா தெலுங்கா? மராத்தியா?"

"தெலுங்கு" என்றாள் பர்வதவர்த்தினி.

கௌரி வல்லபனின் மனைவிகள் பர்வதத்தை அழைத்துச் சென்றனர். அவர்களிடமிருந்த நல்ல சேலைகளைக் கொடுத்து, "எது வேணும்னாலும் எடுத்துக் கட்டிக் கொள்" என்றனர்.

"இருக்கிறதே போதும்" என்றாள்.

"மொட்டயா போதும்னு சொல்லக் கூடாது. போதும் அக்கான்னு சொல்லணும். இவளச் சின்ன அக்கான்னு கூப்பிடு. என்னைய பெரிய அக்கான்னு கூப்பிடு" என்றாள் ஒருத்தி.

தகப்பனும் மூத்த மகனும் இருக்கைகளில் உட்கார்ந்திருந்தனர். கௌரி வல்லபன் நின்று கொண்டிருந்தான்.

"சின்ன அக்கா, நம்ம பாவாவுக்கும் உக்கார இருக்கை எடுத்துக்கிட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டு, ஓடிச்சென்ற பர்வதம் ஒரு இருக்கையுடன் வந்தாள். அதைப்போட்டு கௌரி வல்லபரை உட்காரும்படி

கண்களால் சாடை செய்தாள். பெரியவர் தனது இளைய மகனின் புது மனைவியைப் பார்த்தார்.

“நீ நம்ம வீட்டிற்குப் புதியவள். நம் குடும்பத்தின் பழக்க வழக்கங்கள் ஒனக்குத் தெரியவில்லை. தகப்பன் முன் மகன்கள் ஆசனத்தில் உக்காரும் வழக்கம் இல்லை. எனது மூத்த மகனைப் பொறுத்தவரையில் அவன் உடல்நலம் இல்லாதவன். அவன் எந்தப் பொறுப்புக்கும் வரத் தகுதியில்லாதவன். ஆகவே அவன் எனக்கு முன்னால் உட்காரலாம். உன் கணவன் கௌரி வல்லபன்?”

“மன்னிக்கணும் மாமா. எனக்குத் தெரியாது. இந்த ஆசனத்தை மறுபடியும் வெளியில தூக்கி வச்சிட்டு வந்துர்றேன்” என்றாள் பர்வதம்.

“பரவாயில்லை, அவனுக்கு ஆசனத்தில் அமரும் காலம் வந்துவிட்டது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவனுக்குக் கிடைக்காத வாய்ப்பு இப்போது உன்னைத் தொட்ட நேரம் கிடைக்கப்போகிறது.”

வீட்டிலிருந்த பெண்கள் கண்கள் விரிய பெரியவரைப் பார்த்தனர். “எல்லோரும் கீழே உக்காருங்கள். கௌரி வல்லபத் தேவர், நீ ஆசனத்தில் உக்காரு. நான் ஒங்க அனைவரிடமும் விளக்கமாகப் பேச வேண்டும். ஏதாவது அடுப்பில் இருக்கிறது என்றால் அதைப் பார்த்துக்கொள்ள வேலையாட்களிடம் சொல்லிவிட்டு வாருங்கள்” என்றார். பர்வதம் அறைக்கு வெளியில் ஓடிச் சென்று வேலைக்காரர்களிடம் சொல்லிவிட்டு வந்தாள். பர்வதம் வரும்வரை பெரியவர் பேசவில்லை. பர்வதம் வந்து உட்கார்ந்தவுடன் பெரியவர் ஆரம்பித்தார்.

“எனது வயதான காலத்தில் எனக்கு என் மருமகள்கள் ஆத்தாமார்களாகவும், என் மகன்கள் எனக்கு அப்பன்மார்களாகவும் இருக்கிறீங்க. ஒங்களுக்கு யோசனையா இருந்திருக்கும். நான் ஏன் அடிக்கடி வெளியூருக்கு மாட்டு வண்டியில போயிட்டு ரெண்டு மூணு நாள் கழிச்சு வர்றேன்னு. அந்த மாட்டு வண்டி எங்கயிருந்து வருது, ஏன் அதச் சுத்தி திரைச்சீலயிருக்குன்னு ஒங்களுக்குப் பல சந்தேகங்கள் இருக்கும். நா இப்ப அந்த ரகசியத்தச் சொல்லுறேன்.”

“நான் போனது திருச்சிக்கு அல்லது புதுக்கோட்டைக்கு. திருச்சியில கலெக்டரைப் பார்ப்பேன். புதுக்கோட்டையில் அரசர் தொண்டைமானைப் பார்ப்பேன். ஐந்து வருடங்களுக்கு முன்பு மெட்ராஸ்

கவர்னருக்கு ஒரு மனு கொடுத்தேன். நாலு கோட்டை சசிவர்ணத் தேவர். சிவகங்கையின் முதல் மன்னர். அவர் ராமநாதபுரம் இளவரசி அகிலாண்டேஸ்வரி நாச்சியாரை மணந்தவர். எனக்கு அண்ணன் முறை. இவர்களுக்கு மகனாகப் பிறந்தவன் தான் முத்து வடுகநாதத் தேவன். எனது அண்ணனுக்குப் பிறகு எனது அண்ணன் மகனான இவன் சிவகங்கையின் அரசனானான். அப்போது ஆங்கிலேயத் தளபதி கர்னல் ஜோசப் ஸ்மித், மேஜர் ஆபிரகாம் பான்ஜோரின் காலத்தில் அரசனும் அவனது இளைய ராணி கௌரி நாச்சியாரும் காளையார்கோயிலில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

என் அண்ணன் மகன் முத்து வடுகநாதனின் மூத்த மனைவியான வேலு நாச்சியாருக்குப் பெண் குழந்தை ஒன்று இருந்தது. குழந்தையின் பெயர் வெள்ளச்சி. தாயும், மகளும் கொல்லங்குடி அரண்மனையில் தங்கி இருந்ததால் அன்று அவர்கள் உயிர் தப்பித்தனர். வேலு நாச்சியார் எனது அண்ணன் மருமகள். எனக்கும் அவர் மருமகள் முறைதான். வேலு நாச்சியார் விருப்பாச்சிக் காட்டில் ஒளிந்திருந்து, சிவகங்கை அரசை நவாப்பிடமிருந்து கைப்பற்ற எட்டு ஆண்டுகள் முயற்சித்து வெற்றி பெற்றாள்.

வேலு நாச்சியாருக்கு ஆண் வாரிசு இல்லை. என் அண்ணன் மகன் முத்து வடுகநாதன் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானதால், வேலு நாச்சியாரை ராணியாகவும், அவளது பெண் குழந்தை வெள்ளச்சியை சிவகங்கைச் சீமையின் இளவரசியாகவும் மக்கள் கருதினர். வேலு நாச்சியாரோடு பிரதானி தாண்டவராயப் பிள்ளையும், மருது சகோதரர்கள் இருவரும் போய்விட்டனர். ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் இவர்களைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை. இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இறந்து விட்டார்களா என்று கூடத் தெரியவில்லை.

நமது சிவகங்கைச் சீமையின் அனுமன்கொடி கோட்டை யிலிருந்து இறக்கப்பட்டுவிட்டது. நவாப்பின் பச்சைக் கொடி கோட்டையில் பறந்தது. சிவகங்கையின் பெயர்கூட உசேன் நகர் என்று மாற்றப்பட்டு விட்டது. ராமநாதபுரமும் இந்தக் காலக்கட்டத்தில்தான் அலி நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்தச் சமயத்தில் பிரதானி தாண்டவராயப் பிள்ளை இறந்துவிட்டார். ஹைதர் அலியிடம் வேலு நாச்சியார் உருது மொழியில் பேசி ஐயாயிரம் குதிரை வீரர்களைப் பெற்றார். சிவகங்கை நோக்கிவந்த வேலு நாச்சியாரும், மருது சேர்வைக்காரர்களும் சோழவந்தானிலும், திருப்புவனத்திலும் ஆற்காடு

நவாப்பின் படைகளைத் தோற்கடித்தனர். சிவகங்கை மக்கள் ஆர்ப்பரித்து இவர்களை வரவேற்றனர். வேலு நாச்சியரை சிவகங்கையின் ராணி என மருது சேர்வைக்காரர்கள் பிரகடனப்படுத்தினர். இது எனக்கும் நாலுகோட்டைப் பெரியவர் களுக்கும் பிடிக்கவில்லை. என் அண்ணன் மகன் முத்து வடுகநாத தேவன் அரசனாக இருந்தான். அவனுக்கு ஆண் வாரிசு இல்லை. இறந்துவிட்டான். அவனுக்குப் பிறகு மனைவி வேலு நாச்சியார் எப்படி வாரிசாக முடியும்? என்று கேள்வி கேட்டோம். எனது அண்ணன் மகன் முத்து வடுகநாதன் உயிரோடு இருக்கும்போதே அவனுக்கு ஆண் குழந்தையில்லாததால் என் இரண்டாவது மகன் கௌரி வல்லபனை அவன் தத்து எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருந்தான். அந்த வகையில் அவனே இளவரசன் ஆக வேண்டுமென்று சொன்னேன். இது வேலு நாச்சியாருக்குப் பிடித்ததோ, பிடிக்கவில்லையோ, மருது சேர்வைக்காரங்களுக்குப் பிடிக்கவில்லை. வேலு நாச்சியாரிடம் எதையாவது சொல்லி கௌரி மேல் கோபத்தை உண்டாக்கிவிட்டார்கள். அவனைப் பலமுறை சிறையில் அடைச்சிருக்காங்க.”

“அப்பா, நா நடுவுல பேசுறதுக்கு மன்னிக்கனும். வேலு நாச்சியார் இப்போ உயிரோடு இல்ல. உயிரோட இல்லாதவர்களைப் பத்தி நாம தப்பாப் பேசக்கூடாதுன்னு நீங்கதான் எனக்குச் சொல்லி கொடுத்திருக்கீங்க. அதைவிட இன்னும் ஒரு செய்தி. எப்பயெல்லாம் என்னை மருது பாண்டியருங்க சிறையில அடைச்சாலும், இந்த விசயம் தெரிந்தவுடன் வேலு நாச்சியார் என்னைய விடுதல பண்ணச் சொல்லி மருது பாண்டியர்களுக்கு உத்தரவிட்டிருக்காங்க. என்மீது அவங்களுக்கு அன்பு உண்டு. என்னை ஊர் ஊராகச் சிவகங்கைச் சிப்பாய்ங்க விரட்டியதுகூட வேலு நாச்சியாருக்குத் தெரியாதுன்னு தான் நினைக்கிறேன்” என்றான்.

“சரிப்பா, நீ உன் அத்தை வேலு நாச்சியாரின் அன்பை நேரில் பார்த்தவன். நான் பாதிக்கப்பட்டவன். ஆண் வாரிசு இல்லாத இந்த வேலு நாச்சியார் என் பிள்ளைகளுக்குச் சிவகங்கையை ஆளும் வாய்ப்பைத் தந்திருக்கலாம் என்ற நியாயமான கோபம் எனக்கு இருந்தது. வேலு நாச்சியாருக்குச் சிவகங்கையை ஆளுகின்ற அதிகாரமில்லை என மெட்ராஸ் கவர்னர் மெக்கர்ட்னேக்கு நான் கடிதம் அனுப்பினேன். கலெக்டர் லூஷிங்டன்னும், புதுக்கோட்டை தொண்டைமானும் எனக்கு அவ்வப்போது உதவி செய்தனர். வேலு நாச்சியாரும் இறப்பதற்கு முன்பு

நிறைய கஷ்டப்பட்டுவிட்டார். மகள் வெள்ளச்சியையும், பேத்தி சின்ன வெள்ளச்சியையும் தான் உயிரோடு இருக்கும்போதே இழந்துவிட்டார்.

மருமகன் வெங்கம் பெரிய உடையணத் தேவராவது வேலு நாச்சியாருக்கு நிம்மதி கொடுத்திருக்கலாம். அவருக்குப் பொண்டாட்டி வெள்ளச்சி செத்துடுச்சு. அவருக்குப் பொண்டாட்டி வேணும்னா மறவர் ஜாதியிலே யாராவது ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்திருக்கலாம். மறவர் ஜாதியில அவருக்குப் புடிச்ச பொம்பளயே இல்லங்கிற மாதிரி பெரிய மருது சேர்வக்காரர் மகள் மருதாயியப் போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. இது வேலு நாச்சியாருக்குச் சுத்தமாப் பிடிக்கல. வேலு நாச்சியாரே மருமகன் வெங்கம் பெரிய உடையணத் தேவன் மேலயும் மருது பாண்டியருங்க மேலயும் புகார் கடிதத்த கவர்னருக்கு அனுப்பினாங்க. வேலு நாச்சியார் கடைசி நாலு வருசம் விருப்பாச்சி கோபால் நாயக்கர் அரண்மனையில காலத்தக் கழிக்க வேண்டியதாயிற்று. அங்கேயே இறந்தும் போயிட்டாங்க. அப்ப இருந்து எனக்கு உள்ள அரசு உரிமையை நான் நிலைநாட்ட முயற்சி செஞ்சேன். என் மனு நியாயமானது என்று, கவர்னர் எட்வர்ட் கிளைவுக்குக் கலெக்டர் லூஷிங்டன் சிபாரிசு பண்ணினார்.

“அப்பா, நீங்க வெளிப்பார்வைக்கு அமைதியாயிருந்து கொண்டு நிறையக் காரியங்கள் செய்திருக்கிறீர்கள்.”

மருது பாண்டியர்கள் மேல ஆங்கிலேயர்களுக்கு நம்பிக்கை போயிருச்சு. அவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மறைமுகமா உதவி செஞ்சதையும் திப்பு சுல்தானோட நட்பாயிருந்ததையும் ஆங்கிலேயர்கள் ரசிக்கவில்லை. இப்பவும் மருது சகோதரர்கள், பெரும் யுத்தத்திற்காக காத்திருக்காங்க. திப்பு சுல்தான் படையில் இருந்த தூந்தாஜி வாக்கை, ஆர்தர் வெல்லெஸ்லி முடிச்சு வைச்சுட்டார்.”

“ஆமாப்பா, இப்ப அவர் உயிரோடு இல்லை. மருதுவோட இப்ப நெருக்கமாயிருக்கிற விருப்பாச்சி கோபால் நாயக்கர், ஓடாநிலை சின்னமலை கவுண்டர், மேலூர் கள்ளருங்களைக் கூட்டுச் சேர்த்துக்கிட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக மருது சகோதரர்கள் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர். பாஞ்சாலங்குறிச்சி சிவத்தையாவையும் ஊமைத்துரையையும் ஏதாவது ஒரு விதத்துல இந்தக் கூட்டத்தோடு சேர்த்து மருது சகோதரங்க இந்தப் பகுதிய ரத்தக்களறி ஆக்கிருவாங்களோன்னு மெட்ராஸ் கவர்னர் எட்வர்டு கிளைவ் பயப்படுகிறார். ஏற்கனவே சிவகங்கை இளவரசி வெள்ளச்சியின் திருமண

விசயத்துல இந்த மருது சேர்வக்காரங்கதான் தலையிட்டு நமக்குக் கெடுதல் பண்ணினாங்க. சொல்லப்போனா கௌரி வல்லபனுக்குத்தான் இளவரசி வெள்ளச்சியைக் கட்டிக் கொடுத்திருக்கணும்.

மாமனார் சொன்னதைக் கவனித்து வந்த பர்வதத்திற்கு, "சுரீர்" என கோபம் வந்துவிட்டது. "மாமா, எனக்கு உறவு முறை பிடிபடலை. வெள்ளச்சிக்கு, ஒங்க பிள்ளை சித்தப்பா முறைதானே வரும்? இதுல வெள்ளச்சிய எப்படி கட்டிக்கிற முடியும்?"

"பர்வதம், ஒனக்கு இந்தப் பகுதி பழக்கம் தெரியாது. மச்சி அல்லது மச்சி வகுத்துப் பிள்ளையத் திருமணம் செய்யலாம். வேலு நாச்சியாரைத் திருமணம் செய்ய கௌரி வல்லபனுக்கு முறை உண்டு. அவளுக்கு இவனைவிட வயது அதிகம் என்பதால் திருமணம் செய்யவில்லை. அதனால் அவள் வகுத்துல பிறந்த பிள்ளை வெள்ளச்சிய, மச்சி வகுத்துப் பிள்ளைய மணந்து கொள்ள கௌரிக்கு முறையிருந்தது."

"நாமதான் முதல் உரிமை உள்ள ஆளுக. நமக்குக் கொடுக்கல. சரி பரவாயில்ல, ராமநாதபுரம் சேதுபதி முத்து ராமலிங்கத்துக்குக் கொடுத்திருக்கலாம்ல. அவர் பெண் கேட்டும் கொடுக்காமல் மூக்கறுத்தாங்க. சேதுபதிக்குப் பொண்ணு கொடுக்க அவ்வளவு யோசனையா? வெங்கம் பெரிய உடையணத் தேவர் நமக்குப் பங்காளி மகன்தான். ஆனா அவன் நம்ம கௌரி வல்லபனுக்கோ சேதுபதிக்கோ சமமானவனா? வேலு நாச்சியார்கிட்ட சும்மா எடுபிடியா இருந்த பய அவன். அவனுக்கு வெள்ளச்சியக் கட்டிக் கொடுத்ததால ரெண்டு சீமைக்கும் யுத்தமாயிருச்சு. சேதுபதி இப்ப 'ரிபெல் சேதுபதின்னு' கெட்ட பெயர் வாங்கித் திருச்சி சிறையில இருக்காரு. இப்போதைக்கு ராமநாதபுரம் அரசுக்கு நவாப்போ இன்னும் கொஞ்சம் காலத்துல மங்களேஸ்வரியோ ஆட்சிப் பொறுப்புக்கு வர இருந்தாலும் அதிகாரம் என்னவோ ஆங்கிலேயர்களின் கையில்தான் இருக்கும்.

தளபதி மார்ட்டின்ஸ்தான் இப்போதைக்கு உண்மையான சேதுபதி. புதுக்கோட்டை தொண்டைமானும், சிவகங்கைச் சீமையும் ஆங்கிலேயர்களோட எப்படி இருக்கணும்னு கவர்னர் எட்வர்ட் கிளைவ் விருப்பப்படுறதா கலெக்டர் லூஷிங்டன் சொன்னாரு. சிவகங்கையின் கடைசி அரசர், வேலு நாச்சியாரின் கணவன், முத்து வடுகநாத தேவர் என் அண்ணன் மகனா இருந்தாலும், அவனும் என் மகன் போலத்தான், இந்த கௌரிய தனக்கு ஆண் வாரிசா முத்து வடுகநாத தேவர்

நியமிச்சாரு. கொஞ்ச நாள்ல அவர் காளையார்கோயில் போர்ல இறந்து போயிட்டாரு. சிவகங்கைச் சீமைய இந்த மருது பயலுங்க கிட்டயிருந்து கைப் பத்தி அதை நமக்குக் கொடுக்க வாய்ப்பிருக்குன்னு வெள்ளக்கார மிலிட்டரிக்காரங்க பேசிக்கிறாங்க. அதுக்குத்தான் நாளைக்கு விசாரணை இருக்கு. சிவகங்கைச் சீமையின் ஆட்சிப் பொறுப்பை என் இரண்டாம் மகன் கௌரி வல்லபனுக்குத் தருவதற்கு எனக்கோ எனது மூத்த மகனுக்கோ ஆட்சேபனை இல்லைன்னு நாங்க எழுதிக் கொடுக்க வேண்டி வரும். ஏம்மா மூத்த மருமக நீ என்ன நினைக்கிற?"

"மாமா. நீங்க எல்லாத்தையும் யோசிச்சுத்தான் செய்வீங்க. என் புருசன் மூத்த பிள்ளைன்னாலும் அவருக்குக் கண் பார்வை சரியா இல்லை. நீங்க சொல்லுற வெள்ளக்காரங்கப் பேருங்கள அவரால் திருப்பிச் சொல்லக்கூட முடியாது. சின்னவரு சிவகங்கை அரசரானா, நாங்களும் ஒங்க மூத்த மகனும் அந்த நிழல்ல ஒண்டிக்கிருவோம். அண்ணன்கிற மரியாதய கட்டாயம் சின்னவரு தருவாரு. சின்னவரோட ஆறு சம்சாரங்களும் எங்க கிட்ட "அக்கா" "அக்கா"ன்னு நல்ல மரியாதயாத்தான் பழகு வாங்க. ஆனா ஒன்னே ஒன்னு நா கேக்கிறேன் மாமா. பொறாமையில கேக்கல. நானு கேக்கப்போற இந்தக் கேள்விய நாளைக்கு விசாரணையில வேறு யாராவது கேட்டுட்டா அதுக்குச் சரியான பதில் தர்ற மாதிரி நீங்க தயாரா இருக்கணும்ல."

"சொல்லும்மா, என்ன பெரிய கேள்வி? பதில் சொல்ல முடியாத கேள்வி கேக்கப் போற? இந்த நமச்சிவாயத் தேவர் சிவங்கையின் முதல் அரசரான சசிவர்ணத் தேவருக்குச் சித்தப்பா மகன்தானே. உடன்பிறந்த தம்பி இல்லைன்னு கேப்பாங்களா?" நமச்சிவாயத் தேவரின் குரலில் அழுத்தமான கேலி, கோபத்தைப் பார்த்து மருமகள் பயந்துவிட்டாள். சிறிது நேரம் யாரும் பேசவில்லை. "ம். சொல்லும்மா" என்றார் நமச்சிவாயத் தேவர்.

"இல்ல மாமா, நீங்க கோபப்பட்டா நா ஒன்னும் கேட்கப் போறதில்ல".

"இல்ல இல்ல சொல்லு, கேட்டுக்கிறேன். உன் கேள்விக்கு என்ன பதில் சொல்லுறதுன்னு யோசிக்கலாம்ல சொல்லு."

"மாமா, சிவகங்கையின் கடைசி அரசர் முத்து வடுகநாத தேவர் இறந்தது காளையார்கோயில் அரண்மனையிலதானே? அப்போது அவர்

நல்ல பிராயத்தில்தானே இருந்தார்?. முதல் மனைவி வேலு நாச்சியாருக்கு அந்த நேரத்தில் பெண் குழந்தை இருந்தது. இரண்டாவது மனைவி கௌரி நாச்சியாரும் அந்த சமயம் கர்ப்பமாகத்தானே இருந்தார்? காளையார்கோயில் துப்பாக்கிச் சூடு ஒரு ஆறு மாதம் கழிச்சு நடந்திருந்தால் கௌரி நாச்சியார் ஒரு குழந்தைக்குத் தாயாகி இருந்திருப்பாள். அந்தக் குழந்தை ஆணாகயிருந்திருந்தால் சிவகங்கைச் சீமைக்கு ஆண் வாரிசு கிடைத்திருக்கும். முதல் மனைவிக்கு வெள்ளச்சி என்ற பெண் குழந்தை, இரண்டாவது மனைவியும் கர்ப்பிணியாக இருக்கும்போது, இளம் பிராயத்தில் உள்ள அரசர், ஒங்கள் இளைய மகனை தத்துபுத்திரனாக சுவீகாரம் செய்தார் என்று சொன்னால் அதற்கு ஆதாரம் என்ன என்று கேட்டால் என்ன பதில் மாமா?"

"அவர்கள் கேட்பது இருக்கட்டும். பின்னாளில் நீ கேட்க மாட்டாயே? எனது புருசன் மூத்தவன். எனக்கும் மூன்று ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். என் கொழுந்தன் கௌரி வல்லபனுக்கு ஆண் குழந்தையில்லை. பெண் குழந்தைகள்தான் உள்ளன. அப்படி இருக்கும்போது கௌரி வல்லபனுக்கு ஏன் அரசாட்சின்னு கேக்க மாட்டாயே?"

"நிச்சயம் நான் கேட்க மாட்டேன் மாமா. என் பிள்ளைகள் கேட்பார்களா என்று நான் இப்போதைக்கு சொல்ல முடியாது. அவர்கள் என் பொறுப்பில் இல்லை. நீங்கள்தான் அவர்களை எங்கோ அனுப்பி வளர்க்கிறீர்கள். புதுக்கோட்டையிலோ திருச்சி யிலோ தாய், தகப்பன் பராமரிப்பின்றி பாட்டனார் தயவில் வாழும் அவர்கள் பிற்காலத்தில் என்ன செய்வார்கள் என்று தாயான எனக்கும், தகப்பனான உங்கள் மூத்த மகனுக்கும் தெரியாது. ஆனால், நானோ இவரோ சின்னவருக்கு எதிராக எந்தக் காலத்திலும் நிச்சயம் போகமாட்டோம்."

"நல்லது ஆத்தா, உங்கள் மனதிற்கு ஏற்றவாறு நல்லதே நடக்கும். கௌரி வல்லபனுக்கு ஆறு திருமணங்கள் நடந்தும் இதுவரை ஆண் குழந்தைகள் இல்லை. இந்தப் பர்வதவர்த்தினிக்காவது அந்தக் கொடுப்பினை இருக்கிறதா என்று பார்ப்போம். கடைசிவரை கௌரிக்கு ஆண் பிள்ளை இல்லை என்றால் உன் பிள்ளைகள்தானே அவனுக்கு வாரிசு ஆவார்கள்" என்றார்.

"அப்பா சொல்வது சரிதான். எனக்கு ஆண் பிள்ளை பிறக்கவில்லை என்றால் என் அண்ணன் மகன்கள்தான் என் வாரிசு"

என்றார் கௌரி வல்லபர். மூத்த மருமகள், தத்து எடுத்தது குறித்துக் கேட்ட கேள்வி நமச்சிவாயத் தேவருக்கு மிகுந்த கடினமான கேள்வியாகத் தெரிந்தது. பதில் சொல்ல முடியாத கேள்வி. பின்னாளில் இது பெரும் பிரச்சனையாக மாறக்கூடியது. இருந்தாலும் கலெக்டர் லூஷிங்டனும், தொண்டைமானும், கர்னல் அக்னியூவும் நமக்குச் சாதகமாக இருக்கும்வரையில் யார் கேள்வியும் நம்மை என்ன செய்யப் போகிறது? என்ற குருட்டுத் தைரியத்தில் நமச்சிவாயத் தேவர் மீசையை முறுக்கினார்.

“சரி, இப்போதைக்கு ஆகுறதைப் பார்ப்போம். ஆத்தா இன்னைக்கு விருந்து வேணும். பிரமாதமா இருக்கணும்” என்றார். அங்கிருந்த நாலு மருமகள்களும், அன்றுதான் வாய்விட்டுச் சிரித்தார்கள். கௌரி வல்லபன், தன் அண்ணன் கைபிடித்துத் தகப்பனாரின் அறையை விட்டு அழைத்துச் சென்றான்.

கௌரி வல்லபனுடைய கடந்த காலம் பற்றி இப்போதுதான் பர்வதத்திற்குத் தெரிகிறது. “பர்வதவர்த்தினி பெரும் ஐசுவர்யங் களைப் பெறுவாள்” என்று பட்டுக்கோட்டை குறிகாரி சொன்னது நடக்குமா? கௌரி வல்லபனுடைய அப்பா கவர்னருக்குப் புகார் மனு அனுப்பியதற்கே அவனை ஊரை விட்டுப் பட்டுக்கோட்டை வரை விரட்டியவர்கள், கௌரி இப்போது அரசன் ஆனால் அவனைச் சும்மா விடுவார்களா? வேலு நாச்சியாரே மருது சகோதரர்கள் மீது புகார் செய்தும், வெள்ளைக்காரர்கள் கெடுதல் செய்யத் தயாராக இல்லை. இப்போது சிவகங்கைச் சீமையை மக்களின் ஆதரவோடு ஆட்சி செய்யும் அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரும் அவரை வழிநடத்தும் மருது சேர்வைக்காரர்களும் ஏன் இந்தக் குடும்பத்திற்கு நல்லவர்களாகத் தெரியவில்லை? என்று பலவாறாகப் பர்வதவர்த்தினி யோசித்தாள். விடுதலை வேட்கையும், யாரையும் அவ்வளவு சீக்கிரம் தலைவராக ஏற்றுக்கொள்ளாத மூர்க்க குணமும் உள்ள சிவகங்கைச் சீமை மக்கள், யுத்தமே நடத்திப் பழகியிராத கௌரி வல்லபனை எப்படித் தங்கள் அரசனாக ஏற்றுக்கொள்வர்? என்று பர்வதவர்த்தினி யோசித்தாள்.

பர்வதவர்த்தினியின் மனத்தில் தோன்றிய கேள்விகளுக்கும், பட்டுக்கோட்டை குறிகாரி சொல்லியது பர்வதவர்த்தினியின் வாழ்வில் நடக்குமா என்பதற்கும், அவள் அரசி ஆக வாய்ப்புள்ளதா என்பதற்கும் காலத்திடம்தான் பதில்கள் இருந்தன.

•

37

ஆனைமலைப் பகுதியில் மேஜர் இன்ஸ், கேப்டன் வைட்டில், லெப்டினென்ட் டே ஹாட்ஜன் ஆகியோர் தலைமையில் ஆங்கிலேயப் படை கூடியது. நத்தர்கான் என்ற முஸ்லீம் தளபதியும் ஆங்கிலப் படையின் ஓர் அங்கமாக இருந்தான். அந்தக் கூட்டத்தில், அவனிடம் சில முக்கியப் பொறுப்புகளை ஆங்கிலேயத் தளபதிகள் ஒப்படைத்தனர். அவனுக்குத் தலைகால் புரியவில்லை. உடனடியாக செயலில் இறங்கினான். கிராமப் பெரியவர்களை அழைத்து வந்த நத்தர்கான் அவர்களுக்கு வகுப்பெடுத்தான். "எங்களுக்குச் சில ரகசியத் தகவல்கள் கிடைச்சிருக்கு. தேளி, ஜல்லிப்பட்டி கிராமங்களிலிருந்து ராத்திரி நேரங்களில் துப்பாக்கிச் சத்தம் வருது. நாங்க இப்ப விருப்பாச்சி பாளையக்காரர் கோபால் நாயக்கர், கோபால் நாயக்கர் மகன் முத்து வெள்ள நாயக்கர், தேளி பாளையக்காரர் யாதுல் நாயக்கர், அப்புறம் அவங்க கூட்டாளிகளைத் தேடிக்கிட்டிருந்தோம். அவங்க ஆத்தூர் படிவுங்கிற இடத்தில் இருக்காங்கன்னு தகவல் வந்துருச்சி. அவங்களச் சுத்தி வளைச்சிட்டோம்னா, அவங்க கத முடிஞ்சிரும். அப்புறம் கம்பெனிதான் நமக்கு எல்லாம். அத மனசில வச்சிக்கிட்டு நான் சொன்ன ஆட்களப் புடிச்சித் தர துப்புக் குடுத்தீங்கன்னா உங்களுக்குச் சன்மானம் தர்றோம். நீங்கதான் துப்புக் கொடுத்தீங்கன்னு நாங்க யாருகிட்டயும் சொல்ல மாட்டோம். கோபால் நாயக்கர புடிச்சிக் கொடுத்தீங்கன்னா ஆயிரம் பணம். மத்தவங்களப் புடிச்சுக் குடுக்க உதவி செஞ்சீங்கன்னா ஒவ்வொரு ஆளுக்கும் ஐநூறு பணம். எங்களுக்கு உதவி ஏதும் செய்யாமல், இந்தக் கலகக்காரப் பயல்களுக்கு உதவி செஞ்சீங்கன்னா, இங்க வந்திருக்காங்க பாருக, மூணு துரைக, அவங்க உங்களத் தூக்குல போட்டுருவாங்க" என்றான்.

ஒரு முகமதியத் தளபதி கூட்டத்தில் முழங்குவதையும் அதை அமைதியாக வேடிக்கைப் பார்க்கும் மூன்று ஆங்கிலேயத் தளபதிகளையும் கிராம மக்கள் வினோதமாகப் பார்த்தனர். ஊர்க்காரர்களுக்கு நத்தர்கான் சொல்லும் விருப்பாச்சி கோபால் நாயக்கர் உட்பட அனைத்துப் போராளிகளையும் தெரியும். பக்கத்து ஊரைச் சேர்ந்த ஆண்டியம்மா, ராமு நாயக்கரை சில நாட்களாக ஊருக்குள் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர்கள் வீட்டிலிருந்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மாட்டு வண்டியில் உணவுப் பொருள் ஏற்றி ஆத்தூர் படிவுக்குப் போவதையும் ஊர்க்காரர்கள் அறிந்திருந்தனர்.

ஆங்கிலேயத் தளபதிகளுக்கும், நத்தர்கானுக்கும் வணக்கம் சொல்லிவிட்டு கிராமத்தினர் ஊருக்குத் திரும்பினர். நத்தர்கான் மிரட்டியதை அன்று மாலை உணவு சேகரிக்க வந்த போராளிகளிடம் ஊர் மக்கள் தெரிவித்தனர். "அந்தத் துலுக்கன் அப்படி மிரட்டுறான் நாயக்கரே. தூக்குல போட்டுருவானாம். உங்கள எல்லாம் புடிச்சுக் குடுத்தா பணம் குடுப்பானாம்."

"சரி வுடுடா, நாப்பது வருசத்துக்கு முந்தி கம்பெனிக்காரங்கள வச்சு கான் சாகிப்பு ஆடாத ஆட்டமா? கான் சாகிப்ப வச்சு புலித்தேவருக்குத் தொல்லை குடுத்தாங்க. கான் சாகிப்ப வச்சு திருவிதாங்கூர் ராஜாவை மிரட்டினாங்க. கடைசியில் என்ன ஆச்சு? ஆற்காடு நவாப்பு ஆளுங்க கான் சாகிப்பக் கண்டதுண்டமா வெட்டுனப்ப வெள்ளக்காரங்க கான் சாகிப்புக்கு ஆதரவா ஒரு வார்த்தகூட சொல்லலையே. பாத்துக்கிட்டேயிரு. இந்த நத்தர்கான் பயதான் அடுத்த கான் சாகிப்பு. கோபால் நாயக்கர்கிட்ட சொல்லுவோம், இவனைப் பத்தி" என்று நிறுத்தியவன், "ஒருவேளை எங்களுக்கு காட்டுக்குள்ள வெள்ளக்காரங்க நெருக்கடி கொடுத்தாங்கன்னா நாங்கத் துப்பாக்கிய வச்சு மூணுமுறை சுடுவோம். அதுதான் உங்களுக்கான சமிக்ஞை. மூணு முறைக்கு அடுத்தடுத்து நாங்க சுட்டவுடன் கையில கிடைக்கிற ஆயுதங்களை எடுத்துக்கிட்டு தேளிக் கோட்டய நோக்கி ஓடி வாங்க. வரயில ஆடுமாடுகளைக் கையில புடிச்சுக்குங்க. இல்ல, அந்தச் சீவன்களையும் இம்சப் படுத்திருவானுங்க" என்றான்.

இரண்டு நாள் கழித்து பகல் பதினோரு மணி அளவில் காட்டுக்குள்ளிருந்து மூன்று முறை துப்பாக்கிச் சுடும் சப்தம் கேட்டது. கிராம மக்கள் திரண்டனர். சப்தம் வந்த திசையைப் பார்த்தபோது அது தேளிக்கோட்டை என்று தெரிந்தது. மக்கள் ஆடு, மாடுகளை கூட்டிக்கொண்டு மலைமீது ஏற ஆரம்பித்தனர். அதேநேரத்தில் கிராமத்தைவிட்டு ஒரு மைல் தொலைவில் முகாமிட்டிருந்த நத்தர்கானும் துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டான். உடனடியாகத் தனது எஜமானன் மேஜர் இன்ஸ் இடம் ஓடினான். சல்யூட் அடித்தான். "மேஜர் இப்போது மூன்று முறை துப்பாக்கிச் சுடும் சப்தம் கேட்டிருப்பீர்கள்."

"ஆம் கேட்டேன், அது ஏதோ சமிக்ஞைப் போல்தான் தெரிந்தது."

“அது கலகக்காரர்கள் கொடுத்த சமிக்ஞை. இந்த ஊரில் ஒரு கையாள் வைத்திருக்கிறேன். அவன் இரண்டு நாட்களுக்கு முன்பே என்னிடம் சொல்லியிருந்தான். இது மாதிரி மூன்று முறை துப்பாக்கிச் சப்தம் கேட்டால் உடனே காட்டை நோக்கி ஆடு, மாடுகளுடன் கையில் கிடைக்கும் ஆயுதத்துடன் கலகக்காரன்கள் வரச் சொல்லியிருக்காங்களாம்.”

“சரி, நீ போகலாம்” என்றான் இன்ஸ்.

“மேஜர். நாமாகக் காட்டுக்குள் தேடி அலைவது கடினம். இப்போது நாமும் கிளம்பினால் கோபால் நாயக்கனையும், யாதுல் நாயக்கனையும் பிடித்துவிடலாம். ஊர்க்காரர்களுக்குப் பின்னால் அவர்களுக்குத் தெரியாமல் நம் ஆட்களை விட்டு அவர்கள் இருக்கும் இடத்தை அறியலாம். இந்த இரண்டு யோசனைகளில் எது நல்லதோ அதைச் செய்யலாம்” என்று சொன்னான்.

“நத்தர்கான் நீ சொன்ன இரண்டு யோசனைகளுமே மிக நல்ல யோசனைகள். நான் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறேன். இன்று நல்ல உணவு தயாராகிக் கொண்டிருக்கிறது. இப்போது காட்டுக்குள் சென்றால் வெளியில் வர எத்தனை நாளாகுமோ? அதனால்தான் எனக்கு ஒரு யோசனை வருகிறது. கிடைக்கும் நேரத்தில் நன்றாகச் சாப்பிடுவோம். பின்னர் சிறிது ஓய்வெடுப்போம்” என்றான்.

நத்தர்கான் சலாம் அடித்துவிட்டுச் சென்றதும் தனது ஆங்கிலேயத் துணைத் தளபதிகளை வரவழைத்து நத்தர்கான் சொன்னதை மேஜர் இன்ஸ் சொன்னான்.

“மேஜர் இன்ஸ், நத்தர்கான் நமக்குச் சரியான நேரத்தில் கிடைத்திருக்கிறான். இந்த ஆபரேசன் வெற்றிகரமாக நடந்தால், நத்தர்கானைப் பதவி உயர்த்துங்கள். இவன் செய்யும் வீரதீரச் செயல்களைப் பார்த்தால் இவன் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்குக் கிடைத்த இரண்டாம் கான் சாகிப் போலத் தெரிகிறான்” என்றான் லெப்டினென்ட் ஹாட்ஜன்.

“உன் வாக்குப் பலிக்கட்டும் லெப்டினென்ட் ஹாட்ஜன். ராமநாதபுரம் சீமை பனையூரில் பிள்ளைமார் குடும்பத்தில் பிறந்தவன் மருதநாயகம். அந்தப் பிள்ளைமார் வீட்டுச் சிறுவன் ஒரு முகம்மதிய குதிரை மேய்ப்பவனிடம் வளர்ந்தான். குதிரை மேய்ப்பவனால்

முகமதியனாக ஆக்கப்பட்டு கான் சாகிப் ஆனான். அவன் போர்த் திறமையை உணர்ந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனி அவனை கமாண்டர் ஆக்கியது. ஆற்காடு நவாப்பின் மகன் மாபஸ்கானுக்கு உதவித் தளபதியாக அவனைக் கம்பெனி நியமித்தது. நமக்குப் பிடிக்காத பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பெண்ணை அவன் திருமணம் செய்ய நினைத்தபோது, நமது பகையைக்கூட பெரிது பண்ணாமல் அவனது திருமணத்திற்கு அனுமதி தந்தோம். மதுரைத் தெருக்களில் ஒன்றுமில்லாமல் சுற்றிய சிறுவன் மருதநாயத்தை மதுரையின் கவர்னராக நியமித்தோம். நான்கு ஆண்டுகள் மதுரையின் கவர்னராக இருந்தான்.பெயர் தான் மதுரைக்கு கவர்னர். திருநெல்வேலி வரை உள்ள பாளையக்காரர்கள் அவனைப் பார்த்து பயந்தார்கள். திருவிதாங்கூர் அரசர் உட்பட. அதுபோல் இந்த நத்தர்கானையும் முடிந்தவரை உயர்த்துவோம்" என்றார் மேஜர் இன்ஸ்.

"கனம் அதிகமாகும்போது இறக்கி விட்டுவிடுவோம்தானே மேஜர்?"

"சரியாகச் சொன்னாய். இப்போது வீரர்கள் நன்றாகச் சாப்பிடட்டும். மாலை ஐந்து மணி வரை ஓய்வு. மாலை ஆறு மணிக்குக் காட்டுக்குள் செல்வோம். இந்தக் கனவாய் வழியாக கலகக்காரர்கள் திருவிதாங்கூர்ப் பகுதிக்குச் செல்லாதவாறு திருவிதாங்கூர்ப் படைகள் அங்குக் காவல் காக்கின்றன. ஒன்று அவர்கள் நம்மிடம் தப்பித்து திருவிதாங்கூர்ப் படைகளிடம் மாட்டுவார்கள் அல்லது நம் கையில் சிக்கி மடிவர். அதிகபட்சம் ஐந்து நாட்கள். கோபால் நாயக்கர் தவிர, கலகக்காரர்கள் அனைவரையும் சுட்டுக் கொல்ல அனுமதிக்கிறேன். ஏதோ தென்னிந்தியக் கூட்டமைப்பாம். சௌத் இந்தியன் கான்படரசியாம். அவரிடம் விசாரிக்க வேண்டும். முக்கிய பல தகவல்கள் அவரிடம் இருக்கின்றன. ஆகவே அவரை மட்டும் கொல்ல வேண்டாம். அவரை மடக்கிக் கைது செய்யுங்கள். யாதுல் நாயக்கர் உட்பட அனைவரும் பிடிபட்டவுடன் கொல்லப்பட வேண்டும்" என்றான் மேஜர் இன்ஸ்.

"நத்தர்கானுக்குச் சொல்லிவிட்டீர்களா மேஜர்" என்றதற்கு "இல்லை, இனிமேல் சொல்லுவேன்" என்றார் மேஜர் இன்ஸ். மதிய உணவுக்குப் பின் ஆங்கிலப் படை ஓய்வு எடுத்தது.

மாலை, நத்தர்கான் முன்னே செல்ல ஆங்கிலேயப் படை மலைமீது ஏறியது. கிராம மக்கள் போராளிகளோடு சேர்ந்து கொண்டனர். மலைமீது ஏறிய ஆங்கிலேயப் படைகள்மீது பொது மக்கள் கற்களை

வீசினர். பொது மக்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க, மேஜர் இன்ஸ் தனது படைகளை மலைமீது நேரடியாக ஏறாமல் மலையின் பக்கவாட்டுப் பகுதிகளைச் சுற்றி வரும்படி கட்டளையிட்டான். அந்த உத்தரவு சரியாகப் பலன் கொடுக்கத் தொடங்கியது. லெப்டினென்ட் ஹாட்ஜன் மலையின் சரிவிலிருந்து போராளிகளைத் தாக்கியதும் போராளிகளும், பொதுமக்களும் சிதறி ஓடினர். ஆனைமலைக் காடுகள் போராளிகளுக்கு அதிகம் பழக்கம் ஆகியிருக்கவில்லை. மிகவும் நெருக்கமான மரங்கள், ஆங்காங்கே ஏற்றமாகவும், இறக்கமாகவும் உள்ள மலைச்சரிவுகளினால் போராளிகள் விரைவில் களைப்படைந்தனர்.

தேளி யாதுல் நாயக்கர் எழுபது வயதிலிருந்தார். கனத்த உருவம். விருப்பாச்சி கோபால் நாயக்கரின் வலது கரம் போல யாதுல் நாயக்கர் செயல்பட்டதால் அவர் தேளி அரண்மனையில் வாழ்ந்த காலத்தைவிட தனது தலைவரின் விருப்பாச்சிக் காடுகளில் சுற்றியதுதான் அதிகம்.

காலையிலேயே தேளி ஜமீன்தார் யாதுல் நாயக்கரின் உடல்நிலை மோசமானது. அவரது சகாக்களான ராமு நாயக்கரும் ஆண்டியம்மாவும் யாதுல் நாயக்கரை கைத்தாங்கலாக மலைமீது மெதுவாக அழைத்துச் சென்றனர். ஆங்கிலேயப் படை நெருங்கி வருவதற்கான ஆரவாரங்கள் கேட்டன. அவர்கள் ஒன்றிரண்டு எச்சரிக்கைகளையும் செய்தனர். நத்தர்கானின் “சரண் அடையுங்கள்” என்ற எச்சரிக்கைச் சத்தம் காடுகளில் எதிரொலித்தது. போராளித் தலைவர்கள் நடப்பதும் உட்காருவதுமாக இருந்தனர்.

யாதுல் நாயக்கர் “இனிமேல் என்னால் நடக்க முடியாது. நான் உட்கார்ந்து கொள்ளுகிறேன். நீங்கள் கிளம்பிச் சமவெளியை அடையுங்கள். நேராக சிவகங்கைக்குச் செல்லுங்கள்” என்று சொல்லிவிட்டுத் தன் நெஞ்சில் கை வைத்தார். எந்தச் சூழலிலும், நம் படையினர் ஆங்கிலேயப் படையினரிடம் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள். நாம்தான் நாயக்கருக்குப் பெரும் பலமாக இருக்க வேண்டும் என்று மூச்சிரைக்க சொல்லிக் கொண்டே இருந்தவரின் தலை கவிழ்ந்தது. பெரும் போராளியான தேளி யாதுல் நாயக்கர் ஆனைமலைக் காட்டில் தனது இறுதிமூச்சை நிறுத்திக் கொண்டார்.

இருளடர்ந்த காட்டில், கை விளக்குகளுடன் மனித வேட்டையாடிக் கொண்டு வந்த, ஆங்கிலேயப் படையினரின் கண்களில் இறந்து கிடந்த உடல்கள் கிடைத்தன. நத்தர்கான்தான் முதலில் பார்த்தான். யாதுல் நாயக்கரின் பிரேதத்துடன், இன்னும் இரண்டு பிரேதங்கள்

இருப்பதைப் பார்த்தான். யாதுல் நாயக்கருடன் இருந்த இரண்டு உடல்களும் அவருடன் இருந்த ராமு நாயக்கரும் ஆண்டியம்மாவும் என்பதைத் தனது கையாள் மூலம் உறுதிசெய்து கொண்டான். யாதுல் நாயக்கர் இறந்தவுடன் அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். "இந்தக் காட்டில்தான் விருப்பாச்சி கோபால் நாயக்கன் இருக்கிறான். பிடியுங்கள் அவனை" என்ற நத்தர்கான் கொக்கரித்தான். மூன்று போராளித் தலைவர்கள் இறந்ததால் தங்களுக்குப் பெரிய வெற்றி கிடைத்ததாக கம்பெனி வீரர்கள் ஆர்பாட்டமாகக் காட்டுக்குள் துப்பாக்கியால் நாலாபுறமும் சுட்டுக் கொண்டாடினர்.

பல திசைகளிலும் குழுக்களாகப் பிரிந்து தேடிய, ஆங்கிலேயப் படை, விருப்பாச்சி பாளையக்காரர் கோபால் நாயக்கர், சோமந்துரை கவுண்டர், பெரியபட்டி நாக நாயக்கர், தோமச்சி முதலி, சின்ன மருதுவின் தளபதி சோமநாத சேர்வைக்காரர் ஆகியோரை கைது செய்தனர். பிடிபடாத போராளிகள் காட்டைவிட்டு இறங்கி சமவெளிகளில் ஓடினர். அந்தக் கூட்டத்தில் விருப்பாச்சி கோபால் நாயக்கர் மகன் முத்து வெள்ளை நாயக்கரும் அவனது நண்பன் முத்து வீரனும் இருந்தனர். அவர்கள் மதுரை வழியாகச் சிவகங்கையை சென்றடைந்தனர்.

•

38

ஜூன் 12, 1801

லெப்டினென்ட் கர்னல் அக்னியூ, மருது சகோதரர்களின் அடுத்த நடவடிக்கையைப் பாளையங்கோட்டையிலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்தான். ஆயுதங்கள் காளையார்கோயில் காடுகளில் பதுக்கப்படுவதாகத் துப்புக் கொடுக்கும் அரிக்காரர்கள் மூலமாகத் தெரிந்துகொண்டான். ஒருவேளை போர் ஏற்பட்டால் விளைச்சலை ஆங்கிலேயர்கள் கைப்பற்றக் கூடாது என்பதற்காக, சிவகங்கைப் பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த ஆண்டு மழை நல்ல முறையில் இருந்தும் யாரும் பயிர் வைக்கவில்லை. மதுரை கலெக்டரிடம் திருப்புவனத்திற்கு அருகில் போதுமான அளவு உணவுப் பொருட்கள் சேர்த்து வைக்குமாறு கர்னல் அக்னியூ வேண்டுகோள் விடுத்தான். அச்சமயத்தில், கவர்னர் எட்வர்ட் கிளைவ் ஓர் அறிக்கையை வெளியிட்டான்.

“சிவகங்கைச் சேர்வைக்காரரான சின்ன மருது கம்பெனி யினுடைய ஆட்சிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்துவிட்டார். மீண்டும் மீண்டும் அவருக்கு அறிவுரைகள் சொல்லப்பட்டதையும் சின்னமருது கேட்கவில்லை. பாஞ்சாலங்குறிச்சிக் கலகக்காரர்களுக்குத் தனது சீமையிலிருந்து போர் வீரர்களையும் படைக்கருவிகளையும் அளித்து அவர்களுக்கு உதவியுள்ளார். விருப் பாச்சிப் போராளிகளுக்குப் பாதுகாப்புத் தந்துள்ளார். கம்பெனியின் வசமிருந்த கமுதிக் கோட்டையைத் தாக்கியுள்ளார். ஆங்கிலேய வீரர்களையும் பொதுமக்களையும் கொன்றுள்ளார். கம்பெனியின் கட்டுப்பாட்டிலுள்ளப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு கம்பெனி மீது சின்ன மருது போர் தொடுத்துள்ளார். கம்பெனியின் ஆட்சியில் சிவகங்கைப் பகுதி மக்கள் பாதுகாப்புடனும் நல்ல வசதிகளுடனும் வாழ்ந்து வருகின்றனர். சிவகங்கை அரசி வேலு நாச்சியாரின் உதவியாளர் என்கிற முறையில் சின்ன மருது, இதற்கு முன்னர் பல குற்றங்களைப் புரிந்திருக்கிறார். சிவகங்கை அரசிற்கு கம்பெனித் தந்த பாதுகாப்பையும் மதிப்பையும் சிவகங்கை மக்கள் நன்கு அறிவர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், முந்தைய ராஜா முத்துவடுகநாதத் தேவர் அரண்மனையில் சின்ன மருது பணிபுரிந்தவர் என்பது அனைவருக்கும் தெரியும். முத்துவடுகநாதத் தேவரின் மறைவிற்குப் பிறகு, ராணி வேலு நாச்சியாரின் நம்பிக்கையைப் பெற்ற சின்ன மருது,

ஏறக்குறைய இருபது ஆண்டு காலம் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வருகிறார், எப்படி இறந்தார் என்று ஒருவராலும் உறுதிப்படுத்திக் கொள்ள இயலாத ராணி வேலு நாச்சியாரின் மறைவிற்குப் பிறகு சிவகங்கையின் அரசுரிமையை ராணியின் வாரிசுகளிடமிருந்து பறித்துக் கொள்வதற்காக ஆயுதமேந்தி சின்ன மருது போராடத் துவங்கிவிட்டார். இத்தகைய திமிர்த்தனமான அத்துமீறல்களைக் கண்டு கோபம்கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனி, புரட்சிக்காரன் சின்ன மருதுவையும் அவனுடைய ஆதரவாளர்களையும் தண்டிப்பதற்காக கர்னல் அக்னியூ தலைமையில் படைகளை அனுப்பியுள்ளது.

கம்பெனிக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களைப் பாதுகாக்கவும், சிவகங்கையின் உண்மையான வாரிசு யாராக இருந்தாலும், அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும் கர்னல் அக்னியூவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சிவகங்கை அரசுரிமை பெறத்தகுதியுள்ளவர் யாராக இருப்பினும் அவர்கள் கர்னல் அக்னியூவைச் சந்தித்துத் தமது சார்பான ஆதாரங்களைத் தெரிவிக்கலாம். யாருக்கும் பயப்படத் தேவையில்லை. கம்பெனி அரசை எதிர்த்துப் போரிடுவோரை அடக்கி ஒடுக்கிய பின்னர் சிவகங்கை அரசின் உண்மையான வாரிசுகளிடம் அரசுரிமை எவ்விதப் பாரபட்சமுமின்றித் திரும்ப ஒப்படைக்கப்படும். அரசுரிமையை எதிர்பார்ப்பவர்கள் கம்பெனியை ஆதரிக்க வேண்டும். அப்படியின்றி மருது பாண்டியருடனோ, அவருடைய கூட்டாளிகளுடனோ நட்புடன் இருப்பதாகத் தெரிய வந்தால் அவர்களுடைய அரசுரிமை கோரிக்கை நிராகரிக்கப்படும் என்றும் இதன்மூலம் அறிவிக்கிறேன். சின்ன மருதுவினுடைய அண்ணன் வெள்ளை மருதுவுக்குத் தனது தம்பியினுடைய தீய நடத்தையில் உடன்பாடு இல்லை என்று அறிகிறேன். வெள்ளை மருது தனது தம்பியைப் புறக்கணித்துவிட்டு கம்பெனியின் பக்கம் சேர்ந்து கொள்வாரானால் அவருடைய குற்றங்கள் மன்னிக்கப்படும். அவரை மரியாதையுடன் நடத்துவதற்கும் கம்பெனி அரசு தயாராக உள்ளது. பெரிய மருதுவைப் பாதுகாப்புடன் மதுரைக்கு அனுப்பி வைத்து அவர் அங்கே நிம்மதியாக வாழ, கம்பெனி அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தரும்.

சிவகங்கைக்கு ஆங்கிலேயப் படைகளை அனுப்ப வேண்டியதன் அவசியத்தைக் கம்பெனி அரசு, இந்தப் பிரகடனத்தின் மூலம் மக்களுக்குத் தெளிவாக விளக்கிவிட்டது. ஆங்கிலேயப் படைகளை யாரேனும் எதிர்த்தாலோ, சிவகங்கை ஆட்சி பீடத்திற்கு உரியவர்களுக்கு

யாரேனும் தீங்கு விளைவித்தாலோ, புரட்சிக்காரனான சின்ன மருதுவுடன் சேர்ந்துகொண்டு போரில் ஈடுபட்டாலோ, அவர்கள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. பாஞ்சாலங்குறிச்சியிலும், மைசூரிலும், விருப்பாச்சியிலும், தேளியிலும் கம்பெனி அரசை எதிர்த்துப் போரிட்டவர்களுக்கு நேர்ந்த கதியை அனைவரும் அறிந் திருப்பீர்கள். அதேபோன்ற நிலைமையை கம்பெனியை எதிர்க்கின்ற அனைவரும் சந்திக்க நேரிடும் என்று சிவகங்கை மக்களுக்கு எச்சரிக்கப்படுகிறது."

எட்வர்ட் கிளைவ்வின் இந்த அறிக்கையின் நகல்கள் கிராமங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சின்ன மருதுவிற்கும் பெரிய மருதுவிற்கும் கருத்து வேறுபாடு இருப்பதுபோல இந்த அறிக்கையின் வாசகங்கள் தேர்ந்தெடுத்து எழுதப்பட்டிருக்கின்றன என்றும், மருது சகோதரர்கள்மேல் மக்கள் வைத்திருக்கும் நல்லெண்ணத்தைப் போக்கவும், சாதி ரீதியாக மக்களைப் பிரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும்தான் அறிக்கையின் வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதை மக்கள் அறிந்தே இருந்தனர்.

•

39

இறந்துபோன தூந்தாஜிவாக்கின் தளபதிகள், மைசூர் போராளிகள், தஞ்சாவூர் ஞானமுத்து, கோயம்புத்தூர் போராளிகள், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை, சிவத்தையா, ஓடாநிலை சின்னமலை, ராமநாதபுரம் மயிலப்பன், விருப்பாச்சி கோபால் நாயக்கரின் மகன் என கிளர்ச்சியாளர்கள் சின்ன மருதுவின் தலைமையில் காளையார்கோயிலில் கூடினர். போராட்டக் குழுவினர் தங்கள் பகுதிச் செய்திகளையும், மக்களின் எழுச்சியையும், போராளிகளுக்கு எதிரான துரோகிகள் பற்றிய செய்திகளையும் பகிர்ந்து கொண்டனர்.

"தஞ்சாவூர் மராத்திய அரசன் பெயருக்கு மட்டும் அரசனாக இருக்கிறான். அவன் நமக்குச் சாதகமாகயில்லை. அதே சமயம் நமக்குத் தொல்லையும் தருவதில்லை. கும்பகோணத்தில் கலெக்டராக உள்ள சார்லஸ் ஹாரிஸ் எங்களுக்கு மிகுந்தத் தொல்லை தருகிறான். வியாபாரிகளிடம் விலைக்கு வாங்கிய உணவுப் பொருட்களை காளையார்கோயிலுக்குக் கொண்டு வந்தோம். அப்படி கொண்டு

வரும்போது வண்டிகளைத் தடுத்து நிறுத்தி பறிமுதல் செய்தான். எங்களுக்கு உணவுப்பொருட்கள் விற்பனை செய்த வியாபாரிகளை அழைத்து மிரட்டியுள்ளான். நமக்குப் பொருட்களைக் கொடுப்பவர்களை நாடு கடத்தி விடுவதாக மிரட்டுகிறான். காவிரிப்பூம்பட்டினம் கோட்டையில் கிழக்கிந்தியக் கம்பெனி வைத்திருந்த நெல் மூட்டைகளைக் கொள்ளையடிக்க முயற்சி செய்தோம். அது நடக்க முடியாதபடி அவன் சிப்பாய்களை வைத்து தடுத்துவிட்டான். சீர்காழி, உடையார்பாளையம், அரியலூர்ப் பகுதிகளில் கலெக்டர் வரிவசூல் பண்ண முயற்சி செய்தான். அந்த முயற்சியை முறியடித்தோம். அவன் இப்போது எச்சரிக்கை விட்டிருக்கிறானாம். "போராளிகளுடன் இணைபவர்கள் தங்கள் மரியாதையை அடகு வைப்பவர்கள். கம்பெனியின் பாதுகாப்பு என்பது பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகபட்ச மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை இழந்துவிட வேண்டாம்" என்று தஞ்சாவூர் ஞானமுத்து பேசினார்.

அடுத்ததாக வாராப்பூர் பொம்மு நாயக்கர் எழுந்தார். அவரும் ராமநாதபுரம் புதிய சேதுபதி முத்துக்கருப்பத் தேவர் போல திருமணம் செய்துகொள்ளாதவர். இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களும் கூட.

"சில நாட்களுக்கு முன்பு எங்கள் பகுதி அம்பலக்காரர்கள், கள்ளர் தலைவர்கள் உதவியுடன் திருப்பத்தூரிலும், மேலூரிலும் ஆங்கிலேயர்கள் பதுக்கி வைத்திருந்த படைக்கருவிகளையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றி காளையார்கோயிலுக்குக் கொண்டு வந்தோம். மேலூர்ப் பகுதியில் கட்டாய வரி வசூலில் ஈடுபட்ட ஆங்கிலேய அரசின் தாசில்தாரின் ஆட்களை அடித்து விரட்டினோம்.

அப்படியே மதுரை வந்து கர்னல் அக்னியூவின் நடவடிக்கைகளை நோட்டமிட்டோம். மதுரைக் கோட்டையைத் தாக்க முயற்சி செய்தோம். எதிரிகளின் பலம் கூடுதலாக இருந்ததால் கணவாய்ப்பட்டிக்கு வந்து, கணவாயைக் கைப்பற்றி நமது ஆதிக்கத்தில் வைத்துள்ளோம். நமது போராட்டத்தைக் கண்டு பதறிய புதுக்கோட்டை தொண்டைமான் மெட்ராஸ் கவர்னர் எட்வர்ட் கிளைவிற்குப் புகார் அனுப்பியிருக்கிறாராம். "சின்ன மருதுவும் சிவத்தையாவும் கூட்டணி அமைத்துக் கொண்டு திருமயம், வேலூர், மேலூர், நத்தம் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டதாக கவர்னருக்குப் புகார் கடிதம் எழுதியுள்ளார். அடுத்து நம் படை ராமநாதபுரத்திற்குப் போகப் போகிறது" என்றும் கடிதத்தில் எழுதியிருக்கிறாராம். தொண்டைமான் சொல்வதில்

உண்மைகள் இருக்கின்றன. இருந்தாலும் அவர் சொல்லிய அனைத்தையுமே உண்மையாக்க வேண்டும். இந்தச் சமயத்தில் ராமநாதபுரத்தை நோக்கி நாம் படையெடுக்க வேண்டுமா என்று சின்ன மருது சேர்வைக்காரர் விளக்கினால் நன்றாக இருக்கும்" என்றார்.

"எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியாக நீங்கள் ஒவ்வொருவரும் எழுப்பும் கேள்விகளுக்கு விடை காண்போம்" என்று சொல்லிவிட்டு, அடுத்துப் பேசுபவருக்காகச் சின்ன மருது தன் கவனத்தைத் திருப்பினார்.

மயிலப்பன் எழுந்தான். "உங்களில் பலருக்குத் தெரிஞ்ச விசயம்தான். ராமநாதபுரத்தையும் சிவகங்கையும் பெரிய சீமை, சின்னச் சீமை என்றுதான் மக்கள் அழைக்கிறார்கள். சிறிது காலத்திற்கு முன்புகூட ராமநாதபுரம் பிரதானி தாமோதரம் பிள்ளையும், சிவகங்கைப் பிரதானி தாண்டவராயப் பிள்ளையும் எவ்வளவு நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்கள் என்று சின்ன மருது சேர்வைக்காரருக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். அவர்கள் இருவரும் சேர்ந்துதான் எங்கள் சீமையில் எங்களது சேதுபதி சிறுவனாக இருந்தபோது காப்பாளராகயிருந்து பின்பு ராமநாதபுரம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற மாப்பிள்ளைத் தேவரை விரட்டிவிட்டு முத்துராமலிங்க சேதுபதியைப் பதவிக்குக் கொண்டு வந்தனர்."

"மயிலப்பா, நமக்கு நன்றாகத் தெரியும். மத்தவங்களுக்குச் சரியாத் தெரியாதுல்ல. கொஞ்சம் விளக்கமாச் சொல்லு."

"சரி அரண்மனை, எனக்குப் பதட்டத்தில் ஒன்னும் பேச வரமாட்டேங்குது. எங்களது பழைய சேதுபதி முத்து விஜயரகுநாத தேவர் இளைஞராக இருக்கும்போதே இறந்துவிட்டார். அவருக்கு வாரிசு கிடையாது. அப்போது அவருடைய தங்கைக்கு ஒரு வயதில் ஆண்குழந்தை இருந்தது. அந்தக் குழந்தையின் பாதுகாவலராக சேதுபதியின் தம்பி மாப்பிள்ளைத் தேவரை ஆங்கிலேயர்கள் நியமித்தார்கள். மாப்பிள்ளைத் தேவர், தானே சேதுபதியாக ஆவதற்குத் திட்டம் தீட்டிவிட்டார். ஏதேதோ காரணம் காட்டிக் குழந்தையாயிருந்த சேதுபதியையும் அவரது அம்மாவையும் கைது செய்து திருச்சியில் அடைத்து வைக்க மாப்பிள்ளைத் தேவர் ஏற்பாடு செய்துவிட்டார். ராமநாதபுரம் பிரதானி தாமோதரப் பிள்ளையும், சிவகங்கைப் பிரதானி தாண்டவராயப் பிள்ளையும் பத்து வருடங்களாகப் போராடி, திருச்சிச்

சிறையிலிருந்த சேதுபதியை மீட்டு சேதுபதியாக்கினர். மாப்பிள்ளைச் சாமியைப் பதவியிலிருந்து நீக்கினர். மீண்டும் அது போன்றே ஒரு சூழல் ஏற்பட்டுவிட்டது. பத்து வருடங்கள் சிறையிலிருந்துவிட்டு வந்த சேதுபதி இருபது வயது இளைஞர். வெளி அனுபவம் இல்லாதவர். அவர் மீது அவரது ஒன்றுவிட்ட அக்கா மங்களேஸ்வரி நாச்சியார் பொய்ப்புகார் ஒன்று கொடுத்தார். அதன் அடிப்படையில் சேதுபதி கைது செய்யப்பட்டு தற்போது மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சிறையிலிருக்கிறார். இப்போது சிவகங்கை பிரதானிகளின் ஆதரவோடு ராமநாதபுரத்திற்குப் புதிய சேதுபதியாக முத்துக்கருப்பத் தேவரை எங்களது சேதுபதி நியமித்திருக்கிறார்.

இந்த நிலையில் நாம் ராமநாதபுரம்மீது படையெடுத்தோம் என்றால் நம்மீது கம்பெனி கோபப்படும். சிறிது பயப்படவும் செய்யும். இதன் காரணமாக மங்களேஸ்வரி நாச்சியாரை ஆங்கிலேய அரசு, சேதுபதியாக நியமிக்கக்கூடும். அப்போது ஆங்கிலேயர்களின் ஆதரவு பெற்ற மங்களேஸ்வரி நாச்சியார் புதிய சேதுபதியா? அல்லது நமது ஆதரவு பெற்ற முத்துக்கருப்பத் தேவர் புதிய சேதுபதியா? என்ற குழப்பம் மக்களுக்கு வரும். இதன் காரணமாக, நம் படைக்கு ராமநாதபுரம் சீமையில் அதிக அளவில் ஆள் திரட்ட முடியாமல் போய்விடும். ஆகவே நாம் ராமநாதபுரம்மீது இப்போதைக்குப் படையெடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்வது சரியில்லை என்று நீங்கள் கருதினால் ராமநாதபுரம்மீது படையெடுக்கலாம். அவ்வாறு ராமநாதபுரம் நோக்கிப் படையெடுத்துச் செல்லும் படைக்கு என்னைத் தளபதியாக அனுப்ப வேண்டாம். நம் படை ராமநாதபுரம் செல்லும்போது நான் தொண்டைமானின் திருமயம் கோட்டை அல்லது ஆங்கிலேயர்களின் கமுதிக் கோட்டையைத் தாக்குகிறேன்” என்றார்.

வேலுத்தம்பியின் பிரதிநிதி எழுந்தான். “மலபாரின் திருவிதாங்கூர் அரசருக்கு எதிராகவும் கேரளத்திலுள்ள ஆங்கிலேயப் படைகளுக்கு எதிராகவும் வேலுத்தம்பி நடத்தும் போராட்டத்தில் மக்கள் கூட்டம் தினந்தோறும் பெருமளவில் சேர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் நாங்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வருகிறோம். குண்டாரா என்ற இடத்திலிருந்து எங்கள் தலைவர் வேலுத்தம்பி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் கொடூரமான முறையில் நாடுகளைக் கைப்பற்றுவதை ஆங்கிலேயர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். திருவிதாங்கூரில் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டால் அவர்கள் ஆலய வழிபாட்டையும் பிராமணர்களையும் நசுக்கி

விடுவார்கள். உப்பு வாணிபம் ஆங்கிலேயர்களின் முழு வசமாகிவிடும். தரிசு நிலங்களை விளைநிலமாக்குவார்கள். நல்லதுதானே செய்கிறார்கள் என நீங்கள் நினைக்கக்கூடாது. ஏனென்றால் அந்த நிலங்களுக்கு அவர்களே அதிபதிகளாவர். தென்னந்தோப்புகளுக்கும் நஞ்சை நிலங்களுக்கும் நம்மால் செலுத்த இயலாத அளவு வரி விதிப்பர். கீழ்ச்சாதி மக்களுக்கு சிறிய குற்றங்களுக்குக் கூடக் கடுந்தண்டனை தருவார்கள். இந்து ஆலயங்களில் கிறித்துவக் கொடி பறக்கவிடப்படும், சிலுவையை கோயில்களுக்குள் கொண்டுவந்து விடுவார்கள். மணமகனின் சாதியைப் பற்றி யோசிக்காமல் பிராமணப் பெண்கள் கலப்பு மணம் செய்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள். அனைத்து முறைகேடான அநியாயமான செயல்களும் புகுத்தப்பட்டு கலியுகம் வந்துவிட்டதோ? என நினைக்கத் தோன்றும். நமது தர்ம நிறுவனங்களுக்கும் பழக்கவழங்கங்களுக்கும் இந்த நீசப்பயல்களால் கேடு வந்துவிடக்கூடாது. நமது சக்திக்குட்பட்டு அவற்றைக் காத்திடப் பாடுபடுவோம். மற்றபடி ஆண்டவன் விட்ட வழி. இவைகள்தான் ஆங்கிலேயருக்கு எதிராக நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்."

"நன்றாகச் சொன்னீர்கள், நான் இது போன்று அறிக்கை ஒன்று தயார் செய்திருக்கிறேன். எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. வேலுத்தம்பியும், நானும் ஒரே மாதிரி சிந்தித்திருக்கிறோம். எனது அறிக்கையைக் கேளுங்கள்" என்றார் சின்ன மருது.

சின்ன மருது வாசிக்க ஆரம்பித்தார்.

"இந்தப் பிரகடனத்தைப் படிப்பவர்கள் யாராக இருந்தாலும் இதில் உள்ளவற்றைக் கவனமாகப் படியுங்கள்.

"ஜம்புத்தீபா நாட்டிலும், அதன் தீபகற்பத்திலும், வாழ்கின்ற அனைத்து இனத்தவர்களுக்கும், உள்நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும், பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் மற்றும் பல சாதிகளாகப் பிளவுபட்டிருக்கும் மக்களுக்கும் முகமதியர்களுக்கும் பொதுவான நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரகடனம் வெளியிடப்படுகிறது.

மரியாதைக்குரிய ஆற்காடு நவாப் முகமது அலி ஆங்கிலேயருக்கு இடமளித்ததால் இந்த மண் இப்போது 'கைம்மை' நிலையில் உள்ளது. நேர்மைக்குப் புறம்பாக, ஆற்காடு நவாப்பினுடைய ஆட்சியுரிமையை ஆங்கிலேயர்கள் வஞ்சகமாகக் கைப்பற்றிக்

கொண்டனர். உள்நாட்டு மக்களை நாய்களாகக் கருதி கேவலமாக நடத்துகின்றனர். காரணம், நாம் அடிப்படையில் ஜாதி, மதம், ஊர் என்று நமக்குள் பிளவுபட்டிருப்பதுதான்.

நாம் நமக்குள் ஒற்றுமையையும் நட்பையும் வளர்த்துக் கொள்ளாமல், ஆங்கிலேயர்கள் நம் மத்தியில் ஆடுகின்ற இரட்டை நாடகத்தையும் புரிந்துகொள்ளாமல், நமக்குள் பகைமையை வளர்த்துக் கொள்கிறோம். ஆட்சியையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டோம். ஆங்கிலேயர்கள் என்னும் அதிகார வெறியர்களின் கைகளில் சிக்கிக் கொண்டு மக்களுடைய வாழ்க்கை சீரழிந்து வருகிறது. உண்பதற்குக்கூட உணவில்லை. தினம் தினம் நடந்தேறும் படுகொலைகளால், மக்கள் பயத்தினால் நிம்மதி இழந்துள்ளார்கள். துன்பம் துயரங்களுக்கு ஆட்பட்ட போதிலும், அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

பிறந்த மனிதர்கள் எல்லோரும் ஒருநாள் இறந்துதான் ஆகவேண்டும். வாழும் காலத்தில் தங்களின் நற்காரியங்கள்மூலம் அவர்கள் புகழ் பெற்றார்கள் என்றால் சந்திர, சூரியர்கள் உள்ள வரை அந்தப் புகழ் நிலைத்திருக்கும். நாம் நம்முடைய மண்ணையும், மக்களின் வாழ்க்கையும் மீட்டெடுக்கும் நற்காரியத்தில் ஈடுபடுவோம். ஆங்கில ஆட்சியில் இழந்துவிட்ட நம்முடைய மரபான உரிமைகளை மீட்டெடுக்கும் விதத்தில் திட்டங்கள் வகுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மரியாதைக்குரிய ஆற்காடு நவாப்பிற்கும், மதுரை திருமலை நாயக்கருக்கும், தஞ்சாவூர் மராத்திய ராஜாவுக்கும், ஏனைய மன்னர் களுக்கும் அவரவருக்குரிய அரசுரிமை முழுமையாகத் திரும்ப ஒப்படைக்கப்படும். அனைவருக்கும் அவரவர்க்கு உரிய உரிமைகள், சமய நம்பிக்கைகள், மரபு வழிப்பட்ட பழக்கவழக்கங்கள் முறையாகப் பின்பற்ற வழிவகை செய்யப்படும். நவாப்பிற்கு ஆங்கிலேயர்கள் மரியாதை கொடுத்து அடங்கி நடக்கவேண்டும். ஆங்கிலேயருடைய ஆட்சி அதிகாரம் அழித்தொழிக்கப்பட்டுவிட்டால், நவாப்பினுடைய ஆட்சியின்கீழ் நாமும் நிம்மதியாக வாழலாம்.

இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் தாம் வாழுகின்ற ஊர்களிலும் பாளையங்களிலும் ஆயுதங்களை ஏந்தி ஒருங்கிணைந்து ஆங்கிலேய இழிபிறவிகளுடைய பெயர்கூட இம்மண்ணில் இல்லாதபடி

அழித்தொழிக்க உறுதி பூண வேண்டும். அப்போதுதான் ஏழை எளியவர்கள் உயிர் வாழ முடியும்.

எச்சில் சோற்றைத் தின்று வாழுகின்ற நாய்களைப் போன்ற ஐரோப்பிய இழிபிறவிகளுக்குக் கீழ்ப்படிந்து உயிர் சுமந்து திரிய, நம் மக்களில் யாரேனும் ஆசைப்படுவார்களானால் அவர்களை வேரோடு கருவறுக்க வேண்டும். அவர்கள் நம்முடன் இருந்து கொண்டே, சூழ்ச்சிகள் செய்து இந்த மண்ணை அடிமைப்படுத்தியுள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், முகமதியர்கள் என்றெல்லாம் பிளவுண்டு, வழி மாறிப் போய் அந்த ஆங்கிலேய இழிபிறவிகளுடைய படையில் சுபேதார்கள், அமில்தார்கள், நாயக்குகள், நேட்டிவ்கள், சிப்பாய்கள், பிக்காளிகள் என்ற பட்டங்களைச் சுமந்து அலுத்துப்போய் ஆயுதமேந்திய வல்லவர்களே, உங்களுடைய வீரத்தையும் தீரத்தையும், ஆங்கிலேய இழிபிறவி இனத்தவரில் யாரைக் கண்டாலும், எங்கு கண்டாலும் உடனே அவர்களை வெட்டி வீழ்த்தி வெளிப்படுத்துங்கள். கடைசி வெள்ளையன் வரை வெட்டிச் சாயுங்கள்.

வெள்ளைய இழிபிறவிகளுக்குச் சேவை புரியக்கூடியவன் எவன் இறந்தாலும் சொர்க்கத்திற்குச் செல்லப் போவதில்லை. அதனை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள். வெள்ளையர்களிடம் நம்மைக் காட்டிக் கொடுத்து, நம்மவர்கள் தமது தோள்களிலும் மார்புகளிலும் மாட்டிக்கொண்டு திரிகிற பட்டங்களும், பதக்கங்களும் எமது மறைவிடங்களில் வளரும் மயிருக்குச் சமமானவை. அவர்கள் உண்ணும் உணவு மலம்தான். அவர்களுடைய பெண்டாட்டியும், பிள்ளைகளும் மற்றவர்களுக்கு உரியவர்கள். கூட்டிக்கொடுத்த இந்த இழிபிறவிகளுக்குப் பிறந்தவர்களாக அவர்கள் கருதப்படுவார்கள். ஆகையால் ஆங்கிலேயருடைய ரத்தத்தால் ரத்த நாளங்களிலும் யார் யார் மாசுபடவில்லையோ அவர்களெல்லாம் எங்களோடு ஒன்றிணையுங்கள்.

இந்தப் பிரகடனம் ஆங்காங்கே சுவரொட்டியைப்போல் ஒட்டப்படும். ஒட்டப்பட்ட சுவரொட்டியைப் படிப்போரும், அடுத்தவர்கள் படிப்பதைக் கேட்போரும், தங்களின் நண்பர்களுக்கும் ஏனையோருக்கும் இந்தச் சுவரொட்டியில் கண்ட செய்திகளைப் பரப்புங்கள். இதேபோன்ற சுவரொட்டிகளைத் தயாரித்துப் பரப்புரை செய்யுங்கள். இப்பிரகடனத்தைப் படித்த பிறகும், இதில் கண்ட செய்திகளைப் பரப்புரை செய்யாதவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாகி

நரகத்தின் அத்தனை சித்திரவதைகளுக்கும் ஆட்படுவான். இந்தப் பணியை மேற்கொள்ளாத முஸ்லீம் இனத்தவன், பன்றியின் ரத்தத்தைக் குடித்த பாவத்திற்கு ஆளாவான்.

இந்தச் சுவரொட்டியை, ஒட்டப்பட்ட சுவற்றிலிருந்து கிழிப் பவன் பஞ்சமா பாதகங்களைப் புரிந்த பாவத்திற்கு ஆளாவான். ஒவ்வொருவரும் இதனைப் படித்து நகலெடுத்துக் கொள்ளுங்கள்."

இப்படிக்குப் பேரரசர்களின் ஊழியன் சின்ன மருது பாண்டியன்.

சின்ன மருது வாசித்து முடித்தான். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அமர்ந்தான். கூட்டத்தில் அமைதி நிலவியது. சிவத்தையா எழுந்தார்.

"சின்ன மருது பாண்டியரே, இந்தப் பிரகடனம் மிகுந்த கருத்தாழத்தோடு அமைந்துள்ளது. அனைத்துச் சமூகத்தினரின் நலனையும் உத்தேசித்து எழுப்பப்பட்ட அரசியல் முழக்கம் இது" என்றார் சிவத்தையா.

"போராட்டத்தை வழி நடத்துபவர்கள், தாங்கள் ஏன் போராடுகிறோம் என்று தம் மக்களுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் போராட்டம் வலிமையடையும். மக்களின் உண்மையான பங்களிப்பும் நமக்குக் கிடைக்கும். மக்களின் பங்களிப்பில்லாமல் எந்தப் போராட்டமும் வென்றதில்லை. ஜாதி, மத பேதமின்றி நம் மக்கள் அனைவருக்கும் பொதுவான இந்தப் பிரகடனம் மக்களை நம் பக்கம் திரட்டும். நாம் ஒன்று சேர வேண்டிய அவசியத்தை இதுவரை எந்தத் தலைவனும் அறிக்கையாகச் சொன்னதில்லை. ஐரோப்பியர்களுக்கு எதிரானது என்று நீங்கள் சொல்வதின்மூலம் ஆங்கிலேயர்களோடு சேர்ந்து பிரெஞ்சு, டச்சுக்காரர்களுக்கும் எதிரான யுத்தத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறீர்கள்" என்றான் சின்னமலை.

"ஆமாம் சின்னமலை, இதைத் திருச்சியிலுள்ள நவாப் மாளிகையின் கோட்டைச் சுவரிலும் ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் கோயில் சுவரிலும் ஒட்டப் போகிறோம்" என்றார் சின்ன மருது.

ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமானின் ஆலயச் சுவரில் ஒட்டப்பட்ட பிரகடனம் பொதுமக்களின் கண்களில் பட்டதோ என்னமோ, ஆங்கிலேயர்களின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்தது. புகைந்து

கொண்டிருந்த அவர்களின் வன்மம், பசிய காளையார்கோயிலையே எரித்துவிடக்கூடிய நெருப்பாகக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

•

40

மருது பாண்டியர் காளையார்கோயில் கிராமத்திலுள்ள காளீஸ்வரர் கோயிலுக்குள் வரும்போது இரவாகிவிட்டது. 157 அடி உயர காளையார்கோயிலின் கோபுரத்தை மருது பாண்டியர்கள் கட்டி முடித்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்தன. வானம் தெளிவாக இருக்கிற நேரத்தில் கோபுரத்தின் உச்சியில் இருந்து, மதுரை மீனாட்சியைத் தரிசிக்க முடியும். காளையார்கோயில் மக்களின் அர்ப்பணிப்பால்தான் கோபுரம் கட்டும் பணி விரைவாக முடிந்தது என்பதைச் சகோதரர்கள் இருவரும் அறிவர். கோபுரத்தின் வழியே கோயிலுக்குள் நுழையும் ஒவ்வொரு முறையும் மருது பாண்டியர் களின் முகத்தில் பெருமிதம் தெரியும். கோபுரத்தை அவர்கள் கடக்கையில் நிதானமாக நடப்பார்கள். உடன் வருபவர்கள் ஒருவருக்கொருவர் கோபுரச் சுவற்றை கண்களால் சைகையில் காண்பிப்பார்கள். பின் முகம் முழுக்கப் புன்னகையுடன் மருது சகோதரர்களைப் பார்ப்பார்கள். இன்று அப்படி இல்லை. மருது சகோதரர்கள் வேகமாக நடந்து கோபுரத்தைக் கடந்தனர். உடன் வந்த தளபதிகள் மட்டும் மருதுவுடன் கோயிலுக்குள் வந்தனர். இரண்டாயிரம் வீரர்கள் கோயிலுக்கு வெளியே நின்றனர்.

அர்த்த ஜாமப் பூஜை நடந்தது.

இறைவன் முன்பு கை கட்டி நின்றார் பெரிய மருது.

“காளையார்கோயில் காளீஸ்வரனே, உன் ஆட்சி நிலையானது. உன்னை அண்டி வந்தவர்களை நீ என்றும் கை விட்டதில்லை. சங்க

காலத்தில் வேங்கை மார்பன் என்ற சிற்றரசன் இந்தப் பகுதியை ஆண்டான். அவன்மீது வலிமை மிக்க பாண்டிய அரசன் படையெடுத்தும் வேங்கை மார்பனை வெல்ல முடியவில்லை. துலுக்கத் தளபதி மாலிக் காபூர் தூக்கிச் சென்று விடுவான் என்று பயந்து மதுரையின் தெய்வம் மீனாட்சி சொக்கநாதரை உன்னிடம்தான் ஒப்படைத்தனர். மனிதர்களையும் தெய்வங்களையும் இந்தக் காட்டில் நீ பாதுகாத்து அவர்களுக்கு நிலைத்த புகழைத் தந்துள்ளாய். உன்னைத் தேடி வந்துவிட்டோம். பதினெட்டு மைல் சுற்றளவுள்ள இந்த அடர்ந்த காடு உன் அருளாட்சிக்கு உட்பட்டது. இங்குள்ள மரம், செடி கொடிகள் உன்னுடையது என்பதால் நாங்கள் யாரும் காட்டுக்குள் அதிர்ந்துகூட நடப்பதில்லை. உயிர் மரங்களை வெட்டுவதும் இல்லை. உன்னைத் தவிர யாரும் நெருங்கமுடியாத இந்தக் காட்டை எங்களுக்குப் புகலிடமாகக் கொடு" என்று வாய்விட்டு வேண்டினார். கூப்பிய கைகளோடு சின்ன மருதுவும், தளபதிகளும் நின்றிருந்தனர். அவர்கள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

பெரிய மருது பிரகாரத்திற்கு வந்தார். சம்பிரதாயப்படி பிரகாரத்தில் சம்மணம் இட்டு அமர்ந்தார். அவரைச் சுற்றி சின்ன மருதுவும், சகாக்களும் அமர்ந்தனர்.

"அண்ணே, காட்டுக்குள் உணவுப் பொருட்கள், ஆயுதங்கள், குடி தண்ணீர் வசதி எல்லாம் ஏற்பாடு பண்ணிட்டோம். காட்டின் ஓரங்களில் அம்பது, அம்பது பேராகத் தங்க வைச்சிருக்கேன். ஒவ்வொரு ஆயிரம் தப்படி தாண்டி அம்பது ஆட்கள் இருப்பாங்க. நான் கிழக்கே காடு ஓரத்தில் இருந்துக்கிறேன். மயிலப்பன் மேற்கே இருந்து கொள்வார். முத்து வெள்ளை வடக்கே இருப்பார். வாராப்பூர் நாயக்கர் தெற்கே இருக்கட்டும். ஆயிரம் தப்படி தாண்டி எனக்கு நேர் பின்னாலே சிவத்தையா நாயக்கர், மயிலப்பனுக்கு நேர் பின்னால் குமாரசாமி, முத்து வெள்ளை நாயக்கருக்கு நேர் பின்னாலே முத்துக்கருப்பத் தேவர், வாராப்பூர் நாயக்கருக்கு நேர் பின்னாலே சேக் உசேன் இருக்கட்டும். அவங்க அவங்க ஊர்க்காரங்க ஐம்பது பேர் அவர்களுடன் இருக்கட்டும். மீதி உள்ள ஆட்கள் எங்களுக்குப் பின்னாலே உள்காட்டுக்குள்ளப் போயிரலாம்" என்றார்.

"சரிப்பா, சிவங்ககை அரசரும், நானும் எந்த இடத்தில இருக்கணும்?"

"அண்ணே, உங்களுக்கும், உங்ககூட இருக்கிற ஆட்களுக்கும் தான் எந்த மிருகங்க எங்க இருக்கும்னு தெரியும். காட்டு மிருகங்களப்

பத்தி நல்லாத் தெரிஞ்ச உங்க கூட்டாளிகளை எங்க எட்டு குழுக்களுக்கும் குழுவுக்கு ரெண்டு பேரா பிரிச்சுக் குடுங்க. அவங்ககிட்டத் தேவையான விசயத்தை நாங்க கேட்டுக்கிறோம்."

"அதுவும் சரிதான். நாம காட்டுக்குள் இருக்குற நேரங்கள்ல மிருகங்களை விரட்டி விட்டுறக் கூடாது. அவைகளை வேட்டை யாடவும் கூடாது. அடர்ந்த காட்டுக்குள்ள வெள்ளைக்காரங்களால உள்ளே வரவே முடியாது. நம்ம உதவியில்லாம அவன்களால காட்டுக்குள்ள நடக்கக்கூட முடியாது. அவர்கள் நடக்கமாட்டாமல் தடுமாறுவதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அதுவும் மிலிட்டரிகாரங்களுக்கு இந்தக் காடு புதுசாத் தெரியும். நான் காட்டுக்குள் கூட்டிக்கிட்டுப் போனது எல்லாம் பெரும்பாலும் சிவிலியன்களைத்தான். மிலிட்டரிகாரங்களை நான் அதிகம் கூட்டிக்கிட்டுப் போனதில்லை. சிவிலியன்கள் இந்தப் போரில் வரமாட்டானுங்கள்ல. அதனால வெள்ளைக்காரத் தளபதிகளுக்கு இந்தக் காட்டப் பத்தி எந்தப் பெரிய விசயமும் தெரியாது.

மேஜர் வெல்ஷ்க்குத் தெரியும். ஆனால் அவர் நம்மை காட்டிக் கொடுக்க மாட்டார். மற்றத் தளபதிகளுக்கு இந்தக் காடு பெரும் பயத்தைக் கொடுக்கும். ஆயுதம் தாங்கிய நம் வீரர்களைக்கூட பயமில்லாமல் எதிர்கொள்வார்கள். புதருக்குள்ளிருந்து கிளம்பும் நரியும், பாம்பும், சிறுத்தையும் அவங்களைக் கூட்டத்தோட ஓட வைக்கும். அந்த பயத்த அவங்களுக்குத் தரணும்னா, நாம மிருகங்களவிட்டு ஒதுங்கியிருக்கணும். இந்தக் காடும் மிருகங்களும், இருக்கும்வரை நம்மை அவன்களால் நெருங்கமுடியாது. ஒரு நாளைக்கு நூறு பேரை காட்டுக்குள்ள வச்சுக் கொல்லுவோம். அப்படிச் செத்தானுங்கன்னா, பத்து நாள்ல மூட்டையக் கட்டிகிட்டுக் கிளம்பிருவானுங்க. அவன் எத்தனாயிரம் பேர் இருப்பான்? ஐயாயிரம், பத்தாயிரம்? நாம எழுபத்தஞ்சாயிரம் பேர் இப்போ தயாரா இருக்கோம். காட்டுக்குள்ள போனா நம்ம பலம் பத்து மடங்கு. வரட்டும் வெள்ளையனுங்க. அட்டைங்கள நசுக்குற மாதிரி நசுக்கிப் போட்டுட்றேன். நாம இதுவரை இந்தக் காட்டுலயிருந்து நடத்திய எல்லா யுத்தங்களிலும் ஜெயிச்சிருக்கிறோம். இந்த முறையும் ஜெயிப்போம்."

கோபுர வாசலில் சலசலப்பு கேட்டது. "சிவகங்கை அரசர் வாழ்க, வாழ்க" என்று வாழ்த்தொலி ஓங்கிக் கேட்டது. கோயிலுக்குள் இருந்த மருதுவின் குழுவினர் எழுந்து நின்றனர். வெங்கம் பெரிய உடையணத்

தேவர் முன்னே வர, அவர் பின்னால் துந்தாஜி வாக்கின் தளபதியும், இரண்டு நாங்குநேரி ஆட்களும் வந்தனர்.

மருது சகோதரர்கள் அரசரை வணங்கினர். “அம்மான், இங்க இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். கோட்டைக்குள் போவதற்கு முன்பு இறைவனைத் தரிசித்துவிட்டு உங்களையும் பார்க்கலாம் என்று வந்துவிட்டேன்.”

“அரசே, இறைவனை வணங்கிவிட்டோம். அர்த்த ஜாமப் பூஜையும் இப்போதுதான் முடிந்தது. கருவறையை மூடிவிட்டார்கள். அடைத்த கருவறையைத் திறக்கக்கூடாது. ஆகவே கொடி மரத்திலிருந்து இறைவனை வணங்கிக்கொண்டாலே போதும்” என்றார் பெரிய மருது.

அரசர் கொடி மரத்திற்குச் சென்று, முழு உடலும் மண்ணில்பட வீழுந்து வணங்கி எழுந்தார். அரசர் அமர்ந்தார். கூட்டம் மறுபடியும் கூடியது. தள்ளி அமரச் சென்ற பெரிய மருதுவின் கைகளைப் பிடித்து “உட்காருங்கள் அம்மான், என் பக்கத்தில்” என அமர வைத்துக் கொண்டார்.

“சின்ன அம்மான், நடந்து கொண்டிருக்கும் போர் பற்றி நாம் கொஞ்சம் பேசலாம். நம்மிடம் இருக்கும் படையும், சிவத்தையாவின் பாஞ்சாலங்குறிச்சிப் படையும் சேர்ந்து காளையார்கோயில் கோட்டைக்குள் இருந்து வெள்ளையர்களை எதிர்கொள்ளுவோமா? காட்டுக்குள் சென்று எதிர்கொள்ளுவோமா? என இப்போது முடிவு செய்ய வேண்டும். அவர்கள் காளையார்கோயில் கோட்டையை முற்றுகையிட்ட பிறகு, ஒருவேளை காளையார்கோயில் இறைவனின் திருவுள்ளம் நமக்கு உதவவில்லை என்றால் நாம் கோட்டையை விட்டு வெளியேறிக் காட்டுக்குள் புக வேண்டியிருக்கும். கடைசி நேரத்தில் காட்டுக்குள் புகுவது நமக்கு பெரும் சிரமமாகிவிடும்.”

சின்ன மருது எழுந்தார்.

“அரசரின் கருத்தை ஒட்டித்தான் நாங்களும் சிந்தித்தோம். காளையார்கோயில் கோட்டை பாதுகாப்பானது அல்ல. இங்குதான் உங்களது மாமாவும், சிவகங்கை அரசருமான முத்து வடுக நாதரையும் உங்கள் அத்தை கௌரி நாச்சியாரையும் மேஜர் பான்ஜோர் தாக்கினான்” பெரிய மருது சொன்னார்.

“மருது அண்ணே, மன்னிக்கனும்”

“சொல்லு சிவத்தையா. இதுபோன்ற சமயங்களில் எல்லோருடைய கருத்தும் பரிசீலிக்கப்பட வேண்டும்” என்றார் பெரிய மருது.

“அண்ணே, எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லுறேன். நான் பலமுறை கட்டபொம்மு அண்ணனுடன் காளையார்கோயிலுக்கு வந்திருக்கேன். அண்ணே, நீங்க எங்களப் பலமுறை காட்டுக் குள்ள கூட்டிக்கிட்டுப் போயிருக்கீங்க. நான் தனியாகவும் காளையார் கோயில் கோட்டைக்குப் போயிருக்கேன். நான் கணித்த வரையில் இந்தக் கோட்டை பாதுகாப்பானதாக எனக்குத் தெரியல. என்னடா வெளியூர்க்காரன் நம்ம கோட்டையப் பத்தி கொறைச்சுப் பேசுறானேன்னு தயவுசெஞ்சு நினைக்காதிங்க. கமுதிக் கோட்டையச் சொல்லுங்க. ஒத்துக்கிறேன். திருமயம் கோட்டையைச் சொல்லுங்க. யாரும் நெருங்க முடியாது. எங்க ஊர்ப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்ட விழுகவே விழுகாதுன்னு நினைச்சு வரகு, செம்மண் சாந்து கருப்பட்டின்னு போட்டுக் கட்டினோம். பீரங்கிக் குண்டுகளைக்கூடத் தாங்கி நின்னுச்சு. ஆனா துரோகத்துல விழுந்துபோச்சு. எங்க ஊருக்கு வந்த நாலு நாள்ல இந்த கர்னல் அக்னியூ நம்ம ஆளுககிட்டயே விசயத்த வாங்கிட்டான். கோட்டச் சுவத்துல பீரங்கிய வச்சுத் தாக்காம நாலுபக்கச் சுவர்களும் ஒன்னு சேர்ற இடத்தில தாக்கிக் கோட்டைச் சுவர ஒடைச்சுட்டான். எங்க முயற்சியெல்லாம் பாழாப்பேச்சு” என்று சொல்லிக் கலங்கினான்.

ஊமைத்துரை அண்ணனின் கண்களைத் துடைத்தான். சிவத்தையா தொடர்ந்தான்.

சிவகங்கை அரசருக்குத் தெரியாததில்லை. எங்க ஊர்க் கோட்டையை உடைக்கும் ரகசியத்தை ஒருத்தன் கர்னல் அக்னியூ விடம் சொல்லி, கோட்டையைப் பறி கொடுத்தோம். இந்தக் கோட்டையைப் பத்தியும் விசாரிச்சுருவானுங்க. உடைக்கிறதுக்கு குறுக்கு வழி கண்டுபிடிச்சுருவானுங்க. வெள்ளைக்காரன் அவன் படையில வீரன்களை உருவாக்கிறான்களோ இல்லையோ, நம் கூட்டத்தில துரோகிகளை உருவாக்கிருவானுங்க”

சின்ன மருது அவர்கள் சொல்லுவதை உள் வாங்கிக் கொண்டார். வெங்கம் பெரிய உடையணத் தேவரை நோக்கித் திரும்பினார்.

“ஆம் அரசே. பாஞ்சாலங்குறிச்சி நாயக்கர்கள் சொல்லுவது சரிதான். மனிதர்களில்தான் துரோகியை உருவாக்க முடியும். மரங்களும், மிருகங்களும் காட்டிக் கொடுக்காது. துரோகம் செய்யாது. நாம்

காளையார்கோயில் கோட்டைக்குள் இருக்க வேண்டாம். காட்டுக்குள் போய் விடுவோம். அரசரும், அண்ணனும் உள்காட்டில் இருங்கள். நடுக்காட்டுக்குள்ளிருந்து எங்களது நடவடிக்கைகளை வழி நடத்துங்கள். உணவுப் பொருட்கள், ஆயுதங்கள் தட்டுப்பாடு இல்லாமல் எங்களுக்கு வந்து சேருமாறு பார்த்துக் கொள்ளுங்கள். உள்காட்டுக்குள் நாம் வெடிமருந்து பயன்படுத்தப் போவதில்லை. வெடிமருந்துகளைக் காட்டின் வெளிப் பகுதியில் இருக்கும் எங்களிடம் முழுவதுமாக ஒப்படைத்து விடுங்கள். உங்களிடம் வளரி, வேல் கம்பு, குத்தீட்டி, கவண் கல்லுங்க மட்டும் இருந்தால் போதும்."

"சின்ன மருது, நெருப்பு என்றால் வாய் வெந்துவிடாது. எல்லா வெடிமருந்துகளையும் நீங்கள் வைத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் காட்டின் வெளிப்பகுதியில் முதல் அடுக்கில் இருக்கிறீர்கள். நாங்கள் இரண்டாவது அடுக்கில் இருக்கிறோம். எங்களிடம் வெடி மருந்து வேண்டாம் என்கிறீர்கள். சிவகங்கை அரசரும், பெரிய மருது அண்ணனும் உள்காட்டில் இருக்கிறார்கள். அவர்களிடமும் வெடிமருந்து இருக்காது. ஒருவேளை உங்களைத் தாண்டி அவர்கள் வர முயன்றால்..." என்றார் முத்துக்கருப்பத் தேவர்.

"சேதுபதி அரசர் சொல்வது மிகவும் சரி. அரசருக்குத் தெரியாதது இல்லை. எங்களது தகப்பானரை அறிந்தவர். எங்களது தகப்பனாரின் நண்பர். நாம் இப்போது நடத்தப்போவது நாம் இதுவரை நடத்திய யுத்தங்கள்போல இல்லை. இதுவரை சமவெளியிலும், பாறைகளிலும் நாம் போர் நடத்தியிருக்கிறோம். காடுகளில் போர் நடத்தியதில்லை. நம்மோடு இருந்த துந்தாஜி வாக் இருநூறு வருடங்களுக்கு முன்பு அவர்கள் பகுதியின் சிவாஜி ராஜா நடத்திய போர் முறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். நம்ம விருப்பாச்சி பெரிய நாயக்கர்கூட சிறு அளவில் எங்களுக்குக் காட்டில் போர் ஒத்திகை செய்து காண்பித்துள்ளார். என்ன? விருப்பாச்சி சின்ன நாயக்கரே?"

விருப்பாச்சி கோபால் நாயக்கரின் மகன் முத்து வெள்ளை எழுந்து நின்றான்.

"சேர்வைக்காரர் சொல்வது சரிதான். எனக்கு மட்டுமல்ல. நம்மில் பலருக்கும் தகப்பன் ஸ்தானத்தில் இருக்கும் என் நய்னாவை இப்போது வெள்ளைக்காரன் அடைத்து வைத்திருக்கிறான்" என்ற படியே கண்

கலங்கினான். மயிலப்பன் அவன் தோளைத் தொட்டு சமாதானப்படுத்தினான்.

“நாயக்கரே, பெரிய மருது சேர்வைக்காரர் பெயரை வைத்துக்கொண்டு, இப்படிக் கலங்கலாமா? உன் நைனா எங்களுக்கு வழிகாட்டி. அவரை நத்தம் தாசில்தாரிடம் காட்டிக் கொடுத்தப் பயலை, நம்ம சின்ன மருது அண்ணன் பொலி போடவில்லையா? அதேபோல வெள்ளைக்காரன்களைப் பொலி போட்டு பெரிய நாயக்கரை மீட்போம். போர் ஆலோசனையின்போது நீங்கள் கண் கலங்கக் கூடாது. நீங்கள் கலங்கினால் நம் ஆட்கள் சோர்ந்து விடுவார்கள். நீங்கள் விருப்பாச்சி பகுதியின் ஜமீன்தார். அந்தப் பகுதியின் தன்னிகரில்லாத அதிபதி. இப்போது நாம் நடத்தும் பேச்சு வார்த்தைக்கு, போர் வியூகத்திற்கு உங்களது பங்களிப்பைத் தாருங்கள்.”

கோபால் நாயக்கரின் மகன் கண்களைத் துடைத்துக் கொண்டான். “எங்கள் பகுதியில் உள்ள காட்டைவிட இந்தக் காடு மிகவும் நெருக்கமானது. எங்கள் பகுதிக் காட்டில் உடை முள் கிடையாது. இங்குள்ள உடை முள் எதிரிக்குப் பெரும் அச்சத்தைக் கொடுக்கும். உடம்பில் மொத்தமாக இரண்டு முட்கள் ஒரே நேரத்தில் வேறுவேறு இடத்தில் குத்தினால் போதும், ரண வேதனையாகிவிடும். இந்தக் காட்டுக்குள் உள்ள நெருஞ்சி முள் ஒரே நேரத்தில் பல இடத்தில் தைக்கும். காளையார்கோயில் காடு முழுவதும் கிடக்கும் செந்தட்டி உடம்பில் பட்டாலே அரிப்பெடுக்கும், காட்டுக்குள் தண்ணீர்பாங்கான இடங்களில் திரியும் கம்பளிப் பூச்சிகள் உடம்பில் ஏறினால் உடம்பு முழுவதும் தடிப்பை ஏற்படுத்திவிடும். வெள்ளைக்காரன் ரொம்பப் பயப்படும் சீவாத்துகள் இவை.

நாம் காளையார்கோயில் காடுகளில் மிகவும் நம்பிக்கையோடு வெள்ளையர்களை எதிர்கொள்வோம். ஒன்றே ஒன்று இந்தக் காடுகளின் மேற்குப் பகுதியில் பாதுகாப்புக் குறைவாக இருக்கிறது. அது தொண்டைமானின் புதுக்கோட்டை ராஜ்ஜியத்தை ஒட்டிய பகுதி. தொண்டைமானின் பிரஜைகளான காடுவெட்டிகளுக்கு நல்ல பழக்கமானப் பகுதி. அவர்கள் மட்டும் வெள்ளைக்காரர்களோடு சேர்ந்துவிட நாம் அனுமதிக்கக்கூடாது. இதைத் தொண்டைமானிடம் கோரிக்கையாகவோ, மிரட்டலாகவோ சொல்லிவிட, அம்மான் சின்ன மருது சேர்வைக்காரர் முயற்சிக்க வேண்டும்...” அவன் அமர்ந்ததும் சின்ன மருது எழுந்தார்.

“சின்ன நாயக்கர் சொன்னது சரிதான். காளையார்கோயில் காடுகளில் வெள்ளைக்காரர்களால் நம் ஆட்கள் உதவியின்றி உள்ளே புகமுடியாது. ஆனால் தொண்டைமானின் கட்டுப்பாட்டிலுள்ள காடு வெட்டிகளின் துணைகொண்டு காட்டை அழிக்கவோ, காட்டுக்குள் சாலை அமைத்து உள்ளே வரவோ முடியும். தொண்டைமான் அதைச் செய்ய மாட்டார். நமக்கு நெருக்கமானவர்கள் மூலமும் அவருக்குத் தகவல் சொல்லி இருக்கிறோம்.”

சக போராளித் தலைவர்களின் சந்தேகங்களுக்குப் பதில் அளித்த பின். சின்ன மருது சில முக்கியத் தகவல்களைத் தந்தார்.

“நீங்கள் எல்லோரும் பல போர்களைப் பார்த்தவர்கள். பல நேரங்களில் படைகளை நடத்தியவர்கள். ஆனால் இது ஒரு வித்தியாசமான போர்க்களம். காட்டுக்குள் வெளிச்சம் குறைவு. மிக நெருக்கமான காடு. எதிரி நம் அருகே வரும்வரை நம் கண்ணுக்குத் தெரிய மாட்டான். கண்களைவிட காதுகளுக்கு வேலை கொடுக்கும் போர். சிறு சத்தம் வந்தாலும் அதை உதாசீனப்படுத்தக் கூடாது. கவனமாகக் கேட்க வேண்டும். உடனே நாம் பதில் நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. நாம் இருக்கும் இடத்திலிருந்து நகரக்கூடாது. இருந்த இடத்திலிருந்து எதிரி நம்மை நெருங்கும்வரை காத்திருக்க வேண்டும். தாக்கும்போது பெரும் சத்தத்தோடு தாக்க வேண்டும். காட்டுக்குள் பேச்சை விட்டுவிட்டு சைகைகளைப் பயன்படுத்த வேண்டும். போரில் நம் தரப்பில் யாராவது காயப்பட்டாலோ, வேறு அசம்பாவிதம் ஏதும் நடந்தாலோ நம் ஆட்களை எதிரிகள் கையில் சிக்கவிடக்கூடாது. அப்படி யாராவது சிக்கிவிட்டால் நம்மைப்பற்றிய அனைத்து உண்மைகளையும் வாங்கிவிடுவார்கள். காட்டுக்குள் உள்ள நம் வீரர்களின் எண்ணிக்கை தெரிந்துவிடும். உள்காட்டிற்குள் நாம் பெரும் ஆயுதங்கள் இல்லாமல் இருப்பதும் தெரிந்துவிடும். நம்மை முடக்கிவிடுவார்கள். நான் சொல்வது உங்களுக்குக் கடினமாகக் கூட இருக்கலாம். வேறு வழியில்லை. நம் ஆட்கள் மாட்டிக்கொண்டால் காப்பாற்ற முயலுங்கள். முடியவில்லை என்றால் பிடிபட்ட நம் ஆட்களை அவர்களிடம் சிக்கும்முன் கொன்று விடுங்கள். அது யாராக இருந்தாலும் சரி. என் அண்ணனாக இருந் தாலும், ஊமையாக இருந்தாலும், நானாக இருந்தாலும், ஏன் அது ராமநாதபுரம் சேதுபதியாக இருந்தாலும், சிவத்தையாவாக இருந் தாலும், சிவகங்கை அரசராகவே இருந்தாலும்...”

சின்ன மருது சிறிது இடைவெளிவிட்டுத் தொடர்ந்தார். “ஒருவேளை வெளிக்காட்டில் இருக்கும் நாங்கள், நீங்கள் இருக்கும் உள்காடு நோக்கிப் பின்வாங்கினால் எங்களோடு சேர்ந்து கொள்ளுங்கள்.”

“சின்ன அம்மான், விவாதம் என்று வந்துவிட்ட பிறகு நல்லதை விட கெட்டதை விவாதிப்பதுதான் நல்லது. நல்லது நடந்தால் அது இந்த காளையார்கோயில் சொர்ணவல்லித் தாயாரின் அருள். நல்லது நடக்கவில்லை என்றால் அது நம் விதி என்று எடுத்துக்கொள்வோம். நீங்கள் இப்போது சொன்னீர்கள். வெளிக்காட்டிலிருக்கும் நீங்கள் பின்வாங்கினால் நானும் பெரிய அம்மானும் உங்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்று. ஒருவேளை தொண்டைமான் நமக்கு எதிராக முழுதாகக் களமிரங்கி, காடுவெட்டிகளை அனுப்பி இந்தக் காளையார்கோயில் காட்டை அழித்தாலோ, காட்டுக்குள் பாதை அமைத்தாலோ, பொதுமக்களை காட்டுக்குள் ஏவி விட்டாலோ...” அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் முடிக்கவில்லை.

ஊமைத்துரை, சிவத்தையாவிடம் சைகையாலேயே தங்களின் கோட்டை விழுந்ததைப் பற்றிச் சொல்லச் சொன்னான். சிவத்தையா, ஊமைத்துரைச் சொல்ல வந்ததை விரிவாகச் சொன்னார். “சிவகங்கை அரசர் மன்னிக்க வேண்டும். அரசர் சொல்வது எங்கள் பாஞ்சாலங் குறிச்சியில் நடந்தது. பொதுமக்களை இப்படித்தான் கர்னல் அக்னியூ ஏவிவிட்டான். நாங்கள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் பெரும் பொக்கிஷங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகவும், கோட்டைக்குள் புகுந்து யார் வேண்டுமானாலும் அந்தப் பொக்கிஷங்களை எடுத்துக் கொள்ளலாம் என்றும் தூண்டிவிட்டான். அதை நம்பிய அப்பாவி ஜனங்கள் எங்கள் கோட்டைக்குள் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே புகுந்தனர். அவர்களைக் கேடயமாக வைத்துக்கொண்டு அவர்கள் பின்னால் ஆயுதங்களோடு வந்த ஆங்கிலேயர்கள் எங்களைத் தாக்கினார்கள். பின்பு வீரர்களும் பொதுமக்களும் எங்கள் கோட்டைக்குள் கண்டெடுத்த விலையுயர்ந்தப் பொருட்களை மைதானத்தில் காட்சிப்படுத்தினான், பாதியை வைத்துக்கொண்டு பாதியை எடுத்தவர்களுக்கே திரும்பக் கொடுத்தான். அதுபோன்ற செயலை இங்கும் செய்ய வாய்ப்புள்ளது. ஆகவே அதையும் யோசிப்போம்.”

சிவகங்கை அரசர் தொடர்ந்தார்.

“அம்மான், பாஞ்சாலங்குறிச்சி இளவல் ஊமைத்துரை சொன்னதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தொண்டைமான் ஆங்கிலேயர்களின் நிர்பந்தங்களுக்கு அடிபணிய நிச்சயம் வாய்ப் பிருக்கிறது. அவர் உத்தரவின்படி காடுவெட்டிகள் காளையார் கோயில் காடுகளை அழிக்க ஆரம்பித்தால் நமக்குப் பெரும் பின்னடைவாகிவிடும். தொண்டைமான் காடு வெட்டிகளை அனுப்பவில்லை என்றாலும் சிவகங்கையின் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க, வாய்ப்புக்காக காத்திருக்கும் கௌரி வல்லபர் தனது அறந்தாங்கித் தொடர்புகள்மூலம் காடுகளை அழிக்க முற்படலாம். அப்போது நம் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்.”

“அரசே, அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை என்றுதான் நம்புகிறேன். இருந்தாலும் நாம் பயப்படுவதுபோல இந்தக் காட்டை அழிக்க தொண்டைமானும், கௌரி வல்லபரும் ஆங்கிலேயர் களுக்குத் துணை போய்விட்டால் நமக்குப் பிரச்சனைதான் வரும். நாம் காட்டைவிட்டு வெவ்வேறு திசைகளில் வெளியேறுவோம். கிழக்கே இருப்பவர்கள் விருப்பாச்சிக்கும், மேற்கே இருப்பவர்கள் மைசூர் காடுகளுக்கும், வடக்கே இருப்பவர்கள் சேலம் சேர்வராயன் மலைக்கும், தெற்கே இருப்பவர்கள் தென்காசி மலைப்பகுதிக்கும் பயணிப்போம். அங்கு தங்கிச் சாதகமான சூழல் வரும்வரை காத்திருப்போம். நமக்கு இது பழக்கமானதுதானே? விருப்பாச்சியில் ஏழு ஆண்டுகள் தங்கியிருந்து விருப்பாச்சிப் பெரிய நாயக்கர், மைசூர் அரசர் ஹைதர் அலி, திண்டுக்கல் கோட்டைக் காவலர் சையது சாகிப்பின் துணைகொண்டு நாம் மீண்டும் சிவகங்கை வரவில்லையா? ஆட்சியைப் பிடிக்கவில்லையா? அப்போது வந்தது போல வருங்காலத்திலும் வருவோம். அரசைப் பிடிப்போம்.”

“அம்மான், நீங்கள் சொல்லுவது பதினைந்து, இருபது வருடங்களுக்கு முன்பு. அப்போது இருந்த நிலை இன்று இல்லை. இப்போது ஹைதரும் இல்லை, திப்புவும் இல்லை. திண்டுக்கல் கோட்டைக் காவலர் சையது சாகிப்பும் உயிருடன் இல்லை. திண்டுக்கல் கோட்டை தற்போது கம்பெனி கலெக்டர் கட்டுப்பாட்டில் உள்ளது. நமக்கு உதவிய மைசூர்ப் படைகள் இப்போது ஆங்கிலேயத் தளபதி ஆர்தர் வெல்லெஸ்லியின் எடுபிடியான உடையார் அரசர் கையில் உள்ளன. நமக்கு உதவிய விருப்பாச்சி பெரிய நாயக்கர், இப்போது ஆங்கிலேயர்களின் சிறையில் இருக்கிறார்.”

“ஆம் அரசே. நீங்கள் சொல்வது அனைத்தும் உண்மை. அதேசமயம் அப்போது இல்லாத சில நிகழ்வுகள் இப்போது நமக்குச்

சாதகமாக உள்ளன. அப்போது நமக்குப் பெரும் எதிரியாக இருந்த ஆற்காடு நவாப் முகம்மது அலி இப்போது உயிருடன் இல்லை. அன்று புயலாகச் சீறிய ஆற்காடு இளவரசர் உம்தத் உல் உம்ரா கிழடு தட்டிப்போய் அவரது சேப்பாக்கம் மாளிகையில் தனியாக உட்கார்ந்து புலம்பி, புலம்பி உயிரை விட்டுவிட்டாராம். அவர் வாரிசுகள் யாரும் போர்க்களத்திற்கு வரப்போவதில்லை. நவாப்புகள் நமக்கு எதிராக வரமாட்டார்கள். நமக்கு எதிரியாக இருந்த ராமராதபுரம் சேதுபதி இப்போது நமக்கு எதிரி இல்லை. எல்லாவற்றையும்விட நாம் இப்போது போரில் அனுபவம் பெற்ற அனுபவசாலிகள். பல போர்களில் அனுபவப்பட்டுவிட்டோம்.

இருபது வருடங்களுக்கு முன்பு நாம் போர் நடத்துவதில் போதிய அனுபவம் பெறவில்லை. எல்லாவற்றையும் விட பூனாவிலிருந்து நாங்குநேரி வரையான பகுதிகளில் வாழும் மக்கள் நமக்கு ஆதரவாக உள்ளனர். மக்களின் ஆதரவு நமக்கு மிகப் பெரிய பலம். மக்கள் பங்களிப்பு இருக்கும் எந்த நடவடிக்கையுமே தோற்றுப் போகாது. மக்களின் பங்களிப்போடு ஒரு காரியம் நடந்து வெற்றி பெற்றால், அதை மக்களே கண்ணின் மணி போல் காப்பார்கள். உங்கள் அனைவருக்குமே தெரிந்திருக்கும், நாம் இந்தக் காளையார் கோயில் கோபுரத்தைக் கட்டியவிதம். மானாமதுரையில் இருந்து, காளையார்கோயில் வரையான இருபத்தைந்து மைல் தூரத்திற்கும், ஐந்தடிக்கு ஒரு ஆள் நின்று கொண்டார்கள். மானாமதுரையை அடுத்த கருமலை செங்கல் சூளையில் எடுக்கப்பட்ட ஒரு செங்கல், காளையார்கோயில் வரை மண்ணைத் தொடாமல் வந்து சேர்ந்திருக்கிறதே. வழியெங்கும் நின்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள்தான் இந்த கோயில் கோபுரத்தைக் கட்டுகிறோம் என்ற பெருமிதத்தோடு, வேலை செய்தார்களே. அவர்களின் பங்களிப்பால்தானே இந்த கோபுரம் ஒரே வாரத்தில் நிமிர்ந்து நின்றது. இன்றும் இந்த காளீஸ்வரனின் கோபுரம் மக்கள் ஒற்றுமையின் அடையாளமாக அல்லவா நிற்கிறது? அதைப் போலவே, பாளையங்களின் மக்கள் ஒவ்வொருவரும் நம்முடன் இந்த யுத்தத்தில் உடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.”

அரசர் பெரிய உடையணத் தேவர், சின்ன மருதுவைப் பார்த்தார்.

“சின்ன அம்மான், காளையார்கோயிலில் நீங்கள் சொல்லும் இந்த வார்த்தைகளுக்கு இறைவன் மேலும் வலுச் சேர்க்கட்டும். சின்ன அம்மான்

சொன்னபடி நாம் காடுகளில் நமக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று காத்திருப்போம்."

சின்ன மருது தொடர்ந்தார்.

"போர் நடக்கும்போது ஏதாவது சந்தேகம் வந்தால் செய்தியைக் காற்று அடிக்கும் திசையின் போக்கில் ஆட்களை அனுப்பி எங்களுக்குச் சொல்லுங்கள். பின்வாங்க நேர்ந்தாலும் காற்று அடிக்கும் திசையின் போக்கிலே பின்வாங்க வேண்டும். மனித வியர்வை வாடை போர்க்களத்தில் நமக்கு இரண்டு விதத்தில் உதவும். காற்று வீசும் திசையிலேயே நாம் பின்வாங்கினால், நாம் பின்வாங்குவது மனித மிருகங்களுக்குத் தெரியாது. நம் நடவடிக்கையை அவர்களால் உணர முடியாது. அவர்கள் அந்த இடத்திலேயே இருப்பார்கள். நாம் காட்டுக்குள் பகலிலும் இருக்கும் இருட்டைப் பயன்படுத்தி, திடீர்த் தாக்குதல் நடத்தலாம். அதேசமயம் காற்றின் வழியாக வரும் வியர்வை வாடையை வைத்து மிருகங்கள் நம் இருப்பை அறிந்துகொள்ளும். அவைகள் நம்மை விட்டு விலகிக் கொள்ளும். மனித மிருகங்களை வேட்டையாடவும், காட்டு மிருகங்களைத் தொந்தரவு செய்யாமல் இருக்கவும் மனித வியர்வையும் காட்டுக்குள் வீசும் காற்றும் நமக்கு உதவும்" எனச் சின்ன மருது சொல்லி முடித்தவுடன் அனைவரும் சிரித்தனர்.

அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் எழுந்தார். இரண்டு அம்மான்களையும் வணங்கினார். மருது சேர்வைக்காரர்கள் தோளில் கிடந்த துண்டை கையில் தாங்கி, அரசரை வணங்கினர்.

கடவுளைவிடக் காட்டை நம்பி ஆரம்பிக்கப் போகும், விடுதலைப் போராட்டத்தில், காட்டின் பேரன்பும், மனித மனத்தின் வஞ்சகமும் போரிட இருப்பதை, இருள் கவனித்துக் கொண்டிருந்தது. காளீஸ்வரர் கோயில் கோபுரத்தின் உச்சியில் இருள் கோலோச்சிக் கொண்டிருந்தது.

•

41

செப்டம்பர் **12, 1801**

போர் ஆரம்பித்து முப்பது நாட்கள் முடிந்தும் மருது பாண்டியர்களை ஆங்கிலேயப் படையினரால் நெருங்க முடியவில்லை. வேலுநாச்சியாரின் உறவினரான படமாத்தூர்க் கௌரி வல்லபரை சிவகங்கையின் ஆட்சியாளராக நியமித்தால் சிவகங்கை மக்கள் மத்தியில் ஜாதியை வைத்து, பிரிவினையை உருவாக்க முடியும் என்று ஆங்கிலேயர்கள் நம்பினர். கௌரி வல்லபரின் மறவர் ஜாதியினர் மருது பாண்டியர்களை விட்டுப் பிரிவார்கள் என்று ஆங்கிலேயர்கள் கணக்குப் போட்டனர். பதவியேற்பு நாடகத்தைப் போர் நடக்கும் போதே நடத்தத் தீர்மானித்தனர். துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் 30-ஆம் நாள், வளர்பிறையோடு கூடிய சனிக்கிழமையை புரோகிதர்கள் நல்ல நாள் எனக் குறித்துக் கொடுத்தனர். தாங்கள் ஒரு பகடைக்காய் என்று தெரிந்திருந்தாலும், கௌரி வல்லப உடையத் தேவரின் குடும்பம், விரும்பித் தங்களைப் பகடைக் காய்களாக்கிக் கொண்டனர்.

அறந்தாங்கியில் தலைமறைவு வாழ்க்கை நடத்திய கௌரி வல்லபன் இரண்டு நாட்களுக்கு முன்புதான் அறந்தாங்கியிலிருந்து கிளம்பியிருந்தான். இருபதாண்டுகளாக கனவு கண்டு கொண்டிருந்த சிவகங்கை அரசு, அவர்களின் கைகளுக்கு வரும் நாள். சொந்த மண்ணைவிட்டு, அரசனாகத்தான் சிவகங்கை திரும்ப வேண்டும் என தவம்போல் அறந்தாங்கியில் காத்திருந்ததற்கு, காலம் இப்பொழுதுதான் கனிந்து பலன் கொடுத்திருக்கிறது.

அறந்தாங்கியில் இருந்து கிளம்பும்போது, தான் இருபது வருடம் வாழ்ந்த அறந்தாங்கி வீட்டை நீண்ட நேரம் பார்த்தான். கௌரி வல்லபனின் அப்பா பெரிய ஒய்யாத் தேவர் தனது இரு மகன்களையும் மருமகள்களையும் அழைத்தார். “இன்னும் இரண்டு நாளில் சிவகங்கையின் ஆட்சி அதிகாரத்தை நமக்கு வெள்ளையர்கள் தருவதாக இருக்கிறார்கள். கர்னல் அக்னியூவும், கலெக்டர் லூஷிங்டன்னும் இது குறித்து எனக்குத் தகவல் தந்துள்ளார்கள். மருது பாண்டியர்கள் காளையார்கோயில் காட்டில் தப்பிக்க வழியில்லாமல் அடைபட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து உயிருடன் தப்பிக்க முடியாது. கர்னல் அக்னியூ எப்படி ஊமைத்துரையையும் சிவத்தையாவையும் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து விரட்டினாரோ அதேபோல மருது சகோதரர்களையும் அரசன் வெங்கம் பெரிய உடையணத் தேவரையும் சிவகங்கையிலிருந்து விரட்டி அழித்து விடுவார். நான் மருது சகோதரர்களைக்கூட மன்னித்து விடுவேன். என் உறவினரான அரசன் முத்து வடுகநாதனின் மகள் வெள்ளச்சி, எனது மகன் கௌரி

வல்லபனுக்கு உரியவள். முறைப்பெண். அவளை எனது மகன் கௌரி வல்லபன் திருமணம் செய்ய இந்த வெங்கம் பெரிய உடையணன் பெரும் தடையாகிவிட்டானே? வெங்கம் பயலை நான் மன்னிக்கவே மாட்டேன்.

வெங்கம் பயலைத் திருமணம் செய்துகொண்டு வெள்ளச்சி என் வாயில் விழுந்தாள். அவளுக்கு குழந்தைப் பிறந்தும் பிரயோசனமில்லை. அது இறந்து போய்விட்டது. வாழ வேண்டிய வயதில் அவளும் இறந்துவிட்டாள். பெரிய மருதுவின் மகளை மணந்து, வெங்கம் பெரிய மருதுவுக்கு மருமகனாகிவிட்டான். இப்போ பூலோகத்தைவிட்டே போகப்போறான். ஆங்கிலேயர்கள் புண்ணியத்தில் நமக்குப் பதவி மீண்டும் கிடைக்கிறது. நாம் இப்போது முடிவு செய்ய வேண்டும். உங்கள் இருவரில் யாருக்குப் பதவி கேட்பதென்று. நீ சொல்லுப்பா?" என்று தனது மூத்த மகனும் தனது பெயரையுடையவனுமான ஒய்யாத் தேவரை பெரிய ஒய்யாத் தேவர் கேட்டார்.

"அப்பா, நாம் ஏற்கனவே பேசி முடிவு செய்ததுதானே? இருந்தாலும் நீங்கள் கேட்டதால் சொல்கிறேன். நான்தான் மூத்தவன். அப்பாவுக்கு அடுத்தது மூத்த பிள்ளைதான் என்ற நடைமுறை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு சிவகங்கை உள்ள சூழலில் உடல் வலிமை உள்ளவன் மட்டுமே இந்தப் பொறுப்பை வகிக்க முடியும். தம்பி ஏற்கனவே படை நடத்திப் பழக்கப்பட்டவன். ரிபெல் சேதுபதியின் ராமநாதபுரப் படைகள் இவன் தலைமையில்தான் சிவகங்கைக்குச் சென்றன. அந்தப் போரில் தம்பி வெற்றிபெறவில்லை என்றாலும் பெரிய மருதுவின் இரண்டு மகன்கள் அந்தப் போரில்தான் கொல்லப்பட்டார்கள்.

நம் ஊர் படமாத்தூர், சங்க காலத்திலேயே புகழ் பெற்ற ஊர். அன்றைக்கு படுமரத்து ஊர் என்று அழைக்கப்பட்டது. இந்த ஊரில் வாழ்ந்த மோசிக்கீரன் என்ற புலவன் அரசன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் அரண்மனைக்குச் சென்றானாம். அரசன் அரண்மனையில் இல்லையாம். புலவனுக்குத் தூக்கம் வந்திருக்கிறது. அரசனின் முரசுக் கட்டிலில் படுத்துத் தூங்கிவிட்டனாம். வெளியே சென்ற அரசன் திரும்பி வரும்போது இதைப் பார்த்துவிட்டானாம். படுத்திருப்பது தமிழறிந்த புலவன் என்பதால் அவனது தூக்கத்தைக் கலைக்காமல் விசிறிவிட்டானாம். இதைப் புலவனின் பித்துக்குளித்தனம் என்றும் சொல்லலாம். புலவனின் தைரியம் என்றும் சொல்லலாம். அன்றைக்குச் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரன் எப்படி புலவன் மோசிக்கீரனாரை

ஆதரித்தானோ அதேபோல நம்மை ஆதரிக்க இன்று ஆங்கிலேயர்கள் வந்திருக்கிறார்கள்."

பெரியவர் இடைமறித்தார்.

"மகனே, காலம் சொல்லும் என்று நாம் காத்திருக்க வேண்டிய தில்லை. நமக்கு வெள்ளைக்காரர்கள் எந்த அளவு மரியாதைத் தருகிறார்கள் என்று பதவி ஏற்கும் நாளோ அல்லது மறு நாளோ தெரிந்துவிடும். பித்துக்குளியோ, தைரியசாலியோ இன்றைக்கு ஆங்கிலேயர்களைவிட்டால் நமக்கு வேறு வழியேயில்லை. இந்த வாய்ப்பைத் தொண்டைமான் நமக்காகப் போராடிப் பெற்றுத் தந்துள்ளார். வாய்ப்பை நாம் தவறவிட்டால் பெரிய மருது பாண்டி யனின் மகள் மருதாத்தாள் வாரிசுதான் சிவகங்கையை ஆளும். அதைத்தடுக்க இது ஒன்றுதான் வழி" என்று நிறுத்தினார்.

தகப்பன் அடுத்துப் பேசவில்லை என்று தெரிந்தவுடன் ஒய்யாத் தேவர் ஆரம்பித்தான். "தம்பி கௌரிவல்லபன் மருது பாண்டியர்களிடம் மிகவும் துன்பப்பட்டிருக்கிறான். காளையார் கோயிலில் சின்ன மருதுவின் மகன் நம் கௌரி வல்லபனை சிறை வைத்தான். வேலு நாச்சியார் நம் உறவினர் என்ற முறையில் தலையிட்டுத் தம்பியை விடுதலை செய்ய வைத்தார். இருபது ஆண்டுகளாக அறந்தாங்கியில் அனாதைபோல் வாழ்கிறோம். இந்தக் கிராமத்தில் நாம் யார், நாம் எப்படிப்பட்ட பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று தெரியாத மக்களின் மத்தியில், நம் அடையாளத்தை மறைத்துக்கொண்டு வாழ்கிறோம். பலமுறை தம்பி உயிருக்குப் பயந்து ஊர் ஊராக ஒளிந்து வாழ்ந்திருக்கிறான். அவனே சிவகங்கை அரசகனாக இருக்கட்டும். எனது வயோதிகத்தையும், கண்பார்வை சரியாக இல்லாத உடல் நிலையையும் அனுசரித்து எனக்கும் என் குடும்பத்திற்கும் தம்பி அரசனான பிறகு ஏதாவது உதவிகள் செய்யட்டும். நெருப்பு என்பதால் வாய் வெந்துவிடாது. தம்பி ஆறு திருமணங்கள் செய்துள்ளான். இதுவரை அவனுக்கு ஆண் குழந்தைகள் இல்லை. ஒருவேளை அவனுக்குக் கடைசி வரை ஆண் குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் தம்பிக்குப் பிறகு என் வாரிசுகளுக்குப் பதவி தர வேண்டும்."

மூத்த மகனின் இந்தப் பேச்சு தம்பி கௌரி வல்லபனுக்குப் பிடித்ததோ பிடிக்கவில்லையோ அவனது ஆறு மனைவிகளுக்கும் பிடிக்கவில்லை. "இந்தக் கிழவன் எனக்குக் கண்ணு தெரியாது, அதனால்

பதவி வேண்டாம்னு சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே? கண்ட இடத்தில் படுத்து தூங்குற மோசிக்கீரன்னு ஒரு சோம்பேறிப் புலவன் கதையச் சொல்லி, நம் கணவரை இழிவாகப் பேசி விட்டான்" என்று நினைத்துக் கொண்டனர்.

"இந்தக் கௌரி வல்லபன் போகிற இடம் எல்லாம் நாசம்தான். ரிபெல் சேதுபதி அவர் பாட்டுக்கு நிம்மதியா இருந்தாரு. அவரு கூடச் சேர்ந்து, அவருக்கு வெள்ளச்சியக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன் என்று ஆச காட்டி, சிவகங்கை மேல படையெடுக்க வச்சாரு. வேறு திறமையான தளபதி ராமநாதபுரம் படையை நடத்தியிருந்தால் சிவகங்கைய ஜெயிச்சிருக்கலாம். வெள்ளச்சிக்கும் ரிபெல் சேதுபதிக்கும் ஒருவேளை கட்டாயத் திருமணம்கூட நடந்திருக்கும். இந்த ஆள் ராமநாதபுரம் படைகளுக்குத் தளபதியா போனாரு. சுத்த நாசம். வெள்ளச்சி, வெங்கம் பெரிய உடையணத் தேவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா. மருது பாண்டியர் மகன் ஒரு சின்னப் பய. அவன் இந்த ஆளப்புடிச்சி காளையார்கோயில்ல சிறை வச்சிட்டான். அப்புறம் வேலு நாச்சியார்கிட்ட இந்த அப்பன் கிழவன் கெஞ்சிக் கூத்தாடி மகனைக் காப்பாற்றினான். இவன் கெட்ட நேரத்துக்குத் தான் இந்தப் பதவி வந்திருக்கு.

மருது பாண்டியர்கள் சண்டையில தோப்பாங்கன்னு எப்படி உறுதியா நம்புறது? ஒரு வேளை ஜெயிச்சுட்டா? இந்த கௌரி வல்லபருக்கு இருக்கு வேடிக்க. இந்தக் கௌரி வல்லபர வெள்ளக்காரங்க மதிக்கிறதாவது? பாக்கத்தான போறோம். வெள்ளக்காரங்க ஒரு தடவ ராமநாதபுரம் சேதுபதிய ஜெயில்ல இருந்து விடுவிச்சுச் சேதுபதியாக்கினாங்க. இப்போ 'ரிபெல்னு' பேரு வச்சு மெட்ராஸ் ஜெயில்ல தள்ளிவிட்டாங்க. ஆற்காடு நவாப்கூடச் சுத்தினாங்க. ஒரு மாசத்துக்கு முந்தி அவரும் செத்துப் போயிட்டாரு. இப்போ, அவங்களா வலிய வந்து, இந்தக் கௌரிய சிவகங்கை அரசர்ன்னு சொல்லுறாங்க. எப்படியும் அடுத்து வரப் போற நவாப்கிட்ட இந்த ஆளு மாட்டுவான், இல்லை மருது சகோதரர்கள்கிட்ட மாட்டுவான். இந்த ஆளுக்கு வாரிசு இல்லாமப் போயிடும். அப்ப நம்ம பிள்ளகதான் ஆளப்போகுது" என மூத்த மகனான ஒய்யாத் தேவரின் மூன்று மனைவிகளும் நினைத்துக் கொண்டனர்.

•

மறுநாள் காலை.

கௌரி வல்லபரை சிவகங்கை அழைத்துச் செல்ல ஆங்கிலேயத் தளபதி லெப்டினென்ட் பிளாக்பெர்ன், அறந்தாங்கிக்கு வந்திருந்தான். ஆங்கிலேயப் படையினர் ஓய்யாத்தேவரின் வீட்டிற்கு முன்பு அணிவகுத்து நின்றனர்.

கௌரி வல்லபர் அவரது வீட்டைவிட்டு வெளியே வந்தபோது ஆங்கிலேய வீரர்களையும் தொண்டைமானின் வீரர்களையும் வைத்து அவருக்கு ராணுவ மரியாதைத் தரச் செய்தான். அறந்தாங்கி கிராமமே ஒய்யாத் தேவர் வீட்டின் முன் திரண்டு வந்தது.

தொண்டைமான் கொடுத்தனுப்பிய உயர்ந்த ஆடைகள் பெரிய ஒய்யாத் தேவரின் மூத்த மகன் ஒய்யாத் தேவருக்கும் இரண்டாம் மகன் கௌரி வல்லபனுக்கும் மிகுந்த மரியாதையுடன் வழங்கப்பட்டன. அவைகளை இருவரும் அணிந்துகொண்டனர். தொண்டைமானின் திருமயம் கோட்டைத் தளபதி பெரிய ஒய்யாத் தேவருக்கும் அவரது இரு மகன்களுக்கும் தனது அரசனின் வாழ்த்தைத் தெரிவித்தான்.

தொண்டைமானின் புதுக்கோட்டைப் படையினரும் ஆங்கிலேயப் படையினரும் பெரிய ஒய்யாத் தேவரின் வீட்டின் முன்பு அணிவகுப்பு மரியாதை நடத்தி, பெரிய ஒய்யாத் தேவர் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மிக முக்கியமானவர் என்று அறந்தாங்கி கிராமத்தினருக்குக் காட்டிக்கொண்டனர்.

ஒய்யாத் தேவரையும் அவரது இரண்டு மகன்களையும் சாரட்டில் ஏற்றி ஊர்வலமாக, சிவகங்கை நோக்கித் தொண்டைமானின் படை பயணித்தது. இருநூற்று ஐம்பது புதுக்கோட்டை வீரர்கள் அணிவகுத்து ஊர்வலத்திற்கு முன்பு சென்றனர். அறந்தாங்கிப் பகுதி சின்ன மருதுவுக்குச் செல்வாக்கான பகுதி. இப்படி ஒரு விரிவான மரியாதையை தாங்கள் கொடுத்தால்தான், கௌரி வல்லபரை சிவகங்கையின் மன்னராக மக்கள் மனதளவில் ஏற்றுக் கொள்வார்கள் என்பதே வெள்ளையர்களின் திட்டம். அதைச் சரியாகவே நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

ஊர்வலம் சிவகங்கை எல்லையை நெருங்கும் போது “கௌரி வல்லபர் சிவகங்கையின் புதிய ஆட்சியாளராகப் பதவி ஏற்பார் என்றும், பதவியேற்பு வைபவம் நடக்குமிடம் சோழபுரம்” என்றும் கூடியிருந்த மக்கள் முன்பு அறிவிக்கப்பட்டது.

சிவகங்கைப் பாளையத்து மக்கள் தங்களைச் சுற்றி நிமிடந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் காட்சிகளால் கலங்கி நின்றனர்.

தங்களின் அரசரும் வீரர்களும் வெள்ளையர்களுடன் கடும் போர் நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பதவியேற்பு பற்றிய அறிவிப்பால் குழம்பி நின்றனர்.

•

42

அடுத்த நாள் அதிகாலையிலேயே குயில் கூவும் நேரத்தில் கௌரிவல்லப உடையத் தேவர் எழுந்தான். ஒயிலாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டான். பரிவாரங்கள் புடைசூழ அரசாங்க மரியாதைகளுடன் சோழபுரம் கோயில் நோக்கிப் புறப்பட்டான். ஆறாவது படைத் தொகுதியின் இரண்டாவது பட்டாளத்தின் ராணுவ வீரர்கள் கௌரி வல்லபருக்குத் துணையாக வந்தனர்.

மதிய நேரம். கர்னல் அக்னியூவும் அவரது துணைத் தளபதிகளும் சீருடை அணிந்து குதிரைகளில் பகட்டாக வந்தனர். அவர்கள் கோயிலுக்கு அருகிலிருந்த கர்னல் இன்ஸின் முகாமிற்குச் சென்றனர். சிறிது நேரம் முகாமில் தங்கினர். பின்பு குதிரை மீதேறிக் கோயிலை நோக்கி முன்னேறினர். கோயில் வாசலில் கௌரி வல்லப உடையத் தேவரின் கூடாரம் இருந்தது. அதன் அருகே ஆங்கிலேயேர்களை வரவேற்பதற்காகப் பந்தல் போடப்பட்டிருந்தது. புதிய ஆட்சியாளராகப் பதவியேற்க உள்ள கௌரி வல்லபர், ஆங்கிலேயத் தளபதி கர்னல் அக்னியூவை கோயிலுக்கு முன் சந்தித்தார். இருவரும் வணக்கங்களைப் பரிமாறிக்கொண்டனர். கர்னல் அக்னியூ வேலைப்பாடுடன் கூடிய ஒரு நல்ல ஆடையை கௌரி வல்லபருக்குக் கம்பெனியின் பரிசாக வழங்கினார். விலைமதிப்பில் சற்று குறைந்த ஆடையைக் கௌரி வல்லபரின் அண்ணனுக்குப் பரிசாக வழங்கினார். சகோதரர்கள் இருவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட உடைகளை அணிவதற்காகக் கூடாரத்திற்குள் சென்றனர். சிறிது நேரத்திற்குப் பின், அரசனுக்குரிய அலங்கார அங்கி அணிந்து கௌரி வல்லபரும் அவரது அண்ணனும் கூடாரத்திற்கு வெளியே வந்தனர். ‘அவுதா’ என்றழைக்கப்பட்ட அம்பாரியுடன் யானை முன் சென்றது. இராணுவப்

பாண்டு வாத்தியங்கள் முழங்கின. கர்னல் அக்னியூம் கௌரி வல்லபரும் புறப்பட்டனர். ஆங்கிலேயர்களின் பாண்டு வாத்தியமும் சிவகங்கைச் சீமையின் இசைக் கருவிகளும் ஒன்று சேர்ந்து கோயில் வளாகத்தை மங்களகரமாக மாற்றின. சிவகங்கையின் இசைக் கருவிகளும் கள்ளர்களின் ஊதுகொம்பும் 'டாம், டாம்' என்று பெரும் ஒலி எழுப்புகின்ற டமாரமும் ஒலி எழுப்பின. ஆங்கிலேயத் தளபதிகளும் புதிய ஆட்சியாளரும் அங்கு குழுமியிருந்த மக்களால் வாழ்த்தி வரவேற்கப்பட்டனர்.

சிவகங்கையின் ஜமீன்தாராக கௌரி வல்லபரை அறிவிப்பதற்கு முன்பு கர்னல் அக்னியூ,"அண்ணன் தம்பியாகிய உங்கள் இருவரில் ஆட்சிப் பொறுப்பு யாருக்குத் தரப்படவேண்டும்?" என்று சம்பிரதாயமாகக் கேட்டான்.

"அண்ணன் தம்பிகளில் நான்தான் மூத்தவன். ஆனால் நான் பார்வைக் குறைபாடு உள்ளவனாக இருக்கிறேன். ஆகவே என் தம்பி கௌரி வல்லபனை ஆட்சியாளராக நியமியுங்கள். எனக்கு எந்த ஆட்சேப¬ணையுமில்லை" என்று அண்ணன் ஒய்யாத் தேவர் சொன்னான்.

வலதுபுறம் கர்னல் அக்னியூவும் இடதுபுறம் கர்னல் இன்ஸும் நெருக்கமாக நின்று கௌரி வல்லபரைத் தற்காலிகமாகப் போடப்பட்டிருந்த மேடையை நோக்கி அழைத்துச் சென்றனர். கம்பளத்தின்மேல் போடப்பட்ட ஓர் ஆசனத்தில் அவரை அமரச் செய்தனர். கௌரிவல்லபரின் இடக்கைப் பக்கம் அவரது அண்ணன் ஒய்யாத் தேவர் அமர்ந்திருந்தார். நாற்காலிகள் அனைத்தும் அரை வட்ட வடிவில் போடப்பட்டிருந்தன. ஆங்கிலேயத் தளபதிகள் கௌரி வல்லபருக்கு எதிரே அமர்ந்திருந்தனர். கொட்டுச் சத்தத்தையும் குலவைச் சத்தத்தையும் தளபதிகள் நிறுத்தச் சொன்னனர். அமைதியான சூழ்நிலை வந்ததும், கௌரி வல்லபரைச் சிவகங்கை இஸ்திமிரார் ஜமீன்தாராகக் கம்பெனி நிர்வாகம் நியமனம் செய்ததை அறிவிக்கும் பிரகடனத்தை ஓர் எழுத்தர் உரத்தக் குரலில் வாசித்தார். அவர் வாசித்து முடித்ததும் கௌரி வல்லபரிடம் கையெழுத்துப் பெறப்பட்டு, கர்னல் அக்னியூவிடம் கொடுக்கப்பட்டது. அக்னியூ புதிய இஸ்திமிரார் ஜமீன்தாரைப் பொருத்தமான முறையில் பாராட்டிப் பேசினான். அந்த நியமனப் பிரகடனத்தை இரண்டாக மடித்தான். பின்பு அதை கௌரி வல்லபரிடம்

வழங்கினான். புதிய இஸ்திமிரார் ஜமீன்தார் தனது நன்றியுணர்ச்சியை, உணர்ச்சிபூர்வமான சொற்பொழிவில் வெளிக்காட்டினார்.

பீரங்கிக் குண்டுகள் முழங்கின. கௌரி வல்லபருக்கு ராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. இரண்டு கர்னல்களும் கௌரி வல்லபருக்குக் கை கொடுத்து யானைமீது ஏற்றினர். யானை முன்னே செல்ல இராணுவ அதிகாரிகள் குதிரைகளின்மீது ஏறி யானையைப் பின் தொடர்ந்தனர். சில குதிரை வீரர்கள் கௌரி வல்லபரின் யானைக்கு முன் செல்லப் பணிக்கப்பட்டனர். வாத்தியக் குழுவினர் முன் சென்றனர். குதிரைப் படையினர் முன்னேயும் பின்னேயும் உருவிய கத்தியுடன் காவலுக்கு வீரர்கள் வந்தனர். யானைமீது வீற்றிருந்த கௌரி வல்லபருக்குப் சிவகங்கையின் புதிய ஆட்சியாளர் என்ற கௌரவம் தரப்பட்டது. ஆங்கிலேயருக்கு நெருக்கமான பாளையக்காரரின் ஆட்களும் தலைவர்களும் இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். குலவைச் சத்தம் விட்டுவிட்டுக் கேட்டது. கோயிலையும் கௌரி வல்லபர் தங்கியிருந்த முகாமையும் சுற்றி வந்த பிறகு அணிவகுப்பு எந்த இடத்திலிருந்து புறப்பட்டதோ அந்த இடத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தது. கௌரி வல்லப உடையத் தேவர் இரண்டு கர்னல்களால் யானையிலிருந்து இறக்கிவிடப்பட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிவகங்கையின் புதிய ஆட்சியாளர் கௌரி வல்லபரின் கண்களில் நன்றிப் பெருக்கு அப்பட்டமாகத் தெரிந்தது. கன்னத்தில் கண்ணீர்த் துளி உருண்டோடி வருவதைப் பக்கத்தில் நின்ற ஆங்கிலேயர்கள் பார்த்தனர். திடீரென கௌரி வல்லபர் எழுந்தான். அக்னியூவின் கால்களில் விழுந்தான். காலில் விழுந்த கௌரி வல்லபர் கர்னல் அக்னியூவின் முழங்கால்களைக் கட்டித் தழுவிக் கொண்டான். கௌரி வல்லபரைப் போலவே உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்த அவரது அண்ணன், கர்னல் அக்னியூவிற்குப் பக்கத்தில் நின்ற கர்னல் இன்ஸின் காலைக் கட்டிக் கொண்டான். அந்தக் காட்சிகளைக் கண்டு உள்ளூர் மக்கள் வெளிப்படையாக மகிழ்ந்தாலும், தங்கள் அரசரும் அவரது அண்ணனும் அந்நியன் காலில் விழுந்து கும்பிடுவதைக் கவலையுடன் பார்த்தனர்.

திட்டமிட்டதைத் திருப்தியாகச் செய்து முடித்த கர்னல்கள் அங்கிருந்து கிளம்பினர். கௌரி வல்லபர் அவர்களை வணங்கி விடைகொடுத்தார். பின்பு தனக்கென்று அமைக்கப்பட்ட சிம்மா சனத்தில் அமர்ந்தார். அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் அவரது அண்ணன்

அமர்ந்தார். பதவியேற்பு விழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள் புதிய அரசருக்கு வணக்கத்தைத் தெரிவித்து பரிசுப் பொருட்கள் கொடுத்தனர்.

சிவகங்கையின் அரசராகப் பதவி ஏற்கும் போதுதான், தன் மகன் கௌரி வல்லபன் சிவகங்கைக்கான அரசன் இல்லை, இவன் ஆங்கிலேயர்களுக்கு நிரந்தரமாகக் கட்டுப்பட்ட "இஸ்திமிரார்" என்ற புதுப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளான் என்பதை கௌரி வல்லபரும், அவருடைய மகன்களும் அறிந்து கொண்டனர். இந்தப் புதிய பதவியைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டதில்லை. இந்தப் பதவிக்குரிய அதிகாரம் என்னவென்று கேட்கும் தைரியமும் அவர்களுக்கு இல்லை. கௌரி வல்லபருக்கு ஜமீன்தார் பதவிக்குப் பதில் இஸ்திமிரார் பதவி கொடுக்கப்பட்ட காரணத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் ஆங்கிலேயர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

•

43

சின்ன மருது ஆங்கில அரசுக்கு எதிராகப் பிரகடனம் ஒன்றை அறிவித்ததும், அதை திருச்சிக் கோட்டையிலும், ஸ்ரீரங்கம் கோயில் சுவற்றில் ஒட்டி வைத்ததினாலும் கர்னல் அக்னியூவுக்குக் கடும் கோபம் வந்துவிட்டது. மருது பாண்டியர்களை இன்னும் வளரவிடுவது கம்பெனி ஆட்சியையே நிலைகுலைய வைத்துவிடும் என்பதை அக்னியூ நன்றாகவே உணர்ந்திருந்தான். பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து ஆங்கிலேய ஆதரவுப் படைகளுடன் மதுரை திருப்புவனம் வழியாக, சிறுவயலை நோக்கிப் படையெடுத்தான். வழி முழுக்க ஆங்கிலேயப் படையை

எதிர்த்த விடுதலை வீரர்களை அந்தந்த ஊரிலேயே வீழ்த்திவிட்டு, சிறுவயலையும் வீழ்த்திய அக்னியூ, காளையார்கோயில் போரைத் தொடங்கி, மருது பாண்டியர்களை வீழ்த்துவதற்கானப் போரைத் தொடங்கி இருந்தான்.

அவனுடைய வெற்றியே கம்பெனியின் வெற்றி என்பதைத் தெளிவாக அறிந்திருந்த கவர்னர் எட்வர்ட் கிளைவ், கர்னல் அக்னியூவுக்கு வானளாவ அதிகாரம் அளித்திருந்தான். அக்னியூவின் அதிகாரத்தை மக்களிடம் அறிவிக்க, இதற்கு முன் எந்தக் கவர்னரும் செய்யாத ஒன்றையும் செய்தான்.

திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தவறு செய்தான் என்று பிரிட்டிஷ் கவர்னர் எந்தப் பிரகடனமும் செய்யவில்லை. திப்பு சுல்தானுக்கே செய்யாமல் விட்டதை மருது பாண்டியர்கள் விசயத்தில் கவர்னர் எட்வர்ட் கிளைவ் செய்ய முடிவு செய்தான். மரபை மீறி ஒரு பிரகடனத்தைக் கவர்னர் வெளியிட்டான். அந்தப் பிரகடனத்தில் பல விளக்கங்களைத் தெரிவித்தான். புரட்சியாளர்களுக்கு மிரட்டல் களையும் மக்களுக்குச் சலுகைகளையும் அறிவித்தான்.

“சசிவர்ணத் தேவர் தன்னுடைய தனிப்பட்ட திறமையினால் பெரும் பெயர் பெற்றார். அவருடைய சேவைக்காக அவர் சிவகங்கையின் ஜமீன்தாராகப் பதவி உயர்த்தப்பட்டார். அவருக்கு அடுத்து அவரது ஒரே மகன் வடுகநாதத் தேவர் சிவகங்கை ஜமீனைப் பெற்றார். இவர் காளையார்கோயிலில் நடந்த போரில் கொல்லப்பட்டார். இவரது மனைவி வேலு நாச்சியார் தனது ஒரே பெண் மகளுடன் விருப்பாச்சிக் காடுகளுக்குத் தப்பித்துச் சென்றார். இந்த விதவை மனைவி வேலு நாச்சியார் சிவகங்கைமீது அதிகாரமுள்ள கர்நாடக நவாப்பின் ஆதரவால் மீண்டும் சிவகங்கை ஜமீனை அடைந்தார். அவரது மகள் வெள்ளச்சி நாச்சியார் வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு திருமணம் முடித்து வைக்கப்பட்டார். வெங்கம் பெரிய உடையணத் தேவர் மூலம் வெள்ளச்சி ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையும் செத்துப் போய்விட்டது. சில ஆண்டுகளிலேயே வெள்ளச்சியின் அன்னையும் முத்து வடுகநாதத் தேவரின் விதவை மனைவியுமான வேலு நாச்சியார் காலமாகிவிட்டார். இப்போது சிவகங்கையின் முதல் ஜமீன்தார் சசிவர்ணத் தேவரின் வாரிசுகள் யாருமில்லை என்ற நிலை வந்துவிட்டது. சிவகங்கை ஜமீன்தாரருக்குரிய பரம்பரைப் பாத்தியதை காலாவதியாகிவிட்டது. சிவகங்கை ஜமீன்தாரி எந்தக் கொள்கைகளின் அடிப்படையில்

உருவாக்கப்பட்டதோ அதே அடிப்படையில் ஆற்காடு நவாப்பின் அரசுக்கே அதிகாரம் இப்போது திரும்ப வந்துவிட்டது.

சிவகங்கை ஜமீன்தாரி கர்நாடக நவாப்பின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதால், சிவகங்கையின் ஆட்சியாளர்கள், உயர்குடி பிரபுக்கள், குடிமக்கள் அனைவரும் கர்நாடக நவாப்பிற்குக் கட்டுப்பட்டவர்கள். சிவகங்கையின் முதல் ஜமீன்தார் சசிவர்ணத் தேவர், நவாப் சதத் அலிகானால் ஆதரிக்கப்பட்டு ஜமீன்தாராக நியமிக்கப்பட்டவர், நவாப் சதத் அலிகானால் பாளையத் தலைவராக உயர்த்தப்பட்டவர். சசிவர்ணத் தேவரும் அவரது சந்ததியினரும் கர்நாடகத்தின் நவாப் மற்றும் அவரது வம்சா வழியினருக்குக் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். கர்நாடகத்தின் இறையாண்மைக்குரிய நவாப்பிற்கும், பிரிட்டிஷ் அரசுக்கும் நீண்ட நாட்களாக உள்ள உறவின் காரணமாகக் கர்நாடகம், அதன் பொறுப்பில் உள்ள பகுதிகளைக் காக்கும் பொறுப்பு மாண்புமிகு கும்பினியாரின் படைக்கு வந்துவிட்டது. **1792**-ஆம் ஆண்டு ஜூலை மாதம் **12** -ஆம் தேதியில் ஏற்பட்ட ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது. அந்த ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளின்படி, சிவகங்கை ஜமீன்தாரி உட்பட மற்றப் பாளையங்களின்மீது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமும் ஜமீன்தாரர்களிடமிருந்தும் பாளையக்காரர்களிடமிருந்தும் பேஷ்குஷ், கிஸ்தியை வசூலிக்கவும், பாளையக்காரர்கள் கிஸ்தி கட்டவில்லையென்றால் கட்டாய வரி விதித்து அதை வசூலித்து எடுத்துக் கொள்ளவுமான உரிமையும் இறந்துபோன வாலாஜா நவாப்பினால் மாண்புமிகு கும்பினியாருக்கு நிரந்தரமாக மாற்றப்பட்டு விட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிவகங்கையிடமிருந்தும் மற்ற பாளையங்களிடமிருந்தும், மாண்புமிகு கும்பினி பேஷ்குஷ் வசூலிக்கத் தொடங்கியுள்ளது. ஒப்பந்தம் மூலம் கிடைத்த உரிமைகளின்படியும், தொடர்ந்து ஆட்சியதிகாரம் செலுத்தி வருகின்ற முறையின் காரணமாகவும் மாண்புமிகு கும்பினி, சிவகங்கை உள்பட பாளையச்சீமைகளின் பேரில் சட்டபூர்வ இறையாண்மையுடையதாகும். இதன் காரணமாகத் தற்போது வாரிசின்றி பறிமுதலாகியுள்ள சிவகங்கை ஜமீன்தாரியை தனது விருப்பப்படி எதுவும் செய்ய மாண்புமிகு கும்பினிக்கு முழு அதிகாரம் கிடைத்துவிட்டது.

வெள்ளை மருது, சின்ன மருது சகோதரர்களின் தந்திரமான நடவடிக்கைகளினால் சில காலம் கம்பெனியின் அதிகாரம் தடைப் பட்டிருந்தது. முத்து வடுகநாதத் தேவரின் விதவை மனைவி வேலு நாச்சியார் கைக் குழந்தையுடன் சிவகங்கையைவிட்டுச் சென்ற போது

வெள்ளை மருதுவும் சின்ன மருதுவும் பணியாளர் என்ற தகுதியில் மட்டுமே வேலு நாச்சியாருடன் சென்றனர்.

அவர்கள் சிவகங்கைத் திரும்பி வந்ததும் நிர்வாகத்தில் அரசியின் பிரதான அமைச்சர்களாகிவிட்டனர். ஒரு பெண் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதில் உள்ள பலகீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியின் குடும்ப வழியினரான நாலுகோட்டைக் குடும்பத்தினர் மீதும் அக்குடும்பத்தின் பங்காளிகள், தாயாதிகள் மீதும் சிவகங்கை நகரில் வாழ்பவர்கள் மீதும் மருது சகோதரர்கள் கொடுங்கோன்மையையும் எதேச்சாதிகாரத்தையும் பயன்படுத்தினார்கள்.

நாலுகோட்டைக் குடும்ப வழியினரின் கடைசி அரசியாக இருந்த வெள்ளச்சி இறந்தபின், வெள்ளை மருதுவும் சின்ன மருதுவும் சில ஏமாந்த குடிமக்களின் ஒத்துழைப்பைத் தங்கள் தீயசெயலுக்குப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பறித்துக்கொண்டனர். பெற்ற அதி காரத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்காகக் கும்பினியாரின் ஆயுத பலத்தை எதிர்க்கவும் சிவகங்கையை அழிக்கவும் மக்களைத் துயரத்தில் ஆழ்த்தவும் எவ்விதப் பயமுமின்றி ஆங்கிலேயருக்கு எதிராகக் கலகத்தில் இறங்கியுள்ளனர்.

சிவகங்கை ஜமீன்தாரியின் விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் பொருட்டு முதல் ஜமீன்தாராகிய சசிவர்ணத் தேவரது முன்னோரின் ஒரு கிளையில் வந்த படமாத்தூர் உடையத் தேவரை சிவகங்கையின் ஜமீன்தாராகத் தேர்ந்தெடுத்து ஒரு புதுப் பதவியை உருவாக்கி அவரை அதில் நியமனம் செய்வதில் கும்பினி மகிழ்ச்சியடைகிறது. மேற்படி படமாத்தூர் உடையத் தேவரை மட்டுமே உண்மையான, சட்டப்படியான, அதிகாரமும் உரிமையும் உடைய சிவகங்கை ஜமீன்தாராக ஏற்று மதிக்கும்படி சிவகங்கை மக்களைக் கவர்னராகிய நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கைச் சீமையின் ஜமீன்தாரை நியமிக்கும் அதிகாரத்தையும் உரிமையையும் பயன்படுத்த மேதகு ஆளுநர் முற்படுகையில் முதல் ஜமீன்தாரான சசிவர்ணத் தேவரின் வம்சாவழியில் வந்த வெங்கம் பெரிய உடையணத் தேவரின் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்தார். ஆனால் வெங்கம் பெரிய உடையணத் தேவர் தம்முடைய நலன்கள், தம் குடும்பத்திற்கெதிரான எதிராளியும், அடிமைகளுமான வெள்ளை மருது, சின்ன மருதுவுடன் சேர்ந்து கொண்டு வெள்ளை மருதுவின் மகளை மணந்ததன் மூலம் தன்னுடைய மத ஆச்சாரத்தையும் குடும்பக்

கண்ணியத்தையும் மீறிவிட்டார். கும்பினி அதிகாரத்தை எதிர்த்துக்கொண்டு வெள்ளை மருது சின்ன மருதுவுடன் சேர்ந்து தற்போது ஆயுதமேந்திவிட்டதால், மேற்படி வெங்கம் பெரிய உடையணத் தேவர் சிவகங்கை ஜமீன்தார் பதவிக்கு இப்போது மட்டுமல்ல இனி எப்போதும் உரிமைகோரத் தகுதி இழந்தவராகிறார் என்று முறையாகவும் பகிங்கரமாகவும் அறிவிக்கிறேன்.

வெள்ளை மருது, சின்ன மருது, வெங்கம் பெரிய உடையணத் தேவர் ஆகியோர் பகிரங்கரமான எதிர்ப்பெழுச்சியைத் தூண்டி யிருப்பதால் மேற்படி மருது பாண்டியர்களின் அதிகார அபகரிப்பை அடக்கவும் சிவகங்கை ஜமீன்தாரின் சட்டப்படியான அதிகாரத்தை நிலைநாட்டவும் இராணுவ நடவடிக்கை தேவைப்படுவதால் லெப்டினென்ட் கர்னல் அக்னியூ தலைமையில் ஒரு பெரும் படை கொண்டு வரப்பட்டுள்ளது. மேதகு ஆளுநர் சிவகங்கை மக்களுக்குத் தெரிவிப்பதென்னவென்றால், கையில் ஆயுதமேந்தியோ, பிரிட்டிஷ் அரசின் அதிகாரத்தையும் கௌரவத்தையும் கண்ணியத்தையும் எந்த வொரு வகையில் எதிர்த்தோ செயல்படுகிற எவரையும் தண்டிக்கிற அதிகாரத்தையும் தேவைப்பட்டால், மரண தண்டனை அளிக்கின்ற முழு அதிகாரமும் லெப்டினென்ட் கர்னல் அக்னியூவிற்கு வழங்கப்படுகிறது.

வெள்ளை மருது சின்ன மருதுவின் எதிர்ப்பை ஒடுக்கவும், சிவகங்கை ஜமீன்தாரின் உரிமையை நிலைநாட்டவும் லெப்டினென்ட் கர்னல் அக்னியூ தலைமையிலான ராணுவம் கொண்டு வரப்பட்டிருப்பதைச் சிவகங்கையில் வாழ்பவர்கள் தெரிந்திருப்பார்கள். தென் மாநிலங்களில் அண்மையில் எதிர்ப்பாளர்களை ஒடுக்கப் பலமுறை கும்பினி எடுத்த கடுமையான நடவடிக்கைகள் சிவகங்கை மக்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. எத்தனையோ கிளர்ச்சிகளை அடக்கிய பிறகு, அதில் ஒன்றான சிவகங்கையிலும், ஆட்சி அதிகாரப் பறிப்புச் செய்துள்ள மருது சகோதரர்களின் எதிர்ப் பெழுச்சி கும்பினியின் வலிமையான படை முன்பு வெற்றி பெறும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஆகையினால் சட்டப்பூர்வ ஜமீன்தாரின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டிருக்கும் வெள்ளை மருது, சின்ன மருது இருவரின் கொள்கையை ஆதரிக்கும் செயலைக் கைவிடவில்லையென்றால் சிவகங்கை மக்கள் தாமும் தமது குடும்பத்தினரும் தமது நாடும் எதிர்கொள்ள நேரும் ஆபத்தினை, விளைவுகளைக் குறித்து இந்த நேரத்தில் எச்சரிக்கிறேன். தனி நபர் சொத்துரிமைக்கும் சமய

வழக்கங்களுக்கும் பிரிட்டிஷ் அரசு பாதுகாப்புத் தரும். அன்றாட வாழ்வைப் பாதுகாக்கவும், மீண்டும் பழையபடி தொடங்கவும் சட்டப்பூர்வமான சிவகங்கை ஜமீன்தாருக்கு விசுவாசமாக இருக்கவும் தமது தவறைத் திருத்திக்கொள்ளவும் இன்னமும் காலம் இருக்கிறது என்று சிவகங்கை மக்களை இப்பிரகடனத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்."

கவர்னர் எட்வர்ட் கிளைவ்வின் இந்தப் பிரகடனத்தின் மூலம் தளபதி கர்னல் அக்னியூவிற்குக் கம்பெனி முழு அதிகாரம் கொடுத்துள்ளதைப் பாளையக்காரர்களும், பொதுமக்களும் புரிந்து கொண் டனர். கிளைவ்வின் பிரகடனம் போராளிகளின் எழுச்சிக்கு வேகம் கொடுத்தது. துரோகிகளுக்கு, வாய்ப்புகளைத் தந்தது.

•

44

போர் உச்சத்திற்குச் சென்றது.

காளையார்கோயில் காடுகளுக்குள் மறைந்துகொண்டு மருது பாண்டியர்களும் பிற போராளித் தலைவர்களும் ஆங்கிலேயர்களுடன்

போரை நடத்திக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயப் படையுடன் மருது பாண்டியரும், ஊமைத்துரையும், கோபால் நாய்க்கரும் நடத்திய போரில், உடன் இருந்த மக்கள் அவர்களைப் பாதுகாத்ததைவிட காளையார்கோயிலின் அடர்ந்த காடு, மருது பாண்டியர் வணங்கும் குன்றக்குடி முருகன்போல், போராளிகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. ஆங்கிலேயப் படைகளைக் காட்டின் உள்ளே நுழையவிடாமல் போராளிகள் கொரில்லா முறையில் திடீர் திடீரென தாக்குதலை நடத்தினர். ஆங்கிலேயப் படை வீரர்களின் பிணங்கள் மட்டுமே காட்டின் பாதைகளில் கிடந்தன. பீரங்கிகளையும், வெடிமருந்துகளையும், துப்பாக்கிகளையும் வைத்துக்கொண்டு, எதிரிகளைக் கண்ணில் பார்க்க முடியாமல் திணறிக்கொண்டிருந்தனர். இரண்டாயிரம் சிப்பாய்களைக் கொண்ட படையில் தினம் தினம் சிப்பாய்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது.

காளையார்கோயில் காட்டை அழித்தால் ஒழியப் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று கர்னல் அக்னியூ முடிவு செய்தான். காளையார்கோயிலின் அடர்ந்த காடுகளை வெட்டி வழி ஏற்படுத்த புதுக்கோட்டை அரசர் தொண்டைமானின் உதவி ஆங்கிலேயர்களுக்குத் தேவைப்பட்டது. தொண்டைமான் தன் பகுதியில் இருந்த திறமையான காடுவெட்டிகளை காளையார் கோயிலுக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் காளையார்கோயில் காட்டை ஒரு நாளைக்கு அதிகபட்சம் அரைமைல் தூரம், முக்கால் மைல் தூரம் என்ற அளவிற்கு வெட்டி, தற்காலிகமான பாதை அமைத்துத் தந்தார்கள். காடு வெட்டிகள், காட்டை அழித்துப் பாதை அமைத்து முன்னே செல்ல, ஆங்கிலேயப் படை பின்னே சென்றது.

காளையார்கோயில் காட்டை நன்கு அறிந்த புதுக்கோட்டை அரசன் தொண்டைமான் கர்னல் அக்னியூவிற்கு முக்கியச் செய்தி ஒன்றை அனுப்பினான். “லெப்டினென்ட் கர்னல் அக்னியூ அவர்களே, நீங்கள் காளையார்கோயில் காட்டில் மேற்கிலிருந்து தாக்குதலைத் தொடுப்பீர்கள் என்று மருது நினைக்கிறார். அதற்காக அத்தியாவசியப் பண்டங்கள், தானியங்கள், படைத்தளவாடங்கள், வெடிமருந்து, விலைமதிப்பு மிக்க பொருட்கள், மனைவி, மக்கள் உறவினர்கள் என அனைத்தையும் காளையார்கோயிலின் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள காடுகளில் மருது மறைத்து வைத்துள்ளார். கிழக்குக் கடற்கரைப் பகுதியும் மருதுவுக்குத் தேவையான போர்த் தளவாடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. படைவீரர்களையும் பல்வேறு வகையான

பண்டங்களையும் ராமநாதபுரம் பகுதி தடையின்றி மருதுவுக்கு வழங்கிவருகிறது.

ஆங்கிலேயர்களின் வலிமையானதொரு படையை கிழக்குப் பகுதியிலிருந்து தாக்க உத்தரவிடுங்கள். கடற்பகுதி களுடனும் ராமநாதபுரத்துடனும் போராளிகளுக்கு உள்ள தொடர்பினைத் துண்டியுங்கள். மருதுவின் படைவீரர்களை பலவீனமடையச் செய்ய வேண்டுமென்றால் அவர்களது குடும்பங்களைப் பிடித்துக் கொண்டு வந்து விசாரணை என்ற பெயரில் அலைக் கழியுங்கள். தமது குடும்பத்தாருக்கு ஆபத்து என்று தெரியும் போது மருதுவின் படையினரே அவரைப் பிடித்துக் கம்பெனி வசம் ஒப்படைக்காமல் போனாலும் அவரை விட்டுப் பிரிந்து செல்வர். இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் போரை பதினைந்து நாட்களுக்கு முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம்."

அக்னியூவின் போர் வெறி, தொண்டைமானின் துரோக வழி காட்டல் இவற்றுடன் உள்ளூரின் சூழலும் மாறத் தொடங்கியது. படமாத்தூர் ஒய்யாத் தேவர் மகன் கௌரி வல்லபர் சிவகங்கையின் இஸ்திமிரார் ஆக நியமிக்கப்பட்டதும், நாலுகோட்டை, ஒக்கூர், இருகூர், பட்டமங்கலம், பாகனேரி பகுதி மக்கள் மருதுபாண்டியரைக் கைவிட முடிவு செய்தனர். ஆங்கிலேயர் எதிர்பார்த்ததுபோலவே அவர்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்தனர்.

காளையார்கோயில் போரில் மருது பாண்டியரின் போராளிகளால் ஆங்கிலேய அதிகாரிகள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். போரில் இறந்தவர்களையும், காயம்பட்டவர்களையும் மின்னல் வேகத்தில் தூக்கிக்கொண்டு ஓடி வருகின்ற மலேசிய வீரர்கள் குள்ளமாக இருந்தாலும் கடுமையாகப் போராடுவதையும் ஓய்வே எடுக்காமல் உழைப்பதையும் ஆங்கிலேயத் தளபதி கர்னல் அக்னியூ காளையார்கோயில் போரில்தான் கவனித்துப் பார்த்தான்.

தன்னுடைய படை கொஞ்சம் கொஞ்சமாக பலவீனப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து அக்னியூ வெறி கொண்டான். மருது பாண்டியர்களை வெற்றி கொண்டே ஆக வேண்டும் என்ற வெறியில் இரவு பகலாகத் திட்டமிட்டுக் கொண்டே இருந்தான். படை உதவி கேட்டு மெட்ராஸ் கவர்னருக்கும், திருநெல்வேலி, திருச்சி, திண்டுக்கல் கலெக்டர்களுக்கும் அவன் எழுதிய கடிதங்கள் போராளி களால் பாதி வழியில் கைப்பற்றப்பட்டு கிழித்து எறியப்பட்டன. அவனின் எல்லா கடிதத் தொடர்புகளும் போராளிகளால் முழுமை யாக முடக்கப்பட்டன.

எப்பொழுதும் தனக்குத் தேவைப்படும் தகவல்களைத் தந்து உதவும் மேஜர் வெல்ஷை அழைத்து அக்னியூ ஆலோசனை நடத்தினான். அக்னியூ எதிர்பார்த்தபடியே வெல்ஷ் ஒரு ஆலோசனை கொடுத்தான். வெல்ஷ் கொடுத்த ஆலோசனைப்படி, ஆங்கிலேய உளவுப் படை பாளையக்காரர் ஒருவரைச் சந்தித்தது. அந்தப் பாளையக்காரர் சிவகங்கை, திருநெல்வேலிப் பகுதிகளை முழுவதுமாக அறிந்தவர். "எந்த வழியிலாவது நானே சென்று ஆங்கிலேயர்கள் சொல்லும் வேலையைச் செய்து முடிப்பேன்" என்று தம்பட்டம் அடிப்பவர். அவரை ஆங்கிலேயப் படை வீரர்கள் மேஜர் வெல்ஷிடம் அழைத்து வந்தனர். ஐந்து பகோடா பணத்துடன் ஒரு கடிதத்தையும் மேஜர் வெல்ஷ் அவனிடம் கொடுத்தான். "இதைக் கொண்டுபோய் திருநெல்வேலி கலெக்டரிடம் கொடுத்துவிடு. இதே அளவு பணம் திருநெல்வேலியிலும் உனக்குத் தரப்படும்" என்று அவனுக்கு ஆசை காட்டப்பட்டது. பண ஆசையில் கடிதம் பெற்றுச் சென்ற அவன், சில மணிகளில் பொதுமக்களால் வழிமறிக்கப் பட்டான். அவன் வைத்திருந்த கடிதம் பறிமுதல் செய்யப்பட்டது. அவனும் அடித்துக் கொல்லப்பட்டான். கோபத்தில் அக்னியூ தன் படையில் இருந்த குதிரையொன்றைச் சுட்டுக் கொன்றான்.

தோல்விகள் கொடுத்த தீராத வேதனையில் அக்னியூ தான் ஒரு கர்னல் என்பதையும், போரில் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச நேர்மையையும் மறந்தான். குள்ள நரி ஒன்றைப் போல், தந்திரத்தைத் துணை கொண்டு, மக்கள் கூட்டத்தில் துரோகிகளை உருவாக்கினான். தங்களுக்கு முன்னால் வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்காக, நாவில் நீர் வடியக் காத்திருக்கும் நாய்கள், அந்த எலும்புத் துண்டுகள் தங்களின் பசிக்கான உணவா, அல்லது தங்களைக் கொல்ல வீசப்படும் தூண்டிலா என்பதைத் தீர்மானிக்கும் சக்தியற்றவையே.

மருது சகோதரர்களைப் பற்றி வேவு சொல்பவர்களுக்கும், மருதுவை எதிர்க்கத் துணிந்தவர்களுக்கும் காளையார்கோயிலின் காட்டுப் பகுதிகளில் இருந்த நிலங்கள், குத்தகையாக வழங்கப்படும் எனக் கர்னல் அக்னியூ அறிவித்தான். அதற்குக் கவுல் என்று பெயர். கவுல் நிலங்களுக்குப் பத்து வருடம், இருபது வருடங்களுக்கு குத்தகைப் பணம் கட்ட வேண்டியதில்லை என அறிவித்தான்.

அந்த அறிவிக்கையை ஊர் ஊராகத் தண்டோராப் போட சிவகங்கையின் புது ஆட்சியாளர் இஸ்திமிரார் படமாத்தூர் கௌரி வல்லபர் ஏற்பாடு செய்தார். அனைத்து ஊர்களிலும் தண்டோரா

போடப்பட்டது. கர்னல் அக்னியூவின் அறிவிக்கை, பலரைக் கவர்ந்தது. அதுவரை மருது பாண்டியர்களுக்குத் துணையாக இருந்து வந்த சிலர் கவுல் பத்திரம் வாங்குவதற்காக மருதுவை விட்டு விலக ஆரம்பித்தனர். கவுல் பத்திரம் எலும்புத்துண்டைப்போல் தனது வேலையைக் காட்ட ஆரம்பித்தது. கர்னல் அக்னியூ மருது சகோதரர்களின் தற்போதைய மறைவிடங்கள், அவர்களது ஆயுத இருப்பு குறித்து விசாரித்துத் தெரிந்து கொண்டான்.

"இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், வெள்ளை மருதையும் சின்ன மருதையும் உயிரோடு பிடித்துத் தருபவர்களுக்கு தலா ஆயிரத்து ஐநூறு சுருள் சக்கரம் பணம் வெகுமதியாக வழங்கப்படும். இவர்களைப் பிணமாகக் கொண்டு வந்தால் எழுநூற்று ஐம்பது சுருள் பணம் தரப்படும்" என்று முதல் நாள் முரசறிவிக்கப்பட்டது.

அடுத்த நாளில், "சின்ன மருதுவின் மகன்கள் சிவத்த தம்பி, சிவஞானம், துரைசாமி, சிவத்த தம்பியின் மகன் முத்துச்சாமி, பெரிய மருது என்ற வெள்ளை மருதுவின் மகன்கள் கருத்த தம்பி உடையணன், மோளிக்குட்டித் தம்பி, ஆகியோரை உயிருடன் பிடித்துத் தருபவர்களுக்கு தலா ஆயிரம் சுருள் பணமும், அவர்களைப் பிணமாகக் கொண்டு வருபவர்களுக்கு ஐநூறு சுருள் பணமும் வழங்கப்படும்" என்று தண்டோரா போடப்பட்டது.

மூன்றாவது நாள் தண்டோரா போட்டபோது மேலும் சில போராளிகளின் பெயர்களையும் சன்மானம் பெறும் பட்டியலில் ஆங்கிலேயர்கள் சேர்த்திருந்தனர். அதில் "சிவகங்கையைச் சேர்ந்த வெங்கம் பெரிய உடையணத் தேவர், ராமநாதபுரத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பத் தேவர், பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த ஊமை குமாரசாமி, வாராப்பூர் பொம்மி நாயக்கர் ஆகியோரை உயிருடன் பிடித்துக் கொடுத்தால் தலா ஆயிரம் சுருள் பணமும் அவர்களைப் பிணமாகக் கொண்டு வருபவர்களுக்கு ஐநூறு ரூபாய் சுருள் பணமும் தரப்படும்" என்று அறிவித்தனர்.

மருது பாண்டியர்கள் காளையார்கோயில் அடர்ந்த காட்டின் பாதுகாப்பில் போரைத் தொடர்ந்தனர். காட்டுக்குள் இருந்த பயங்கரமான மிருகங்கள், போராளிகளை ஒன்றும் செய்யாமல் காத்துக் கொண்டிருக்க, காட்டுக்கு வெளியே இருந்த மனித மிருகங்கள், மனித ரத்தம் வேண்டி அலைந்து கொண்டிருந்தன.

அக்டோபர் முதல் நாள் காளையர்கோயில் பிடிபட்டது. அன்றே மெட்ராஸ் புறப்பட்டுச் சென்ற கர்னல் அக்னியூ கவர்னரைச் சந்தித்தான். போரில் கிடைத்த வெற்றி பற்றியும், மலேசிய வீரர்கள் பற்றியும் அவர்களது எஜமான பக்தி பற்றியும் கவர்னர் எட்வர்ட் கிளைவ்விடம் சொன்னான். கவர்னர் எடுத்த முடிவு அதுவரை எந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னரும் எடுக்காத முடிவு. "பிடிபட்டவர்கள்மீது நீதி விசாரணை நடத்தப்படும் என்று வெளியில் அறிவியுங்கள். விதிமுறைகள் எதையும் பின்பற்ற வேண்டாம்" என்றும் கவர்னரிடம் அறிவுரை பெற்ற கர்னல் அக்னியூ காளையார்கோயிலுக்கு நான்கே நாளில் மீண்டும் திரும்பிவந்தான்.

போரில் வென்றவுடனே காளையார்கோயில் விருப்பாச்சி, பழனி, ஆனைமலைக் காடுகளை அழிக்க வேண்டும் என்று கர்னல் அக்னியூ முடிவு செய்திருந்தான். இந்த அடர்த்தியான காட்டுப்பகுதிகளைத் தனக்கு உதவுபவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தது போலவும் இருக்கும். காட்டை அழித்ததுபோலவும் இருக்கும் என்று கர்னல் அக்னியூ இரண்டு லாபக் கணக்குப் போட்டான். போரில் தனக்கு உளவு சொல்லியவர்களுக்கும் உதவியவர்களுக்கும் 'கவுல்' கொடுக்க கர்னல் அக்னியூ கவர்னரிடம் ஏற்கனவே அனுமதி வாங்கிவிட்டான்.

காளையார்கோயில் காட்டில் முப்பத்திரண்டு நாள் போர் நடந்து முடிந்திருந்தது. முப்பத்து மூன்றாவது நாள் இரண்டாயிரம் வீரர்களோடு காட்டிலிருந்து வெளியேறிய மருது சகோதரர்கள் சங்கரபதிக் கோட்டைக்கு வந்து அவ்வூர்க் காடுகளுக்குள் மறைந்திருந்தனர். கர்னல் அக்னியூ ஒரு நரி வேலை செய்தான். "மருது சகோதரர்கள் பெரும் செல்வத்தைச் சங்கரபதிக் கோட்டை காடுகளில் உள்ள மரப் பொந்துகளில் மறைத்து வைத்திருப்பதாகவும் அதை யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்" என்றும் அறிவித்தான். பொருள் ஆசைப் பிடித்த சிலர் காட்டுக்குள் புகுந்ததால் மருது சகோதரர்கள் சங்கரபதிக் காட்டைவிட்டு வெளியேறினர். போராளிகள் தனித்தனியாகப் பிரிந்தனர்.

தனியாகப் பிரிந்த சின்ன மருது வெற்றியூர்க் காட்டில் ஒளிந்திருந்தார். உதவிக்குக் கருத்தான் என்ற சிறுவன் மட்டும் அவருடன் இருந்தான். வலையர் குலத்தைச் சேர்ந்தவன். அவனுக்குச் சின்ன மருது தனது காதுகளில் அணிந்திருந்த விலை உயர்ந்த மரகதக் கடுக்கன்களைக் கழட்டி அணிவித்தார். சின்ன மருதுவுக்குப் பல்வேறு உதவிகள் செய்தபடி உடன் இருந்தான். ஒருநாள் மிருகங்களை வேட்டையாடக் கிளம்பியவன்,

குறி தவறியதுபோல நடித்து, சின்ன மருதுவைச் சுட்டுவிட்டான். மறைந்திருந்த ஆங்கிலேயப் படை சின்ன மருதுவைக் கைது செய்தது. சின்ன மருதுவை ஆங்கிலேயப் படையே கருத்தானைத் துருப்புச் சீட்டாக வைத்துக் காலில் சுட்டுப்பிடித்ததால் வெகுமதிப் பணம் தங்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்று தொண்டைமான் படையினர் வருந்தினர்.

திருக்கோட்டியூரை அடுத்த வெளியாத்தூரில் இருந்த கர்னல் அக்னியூவின் முகாமிற்குச் சின்ன மருதுவைக் கொண்டு வந்தனர். அக்னியூ அப்போது மதிய உணவருந்திவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். கூடாரத்திற்கு வெளியே பெரும் சத்தம் கேட்டது. மேஜர் வெல்ஷ் வெளியே ஓடிவந்து பார்த்தான். சின்ன மருதுவின் கால்களிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. முகத்தில் கருப்பும் வெள்ளையுமாக தாடி, மீசை. கண்கள் மட்டும் ஒளிவீசின. இடுப்பில் வேட்டி. உடலின்மேல் பகுதியில் துணிகளோ அவர் எப்போதும் கழுத்தில் அணியும் நகைகளோ எதுவும் இல்லை.

சின்ன மருது எப்போதும் காதில் அணிந்திருக்கும் மரகதக் கடுக்கன்களும் மார்பிலும் கைகளிலும் இருக்கும் ஆபரணங்களும் இன்று இல்லை. அவரை இரு ஆங்கிலேயச் சிப்பாய்கள் தோளில் தாங்கியிருந்தனர். சின்ன மருதுவின் முகத்தில் எந்த உணர்ச்சியையும் மேஜர் வெல்ஷால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெல்ஷ் பலமுறை சின்ன மருதுவின் விருந்தினராகச் சிறுவயல் அரண்மனையில் தங்கியிருக்கிறான். அப்போது அவனது அண்ணன் பெரிய மருது, சின்ன மருதுவின் மனைவிகள், மகன்கள், பேரன் என்று பலரிடமும் சிரித்துப் பேசியிருக்கிறான். மிக நன்றாகச் சமைத்துப் போட்டிருக்கிறார்கள். அவர்களும் வெல்ஷிற்கு அதிக மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

அக்னியூவும் இப்போதெல்லாம் மருது சகோதரர்கள் பற்றிய எந்தச் செய்தியையும் வெல்ஷிடம் பகிர்ந்து கொள்வதில்லை. ஆனால் வெல்ஷை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான். வெள்ளை மருதுவிற்கும் சின்ன மருதுவிற்கும் யார் யார் ரொம்ப நெருக்கமானவர்கள் என்று அக்னியூ மேஜர் வெல்ஷைக் கேட்டான். நெருக்கமானவர்கள் அகம்படியார் ஜாதியாக இருக்கக் கூடாது, அந்த ஆட்கள் காட்டு வழிகளை நன்குத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். பணத்திற்கு ஆசைப்படுபவராக இருக்க வேண்டும் என்று கர்னல் அக்னியூ விவரித்த போது வெல்ஷ் சிறிது யோசனைக்குப் பின் சொன்ன பெயர்தான்

‘கருத்தான்’. இது மாதிரி தனக்குத் தேவையான செய்திகளை வாங்கிக் கொள்ள மேஜர் வெல்ஷைப் பயன்படுத்திய கர்னல் அக்னியூ தான் கவர்னரைச் சந்தித்தது பற்றியோ கவர்னர் என்ன வழிகாட்டுதல் சொன்னார் என்பது பற்றியோ வெல்ஷிடம் வாய் திறக்கவில்லை.

கருத்தானைப் பற்றி வெல்ஷ் சொல்லவில்லையென்றால் இன்னும் இரண்டு மாதத்திற்காவது சண்டை நடந்திருக்கும் என்று வெல்ஷ்க்குத் தெரியும். இருந்தாலும் கர்னல் அக்னியூ மேஜர் வெல்ஷைவிட பெரிய அதிகாரி. கவர்னரிடம் நேரடியாகப் பேசக் கூடிய அளவு செல்வாக்கை வளர்த்து வைத்திருக்கிறான். பிறவி மமதையின் காரணமாக வெல்ஷை அவன் அலட்சியப்படுத்தினாலும் அதைப் பொறுத்துக்கொள்ள வெல்ஷ் பழகிக் கொண்டான். கைதியாக நிற்கும் சின்ன மருது முன்பு முகத்தை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று புரியாமல் வெல்ஷ் தடுமாறி நின்றான். அவன் மனதில் சின்ன மருது பற்றிய நினைவுகள் ஓடின. “இந்த மனிதனது வாழ்க்கைச் சீரழிந்ததற்கு இவனே காரணம். இன்று பிடிபட்டதற்கு வேண்டுமானால் தான் காரணமாக இருக்கலாம்” என்று நினைத்து, தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டான். இருந்தாலும் தான் சின்ன மருது வீட்டில் சாப்பிட்டதற்காகவும் அவன் விருந்தோம்பலை அனுபவித்தற்காகவும் தன்னால் முடிந்த அளவு ஏதாவது சிறு உதவியாவது செய்யலாமே என்று கருதித்தான் சின்ன மருது பிடிபட்டவுடனே கர்னல் அக்னியூவின் வெளியாத்தூர் முகாமிற்கு மேஜர் வெல்ஷ் ஓடி வந்தான்.

சின்ன மருதுவை “எப்படி இருக்கிறீர்கள்?” என்று சம்பிரதாயமாகக்கூட மேஜர் வெல்ஷால் கேட்க முடியாது. ஏனென்றால் இப்போது அவன் கைதி. கர்னல் அக்னியூவின் விசாரணையின் முடிவில் சின்ன மருது நிரபராதி என்று கூட அறிவிக்கப்படலாம். ராமநாதபுரம் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதிபோலச் சிறையிலும் அடைக்கப்படலாம் என்றெல்லாம் மனதை சமாதானப்படுத்திக் கொண்டு “என்ன சின்ன மருது, காலில் பலத்த அடியாகத் தெரிகிறதே” என்று பேச்சை ஆரம்பித்தான். சின்ன மருது தனது காயத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டார். சின்ன மருதுவை கைத்தாங்கலாகப் பிடித்திருந்த சிப்பாய்கள் அவரை இரு கைகளிலும் பிடித்துக் கொண்டு காலை அட்டென்ஷனில் வைத்து சல்யூட் செய்தபோதுதான் தனக்குப் பின்னால் கர்னல் அக்னியூ வந்து கொண்டிருக்கிறான் எனத் தெரிந்து தானும் அட்டென்ஷனில் நின்று கர்னல் அக்னியூவிற்கு சல்யூட் செய்தான்.

கர்னல் அக்னியூவின் பார்வையில் அலட்சியமும் முகத்தில் ஏளனச் சிரிப்பும் இருந்தன.

“மேஜர் வெல்ஷ், இவன் பெரிய மருதா? அல்லது உங்கள் நண்பன் சின்ன மருதா?” என்று தெரியாதவன் போலக் கேட்டான்.

“கர்னல்... ஹி இஸ் சின்ன மருது.”

“இவருடைய கால் காயங்களுக்கு மருந்து போட்டுவிட்டு இவரை உள்ளே அழைத்துவா.”

முகாமிற்குள் சென்ற கர்னல் மீண்டும் திரும்பி வந்தான். “மேஜர் வெல்ஷ், நான் ஒன்றை மறந்து விட்டேன். போரில் காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வந்த நமது டாக்டர் ஜான் இங்கிலீஷைத்தான் இந்த சின்ன மருது கொன்று விட்டாரே? இப்போது யார் இவருக்கு மருந்து போடுவது? சரி பரவாயில்லை, டாக்டர் வைத்திருந்த மருந்துப் பெட்டி இங்குதான் இருக்கும். அதிலிருந்து மருந்து எடுத்து இவருக்கு முதலுதவி செய்து அழைத்து வாருங்கள்” என்று சொன்ன கர்னலின் கண்களில் கோபம் கொப்பளித்தது.

கர்னலின் டெண்ட்மீது போடப்பட்ட அடர்த்தியான முரட்டுத் துணி மழை பெய்தாலும் அதைத் தாங்கும்படி அமைக்கப்பட்டது. அந்த ஆண்டு கார்த்திகை மாதம் வரை மழை பெய்யவில்லை. டெண்ட் சூடாக இருந்தது. டென்டைச் சுற்றி ஆட்கள் இருக்கிறார்களா? என ஒரு பார்வை பார்த்துவிட்டு டென்ட்டிற்குள் மேஜர் வெல்ஷ் நுழைந்தான். டென்டிற்குப் பின்புறம் ஒரு சிறிய கொட்டகையிருந்தது. அது தென்னம் மட்டைகளால் பின்னப்பட்டிருந்தது. அந்தச் சிறிய கொட்டகைக்குள் சின்ன மருதை இரண்டு வீரர்கள் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர். இறந்து போன டாக்டர் கேப்டன் ஜான் இங்கிலீஷின் உதவியாளன் ஒருவன் சின்ன மருதுவின் காலை சுடுதண்ணீரில் கழுவினான். மருதுவால் வலி தாங்க முடியவில்லை. “வேண்டாம், அப்படியே இருக்கட்டும்” என்றார் சின்ன மருது. உதவியாளன் வெல்ஷைப் பார்த்தான். அப்போது ஒரு சிப்பாய் ஓடிவந்து “மேஜர் உங்களை கர்னல் வரச்சொல்கிறார்” என்றவுடன் சின்ன மருதுவை அந்தச் சிறிய கொட்டகையில் உதவியாளனிடம் விட்டுவிட்டு கர்னல் அறைக்குள் நுழைந்தான். “வெல்ஷ், நாம் பிரச்சனையிலிருந்து முழுதாக வெளிவரவில்லை. பெரிய மருது இன்னும் பிடிபடவில்லை. இந்த மருதுகளின் மகன்கள், பேரன்கள் இன்னும் பிடிபடவில்லை. அவர்களைப் பிடிக்கத் தொண்டைமானிடம் சொல்லியிருக்கிறோம். இது

குறித்து நீங்கள் உடனே கர்னல் இன்ஸுடன் விவாதியுங்கள். நானே சின்ன மருதுவை விசாரித்துக் கொள்கிறேன்" என்றான். மேஜர் வெல்ஷ் உடனடியாக வெளியேறினான்.

"சின்ன மருதுவைக் கொண்டு வாருங்கள்" என்றான் கர்னல் அக்னியூ. உள்ளே அழைத்து வரப்பட்ட சின்ன மருதுவின் அங்க அடையாளங்களைக் குறித்துக் கொள்ளச் சொல்லித் தனது உதவி யாளர்களுக்கு உத்தரவிட்டான். சின்ன மருதுவின் உடம்பில் இருந்த மச்சங்கள், தழும்புகள் குறிக்கப்பட்டன.

"உன்னுடைய குடும்பத்தைப் பற்றிச் சொல்லு."

"எனக்கு என் அண்ணன்தான் எல்லாம். எனது தாயார் ஆனந்தாயி என்னோடு சிறுவயல் கிராமத்தில் இருக்கிறார். அப்பா வெள்ளக்காலுடையார் என்ற பழனியப்பச் சேர்வை, எங்களது சிறுவயதிலேயே இறந்துவிட்டார். "

சிறுவயல் எங்கே இருக்கிறது? முப்பது நாட்களுக்கு முன்பே எரிந்து சாம்பலாகிவிட்டதே. இப்போது உன் தாயார் சிறுவயலில் இருப்பதாகச் சொல்லுகிறாயே."

"தெரியவில்லை. அவர் எங்கிருக்கிறார் எனத் தெரியவில்லை."

"உனக்கு மனைவிகள்? குழந்தைகள்?"

"எனக்கு மூன்று மனைவிகள். வீராயி, மீனாட்சி, வைராத்தாள். வீராயி ஆத்தாள் மூலம் மூன்று மகன்கள் உள்ளனர். சிவத்த தம்பி என்ற சமாலி உடையார். சிவஞானம், முத்து வடுகு என்ற துரைசாமி."

" உனக்குப் பேரன் ஒருத்தன் இருக்கிறானாமே?"

"ஆம். என் மகன் சிவத்த தம்பி என்ற சமாலி உடையாருக்கு மகன் இருக்கிறான். அவன் பெயர் முத்துச்சாமி."

"உன் மகன் துரைசாமிக்கும், உன் பேரன் முத்துச்சாமிக்கும் ஒரே வயதா?"

"இல்லை, எனது பேரன் முத்துசாமியை விட எனது மகன் துரைசாமிஇரண்டு வருடம் பெரியவன்."

“சமுத்திரத்தைத் தாண்டி இருக்க மாட்டாய். எங்களைப் போல எந்த புதிய தேசத்தையும், மக்களையும் பார்த்திருக்க மாட்டாய். பல தேசங்களைப் பார்த்த, பல ஊர் தண்ணீர் குடித்த எங்களை, கண்ணில் விரலைவிட்டு ஆட்டுகிறாய்?”

சிறிது இடைவெளி விட்ட அக்னியூ, “பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா எங்களிடமிருந்து சுதந்திரம் கேட்டு யுத்தம் துவங்கியபோது ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. ஆனால், நீ ஒரு தனி ஆள். ஒரு கூட்டத்தைக் கூட்டி, எங்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறாய். கம்பெனியை எதிர்த்து, அந்தப் பிரகடனத்தை திருச்சிக் கோட்டைச் சுவரிலும், ஸ்ரீரங்கம் கோயிலிலும் ஒட்டி, பிரச்சாரம் செய்யும் அளவுக்கு நீ பெரிய ஆளா? ஐரோப்பிய இழிபிறவிகள் என்று பிரகடனத்தில் எங்களைக் குறிப்பிட்டுள்ளாயா? எங்களுக்கு உதவும் தொண்டடைமானும் திருவிதாங்கூர் அரசரும் எட்டப்ப நாயக்கரும் உன்னைப் பொறுத்த வரையில் மறைவிடத்தில் வளரும் ரோமங்களா? இன்றைக்கு அந்த மறைவிட ரோமங்கள் எப்படியிருக்கின்றன? நீ எப்படி இருக்கிறாய் பார்த்தாயா?” என்றான்.

“நீங்கள் அதிகமாகப் பேசவேண்டாம். ஒரு செயல், முறையா? முறையற்றதா? என்பதை காலமும் நேரமுமே தீர்மானிக்கின்றன. இன்றைக்குப் பெருமைமிகு வாழ்வு வாழ்பவர்கள், காலத்திற்கும் பெருமையோடு வாழ்வார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இன்றைக்கு நீங்கள் சொல்லும் நிலையில் இருக்கிறீர்கள். நான் கேட்கும் நிலையில் இருக்கிறேன், அவ்வளவுதான்.”

“ஏன், அந்த ஊமைத்துரை சிவத்தையாபோல எனது காவலில் இருந்து தப்பிக்கலாம் என்று பார்க்கிறாயா? நான் ஒன்றும் அந்த பாளையங்கோட்டை ஜெயில் சூப்பிரண்டு வாலர் போல வேதப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு அலைபவன் அல்ல. கம்பெனிக்கு எதிராக இந்தப் பகுதியில் சிறு புல்கூட முளைக்க முடியாது... சரி சொல்லு, இப்போது உன் அண்ணன், மகன்கள் பேரன்கள் எங்கிருக்கிறார்கள்?”

“எங்கள் பேரன்கள் மிகவும் சிறியவர்கள். பத்து வயது, பன்னிரண்டு வயது பாலகர்கள்.”

“ஆனால், அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லையே? எனக்குக் கிடைத்த தகவல்படி காளையார்கோயிலில் படுகொலை

செய்யப்பட்ட மேஜர் கிரே, கேப்டன் டாக்டர் இங்கிலீஷ், ஆகியோர் மரணத்தில் உங்களது பேரப்பிள்ளைகளின் பங்கு இருக்கிறது."

"இது அபாண்டம். நீங்கள் முழு விசாரணை நடத்தும்போது உண்மை வெளிப்படும்."

"சரி, அப்போது உண்மை வெளிப்படட்டும். உன் அண்ணன் பற்றியோ உன் குடும்பம் பற்றியோ நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். மற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லு. எனக்கு ஊமைத்துரை மீதுதான் கோபம் அதிகம். ஊமை பிடிபட்டால் உன்னை விடுதலை செய்ய முயற்சி செய்கிறேன்."

"கர்னல், எனக்கு அவர்களைப் பற்றி எதுவும் தெரியாது. எல்லாருடைய பெயரையும் தெரிந்து வைத்துள்ளீர்கள். உங்களுக்கு உதவி செய்வதற்கே அவதாரம் எடுத்த தொண்டைமானும், திருவிதாங்கூர் அரசர் பலராமரும், எட்டப்ப நாயக்கரும் உங்களுடன் இருக்கிறார்கள். என்னைவிட எங்களது நண்பர்களது நடமாட்டம் அவர்களுக்குத் தெரியும்."

"நான் உனக்கு ஏற்கனவே ஒரு வாய்ப்பு அளித்தேன். ஊமைத் துரையும் சிவத்தையாவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை விட்டு ஓடிவரும்போது அவர்கள் உன்னிடம்தான் வருவார்கள் என்று எனக்குத் தெரியும். அதைத் தெரிந்துதான் மிகுந்த மரியாதைக் கொடுத்து உனக்குக் கடிதம் எழுதினேன். உங்கள் சீமையில்தான் ஊமைத்துரையும், சிவத்தையாவும் இருக்கின்றனர். அவர்களை என்னிடம் ஒப்படையுங்கள் என்று நான் எழுதிய கடிதத் திற்குப் பதிலாவது போட்டாயா? கடிதம் கிடைத்ததுதானே?"

"கடிதம் கிடைத்தது."

"ஏன் பதில் போடவில்லை?"

"காலங்காலமாக ஊமைத்துரை மட்டுமல்ல, அவரது அண்ணன், அவரது அப்பாவோடும் நாங்கள் உறவுமுறையில் உள்ளோம். போரில் காயம்பட்டு அவர் எங்கள் பகுதிக்கு வந்தவுடன் மக்களே அவர்களை வரவேற்றார்கள்."

"மக்கள் மட்டுமா வரவேற்றார்கள்? கமுதிக்கு வந்து நீ அவர்களை வரவேற்கவில்லையா? அதைத் தெரிந்துதான் நான் நான்கு

நாட்கள் பாஞ்சாலங்குறிச்சியில் தங்கி என்னிடம் சிக்கியவர்களை தூக்கிலேற்றிவிட்டுத்தான் இங்கு வந்தேன். தொண்டைமானும் உன்னைப் போன்றவன்தானே? இரண்டு வருடங்களுக்கு முன்பு திருநெல்வேலி கலெக்டர் புதுக்கோட்டை தொண்டைமானுக்குச் சொந்தமான காளாப்பூர்க் காட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் இருப்பதாக அவருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. கம்பெனி, அவனைப் பிடித்துத் தாருங்கள் என்று சொன்னவுடன் தொண்டை மான் கட்டபொம்மனைப் பிடித்துத் தரவில்லையா? அது போன்று நீ ஏன் நடக்கவில்லை?"

"தொண்டைமான் செய்வதையெல்லாம் நான் செய்யமுடியாது."

"ஆம், நீ செய்வதையெல்லம் தொண்டைமான் செய்ய மாட்டார். இந்த நாள் மிக முக்கியமான நாள். இன்றுதான் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு இரண்டு வருடங்கள் முடிகிறது என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும், இன்று அக்டோபர் மாதம் **16**-ஆம் தேதி. கட்டபொம்மு அண்ணன் தூக்கிலிடப்பட்ட நாள். அவர் எனக்கு மட்டும் வேண்டியவரல்ல. இந்தப் பகுதியில் பலருக்கும் வேண்டியவர்."

"கட்டபொம்மன் பலருக்கும் வேண்டியவர் என்றால், பழமாநேரியில் அவர் உனது தூதுவர்களை மட்டும் ரகசியமாகச் சந்தித்தது ஏன்? மற்ற யாரையும் அவர் போய்ப் பார்க்கவில்லையே? பாஞ்சாலங்குறிச்சி ஜமீன்தாருக்கு நீ தொடர்ந்து உதவி செய்கிறாய் என்பது எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா? அதுவும் இல்லாமல் கட்டபொம்மன் பிடிபடுவதற்கு முன் உன் சீமையில் வந்து இருந்துவிட்டுத்தானே, உன் அறிவுரையின்படி தொண்டைமானின் ஆட்சிக்குட்பட்ட காளாப்பூர்க் காட்டிற்குள் ஓடி ஒளிந்தான்? கட்டபொம்மன்தான் உன்னைப்போலப் பலருக்கும் வேண்டியவன். அவன் தம்பி ஊமைத்துரையும் சிவத்தையாவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைவிட்டு தப்பி ஓடிவரும்போது அவர்களுக்குத் தெரிந்த பல நண்பர்களிடம் அவர்கள் அடைக்கலம் போயிருக்கலாமே? ஏன் நேராக கமுதிக்கு வந்தார்கள்? நீ ஏன் நேரடியாகச் சென்று அவர்களை வரவேற்றாய்?"

"நீங்கள் என்மீது குற்றம் சுமத்துவதால் நானும் பதில் சொல்லுகிறேன். கலெக்டர் லூஷிங்டன் சொன்னார் என்பதற்காக எங்களது

நண்பர் என்று நீங்கள் கருதும் மயிலப்பனை அபிராமத்தில் வைத்து கைது செய்தோமே? அவனது கலவரத்தை அடக்கினோமே?"

"அது உன் நாடகம். எங்களை உன்மீது சந்தேகப்படாமல் வைத்துக் கொள்ள நீ செய்த ஏமாற்று வேலை."

"நீங்கள் செய்தால் ராஜதந்திரம்... அதையே நாங்கள் செய்தால் அது நாடகமா?"

"எங்களை எதிர்த்தவர்கள் நிலையைப் பார்த்தாயல்லவா? ராமநாதபுரம் ரிபெல் சேதுபதி முத்துராமலிங்கம் இப்போது மெட்ராஸ் சிறையில் இருக்கிறார்."

"ஏன், உங்களை ஆதரித்தவர்களின் நிலைமையைச் சொல்ல மறந்துவிட்டீர்களே? ஆற்காடு நவாப், கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக ஆங்கிலேயர்களின் நண்பர். அவர் நிலை என்ன? அவர் இன்றைக்கு தனது மாளிகையிலேயே, சிறையில் இருப்பது போல இருந்து மரணமடைந்துவிட்டாரே? அவரது வாரிசுகள் உங்களுக்கு இன்றும்கூட நண்பர்களாகத் தொடர்ந்து இருக்கத் துடிப்பவர்கள். ஆனால் நீங்கள்..."

"மருது, அதிகமாகப் பேசுகிறாய். நான் யாரைப் பற்றி பேசுகிறேன். நீ யாரைப் பற்றி பேசுகிறாய்?"

"கர்னல் அக்னியூ, நானும் ஐரோப்பியர்களோடு பல காலமாக நெருங்கிப் பழகி வருகின்றவன்தான். உங்களை அறியாமலேயே எங்களையும் உங்களைப் போலவே பழக்கிவிட்டுவிட்டீர்கள். உங்களுக்கு ஒரு நேரத்தில் ஒரு எதிரி. அந்த எதிரியை முடித்தவுடன் அடுத்த எதிரி. இல்லையென்றால் உங்களோடு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நட்பு உறவாடிய ஆற்காடு நவாப்பின் வாரிசை நீங்கள் சென்ற மாதம் நடத்திய சிவகங்கை இஸ்திமிரார் பதவி ஏற்பு விழாவிற்கு ஒரு விருந்தினராகக்கூட அழைக்காமல் அவருக்குச் சொந்தமான சுபாவை நீங்களே படமாத்தூர் கௌரி வல்லபனுக்கு சன்னத் கொடுத்திருப்பீர்களா? எங்களைப் பிடித்துத் தருபவர்களுக்கும் எங்களைப் பற்றி வேவு சொல்லுபவர்களுக்கும் கவுல் கொடுத்தீர்களே? இந்தக் கவுல் வழங்கும் அதிகாரம் ஆற்காடு நவாப்பிடம்தானே இருக்கிறது. இந்த அதிகாரம் உங்களுக்கு மாறியது எப்போது?"

“ஓகோ, இதனால்தான் ஆற்காடு நவாப்பை உனது பிரகடனத்தில் ‘விதவை’ என்ற அழைத்தாயா?”

“தவறு கர்னல், அவரை அப்படிக்கூட அழைக்க முடியாது. விதவைகள்கூட யாருக்காவது பயன்படுவார்கள். இவர் அதற்கும் லாயக்கில்லை.”

“ஆற்காடு நவாப்மீது ரொம்பவும் கரிசனம் இருப்பதுபோல நீ காட்டிக்கொள்ள வேண்டாம். அவர் உயிரோடவாவது இருக்கப் போகிறாரே. உனக்கு அந்த வாய்ப்பாவது இருக்கிறதா?”

“கர்னல், மனிதன் வாழ்வதே மானத்திற்காகத்தான். நீங்கள் சொன்ன ஆற்காடு நவாப் அவர்களின் உதாரணத்தையே நானும் சொல்கிறேன். இவரைப் போன்ற ஒரு நவாப்தான் வங்காளத்தின் சிராஜ் உத் தவுலா. அரசனுக்குரிய மரியாதையைத் தர மறுத்த ஒரு ஆங்கிலேயக் கவர்னரை சிராஜ் உத் தவுலா சாட்டையால் அடிக்கவில்லையா? இதே ஆற்காடு நவாப் உம்தம் உல் உம்ராவினுடைய தகப்பனார் மரியாதைக்குரிய வாலாஜாவிற்கும் அவரது தகப்பனார் அன்வர்தீனுக்கும் உங்கள் கம்பெனி பயந்துகொண்டு குற்றறேவல் செய்யவில்லையா? அதுபோன்ற ஒரு நிலையிலா இப்போது ஆற்காடு நவாப் இருக்கிறார்? பார்க்கும் எல்லாரிடமும் கடன் வாங்க வைத்துவிட்டு அவரை நிரந்தரக் கடனாளியாக்கிவிட்டீர்கள். அவரோடு நெருங்கிய தொடர்பிலிருந்த ஆங்கிலேய வியாபாரி தாமஸ் பாரியைக் கைது செய்து சிறையில் அடைக்கப்போவதாக மிரட்டி, சிலோனுக்கு ஓட வைத்துவிட்டீர்கள்.”

“தாமஸ் பாரி எங்கள் நாட்டைச் சேர்ந்தவர். எங்கள் இனத்தவர். பதினேழு வயதில் மெட்ராசுக்கு வந்தவர். அவர் கெட்ட நேரம் நவாப்பிற்குக் கடன் கொடுத்தவர்களுக்கு ஜாமீன் கொடுத்திருக்கிறார். பணம் வரவில்லை என்று கடன் கொடுத்தவர்கள் ஜான் பாரியை நெருக்கியிருக்கிறார்கள். கடன் வாங்கிய ஆற்காடு நவாப்பும் பணம் திருப்பித் தரவில்லை. ஜாமீன் கையெழுத்துப் போட்ட ஜான் பாரியும் கடன் கொடுத்தவர்களுக்குப் பணம் தரவில்லை. வேறு வழி? நாங்கள் ஜான் பாரிமீது நடவடிக்கை எடுத்தோம்.”

“உங்கள் மதத்தில் சொல்லியிருப்பதாக மேஜர் வெல்ஷ் அடிக்கடி சொல்லுவார். என்னோடு இல்லாதவன் எனக்கு எதிரி என்று. அந்த வகையில் உங்களோடு இல்லாத ஜான் பாரி இப்போது உங்களுக்கு

எதிரியாகிவிட்டார். நவாப்பை இன்னும் கேவலமான நிலைக்கு விரைவில் கொண்டு வந்துவிடுவீர்கள்."

"தூக்கில் தொங்கப் போகிறாய் நீ."

"நீங்கள் அதைத்தான் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும். தூக்கு மரங்களில் இருந்துதான் சிவந்த இந்த சிவகங்கை மண்ணின் விடுதலைப் பூக்கள் பூக்கப் போகின்றன. என்னுடைய உடலைத்தான் உங்களால் தூக்குக் கயிற்றால் சிறை பிடிக்க முடியும். கம்பெனிக்கு எதிரான என்னுடைய எதிர்ப்புணர்ச்சி இந்த சிவகங்கைச் சீமை முழுக்க எதிரொலிக்கத்தான் செய்யும். எனவே, செய்யப்போவதை விரைவாகச் செய்யுங்கள்."

"உன்னைத் தனியாகத் தூக்கில் போட மாட்டேன். உன் அண்ணன், உங்கள் மகன்கள், உங்கள் பேரப்பிள்ளைகள் எல்லோரையும் தூக்கில் போடுகிறேன். பார்த்துக் கொண்டேயிரு" என்றான் கர்னல் அக்னியூ வன்மத்துடன்.

சின்ன மருது பதில் சொல்லவில்லை.

"இந்தத் திமிர் பிடித்தவனை இழுத்துச் சென்று அடைத்து வையுங்கள்" என்று கர்னல் அக்னியூ உறுமினான்.

சின்ன மருதுவைச் சிப்பாய்கள் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர்.

•

45

ஊமைத்துரையும், விருப்பாச்சி கோபால் நாயக்கர் மகன் முத்து வெள்ளை நாயக்கரும் கொட்டாம்பட்டி குளக்கரையில் சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதாக கர்னல் இன்ஸிற்கும், மேஜர் வெல்ஷிற்கும்

உளவாளிகள் தகவல் தந்தனர். அந்த இடத்திற்குத் தேடுதல் படை விரைந்தது. ஆனால் அதற்குள் அவர்கள் நத்தம் வழியாக விருப்பாச்சிக்கு விரைந்தனர். சிவத்தையாவும் அவர்களோடு சேர்ந்துகொண்டார்.

விருப்பாச்சியைச் சென்றடைந்த ஊமைத்துரையை முத்து வெள்ளை நாயக்கரின் உறவினர்கள் வரவேற்றனர். கோபால் நாயக்கர் ஆங்கிலேயர்களின் சிறைக்குப்போய் ஒரு வருடமாகிவிட்டது. அவர் இல்லாத நேரத்தில் அந்தப் பகுதி போராளிகளுக்கு, முத்து வெள்ளை நாயக்கரே தலைமையேற்றிருந்தார். சொந்தங்களைப் போலவே கோபால் நாயக்கரின் உடனான நட்பும் மிகவும் பலமானதாக இருக்கிறது என்பதற்கு வீரபாண்டிய கட்டபொம்மன், விருப்பாச்சி கோபால் நாயக்கர், மருது சகோதரர்களின் உதாரணங்களை சிவத்தையா நினைவு கூர்ந்தார்.

முத்து வெள்ளை நாயக்கர் சொன்னார். “எங்கள் நைனா கோபால் நாயக்கர் என்னை உறவினர்களின் வீட்டிற்குக்கூட அடிக்கடி அனுப்ப மாட்டார். நான் சிறு வயதில் அதிக நாட்கள் இருந்தது சிறுவயலில் மருது பாண்டியர்களின் அரண்மனையிலும், பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மு அரண்மனையிலும், காளையார்கோயில் காட்டிலும் தான். என் பெயரையே எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் ஊரில் வேலு நாச்சியார் தலைமையில் தலைமறைவு வாழ்க்கைக் நடத்திய வெள்ளை மருது சேர்வைக்காரரின் நட்பை நினைத்துதான் நைனா எனக்கு முத்து வெள்ளை என பெயர் வைத்தார்.”

விருப்பாச்சி வந்த மூவரும் மற்றப் போராளிகளின் பாதுகாப்புக் குறித்து ஆலோசித்தனர்.

“எப்படியும் இந்நேரம் சின்ன மருது கைது செய்யப்பட்டிருப்பார் என நினைக்கிறேன். இதுவரை நம்மை அவர் சிறையிலிருந்து விடுவித்திருக்கிறார். இந்த முறை நாம் உனது அப்பா கோபால் நாயக்கரையும் சின்ன மருதுவையும் சிறையிலிருந்து விடுவிப்போம்” என்றார் சிவத்தையா.

சந்திரப்பட்டிக்கு வந்த புரட்சியாளர்களை பெரும் கூட்டம் வரவேற்றது. எழுச்சியைக் கேள்விப்பட்ட திண்டுக்கல் கலெக்டர் டி.பி. ஹர்டிஸ்சும், கேப்டன் ஜோன்ஸும் சத்திரப்பட்டி விரைந்தனர். மூன்று போராளிகள்மீதும் நடவடிக்கை எடுக்க முடியாதபடி சத்திரப்பட்டி மக்கள் அவர்களைச் சுற்றி அரணாக நின்றனர். திண்டுக்கல் கலெக்டருக்கு கர்னல் அக்னியூ ஒரு கடிதம் அனுப்பினான்.

“கேப்டன் ஜோன்ஸ், உடனடியாக இந்த மூவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். காலதாமதம் செய்யும் ஒவ்வொரு மணித்துளியும் நமக்கு ஆபத்து. நேரம் கடந்தால் எதிராளிகள் ஆயுதங்களையும், ஆட்களையும் சேர்த்துக் கொண்டு வலிமையாகி விடுவார்கள். நான் திருச்சியிலிருந்து படைகளை அனுப்புகிறேன். அவர்களைக் கொண்டு உடனடியாக எதிரிகளை சத்திரப்பட்டியிலிருந்து விரட்டுங்கள். அவர்கள் நிச்சயம் திரும்பவும் காளையார்கோயில் காட்டிற்கு வரமாட்டார்கள். உங்களது நெருக்கடி அதிகமாக இருந்தால் அவர்கள் விருப்பாச்சிக் காடுகளுக்குள் ஓடுவார்கள் அல்லது ஆனைமலைக் காடுகளுக்குள் புகுந்து கொள் வார்கள். ஆனைமலைக் காட்டின் மேற்கே உள்ள பகுதிகளில் திருவிதாங்கூர்ப் படைகள் காவல் காக்கின்றன. அங்குப் போனாலும் ஆனைமலைக் காட்டைவிட்டு அவர்கள் வெளியேற முடியாது. ஆனைமலைக் காட்டிலோ அல்லது விருப்பாச்சிக் காட்டிலோ வைத்து அவர்கள் மூவரையும் முடிக்க வேண்டும்” என்று கடிதம் எழுதினான்.

கர்னல் அக்னியூவின் எதிர்பார்ப்பு தப்பாகிவிட்டது. ஊமைத் துரை, சிவத்தையா, வெள்ளை முத்து நாயக்கர் ஆகிய மூவரும் விருப்பாச்சிக் காடுகளுக்கோ, ஆனைமலை காடுகளுக்கோ செல் லாமல் ஆனைமலைக்கு அருகிலுள்ள தேளிக்குச் சென்றனர். தேளி யாதுல் நாயக்கர் ஆங்கிலேயப் படைகளால் விரட்டப்பட்ட போது ஏற்பட்ட மன உளைச்சலில் இறந்திருந்தார்.

ஆனைமலைக் காடுகளில் நெருங்கிய உறவினர்போல பழகிக் கொண்டிருந்த ஜமீன்தாரும் எண்பது வயது போராளியுமான தேளி யாதுல் நாயக்கர் உயிருடன் இல்லை. அவர் இல்லாத தேளியில் ஊமைத்துரை, சிவத்தையா, முத்து வெள்ளை நாயக்கர் ஆகிய மூவரும் பாளையத்தின் மக்களைச் சந்திக்க தேளி கிராமத்தின் சந்தைக்கு வந்தனர். சந்தைக்கு வந்தப் போராளிகளை ஊர் மக்கள் அடையாளம் கண்டு கொண்டு அவர்களை தேளி பாளையக்காரர் வீட்டிற்கு அழைத்துச்சென்றனர்.

தேளி பாளையத்தின் ஆளும் உரிமையை ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். கலெக்டரிடன் நேரடி மேற்பார்வையில் தேளி ஜமீனில் வரிவசூல் நடைபெற்றதால் யாதுல் நாயக்கர் அரண்மனையில் ஒரு வருடத்திற்கு முன்பிருந்த வசதியில்லை. நாயக்கரின் மனைவியும் உறவினர்களும் வராதவர்கள் வந்திருக்கிறார்களே என ஓடி வந்து வரவேற்றனர்.

மூவருக்கும் பெரும் விருந்து வைத்து மரியாதை செய்தனர். அந்த ஊரிலிருந்து ஆயிரம் வீரர்கள் மூன்று போராளிகளோடும் சேர்ந்தனர். தேளியில் ஒரு நாள் ஓய்விற்குப்பின் போராளிகள் வத்தலக்குண்டு கிளம்பினர்.

வத்தலக்குண்டில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயப் படை களைப் போராளிகள் தாக்கினர். எண்ணிக்கையிலும், ஆயுதங்களிலும் அதிக வலுவுடன் இருந்த ஆங்கிலேயர்கள் போராளிகளைச் சுற்றி வளைத்தனர். ஊமைத்துரையும், முத்து வெள்ளை நாயக்கரும் கைது செய்யப்பட்டனர். சிவத்தையா தப்பி ஓடினார். அவர் ஸ்ரீவில்லி புத்தூருக்குப் போய்ச் சேர நினைத்தார். அங்குதான் கேத்தரீனும், பாத்திமாவும் கோயில் குருக்கள் பாதுகாப்பில் இருந்தனர்.

கடைசி முயற்சியாக கேத்தரீன்மூலம் சின்ன மருதுவையும் மற்றப் போராளிகளையும் காப்பாற்ற முடியும் என்ற சிவத்தையா நம்பினார். ஊமைத்துரையோடு சேர்த்து அறுபத்து இரண்டு வீரர்களைக் கைது செய்த ஆங்கிலேயர்கள் அவர்களை எட்டயபுரம் வீரர்களிடம் ஒப்படைத்தனர்.

அந்தக் குழு ஊமைத்துரையைப் பாஞ்சாலங் குறிச்சிக்குப் பலத்த காவலுடன் அழைத்துச் சென்றது. ஊமைத்துரை பல முறை தப்பித்திருக்கிறார். சிறையில் இருந்து ஒருமுறையும், போர்க்களத்திலிருந்து பலமுறைகளும் அவர் தப்பியதை எட்டயபுரம் வீரர்கள் அறிவார்கள். இப்போது தங்கள் பாதுகாப்பில் விடப்பட்ட ஊமைத் துரையின் பாதுகாப்பைத் தங்களுக்கு விடுவிக்கப்பட்ட சவாலாக கருதினர். எப்படியாவது ஊமையை உச்சக்கட்ட பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதில் எட்டயபுரம் வீரர்கள் வன்மத்தோடு இருக்குமாறு ஆங்கி லேயர்கள் பார்த்துக்கொண்டனர். இன்னொரு ஆங்கிலப்படை முத்து வெள்ளை நாயக்கரை திருப்பத்தூர்க் கோட்டைக்கு கொண்டு வந்தது.

நாங்குனேரியிலிருந்து தளவாய்ப் பிள்ளை, ராமுத்தேவர் இருவரின் தலைமையில் போராளிகள் திரண்டனர். அவர்கள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி வந்தபோது பிடித்து பாளையங்கோட்டையில் அடைத்து வைத்தனர்.

எட்டயபுரம் வீரர்கள் ஊமைத்துரையை பாளையங்கோட்டை சிறைக்குக் கொண்டுவந்து சிறைப்படுத்தினர்.பாளையங்கோட்டை

யிலிருந்து தப்பித்த ஊமைத் துரை எட்டாவது மாதம் மீண்டும் அதே சிறைக்கு வந்து சேர்ந்தார்.

பெரிய மருது காளையார்கோயில் காட்டிலிருந்து தப்பி, திருப் புவனம், அல்லி நகரம், நாகூர், மடப்புரம் பகுதிகளில் சுற்றினார். பின்பு படமாத்தூர், சோழபுரம், பணக்குடி, ஓக்கூர் காடுகள் வழியாக திருக்கோஷ்டியூர் வந்து பழஞ்சோற்று குருநாதனேந்தல் வந்தார்.

ஒருமுறை வெள்ளைக்காரர்களுடன் யுத்தம் வந்தபோது இதே ஊருக்கு பெரிய மருது வந்திருக்கிறார். அப்போது பசி மயக்கத்திலிருந்த பெரிய மருதுவிற்கு ஒரு கிழவி பழைய சோறு கொடுத்து உபசரித்திருக்கிறாள்.

அவளுக்கு அந்தக் கிராமத்தையே மருது தானமாக வழங்கியிருந்தார். இப்பொழுது அந்தக் கிராமத்தில் சிறிது நேரம் தங்கினார். பின்பு அங்கிருந்து கிளம்பி மதகுபட்டிக் கனவாய்க்குப் பெரிய மருது வந்தபோது கர்னல் அக்னியூவிற்குத் தகவல் போயிற்று. தகவல் சொன்னவன் அதே கருத்தான்தான்.

பெரிய பாண்டியர் மதகுபட்டிக் கனவாய்க்கு அருகில் வந்து கொண்டிருக்கும்போது கருத்தான் பெரிய மருதுவை காட்டிக் கொடுத்தான். ஆங்கிலேயப் படை பெரிய மருதுவைச் சுற்றி வளைத்தது. பெரிய மருது இதை உணர்ந்தவுடன் வளரியை எடுத்தார். வளரி வீச்சில் வல்லவர். ஆனால் அவரால் கையைத் தூக்க முடியவில்லை. திடீரென பக்கவாதம் வந்துவிட்டது. அவரது உடல் செயலற்றுப் போனது.

ஆங்கிலேயப் படைகளால் கைது செய்யப்பட்ட பெரிய மருது வெளியாத்தூர்க் காட்டிலிருந்த அக்னியூவின் முகாமிற்குக் கொண்டு வரப்பட்டார். பெரிய மருதுவை மதகுபட்டிக்கருகில் உள்ள ஒக்கூரில் வைத்து கைது செய்ததாக கவர்னருக்கு அறிக்கைத் தயாரானது.

பக்கத்துக் காடுகளில் ஒளிந்திருந்த மருது சகோதரர்களின் மகன்களான முள்ளிக் குட்டித் தம்பி, கருத்த தம்பி, சிவஞானம், சிவத்த தம்பி, துரைசாமி, முத்துச்சாமி ஆகிய அனைவரையும் தொண்டைமானின் வீரர்கள் பிடித்தனர். அனைவரையும் திருமயம் கோட்டைக்குக் கொண்டு வந்தனர்.

•

46

கைது செய்யப்பட்ட பெரிய மருது பாண்டியரை வெளியாத்தூர் முகாமிற்கு ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த அன்று கர்னல் அக்னியூ மமதையின் உச்சத்திலிருந்தான். பெரிய மருதுவை அழைத்துவரும் சத்தம் கேட்டபோது கூடாரத்திற்கு வெளியில் வந்துகூடப் பார்க்க வில்லை. தகவல் சொல்லப்பட்டவுடன் "உள்ளே அழைத்து வா" என்றான். பெரிய மருது கர்னலின் கூடாரத்திற்கு உள்ளே நுழைந்ததும் அவர் கைகளை அவிழ்த்துவிடச் செய்தான். "உமக்குப் போதுமான எச்சரிக்கை கொடுத்தேன். உன்மீது எங்களுக்குப் பெரிய வெறுப்பு இல்லை. இப்போது பார்த்தாயா? உன்னைத் தூண்டிவிட்ட உன்தம்பி சின்ன மருதுவும் மாட்டிக் கொண்டான். அவனைக் கட்டுப்படுத்த தவறியதால் நீயும் உன் பிள்ளைகளும், பேரக்குழந்தைகளும் இப்போது மாட்டிக் கொண்டீர்கள்."

"நானும் என் தம்பியுமே இதற்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோம். என் மகன்களும் சின்ன மருதுவின் மகன்களும் எங்களது ஆணைப்படி நடந்தவர்கள். அவர்களை நீங்கள் குற்றம் சொல்ல வேண்டாம். எனது பேரன்கள் பாலகர்கள். எங்கள் மீதுள்ள கோபத்தில் சிறுவர்களைப் பழிவாங்காதீர்கள். அவர்கள் ஏதுமறியாதவர்கள்" என்றார்.

"உன்னைப் பற்றி நல்லவிதமாகவே நான் முன்பு கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று நீ பிடிபட்டபோதும் வளரியை வீசப் பார்த்தாயாமே? இரு இரு, இந்த ஆயுதத்தை வைத்துத்தானே ஆட்டம் போடுகிறீர்கள்? எல்லாவற்றையும் அழித்து விடுகிறேன். இனிமேல் ஒருவன் தலையெடுக்கக்கூடாது."

"அய்யா, நீங்கள் போரில் வென்றவர். உங்களுக்கு ஆள் பலம், பணம், அதிகாரம் எல்லாம் இருக்கிறது. நீங்கள் எது வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் இறைவன் இருக்கிறார். காலச்சக்கரமும் ஒரே மாதிரி சுத்தாது. கீழேயிருப்பது மேலே போகும். மேலே இருப்பதும் ஒரு நாள் கீழே வரும்."

"உன் தத்துவம் எல்லாம் எனக்குத் தேவையில்லை. தோத்துப் போனவன்தான் தத்துவம் பேசுவான். சொல்லு, ஊமைத்துரை, சிவத்தையா, முத்து வெள்ளை நாயக்கர் இவர்களை நீதான் பழனி விருப்பாச்சிக் காடுகளுக்கு அனுப்பியிருக்கிறாய். அவர்கள் இப்போது எங்கு இருக்கிறார்கள்?" என்றான்.

“யார் எங்கிருக்கிறார்கள் என்று எனக்கு எதுவும் தெரியாது.”

“நீ காடுகளில் சுற்றியபோது சிவகங்கை ராணி வேலு நாச்சியார் உன்னோடு இருந்தாரா?”

“காளையார்கோயிலில் எங்களது அரசர் முத்து வடுகநாதர் கொலை செய்யப்பட்ட நாலாவது நாளிலிருந்து ராணி வேலு நாச்சியார் விருப்பாச்சிக் காட்டில் எங்களோடு இருந்தார். மீண்டும் சிவகங்கை அரசை மீட்கும்வரை எட்டு வருடங்கள் அவர் எங்களோடு காட்டில்தான் இருந்தார்.”

“உனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு என்று சொல்கிறார்களே?”

“வேலு நாச்சியார் எனக்குத் தாய் போன்றவர். எங்களது அரசர் மேஜர் பான்ஜோரால் காளையார்கோயில் அரண்மனையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லங்குடி அரண்மனையிலிருந்த வேலு நாச்சியாரும் கைது செய்யப்படுவார் என்ற அச்சுறுத்தல் இருந்தது. சிவகங்கை அரசை மீண்டும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஆற்காடு நவாப் மிகவும் மும்முரமாக முயற்சி செய்த காலமது. வேலு நாச்சியார் சிவகங்கையிலிருந்து தப்பிக்க நினைத்தார். அப்போதைய தளவாய் தாண்டவராயப் பிள்ளை என்மீதும் என் தம்பி மீதும் மிகுந்த நம்பிக்கையுள்ளவர். அவர் எங்களை அழைத்து விவாதித்தார். நாங்கள் மூவரும் அடுத்தக் கட்ட நடவடிக்கைப் பற்றி பேசினோம். விருப்பாச்சி, பாதுகாப்பான இடம் என்று முடிவெடுத்து வேலு நாச்சியாரை விருப்பாச்சிக்கு அழைத்துச் சென்றோம்.”

“அப்போது அவருக்கு குழந்தையிருந்ததா?”

“ஆம். வெள்ளச்சி நாச்சியார் கைக் குழந்தையாக இருந்தார்.”

“அவர் தரப்பில் யார் யார் உங்களுடன் வந்தார்கள்?”

“அவரும், அரசரது உறவினனுமான சிறுவன் வெங்கம் பெரிய உடையணத் தேவரும் எங்களுடன் வந்தார்கள்”

“அந்த வெங்கம்தான் பின்னாளில் வேலு நாச்சியார் மகள் வெள்ளச்சியைத் திருமணம் செய்தவனா?”

“ஆம்.”

“விருப்பாச்சிக் காட்டில் இருக்கும்போது சிறுவனுக்கு என்ன வயது இருக்கும்?”

“அப்போது வெங்கம் பெரிய உடையணருக்கு நான்கைந்து வயது இருக்கும்.”

“வெள்ளச்சியை வெங்கம் பெரிய உடையணன் திருமணம் செய்து கொள்கிறார். வெள்ளச்சி இளம் வயதில் இறந்தபிறகு, வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு அவரின் மறவர் ஜாதியிலேயே ஏன் மறுமணம் செய்து வைக்கவில்லை? ஏன் உங்களின் அகம்படியார் ஜாதியில் திருமணம் செய்து கொண்டார்? உனது மகள் என்பதாலா?”

“எங்களுக்குள் பெரிய வேற்றுமையில்லை. அரச குலத்தைச் சேர்ந்த மறவர்கள் மற்ற உட்பிரிவுகளில் திருமணம் செய்து கொள்வதுண்டு. ராமநாதபுரம் சேதுபதி கிழவத் தேவர் மறவர் குலத்தைச் சேர்ந்தவர். அவர் காதலி என்கிற கள்ளர் குலப் பெண்ணைத் திருமணம் செய்து, அந்தப் பெண்ணுக்காக, கொடுத்ததுதான் புதுக்கோட்டை அரசு. இப்போது நீங்கள் ஏதோ இஸ்திமிரார் என்றொரு புதுப் பதவியில் அமர்த்தியிருக்கிற படமாத்தூர் கௌரி வல்லபரின் மனைவியரில் ஒருவர் அறந்தாங்கி ஆத்தாள். அவரும் கௌரி வல்லபரின் ஜாதியான மறவர் ஜாதியில்லை. அறந்தாங்கி ஆத்தாள் கள்ளர் ஜாதி. அகமுடையார் ஜாதியைச் சேர்ந்த கருப்பாயி உங்கள் நண்பர், படமாத்தூராரின் மனைவி. கிழவன் சேதுபதிக்கும், இப்போது சிறையில் இருக்கும் முத்துராமலிங்க சேதுபதிக்கும் அகம்படியார் குலத்தைச் சேர்ந்த மனைவிகள் உண்டு.”

“ராமநாதபுரத்தில் செம்பிய நாட்டு மறவர் குலத்தில் பிறந்த பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைதான் அரசாட்சிக்கு வர முடியும் என்று கேள்விப்பட்டேனே?”

“பொதுவாக இது நடப்பதுண்டு. ஆனால் வேற்று மதத்தைச் சேர்ந்த பெண்ணிற்குப் பிறந்த குழந்தைகளும் அரசராவது உண்டு. எங்களது அரசர் முத்துவடுகநாத தேவர், சசிவர்ணத் தேவரின் இரண்டாவது மனைவி பூதக்கார நாச்சியார் என்கிற மராத்திப் பெண்ணின் மகன்தான். மூன்று ஆண்டுகள் சேதுபதியாக இருந்த பவானி சங்கரன் கிழவன் சேதுபதியின் மராத்திய மனைவிக்குப் பிறந்தவன்.”

“உனக்கு எத்தனை மனைவிகள்? எத்தனை குழந்தைகள்?”

“ஐந்து மனைவிகள். மூத்த மனைவி ராக்காத்தாள். இவருக்கு நான்கு மகன்கள். மூத்தவன் குடைக் காதுடையார், அடுத்தவன் முத்துச்சாமி, உடையணன், முள்ளிக்குட்டிசாமி. இரண்டாவது மனைவி கருப்பாயி ஆத்தாள். இவருக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும்.”

“அவர்கள் பெயர்?”

“மூத்த மகள் காந்தேறி ஆத்தாள், இரண்டாவது மகள் மருதாத்தாள். மகனை கருத்துடையான்னு கூப்பிடுவோம். இவனை சிலர் கருத்த தம்பி என்றும் சிலர் கருத்த பாண்டியன் என்றும் ஏதாவது ஒரு பேரில் கூப்பிடுவார்கள்.”

“இந்த மனைவிக்குப் பிறந்த இரண்டாவது மகள் மருதாத்தாள் முக்கியமான ஆளாகத் தெரிகிறதே? மருதாத்தாளின் கணவர்தான் வெங்கம் பெரிய உடையணத் தேவனா?”

“ஆம்.”

“சரி, மூன்றாவது மனைவி?”

“பொன்னாத்தாள். அவளுக்குக் குழந்தையில்லை.”

“நான்காவது மனைவி?”

“ஆனந்தாயி ஆத்தாள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து சிறு வயதிலேயே இறந்துவிட்டது.”

“ஐந்தாவது மனைவி?”

“மீனாட்சி. கவண்டன் கோட்டையில் இருக்கிறார். அவளுக்கு ஒரு பையனும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். மகன் பெயர் கவண்டன் கோட்டைத் துரை, இவன் இறந்துவிட்டான். மகள் பெயர் தங்கம். இந்தப் பெண்ணைப் பெரிய தங்கம் என்றும் சொல்லுவார்கள்.”

“வேலு நாச்சியாருக்கும் உனக்கும் என்ன உறவு?

“அய்யா, எத்தனை முறை கேட்டாலும், எப்படிக் கேட்டாலும் என்னுடைய பதில் ஒன்றுதான்.”

“சம்பந்தமில்லாத நபர்களுக்குள் தாய் மகன், அக்கா, தம்பி உறவு இருக்க வாய்ப்பில்லை.”

“ஏன் இருக்கக் கூடாது? உங்களுக்குத் தெரியாது என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.”

“எல்லோரும் உங்களுக்குள் தவறான உறவு இருப்பதாகப் பேசுகிறார்களே?”

“நாச்சியார் அரசாட்சி செய்தவர். துணையற்றவர். கட்டுக் கதைகளுக்குச் சொல்லவா வேண்டும்?”

“சரி, எதற்கு எல்லோருக்காகவும் நீ பேசுகிறாய்? இது போன்ற புகார்களில் எல்லாமே பொய்யாகத்தான் இருக்குமோ?”

“உண்மையும் இருக்கும். ஆனால் எங்கள் விசயத்தில் உண்மை இல்லை. அப்படி உண்மை இருந்திருந்தால் என் தம்பியே என்னிடம் இவ்வாறு பணிவாக இருக்க மாட்டான். எங்கள் அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் என் மகளைக் கட்டியிருக்க மாட்டார்.”

“சரி, நீயும் உன் தம்பியும் எப்படிச் சிவகங்கையின் ஆட்சியாளர்களாக மாறினீர்கள்?”

“நிச்சயமாக, நீங்கள் இப்போது மாறிக் கொண்டிருப்பதுபோல அல்ல...”

“உன் கேலிப் பேச்சு வேண்டியதில்லை. நேரடியாகப் பதில் கூறு. உனக்கும் உன் தம்பிக்கும் சிவகங்கை அரசிற்கும் என்ன சம்பந்தம்?”

“நாங்கள் சிவகங்கையின் ஆட்சியாளர்கள் அல்ல. நான் சிவகங்கை அரசின் மந்திரி பிரதானி. என் தம்பி சிவகங்கை அரசின் அமைச்சன், தளபதி.”

“வேலு நாச்சியாரை நீ மணந்திருந்ததாகக் கூறப்படுகிறதே?”

“அய்யா, அடிக்கடி இந்தக் கேள்வி கேட்டு என்னைக் கொச்சைப்படுத்தாதீர்கள். தாயைப் போன்றவரை மனைவி என்று சொல்வது பெரும் பாவம்.”

“அப்படியென்றால் கலெக்டர் லூஷிங்டன் சென்ற ஆறு மாதத்திற்கு முன்பு உன்னிடம் ஒரு கேள்வி கேட்டார். நீ எப்படி சிவங்கைக்கு ஆட்சியாளனாக மாறினாய் என்று அவர் கேட்டதற்கு நீ இந்தப் பதிலை சொல்லியிருக்கலாமே?”

“எட்டாண்டுகள் வன வாசத்திற்குப் பிறகு, வேலு நாச்சியார் சிவகங்கையைக் கைப்பற்றி, ராணியாக முடிசூட்டிக் கொண்டார். சிவகங்கை ராணியாகிய மூன்றாவது ஆண்டில் ஆற்காடு நவாப்பின் சார்பாக கர்னல் புல்லட்டன் சிவகங்கைமீது படையெடுத்தார்.

இந்தச் சமயத்தில் வேலு நாச்சியார் சார்பாக நானும் என் தம்பியும்தான் போரைச் சமாளித்தோம். அடுத்த ஆண்டில் தொண்டைமானோடு எல்லைப் போர் நடந்தது. அதற்கடுத்த ஆண்டு கர்னல் ஸ்டூவர்டு சிவகங்கை மீது அடுத்தடுத்து படையெடுத்தார். கொல்லங்குடி, இரணமங்கலக்கோட்டை, காளையார்கோயில் ஆகிய இடங் களில் ஆங்கிலேயர்களோடு போர் நடந்தது. இதில் நாங்கள் காளையார்கோயிலை ஆங்கிலேயரிடம் தோற்றிருந்தாலும், இரண்டே மாதங்களில் கர்னல் மார்டினிடமிருந்து காளையார் கோயில் கோட்டையைத் திரும்பக் கைப்பற்றினோம். மூன்று ஆண்டுகள் கழித்துப் புதுக்கோட்டை தொண்டைமானுடன் எல்லைப் பிரச்சனை காரணமாக மீண்டும் போர் மூண்டது.

ராமநாதபுரம் அரசும் எங்கள் மீது போர் தொடுத்தது. முத்துராம லிங்க சேதுபதியின் படைகள் படமாத்தூர் கௌரி வல்லபர் தலைமையில் சிவகங்கை நோக்கி வந்தன. ஆனந்தூர், பரமக்குடியில் போர் நடந்தது.”

“அதில்தான் உங்களது மகன்களை இழந்தீர்களா?”

“ஆம், குடைக்காது உடையாரும் கவண்டன் கோட்டைத் துரையும் ஆனந்தூர்ப் போரில்தான் இறந்தார்கள். நான் சொன்ன இந்தப் போர்களில் எல்லாம் நாங்கள், ஒன்று வென்றிருக்கிறோம் அல்லது சமாதானமாகப் போயிருக்கிறோம். அதனால் வேலு நாச்சியார் எங்களை முழுமையாக நம்பினார். அவருக்கு விசுவாசமாக இருந்தோம்.”

“உங்கள் மகள் மருதாயியை வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு இரண்டாம்தாரமாக மணம் முடித்தது வேலு நாச்சியாருக்குப் பிடிக்கவில்லையா?”

“வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு வேலு நாச்சியார் மகள் வெள்ளச்சியைத்தான் திருமணம் செய்திருந்தோம். வெள்ளச்சி உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார். வெங்கம் பெரிய உடையணத் தேவர் இளைஞர். அவருக்குப் பெண் துணை தேவை என்பதால் வேலு நாச்சியார்தான் என் மகளைப் பெண் கேட்டு, வெங்கத்திற்குக்

கட்டிவைத்தார். வேலு நாச்சியாருக்கு வெங்கம் பெரிய உடையணத் தேவர் மருமகன் என்றாலும் அவரைத் தன் சொந்த மகன் போலத்தான் வேலுநாச்சியார் பார்த்துக் கொள்வார். வெங்கம் பெரிய உடையணத் தேவரும் வேலு நாச்சியாருக்குப் பிடிக்காத எதையும் செய்ய மாட்டார். என் வீட்டில் பெண் எடுப்பது வேலு நாச்சியாருக்குப் பிடிக்காது என்றால் கட்டாயம் வெங்கம் என் வீட்டில் திருமணம் செய்திருக்க மாட்டார்."

"சரி, வேலு நாச்சியார் எப்போது இறந்தார்? எங்கு இறந்தார்?"

"வெள்ளச்சி இறந்து மூன்று ஆண்டுகள் கழித்து விருப்பாச்சியில் அவர் இறந்தார்."

"விருப்பாச்சிக்கு அவர் ஏன் சென்றார்? உங்களோடு ஏதும் தகராறா?"

"நிச்சயம் இல்லை. விருப்பாச்சி கோபால் நாயக்கர் வேலு நாச்சியாருக்குத் தகப்பன் போன்றவர். நாச்சியாரின் துன்பமான காலங்களில் உதவியவர். வேலு நாச்சியாருக்கு மகள் இறந்த துயரம், பேரக் குழந்தைகள் இல்லாத வெறுமை. அதன் காரணமாக அடிக்கடி பழனிக் கோயிலுக்கு செல்வார். அதுபோலப் பழனிக் கோயிலுக்குச் சென்றுவிட்டு விருப்பாச்சியில் தங்கியிருந்தபோது இறந்துவிட்டார்."

"நீங்கள் சொல்வது உண்மையில்லை. உங்களுக்கும் வேலு நாச்சியாருக்கும் சுமூகமான உறவிருந்தால் அவர் ஏன் கவர்னருக்கு உங்கள்மீது புகார் செய்ய வேண்டும்?"

"நீங்கள் அவர் புகார் எழுதிய கடிதத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள். தனது வெறுமையான வாழ்க்கைப் பற்றி அவர் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்காரே தவிர அது எங்களைப் பற்றிய புகார் கடிதம் அல்ல. உறவுகள் இன்றி தனித்துவிடப்பட்ட பெண் அவர். வாழ்நாளில் பாதியைக் காடுகளிலும் மலைகளிலும் கழித்தவர். இப்படிப்பட்டவர் உணர்ச்சிபூர்வமாகத்தான் எதையும் செய்வார் என்பது புரிந்து கொள்ளக்கூடியதுதானே?"

"ரொம்பவும் விவரமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு பேசுகிறாய்."

"கர்னல் அக்னியூ, என்னை நீங்கள் இத்தனை கேள்வி கேட்டீர்கள். நான் உங்களை ஒரே கேள்வி மட்டும் கேட்கிறேன். எனக்கும்

என் தம்பிக்கும் சிவகங்கை அரசில் எந்த உரிமையும் இல்லை என்று இப்போது சொல்லும் நீங்கள், வேலு நாச்சியார் இறந்த இந்த நான்கு ஆண்டுகளில் ஒருமுறையாவது எங்களை நீங்கள் இந்தக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்களா?"

"அப்போதுதான் வெள்ளச்சியின் கணவன் வெங்கம் பெரிய உடையணத் தேவர் அரசராக இருந்தாரே?"

"அவரை அரசராக ஏற்றுக் கொள்ளுவதாக இப்போது சொல்லுகிறீர்கள். பின்பு எங்களை மட்டும் ஏன் மந்திரிப் பிரதானியாகவும், தளபதியாகவும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்?"

"அவர் அரசராக இருந்தாலும் முழு அதிகாரம் உங்களிடம்தான் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அதிலும் உன்னை இயக்கியது உன் தம்பி சின்ன மருது என்பதும் எனக்குத் தெரியும்."

"என் தம்பி என்னை இயக்குவதில்லை. அண்ணன் தம்பி பாசத்தை விளக்க முடியாது. அனுபவிக்கத்தான் முடியும். ஏன், உங்கள் கல்கத்தா கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்ஸியும் மைசூர் பகுதி தளபதி கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லியும் இணைந்து பணியாற்றவில்லையா? வெல்லெஸ்லியின் இன்னொரு தம்பி ஹென்றி வெல்லெஸ்லி, கவர்னர் ஜெனரலுக்கு தனிச் செயலாளராக இருக்கிறாரே? திப்பு சுல்தான் இறந்த பிறகு அவர் கொல்லப்பட்ட சூழலை லண்டன் சென்று விளக்கினாரே ஹென்றி வெல்லெஸ்லி? அவர்கள் மூவரும் அண்ணன் தம்பிகள்தானே? கர்னல் ஆர்தரும், ஹென்றி வெல்லெஸ்லியும் அண்ணன் வெல்லெஸ்லியை இயக்குகிறார்கள் என்று சொல்வீர்களா?"

தனது கவர்னர் ஜெனரலையும் அவரது தனிச் செயலாளரையும் திப்பு சுல்தானின் கதையை முடித்து வைத்த ஆர்தர் வெல்லெஸ்ஸியும் தன்னோடும் தன் தம்பியோடும் ஒப்பிட்டு வாயை அடைத்த மருதுமீது கர்னல் அக்னியூவிற்குக் கோபம் வந்தது. எல்லாம் தெரிந்த மாதிரி பேசுகிறானா என மனதிற்குள் கறுவினான்.

"இவனை இழுத்துச் சென்று அடையுங்கள்" என்றான் கர்னல் அக்னியூ.

"கர்னல் அக்னியூ, உங்கள் முன்னாள் நண்பர் ஆற்காடு நவாப், புதுக்கோட்டைத் தொண்டைமான், திருவிதாங்கூர் அரசர், எட்டப்ப நாயக்கர் ஆகியோர் உங்களின் இன்றைய நண்பர்கள். படமாத்தூர் கௌரி

வல்லபர், கருத்தான், கலீல் இவர்களை என் காலத்தில் வாழும் ஆட்கள் பொறுத்துக் கொள்கிறோம். வருங்காலம் இவர்களை மன்னிக்காது. உங்களையும்தான்."

"உன் சாபம் எல்லாம் செல்லாது. நீ கிளம்பலாம்" என்றான் கர்னல்.

•

47

அக்டோபர் **24,1801**

அது ஒரு துக்கமான சனிக்கிழமை. கைது செய்யப்பட்ட அனைத்துப் போராளிகளையும் திருப்பத்தூர்க் கோட்டைக்கு கர்னல் அக்னியூ கொண்டு வரச் செய்து, போராளிகள் எந்த எந்தப் பகுதிகளில் பிரபலமாகயிருந்தார்களோ அந்தப் பகுதிகளுக்கு அவர்களை பலத்த காவலுடன் அனுப்பினான். பெரிய மருதுவையும், சின்ன மருதுவையும் வெளியாத்தூர் முகாமிலிருந்து திருப்பத்தூர்க்கு கொண்டு வந்தார்கள். திருப்பத்தூர்க் கோட்டையில் பெரிய மருது, சின்ன மருது, சிவத்த தம்பி, சிவத்த தம்பியின் மகன் பன்னிரண்டு வயது முத்துச்சாமி ஆகியோருடன் சேர்த்து ஐநூறுக்கும் மேற்பட்ட போராளிகள் கைகள் பிணைக்கப்பட்டுக்

கொண்டுவரப்பட்டனர். கோட்டைக்குள் பனைமரங்களை வெட்டி நட்டு வைத்திருந்தனர். சின்ன மருது தப்பித்துவிடுவார் என்பதற்காகக் கர்னல் அக்னியூ அவருக்கு மட்டும் ஒரு கூண்டு செய்ய உத்தரவிட்டான். அதில் அவரை அடைத்துக் கூண்டை இழுத்து வரச்செய்தான்.

வெள்ளிக்குறிச்சி முகாமிலிருந்த பனை ஓலைக்குடிசையில் பெரிய மருது சேர்வைக்காரரை கைதியாக வைத்திருந்தனர். ஆறு நாட்கள் சிறையில் இருந்த பெரிய மருதுவிடம் ஊமைத்துரை, முத்து வெள்ளை நாயக்கர், மயிலப்பன் போன்றவர்களின் ஆதரவாளர்கள் இருப்பிடம் பற்றிக் கேள்விகள் கேட்டு ஆங்கிலேயத் தளபதிகள் தொந்தரவு செய்தனர்.

“காளையார்கோயில் காட்டிற்குள் இருக்கும்வரை தான் எங்களுக்குள் செய்தித் தொடர்பு இருந்தது. நீங்கள் சொல்லும் ஆட்களைத் தெரியும். அவர்களது ஆதரவாளர்கள் பற்றித் தெரியாதக் காட்டை விட்டு வெளியேறும்போது என்ன செய்யப்போகிறோம் என்ற திட்டமிடல் ஏதும் எங்களிடம் இல்லை. அவரவர்களுக்குத் தோதான வழிகளில் காட்டைவிட்டு வெளியேறினோம். நீங்கள் எத்தனை முறை எப்படிக் கேட்டாலும் இந்தப் பதில் தான்” என்றார் பெரிய மருது.

வெள்ளிக்குறிச்சி முகாமில் பெரிய மருதுவை வைத்திருந்த கூடாரத்திற்கு அடுத்திருந்த பனை ஓலைக்குடிசையில் சின்ன மருது, சிறை வைக்கப்பட்டிருந்தார். அண்ணனிடம் விசாரணை நடப்பது அவருக்குக் காதில் விழும் அளவு நெருங்கிய தூரத்தில்தான் அவரை வைத்திருந்தனர். விசாரணை என்ற பெயரில் அண்ணன் படும் பாட்டை நினைத்து சின்ன மருது மருகினார். சின்ன மருதுவின் இடது காலில் பெரும் காயம்பட்டிருந்தது. வலது காலில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. இரு கைகளையும் இணைத்து நீளமான சங்கிலி போடப்பட்டிருந்தது. காயத்தின் வேதனையோடு, தினந்தோறும் யார் யார் பிடிபட்டார்கள் என்ற செய்தி தனக்குக் குரூரமான முறையில் சொல்லப்பட்டதையும், சின்ன மருது எவ்வித உணர்ச்சியும் வெளிக்காட்டாமல் பொறுத்துக் கொண்டார்.

“நொங்கு தின்னவன் தப்பிச்சிட்டானாம். நோண்டித் தின்னவன் பிடிபட்டானாம். அந்த மாதிரி பாளையங்கோட்டை ஜெயில்ல இருந்து தப்பிச்சவன் இன்னும் மாட்டல. ஆனா அவனுங்கள ஜெயில உடைச்சு காப்பாத்துனவங்க மாட்டிக்கிட்டாங்க.”

“சிவகங்கை அரசராம், பெரிய அரசர். இப்ப அடச்சு வச்சிருக்கோம்ல. அவனுங்க காளையார்கோயில்ல அடச்சு வச்ச கௌரி வல்லபத் தேவர் இப்ப சிவகங்கைக்கு ராஜா. ஜெயில்ல போட்டவன ஜெயில்ல போட்டோம். ஜெயில்ல இருந்தவன ராஜா வாக்கிட்டோம்.”

“இந்த சிவகங்கைக்காரனுங்களுக்கு கெட்ட நேரம் கொட்டுச் சத்தத்தோடும், குலவைச் சத்தத்தோடும் வந்துச்சுடா. சிவத்தையாவையும் ஊமைத்துரையையும் கமுதியிலயும், சிறு வயல்லையும் கொட்டடிச்சு குலவை போட்டு வரவேத்தீங்க. இப்ப படுங்கடா.”

முகாமிற்கு வெளியே இப்படி அடிக்கடி பேச்சுச் சத்தம் கேட்கும். பாதுகாப்பு மிகுந்த பகுதியில் அதுவும் கர்னல் அக்னியூ தங்கியுள்ள இந்தத் தற்காலிக முகாம் பகுதியில் இவ்வாறு யாரும் பேச முடியாது. இப்போது பேசுகிறார்கள் என்றால் அது கர்னல் அக்னியூவின் உத்தரவின்பேரில் தான் என மருது சகோதரர்கள் புரிந்து கொண்டனர். அண்ணன் தம்பிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியாது. ஆனால் ஒருவர் குடிசையின் பாதுகாப்பில் இருக்கும் வீரர்கள் பேசும் பேச்சுச் சத்தம் அடுத்தவர் குடிசைக்கு கேட்கும். வெள்ளிக்கிழமை மதியம் வரை யார் யார் பிடிபட்டார்கள் என்ற செய்திகளை மருது சகோதரர்களுக்குத் தெரியுமாறு கர்னல் அக்னியூ பார்த்துக் கொண்டான். வெள்ளிக்கிழமை காலையில் தளபதிகளை தனது முகாமிற்கு வரவழைத்தான். மேஜர் வெல்ஷை மட்டும் அழைக்கவில்லை. மேஜர் மெக்காலேவை தனக்குப் பக்கத்தில் அமர வைத்துக்கொண்டான். திருமயம் கோட்டை, திருப்பத்தூர்க் கோட்டை, பிரான்மலை கோட்டை, வெளியாத்தூர் தற்காலிக முகாம், காளையார்கோயில், கமுதிக் கோட்டை தளபதிகளின் பாதுகாப்பில் உள்ள போராளிகளின் பெயர், எண்ணிக்கையைச் சரிபார்த்தான். ஒவ்வொருவர் உடல்நிலை பற்றியும் விசாரித்தான்.

திருமயம் தளபதி எழுந்தான். “கர்னல், என்னிடம்தான் அதிகமான சிறைவாசிகள் இருக்கின்றனர். இதுவரை முன்னூத்தி அம்பத்து ஏழு பேர். தினமும் நாற்பது, அம்பது பேர்களை நம் தளபதிகள் அங்கு அனுப்புகிறார்கள். இடவசதி போதவில்லை.”

மேஜர் மெக்காலே இடைமறித்தான்.

“கர்னல், உங்களது கோட்டைதான் இந்தப் பகுதியிலேயே பெரியது. நமது நண்பர் தொண்டைமானின் கோட்டை அது. உணவுப்

பொருட்கள் தருவதற்குத் தொண்டைமான் இருக்கிறார். உங்களுக்கு என்ன பிரச்சனை."

"மேஜர், சாப்பாடு பிரச்சனையில்லை. மற்றபடி குடிதண்ணீர், கழிப்பிடம்?"

கர்னல் அக்னியூ ஏதாவது பதில் சொல்வான் என மேஜர் மெக்காலே அவனைப் பார்த்தான். கர்னல் அக்னியூ பதில் சொல்லவில்லை. கர்னல் அக்னியூ தனக்கும், திருமயம் கோட்டைப் பிரச்சனைக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல முகத்தை வைத்துக் கொண்டான்.

திருப்பத்தூர்க் கோட்டைத் தளபதியை கர்னல் அக்னியூ பார்த்தான்.

"கர்னல் ஸ்பிரே. உங்கள் கோட்டைக்குள் பனைமரங்கள் அதிகம். உயரமில்லாதப் பனைமரங்கள் எனக்குத் தேவை. ஒரு நூறு பனைமரங்கள். ஆளை தூக்கில் போடும் அளவு இருக்க வேண்டும். திருப்பத்தூர்க் கோட்டையில் இருக்கும் குட்டையான பனைமரங்கள் எண்ணிக்கை ஐம்பது மட்டுமே. வெட்டப்பட்ட ஐம்பது குட்டை பனைமரங்களை கோட்டைக்குள் இன்று இரவுக்குள் கொண்டுவந்து நட்டுவைக்க வேண்டும். தூக்கிலிடத் தேவையான வலுவான கயிறுகளும் இருக்க வேண்டும்."

"எத்தனைப் பேரை தூக்கில் போடுகிறோம் கர்னல்? நம்மிடம் அறுநூறு பேர்கள் கைதிகளாக வெவ்வேறு கோட்டைகளில் இருக்கிறார்கள்."

"ஆம், கர்னல் ஸ்பிரே. இப்போது ஐநூறு பேருக்கு ஏற்பாடு செய்யுங்கள். மீதி ஆட்களை மலாயாவிற்கு நாடு கடத்துவோம்."

"கர்னல் அக்னியூ, நீங்கள் இந்தப் படையின் முழு அதிகாரம் பெற்ற தளபதி. போரை நடத்துவதற்கும், முடித்து வைப்பதற்கும் அதிகாரம் பெற்றவர். நாடு கடத்துவதற்குக் கவர்னர் ஜெனரல் ஒப்புதல் கொடுத்துவிட்டாரா? இதுவரை இதுபோன்ற நாடு கடத்தல் நடந்ததில்லை என்பதால் கேட்கிறேன்."

"யெஸ் மேஜர் மெக்காலே, இதுதான் முதன்முறை. முதன்முறையாக இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்படும் ஆட்கள்

இவர்கள்தான். இதற்கான முழு அதிகாரம் எனக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அது குறித்து நீங்கள் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டாம். நான் சொல்வதைக் கேட்டால் போதும்" என்றான். தளபதிகள் முகத்தில் சோகம். மேஜர் மெக்காலே நல்ல மனிதர். அவரை அக்னியூ முகத்தில் அடித்தால்போல் பேசியதை யாரும் விரும்பவில்லை. பொறுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியும் அவர்களுக்கு இல்லை.

கர்னல் அக்னியூ தான் அதிகமாகப் பேசிவிட்டதாக உணர்ந்தான். நிலைமையை இயல்பாக்க நினைத்தான்.

"கர்னல் மெக்காலே, தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். எட்டு மாதம் இந்தப் போர் வாழ்க்கை. மிக நீண்ட போர் நடத்தியிருக்கிறோம். மனித ரத்தம் நம்மில் இருக்கும் மிருகத்தை பெரிதாக வளர வைத்துவிட்டது. சிரிப்பு, கேளிக்கை, அன்பு, எல்லாம் வடிந்து போய்விட்டது. எப்போது இந்தப் பிரச்சனை முடியும்? என காத்திருக்கிறோம். நமக்கும் குடும்பம் இருக்கிறது. இந்த மருது பயல்களைப் போல நாம் என்ன எதிர்காலம் பற்றி கவலையில்லாதவர்களா? இந்த ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வரப்போகிறேன். அதற்காகத் தான் இந்தக் கூட்டம்" என்றான்.

தளபதிகளுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது. கர்னல் அக்னியூ உருவாக்கிய அசாதாரணச் சூழலை அவனே சரிசெய்ய விழைகிறான் எனத் தெரிந்துகொண்டனர்.

"நான் சொல்லப்போவது மிகவும் ரகசியமான செய்தி. கவனமாகக் கேளுங்கள். நான் சொல்லி முடித்த பிறகு சந்தேகம் இருந்தால் கேளுங்கள். கோபப்பட மாட்டேன்."

தளபதிகள் சிரித்தனர்.

"மேஜர் மெக்காலே, நீங்கள்தான் பாஞ்சாலங்குறிச்சிப் போரின் ஆரம்ப காலத்தில் நமது துருப்புகளுக்குத் தலைமைத் தளபதி. உங்களுக்குப் பின்பு நான் பொறுப்பு ஏற்றேன். இதுவரை நீங்கள் எனக்குக் கட்டுப்பட்டு, ஒத்துழைப்புத் தருகிறீர்கள். இந்தக் குணம் யாரிடமும் இருக்காது. அந்த வகையில் உங்களை நான் பெரிதும் மதிக்கிறேன்.

"இதுதான் நீங்கள் சொல்ல வந்த ரகசியமான செய்தியா கர்னல் அக்னியூ? இதில் இருக்கும் சந்தேகங்களைக் கேட்கலாமா?" என்று கேட்டு மேஜர் மெக்காலே சிரித்தார்.

“மேஜர் மெக்காலே, உங்களுக்கு நகைச்சுவை உணர்வு கூடிக்கொண்டு வருகிறது. நீங்கள் கொடுத்த பாளையங்கோட்டை நடன விருந்துதான் இந்தப் பிரச்சனைக்கு முதல் புள்ளி. அன்று காணாமல் போன ஜெயிலர் மனைவி கேத்தரீன், அவளுடன் சென்ற பாத்திமா என இவர்கள் இருவரையும் இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை. புலி வேட்டையாடிவிட்டுப் பின்பு மான்களைத் தேடுவோம்” என்றான்.

“கர்னல் அக்னியூ, நீங்கள் வெற்றி வீரர். சிறந்த தளபதி. சிலோனில் உங்கள் வீரத்தை நிரூபித்தவர். ஜெனரல் ஹாரிசிடமும், முன்னாள் கவர்னர் ஜெனரல் காரன் வாலிசிடமும், கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லியிடமும் உதவியாளராக இருந்தவர். உங்களது போர்த்திறமையை மீறி இப்போது கவிதையும் வெளிக் கிளம்புகிறது. நீங்கள் சொல்லியபடி என் பண்ணை வீட்டில்தான் இந்தப் பிரச்சனை ஆரம்பித்தது. உள்காயமாக இருந்த இந்தப் பிரச்சனையின் பரிமாணத்தை வெளிக்கொண்டு வர என் பண்ணை வீட்டில் நடந்த விருந்து உதவியது குறித்து மகிழ்கிறேன். பெரும் போராளிகளை, போராட்டத்தை வழி நடத்தியவர்களைக் கைது செய்துவிட்டோம். திண்டுக்கல் பகுதியில் சுற்றித் திரியும் ஊமைத்துரை, சிவத்தையா, முத்து வெள்ளை நாயக்கன், தஞ்சாவூர்ப் பகுதியில் சுற்றித் திரியும் மயிலப்பன், புதிய சேதுபதி என்று சொல்லிக் கொள்ளும் முத்துக்கருப்பத் தேவர் போன்றவர்களை கர்னல் அக்னியூ விரைவில் கைது செய்ய வேண்டும் என ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.”

“மேஜர் மெக்காலே, சரியாகச் சொன்னீர்கள். நம் திறமையை மீறி கடவுளின் ஆசிர்வாதமும் நமக்குத் தேவைப்படுகிறது. நம் தளபதிகள் அனைவருக்கும் தெரிந்ததுதான். இந்தக் கடுமையான போர்க்காலத்தில் கூட நாம் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைகளை நிறுத்தவில்லை. ஒவ்வொரு நாள் போருக்குக் கிளம்பும் முன்னும் பாதிரியாரால் ஆசீர்வதிக்கப்பட்ட பின்னே கிளம்புகிறோம். அந்த வகையில் நமது போர்ட் ஆப் டைரக்டர்களுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி. நம் மதத்தை, மதக் கடமைகளை, இங்கிலாந்தில் இருப்பது போலவே இங்கும் கடைப் பிடிக்கிறோம் என்ற பெருமிதத்தை நமது போர்ட் ஆப் டைரக்டர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஓரியூர் சர்ச்சுக்கு அருகில் உள்ள தளபதி யார்?”

“கர்னல், நான்.”

“ஓ இன்ஸ். மை டியர் ஓல்ட் வாரியர். உங்களை நொண்டித்துரை என்பார்களாமே?”

யெஸ் கர்னல். முதலில் எனக்குத் தெரியாமல் சொன்னார்கள். இப்போது காதுபடக் கூடச் சொல்லுவார்கள். வயதாகிவிட்டதல்லவா கர்னல்?”

“வெரி குட். லெப்டினென்ட் இன்ஸ், ஓரியூர் சர்ச்சிலிருந்து பாதர் பாச்சியையும், கோர்லேலையும் நாளைக் காலைக்குள் திருப்பத்தூர்க் கோட்டைக்கு அழைத்துவர முடியுமா?”

“முடியும் கர்னல். அவர்களை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன். அவர்களிடம் பாவ மன்னிப்புப் பெறப் போகிறோமா கர்னல்?”

“லெப்டினென்ட் இன்ஸ், நன்றாகப் பேசுகிறீர்கள். நம் மதத்தின் மீது நம்பிக்கையில்லாத இவன்களுக்கு எதற்குப் பாவ மன்னிப்பு? பாவத்தோடவே இவன்கள் போகட்டும். நான் பாதிரியார்களை வரவழைப்பது இவன்கள் பாவக் கணக்கை தீர்க்க அல்ல. நம் பழைய கணக்கைத் தீர்க்க.”

“கர்னல், கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.”

“லெப்டினென்ட் இன்ஸ், உங்களுக்குத் தெரியாததா? இந்தப் பகுதியில் நாற்பது வருடங்களுக்கு மேலாக இருக்கிறீர்கள். உங்களுக்கும் ராமநாதபுரம் அரண்மனையில் தற்போது ஆட்சியாளராக இருக்கும் கர்னல் மார்ட்டின்ஸ், அவர் பட்டப் பெயர் என்ன? குரங்கு மார்ட்டின்ஸாமே? உங்கள் இருவருக்கும் தெரியாத இந்தப் பகுதி வரலாறு என்ன இருக்கிறது? இருந்தாலும் உங்களுக்கு வயதாகிவிட்டது அல்லவா? கமுதிக் கோட்டையைத்தவிர மற்ற எதிலும் உங்களுக்கு ஆர்வம் இல்லை. பழைய கணக்கு ஒன்று தீர்க்கப்படாமல் உள்ளது. அதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பு இந்தப் பகுதிக்கு நம் மதத்தைப் பரப்ப வந்த பாதர் ஜான் டி பிரிட்டோவை தூக்கிலிட்டானே ராமநாதபுரம் அரசன் கிழவன் சேதுபதி? அப்போது “கிழவன் சேதுபதியைத் தண்டிக்க வேண்டும், போர்த்துக்கீசியத்திலிருந்து படையை அனுப்புங்கள்” என்று போர்த்துக்கீசிய அரசருக்கு ஏசு சபை பாதிரியார்கள் கண்ணீர்க் கடிதம் எழுதினார்களே? அதற்கு என்ன பதில் வந்தது?

“கிழவன் சேதுபதி வலுவாக இருக்கிறான். அவனைத் தொடமுடியாது. நாம் இப்போதுதான் இந்தியாவில் காலூன்ற ஆரம்பித்துள்ளோம். நம்மை ஒழித்துவிடுவான் கிழவன். பொறுத்திருங்கள் காலம் வரும்” என்ற பதில் வந்ததே? இப்போது அதற்கான காலம் வந்துவிட்டது லெப்டினென்ட் இன்ஸ் கணக்கைத் தீர்க்கிறேன். ஒரு பாதர் பிரிட்டோவிற்குப் பதிலாக ஐநூறு பேர். பாதர் பிரிட்டோவின் ஆவி நம்மை ஆசீர்வதிக்கும். நாம் ஐநூறு பேரைத் தூக்கிலிடுவதை பாதர் பிரிட்டோ கட்டிய சர்ச்சின் தற்போதைய பாதிரியார்கள் பாதர் பாச்சுவும், கோர்லேவும் பார்க்கட்டும். ஏசு சபை மூலம் போர்ச்சுக்கல் அரசருக்குத் தகவல் போகட்டும். நூற்று ஐம்பது வருடக் கணக்கை கிழக்கிந்தியக் கம்பெனி நேர் செய்துவிட்டது என்பதை போர்ச்சுக்கல் அரசர் தெரிந்து கொள்ளட்டும். நம் இங்கிலாந்து அரசருக்கு அவர் நன்றி தெரிவிக்கட்டும்” என்று சொல்லி நிறுத்தினான். அவன் முகத்தைப் பார்ப்பதை லெப்டினென்ட் இன்ஸ் தவிர்த்தார். மேஜர் மெக்காலே முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

“மறந்துவிட வேண்டாம், மேஜர் மெக்காலே. நம்முடன் திரியும் மேஜர் வெல்ஷையும் வரவையுங்கள் திருப்பத்தூர்க் கோட்டைக்கு. நாளை நடக்கும் நாடகத்தை அவரும் பார்க்க வேண்டும். மேஜர் வெல்ஷ் மருது பாண்டியர்களின் முன்னாள் நண்பர். கடந்த இரண்டு மாதமாக எப்போதாவதுதான் அவரை அழைப்பேன். வேலை கொடுப்பேன். நாளை அவருக்கு முழு நேர வேலை இருக்கும். நாளை திருப்பத்தூர்க் கோட்டையில் நடப்பதை அவர் பதிவு செய்யட்டும்” என்றான் கர்னல் அக்னியூ.

கர்னல் அக்னியூவின் ஆணைகள், நள்ளிரவில் தொடங்கின. அதிகாலையில் ஆணைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தும் நிலையில் இருந்தன. திருப்பத்தூர்க் கோட்டைக்குள் இருந்த உயரம் குறைவான உயிர்ப்பனை மரங்களில் கயிறுகள் கட்டி தொங்கவிடப்பட்டன. கயிற்றில் சுருக்கு சரியாக இருக்கிறதா என அதிகாலையிலேயே சரிபார்க்கப்பட்டது. ஐம்பதற்கும் மேற்பட்ட சிறிய பனைமரங்கள் வெட்டி நடப்பட்டிருந்தன.

கம்பெனியின் பாண்டு வாத்தியக் குழு வந்தவுடன் அவ்விடம் பேரிரைச்சலானது. சீருடை அணிந்த அதிகாரிகள் எழுந்து நின்றனர். யூனியன் ஜாக் கொடி ஏற்றப்பட்டது. கம்பெனியின் மலேசியப் படைப் பிரிவு அணி வகுப்பு நடத்தி, கர்னல் அக்னியூவிற்கு மரியாதை

செலுத்தியது. அரசரின் பத்தாம் படைப்பிரிவு ஏழு குண்டுகளை முழங்கியது. இங்கிலாந்தின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பாதிரியார்கள் கோர்லே, பாச்சு, மேஜர் வெல்ஷ் ஆகியோர் வரிசையாக அமர்ந்திருந்தனர். கர்னல் அக்னியூ தனக்குப் போடப்பட்ட ஆசனத்தில் அமராமல் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான். புதிய சீருடைஅணிந்திருந்தான் எப்போதும் ஹூக்காவை அவன் தனியறையில் உபயோகிப்பவன், அன்று அனைவர் முன்னிலையிலும் பயன்படுத்தினான். வெள்ளியில் செய்யப்பட்ட அந்த ஹூக்காவில் புகையிலையும், சில பழங்களும், நெருப்புக் கங்கும் சரியான விதத்தில் கலக்கப்பட்டிருந்தன. அந்தப் புகையை உறிஞ்சி முகத்தை உயர்த்தி புகையை வாயிலிருந்து வெளியே விட்டான். அவனது நடவடிக்கைகளைப் பாதிரியார்கள் பார்க்க விரும்பவில்லை என்பதுபோல அடிக்கடி பார்வையைத் திருப்பிக் கொண்டனர்.

“கைதிகள் அனைவரையும் அழைத்து வாருங்கள், வரிசையாக நிற்க வையுங்கள். சின்ன மருது அடைத்து வைக்கப்பட்டுள்ள இரும்புக் கூண்டை மட்டும் கிழக்கே மேஜர் வெல்ஷ் இருக்கைக்கு அருகில் கொண்டு வாருங்கள்.”

“யாரையும் யாரும் தாங்கிப் பிடிக்க வேண்டாம். நிற்க முடியாதவர்கள் கீழே உட்கார்ந்து கொள்ளட்டும். அல்லது படுத்துக் கொள்ளட்டும் அல்லது உயிரை விடட்டும். ஒரு பனை மரத்திற்கு வேலை குறையட்டும்” என்றான் கர்னல் அக்னியூ.

திருப்பத்தூர்க் கோட்டையின் நடுவில் நிறுத்தப்பட்ட பனை மரங்களை நோக்கி மருதுபாண்டியரும் மற்றவர்களும், உடலெங்கும் பிணைக்கப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகளுடன் இழுத்துச் செல்லப்பட்டனர். பெரிய மருது உள்ளிட்ட போராளிகளை வரிசை யாக நிற்க வைத்தனர். பல நாட்களாகப் போதிய உணவு, ஓய்வு, குடி தண்ணீர் இல்லாத அவர்கள் நிற்பதற்குக் கூட சிரமப்பட்டனர். சிலரை கைத்தாங்கலாக ஆங்கிலேய வீரர்கள் தாங்கியிருந்தனர்.

மருது சகோதரர்கள் அப்போதுதான் யார் யார் பிடிபட்டிருக் கிறார்கள் என்பதைக் கவனித்தனர். பலர் காயம் பட்டிருந்தார்கள். முகத்தில் தாடியும் மீசையும் நிறைந்து களைப்புடன் இருந்தனர். பலர் பெரிய மருதுவைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டனர். சிலர் அழுதனர். பெரிய மருது அவர்களை அமைதியாக இருக்குமாறு கையமர்த்தினார்.

ஒவ்வொருவரின் பெயர், அங்க அடையாளங்களை ராணுவ அதிகாரிகள் குறித்துக் கொண்டனர்.

கர்னல் அக்னியூ பேச ஆரம்பித்தான். "தென்னிந்திய கலகத்தின் கடைசி அத்தியாயம் இன்றோடு முடிவடையப் போகிறது. இனி இந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவும். யூனியன் ஜாக் கொடி உயரப் பறக்கும். தூக்கில் ஏற்றப்படும் ஆட்கள், நாடு கடத்தப்படும் ஆட்கள் என போராளிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். நாடு கடத்தப்படுபவர்களில் முதல் ஆள் வெங்கம் பெரிய உடையணத் தேவர். உனது வரிசை எண் ஒன்று. நீ போகப் போகும் இடம் பென்கோலன். திடீர் திடீரென பெரும் நோய் தாக்கும் ஊர் பென்கோலன். இது சுமத்திரா தீவில் உள்ளது.

1603-இல் ஹானரபிள் கிழக்கிந்தியக் கம்பெனி சுமத்திரா தீவில் தனது வாணிபத்தைத் துவங்கியது. இங்குள்ள மார்ல்பெரோ கோட்டையிலிருந்து லண்டனுக்கு ஒருமுறை தகவல் வந்தது. கோட்டையிலிருந்த பெரும்பான்மையான பணியாளர்களும் இறந்துவிட்டனர், மீதம் இருப்பவர்களும் நோயில் விழுந்து உள்ளனர். உணவு மேசையில் அமர்ந்திருப்பவர்களுக்கு உணவளிக்க ஒரு சமையலர் கூட இல்லை. இறந்தவர்களைப் புதைக்க உயிருள்ளவர்கள் யாரும் இல்லை. **125** வருடங்களுக்கு முன்பு பென்கோலனின் நிலை இதுதான். இப்போது சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முப்பது பணியாளர்கள், ஐந்து டாக்டர்கள், ஒரு பாதிரியார் முதலானோர் அந்தத் தீவில் இருக்கின்றனர். சுமித்திரா தீவில் வாழும் பெண்களுடன் குடும்பம் நடத்த ஆங்கிலேயர்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. பென்கோலனில் காய்ச்சல் வந்தால் ஒரே நேரத்தில் இறப்பு நேரலாம். அது உங்களது சிவகங்கை போல வெப்ப பூமி இல்லை. எங்குப் பார்த்தாலும் மிளகுத் தோட்டங்கள் ரம்மியமாக இருக்கும். முன்பு சயாமிகள் திடீர் திடீரென இந்தக் கோட்டைக்குள் புகுந்து பலரைக் கொன்றுவிடுவர். இப்போது பாதுகாப்பாக இருக்கிறது. பயமில்லாமல் நீ அங்கு இருக்கலாம். அடுத்து வரிசை எண் இரண்டிலிருந்து எழுபத்து மூன்று வரை வாசிக்கிறேன். நீங்கள் போக வேண்டியது மலாய் நாட்டிலுள்ள கெடா.

சின்ன மருது பாண்டியர் மகன் துரைசாமி, வயது **12**, வாராப்பூர் ஜமீன்தார் பொம்ம நாயக்கர், ராமநாதபுரம் சேதுபதியின் அமில்தார் ஜகந்நாத ஐயர், ஆ¯னையூர் நாட்டு கம்மாளர் ஆண்டியப்பத் தேவன், சடை மாயன், கோணி மாயத் தேவன், பாளையங்கோட்டை தளவாய்

குமாரசாமி நாயக்கர், மேலூர் குமாரத் தேவர், பாண்டியம்புத்தூர் பாண்டியன், முத்து வீரர், அருங்குளம் சாமி, மணக்காடு ராமசாமி, திருநெல்வேலி, நாங்குநேரி இருளப்பத் தேவர், கோம்பை ஜமீன்தார் பாண்டிய நாயக்கர், மாடத் தேவர், மலையில் மாடன், சின்ன பிச்சைத் தேவர், வீரபாண்டியத் தேவர், வீரப் பெருமாள் தேவர், கருப்பத் தேவன் சுலைமானியா, நந்தசாமி, பெருமாள், சின்ன பிச்சைத் தேவர் மகன் உடையத் தேவர், சின்ன பிச்சைத் தேவர் மகன் தேவி நாயக்கன், கோணியல்லம் முள்ளு வடுவு, சந்தானம், வீரபத்ரன், சிலம்பன், பேயன், ராமசாமி, இருளப்பன், குமாரசாமி, வீரபாண்டியன், வெங்கட்ராயன் உடையார், முத்து ராக்கு, முத்து ராக்கு நாங்குநேரிப் பகுதியைச் சேர்ந்த முத்துராமத் தேவன், மண்டைத் தேவன், பேயன் அழகர் நம்பி, வைகுந்த தேவன், சிறியனத் தேவன், திருச்செணங்குடி சொக்குத் தளவாயன், இருளப்பத் தேவன், எலம்பட்டி மல்லைய நாயக்கன், கட்ட நாயக்கன் பட்டி சுலுவமோனிய நாயக்கர், தோமச்சி நாயக்கன், அதியூர் சுலுவமோனிய நாயக்கர், குளத்தூர் பாளையக்காரருடைய பேரன் ராமசாமி, எருவுப் போப்பபுரம் பிச்சாண்டி நாயக்கன், கள்ளி மந்தையம் தளவாய், பசுவந்தனை(கமுதி) சின்ன மாடன், கண்டீஸ்வரம் வைரம் மூர்த்தி, தேசக் காவல் மணியக்காரர் தளவாய் பிள்ளை, தளவாய் பிள்ளை மகன் சலுவமணியன், தூத்துக்குடிப் பகுதி போராளி பெத்த நாயக்கன், கிருஷ்ணம நாயக்கன், அவருடைய மகன் கொளத்தூர் வனன், அரச்சேரி மைலனன், கங்கராயக் குறிச்சி வலயமுத்து, சாவுலி ராமன், சூரங்குடி நாஞ்சில் நாடு பாலநாயக்கன், குமரன், திண்டுக்கல் பகுதி வெள்ளைய கொண்டன் வெள்ளையன், ராமன், அழகு சொக்கு, சேக் ஹுசைன், அப்பா நாயக்கர், குப்பணப் பிள்ளை ஆகியோர் மலாய் நாட்டிலுள்ள கெடாவிற்கு நாடு கடத்தப்படுவார்கள். கெடாவிற்கு பினாங்கு என்னும் ஒரு பெயர் இருக்கிறது. நாங்கள் அதை பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவு என்று அழைப்போம். எண்பது நாட்கள் கடல் பயணத்தில் நீங்கள் அங்கு போய்ச் சேருவீர்கள்."

நாடு கடத்தப்படுவோரின் பட்டியலை அக்னியூ வாசித்து முடித்தவுடன், மருது பாண்டியர்கள் வெங்கம் பெரிய உடையணத் தேவரைப் பார்த்தனர். அவர் சின்ன மருதுவின் மகன் துரைசாமியைப் பார்த்தபடி கண் கலங்கிக்கொண்டிருந்தார். தங்களுக்கு வாழ்வையும் அங்கீகாரத்தையும் கொடுத்த முந்தைய சிவகங்கை அரசர் முத்து வடுகநாதரின் நினைவாக துரைசாமியை முத்து வடுகு என்றுதான் பெரிய மருது அழைப்பார். முத்து வடுகு என்ற துரைசாமி, தன் தந்தையையும்

பெரிய தந்தையையும் பார்த்துக் கதறி அழுதான். அவர்களிடம் பாய்ந்தோடி வரத் துடித்த பிஞ்சுப் பாலகனின் கால்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. வேல் கம்பு நேரடியாக இதயத்தில் பாயும் வலியைவிட அதிக வலியுடன், மூவரும் ஒருவரை ஒருவர் பார்க்க அஞ்சித் தலை கவிழ்ந்திருந்தனர். முன்னகர்ந்த அவனை, சங்கிலி கீழே தள்ளியது. "அப்பா...."என வீறிட்டபடி மண்ணில் விழுந்த அவனின் கதறல், திருப்பத்தூர்க் கோட்டை முழுக்க எதிரொலித்தது. துரைச்சாமியின் அழுகையொலியால், மருதுவின் பேரப் பிள்ளைகளும் கலங்கித் துடித்தனர்.

ஆங்கிலேய அதிகாரிகள் பலரின் முகங்கள் வெளிறியிருந்தன. ஆனால் அக்னியூ மட்டும் கொண்டாட்டத்தில் குதித்துக் கொண்டிருந்தான்.

பத்து, பன்னிரண்டு வயதிலிருந்த மருதுவின் பேரப் பிள்ளைகளும் வரிசையில் நின்றிருந்தனர். குழந்தைகளையே முதலில் தூக்கிலிடச் சொன்னான் அக்னியூ. தங்களின் கண்முன் குழந்தைகள் தூக்கிலிடப்படும் கொடுமையைப் பொறுக்க முடியாத பெரிய மருது, அக்னியூவிடம் வேண்டினான். "நீங்கள் எங்கள்மீது இரக்கம் காட்டத்தேவையில்லை. எங்களைத் தூக்கில் போடுங்கள். அது பற்றி நாங்கள் எதுவும் பேசப் போவதில்லை. உங்களிடம் உயிர்ப் பிச்சை வேண்டி மன்றாடப் போவதில்லை. ஆனால் இந்தச் சிறுவர்கள் செய்த குற்றம் என்ன? உங்களுடைய ஆட்சிக்கு எதிராக அவர்கள் ஏதும் ஆயுதம் ஏந்தினார்களா? அவர்களுடைய பால்வடியும் முகங்களைப் பாருங்கள். அவர்களால் ஆயுதம் தாங்கி யாரையாவது தாக்கத்தான் முடியுமா? நள்ளிரவுவரை எங்கள் மடிகளில் படுத்துக் கொண்டு கதை கேட்டு உறங்கிக்கொண்டிருந்த சிறுவர்கள் அவர்கள்" என்றார் பெரிய மருது நா தழுதழுக்க.

எவ்வளவோ துயரங்களையும், துரோகங்களையும் தாங்கிக்கொண்ட பெரிய மருதுவால், தங்கள் குடும்பத்தின் தளிர்கள் கருகுவதைத் தாங்க முடியவில்லை. அதிகார வெறியில், சுருக்குக் கயிறுகளைத் தொங்கவிட்டுக் காத்திருந்த வெள்ளைக் கழுகுகளின் காதுகள் மட்டுமல்ல... ஐம்புலன்களும் மறத்துப் போயிருந்தன. வெட்டப்பட்ட பனை மரங்களில் இருந்த ஈரம்கூட, அங்கிருந்த மனிதர்களின் மனங்களில் இல்லை.

சிறுவர்கள் ஒவ்வொருவராகத் தூக்கிலிடப்பட்டனர். ஒவ்வொருவரும் தூக்கிலிடப்படுவதை சின்ன மருதுவும் பெரிய மருதுவும்

பார்த்தனர். சிறுவர்களைத் தூக்கிலிடும்போது மருது சகோதரர்கள் வாய்விட்டு அழுதனர். கடைசியாக மருது பாண்டியர்களைத் தூக்கிலிட அழைத்தனர். முதலில் பெரிய மருதுவை அழைத்துச்சென்றனர். பனைமரத்தை நோக்கிச் செல்லும் போது, வெள்ளை மருது தம்பியைப் பார்த்தார். சின்ன மருது அவரைக் கையெடுத்துக் கும்பிட்டார். பெரிய மருதுவின் முகம் அமைதியாக இருந்தது. தன்னுடைய வாழ்க்கையின் கடைசி வினாடியில் நின்று கொண்டிருந்த பெரிய மருது, அந்த மைதானத்தை நிதானமாகப் பார்த்தார்.

வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த பனை மரங்களில் தூக்கிலேற்றப்பட்டவர்கள் தொங்கிக்கொண்டிருந்தனர். நான்கு திசைகளிலும், சுற்றிப் பார்த்தார். மரங்கள் முழுக்கப் பிணங்கள். பிணங்களின் வெள்ளாடைகள் காற்றில் உயர உயரப் பறந்து கொண்டிருந்தன. புதுக்கோட்டை அரசன் தொண்டைமானும், கருத்தானும், மேஜர் ஜேம்ஸ் வெல்ஷும் ஏனோ மனக்கண்ணில் வந்து சென்றார்கள். பெரிய மருது அக்னியூவைப் பார்த்தார். வெற்றியின் கடைசித் துளியை சுவைக்கப் போகும் உற்சாகத்துடன் அவன் துள்ளிக் கொண்டிருந்தான். அவனையும், ஜாக் கொடியையும் மீண்டும் மீண்டும் பார்த்த மருது, அக்னியூவிடம் “உங்களின் கொடி ஒரே ஒரு கம்பத்தில்தான் ஏற்றப்பட்டிருக்கிறது கர்னல் அக்னியூ. இந்தப் பனை மரங்களில் எங்களின் வீரர்கள் ஒவ்வொருவரும், வெற்றிக் கொடி போல் கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஏற்றப்பட்டிருக்கிறார்கள். உங்களுடைய ஜாக் கொடி அதிகார வெறியில் ஏற்றப் பட்டது. எங்களுடையவை, விடுதலையின் வேட்கையுடன் ஏற்றப் பட்டவை. இனி இவர்கள் இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவரின் மனத்திலும் விதைக்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்” என்றார்.

அக்னியூவுக்கு ஒரு துளியும் கோபம் வரவில்லை. “மருது, நீதான் தொடக்கம். உன்னைப் போல நூறு, ஆயிரம், லட்சம், பல லட்சம் வீரர்களை நாங்கள் தூக்கிலேற்றுவோம். வெற்றி, வெற்றி, இது மட்டுமே எங்களின் லட்சியம். லட்சியத்தை அடைய நாங்கள் இங்கிலாந்தில் இருந்து போர்ப் பயிற்சி எடுத்துக்கொண்டு வர வேண்டியதில்லை. சில சலுகைகளும், உறுதிமொழிகளும், கொஞ்சம் சில்லறையும் இருந்தால் போதும், உன்னைப் போன்ற, சின்ன மருது போன்ற வீரர்களை எங்களால் சாய்த்துவிட முடியும். போதும், நீ பேசியது. நீ பேசுவதை உன் ஆட்கள் வேண்டுமானால் விரும்பிக் கேட்பார்கள். துரதிர்ஷ்டவசமாய், கேட்பதற்கு

யாரும் இங்கு உயிரோடு இல்லையே...” என்று சிரித்தபடியே, சிப்பாய்களைப் பார்த்துக் கண் அசைத்தான். சில நிமிடங்களில் பெரிய மருதுவின் உயிரற்ற உடல் மரத்தில் தொங்கியது.

கர்னல் அக்னியூ கடைசியாகச் சின்ன மருதுவை அழைத்தான். “வா, நீதானே இந்தப் புரட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர்? பூனாவிலிருந்து நாங்குநேரிவரை உள்ள புரட்சியாளர்களின் தலைவன் அல்லவா நீ? பார்த்தாயா? எல்லோரும் உன் கண்முன் தூக்கில் தொங்கியதை?”

“கர்னல், நான் சொல்லுவதை சற்று யோசியுங்கள். தூக்கில் போடும் முன் ஆதிக்க சக்திகள் அகங்காரமாகப் பேசி, புரட்சி யாளர்களை அவமதிப்பது இது முதன் முறையல்ல. எங்களைப் போல தோற்றுப் போனவர்களைத்தான் காலம் கவனத்தில் கொள்ளும். எங்கள் வாழ்வுதான் இன்று முடிந்து போய்விடும். எங்கள் வரலாறு இனித் தான் தொடங்குகிறது.”

“பேசியது போதும். நீண்ட நித்திரைக்குச் செல்” என்ற கர்னல் அக்னியூ தனது உதவியாளரைப் பார்த்தான். சிப்பாய்கள் சின்ன மருது இருந்த இரும்புக் கூண்டைத் தூக்கு மரத்தின் அருகில் தூக்கிச் சென்றார்கள். இரும்புக் கூண்டைத் திறந்து, சின்ன மருதுவின் உடற்பகுதியில் இருந்து இரும்புக் கூண்டை கீழிறக்கினார்கள். மருதுவின் கழுத்தில் சுருக்குக் கயிறை மாட்டி இறுக்கினார்கள். கூண்டுடன் மரணத்தைத் தழுவினார் சின்ன மருது. மருதுவின் வீரத்தைப் பார்த்தும், சாதுர்யத்தைப் பார்த்தும், அவருக்கிருந்த நண்பர்களின் பலத்தையும் பார்த்து வெள்ளைக்காரன் எவ்வளவு பயந்திருந்தான் என்பதை மருதுவின் உடலைத் தழுவியிருந்த இரும்புக் கூண்டு சொல்லியது.

கூண்டுடன் தொங்கிக்கொண்டிருந்த சின்ன மருதுவின் உயிரற்ற உடலை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த கர்னல் அக்னியூவிற்கு, அப்பொழுதும் உடல் நடுங்கியது. மருதுவின் உடலில் இருந்து தன்னுடைய கண்களைத் திருப்பமுடியாமல் தடுமாறிய அக்னியூ, “அவனின் செத்த உடலை கீழே இறக்கிப் போடுங்கள்” என்று வெறிக்கூச்சல் போட்டபடி, அந்த இடத்தில் இருந்தே வெளியேறினான். ஏறக்குறைய அவன் புறமுதுகிட்டுக் கொண்டிருந்தான். போராளியின் மரணம் ஊழித் தீயைப் போல் கனன்றெரியும் என்பதை அக்னியூவின் ஓட்டம் அறிவித்துக் கொண்டிருந்தது.

•

48

சின்ன மருது தலைமையிலான போராளிகள் தூக்கிலிடப்பட்ட அடுத்தநாள் புதுக்கோட்டை தொண்டைமான் மெட்ராஸ் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

“கம்பெனியினுடைய நல்ல காலம். பிரபுவே, தங்களுடைய கூட்டாளியான என்னுடைய நல்ல காலம். மதிப்பிற்குரிய கம்பெனி அலுவலர்களுடைய துணிச்சலாலும் அவர்கள் எடுத்த துரித நடவடிக்கையினாலும் காட்டு நாய் மருது, அவனுடைய அண்ணன், அவனுடைய குடும்பத்தினர் கம்பெனிக்குச் செய்த துரோகத்திற்காகத் தூக்கில் தொங்கினார்கள். பிரபுவே, கம்பெனியினுடைய வரலாறு மிகவும் நீண்டது. பிரெஞ்சுக்காரர்கள், சந்தா சாகிப், திப்பு போன்ற பலர் கம்பெனியை எதிர்த்து அழிந்து போய்விட்டனர். அதே சமயத்தில் கம்பெனியின் நண்பர்கள் மதிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். அப்படியிருக்கும்போது இந்த கீழ்த்தரமான மருதுப் பயல் தனக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்து இப்படி நடந்தானோ தெரியவில்லை.”

தொண்டைமானுக்குத் தான் சளைத்தவன் இல்லை என்ற வகையில் திருவிதாங்கூர் அரசர் கவர்னர் எட்வர்ட் கிளைவிற்கு **1802** ஜனவரி **16**-ஆம் தேதி கடிதம் எழுதினார்.

“மாட்சிமை தாங்கிய சென்னைக் கவர்னருக்குத் திருவிதாங்கூர் ராஜா பலராம வர்மர் எழுதும் கடிதம். இந்தியாவின் தென்பகுதியில் கிளர்ச்சி நெருப்பு அணைக்கப்பட்டுவிட்டது. போராளிகள் தண்டிக்கப்பட்டு விட்டனர். கேரளாவின் மலபாரிலிருந்தும் கர்நாடகத்திலிருந்தும் உங்களது உதவிக்கு வந்த எனது படைகளைத் தற்போது திருப்பியனுப்புவதற்கு ஆணையிட்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். போராளிகள் தாம் செய்த தீய செயல்களுக்குத் தக்க தண்டனைகளைப் பெற்றது பொருத்தமானது. ஆங்கிலேயப் படைகளுக்கு வெற்றித் தேவதை

வெற்றிகளைத் தொடர்ந்து தருகிறாள். தொன்றுதொட்டு எமது மூதாதையர்கள் கம்பெனியினுடைய நலன்களில் அக்கறை கொண்டுள்ளனர். அது தற்போது வளர்ந்து வருகிறது. நானும் எனது மூதாதையரைப் போல கம்பெனிக்குத் தொடர்ந்து உறுதியான விசுவாசியாக இருப்பேன்."

தூக்கிலிடப்பட்ட சின்ன மருது, பெரிய மருதுவின் பூத உடல்கள் அடக்கம் செய்வது குறித்து மூன்று நாட்கள் கழித்துக் கர்னல் அக்னியூ முடிவு செய்தான். அராஜகத்தின் உச்சகட்டமாக அவர்களது தலைகளைத் திருப்பத்தூரிலும் உடல்களை காளையார்கோயிலிலும் புதைப்பதற்கு உத்திரவிட்டான்.

இது நடந்த இரண்டாவது நாள் மெட்ராஸ் கவர்னர் எட்வர்ட் கிளைவ், அதிகாரம் மமதை, மிரட்டல் தொனியில் ஓர் அறிக்கை வெளியிட்டான்.

"தனக்கென்று எந்தவித ஆதரவுமில்லாதவர்கள் வலிமைமிக்க ஆங்கிலேயப் படையினரை எதிர்த்து, பெருத்த உயிரிழப்பை ஏற்படுத்திவிட்டனர். இந்தியாவின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கும், சேர்வைக்காரர்களுக்கும், பாளையக்காரர்களுக்கும், ஆங்கிலேய அரசின் கோபத்திற்கு ஆளானால் நேரக்கூடிய துன்பங்களை உணர்த்த வேண்டியதற்காக இந்தப் போர் நடத்த வேண்டியதாயிற்று. போராளிகள் தமக்கு இல்லாத திறமைகள், இருப்பதாக நினைத்துக் கொண்டுவிட்டனர். பல காலமாகத் தொடர்ந்து வலிமையான ஆயுதங்களையும், முறையான பயிற்சியையும் பெற்ற ஆங்கிலேயப் படையுடன், வீணாக மோதியிருக்கின்றனர். கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளை வெளிப்படையாக எதிர்த்துப் போரிட்டதில் போராளிகள் பட்ட துன்பங்கள், துயரங்களுக்கு அளவில்லை. ஆங்கிலேயப் படையினருடைய அயராத உழைப்பும், விழிப்புணர்வும், அவர்களுடைய செயல் திறனும் போராளிப் படையினரைக் காட்டிலும் எந்த விதத்திலும் சளைத்ததில்லை என்பதைத் தென்னாட்டு மக்கள் இப்போது நன்றாகத் தெரிந்திருப்பார்கள்."

"இராணுவ நீதிமன்றங்களில் போராளிகள் இழைத்த குற்றங் களை விசாரிப்பதற்காக இழுத்துச் செல்லப்பட்டனர். இந்தப் போராட்டத்தினால் விளையக்கூடிய அபாயங்களை ஏற்கனவே தெரிவித்து, கம்பெனி கொடுத்த எச்சரிக்கைகளை இந்தப் போராளிகள் மதிக்கவில்லை. அதன்காரணமாக இவர்கள் இழைத்த குற்றங்களுக்கான தண்டனையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. தவறானப் பாதையில் சென்ற

போராளிகளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட முடிவு ஆங்கிலேய அரசை எதிர்த்தால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றி, போராளிகளுக்குப்பின் வரவிருக்கும் சந்ததிகள் மத்தியில் அழியாத பதிவினை ஏற்படுத்தியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது."

"தேவையற்ற போராட்டத்தைத் தூண்டியவர்களுக்கு, இப்போது வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் சரியானவை என்பதை மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். இயற்கைக்கு மாறானதும், தவிர்த்திருக்க வேண்டியதுமான நடந்து முடிந்த இந்தப் போரின் போது, கம்பெனிக்கு விசுவாசமாகவும் உதவியாகவும் இருந்தவர்களை வாழ்த்தவும் பாராட்டவும் விரும்புகிறோம். கம்பெனியின் அதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டதைப்போலவே, போர்க்காலத்தில் கம்பெனிக்கு உறுதுணையாக இருந்தவர்களைப் பெருமைப்படுத்திப் பாதுகாக்க வேண்டியதும் நியாயமானதே.

பொது அமைதியையும் முறையான அரசாங்கத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் கருதி, போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை கம்பெனிக்கு எடுத்துக்கொள்வதை விரும்பவில்லை. பேராபத்து விளைவிக்கக்கூடிய பெரும் குற்றங்களைப் புரிந்த போராளிகளுக்குப் பாடம் புகட்டும்விதமாக போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்கள் உண்மை ஊழியர்களாகத் திகழ்ந்த கிராமத் தலைவர்கள் வசம் கொடுத்து அந்த நல்லவர்களுடைய வசதியைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் அவர்களுக்குத் தரப்பட உள்ளன. இதன்மூலம் கம்பெனி விசுவாசிகளான தலைவர்கள் ஆங்கிலேய அரசின் கொள்கையை நன்குப் புரிந்து கொண்டு செயல்படுவார்கள் என நம்புகிறேன்."

"தென்னாட்டில் எதிர்காலத்தில் கலவரங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் தற்போது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டன. வருங்காலங்களில் ஆங்கிலேய அரசின் பாதுகாப்பில் பாளையக் காரர்களும் பொதுமக்களும் நம்பிக்கை கொள்ளலாம் என்றும் உறுதியளிக்கப்படுகிறது. பொதுமக்களிடம் ஆயுதங்கள் இருக்கக் கூடாது. அவைகள் கம்பெனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மஸ்கெட் வகைத் துப்பாக்கிக்கும் தலா பத்து ரூபாய் வீதமும், எரிதோட்டா வகைத் துப்பாக்கிக்கு தலா ஐந்து ரூபாய் வீதமும், குத்தீட்டி ஒன்றுக்கு தலா இரண்டு ரூபாய் வீதமும் இழப்பீடு அளிக்கப்பட உள்ளது. மக்கள் தமது வசம் உள்ள அனைத்து

வகை ஆயுதங்களையும் கம்பெனி நிர்வாகத்திடம் உடனடியாக ஒப்படைத்துவிட வேண்டும். பாளையக்காரர்களும் உள்ளூர்க் குறுநில ஆட்சியாளர்களும் தங்களது தகுதிக்கேற்ப தமது மரபுவழிப்பட்ட நடைமுறைகளின்படியும் பாரம்பரிய பழக்க வழக்கங்களின்படியும் தமது பெருமைகளைக் காத்துக் கொள்ளும் பொருட்டுக் குத்தீட்டி ஏந்திய காவலர்களைத் தங்களுடன் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். அதற்காக கம்பெனியிடம் அனுமதி ஒன்றைப் பெற வேண்டும்."

"வெளிப்படையான போராட்டம் தற்போது முற்றிலும் அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டது. தென்னகம் முழுமையையும் ஒருங்கிணைத்து விரிவான முறையில் தென்பகுதிகளில் இனிமேல் நிலையான அமைதிக்கான அடித்தளங்கள் இடப்பட்டுவிட்டன. இந்தப் பகுதிகளில் கம்பெனியினுடைய அரசு முழுமையான அதிகாரத்துடன் நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. நடந்து முடிந்த போராட்டத்தின் விளைவாக மக்களைத் தண்டிக்கும் எண்ணம் கம்பெனி அரசுக்கு இல்லை. ஆனாலும் பாஞ்சாலங்குறிச்சியைத் சேர்ந்த வீரபாண்டிய நாயக்கரும், முத்தையா நாயக்கரும் ராமநாதபுரம் மயிலப்பனும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களோடு சேர்த்து வேறு சிலரும் கடல் கடந்து நாடு கடத்தப்பட உள்ளனர். அவர்களைப் போன்ற தலைவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டுக் கம்பெனிக்கு எதிராகக் குற்றங்களைப் புரிந்த மற்ற சாதாரணக் குடிமக்கள் அனைவருக்கும் கம்பெனி அரசினால் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்காகச் சட்டரீதியான நடவடிக்கைகள் இனிமேல் தொடராது."

"தென்பகுதி மக்கள் அழிவை விளைவிக்கக்கூடிய போர் நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டுவிட்டனர். இனிமேல் அமைதி வாழ்க்கைக்குத் திரும்பி, விவசாயத்தைத் தொடங்கும்விதமாக, ஆங்கிலேய அரசு ஜமீன்தாரி முறைக் கொள்கையை நடைமுறைப் படுத்த உத்தேசித்துள்ளது. இனிமேல் யாராலும் மாற்ற முடியாத நிரந்தரமான வரி விதிப்பை வகுத்து, அரசு விதிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, பிரச்சனையில்லாத பாளையக்காரர்கள் வசமிருந்த நிலங்களை மீண்டும் அவர்களிடமே ஒப்படைத்து, அவர்களை மீண்டும் ஜமீன்தார்களாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து இனி இராணுவச் சேவைக்காக வீரர்கள் பெறப்பட மாட்டாது. மக்களின் சொத்துரிமைகளும் பாதுகாக்கப்படும். மக்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கும் உத்திரவாதம்

தரப்படுகிறது. மக்கள் தங்களது சமயச் சடங்குளைத் தங்களது மரபுப்படி நிகழ்த்திக் கொண்டு அமைதியாக வாழலாம்."

இவ்வளவு நீண்ட பிரகடனத்தை வெளியிட்ட கவர்னர், தன்னுடைய பிரகடனத்தில் சொல்லப்பட்டவைகளை அவரே உடனடியாக மீறினார். தேளி, மங்கலம், பெரியபட்டி, ஜல்லிப்பட்டி, தொண்டாமுத்தூர், சேமந்துரை பாளையங்களை ஆங்கிலேய அரசு பறிமுதல் செய்தது.

எட்வர்ட் கிளைவ், அக்னியூவிற்குக் கொடுத்த அதிகாரங்களை அவன் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டான். மருதுவைத் தூக்கிலிட்டு இருபத்து மூன்று நாள் முடிந்த பின்பு, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குச் சென்ற அக்னியூ, ஒரு மேடை அமைத்து அதில் ஊமைத்துரையையும், சிவத்தையாவையும் மற்றப் போராளிகளுடன் தூக்கிலேற்றினான். திண்டுக்கல் முத்து வெள்ளை நாயக்கரை திண்டுக்கல்லுக்கு கொண்டு வந்து, ஆறு மாதத்திற்கு முன்பே ஆனைமலைக் காட்டில் பிடிபட்ட அவரது தகப்பனார் விருப்பாச்சி கோபால் நாயக்கரும் திண்டுக்கல் கொண்டு வரப்பட்டு, இருவரும் தூக்கிலிடப்பட்டனர். போராளிகள் ஞானமுத்தையும், வீரப்பனையும் தஞ்சாவூர் தெருக்களில் அடித்து வதைத்து இழுத்துச் சென்றனர். அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர். சின்ன மருது மகன் சிவஞானத்தைக் கமுதியிலும், அடுத்த மகன் உதயணனை திருச்சுழியின் முச்சந்திகளில் வைத்து தூக்கிலிட்டனர். ராமநாதபுரம் புதிய சேதுபதியை அபிராமத்தில் தூக்கிலிட்டனர். காயல்குடி குசல வீர நாயக்கர், ராமநாதபுரம் மயிலப்பன், கள்ளர் தலைவர் சண்முகபதி ஆகியோரும் அடுத்தடுத்துத் தூக்கிலேற்றப்பட்டனர்.

எழுபத்து மூன்று போராளிகளைத் தூத்துக்குடிக்குக் கொண்டு சென்று மேஜர் வெல்ஷின் பாதுகாப்பில் அக்னியூ வைத் திருந்தான். போராளிகளை மலேசியாவிற்கு ஏற்றிச் செல்வதற்காக 'அட்மிரல் நெல்சன்' கப்பல் தூத்துக்குடி துறைமுகத் தில் நங்கூரமிடப்பட்டிருந்தது. போராளிகள் மிகுந்த மூர்க்கத்தனமானவர்கள் என்று நம்பப்பட்டதால் கடுமையான கட்டுப்பாட்டுடன் அவர்களை நடத்துவதற்காக லெப்டினென்ட் ராக்ஹெட் என்பவனுக்குப் பொறுப்புத் தரப்பட்டது.

மருது பாண்டியர் தூக்கிலிடப்பட்ட நான்கு மாதங்கள் கழித்து, கைதிகள் கப்பலில் ஏற்றப்பட்டனர். சொந்த மண்ணை விட்டுக் கப்பல் புறப்பட்ட நிமிடத்தில் அவர்கள் எல்லோரின் முகங்களிலும் துயரம் படர்ந்தது. சின்ன மருது பாண்டியருடைய பேரன்பிற்குரிய மகன்

பதினைந்து வயதுச் சிறுவன் துரைசாமியின் முகத்தில் அமைதி ததும்பிய சோகம் அப்பியிருந்தது. அவனைப் படகில் ஏற்றுவதற்காக மேஜர் வெல்ஷ் கைகொடுத்தார். இனி என்று தன்னுடைய நாட்டை பார்ப்போமோ என்ற ஏக்கமும், இனி ஒருபோதும் தன்னுடைய சொந்த மண்ணுக்குத் திரும்பியே வரமுடியாதோ என்ற பயமும் அவர்கள் முகத்தில் இருந்தன. துரைசாமியின் முகத்தில் தவழ்ந்தது அமைதியா? பெருமிதமா? சோகமா? என அவனுடைய நடவடிக்கை யிலிருந்து எதையும் உணர்ந்துகொள்ள முடியவில்லை."

•

49

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஒரு பெரும் தலைக் குனிவை மேஜர் ராபின் கல்யாணி ஏற்படுத்தினார். அதனால் இரவோடு இரவாக மேஜர் ராபின் கல்யாணியின் குழு சேர்வராயன் மலையிலிருந்து கொல்லிமலைக்கு இடம் பெயர வேண்டியதாயிற்று. காளையார்கோயில் போர் நடந்துகொண்டிருக்கையில் மேஜர் மெக்காலேயின் வீட்டிலிருந்த கேத்தரீனின் நான்கு குழந்தைகளையும் சங்கரன் கோயிலில் விசாரணைக் கைதியாக இருந்த வாலர் துரையையும், மேஜர் ராபின் கல்யாணியின் படை கடத்திக்கொண்டு கொல்லிமலைக்கு வந்தது. குழந்தைகளைப் பார்த்து கட்டிப்பிடித்து வாலர் மகிழ்ந்தாலும், இதனால் வரக்கூடிய விளைவுகளை எண்ணிப் பயந்தார். "மிஸ்டர் வாலர் பயப்படாதீர்கள். உங்கள் கிழக்கிந்தியக் கம்பெனியால் எங்களை நெருங்க முடியாது. மருது பாண்டியர்களைத் தூக்கிலிட்ட மமதையில் திரியும் இவன்களை நாங்கள் மட்டம் தட்ட நினைத்தோம். மருது தூக்கிலிடப்பட்ட அக்டோபர் இருபத்து நான்காம் தேதிக்கு அடுத்த நாள் உங்களை விடுவித்தோம். அதற்கு அடுத்த நாள் குழந்தைகளை விடுவித்தோம். கேத்தரீனையும், பாத்திமாவையும் இன்னும் இரண்டு நாளில் கொண்டு வருவோம்" என்றார் மேஜர் ராபின் கல்யாணி.

வாலருக்குச் சந்தோஷமாகிவிட்டது. "மேஜர், நானும் எனது பிள்ளைகளும் கேத்தரீனைப் பிரிந்து ஒன்பது மாதங்களாகின்றன. அவளும் பாத்திமாவும் எங்கு இருக்கிறார்கள் என்றுகூட எனக்குத்

தெரியாது. உங்களுக்கு அவர்கள் எங்கு இருக்கிறார்கள் எனத் தெரியுமா? அவளைக் கொண்டுவந்துவிடமுடியுமா?"

"மிஸ்டர் வாலர் உங்களையும், குழந்தைகளையும் கொண்டு வர அனுபவம் இல்லாத ரெண்டு பிக்காளிப் பயல்களை அனுப்பினேன். இதுதான் அவன்களுக்கு முதல் அசைன்மெண்ட். பிரமாதமாகச் செய்துவிட்டான்கள். கேத்தரீனையும், பாத்திமாவையும் அழைத்து வர எனது மனைவிகள் ஜூலியட்டையும் அகல்யாவையும் அனுப்புவேன். நீங்கள் ஒரு உதவி மட்டும் செய்ய வேண்டும். உங்கள் குழந்தைகளில் ஒன்றை எனது மனைவிகளோடு அனுப்ப நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தக் குழந்தை சொன்ன பேச்சு கேட்கக்கூடியதாக இருக்க வேண்டும்."

"மேஜர், எதற்கு இந்த நிபந்தனை?" என்றார் வாலர்.

"ஒன்றுமில்லை. எனது மனைவிகள் இருவரையும் இப்போதுதான் கேத்தரீன் பார்க்கப் போகிறாள். அறிமுகமில்லை. அதனால் அவர்கள் என்ன சொன்னாலும் கேத்தரீனும், பாத்திமாவும் நம்பமாட்டார்கள். கூப்பிட்டால் உடன் வர ஒத்துக் கொள்ளமாட்டார்கள். உங்கள் குழந்தையைப் பார்த்தால் என் மனைவிகளை நம்புவார்கள். தாயாரைப் பார்க்கும் வரை, புது ஆட்களிடம் குழந்தை அழாமல் இருக்க வேண்டும். ஒருவேளை அழுதாலும், சமாதானப்படுத்த ஏதுவாக குழந்தை இருக்க வேண்டும். அடம் பிடிக்கும் குழந்தையாக இருந்து விடக்கூடாது. அதனால்தான் கேட்டேன்."

"உங்களால் இது முடியுமா மேஜர்?"

"நானே என்னைப் பற்றி பெருமையாகச் சொல்லக்கூடாது. போபாலுக்கு அருகில் நான் தங்கியிருந்தேன். அங்குள்ள ஒரு மலைப்பகுதியில் திறமையான மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். திருடுவதில் கைதேர்ந்தவர்கள். நம்மூர் கள்ளர்கள்போல நியாய அநியாயம் எல்லாம் பார்க்க மாட்டார்கள். பெரும் முரடர்கள். திருடும்போது தடுப்பவர்களைக் கொலை செய்யத் தயங்கமாட்டார்கள். அவர்களைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ரெகுலர் ஆர்மியால் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் அப்போதுதான் தனி ஆர்மி ஆரம்பித்திருந்தேன். என்னிடம் கம்பெனி ஆட்கள் பேரம் பேசினார்கள். நான் இரண்டாயிரம் பணம் கேட்டேன். "சரி" என்று சொல்லிவிட்டு, எனது

ஐந்து வயது மகனை பிணையக் கைதியாக கம்பெனி வைத்துக் கொண்டு பணத்தைக் கொடுத்தனர்."

"எதற்குக் குழந்தையை அவர்களிடம் கொடுத்தீர்கள்."

"மிஸ்டர் வாலர். இது போன்று குழந்தைகளைப் பிணையக் கைதியாக வைத்துக் கொள்வதைத் தொடங்கி வைத்ததே கிழக்கிந்தியக் கம்பெனிதான். மூன்று வருடங்களுக்கு முன்பு திப்பு சுல்தான் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பணம் தர வேண்டும் என்ற போது அவரின் இரு மகன்களைப் பிணையாக வாங்கிக்கொண்டனர். திப்பு சுல்தானிடமிருந்து பணம் வந்ததும் குழந்தைகளைத் திப்பு விடம் ஒப்படைத்தனர். அதே பாணியை எல்லோரிடமும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். நான் முதலிலேயே முழுப் பணமும் வாங்கிக்கொள்வதால், வேலை முடியும்வரை எனது மகனை விடமாட்டார்கள். ஒன்று வேலையை முடித்துத்தர வேண்டும் அல்லது பணத்தைத் திருப்பித்தர வேண்டும்."

"சரி, அந்த வேலையை எப்படி முடித்தீர்கள்?"

"ஒன்றுமில்லை. அந்தப் பழங்குடி இனத்தலைவரின் இரு பிள்ளைகளைக் கடத்தினோம். பிள்ளைகளைத் திரும்பப் பெற வேண்டுமென்றால் எனக்கு ஒரு சத்தியம் செய்ய வேண்டும் என்று சொன்னேன். என்ன சத்தியம் என்று கேட்டான்."

"இனிமேல் கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களுக்குள் வந்து திருடக்கூடாது என்று பாலில் சத்தியம் செய்ய வேண்டும் என்றேன். மிரட்டுவது நான்தான் என்று எப்படியோ அவர்கள் என்னை மோப்பம் பிடித்துவிட்டனர். நான் போபால் தெருக்களில் சுற்றியபோது என்மீது கத்தியினை எறிந்தனர். நான் தப்பித்துவிட்டேன். உடனடியாக எனது பாதுகாப்பை உறுதி செய்துகொண்டேன். அடுத்த நாள் கிராமச் சந்தைக்கு வேவு பார்க்கவந்த அவனது மனைவியைக் கடத்தினோம். மகன்கள் இருவரைக் கடத்தியபோது நிதானமாக யோசித்து என்னைத் தாக்கிய அவன், மனைவியைக் கடத்தியவுடன் பதறிவிட்டான். உடனே சமாதானத்திற்கு வந்தான். கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் முன்னிலையில் பாலில் சத்தியம் செய்துகொடுத்தான். உடன்படிக்கையிலும் கை நாட்டு வைத்தான். கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள், தாங்களே அவனை அடக்கியதாக மார்தட்டிக்கொண்டனர். எனக்குப் பணம்

கிடைத்தது. அவன்களுக்குப் புகழ் கிடைத்தது. எனது பையனை வீட்டுக்கு அழைத்து வந்தேன்."

"மேஜர், அந்த நிகழ்வுகளில் உங்களுக்குப் பணம் கிடைத்தது. இப்போது எனது குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றி ஒன்று சேர்ப்பதில் உங்களுக்கு என்ன கிடைக்கும்? என்னால் எதுவும் தர முடியாதே?"

"ஏன் முடியாது? வெள்ளைக்காரர்கள், சாதித்துவிட்டோம் சின்ன மருதுவையும், தென்னிந்தியப் புரட்சியாளர்களையும் ஒடுக்கி விட்டோம் என்று இறுமாப்புடன் திரிபவர்களை கேவலப்படுத்தப் போகிறோமே?"

"இதனால் உங்களுக்குப் பணம் ஏதும் கிடைக்காதே?"

"வேண்டாம். எங்களுக்குப் பணம் முக்கியமில்லை. வெள்ளைக்காரர்களைவிட நாங்கள் திறமைசாலிகள் என நிருபிக்க வேண்டும்."

"சரி, உங்கள் முயற்சிக்காகக் கடவுளை வேண்டுகிறேன்"என்றார் வாலர்.

மறுநாள் காலை மேஜரின் மனைவிகள் ஜூலியட்டும் அகல்யாவும், கேத்தரீனின் மூத்த பையனோடு ஒரு பல்லக்கில் கிளம்பினர். கொல்லி மலையிலிருந்து குறுக்கு வழியில் சேலம் வந்தடைந்தனர். பல்லக்கை ஒரு பாழடைந்த கோயிலுக்குள் ஒளித்து வைத்தனர். பின்பு பூட்டப்பட்ட சாரட்டில் இரண்டு நாட்கள் பயணம் செய்து ஸ்ரீவில்லிபுத்தூர் அடைந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலின் கிழக்கு வாசலின் முன்பு சாரட்டை நிறுத்தி, குதிரையைச் சாரட்டின் சக்கரத்தில் கட்டிவிட்டு கோயிலுக்குள் சென்றனர். மேஜர் ராபின் கல்யாணி தலையில் முண்டாசு கட்டி வாயை ஒருபுறமாக கோணிக் கொண்டு சாரட்டிற்குப் பக்கத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டான். குதிரைகள் தவிட்டை உண்டு, தண்ணீர் குடித்தன. மேஜர், குதிரைகளைச் சாரட்டின் சக்கரத்தில் கட்டி வைத்துவிட்டுக் கிளம்பினான். மேஜரின் மனைவிகள் கோயிலுக்குள் கிழக்கு வாசல் வழியாகச் சென்றவர்கள் ஆண்டாள் தரிசனம் முடித்து வடக்கு வாசல் வழியாக வந்தனர்.

மேஜர் ராபின் கல்யாணியின் மூத்த மனைவி ஜூலியட், கேத்தரீனின் மகனை இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டாள். அவள் ஐரிஷ்காரி. ஊர்க்காரர்கள் தான் வெள்ளைக்காரி என்பதைக் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக முகத்தை மறைத்து பர்தா

போட்டுக்கொண்டிருந்தாள். இரு பெண்களும் பெரிய நாயக்கர் வீட்டிற்குச் சென்றனர். பெரிய நாயக்கரோடு தரையில் உட்கார்ந்து மேஜர் ராபின் கல்யாணி பேசிக்கொண்டிருந்தான். அருகில் கேத்தரீன் இருந்தாள். கேத்தரீனின் கன்னங்களில் நீர்க்கோடுகள் இருந்தன. பாத்திமா அவளைத் தாங்கிப் பிடித்திருந்தாள். ராபினின் மனைவிகள் குழந்தையுடன் உள்ளே நுழைந்தனர். குழந்தையைப் பார்த்ததும் கேத்தரீன் தாவி ஓடிக் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள். குழந்தைக்கு ஐந்து வயது என்பதால் விவரம் புரிந்தது. தாயை அடையாளம் கண்டு ஓடிவந்து அணைத்துக் கொண்டது. "நான் யார் தெரியுதா துரை?" என்று பாத்திமா கேட்டாள். 'ஆயா' என்றது. கேத்தரீனிடமிருந்து குழந்தையைப் பாத்திமா சிரித்துக்கொண்டே தூக்கினாள். பெண்கள் மெதுவான குரலில் பேசிக்கொண்டனர். மேஜர் ராபின் கல்யாணி மறுபடியும் கோயிலின் கிழக்கு வாசலுக்குச் சென்று குதிரை வண்டிக்குள் படுத்துக்கொண்டான். பெரிய நாயக்கர் கையில் திவ்விய பிரபந்தம் ஓலைச்சுவடியுடன் வீட்டின் தலைவாசல் கதவுக்கருகில் உட்கார்ந்துகொண்டார்.

மாலை கேத்தரீன் கிளம்பினாள். பாத்திமா குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு முன்னால் நடந்து சென்றாள். பின்னால் ஐந்து அடி இடைவெளி விட்டு மேஜரின் மனைவிகள் நடந்து வந்தனர். கோயிலுக்குள் மேற்கு வாசல் வழியாகச் சென்றவர்கள் கிழக்கு வாசல் வழியாக வந்த போது மேஜர் ராபின் கல்யாணி தயாராக இருந்தான். நான்கு பெண்களும் வண்டிக்குள் ஏறி உட்கார்ந்ததும் ஜூலியட்டையும், கேத்தரீனையும் இரு ஓரங்களிலும் உட்காரச் சொன்னான். அவனது இந்திய மனைவி அகல்யாவையும், பாத்திமாவையும் இரண்டு வெளி நாட்டுப் பெண்களுக்கு நடுவில் உட்காரச் சொன்னான். வண்டியை திடீரென நிறுத்தி யாராவது கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லும் சூழ்நிலை வந்தால் இரண்டு இந்தியப் பெண்களும், வெள்ளைக்கார மாதுக்களுக்குச் சரி சமமாக உட்காராமல் சற்று தாழ்வான இடத்தில் உட்கார்ந்து கொள்ளச் சொன்னான். போகும் வழியில் யாராவது கேட்டால் "கேத்தரீனைக் கலெக்டரின் மனைவி" என்றும், ஜூலியட்டை "கலெக்டரின் தங்கை" என்றும் உடன்வரும் அகல்யாவும் பாத்திமாவும் பணிப் பெண்கள் என்றும் சொல்லச் சொன்னான்.

சாரட் ஒரே நாளில் கொல்லிமலை அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தது. மேஜரின் ஆட்கள் அடிவாரத்தில் காத்திருந்தனர். மலையில்

நடந்து பழக்கப்படாத கேத்தரீனையும், பாத்திமாவையும், குழந்தையையும் பல்லக்கில் ஏற்றினர். ஐந்து மணி நேரத்தில் மலையின் உச்சிக்கு வந்தனர்.

மனைவி கேத்தரீனைப் பார்த்து வாலர் கண்ணீர் சிந்தினார். குழந்தைகள் மகிழ்ந்தனர். சோழமுடையார் கோயிலின் முன்பு கூடினர். மேஜர் ராபின் கல்யாணி வாலரின் மனைவி கேத்தரீனையும், பாத்திமாவையும், தனது கூட்டாளிகளுக்கும், அவர்களது குடும்பப் பெண்களுக்கும் அறிமுகப்படுத்திவிட்டுக் கூட்டத்தில் பேசினார்.

"இந்தப் பெண் கேத்தரீன், தென்னிந்தியப் புரட்சியாளர்களின் தேவதை. அன்பு நிறைந்தவர். இவளது அன்பிற்குக் குடும்பம், இனம், நாடு என்ற வரையரை ஏதுமில்லை. இந்த அன்பான கேத்தரீனுக்கு ஏற்ற அன்பான கணவர், தங்கமான குழந்தைகள், ஆதரவான உதவியாளர் பாத்திமா. மிஸ்டர் வாலருக்கு மட்டும் ஒரு வேண்டுகோள். நம்மைத் தேடி இங்கு ஆங்கிலேயப் படைகள் வராது. இங்கு நாம் உயிருள்ளவரை சுகமாக வாழலாம். விசாரணை, கைது, தண்டனை, சிறைச்சாலை என்று எந்தப் பயமும் உங்களுக்கு வேண்டாம். அதே சமயம் தேவன், சாத்தான், வேதம் என்று எங்களைப் பயமுறுத்த வேண்டாம். அன்புடையவர்களாக வாழ்வோம். திடீர் திடீரென பஞ்சம், பெரியம்மை, பிளேக், காலரா என்று தீர்க்க முடியாத நோய்கள், அடிக்கடி நடக்கும் போர்கள் என வாழ்க்கை நிச்சயமில்லாமல் இருக்கிறது. மருது பாண்டியர்கள், ஊமைத்துரை, கோபால் நாயக்கர் போன்ற வீரர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்தனை செய்வோம்" என்றார்.

சிறிது நேரப் பிரார்த்தனைக்குப் பின்பு,

"சரி, இன்றைக்கு வகுப்பு வேண்டுமா? நாளை வைத்துக் கொள்ளலாமா?"

"இல்லை மேஜர், இன்று வகுப்பு வேண்டாம். நம்முடைய வெற்றி சிறியது என்றாலும், நாம் அதைக் கொண்டாட வேண்டும்."

"ஆமாம்டா. நீ சொல்றது சரிதான். குடைச்சல் கொடுக்கறதுக்கும் நம்ம ஆளுகளே இருக்காங்கடான்னு வெள்ளக்காரனுங்களுக்குத் தெரியணும். மமதையில் திரியும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பாதுகாவலில் இருந்து நாம மிஸ்டர் வாலரை, கேத்தரீனை, குழந்தைகளை, பாத்திமாவை காப்பாத்தியிருக்கோம். சிறைச்சாலையை

உடைத்துப் போராளிகளை மீட்டால் உடனே பொது மக்களுக்குத் தெரியும். பரபரப்பாகப் பேசுவார்கள். அந்த அரசாங்கத்தையும் நிலைகுலையச் செய்யும். போரில் ஈடுபட்ட தனி நபர்களை மீட்பது வெளியில் தெரியாது. ஆனால் அரசாட்சி செய்பவன் மரியாதையை அவனைச் சுற்றி உள்ளவர்களிடம் கடுமையாகக் குலைத்துவிடும். நொந்து போவார்கள். நாம் அந்த வேலையைச் செய்துள்ளோம்."

சின்ன மருதுவின் கண் முன்னாலேயே அவரது அண்ணன் மகன்கள், மருமகள்கள், பேரன்கள், சக நண்பர்கள், போராளிகள் என ஐநூறுக்கும் மேற்பட்டோரைத் தூக்கிலிட்ட கவர்னர் எட்வர்ட் கிளைவ், கலெக்டர் லூஷிங்டன், லெப்டினென்ட் கர்னல் அக்னியூ ஆகியோருக்கு நாம் கொடுக்கும் பதில் அடி. "கெட்டவர்களை சந்தோசப்பட விடக்கூடாது. எதையோ பெருசாச் சாதித்து விட்டோம் என்று தலைக்கனம் பிடித்தவர்களுக்கு, இந்தியத் தாய்களுக்குப் பிறந்த எளியவர்களான நாம் பதில் மரியாதை செய்துவிட்டோம். நம் வீரர்களின் காயங்களுக்கு நாம் போடும் மஞ்சப்பத்துடா இது. காயம் ஆற நாளாகும். ஆனால் ஆறிவிடும்." மேஜர் ராபின் கல்யாணியின் கண்களில் வழிந்த கண்ணீரை கேத்தரீனின் குழந்தை துடைத்துவிட்டது.

•

50

மலேசியக் கடல் பயணம் எண்பது நாட்கள் நீடித்தது. நாடு கடத்தப்பட்ட போராளிகளுக்குப் பயணத்தின்போது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொடுமையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டன. மலேசியப் பயணம் முழுவதும் கை விலங்குகளால், இருவர் இருவராகப் பிணைக்கப்பட்டனர். அனைத்துக் கைதிகளுக்கும் உணவு சமைப்பதற்காக வைக்கப் பட்டிருந்த உணவுப் பொருட்களும் குடிநீரும் கூட மிகவும் குறைவாகவே இருந்தன. அதுவும் வெகு விரைவிலேயே தீர்ந்து போனதால், பல நேரங்களில் அவர்கள் தண்ணீர் குடித்துக் காலத்தைக் கடத்தினர். நாளாக நாளாகத் தண்ணீரும் இன்றித் தாங்க முடியாத துயரங்களுக்கு ஆளான பலர் பயணத்தின்போது நோய்வாய்ப் பட்டனர். ஒருவர் காய்ச்சலால் இறந்துவிட்டார். தன்

குடும்பத்தினரை நினைத்துத் துயரம் தாங்க முடியாத மற்றொருவர் கடலில் குதித்து உயிரை விட்டார். கப்பலில் நாடு கடத்தப்பட்டவர்களில் பலர் தங்களின் வாழ்நாளில் ஐந்து மைல் தூரத்திற்குமேல் பயணப்படாதோர். உள்ளூரின் சிறு காற்றில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள், கடலின் பேரிரைச்சலில் பயந்து நடுங்கினர். மரணத்திலிருந்து தப்பித்த எஞ்சியோர், முன்பின் அறியாத பினாங்கிற்குச் சென்றடைந்தனர்.

பினாங்குக் கடற்கரையில் இறங்கிய போராளிகளில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே நடக்கும் அளவிற்கு வலுவுடன் இருந்தனர். அனைவரும் கப்பலை விட்டு இறங்கிச் செய்வதறியாது திகைத்தபடி நின்றனர். கரையோரமாக அலைந்தனர். பசியும், உடல் வலியும் அவர்களைச் சிறுகச் சிறுகத் தின்று கொண்டிருக்க, பினாங்கு நாட்டு மக்களுடன் கலந்தனர்.

பினாங்குப் போய் சேர்ந்ததும் சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் தன்னுடைய குழுவிலிருந்து பிரிக்கப் பட்டார். அவரைச் சுமித்ரா தீவிலுள்ள பென்கோலனுக்குக் கொண்டு சென்றனர். அந்தத் தீவில் ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் இருந்த மால்பரோ கோட்டைக்கு அழைத்துச் சென்றனர். ஆங்கிலேயர்கள் அந்தக் கோட்டையை அவசியச் செய்திகளை வாங்கி அனுப்புவதற்காகப் பராமரித்து வந்தனர்.

சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவர் இந்தக் கோட்டையில்தான் இருபத்து நான்கு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார்.

இருபத்து ஆண்டுகளுக்குப் பிறகு, டச்சுக்காரர்கள் பென் கோலனை கைப்பற்றினர். பென்கோலனிலுள்ள மால்பரோ கோட்டையும் கைப்பற்றப்படும் என்று தெரிந்தவுடன், ஆங்கி லேயர்கள், வெங்கம் பெரிய உடையணத் தேவரை மீண்டும் பினாங்கிற்கு இடம் மாற்றினர்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இதே பினாங்குக் கடற்கரையில்தான் தனது பனிரெண்டு வயது மைத்துனனும், சின்ன மருதுவின் மகனுமான துரைசாமியை விட்டு விட்டு சிவகங்கை அரசர் வந்திருந்தார். பினாங்கு வந்து சேர்ந்தவுடன் துரைசாமியைப் பார்க்க வெங்கம் பெரிய உடையணத் தேவர் விரும்பினார். ஆனால் அப்பொழுதுதான் பினாங்குச் சிறைக்குக் கொண்டு வரப்பட்ட பெரிய உடையணத் தேவர் சிறையில் மட்டுமே இருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. பினாங்கிலேயே இருந்த போராளிகள் அனைவரையும் பினாங்கு நகரத்திற்குள் சுதந்திரமாக சுற்றித் திரிய ஆங்கிலேய அரசு

அனுமதித்திருந்தது. அதனால், அவரால் யாரையும் சந்திக்க முடியவில்லை. காலத்தின் விசித்திரத்தை யாரால் அறிய முடியும்? பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட மேஜர் பானர்மேன் அப்போது பினாங்கின் கவர்னராகி இருந்தான்.

கர்னல் அக்னியூவிற்குத் தேவையான தகவல்களைத் தந்து, தன்னுடைய நண்பன் சின்ன மருதுவின் வீழ்ச்சிக்குச் சாட்சியாக இருந்த மேஜர் வெல்ஷ், அப்பொழுது பினாங்கு எனப்பட்ட ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவிற்குச் சுற்றுலா வந்திருந்தான். அவன் வாழ்க்கையின் துயரமோ, சாபமோ, அவன் பினாங்குத் தீவில் சிறு பாலகனாக நாடு கடத்தப்பட்ட துரைசாமியை சந்திக்கிறான்.

சீனாவிலும் லண்டனிலும் சிறிது காலம் செலவழித்த பின்னர், உடல்நலம் கருதி கடலோர நகரான பினாங்குத் தீவிற்கு ஓய்வுக்காக வந்திருந்தான் வெல்ஷ். துரைசாமியை சந்தித்த பிறகு வெல்ஷ் அமைதி இழந்தான். கடந்துபோன இருபத்தைந்து ஆண்டுகள் அவன் நினைவில் அலைமோதத் தொடங்கின.

தென்னிந்தியா முற்றிலுமாக கிழக்கிந்தியக் கம்பெனியின் கைக்கு வந்துவிட்டது. புதுக்கோட்டை, கொச்சி, திருவிதாங்கூர், சிவகங்கை, தஞ்சாவூர், ராமநாதபுரம் அரசர்களும், பிற ஜமீன்தார்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாகி விட்டனர். பெரிய மருதுவுடன் சேர்ந்து காட்டில் நடத்திய வேட்டைகளும், கறிவிருந்துகளும், வளரிப் பயிற்சியும் இப் பொழு தும் முன்னால் நடப்பது போலவே இருந்தன. போர் சமயத்தில் மருது பாண்டியர்களைப் பற்றித் தான் கொடுத்தத் தகவல்கள்தான், கர்னல் அக்னியூவிற்குப் பயன்பட்டன என்பது நினைவில் வந்து சென்றன. யூகிக்கவே முடியாத ஒரு தூர தேசத்தில் இருந்து வந்த தன்னை அவர்கள் எவ்வளவு அன்புடன் போஷித்தார்கள்? எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள்? அவர்களின் திறந்த அரண்மனை எனக்கு ஆறுதலாக இருந்திருக்கிறது. இவனும் வெள்ளையன்தானே, காட்டிக் கொடுத்து விடுவானோ என்று அவர்களின் சந்தேகப் பார்வையை நான் என்றுமே சந்தித்ததில்லை.

மாண்புமிகு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆயிரக்கணக்கான ஊழியர்களில் ஒருவனான நான், தீவாந்திரக் கைதியாக உள்ள துரைசாமிக்கு என்ன உதவியை செய்துவிட முடியும்?

மனசாட்சியை பேசவே விடாமல் எது என்னைக் கட்டிப் போட்டிருக்கிறது? கம்பெனி கொடுத்திருக்கிற உயர் பதவியா? வசதியான வாழ்வா? கம்பெனியன் ஊழியன் என்ற செல்வாக்கா? மருது பாண்டியர்களுக்கு எதிராக ஒரு தகவலையும் சொல்லாமல், என்னுடைய மேஜர் பதவியை துறந்துவிட்டு நான் நாடு திரும்பி இருந்தால், கம்பெனி எனக்கு மரணதண்டையா கொடுத்திருக்கும்? அப்படிக்கூட நடந்திருக்கலாம்.

கேள்விகளால் துளைக்கும் மனதைத் தேற்றிக் கொள்ள முயன்று தோற்றுக் கொண்டிருந்தான் வெல்ஷ். விழித்துக் கொள்ளும் மனத்தை சமாதானப்படுத்த முடியவில்லை.

நாட்கள் நரகமாயின. தூக்கம் வராமல் தவித்த நள்ளிரவில் தன்னுடைய உயர் அதிகாரிகளிடம் சொல்ல முடியாத, மறுத்துப் பேச முடியாத, அநீதிகளைத் தடுத்து நிறுத்த முடியாத மனபாரங்களை, அந்த நள்ளிரவில் எழுதத் தொடங்கினான் வெல்ஷ்.

•



ரிச்சர்ட் கோலே மார்கஸ் வெல்லெஸ்லி

Richard Colley Marques Wellesley
(20.06.1760 - 26.09.1842)

கல்கத்தாவிலிருந்த இந்தியாவின் கவர்னர் ஜெனரல். டிரிம், ஹாரோ, ஈடன், கிரைசட் சர்ச், ஆக்ஸ்போர்ட் என மிகச் சிறந்த கல்விக்கூடங்களில் படித்தவர். இங்கிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர். **1797**-இல் மெட்ராஸ் கவர்னர். **18.05.1798** முதல் **30.07.1805** வரை கல்கத்தாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர். தனக்கு முன்பு இருந்த மற்ற கவர்னர் ஜெனரல்கள் கடைப் பிடித்த அமைதிப்போக்கைக் கைவிட்டு அராஜகத்தில் ஈடுபட்டவர். ஹைதராபாத் நிஜாமை மிரட்டி, பிரெஞ்சுக் காரர்களோடு அவர்கள் கொண்டிருந்த பல வருடத் தொடர்பைவிட வைத்தவர். மொகலாயர்களுக்குப் பின் வலுவாக இருந்த மராத்தியர்களை ஓரங்கட்டியவர். மொரீஷியஸ் தீவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களைத் திப்பு சுல்தான் தொடர்பு கொண்டதைத் தெரிந்துகொண்டு திப்புவை ஒடுக்க ஆணையிட்டவர். திப்புவின் இறப்பிற்குப்பின் மைசூரில் உடையார்களின் ஆட்சியை மீளக்கொண்டு வந்தவர். **1800**-இல் தஞ்சாவூரை மராத்திய அரசனிடமிருந்து தட்டிப் பறித்து கலெக்டரின் நேரடி ஆட்சியின்கீழ் கொண்டு வந்தவர். தென்னிந்தியப் புரட்சியாளர்கள் ஒடுக்கப்பட்ட போது, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர். ஆப்கானிஸ் தானிலும், எகிப்திலும், கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரத்தை நிலைநிறுத்தியவர். பிரெஞ்சுப் படையினரிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை மீள ஒப்படைக்கச் சொன்ன கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணையை மதிக்காதவர். அதன் காரணமாகப் பதவி விலகல் கடிதம் கொடுத்தவர். கிழக்கிந்தியக் கம்பெனி இவரது பதவி விலகலை ஏற்காமல் இவர் வகித்த கவர்னல் ஜெனரல் பதவியோடு சேர்த்து கூடுதல் பொறுப்பாக இந்தியாவின் கமாண்டர் இன்

சீப் பாகவும் நியமித்தது. சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் போன்ற மராத்திய அரசர்களை ஒடுக்கியவர். இந்திய ஆட்சிப் பணிக்கான கல்லூரியைக் கல்கத்தாவில் நிறுவியவர். வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையை அரசு விடுமுறையாக இந்தியாவில் அறிவித் தவர். இந்திய இலக்கியங்களைப் படிப்பதிலும், விவாதிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவர். இந்தியாவின் கவர்னல் ஜெனரல் பதவியிலிருந்து விலகிய பிறகு ஸ்பெயின் தேசத்தின் தூதராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்தின் நிதி மற்றும் வெளியுறவு அமைச்சர். **1835**-இல் இவர் பணி ஓய்வு பெற்றபோது வருடத்திற்கு **20,000** பௌண்ட் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. லண்டனிலும், கல்கத்தாவிலும் இவருக்குச் சிலைகள் உள்ளன.



லார்ட் எட்வர்ட் கிளைவ்

Edward Clive
(07.03.1754 - 16.05.1839)

மெட்ராஸின் கவர்னராகவும், இந்தியா வின் கவர்னர் ஜெனரலாகவும் இருந்த ராபர்ட் கிளைவ்வின் மகன். தந்தையைப் போலவே மெட்ராஸ் கவர்னராக இருந்தவர். மிகவும் வலுவான உடல் அமைப்பைப் பெற்றவர். செப்டம்பர் **1799**-லிருந்து ஆகஸ்ட் **1803** வரை இவர் மெட்ராஸ் கவர்னராக இருந்த காலத்தில்தான் தென்னிந்தியப் புரட்சியாளர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர்கள், ஊமைத்துரை, விருப்பாச்சி கோபால் நாயக்கர், தூந்தாஜி வாக் போன்றவர்கள் தூக்கிலிடப் பட்டனர். அடுத்த மூன்று ஆண்டுகளில் மராத்தியர்களை ஒடுக்கிய தற்காக மரபை மீறி பிரிட்டிஷ் நாடாளுமன்றம் **1804**-ஆம் ஆண்டு இவனுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றியது. ஐயர் லாந்திற்கான லார்ட் லெப்டினெட்டாகவும் பிரிட்டன் நியமித்தது. ஆனால், இவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

ஸ்டீபன் ரம்போல்ட் லூஷிங்டன்

Stephen Rumbold Lushington
(06.05.1776 - 05.08.1868)

ரக்பீ பள்ளியில் படித்தவர். **1790**-ஆம் ஆண்டு மெட்ராஸ் வந்தார். ஆரம்பத்தில் பெர்ஷிய மொழிபெயர்ப்பாளராகப் பதவி வகித்தார். கமாண்டர் இன் சீப்பாகவும், சிறிது காலம் மெட்ராஸ் ஆக்டிங் கவர்னராகவும் இருந்த ஜெனரல் ஹாரிஸின் தனிச் செயலராக இருந்தவர். பின்னாளில் அவரது மருமகன் ஆனார். திருநெல்வேலி கலெக்டராக இருந்தவர். **1807**-இல் கிழக் கிந்தியக் கம்பெனியின் கலெக்டர் பதவியை விட்டு விலகி காண்டர்பெரி, ரைய் என்ற இரு தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பின ரானார். அக்டோபர் **1827** முதல் அக்டோபர் **1832** வரை மெட்ராஸின் கவர்னராகப் பதவி வகித்தார். **92** வயது வரை வாழ்ந்த இவர், தனது மாமனார் ஜெனரல் லார்ட் ஹாரிஸின் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக எழுதி வெளியிட்டவர். இவர் திருநெல்வேலி கலெக்டராக இருந்தபோதுதான் பாளையங்கோட்டைச் சிறை உடைக்கப்பட்டு ஊமைத்துரை காப்பாற்றப்பட்டார். சிறை உடைப்பிற்குப் பிறகு எட்டு மாதங்களில் மருதுபாண்டியர்கள், ஊமைத்துரை மற்றும் பலர் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர். கர்நாடக மாநிலத்திலுள்ள ஜோக் நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள உஞ்சாரா நீர்வீழ்ச்சிக்கு, லூஷிங்டனின் பெயர் வைக்கப்பட்டிருந்தது.

லெப்டினென்ட் கர்னல் பாட்ரிக் அலெக்ஸாண்டர்

Adjutant General Patrick Alexander Agnew
(1765 - 1813)

லெப்டினென்ட் கர்னல் அலெக் ஸாண்டர் அக்னியூவின் மகன். **14.04.1794**-இல் மார்கிரெட் மெக்கின்டோஸ் என்ற பெண் ணுடன் இவருக்குத் திருமணம். **1792**-இல் ஜெனரல் காரன்வாலிஸின் துணைத் தளபதியாக இருந்தார். ஆகஸ்ட் **1765** முதல் **01.03.1796** வரை சிலோனின் மிலிட்டரி கவர்னர். **1799**-இல் திப்பு சுல்தானிடம் போரிட்ட ஜெனரல் ஹாரிசின் மிலிட்டரி செகரட்டரி. **1801**-இல் மருது சகோதரர்களையும், ஊமைத்துரையையும் அடக்க, தென் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டவர். ஊமைத்துரை ஜெயிலிலிருந்து தப்பியபின், மீண்டும் மேஜர் மெக்காலேவால் அவரைச் சிறைபிடிக்க முடியவில்லை. பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து போர்த் தலைமை ஏற்ற நான்கு நாளில் போரை ஆங்கிலேயர்களுக்குச் சாதகமாக லெப்டினென்ட் கர்னல் அக்னியூ முடிவுக்குக் கொண்டு வந்தவர். மருது பாண்டியர்களுடனான போரில் அவனுக்கு முழு அதிகாரம் தரப்பட்டது. பெரிய மருது, சின்ன மருது, விருப்பாச்சி கோபால் நாயக்கர் என பல புரட்சியாளர்களைத் தூக்கிலேற்றி கோரத்தாண்டவம் ஆடியவர். **1804**-இல் கர்னலாகப் பதவி உயர்வு. **1806**-இல் இவர் அறிமுகப்படுத்திய புதுவகை தொப்பியின் பெயர் ‘அக்னியூ தொப்பி.’ இந்தத் தொப்பி முஸ்லீம்களும், இந்துக்களும் வெறுக்கும்விதமாக இருந்தது. **10.07.1806**-இல் நடந்த வேலூர்ப் புரட்சிக்கு இந்தத் தொப்பியும் ஒரு காரணமாகவிட்டதால் லண்டனுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். விசாரணையின் முடிவில் எச்சரித்து விடப்பட்டார். பின்பு ஜாவாத் தீவிற்குப் சென்ற படைக்குத் படைத்தலைமை ஏற்றார். **1811**-இல் மேஜர் ஜெனரல். **08.01.1813**-இல் இறந்தபிறகு பாத் நகரில் உள்ள வால்காட் செயின்ட் ஸ்வித்தின் சர்ச்சில்

அடக்கம் செய்யப்பட்டார். இவரது பேரனுக்கும் அவரது பெயர்தான். சர் பாட்ரிக் டால் ரீகல் அக்னியூ **(1868 - 1925)** இவர் ஒரு ஐ.சி.எஸ்.அதிகாரி. பின்னாளில் பஞ்சாப் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியானார்.



லெப்டினென்ட் கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லி

Arthur Wellesley
(01.05.1769 - 14.09.1852)

கவர்னர் ஜெனரலாக இருந்த வெல் லெஸ்லியின் தம்பி. இங்கிலாந்தின் செல்சியா, ஈடன். பிரான்ஸிலுள்ள அன்கன்ஸில் படித்தவர். **1787** மார்ச் மாதம் என்சைன் என்ற கொடி பிடிக்கும் வீரனாக ராணுவப் பணியை ஆரம்பித்தவர். இவரது அண்ணன் வெல்லெஸ்லி மே **18, 1798-**இல் கவர்னல் ஜெனரல் ஆன போது, இவர் பினாங்கி லிருந்து ஒரு படையைப் பிலிப்பைன்ஸுக்கு அழைத்துச் சென்றிருந்தார். கவர்னர் ஜென ரலாகப் பதவியேற்ற அண்ணனின் அழைப்பை ஏற்றுக் கல்கத்தா வந்தார். மைசூர் புலி திப்பு சுல்தானை அடக்க, அண்ணன் உத்தரவிட்டார். ஆர்தர் வெல்லெஸ்லியின் தலைமையில் ஹைதராபாத் நிஜாமின் படைகளும் மைசூர் சென்றன. ஜெனரல் ஹாரிஸ் ஸ்ரீரங்கப் பட்டினத்தை மே **4, 1799-**இல் தாக்கியபோது ஆர்தர் வெல்லெஸ்லி போரில் கலந்து கொள்ளவில்லை. ரிசர்வ் படையின் தளபதியாக இருந்தார். திப்பு கொல்லப்பட்டவுடன் கவர்னர் ஜெனரலின் தம்பி என்பதால் ஆர்தர் வெல்லெஸ்லி மைசூரின் கவர்னராக நியமிக்கப்பட்டார். தூந்தாஜி வாக்கை செப்டம்பர் **1800-**இல் கைது செய்து தூக்கிலிட்டவர். **1802 - 1803-**இல் சிந்தியா, ஹோல்கர், பீரார் அரசர்களைத் தோற்கடித்து தக்காணத்தின் கவர்னராக உயர்ந்தவர். பாம்பேயில் இவனுக்கு வீரவாள் பரிசளிக்கப்பட்டது. பாம்பேயின் கமாண்டர் இன் சீப் பதவியை

நிராகரித்தவர். பின்னாளில் இந்தியாவின் கமாண்டர் இன் சீப்பாகவும், இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகவும் இருந்தவர். இந்தியாவில் பணியாற்றிய பின் இங்கிலாந்தில் பிரதம மந்திரி பதவி அடைந்த ஒரு சிலரில் இவனும் ஒருவர். வால்மரில் செப்டம்பர் **14, 1885**-இல் இறந்தார்.

ஹென்றி கவுலி வெல்லெஸ்லி

Henry Cowley Wellesley
(20. 01.1773 - 27.04.1847)

கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லியின் மற்றொரு தம்பி. அண்ணன் மார்கஸ் வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலாக இருந்த போது அவரது தனிச் செயலாளர். சில காலம் மைசூரின் சிவில் பணியாளர். திப்பு இறந்த பிறகு லண்டனுக்குச் சென்று, திப்புவுடன் நடந்த போரை பிரிட்டீஷ் மக்களுக்கு விளக்கியவன். **1801**-இல் அயோத்தியின் லெப்டினென்ட் கவர்னர், நாடாளுமன்ற உறுப்பினர். வியன்னா, ஸ்பெயின், பாரிஸ் ஆகிய நாடுகளில் இங்கி லாந்தின் தூதராகப் பின்னாளில் பணிபுரிந்தவர்.

மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ்

Major James Welsh
(12. 03.1775 - 24.01.1861)

எடின்பர்க்கில் பிறந்தவன் **1791**-இல் மெட்ராஸ் வந்தார். **1793**-ஆம் ஆண்டு நடந்த பாண்டிச்சேரி முற்றுகையிலும் **1796**-இல் நடந்த சிலோன் தாக்குதலிலும் பங்கு பெற்றவர் ஆர்தர் வெல்லெஸ்லியின் கீழ் பணியாற்றியவர். சில காலம், சின்ன மருதுவின் நெருங்கிய நண்பர். **1805** நவம்பரில் பாளையங்கோட்டையில் ஆங்கி லேயர்கள் கொல்லப்பட இருந்ததைக் கண்டு பிடித்துத் தடுத்தவர். **1809** ஆரம்பொலி திருவிதாங்கூர்ப் போரில் ஈடுபட்டவர். **1829**-இல் கோலாப்பூர் புரட்சியை அடக்கியவர். **1837**-இல் மேஜர் ஜெனரல். **1859**-இல் ஜெனரலாகப் பதவி உயர்வு. தனது நாற்பது வருட ராணுவ வாழ்க்கையை 'மிலிட்டெரி ரெமினிசன்ஸ்' (விவீறீவீtணீக்ஷீஹ் ஸிமீனீவீஸீவீsநீமீஸீநீமீs) என்ற புத்தகமாக எழுதியவர். இவர் எழுதிய புத்தகம்தான் மருது பாண்டியர்கள், ஊமைத்துரை உள்ளிட்ட தென்னகப் போராளிகளின் வாழ்க்கை வரலாற்றுக்கு அடிப்படை ஆவணம். பாத் நகரில் இறந்துவிட்டார்.

முகம்மது அலிகான் வாலாஜா
(1717 - 16.10.1795)

ஆற்காடு நவாப் அன்வர்தீன் கானின் இரண்டாவது மகன். **1749**-இல் ஹைதராபாத் நிஜாம் நசீர் அலியால் ஆற்காடு நவாப்பாக அறிவிக்கப்பட்டவர். சந்தா சாகிப்பும் பிரெஞ்சுப் படைகளும் இவர் திருச்சிக் கோட்டையில் இருந்தபோது கோட்டையை முற்றுகையிட்டனர். **1765**-இல் இவரை சுதந்திர அரசனாக அங்கீகரித்து, வாலாஜா என்ற பட்டத்தையும், அப்போதைய மொகலாய அரசர் வழங்கினார். **1763, 1781, 1785, 1787, 1792** என்று நினைத்த நேரத்தில் எல்லாம் ஓர் உடன்படிக்கையை ஆங்கிலேயர்களுடன் செய்துகொண்டு, அவர்களுக்குத்

தமிழகத்தை ஆளும் உரிமையை வழங்கியவர். இவர் அக்டோபர் **16, 1795**-இல் இறந்துவிட்டார். நான்கு ஆண்டுகள் கழித்து ஸ்ரீரங்கபட்டினத்தில் **1799**-இல் திப்பு சுல்தான் கொல்லப்பட்ட பின்பு இவர் திப்புவுக்கு எழுதிய சில ரகசிய கடிதங்களைப் பிரிட்டிஷ்காரர்கள் கண்டுபிடித்தனர். ஆகவே ஆற்காடு நவாப் பதவியை ஒழித்துவிட ஆங்கிலேயர்கள் முடிவெடுத்தனர். அந்த முடிவால் பாதிக்கப்பட்டது இவரல்ல. இவருக்கு அடுத்து நவாப் பதவிக்கு வந்த இவர் மகன் உம்தத் உல் உம்ராதான்.

உம்தத் உல் உம்ரா

(அக்டோபர் 1748 - 15.07.1801)

ஆற்காடு நவாப் முகம்மது அலியின் மூத்த மகன். தந்தையின் இறப்பிற்குப் பின்பு அக்டோபர் **1795**-இல் ஆற்காடு நவாபாகப் பதவியேற்றார். மே **1799**-இல் திப்பு வீழ்ந்த பிறகு இவரது தகப்பனார் திப்புவுக்கு எழுதிய கடிதங்கள் ஆங்கிலேயர்களின் கைக்குக் கிடைத்தது. அதன் காரணமாக **1792**-இல் அவரது தந்தையுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை கிழக்கிந்தியக் கம்பெனி ரத்து செய்தது. இவனுக்கு ஓய்வூதியம் தர முடிவு செய்தது. ஆனால் ஓய்வூதியம் அறிவிக்கப்படும் முன்பே இறந்துவிட்டார், இவரது பெரும் எதிரிகளாகக் கருதப்பட்ட மருது பாண்டியர்கள் காளையார்கோயில் போரை நடத்திக் கொண்டிருக்கும்போதே ஜூலை **15, 1801**-இல்.



ராபர்ட் கிளைவ்

Robert Clive

(25.09.1725 - தற்கொலை 22.11.1774)

எப்படியாவது பிழைத்துக் கொள்ளலாம் என மெட்ராஸ் வந்தவர். **1744**-இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் எழுத்தர் ஆனார். **1746**-இல் மெட்ராஸ் கோட்டையை பிரெஞ்சுப் படையினர் கைப்பற்றியபோது கம்பெனி எழுத்தராக இருந்த இவர் கடலூர் செயின்ட் டேவிட் கோட்டைக்குத் தப்பி ஓடினார். **1748**-இல் ராணுவத்தில் சேர்ந்தார். ஆகஸ்ட் **31, 1751**-லிருந்து ஐம்பது நாட்கள் ஆற்காடு கோட்டையை முற்றுகையிட்டு வெற்றியும் பெற்றார். எனவே, 'ஆற்காடு வீரர்' என்று புகழப் பெற்றார். **1752**-இல் காவேரிப் பாக்கத்தில் சந்தா சாகிப்பின் மகன் ராஜா சாகிப்பையும், அவனோடு வந்த பிரெஞ்சுப் படையினரையும் தோற்கடித்தவர். **1753**-லிருந்து **1756** வரை இங்கிலாந்தில் ஓய்வில் இருந்தார். பின்பு இந்தியா திரும்பி கடலூர் செயின்ட் டேவிட் கோட்டையின் லெப்டினென்ட் கவர்னராக **20.06.1756**-இல் பதவியேற்றார். கல்கத்தா 'ப்ளாக் ஹோல்' கொடுமை செய்த வங்காள நவாப் சிராஜ் உத் தவ்லாவை பழிவாங்க கல்கத்தா அனுப்பி வைக்கப்பட்டார். **1757**-இல் பிளாசிப் போர் வெற்றி. சிராஜ் உத் தவுலாவின் படைத்தளபதி மீர் ஜாபரிடம் நயவஞ்சகமாகப் பேசி அரசனிடமிருந்து பிரித்தவர். மீர் ஜாபரிடம் பெரும் பணம் பெற்றுக்கொண்டு, படைத்தளபதியை நவாப்பாக நியமனம் செய்தது இவர் என பின்னாளில் குற்றம் சாட்டப்பட்டது. வங்காள கவர்னராக நியமனம். **1760**-லிருந்து **1765** வரை இங்கிலாந்தில் ஓய்வில் இருந்தார். அங்கு பிளாசியின் பிரபு என்று பெயர் சூட்டப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக **1762**-இல் நியமனம் செய்யப்பட்டார். கிழக்கிந்தியக் கம்பெனியின் சேர்மன் சுல்லிவனுடன் தகராறு ஏற்பட்டதால் தேர்தலில் வேறு ஆளை நிறுத்தி சுல்லிவனைத் தோற்கடித்தார். தேர்தல்

முடிந்தவுடன் வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் மற்றும் கமாண்டர் இன் சீப்பாகப் பதவியேற்றார். மே 3, 1765 முதல் ஜனவரி 1767 வரை இந்தப் பதவிகளில் இருந்தார். மொகலாய அரசன் ஷா ஆலத்திடம் வங்காளம், பீகார், ஒரிசாவை ஆளும் உரிமையைக் கம்பெனிக்குப் பெற்றுத் தந்தார். கம்பெனி ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு பெற்றுத் தந்தார். 1767-இல் பணி ஓய்வு. எதிரிகளால் இவர்மீது லஞ்சப் புகார் பெறப்பட்டு லண்டனில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே 1774-ஆம் ஆண்டு நவம்பர் 22-இல் தற்கொலை செய்து கொண்டார்.

லெப்டினென்ட் கர்னல் சர் அயர் கூட்

Lieutenant General Sir Eyre Coote
(1726 - 28.04.1783)

1745-இல் கிழக்கிந்தியக் கம்பெனி ராணுவத்தில் சேர்ந்தார். ஜூன் 18, 1755-இல் கேப்டனாகப் பதவி உயர்வு. 1756-இல் வங்காளத்தில் சிராஜ் உத் தவ்லாவுடனான போரில் பங்கேற்பு. பிளாசிப் போரில் ராபர்ட் கிளைவ்வுக்கு உதவியாகப் பங்கேற்றவர். வந்தவாசிப் போரில் ஆங்கிலேயப் படையின் தளபதி. நவம்பர் 30, 1759-இல் வந்தவாசி, கரன்கூலி(தரங்கம்பாடி) என்ற இரு ஊர்களின் கோட்டைகளைத் தாக்கியவர். ஜனவரி 22, 1760-இல் வந்தவாசிக் கோட்டையைக் கைப்பற்றியவர். ஜனவரி 1761-இல் பிரெஞ்சுப் படைகளைப் பாண்டிச்சேரியில் முடக்கியவர். 1765-இல் கர்னலாகப் பதவி உயர்வு. பாராளுமன்ற உறுப்பினராக நியமனம். 1775-இல் மேஜர் ஜெனரல். 1777-இல் லெப்டினென்ட் ஜெனரல் மற்றும் கமாண்டர் இன் சீப். ஹைதர் அலியை ஒடுக்க கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸால் அனுப்பப்பட்டு 01.07.1781-இல் பரங்கிப்பேட்டைப் போரில் ஹைதரைத் தோற்கடித்தவர். வேலூர், வந்தவாசி, கடலூர்க் கோட்டைகளில் இருந்து

மைசூர்ப் படைகளை விரட்டியவர். ஜூன் **2, 1782**-இல் ஆரணியில் ஹைதர் அலியைத் தோற்கடித்தவர். இந்தச் சமயத்தில் உடல் நலிவுற்று கல்கத்தாவிற்குப் பயணப்பட்டார். **1783**-இல் மெட்ராஸ் திரும்பும்போது பிரெஞ்சுப் படையினரால் துரத்தப்பட்டார். மெட்ராஸ் வந்தடைந்த இரண்டாவது நாள் இறந்துவிட்டார். ஆர்ப்பாட்டம் இல்லாத பணி, அமைதியான, அன்பான தளபதி என தனது படை வீரர்களின் மதிப்பைப் பெற்றவர். இவரது பிரேதம் லண்டன் ஹாம்செயருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. வெஸ்ட் மினிஸ்டர் ஆபியில் இவரது பணியைப் பாராட்டி கிழக்கிந்தியக் கம்பெனி இவருக்கு நினைவிடம் அமைத்தது.

ஜோசப் பிரான்சிஸ் டுயூப்ளே

Joseph Francois Marquis Dupleix
(01.01.1697 - 10.11.1763)

இளம் வயதில் அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் பலமுறை கடற்பயணம் மேற்கொண்டு அனுபவப்பட்டவர். **1720**-இல் பிரெஞ்சு ராணுவ கமிஷனராகப் பதவி யேற்றார். **1730**-இல் சந்திரநாகூர் பேக்டரியின் தலைவர். **1741**-இல் பாண்டிச்சேரி கவர்னர். தன்னை 'மொகலாய நவாப்' என்று அழைத்துக் கொண்டவர். **1744**-இல் ஆரம்பித்த ஆற்காடு நவாப் அன்வர்தீனின் நட்பு சிறிது காலம் நீடித்தது. ஆற்காடு நவாப்பின் உதவியோடு செப்டம்பர் **21, 1746**-இல் மெட்ராஸ் கோட்டையைக் கைப்பற்றியவர். ஆற்காடு நவாப்பின் எதிரிகளான சந்தா சாகிப் முஜாபர் ஜங்கின் பக்கம் சேர்ந்து கொண்டார். ஹைதராபாத் நிஜாம் நாசர் சங்கையும், ஆற்காடு நவாப் அன்வர்தீனையும் ஆற்காடு இளவரசர் முகம்மது அலியையும் எதிர்த்துப் போர் நடத்தியவர். சந்தா சாகிப்பின் இறப்பிற்குப் பிறகு தன்னையே 'ஆற்காடு நவாப்' என்று அழைத்துக்

கொண்டவர். அக்டோபர் **14, 1754**-இல் இவரது மனைவியின் வரம்பு மீறிய அதிகார துஷ்பிரயோகம் காரணமாக இந்தியாவிலிருந்து திரும்பப் பெறப்பட்டார். பிரான்ஸில் வறுமையில் இறந்தார். **1870**-இல் பாண்டிச்சேரியில் இவரது சிலையைப் பிரெஞ்சு அரசாங்கம் நிறுவியது.

கர்னல் வில்லியம் புல்லர்ட்டன்

Col. William Fullarton
(1754 - 13.02.1808)

கிழக்கிந்தியக் கம்பெனியின் கர்னல். எடின்பர்க் யுனிவர் சிட்டியில் படித்தவர். **1780**-இல் இந்தியா வந்தார். **1780 - 1782**-இல் இரண்டாம் மைசூர்ப் போரில் ஹைதர் அலிக்கு எதிராகப் போரிட் டவர். **1780** - இல் வேலு நாச்சியாருக்கு எதிராகப் படை நடத்தியவர். திண்டுக்கல், தாராபுரம், பாலக்காடு, கோயம்புத்தூரைக் கைப்பற்றியவர். பின்னாளில் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர். டிரினிடாவின் முதல் கமிஷனர். 'வியூஸ் ஆன் இங்கிலிஷ் இன்ட்ரஸ்ட் இன் இந்தியா' என்ற புத்தகத்தை **1787**-இல் எழுதியவர். ஒரு ஸ்பானிஷ் இளம் பெண்ணை கர்னல் தாமஸ் பிக்டன் என்பவன் கொடுமைப்படுத்தியதை விசாரிக்க ஆங்கிலேய அரசால் அமர்த்தப்பட்டவர்.



ஸ்டிரின்ஜர் லாரன்ஸ்

Major General Stringer Lawrence
(06.03.1697 - 10.01.1775)

1727-இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் ராணுவத்தில் சேர்ந்து ஸ்பெயினில் பணியாற்றியவர். **1747**-இல் மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பணியில் சேர்ந்தார். பாண்டிச்சேரி அரியாங்குப்பத்தில் இருந்த பிரெஞ்சுக்காரர்களைத் தாக்கியபோது இவர் கைது செய்யப்பட்டார். **1749**-இல் இவர் பிரெஞ்சுக்காரர்களால் விடுவிக்கப்பட்டார். சந்தா சாகிப்பை திருச்சியில் முற்றுகையிட்ட போது ராபர்ட் கிளைவ்விற்கு இவர் மேல் அதிகாரி. கல்கத்தாவின் நடந்த 'பிளாக் ஹோல்' நடவடிக்கைக்குப் பழி வாங்க **1756**-இல் வங்காளத்திற்கு இவர்தான் சென்றிருக்க வேண்டும். அப்போது இவரது உடல்நிலை சரியில்லாததால் துணை தளபதி ராபர்ட் கிளைவ் வங்காளத்திற்குச் சென்று ஆங்கிலேயப் படைக்குத் தலைமை ஏற்றார். பணி ஓய்வு பெறும்போது ஸ்டிரின்ஜர் லாரன்ஸ் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார். ராபர்ட் கிளைவின் குரு. 'இந்திய ராணுவத்தின் தந்தை' என இவரை அழைப்பார்கள். வெஸ்ட் மினிஸ்டரில் உள்ள இவரது கல்லறையில் 'ஒழுக்கம் கடைபிடிக்கப்பட்டது. கோட்டை காக்கப்பட்டது. குடியிருப்புகள் பரவலாக்கப்பட்டன. இந்தியப் பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. கர்நாடகம் அமைதியானது' என்று எழுதப்பட்டுள்ளது.



சர் தாமஸ் ரம்போல்ட்

Sir Thomas Rumbold
(15.06.1736 - 11.11.1791)

பிப்ரவரி **1778** முதல் ஏப்ரல் **1780** வரை மெட்ராஸின் கவர்னர். ஆரம்ப காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் எழுத்தர். பின்பு ராணுவப் பணியில் சேர்ந்தார். ராணுவ அதிகாரிகளான ஸ்டிரின்ஜர் லாரன்ஸ், ராபர்ட் கிளைவின்கீழ் பணியாற்றியவர். ஹைதர் அலியைக் கட்டுப்படுத்தத் தவறியதால் கவர்னர் பதவியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டவர். லஞ்சம் பெற்றதற்காகவும், இந்தியச் சிற்றரசர்களைக் கொடுமைப் படுத்தியதற்காகவும் வழக்குத் தொடரப்பட்டு பல வருடங்கள் போராடி விடுவிக்கப் பட்டவர். இங்கிலாந்தின் யார்மவுத், வேமவுத் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்.

சார்லஸ் ஜோசப் மார்கஸ் டி புஸ்ஸி

Charles Joseph Patissier Marquis de Bussy
(1718 - 07.01. 1785)

பிரெஞ்சுக் கடற்படை தளபதி, **1746**-இல் பிரான்ஸிலிருந்து பாண்டிச்சேரி வந்து சேர்ந்தவர். **1751**-இல் ஹைதராபாத் நிஜாமான முஜாபர் ஜங் இறந்தபோது சலாபத் ஜங்கை நிஜாமாக நியமித்தவர். உதவி செய்த இவர்மீது பொறாமை கொண்டு **1756**-இல் ஹைதராபாத்தைவிட்டு வெளியேற நிஜாம் உத்தரவிட்டார். மூர்ஷிதாபாத்தில் **1757**-இல் நடந்த யுத்தத்தில் சிராஜ் உத் தவுலாவுக்கு உதவ மறுத்தவர். தௌலதாபாத், விசாகப் பட்டினத்தைக் கைப்பற்றி ஜூன் **1758**-இல் இவர் புகழின் உச்சத்திலிருந்த போது பாண்டிச்சேரியின் புதிய கவர்னர் ஜெனரல் கவுண்ட் டி லாலியால் போரை நிறுத்தி விட்டுப் பாண்டிச்சேரிக்குத் திரும்ப வரவழைக்கப்பட்டார். ஜனவரி **1760**-இல் சர் அயர் கூட்டிடம் வந்தவாசிப் போரில் தோற்று சிறைப் பிடிக்கப் பட்டார். பாண்டிச்சேரியை ஜனவரி **16, 1761**-இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றியதிலிருந்து **1783** வரை இவரைப் பற்றிய செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை. பின்பு மைசூர் அரசர் திப்புவுடன் தொடர்பில் இருந்தார். டுயூப்ளே காலத்தில் மிகவும் செல்வாக்கோடு இருந்த இவர் ,ஜனவரி **1785**-இல் பாண்டிச்சேரியில் இறந்தார்.

சந்தா சாகிப்

Chanda Sahib

(.....14.06.1752)

நவாப் தோஸ்த் அலிகானின் மருமகன். வாழ்ந்த காலத்தில் பெரும் வீரனாகக் கருதப்பட்டவர். **1736**-இல் நாயக்க ராணி மீனாட்சியை மிரட்டி திருச்சியைக் கைப்பற்றியவர். **1740**-இல் மராத்தியப் படை இவரைக் கைது செய்து பூனாவிற்கு அருகில் உள்ள சதாரா சிறையில் அடைத்து வைத்தது. டுயூப்ளேயின் பரிந்துரையில் **1748**-இல் மராத்தியர்கள் பெரும்பணம் பெற்றுக் கொண்டு இவரைச் சிறையிலிருந்து

விடுதலை செய்தனர். ஆம்பூரில் நிஜாம் முஜாபர் ஜங் மற்றும் சந்தா சாகிப்பின் கூட்டுப்படையால் ஆற்காடு நவாப் அன்வர்தீன் கொல்லப்பட்டார். சந்தா சாகிப்பை ஆற்காடு நவாப்பாக ஹைதராபாத் நிஜாம் முஜாபர் ஜங் அறிவித்தார். போரில் இறந்துபோன அன்வர்தீன் மகன் முகம்மது அலியை ஆங்கிலேயர்கள் களம் இறக்கினர். பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப்பை ஆதரித்தனர். ஆம்பூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு முகம்மது அலி தப்பி ஓடினார். சந்தா சாகிப் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார். மே **1752**-இல் தஞ்சாவூர் மராத்திய தளபதியிடம் சந்தா சாகிப் சரண் அடைந்தார். அவரது தலையை வெட்டி முகம்மது அலிக்கு மராத்திய தளபதி அனுப்பினார்.

விஜயரகுநாத தொண்டைமான்

(1759 - 01.02.1807)

1789 முதல் **1807** வரை புதுக்கோட்டை அரசன். முந்தைய தொண்டைமானுக்கு ஆண் வாரிசு இல்லை. ஆகவே அவரது தங்கை மகனான விஜயரகுநாதன் அடுத்த தொண்டை மானாகத் தனது முப்பதாவது வயதில் பதவியேற்றார். **1752** ஆம் ஆண்டு முதல் ஆற்காடு நவாப், ஆங்கிலேயர்களின் கூட்டணியில் புதுக்கோட்டை தொண்டைமான்கள் தொடர்ந்து இருந்தனர். மைசூர். தஞ்சாவூர், திருநெல்வேலிப் பாளையக்காரர்களுடனான போரிலும் ஆங்கி லேயர்களுடன் தொண்டைமான் நட்புறவுடன் இருந்தார். **1759-60**-களில் ஆங்கிலேயர்கள் வலுவிழந்து மெட்ராஸ் கோட்டையை பிரெஞ்சுக்காரர்களிடம் விட்டுவிட்டு ஓடியபோதும், புதுக்கோட்டை தொண்டைமானின் படை ஆங்கிலேயர்களுடன்தான் நட்புறவுடன் இருந்தது. ஆங்கிலேயர்களிடமிருந்து அதிக மரியாதை, பரிசுகள், ராஜ்பகதூர் என்ற பட்டம் பெற்ற வண்ணம் இருந்தவர். குதிரைகள், யானைகள், தங்கச் செங்கோல்கள், நௌபத் என்னும் முரசு என்று **1791** முதல் **1803** வரை பரிசில்கள் பெற்ற வண்ணம் இருந்தவர்.

கட்டபொம்மனைக் கைது செய்ததற்காகவும், சிவகங்கை, ராமநாதபுரம் அரசுகளுக்கு எதிராகப் படை நடத்தியதற்காகவும் இன்னும் குற்றம் சாட்டப்படுகின்றவர். சின்ன மருதுவுடனான போரில் காளையார்கோயில் காட்டை வெட்டி அப்புறப்படுத்த கர்னல் அக்னியூவிற்குக் காடு வெட்டிகளை அனுப்பியவர். காளையார் கோயில் காட்டில் எந்தத் திசையில் சென்றால் மருதுபாண்டியர்களை விரைவில் வெல்லலாம் என்று வழிகாட்டியவர். மருதுவுடன் இருப்பவர்களின் உறவினர்களை, அவர்கள் வீட்டுப் பெண்களைக் கைது செய்தால், மருது சகோதரர்கள் வலுவிழந்து தோல்வியுறுவர் என்று கர்னல் அக்னியூவிற்குக் கடிதம் எழுதியவர். அதனால் மருது சகோதரர்களின் இறப்பைத் துரிதப்படுத்தியவர். இவர் இறந்தபோது இவரது மனைவி ஆயி அம்மா, தனது பத்து வயது, ஒன்பது வயதுடைய மகன்களை தஞ்சாவூரிலிருந்த ஆங்கிலேயத் தளபதி கேப்டன் பிளாக்பர்ன் பொறுப்பில் விட்டுவிட்டுக் கணவனோடு சேர்ந்து தீப்பாய்ந்தாள். இந்திய வரலாற்றில் காண இயலாதவாறு ஆங்கிலேயர்களிடம் எந்த நட்பு உடன்படிக்கையும் செய்யாமல் அவர்களுக்கு உதவியாக இருந்தவர். அதனால் ஆற்காடு நவாப்பின் படைகள் தமிழகத்தின் பல பகுதிகளில் அவ்வப்போது கப்பம் கேட்டு, கொள்ளை அடித்த போதும் ஒருமுறைகூட புதுக்கோட்டைப் பகுதிக்கு அவர்களை வர விடாமல் தன் மக்களைக் காத்தவர்.

பிரதானி முத்து இருளப்பப் பிள்ளை
(... - செப்டம்பர் 1772)

ராமநாதபுரம் சேதுபதியின் பிரதானி. முதுகுளத்தூர்ப் பகுதியில் பிறந்தவர். விஜய ரகுநாத முத்து ராமலிங்க சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் பிரதானி. ஆங்கிலத்தில் சிறப்பாகப் பேசும் ஆற்றல் பெற்றவர். குழந்தைப் பருவத்தில் தந்தையை இழந்து விதவை தாயார் மற்றும் உச்சிநத்தம் கிராமம் மல்லைய ரெட்டியாரின் ஆதரவில் வளர்ந்தவர்.

1760-ஆம் ஆண்டு தளபதி மார்ட்டின்ஸ் சேதுபதியிடம் பரிந்துரைத்து இவரை ராமநாதபுரத்தின் பிரதானியாக்கினார். எத்தனை சேதுபதிகள் மாறினாலும், முத்து இருளப்பப் பிள்ளைதான் சேதுபதியின் பிரதானி. ஆங்கிலேயத் தளபதி மார்ட்டின்ஸின் உத்தரவுக்கு மட்டுமே கட்டுப்படுவார். சேதுபதி சமஸ்தானப் புலவர்கள் இவரைப் பாராட்டி பல பாடல்கள் பாடி உள்ளனர். மதுரையில் கலெக்டர் மெக்லாய்டின் ஆதரவில் சிறிது காலம் தங்கியிருந்தார். கம்பம், பெரிய குளம் குத்தகைதாரராக இருந்தபோது இவர் மேலூர் கள்ளர்களின் துணைகொண்டு சில தவறான

செயல்கள் செய்ததற்காக மதுரை கலெக்டர் இவரைப் பதவி நீக்கம் செய்தார்.

தளபதி மார்ட்டின்ஸ் உதவிபெற்று மீண்டும் ராமநாதபுரம் பிரதானியானார். அரண்மனைக் கணக்குகளில் குளறுபடி செய்ததோடு, அரண்மனை அலுவலர்களை அவமரியாதையாகப் பேசுவதாகச் சேதுபதி ஓரிரு முறையும், மங்களேஸ்வரி நாச்சியார் பல முறையும் கம்பெனிக்குக் கடிதம் எழுதியும் இவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முல்லைப் பெரியாறு அணையை கட்ட வேண்டும் என்று முதன்முதலில் சேதுபதியிடம் சிபாரிசு செய்தவர்.

சேதுபதி மங்களேஸ்வரி நாச்சியார்
(.... - 1812)

'ரிபெல்' முத்துராமலிங்க சேதுபதியின் மூத்த சகோதரி. இவரது கணவர் ராமசாமி தேவன் என்ற சாமித் தேவன். கணவனும், மனைவியும் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதிமீது தொடர்ந்து புகார்க் கடிதங்கள் எழுதியவர்கள். ராமநாதபுரம் ரீஜென்ட் மார்டின்ஸ், துபாஷ் முத்திருளப்பப் பிள்ளை, ஆற்காடு நவாப் ஆகியோரின் தொடர் நிர்பந்தத்தால் ரிபெல் முத்துராமலிங்கம் கம்பெனியால் கைது செய்யப்பட்டார். எட்டு ஆண்டுகள் சேதுபதி பதவி நிரப்பப்படாமல் இருந்தது. ஆற்காடு நவாப்புக்கும், மங்களேஸ்வரி நாச்சியாருக்கும் நடுவில் யார் அடுத்த ஆட்சியாளர் என்ற போட்டி வந்ததில் கம்பெனி மங்களேஸ்வரி நாச்சியாரை **29.04.1803**-இல் தேர்வு செய்தது. **1794**-இல் 'ரிபெல்' முத்துராமலிங்க சேதுபதி இரண்டு லட்சத்து இருபதினாயிரம் சங்குகளை கீழக்கரை எல்லத்தண்டல் என்ற மாலுமி மூலமாகக் கல்கத்தாவிற்கு விற்பனைக்காக அனுப்பினார். நாற்பது நாட்கள் பயணம் செய்த சரக்குகள் சேதுபதியின் கல்கத்தா பிரதிநிதி தருமப் பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டன. அதற்கான பணத்தை பெறுவதற்குள் சேதுபதி கைதாகிவிட்டதால், மங்களேஸ்வரி நாச்சியார் கல்கத்தா சுப்ரீம் கோர்ட்டில் வாதாடி அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டார். **1803**-லிருந்து **1812** வரை ஒன்பது ஆண்டுகள் ராமநாதபுரம் சேதுபதியாக இருந்தவர். இவருக்குக் குழந்தை இல்லை. அண்ணாசாமி பாண்டியன் என்பவரை சுவீகாரம் செய்தார். அவர் **1812**-லிருந்து **1820** வரை ராமநாதபுரம் சேதுபதியாக இருந்தார்.

இஸ்திமிரார் கௌரி வல்லபர்
(... - 17.06.1829)

படமாத்தூர் ஜமீன்தாரரான தேசக்காவலர் நமச்சிவாய தேவரின் இரண்டாவது மகன். மூத்த மகன் ஒய்யாத் தேவருக்குக் கண் பார்வை சரியில்லாததால் ஆங்கிலேயர்கள் அண்ணனை நிராகரித்து, தம்பியான இவரை சிவகங்கையின் ஆட்சியாளராகத் தேர்வு செய்தனர். வேலு நாச்சியாருக்கு நெருங்கிய உறவினர். வேலு நாச்சியாரின் மகள் வெள்ளச்சியைத் திருமணம் செய்ய வேண்டியவர். மருது சகோதரர்களுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை என்பதால் வெள்ளச்சியுடனான திருமணம் நடைபெறவில்லை. பலமுறை மருது சகோதரர்களால் சிறை வைக்கப்பட்ட இவர் வேலு நாச்சியாரின் தலையீட்டில் விடுவிக்கப்பட்டவர். அறந்தாங்கியில் தலைமறைவு வாழ்க்கையை நடத்தியவர். மருது பாண்டியர்களுடனான போர் உச்சத்தில் இருந்தபோது **12.09.1801**-இல் சோழவரத்தில் சிவகங்கையின் ஆட்சியாளராக ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டவர். சசி வர்ணத் தேவரால் நிறுவப்பட்ட சிவகங்கை அரசு எழுபதாவது ஆண்டில் முடிவுக்கு வந்தது. அந்த நேரத்தில் கலெக்டர் லூஷிங்டன் ஆட்சி உரிமை கோருபவர்களை விசாரித்து அவர்களிலிருந்து கௌரி வல்லபரைத் தேர்ந்தெடுத்து கிழக்கிந்தியக் கம்பெனியின் மெட்ராஸ் கவர்னருக்குப் பரிந்துரை செய்து அனுப்பினார். அதன் அடிப்படையில் சிவகங்கையின் ‘இஸ்திமிரார்’ என்ற புதிய பதவியில் சிவகங்கையின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். இவருக்குப் பத்து மனைவிகள், ஆறு மகள்கள். ஆண் வாரிசற்ற இவர் **1829**-இல் இறந்தபோது இவரது மூத்த அண்ணன் ஒய்யாத் தேவரின் மகன் முத்துவடுகநாத தேவர் சிவகங்கையின் அடுத்த இஸ்திமிரார் ஆனான்.

ஜமேதார் முகம்மது கலீல்

மருது பாண்டியர்களைக் காட்டிக் கொடுத்தவர். சொந்த ஊர் தெரியவில்லை. தஞ்சாவூர் மராத்தியப் படையில் குதிரை வீரனாக இருந்தவர். பின்பு கம்பெனி தளபதி காட்பிரே என்பவனிடம் வேலை பார்த்தார். **1784**-இல் ஆற்காடு நவாப்பிடம் வேலைக்குச் சேர்ந்தார். பின்பு வேலையிழந்து திருப்பத்தூரில் வாழ்ந்தார். மருதுவின் படையில் சேர்ந்து போரிட்டபோது ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். தளபதி அக்னியூவின் சாதுரியமான பேச்சால் மருது சகோதரர்களைப் பற்றிய முழு தகவல்களையும் சொல்லிவிட்டார். கருத்தான் என்ற வலையர் குலத்தவன் சொன்ன உளவுத் தகவல்களை உறுதி செய்தவர் இந்த முகம்மது கலீல். காளையார்கோயில் காட்டிற்குள் செல்லும் வழிகளையும் ஆங்கிலேயர்களுக்குக் காட்டிக் கொடுத்தார். மருது தூக்கிலிடப்பட்ட

பின்பு கர்னல் அக்னியூவின் பரிந்துரையில் மாதம் இருபது ஸ்டார் பக்கோடா பெற்றுக்கொண்டு திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து, வயதாகி இறந்தார்.

வீழ்ந்த பிறகு சரித்திரமானவர்கள்

பெரிய மருது என்ற
வெள்ளை மருது சேர்வைக்காரர்
(1748 - தூக்கிலிடப்பட்டது 24.10.1801)

மருது சகோதரர்களில் மூத்தவர். ஆங்கிலேயக் கலெக்டர்களிடம் நட்பு ரீதியில் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். முத்து வடுகநாத தேவர், வேலு நாச்சியார், வெள்ளச்சி நாச்சியார், வெங்கம் பெரிய உடையணத் தேவர் என்று தொடர்ச்சியாக ஆட்சி செய்த சிவகங்கை ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். வலிமை மிக்க

உடலும், சிவந்த நிறமும் உடையவராக அறியப்பட்டுள்ளார். **1781** முதல் **1801** வரை சிவகங்கையின் மந்திரி பிரதானி. சிவகங்கை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரின் மனைவி அரசி வெள்ளச்சி இறந்தபிறகு இவரது மகள் மருதாத்தாளை அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவருக்கு இரண்டாம்தாரமாக மணமுடித்துக் கொடுத்திருந்தார். காளையார்கோயில் இறுதிப் போர் ஆரம்பிக்கும் முன்பு, தம்பி சின்ன மருதுவைவிட்டு விலகி வந்தால், அனைத்து வசதிகளுடன் மதுரையில் தங்க வைப்பதாக ஆங்கிலேயர்கள் கொடுத்த உறுதிமொழியை நிராகரித்தவர். இவரது மகன்கள் சிவஞானத்தை கமுதிக் கோட்டையிலும், உடையானைத் திருச்சுழியிலும் **22.10.1801** அன்று ஆங்கிலேயர்கள் தூக்கிலிட்டனர். இரண்டு நாட்களுக்குப் பின் **1801** அக்டோபர் **24**-இல் தம்பி, மகன், மருமகன்கள், பேரன்களோடு சேர்த்துத் திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப்பட்டவர். இவரது மூன்று ஆண் மக்களும் தூக்கிலிடப்பட்டதால் குடும்பத்தில் பெண்கள் மட்டுமே மிஞ்சினர். மருது பாண்டியர் குடும்பத்தில் கணவனை இழந்த ஐந்து பெண்களுக்கும், அவர்களின் ஆறு பெண் மக்களுக்கும்,**1802**-ஆம் ஆண்டு முதல் **1804** வரை **71** சக்கரம் ஆறு பணம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு, பின்பு நிறுத்தப்பட்டது. **1821**-இல் பெரிய மருதுவின் மகள்கள் தங்கம்மாளும், ஆதி வீரலட்சுமியும் தங்களது இரு விதவைத் தாயார்களுக்கும், நான்கு பெண் மக்களுக்கும், **25** பணியாளர்களுக்கும் பிழைப்பிற்காக ஓய்வூதியம் கேட்டனர். ஆனால் ஆங்கிலேய அரசோ சிவகங்கையின் அப்போதைய ஜமீன்தார் கௌரி வல்லபரோ இவர்களுக்கு உதவி ஏதும் செய்யவில்லை.

சின்ன மருது சேர்வைக்காரர்
(1753 - தூக்கிலிடப்பட்டது **24.10.1801)**

பெரிய மருதுவின் தம்பி. அண்ணனைவிட ஐந்து வயது இளையவர். பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கட்டபொம்மன் தங்களின் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இழந்து சிவகங்கைக்கு **05.06.1799** அன்று அடைக்கலம் தேடி பழமாநேரி கிராமத் திற்கு வந்த போது வரவேற்றவர். கலெக்டர் காலின்ஸ் ஜாக்சனும், துபாஷ் ரங்கப் பிள்ளையும் பணம் மோசடி செய்வதாகக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் புகார் எழுதியவர். "எங்களது நிலங்கள் முழுவதையும் விற்று அதைக் கொடுத்தால்கூட கலெக்டரின் தேவையில் ஆறில் ஒரு பங்கைக் கூட ஈடுகட்ட முடியாது" என்று புகார் தெரிவித்தவர். இவரது புகார்க் கடிதத்தின் காரணமாகத் திருநெல்வேலி கலெக்டர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, துபாஷ் ரங்கப்பிள்ளை ராமநாதபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். துபாஷிடமிருந்து இழந்த பணத்தை வசூலிக்கச் செய்தவர். **03.06.1800**-இல் கோயம்புத்தூர் சிறை உடைப்புச் சம்பவத்தை ஏற்பாடு செய்து தோற்றவர். **02.02.1801** அன்று பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத்துரை மற்றும் சிவத்தையாவை விடுவித்தவர். இந்தியர்களின் பொது எதிரிகளான ஐரோப்பியர்களை ஏன் எதிர்த்துப் போரிடுகிறோம்? என்று மக்களுக்கு விளக்கி **16.06.1801**-இல் புகழ்மிகு பிரகடனத்தை வெளியிட்ட போராளி. இதற்குப் பதிலடியாக கர்னல் அக்னியூவின் அறிவிப்பு **02.07.1801**-இல் வெளிவந்தது. **25.07.1801**-இல் மருது பாண்டியர்களின் திருப்பத்தூர்க் கோட்டை ஆங்கிலேயர்கள் வசமாயிற்று. **30.07.1801**-இல் மருதுபாண்டியர்களின் சொந்த ஊரான சிறுவயல் கிராமம் தீக்கிரையாக்கப்பட்டது. **18.09.1801**-இல் பிரான்மலைக் கோட்டை, புதுக்கோட்டைத் தொண்டைமானின் படைகளிடம் வீழ்ந்தது. **1801** ஆகஸ்ட் முதல் நாள் ஆரம்பித்த காளையார்கோயில் காடுகளில் தொடங்கியப் போர் அக்டோபர் முதல் தேதியில் முடிவடைந்தது. சோழபுரத்திற்கும் ஒக்கூருக்கும் இடைப்பட்ட காட்டில் இவரை **19.10.1801**-இல் கைது செய்தனர். **24.10.1801**-இல் திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப்பட்டார். சின்ன மருது சேர்வைக்காரர் மகன் துரைசாமியை மேலூர் அருகே மூன்று நாட்கள் கழித்து **27.10.1801**-இல் கைது செய்தனர். நான்கு மகன்களும் தூக்கிலிடப்பட்டனர். ஐந்தாவது மகன் துரைசாமி பன்னிரண்டு வயது சிறுவனாக இருந்ததால் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார். இவரது இறப்பிற்குப் பின் இவரது மனைவிகள் நால்வர், மருமகள்கள், பேரக்குழந்தைகள் மற்றும் முன்னூற்று இருபத்தைந்து பேர்களுக்கு கி.பி.**1804** வரை பராமரிப்புத் தொகையாக **128** சக்கரம் **4** பணம் வழங்கப்பட்டது. பின்பு அது நிறுத்தப்பட்டுவிட்டது.

ஆங்கிலேய அரசோ, புதிய ஜமீன்தார் கௌரி வல்லபரோ உதவி செய்ய மறுத்துவிட்டனர். பூனாவிலிருந்த தளபதி தூந்தாஜி வாக்கிலிருந்து, நாங்குநேரி பகுதிப் போராளிகள் வரை ஏறக்குறைய வடக்குத் தெற்காக ஆயிரம் மைல்களில் வாழ்ந்த போராளிகளை ஒருங்கிணைத்த தென்னிந்தியப் போராட்டக் குழுவின் தலைவர்.

கட்டபொம்மன்

(1760 - தூக்கிலிடப்பட்டது 16.10.1799)

பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர். **1736**-இல் நாயக்க அரசி ராணி மீனாட்சி இறந்தபோது பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக இருந்தவர். வீரபாண்டியனின் தகப்பனாரான ஜெகவீரப் பாண்டியர், அடுத்து வந்த நாயக்க அரசர்களுக்கு அவர் கப்பம் கட்ட மறுத்து விட்டார். **1776**-இல் ஆற்காடு நவாப் கப்பம் கேட்டுத் தொந்தரவு செய்தார். **1778**-இல் வேறு வழியின்றி நவாப்புக்குப் பாஞ்சாலங்குறிச்சி உள்ளிட்ட பாளையக்காரர்கள் கப்பம் கட்ட ஆரம்பித்தனர். **1791**-இல் வீரபாண்டிய கட்டபொம்மன் பதவி ஏற்பு. கலெக்டர் ஜாக்சனை **1798** செப்டம்பர் **9**-ஆம் நாள் ராமநாதபுரம் அரண்மனையில் சந்தித்த போது பேச்சு வார்த்தை முறிந்து, அந்தச் சமயத்தில் ஏற்பட்ட கைகலப்பில் ஆங்கிலேயத் தளபதி லெப்டினென்ட் கிளார்க் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களுடன் நடந்த பாஞ்சாலங்குறிச்சியில் நடந்த போரில் தோற்று, சிறிது காலம் மருதுபாண்டியர்களிடம் அடைக்கலம் புகுந்தார் வீரபாண்டியன். புதுக்கோட்டைத் தொண்டமானுக்குச் சொந்தமான காளாப்பூர்க் காடுகளில் ஒளிந்திருந்தபோது கட்டபொம்மனைப் பிடித்துத் தர தொண்டைமானுக்குக் கடிதம் எழுதினார். செப்டம்பர் **24**-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். மதுரையிலிருந்து வந்த கேப்டன் ஸ்மித்திடம் தொண்டைமானின் வீரர்கள் கட்டபொம்மனை

ஒப்படைத்தனர். கயத்தாறில் மற்ற பாளையக்காரர்கள் முன்னிலையில் **18** நாட்கள் கட்டபொம்மன் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் முடிவில் கட்டபொம்மனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. **16.10.1799**-இல் கயத்தாறில் புளியமரம் ஒன்றில் தூக்கிலிடப்பட்டார்.

சிவத்தையா

(1763 - தூக்கிலிடப்பட்டது **16.11.1801)**

வீரபாண்டிய கட்டபொம்மனின் மூத்த தம்பி. வீரபாண்டி யனுக்கு அடுத்து பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரனாகப் பொறுப்பேற்றவர். பொறுமையும், அடக்கமும் உடையவர். தன்னை வெறுப்பவர்களையும் அரவணைக்கும் பண்பாளர். அண்ணன் கட்டபொம்மன்மீது அளவில்லா மரியாதையும், தம்பி ஊமைத்துரை மீது அளவில்லாத அன்பும் உடையவர். தொண்டமானின் ஆட்சிப் பகுதியில் கட்டபொம்மன் பிடிபட்டபோது உடனிருந்தவர். பாளையங்கோட்டைச் சிறை வாசம், சிறை உடைப்பு தொடங்கி பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முன்பு **16.11.1801** அன்று தூக்கிலிடப் பட்ட போதும் தம்பி ஊமைத்துரையைவிட்டு எப்போதும் பிரியாதவர்.

ஊமைத்துரை

(1765 - தூக்கிலிடப்பட்டது **16.11.1801)**

கட்டபொம்மனின் இரண்டாவது தம்பி. பேச இயலாதவர். வலுவில்லாத நோஞ்சான் போன்ற உடலமைப்புப் பெற்றவர். மக்கள் செல்வாக்கு அதிகம் உள்ளவர். **02.02.1801**-இல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பித்த நான்கே நாட்களில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் புதுப்பித்து **1500** வீரர்களைக் காவலுக்கு நிறுத்தியவர். **06.02.1801**-இல் வந்த ஆங்கிலேயப் படை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்க முயன்று தோல்வியுற்று **10.02.1801**-இல் பாளையங்கோட்டைத் திரும்பியது. **30.03.1801**-இல் மீண்டும் பாஞ்சாலங் குறிச்சிக்குத் தளபதி மெக்காலே தலைமை யில் ஆங்கிலேயப் படையினர்

வந்தனர். **21.05.1801**-இல் தளபதி மெக்காலேயை மாற்றிவிட்டு, தளபதி அக்னியூவைக் கிழக்கிந்தியக் கம்பெனி நியமித்தது. **24.05.1801**-இல் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வீழ்ந்தது. போரில் தோற்ற ஊமைத்துரை, **29.05.1801**-இல் சின்ன மருது சேர்வைக்காரரைத் தேடி சிவகங்கை வந்தார். சிவகங்கைச் சீமை பெரும் மரியாதை கொடுத்து ஊமைத்துரையை வரவேற்றது. போரில் தோல்வி முகம் கண்டனர். சிவத்தையாவையும், ஊமைத்துரையையும் வத்தலக்குண்டில் ஆங்கிலேயர்கள் கைது செய் தனர். **16.11.1801**-இல் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முன்பு தூக்கி லிடப்பட்டனர்.

விருப்பாச்சி கோபால் நாயக்கர்

(... - தூக்கிலிடப்பட்டது நவம்பர் 1801)

பழனிக்கு அருகிலுள்ள விருப்பாச்சிப் பாளையத்தின் ஜமீன்தார். தென் தமிழகத்தின் போராளிகளின் புரவலர். அனைத்துப் போராளிகளும் கூடும் இடம் இவரது பழனிக்காடுகள்தான். **06.05.1801**-இல் நத்தம் தாசில்தார் இவரைக் கைது செய்து ஆங்கி லேயர்களிடம் ஒப்படைத்தார். அதற்காக அவர் ஒரு குதிரையைப் பரிசாகப் பெற்றார். சின்ன மருது சேர்வைக்காரரின் நத்தம் பகுதி மணியக்காரர் வெங்கிடாசலம், கோபால் நாயக்கரைக் கைது செய்த தாசில்தாரைக் கொலை செய்தார். சித்திரங்குடி மயிலப்பன், மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர், தேவதானப்பட்டி பூசாரி நாயக்கர், பழனி முத்து சேர்வைக்காரர், நரசிங்கமங்கலம் குமாரத்தேவன், ஜகந்நாத அய்யர், சபாபதித் தேவர், காடல் குடி கீர்த்தி வீரகுந்த நாயக்கர், கள்ளர்களின் தலைவர் சேதுபதி, குளத்தூர் நாகராச மணியக்காரர், குளத்தூர் ஜமீன்தார் குந்த நாயக்கர், கோம்பை, நத்தம்

பாளையக்காரர்கள், மணப்பாறை லட்சுமி நாயக்கர், கோட்டயம் பழசி தம்பிரான் என்ற கேரளவர்மன், கோயம்புத்தூர் சேக் உசேன், கானி ஜஹான், தேனி சோமநாத பிள்ளை, நத்தம், தட்டம்பட்டி, கீழவளைவு கள்ளர்கள் என புரட்சியாளர்கள் அனைவரும் இவரது நெருங்கிய நண்பர்கள். கோபால் நாயக்கருக்கும், அவரது மகன் முத்து வெள்ளைக்கும் **1801**-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தூக்குத் தண்டனை தரப்பட்டது.

‘ ரிபெல்’ முத்துராமலிங்க சேதுபதி

(1760 - 24.01.1809)

ராமநாதபுரம் அரசர் செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதியின் தங்கை முத்துத் திருவாயிக்கும் நெருஞ்சித் தேவருக்கும் பிறந்தவர். சேதுபதியாக இருந்த தாய்மாமன் இறந்ததால், **72** நாள் குழந்தையாக இருந்த இவர் **1760**-இல் அரசனாக்கப்பட்டார். **1770**-இல் பத்து வயதாகும்போது பிரதானி பிச்சைப் பிள்ளை, தாயார் முத்துத் திருவாயி நாச்சியாருடன் கைது செய்யப்பட்டு திருச்சிக் கோட்டையில் அடைக்கப்பட்டார். பத்து ஆண்டுகள் சிறையில் இருந்தார். சேதுபதியை மீண்டும் அரசராக்க வேண்டும் என்பதற்காக ராமநாத புரம் சீமையில் நடத்தப்பட்ட கிளர்ச்சியை அடக்கச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு மீண்டும் சேதுபதியாக **1781**, மே மாதத்தில் நியமனம் செய்யப்பட்டார். ஆங்கிலேயர்களுக்கும், ஆற்காடு நவாப்பிற்கும் எதிராக ஆயுதச் சாலைகள் நிறுவியவர். கைத்தொழில் களை வளர்த்தவர். பொருளாதாரத்தை உயர்த்தியவர். பத்து ஆண்டு கால ஆட்சிக்குப் பிறகு **1795**-இல் கலெக்டர் பவுனியின் ஆணைப்படி மீண்டும் கைது. திருச்சிக் கோட்டையில் அடைப்பு. ‘ரிபெல்’ கலகக்காரன் என்று ஆங்கிலேயர்கள் இவருக்குப் பெயரிட்டனர். பின்பு மாதம் ஆயிரம் பணம் உதவித் தொகையுடன் மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு மாறுதல். சேதுபதியை எப் போதும் பார்க்க வேண்டுமென்பதற்காகவே **99**

குடும்பங்கள் ராமநாத புரத்திலிருந்து கிளம்பி மெட்ராஸில் குடியேறின. நீண்ட சிறைவாசம் இவரது உடல் ஆரோக்கியத்தைக் குலைத்திருந்தது. **1809**-ஆம் வருடம் ஜனவரி மாதம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் டாக்டர் ஒயிட் சேதுபதிக்கு சிகிச்சை அளித்தார். ஆனாலும் பலனளிக்கவில்லை. சேதுபதியின் அன்பர் சர்க்காரியாபுரம் வெங்கடாசலம் செட்டியார் சேதுபதியை தனது பொறுப்பில் விடும்படி கம்பெனிக்கு மனு செய்தார். கோட்டைத் தளபதி மேஜர் பிராக்கிலியிடம் வற்புறுத் தினார். **22.01.1809** டாக்டர் ஒயிட்டின் அனுமதி பெற்று சேதுபதியை செட்டியார் வீட்டிற்கு கோட்டைத் தளபதி பிராக்கிலி அனுப்பி வைத்தார். செட்டியாருடைய வீட்டில் ஒரு நாள் சேதுபதி இருந்தார். அடுத்த நாளே **24.01.1809** அன்று மரணம் அடைந்தார். அப்போது அவருக்கு **48** வயது. மெட்ராஸ் பிளாக் டவுனில் கூடிய பெரும் கூட்டம் சேதுபதிக்கு இறுதி மரியாதை செலுத்தியது. அவரது மகன்கள் பட்டாபி இராமசாமி, நெருஞ்சி இருவரும் சிதைக்கு தீ மூட்டினர். மகள் சிவகாமி நாச்சியார். இவருக்கு ராஜேஸ்வரி, வீரலட்சுமி, பர்வதம், கூரியாயி நாச்சியார் ஆகிய நான்கு மனைவிகள். முதல் மனைவி ராஜேஸ்வரி நாச்சியாருக்கு **1809**-ஆம் ஆண்டு வரை மாதம் ஆயிரம் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. பின்பு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுவிட்டது.

வேலு நாச்சியார்

(..... - 26.12.1796)

சிவகங்கையின் முதல் அரசரான சசிவர்ணத் தேவரின் மருமகள். **1750**-இல் அரசுப் பொறுப்பிற்கு வந்த முத்துவடுக நாதரின் முதல் மனைவி. ராமநாதபுரம் அரசன் செல்லமுத்து சேதுபதி சக்கந்தி முத்தாத்தாள் நாச்சியாரின் மகள். அரசர் முத்து வடுகநாதர் அவரது இரண்டாம் மனைவி கௌரி நாச்சியாருடன் **25.06.1772**-ஆம் ஆண்டு

காளையார்கோயிலில் கொல்லப்பட்டபோது கைக்குழந்தையுடன் விருப்பாச்சிக் காடு களில் அடைக்கலம் புகுந்தவர். எட்டு ஆண்டு காலம் விருப்பாச்சிக் காடுகளில் இருந்துகொண்டே படை திரட்டி, ஹைதர் அலியின் உதவி பெற்று, சிவகங்கையை ஆற்காடு நவாப்பிடமிருந்து கைப்பற்றி அரசி ஆனவர். தனக்கு உதவி செய்த மருது சகோதரர்களை மந்திரி பிரதானிகளாக நியமித்தார். மகள் வெள்ளச்சிக்கு மணமுடிக்க ராமநாதபுரம் சேதுபதி 'ரிபெல்'முத்துராமலிங்க சேதுபதி, படமாத்தூர் கௌரி வல்லபர் என பலர் விரும்பிய போதும் மருது சகோதரர்களின் வழிகாட்டுதலின்படி வெங்கம் பெரிய உடையணனுக்கு மகளை மணம் முடித்தார். மகள் வெள்ளச்சி **1790**-இல் இறந்த பின்பு பெரிய மருதுவின் மகளை வெங்கம் பெரிய உடையணன் மணந்தார். இவ்விஷயத்தில் வேலு நாச்சியாருக்கு மருது சகோதரர்களோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. **1793**-இல் பேத்தி குழந்தை நாச்சியார் இறப்பு. **1796**-இல் கோபால் நாயக்கரின் விருந்தினராகத் தங்கி இருக்கும்போது விருப்பாச்சியில் இறந்தார்.

வெங்கம் பெரிய உடையணத் தேவர்
(... - 19.09.1802)

அரசி வேலு நாச்சியாரின் மகள் வெள்ளச்சியை மணந்தவர். **1793**-இல் வெள்ளச்சி இறந்த பிறகு, பெரிய மருதுவின் மகள் மருதாத்தாளை மணந்தவர். சிவகங்கையின் கடைசி அரசர். காளையார் கோயில் போரில் கைது செய்யப்பட்டு முதலில் பினாங்குத் தீவிற்கு அனுப்பப்பட்டார். பின்னர் சுமித்திராவிலுள்ள பென்கோலன் தீவிலுள்ள மால்பரோ கோட்டையில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டவர். முதல் மனைவி வெள்ளச்சி. மற்ற மனைவிகள் ரெங்காத்தாள், கருப்பாயி, ராக்கு, மருதாத்தாள். இவருக்கு மூன்று சுவீகார மகள்கள். அவர்கள் இருளாயி, லட்சுமி, உங்கதாத்தாள். பென்கோலன் சிறையிலிருக்கும்போது தனக்குக் கிடைத்த உதவித் தொகையிலிருந்து கொஞ்சம் பணத்தைத் தனது குடும்பத்தினருக்கு வெங்கம் அனுப்பி வைத்திருக்கிறார். **19.09.1802** அன்று பென்கோலன் சிறையிலேயே இறந்துவிட்டார். இவரது வாரிசுகளில் சிலர் **1833** -ஆம் ஆண்டு ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்தனர். ஆனால் ஆங்கிலேய அரசு ஓய்வூதியம் தர மறுத்துவிட்டது.

தாண்டவராயப் பிள்ளை
(1707 - 1772)

சிவகங்கை, அரளிக்கோட்டைக்கு அருகிலுள்ள முல்லைக் குளத்தில் பிறந்தவர். காத்தவராயன் பிள்ளை என்பவரின் மகன். நாலுகோட்டை சசிவர்ணத் தேவர் இவரை **1747**-இல் தன்னுடைய உதவியாளராகப் பணியமர்த்தியனார். சிவகங்கை அரசர் முத்துவடுகநாத தேவரின் மந்திரி பிரதானி. ராமநாதபுரம் பிரதானிகளான வெள்ளையன் சேர்வை, தாமோதரம் பிள்ளை, பிச்சை பிள்ளை ஆகியோரின் நெருங்கிய நண்பர். வேலு நாச்சியாரின் சிவகங்கை அரசின் முக்கிய ஆலோசகர். சிவகங்கை அரசர் முத்து வடுகநாதர் காளையார்கோயிலில் கொல்லப்பட்ட போது வேலு நாச்சியாரை விருப்பாச்சிக்கு அழைத்துச் சென்று ஜமீன்தார் கோபால் நாயக்கருக்கு அறிமுகப்படுத்தியவர். விருப்பாச்சியிலிருந்து ஹைதர் அலிக்குக் கடிதம் எழுதி ராணுவ உதவி கேட்டவர். தஞ்சாவூர், புதுக்கோட்டை, மைசூர் அரசர் ஹைதர் அலி ஆகியோருக்கு கடிதம் எழுதி ராணி வேலு நாச்சியாருக்கு ஆதரவு திரட்டியவர். மேலூர் கள்ளர்களின் நண்பர். வேலு நாச்சியாரோடு விருப்பாச்சி வந்த ஒரு வருடத்தில் பிரதானி தாண்டவராயப் பிள்ளை இறந்துவிட்டார். மருதநாயகம் என்ற யூசுப்கான் கான் சாகிப்பிற்கு நெருங்கிய உறவினர். யூசுப்கானைப் பிரெஞ்சுக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். யூசுப்கானுக்கு ஆண் குழந்தை பிறந்தபோது குழந்தைக்கு அன்பளிப்புகள் வழங்கி அதற்காக மேலூருக்கு அருகிலுள்ள சிறுமணியேந்தல் கிராமத்தை மான்யமாகப் பெற்றவர். தான் பெற்ற கிராமத்தை மதுரை மீனாட்சி கோயிலுக்கு வழங்கியவர். குழந்தைக் கவிராயரின் 'மான்விடு தூது' என்ற சிற்றியலக்கியத்தின் கதாநாயகன் இவர்.

மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர்
(..... - 1816)

புரட்சியாளர்களால் ராமநாதபுரம் சேதுபதி என அறிவிக்கப் பட்டவர். ராமநாதபுரம் தற்காலிக அரசை பாண்டுகுடியில் நிறுவியவர். இவரது தம்பியும் சக போராளியுமான கனக சபாபதித் தேவர் சாயல்குடி காட்டில் மேஜர் மில்லரால் கைது செய்யப்பட்டார். ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் **16.11.1801**-இல் தூக்கிலிடப் பட்ட அதே நேரத்தில் கனகசபாபதி தேவர் அபிராமத்தில் தூக்கிலிடப்பட்டார். சின்ன மருது, பெரிய மருது உள்ளிட்ட போராளிகள் தூக்கிலிடப்பட்டு **19** மாதங்கள் வரை இவர் ஆங்கிலேயர்களிடம் சிக்கவில்லை. ஜூலை **1802**-இல் இவரும், இவரது தளபதி மயிலப் பனும் கைது செய்யப்பட்டனர். இவரோடு சேர்த்து இவரது தாயார், அத்தை, தங்கை குடும்பத்தினர், இரண்டு மனைவிகள், நான்கு குழந்தைகள், தம்பி கனகசபாபதி தேவரின்

விதவை மனைவி, தம்பியின் மூன்று குழந்தைகள், பணியாளர்கள் என இருபத்தி ஆறு பேரையும் ஆங்கிலேயர்கள் கைது செய்து ராமநாதபுரம் கொண்டு சென்றனர். மயிலப்பன், **06.08.1802**-இல் அபிராமத்தில் தூக்கிலிடப்பட்டார். மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர் புரட்சி யாளர்களால் சேதுபதி என அறிவிக்கப்பட்டதால் வன்மத்தோடு ராமநாதபுரம் சிறையிலே வைக்கப்பட்டு அங்கேயே பதிமூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டார். **1816**-ஆம் ஆண்டிற்குப் பிறகு மரணமடைந்தார்.

சித்திரங்குடி மயிலப்பன்
(..... - தூக்கிலிடப்பட்டது 06.08.1802)

முதுகுளத்தூர் அருகிலுள்ள சித்திரங்குடியில் பிறந்தவர். ராமநாதபுரம் அரசரின் படைப்பிரிவில் தளபதியாக இருந்தவர். **1795**-இல் சேதுபதி 'ரிபெல்' முத்துராமலிங்கம் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறையில் அடைக்கப்பட்டபோது அவரை விடுவிக்க முயன்று தோற்றவர். கம்பெனியின் களஞ்சியங்களை கொள்ளையிடுவது, ஆயுதங்களைக் கைப்பற்றுவது இவரது வேலை. சில காலம் தஞ்சைப் பகுதியில் தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்தவர். பின்பு நெட்டூருக்கு வந்து தங்கினார். சூடியூரில் வைத்து பெரிய மருதுவைச் சந்தித்தார். பதினாயிரம் துப்பாக்கித் தோட்டாக்கள், இருபத்தைந்து மாட்டு வண்டி நிறைய வெடி மருந்துகள், ராணுவத் தளவாடங்கள், வெடி மருந்துகளை குளத்தூர் நாகராஜ மணியக்காரர், பெரிய மருது சேர்வைக்காரரின் மகன் சிவத்த தம்பி, பெரிய மருதுவின் மருமகன் ஆளஞ்சாத் தேவருடன் பாஞ்சாலங்குறிச்சிக்கு எடுத்துச் சென்றவர். காடல்குடி, நாகலாபுரம், சூரக்குடி, கழுகுடி, மேலமந்தை, கமுதி, கொடுமலூர், அபிராமம் பகுதிகளில் மின்னல் வேகத்தில் ஆங்கிலேய நிலைகளின்மீது தாக்குதல் நடத்தியவர். பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சு அரசாங்கத்திடம் சேதுபதி சார்பாக ஆயுத உதவி கோரியவர். கலெக்டர் லூஷிங்டன் இவரைப் பிடித்துத் தரச்சொல்லி சின்ன மருதுவிற்குப் பலமுறை கடிதம் எழுதியும் சின்ன மருது இவரைக் கைது செய்யவில்லை. அபிராமத்தில் கம்பெனிக்கு ரகசியத் தகவல்கள் அனுப்பிய காதர் மீரான் என்பவனைக் கைது செய்து கொல்லாமல் எச்சரித்துவிட்ட மனிதாபிமானி. மில்லர், செப்பர்டு, மார்ட்டின்ஸ், அக்னியூ என பல ஆங்கிலேயத் தளபதிகள் இவனோடு மோதியுள்ளனர். மயிலப்பனின் மனைவியையும், தங்கையையும் தளபதி மில்லர் கைது செய்து ராமநாதபுரத்தில் அடைத்து வைத்தும் மயிலப்பன் ஆங்கிலேயர்களிடம் சரண் அடையவில்லை. மருது சகோதரர்கள் இறந்து

எட்டு மாதங்கள் வரை மயிலப்பன் ஆங்கிலேயர்களிடம் அகப்படவில்லை. பின்பு தனது சித்திரங்குடி வீட்டில் நள்ளிரவில் மனைவியைக் காண வந்தபோது அவரது மாமனார் தவசித்தேவன் சிக்கல் அமில்தாருக்குத் தகவல் கொடுத்தார். தன் கையிலிருந்த **200** பணத்தை மாமனாரிடம் கொடுத்த போதும் அவர் அதைப் பெற மறுத்துவிட்டுக் காட்டிக் கொடுத்தார். அதற்காக அந்த ஊரிலிருந்த பதினோரு பேருக்கு ஆயிரம் பணம் இனாமாக கம்பெனி கொடுத்தது. **(26.03.1802-**இல்**)** ராமநாதபுரம் கோட்டையில் அடைக்கப்பட்டார். பாளையங்கோட்டையில் வைத்து கலெக்டர் லூஷிங்டன் விசாரித்தார். **06.08.1802-**இல் தூக்கிலிடப்பட்டார்.

தூந்தாஜிவாக்

(... - 1800)

பூனாவைச் சேர்ந்த மராத்தியன். சிமோகாவை அடுத்த சென்னகிரியில் பிறந்தவர். ஹைதர் அலியின் நம்பிக்கைக்குரிய தளபதி. திப்பு சுல்தானிடமும் சில காலம் பணிபுரிந்தார். பின்பு திப்பு சுல்தானிடம் பிரச்சனை ஏற்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். தூந்தாஜி வாக் தென்னிந்தியாவிலிருந்த மருது பாண்டியர்கள், விருப்பாச்சி கோபால் நாயக்கர் போன்ற, புரட்சியாளர்களோடு தொடர்பு கொண்டார். **30.06.1800** அன்று கோயம்புத்தூர் சிறையை உடைக்க திட்டமிடப்பட்டது. ஆனால் சேலம் கலெக்டர் மெக்காலின்சுக்கு இந்தச் சதித்திட்டம் தெரிந்துவிட்டது. அன்றே நாற்பத்தி இரண்டு புரட்சியாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை ஏதுமின்றி கோயும்புத்தூர் தெருக்களில் தூக்கிலிடப்பட்டனர். ஆர்தர் வெல்லெஸ்லி, கர்னல் பௌளேர், கேப்டன் மெக்காலிஸ்டர் இவரைத் தேடினர். கிருஷ்ணா நதிக்கும், துங்கபத்திரா நதிக்கும் இடைப்பட்ட தமமூர், ஹன்னூர், ஹீங்கல், லீமாஷில் கிர்ஹட்டி, அங்கோரே, இமலாபாத் பகுதிகளில் ஆங்கிலேயர்களுடன் போர்கள் நடந்தன. **26.10.1800-**இல் கொல்லப்பட்டார்.

வாராப்பூர் ஜமீன்தார் பொம்மு நாயக்கர்

மேலூருக்கு அருகிலுள்ள வாராப்பூரின் ஜமீன்தார். திருமணம் ஆகாதவர். விஜய நகரப் பேரரசர் வழி வந்த ஆனகுண்டா அரசர், பெல்ஹாம் மாவட்டத்தின் ஆட்சியாளர் கிருஷ்ணப்பா, தஞ்சாவூர் ஞானமுத்து, கேரளாவின் கோட்டயம் பகுதி புரட்சி யாளன் கேரளவர்மன் ஆகியோரை சின்ன மருதுவின்கீழ் ஒருங்கிணைத்தவர். ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் **27.10.1801-**இல் கைது செய்யப்பட்டு, சின்ன

மருதுவின் மகன் துரைசாமி, அரசர் வெங்கம் பெரிய உடையணத் தேவரோடு நான்கு மாதங்கள் தூத்துக்குடியில் அடைத்து வைக்கப்பட்டார். அட்மிரல் நெல்சன் என்ற கப்பலில் பினாங்கிற்கு **31.02.1802**-இல் பயணப்பட்ட புரட்சியாளர்கள் **26.04.1802**-இல் பினாங்கை அடைந்தனர். கப்பலில் போகும்போது பாஞ்சாலங்குறிச்சி சின்னப் பிச்சைத் தேவர், ஆதனூர் சுப்பிரமணிய நாயக்கர், விருப்பாச்சி சுப்பா நாயக்கர் ஆகியோர் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டனர். வாராப்பூர் ஜமீன்தார் பொம்மு நாயக்கர் பினாங்கில் சாலை அமைக்கும் வேலையில் அமர்த்தப்பட்டார். காடுகளில் மரங்களில் வெட்டியும், வெட்டப்பட்ட மரங்களை அடுக்கி வைத்தும் கொடுமைபடுத்தப் பட்டு மரணமடைந்தார்.

துரைசாமி
(1788 - 1823)

சின்ன மருதுவின் மகன். காளையார்கோயில் போர் நடக்கையில் பன்னிரண்டு வயது பாலகனாக இருந்ததால் இவரைத் தூக்கிலிடாமல் சிவகங்கை கடைசி அரசரும், அக்காள் மருதாத்தாள் கணவருமான வெங்கம் பெரிய உடையணத் தேவரோடும், எழுபது போராளிகளோடும் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டவர். இருபது வருடங்கள் கழித்து மேஜர் வெல்ஷ் பினாங்கிற்கு வந்திருந்தபோது,சிவகங்கைக்குத் திரும்பிச் செல்ல உதவி செய்ய கேட்டுக் கொண்டார். **1823**-இல் இவருக்கும், சடைமாயனுக்கும் தாயகம் திரும்ப அனுமதி வழங்கப்பட்டது. மதுரை வந்து சேர்ந்தபோது வயிற்று வலியில் மாண்டு போனார் எனச் சொல்லப்படுகிறது. இவர் நாடு திரும்பும் வழியில், தமிழகம் வரும்முன்பே இறந்துவிட்டதாகவும் கூறுகின்றனர்.

கிழவன் சேதுபதி என்ற ரகுநாத சேதுபதி
(1678 - 1710)

கி.பி. **1674** முதல் **1710** வரை ராமநாதபுரத்தின் சேதுபதி. புதுக்கோட்டை, சிவகங்கைச் சீமைகள் இவர் காலத்தில் பிரிவு படாமல் ராமநாதபுரம் சீமையில் இருந்தன. பின்னாளில் அவை தனியரசாகின. இவரது மனைவி காதலி நாச்சியாரின் மூத்த அண்ணன் ரகுநாத தொண்டைமானை திருமயம் கோட்டைக்கும், சிறிய அண்ணன் நமணத் தொண்டைமானை குளத்தூர்க் கோட்டைக்கும் ஆளுநராக கிழவன் நியமித்தார். தலைநகரை போகலூரிலிருந்து ராமநாதபுரத்திற்கு மாற்றினார். **1680**-இல் மதுரை நாயக்க அரசர் சொக்கநாதனை ருஸ்தம் கான் என்பவன் திருச்சி சிறையில் அடைத்து வைத்தான். அவன் தம்பி அலகாத்திரி நாயுடுவைப் பெயருக்கு மதுரை நாயக்கர் அரசனாக நியமித்துவிட்டு ருஸ்தம்கானே ஆட்சி செய்தான். கிழவன் சேதுபதி தனது நண்பரான கன்னிவாடி சின்னக் கத்திரி நாயக்கரோடு சேர்ந்து, ருஸ்தம்கானைக் கொன்று சொக்கநாதனை மீண்டும் நாயக்க அரசனாக்கினார்.

விடுதலைப் பெற்ற நாயக்க மன்னர், பரராஜ கேசரி (எதிரிகளுக்கு சிங்கம்) என்ற பட்டத்தைக் கிழவனுக்கு வழங்கினார். நன்றி மறந்த நாயக்க அரசி மங்கம்மாள், **1702**-இல் ராமநாதபுரம்மீது படையெடுத்த போது நாயக்கப் படைகளைத் தோற்கடித்தார். கீழக்கரை வள்ளல் சீதக்காதி மரைக்காயர் இவரது நண்பர்.

1692-இல் கிறித்துவ சமயம் பரப்ப வந்த பாதிரியார் ஜான் டி பிரிட்டோ கிழவன் சேதுபதியின் மகன் தடியத்தேவரை கிறித்துவத்திற்கு மாற்றியதை ஒரு தகப்பனாக இவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பலமுறை எச்சரித்தும் மதமாற்றங்கள் தொடர்ந்து நடந்தன. ஆகவே, பிரிட்டோவை கைது செய்ய உத்தரவிட்டார். பிரிட்டோ அவர் தாய்நாட்டிற்குத் திரும்பச் செல்ல அறிவுறுத்தப்பட்டது. அவருக்குத் துணை நின்ற செருவத்தி ஜமீன்தார் ஆகிய இருவரையும் ஓரியூரில் வைத்து இவரது அமைச்சர் முருகப்பப் பிள்ளை **26** நாட்கள் விசாரித்தார். **1693**-ஆம் ஆண்டு, பிப்ரவரி **4**-ஆம் தேதி, ரங்கநாத தேவன் என்ற தளபதி இவர்கள் இருவரையும் தூக்கிலிட்டார்.

சசிவர்ணத் தேவர்

02.01.1730-இல் சிவகங்கையின் முதல் அரசனாகப் பதவி யேற்றவர். ராமநாதபுரம் சேதுபதி திருவுடையாத் தேவர் என்ற விஜய ரகுநாத சேதுபதியின் மகள் அகிலாண்டேஸ்வரியை மணந்த தால் நாலுகோட்டை பாளையக்காரரின் மகன் சசிவர்ணத் தேவர் தொண்டி துறைமுகத்தின் காவலனாகவும், வெள்ளிக்குறிச்சி மாகாண ஆளுநராகவும்

நியமிக்கப்பட்டார். **1725**-இல் புதிய சேதுபதி பவானி சங்கரனால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்பு தஞ்சாவூர் மராத்திய அரசனின் உதவி பெற்றார். ஓரியூரில் நடந்த போரில் பவானி சங்கரனைக் கொன்று சிவகங்கை அரசராக **1730**-இல் பதவியேற்றவர்.

இரண்டாம் ஷா ஆலம்

(1759 - 1805)

இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பின் கொள்ளுப் பேரன். இவரது காலத்தில் உட்பட்ட தெற்கு வடக்காக இருநூற்றி ஐம்பது மைல் நீளமும், கிழக்கு மேற்காக நூறு மைல் அகலமும் கொண்ட டெல்லி, ஆக்ராவை உள்ளடக்கிய பகுதிக்கு மட்டுமே அரசன். அதுவும் பெயர் அளவில். மராத்திய அரசன் சிந்தியா இந்தப் பகுதிகளைக் கைப்பற்றி இவரை ஆக்ராவில் குடியமர்த்தினான். மாதச் சம்பளம் அறுபதனாயிரம் என நிர்ணயித்தான்.

தனக்குக் கீழ் சிற்றரசனாக இருந்த ஜாபிதா என்பவனுடைய மகன் குலாம் காதிர் என்ற சிறுவனை காளை மாடுகளைக் காயடிப்பதுபோல் செய்து அவனுக்குப் பெண் ஆடைகளை அணிவித்து கேவலப்படுத்தியவர். குலாம் காதிர் வளர்ந்து பெரிய வனானவுடன் மொகலாய அரசன் ஷா ஆலத்தை மிரட்டிப் பணம் கேட்டார். பணம் கொடுக்க மறுத்ததால் **1756**-இல் மொகலாயப் பேரரசரான இவரது கண்களைப் பிடுங்கி எறிந்தார். கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லிக்கு இதைப் புகாராக அனுப்பி தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினார்.

1803-இல் ஆங்கிலேயத் தளபதி டெல்லியைத் தாக்கியபோது மராத்தியர்கள் ஷா ஆலத்தை மிரட்டி போர்க்களத்திற்கு அழைத்து வந்தனர். பேரரசன் அக்பரின் வழித்தோன்றலான இவர் கண் பார்வையின்றி கைகளில் வில்லும் கம்பும் ஏந்தி போர்க்களத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நிற்கும் அவலக்காட்சி டெல்லியில் அரங்கேறியது.

14.09.1803-இல் டெல்லி வீழ்ந்தது. ஆங்கிலேயப் படை மராத்தியர்களை டெல்லியிலிருந்து விரட்டியது. நாற்பத்து எட்டு ஆண்டு காலம் டெல்லியில் பாதுஷாவாக இருந்த இவர் பன்னிரண்டு ஆண்டு காலம் பீகாரிலும், ஏழு ஆண்டுகள் அலகாபாத்திலும் அந்தப் பகுதி சிற்றரசர்களின் விருந்தினராக இருந்தார். பத்தொன்பது ஆண்டுகள் விழிகளின்றி வாழ்ந்தார். டெல்லிப் பகுதி ஆங்கிலேயே ரெசிடென்டின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதால் ஷா ஆலம் டெல்லி கோட்டைக்குள் முடங்கினார். உருது மொழியில் பல பிரபலமான கவிதைகள் எழுதியவர். புலவர்களை ஆதரித்த புரவலர்.



சிராஜ் உத் தவுலா

(1731 அல்லது **1736 -** இறப்பு **04.07.1757)**

வங்காள கவர்னர் அலிவர்திகானின் மருமகன். அலிவர்திகான் இவரைத் தனது வாரிசாக நியமித்தார். **09.04.1756**-இல் நவாப்பாகப் பதவியேற்றார். கிஷன்தாஸ் என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் டாக்கா கிளையில் பணத்தை ஏமாற்றிவிட்டார்.

அவனுக்கு சிராஜ் உத் தவுலா அடைக்கலம் கொடுத்ததால் வெள்ளையர்களின் கோபத்திற்கு ஆளானார். **1756** ஜூன் **20**-இல் கல்கத்தாவின் 'பிளாக் ஹோல்' என்ற சிறிய காற்றுப் போகாத அறையில் **110** ஆங்கிலேயப் பெண்கள், குழந்தைகளை அடைத்து வைத்து, அதில் பலர் இறந்து போகக் காரணமானவர். ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்களின் கடும் கோபத்திற்கு ஆளானவர்.

1757 ஜனவரி **2**-இல் இதற்காகப் பழவாங்க கேப்டன் கிளைவ்வும் வாட்சனும் அனுப்பப்பட்டனர். ஜூன் **23, 1757**-இல் பிளாசிப் போரில் தோற்றவர். போரில் தோற்று ராஜ்மஹாலுக்கு ஓடினார். அங்கு கைது செய்யப்பட்டு முர்ஷிதாபாத் கொண்டுவரப்பட்டு ஆங்கிலேயர்களின்

கட்டுப்பாட்டிலிருந்த அரசன் மீர்ஜாபரின் மகன் மீரானின் ஆணைப்படி ஜூலை **4, 1757**-இல் முர்ஷிதாபாத்தில் கொல்லப்பட்டார்.

திப்பு சுல்தான்

(1753 - 04.05.1799)

'மைசூர் புலி' என்று அழைக்கப் பட்டவர். ஹைதர் அலியின் மகன். இரண்டாம் மைசூர்ப் போர் நடந்து கொண் டிருக்கும்போது தந்தை ஹைதர் இறந்து போனதால் மலபார் பகுதியில் நடந்து கொண்டிருந்த போரை நிறுத்திவிட்டு அரசுப் பொறுப்பை ஏற்றவர். போத்தனூர்ப் போரில் ஜெனரல் மேத்யூஸ்ஸிற்கு மரண தண்டனை கொடுத்தவர். மங்களூர், மலபார், கூர்க் பகுதிகளை வென்று தன்னை 'பாதுஷா' என்று அழைத்துக் கொண்டவர். துருக்கி, பிரான்ஸ் அரசர்களோடு உறவு வைத்துக்கொள்ள முயன்று தோற்றவர். பிப்ரவரி **1792**-இல் ஸ்ரீரங்கப்பட்டணத்தைத் தளபதி காரன் வாலிஸ் முற்றுகையிட்டார்.

ஜெனரல் ஹாரீஸ், ஸ்டுவர்ட் பெயர்ட், கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையிலான படை **1799**-ஆம் ஆண்டு மே மாதம் **4**-ஆம் தேதி ஸ்ரீரங்கப்பட்டினத்தை கைப்பற்றியது. திப்புவின் மகன்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். இவரது வீரத்தையும் திறமையையும் புகழ்ந்திருக்கின்றனர். இவரைக் கொடுமைக்காரன், மதவெறியன் என்றும் சில ஆங்கி லேயர்கள் சித்திரித்திருக்கின்றனர்.

நவாப் அசீம் உத் தவுலா

(1775 - 03.08.1819)

ஆற்காடு நவாப் உம்தத் உல் உம்ராவின் சகோதரரான அமீர் உல் உம்ராவின் மகன். முகமது அலியின் பேரன். உம்தத் உல் உம்ராவின் இறப்பிற்குப் பின்பு கிழக்கிந்தியக் கம்பெனி விதித்தப் புதிய கட்டுப்பாடுகளை அவர் மகன் உம்தத் ஏற்க மறுத்ததால், உம்தத்திற்குப் பதிலாக ஆற்காடு நவாப்பாக அசீம் உத் தவுலா அறிவிக்கப்பட்டார். ஜூலை **31, 1801**-இல் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முழு உரிமையை விட்டுக் கொடுத்தவர். பின்பு கிழக்கிந்தியக் கம்பெனியிடம் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு அமைதியாக வாழ்ந்து ஆகஸ்ட் **3, 1819**-இல் இறந்தவர்.

ஹைதர் அலி

(1722 - 07.12.1782)

மைசூர் உடையார்களிடம் சிறு படைத்தளபதியாக இருந்த படே முகம்மது என்பவரின் மகன். முதலில் உடையார்களின் படையில் நாயக்காகப் பதவி. பின்பு **1749**-இல் தேவனஹள்ளி கோட்டையை மைசூர் உடையார் கைப்பற்ற போர் நடத்தியபோது உடையார் அரசரோடு உடன் சென்றவர். **1755**-இல் திண்டுக்கல்லின் கவர்னர். படிப்படியாக அரசர் சித்த

கிருஷ்ணராஜ உடையாரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். மெட்ராஸுக்கு ஐந்து மைலுக்கு முன்பு வரை அவனுடைய ஆட்சி எல்லையாக இருந்தது. தஞ்சாவூர் ஸ்வார்டஸ் பாதிரியாரை இவரோடு சமாதானம் பேச மெட்ராஸ் கவர்னர் அனுப்பி வைத்தார். சர் அயர் கூட்டால் பறங்கிப்பேட்டைப் போரில் தோற்கடிக்கப்பட்டார். மதத்தில் பெரிதும் நம்பிக்கை இல்லாதவர். படிப்பு பெரிதாக இல்லையென்றாலும் நினைவாற்றல் அதிகம். சிறந்த குதிரை வீரர். ஜூலை **9, 1781**-இல் பறங்கிப்பேட்டை, ஜூன் **2, 1782**-இல் ஆரணி, டிசம்பர் **7, 1782**-இல் சித்தூர் எனப் பல காலம் போர்க்களத்தில் செலவிட்டவர். **1782** டிசம்பர் **7**-இல் சித்தூரில் இறந்துவிட்டார்.

அயோத்தி நவாப் ஷீஜா உத் தவுலா

(19.01.1732 - 26.01.1775)

சப்தர்ஜங்கின் மகன். **1761**-இல் பானிப்பட்டில் நடந்த போரில் ஆப்கான் அரசன் அகமது ஷா அப்தாலி, ரோகிலாக் களோடு சேர்ந்து மராத்தியர்களைத் தோற் கடித்தவர். பேரரசர் ஷா ஆலம் இவரை வசிர் (பிரதம மந்திரி) ஆக நியமனம் செய்தார். அக்டோபர் **23, 1764**-இல் நடந்த பக்ஸர் போரில் மேஜர் ஹெக்டர் மன்ரோவிடம் தோற்றவர். அங்கிருந்து டெல்லிக்குத் தப்பி ஓடினார். **1765**-இல் கிளைவ் இவரை மீண்டும் அரசனாக்கினார். பரிதாபாத் என்ற இடத்தில் இறந்துவிட்டார்.

சின்னமலை

(17.04.1756 - 31.07.1805)

இயற்பெயர் சின்னமலை தீர்த்தகிரி கவுண்டன். சென்னி மலையில் பிறந்தவர். ஓடாநிலையின் முக்கியமான மனிதர். பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு, திப்பு சுல்தானுக்காகப் பல போர்களில் கலந்து கொண்டிருக்கிறார். ஜூலை **1800**-இல் கோயமுத்தூர் சிறை உடைப்பு முயற்சியை முன்னின்று நடத்தியவர். இதற்கான உதவிகளை மருது பாண்டியர்களிடமும், மராத்தியர்களிடமும் பெற்றவர். இந்த முயற்சி வெற்றி பெற வில்லை. நாற்பத்திரண்டு புரட்சியாளர்கள் பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டனர்.

இவரது நண்பர் வேலப்பர், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆர்மியில் இருந்தார் ராணுவ நடவடிக்கைகளைச் சின்னமலைக்கு முன்கூட்டியே தெரிவித்து பல நேரங்களில் தீரனைக் காப்பாற்றியுள்ளார். ஒருமுறை தகவல் தரும்போது பிடிபட்ட வேலப்பன், ஆங்கிலேயர்களால் கொல்லப் பட்டார். நல்லப்பன் என்ற சமையல்காரனால் காட்டிக் கொடுக்கப்பட்டார். இவரையும், இவரது இரு சகோதரர்களையும் நெருங்கிய நண்பரான கருப்பனையும் ஆங்கிலேயர்கள் கைது செய்தனர். சங்ககிரி கோட்டையில் ஆடிப்பெருக்கு அன்று (ஜூலை **31, 1805)** தூக்கிலிட்டனர்.

திருப்பத்தூர் பேருந்து நிலையத்தின் எதிரில் உள்ள மருதுபாண்டியர்கள் நினைவிடம். இந்த இடம் முன்பு திருப்பத்தூர்க் கோட்டைக்குள் இருந்தது. இந்த இடத்தில்தான் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அரண்மனை சிறுவயலில் உள்ள கௌரி வல்லபரின் தற்போதைய வாரிசுகள் வாழும் வீட்டில் உள்ள ஆயுதங்கள்

அரண்மனை சிறுவயலில் உள்ள மருதுபாண்டியர்களின் கோட்டை

அரண்மனை சிறுவயலில் உள்ள மருதுபாண்டியர்களின் சிதிலமடைந்த மாளிகை

காளையார்கோயில் காட்டில் கொல்லப்பட்ட புலியுடன் உள்ளூர் பிரமுகர்கள்

காளையார்கோயில் தெப்பக்குளம். தெப்பக்குளத்தின் நடுவே உள்ள மண்டபமும், காளையார்கோயில் கோபுரமும் மருதுபாண்டியர்களால் கட்டப்பட்டது.

காளையார்கோயிலில் உள்ள சின்ன மருது, பெரிய மருது, கிழவன் சேதுபதியின் சிலைகள்



மருதுபாண்டியர்களால்
கட்டப்பட்ட
157 அடி உயர காளையார்கோயிலின் வெளிக்கோபுரம்

நரிக்குடியில் மருதுபாண்டியர்கள் கட்டிய சத்திரம்

நரிக்குடியில் முஸ்லீம்களுக்கு மசூதி
கட்ட மருதுபாண்டியர்கள்
கொடுத்த இடம்

பெரிய மருது சேர்வைக்காரரின் மனைவி மீனாட்சியின் சிலை. கைக்குழந்தையுடன்

மருதுபாண்டியர் தனது மனைவியுடன்



மருதுபாண்டியர்களின் சொந்த ஊரான முக்குளத்தில் உள்ள பரம்பரை வீடு



ராமநாதபுரம் தளவாய் வயிரவன் சேர்வைக்காரர்

ராமநாதபுரம் தளவாய் வயிரவன் சேர்வையின் நினைவிடம்



திருமயம் கோட்டையிலுள்ள பீரங்கி

காளையார்கோயில் காட்டுக்குள்
கண்டெடுக்கப்பட்ட உடைந்துபோன
பீரங்கித் துண்டு

மருதுபாண்டியர்கள் தூக்கியதாகச் சொல்லப்படும் கல்

வாராப்பூர் அரண்மனையின் முன்புறத் தோற்றம்


அம்மன் சன்னதி

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் அம்மன் சன்னதி, சுவாமி சன்னதி, முகப்பிலுள்ள சரவிளக்குகள் மருதுபாண்டியரால் வழங்கப்பட்டவை

சிவகங்கையின் முதல் அரசர் சசிவர்ணத் தேவரின் ஞானகுரு சாத்தப்பர் ஞானி

கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட மேஜர் பானர்மேனின் கல்லறை **(1817)**

மேஜர் பானர்மேனின் செப்பேடு

இங்கிலாந்து அரசி எலிசபெத். 1600-ஆம் ஆண்டு, டிசம்பர் 31 அன்று அரசி எலிசபெத் போட்ட கையெழுத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாயிற்று. கையொப்பமிட்ட அடுத்த ஆண்டிலே இறந்து விட்டாள். வர்த்தக நிறுவனம் என நினைத்து இவள் கையொப்பமிட்ட கம்பெனிதான் அடுத்து வந்த 347 ஆண்டுகள் உலகைக் கட்டியாண்டது

சர் தாமஸ் ஸ்மித். **30,133** பௌண்ட் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியில், **200** பௌண்ட் செலுத்தி முதல் உறுப்பினர் ஆனவர். கம்பெனியின் முதல் கவர்னர்.

கி.பி.1760-களில் சீனாவில் வாங்கி லண்டனில் வியாபாரம் செய்யப்பட்ட தேயிலை பானம் வைக்கும் பாத்திரம். வெள்ளியால் ஆனது. தங்க முலாம் பூசப்பட்டது.

போர்த்துக்கீசிய இளவரசி காத்தரீனுக்கும் இங்கிலாந்து இளவரசன் இரண்டாம் சார்லஸ்க்கும் நடந்த திருமணத்தின்போது **1662**-இல் பம்பாயை போர்த்துக்கீசியர்கள் திருமணச் சீதனமாக வழங்கினர். அதை இளவரசர் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இலவசமான வழங்கினார். இவர்களுக்கு குழந்தை இல்லை. திருமணம் முடிந்து **23**-வது ஆண்டில் இரண்டாம் சார்லஸ் ஆலிவர் கிரஹாம்பெல் என்ற பாராளுமன்றத்தின் பாதுகாவலனாய்ப் பிரான்சிற்கு விரட்டப்பட்டான்.

10 ஆண்டுகளில் கிரகாம்பெல் இறந்தவுடன் பாராளுமன்றம் சார்லஸ்சை வரவழைத்து அரசுப் பதவியை மீண்டும் அளித்தது



மெட்ராஸ் சேப்பாக்கத்தில் உள்ள விருந்தினர் மாளிகை. **1800**-களில் இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரியின் மாளிகையாக இருந்தது.



திருச்சிக் கோட்டை. இங்குதான் சந்தா சாகிப்பை ஆங்கிலேயர்கள் கொன்றனர். ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி கைதியாக இருந்த சிறைச்சாலையும் இதுதான். **1801**-ஆம் ஆண்டு ஜீலை மாதம், மருதுபாண்டியர்கள் தங்களின் போர்ப் பிரகடனத்தை இந்தக் கோட்டைச் சுவரில்தான் ஒட்டினர்.



இங்கிலாந்திலிருந்து கல்கத்தா வரும் கிழக்கிந்தியக் கம்பெனியின் இளம் அதிகாரிகள் தங்கும் அறை. கம்பெனியில் புதிதாகப் பதவியில் சேருபவர்களுக்கு ‘கிரிபின்’ என்று பெயர்.

லண்டனில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களின் சேர்மனின் இருக்கை. இந்த இருக்கையில் அமர்பவர்தான் இந்தியாவின் கவர்னர் ஜெனரலையும், கவர்னர்களையும் நியமிப்பார். யாருடன் போர், யாருடன் சமாதானம் என நிர்ணயிப்பவனும் இந்த ஆசனத்தில் அமர்பவர்தான்.



லண்டனில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனி சேர்மன் மற்றும் இயக்குனர்கள் அமரும் போர்ட் ரூம். இந்த அறையில் எடுக்கப்படும் முடிவுகள்தான் கிழக்கிந்தியக் கம்பெனியின் சட்டம்

வந்தவாசிப் போரின் **(கி.பி.1760)** வெற்றி வீரன் சர் அயர் கூட் மெட்ராசில் இறந்தான். அவனது நினைவாக லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் ஆபி என்ற தேவாலயத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவிய நினைவுச் சின்னம்



லண்டனிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையகம். லாடன் தெருவில் இருந்தது. இங்குதான் ராபர்ட் கிளைவ், ஸ்டிரின்ஜர் லாரன்ஸ், அட்மிரல் போகாக், சர் அயர் கூட், காரன் வாலிஸ் போன்றவர்களின் படத்தை கிழக்கிந்தியக் கம்பெனி வைத்திருந்தது. கட்டிடத்தின் பாதி மரத்தால் ஆனது. உலகையே அடிமைபடுத்தி ஆண்ட், இந்த மாளிகை இப்போது இடிக்கப்பட்டுவிட்டது.

ஓர் ஆங்கிலேய அதிகாரி தனது இந்திய மனைவிகளுடனும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுடனும், வலதுபுறத்தில் இருப்பவள் டெல்லியைச் சேர்ந்தவள். இடதுபுறத்தில் இருப்பவள் லக்னோவைச் சேர்ந்தவள்.

திப்பு சுல்தானுக்கு மிகவும் பிடித்த விளையாட்டுப் பொம்மை. ஆங்கிலேய வீரனைப் புலி ஒன்று தாக்கிக் கொல்வது போன்ற இயந்திர பொம்மை. மைசூர் புலி என அழைக்கப்பட்ட திப்பு, தானே வெள்ளையனைக் கொல்வது போன்று நினைத்து, இந்தப் பொம்மையை உருவாக்கியதாக ஆங்கிலேயர்கள் கருதிப் பெரும் சினம் கொண்டனர்.



கிழக்கிந்தியக் கம்பெனி சிப்பாய்களின் உடுப்பு (கி.பி. 1785)

திப்பு சுல்தானின் இரு மகன்களைப் பிணையக் கைதிகளாக
ஆங்கிலேயர்கள் கைது செய்து அழைத்துச் செல்லுதல்.
அந்தப்புரத்திலுள்ள அரசிகள் குழந்தைகளை விட்டுவிடும்படி கெஞ்சுதல்

கிழக்கிந்தியக் கம்பெனி போரில் பிடிபட்டவர்களைத் தண்டிக்கும் முறை.
தங்களை எதிர்ப்பவர்களைப் பீரங்கி முன் வைத்து சுடும் புதுத்
தண்டனையை ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அறிமுகப்படுத்தினர்.



கிழக்கிந்தியக் கம்பெனியின் கொடி. 13 வெள்ளை சிவப்புக் கட்டங்கள் கொண்டது. 13 என்பது கிறித்துவோடு கடைசி விருந்து உண்ட 13 நபர்களை நினைவூட்டுகிறது. இடது மூலையில் உள்ள சிலுவை, எட்டுத் திக்கும் வெல்லும் என்று எண்ணும் விதத்தில் கொடி அமைக்கப்பட்டது.

மருது பாண்டியர்கள் காலத்திய பணம் (முன்புறமும், பின்புறமும்)

ஆங்கிலேயத் தளபதியின் உடை

மெட்ராஸ் கோட்டையைப் பூட்டப் பயன்படுத்தப்பட்ட பூட்டும், சாவியும்

போரின்போது பயன்படுத்தப்பட்ட இரும்பால் ஆன தலை, மார்பு கவசங்கள்



போரின்போது மூடப்பட்ட எதிரியின் கோட்டைக் கதவுகளை உடைத்துத் திறக்கப் பயன்படும் பெடார்ட் என்னும் இரும்பாலான ஆயுதம்

மருதுபாண்டியர்களின் சொந்த ஊரான நரிக்குடிக்கு அருகிலுள்ள முக்குளம் என்ற ஊரில் உள்ள பரம்பரை வீட்டில் பாண்டியர்களின் வாரிசுகளோடு



பிரான்மலையில் ஆய்வின்போது

பிரான்மலையில் ஆய்வின்போது

’1801’ நூலுக்கான தரவுகள் விவாதத்தில் நூலாசிரியருடன் திருவாளர்கள் பாலகிருஷ்ணன், சிவனடியான், விவேகானந்தன், மாரி சேர்வை

பேரா. டாக்டர் கே. ராஜய்யன், திருவாளர்கள் கண்ணுச்சாமி, சங்கையா, சிவனடியான் ஆகியோருடன் நூலாசிரியர்

பேரா. டாக்டர் கே. ராஜய்யனுடன் நூலாசிரியர்